எம். இலியீன், யா. ஸெகால்

மனிதன் எங்ஙனம் பேராற்றல் மிக்கவன் ஆனான்

தோழர்
மகேஷிற்கு
என்றும்
அன்போடு
கௌநிதாசன்
— 1992 —

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. முகம்மது செரீபு, எம். ஏ.

Ильин М., Сегал Е.

КАК ЧЕЛОВЕК СТАЛ ВЕЛИКАНОМ

На тамильском языке

Ilyin M., Segal Ye.

HOW MAN BECAME A GIANT

In Tamil

லியனீத் ஷ்கானோவ் வடிவமைத்தது. புகைப்படங்களில் ஒரு பகுதி மாஸ்கோ, வரலாற்று அருங் காட்சியக விளக்கங்களில் செய்தன. புகைப்படங்களும், சிலைடுகளும் தயாரித்தவர் வலென்தீன் செர்தோக். விளக்கங்கள் அளித்திருப்பவர் அலெக்சேய் கோல்லியும் திமீத்ரி குரோமனும்.

அட்டையின் முன் பக்கத்தில்: ஒரு குதிரையும் காளைகளும். ஓவியம், லாஸ்கோ குகை, பிரான்ஸ். முன் பண்டைக்கற்காலம்.

அட்டையின் பின் பக்கத்தில்: ஜாரான் (சகாரா) குகையிலிருந்து பாறை ஓவியம், கி. மு. 60,000,000 – 10,000,000 ஆண்டுகள்.

© தமிழ் மொழிபெயர்ப்பு, ராதுகா பதிப்பகம், 1987
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-000921-9

பொருளடக்கம்

மனிதன் பேராற்றல் மிக்கவன் 6

அத்தியாயம் ஒன்று

கட்புலனாகாத கூண்டு 9
காட்டு வழியே ஓர் உலா 10
காட்டின் கைதிகள் 12
மீன் கரைக்கு வந்தது எப்படி 15
அமைதியான சாட்சியங்கள் 17
மனிதன் சுதந்திரத்திற்கு வழி காண்கிறான் 22
நமது மூதாதையர்களுடன் சந்திப்பு 25

அத்தியாயம் இரண்டு

நமது கதாநாயகனின் பாட்டியும் தாயாதிகளும் 29
நமது உறவினர்கள் ரஃபேலும் ரோசும் 30
ஒரு ஷிம்பான்ஸேயால் மனிதனாக முடியுமா? 32
நமது கதாநாயகன் நடக்கக் கற்கிறான் 35
மனிதனது கால்கள் அவனது கைகளை வேலை செய்ய விடுவித்தது எப்படி 36
நமது கதாநாயகன் தரைக்கு வருகிறான் 37
விடுபட்ட தொடர்பு 39

அத்தியாயம் மூன்று

மனிதன் விதிகளை மீறுகிறான் 47
மனிதக் கரங்கள் விட்ட சுவடுகளைப் பின்பற்றி 48
உயிருள்ள மண்வாரியும் உயிருள்ள பீப்பாயும் 51
ஒரு கைக்குப் பதிலாக ஒரு மண்வாரியுடன் மனிதன் . . . 54
செயலூக்கமுள்ள மனிதனும் செயலூக்கமுள்ள ஆறும் . . 55
மனிதனது வாழ்க்கை வரலாற்றின் தொடக்கம் 57
மனிதன் நேரத்தை உருவாக்குகிறான் 60
மனிதன் — ஒரு திரட்டுபவன் 62

அத்தியாயம் நான்கு

விபத்து நெருங்குகிறது 65
காடுகளின் போர் 66
உலகத்தின் முடிவு 70
புதிய உலகின் தொடக்கம் 72
கற் பக்கங்களாலான புத்தகம் 73
காடுகளினின்றும் மனிதன் நீங்குதல் 75
வார்த்தையைத் திருத்தமாகப் பயிலக் கற்க வேண்டும் . . 76
போட்டியின் முடிவு 79
மனிதன் தனது உலகை அமைக்கிறான் 81

அத்தியாயம் ஐந்து

கடந்த காலத்தை நோக்கி முதற் பயணம் 83
ஆயிரமாண்டுப் பள்ளி 85
கடந்த காலத்தை நோக்கி இரண்டாவது பயணம் . . . 88
அடையாள மொழி 91
பேசும் கைகள் 95
சைகை மொழி அகராதியிலிருந்து ஒரு பக்கம் 95
நமது சொந்த அடையாள மொழி 96
மனிதன் தனது மூளையை ஈட்டுகிறான் 98
நாக்கும் கைகளும் எங்ஙனம் இடம் மாற்றிக்கொண்டன 100
நதியும் அதனது அடி மூலங்களும் 102

அத்தியாயம் ஆறு

கைவிடப்பட்ட வீட்டில் 105
நீளமான தோள் 109
உயிருள்ள அருவி 112
புதிய மக்கள் 114
'வீட்டின் வரலாற்றில்' முதல் அத்தியாயம் 115
வரலாற்றுக்கு முந்திய வேடுவர்களின் குடியிருப்பு . . . 117
சுரங்கக் கலைக் காட்சிக்கூடம் 123
புதிரும் அதனது விளக்கமும் 124

அத்தியாயம் ஏழு

அத்தகு விநோதங்கள் அங்கே. 129
உலகைப் பற்றி நமது மூதாதையர் என்ன நினைத்தார்கள் 131
நமது மூதாதையர்களோடு உரையாடுதல் 134
பண்டைய பேச்சின் சிம்புகள் 136

அத்தியாயம் எட்டு

பனிக்கட்டி குவியல் பின்செல்கிறது 141
பனிக் கைதிகள் 143
மனிதன் காடுகளோடு போரிடுதல் 145
மனிதனின் நான்கு கால் நண்பன் 147
மனிதன் நதியோடு போரிடுதல் 148
வேடுவ-மீனவர்களின் வீடு 150
எல்லாக் கப்பல்களுக்கும் பாட்டன் 152
முதலாவது கைவினைஞர்கள் 154
விதை ஒரு சாட்சியாகிறது 156
புதியதில் பழையது 159
வியத்தகு களஞ்சியம் 161

அத்தியாயம் ஒன்பது

காலத்தின் கரங்கள் முன்னோக்கி நகர்த்தப்பட்டன . . 165
ஏரியின் கதை 167
முதல் துணி 170
முதலாவது சுரங்கத் தொழிலாளர்களும் உருக்குத் தயாரிப்பாளர்களும் 171
ருஷ்யாவில் முதல் உழவர்கள் 174
மனித உழைப்பின் நாட்காட்டி 176

அத்தியாயம் பத்து

இரண்டு சட்டங்கள் 181
பழைய 'புதிய உலகம்' 182
தவறுகளின் சங்கிலித் தொடர் 187

அத்தியாயம் பதினொன்று

ஏழுகூட்டிணைந்த புதை மிதியடிகள் 193
பழைய கட்டிடத்தில் முதலாவது கீறல்கள் 195
முதலாவது நாடோடி மரபினர் 200
உயிருள்ள கருவி 202
நினைவும் நினைவுச் சின்னமும் 204
அடிமைகளும் சுதந்திர மனிதர்களும் 206
கூடாரம் ஒரு வீடாகியதும் வீடு ஒரு நகரமாகியதும் எங்ஙனம் 209
கோட்டையரண் முற்றுகை 212
உயிருள்ளவர்களைப் பற்றி இறந்தவர்கள் நமக்குக் கூறுகிறார்கள் 213
புதிய உலோகத்தை மனிதன் படைக்கிறான் 216
என்னுடையதும் உன்னுடையதும் 218
புதிய முறையின் ஆரம்பம் 219

அத்தியாயம் பன்னிரண்டு

விஞ்ஞானத்தின் தொடக்கம் 223
ஒலிம்பசுக்குக் கடவுளர்கள் பின்வாங்குகின்றனர். 225
தொடுவானங்கள் விரிவடைகின்றன 228
முதல் பாடகர்கள் 231

இந்நூலின் நோக்கம் ஏ. எம்.
கோர்க்கியால் முன்மொழியப்பட்டது.
அவர் கூறினார்:

“இத்தகைய நூலை நான் எப்படித்
தொடங்குவேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?
எல்லையற்ற வானத்தை, நட்சத்திரங்களை, நெபுலாக்களைக்
கற்பனை செய்யுங்கள்... எங்காவது மிகப் பெரிய நெபுலாவின்
ஆழத்தினின்றும் சூரியன் பிரகாசிக்கத் தொடங்குகிறது. சூரியனிட
மிருந்து கோளங்கள் பிரிந்து நிற்கின்றன. சில சிறிய கோளத்தின்
மேற்பரப்பில் பொருள் உயிர் பெறுகிறது, தன்னைத் தானே
அறியத் தொடங்குகிறது. ஒரு மனிதன் தோன்றுகிறான்...”

இந்நூலின் ஆசிரியர்கள் 1936இல் தங்கள்
பணியைத் தொடங்கினார்கள். மனிதன் எங்ஙனம்
தோன்றினான், எங்ஙனம் வேலை செய்யவும் சிந்திக்கவும்
தொடங்கினான், எங்ஙனம் நெருப்பையும் இரும்பையும்
கைப்பற்றினான், இயற்கைக்கு மேலாக எங்ஙனம் அவன்
சக்தி பெற்றான், உலகை எங்ஙனம் கூர்ந்து
நோக்கினான், மறுவடிவமைத்தான்
என்பதை அவர்கள்
கூறுகிறார்கள்.

மனிதன் பேராற்றல் மிக்கவன்

இந்த பூமியில் பேராற்றல் மிக்கவன் ஒருவன் உண்டு.

அவனது கைகள் இயங்குகிற வாகனம் ஒன்றை இலகுவாகப் பிடிக்கும்.

அவனது கால்கள் ஒரே நாளில் பல்லாயிரம் மைல்களைக் கடக்கும்.

அவனது இறக்கைகள் அவனை மேகங்களுக்கு மேலே, எந்த ஒரு பறவை பறப்பதைக் காட்டிலும் உயரே தூக்கிச் செல்லும்.

அவனது துடுப்புகள் எந்த ஒரு மீனை விடவும் வலிமை பெற்றவை.

அவனது கண்கள் காண முடியாததைக் காண்கிறது, அவன் காதுகள் உலகின் மறுபாதியில் பேசப்படும் வார்த்தைகளைக் கேட்கிறது.

அவன் அத்தனை வல்லமை பெற்றவன், அவனால் மலைகளைக் குடைந்து செல்ல முடியும், நடு வானிலேயே அவனால் அருவியைத் தடுத்து நிறுத்த முடியும்.

அவன் பூமியின் தோற்றத்தையே மாற்றிக் கொண்டிருக்கிறான், காடுகளை உண்டாக்குகிறான், கடல்களை இணைக்கிறான், பாலைவனங்களுக்கு நீரைக் கொண்டுவருகிறான்.

யார் அந்த வல்லமை மிக்கவன்?

மனிதன்.

ஆனால் அவன் எங்ஙனம் வல்லமை மிக்கவனானான்? பூமியின் எசமானனாக எப்படியானான்?

இதுதான் இந்நூலின் கதை.



கட்புலனாகாத கூண்டு

வல்லமை படைத்தவனாக இல்லாது, வளர்ச்சி குன்றியவனாக மனிதன் இருந்த காலத்தில் அவன் இயற்கையின் அடிமையாக இருந்தான், அதனது எசமானனாக இல்லை.

காட்டிலுள்ள ஒரு விலங்கைப் போலவும் காற்றில் பறவையைப் போலவும் அவன் இயற்கையின் மீது குறைந்த வலிமையே பெற்றிருந்தான்.

ஒரு பழமொழி உண்டு: பறவை போல சுதந்திரமாக.

ஆனால் ஒரு பறவை உண்மையிலேயே சுதந்திரமானது தானா?

உண்மை, அது இறக்கைகளைப் பெற்றிருக்கிறது. அதன் இறக்கைகள் அதனை எங்கு வேண்டுமானாலும், காடுகளுக்கு, மலைகளுக்கு மற்றும் கடல்களுக்கு மேலாக, எடுத்துச் செல்ல முடியும். இலையுதிர் காலத்தில் தெற்கு நோக்கிப் பறந்து வரும் நாரைகளைப் பார்த்து எவ்வளவு முறை நாம் பொறாமைப் பட்டிருக்கிறோம். ஒளிமயமான வானத்தின் மேலே, நாரைகள் அணிவகுத்து விரைந்து செல்லும் போது, அதற்குக் கீழே நின்று கொண்டிருக்கும் மக்கள் தங்கள் தலைகளைப் பின்னுக்குத் தள்ளி வியந்து கூறுவார்கள்: ''அந்தப் பறவைகளைப் பாருங்கள்! அவைகளால் எங்கும் பறந்து செல்ல முடியும்!''

ஆனால் உண்மையில் இது இவ்வாறுதானா? அவை பயணம் செய்ய விரும்பும் காரணத்தாலேயே பறவைகள் வெறுமனே ஆயிரக் கணக்கான மைல் பறக்கின்றனவா? இல்லை, அது மகிழ்ச்சி அல்லாது, தவிர்க்க முடியாமையே அவைகளை முன்னோக்கிச் செலுத்துகிறது. இத்தகைய இடம் பெயரும் பழக்கங்கள், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பறவைகளின் கணக்கற்ற தலைமுறைகள் பிழைத்து வாழ்வதற்காக நடத்திய ஒரு போராட்டத்தால் விளைந்தனவாகும்.

ஒரு பறவையால் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சுலபமாகப் பறந்து செல்ல முடியும் என்பதால், ஏன் பறவையின் ஒவ்வோர் இனத்தையும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் காண முடியவில்லை என்பது தருக்க ரீதியாக வியப்புக்குரியது ஆகும்.

இது இவ்வாறு இருந்திருக்குமேயானால், நமது வடபகுதி பைன் மரக் காடுகளும், பிர்ச் மரக் காடுகளும், பச்சை சிவப்பு இறகுகள் கொண்ட கிளிகளாலும் வானம்பாடிகளாலும் நிறைந்து எழில் குலுங்கக் காணப்படும். ஆனால் இது அப்படியல்ல, அப்படி இருக்கவே முடியாது. ஏனெனில் பறவைகள் அவை காணப்படுவது போல அவ்வளவு சுதந்திரமானவை அல்ல. ஒவ்வொரு பறவையும் இந்த உலகத்தில் தனக்கென்று ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது. ஒன்று காட்டிலும், மற்றொன்று நிலத்திலும், மூன்றாவது கடற்கரை ஓரத்திலும் வசிக்கின்றன.

கழுகின் இறக்கைகள் எவ்வளவு வல்லமை மிக்கன என்பதைச் சற்றே எண்ணிப் பார்க்கிறோம்! இருந்தாலும், ஒரு தங்குமிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்ற போது, அதனால் கட்புலனாகாத ஓர்

எல்லையை (அதை உண்மையில் வரைபடத்தில் விளக்க முடியும்) ஒருபோதும் கடக்க முடியாது. ஒரு தங்கக் கழுகு தனது மிகப் பெரிய கூட்டை, மரங்களற்ற சமவெளிகளில், திறந்த வெளியில் கட்டாது, மேலும் சமவெளிகளில் உள்ள ஒரு கழுகு தனது கூட்டை காட்டில் ஒருபோதும் கட்டாது.

கட்புலனாகாத ஒரு தடை, ஒவ்வொரு விலங்காலும் பறவையாலும் கடக்க முடியாத ஒரு தடை, காட்டையும் சமவெளிகளையும் பிரிப்பது போலக் காணப்படுகிறது.

உண்மையாகவே காட்டில் வசிப்பவைகளான, குறுமரத்தில் வாழும் சதுப்பு நிலக் கோழி, பொன்னிறக் கொண்டையுடைய பறவைகள், அல்லது அணில்கள் போன்ற இத்தகையனவற்றை நாம் ஒரு போதும் சமவெளிகளில் காண முடியாது. சமவெளிகளில் வாழும் கொக்கு அல்லது கொறிவிலங்கு ஆகியனவற்றை ஒருபோதும் காட்டில் காண முடியவில்லை.

அன்றியும், ஒவ்வொரு காடும் ஒவ்வொரு சமவெளியும் கட்புலனாகாத அநேகச் சிறு தடைகளைக் கொண்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் அநேகக் குறு உலகங்களாகப் பிரிகின்றன.

காட்டு வழியே ஓர் உலா



காடுகளின் வழியாக நாம் அலைகின்ற போது, கட்புலனாகாத தடைகளை நாம் கடக்க வேண்டி வரும். மேலும் நாம் ஒரு மரத்தின் மீது ஏறுகின்ற போது, நமது தலை மேலும் பல கட்புலனாகாத தடைகளை உடைத்தெறிந்து செல்கிறது. ஒரு பெரிய வீட்டில் அறைத் தொகுதிகள் இருப்பது போல, காடு முழுமையுமே நிலத் தளங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. நாம் அவற்றைப் பார்க்க முடியாவிட்டாலுங்கூட, அவை அனைத்தும் உண்மையில் இருக்கவே செய்கின்றன.

எடுத்துக் காட்டாக, ஊசி இலை மரங்கள் திடீரென்று பைன் மரங்களுக்கு வழிகாட்டுவதையும், மற்ற இடங்களைவிட சில இடங்களில் பைன் மரங்கள் உயரமாக வளர்ந்திருப்பதையும் நாம் காண முடியும். இங்கு நாம் ஒரு பாசி விரிப்பில் நடக்கிறோம். அதே வேளை அங்கு தரையானது புல் அல்லது வெள்ளை மரப்பாசியால் மூடப்பட்டிருக்கும்.

நாட்டுப் புறத்தில் நாளைக் கழிக்கும் ஒரு நகரவாசிதான் ஒரு காட்டில் இருப்பதாகக் கூறுவான். ஆனால் நாம் காட்டுவியலாளன் ஒருவனைக் கேட்டால், அங்கு ஒன்றல்ல, நான்கு காடுகள் இருப்பதாகக் கூறுவான். காலுக்குக் கீழே நன்கு நொசிவான சதுப்பு நில விரிப்பில் பனி மூடிய பள்ளத்தில் ஊசியிலைக்காடு இருக்கும். அதற்கும் அப்பால், மணற் பாங்கான சரிவில், புளுபேரி, பில்பெரி பழங்கள் கொண்ட திட்டுத்திட்டாய் வளர்ந்த செடிகளுடன் கூடிய பைன் மரங்களின் பசுமையான காடு இருக்கும். அதற்கும் உயரத்தில் மணற் குன்றுகளின் வெண்ணிறப் பாசி பைன்மரப் புதர்களும், பனி நிறைந்த அதற்கும் வெகு தொலைவில், பைன் மரங்களுக்குக் கீழே உள்ள நிலமானது புல்படர்ந்து காணப்படும்.

நான்கு சிறிய காட்டு உலகங்களைப் பிரிக்கும் மூன்று சுவர்களை,

மொத்தத்தில் எதையுமே அறிந்து கொள்ளாது, நாம் வெறுமனே கடந்து வந்திருக்கிறோம்.

வீடுகளில் இருப்பது போலக் காட்டிலும் பெயர்ப் பலகைகள் இருக்குமேயானால், பைன் மரக்காட்டு மரங்களின் மீது கீழ்வரும் அடையாளங்களை நாம் காண முடியும்: திரு. அலகு முனை வளைந்த பறவை, திரு. பச்சை நிறப் பாடும் பறவை, திரு. பொன்னிறக் கொண்டைப் பறவை, திருமதி. மூன்று விரல்காலமைந்த மரங் கொத்தி. இலைகொண்ட மரக் காட்டில் கீழ்வரும் பெயர்ப் பலகை களை நாம் காண முடியும்: திரு. பச்சை மரங்கொத்தி, திருமதி. தித் திரி பறவை, செல்வி. நீல சிறு பறவை, திரு. பூச்சிபிடிப்பான், திரு மதி. அமெரிக்கப் பாடும் பறவை, திரு. கருப்பு மரங்கொத்தி இத்துடன் மேலும் பல.

ஒவ்வொரு காடும் அநேக நிலத்தளங்கள் கொண்டது.

ஒரு பைன் மரக் காடு இரண்டு, சில வேளைகளில் மூன்று நிலத்தளங்கள் கொண்டது. அடிப்பகுதியில் பாசியோ, புல்லோ படர்ந் திருக்கும். நடுப்பகுதி புதர்களால் ஆனது. மேல்த் தளத்தில் பைன் மரங்கள்.

ஓக் காட்டில் ஏழு நிலத்தளங்கள் இருக்கின்றன. மேற்பகுதி ஓக் மரத்தின் தழை நிறைந்த உயர்ந்த பகுதிகளும், எலுமிச்சையின மரங்களும், மேப்பிள் மரங்களும் கொண்டு உயர்ந்து காணப்படும். கோடைக் காலத்திலே இது பச்சை நிறக் கூரை போலவும், இலையுதிர் காலத்திலே பொன்னிறச் சிவப்பாகவும் தோன்றும். திரண்ட ஓக் மரங்களின் உச்சியை அடைகின்ற பாதி வழியில் அசோக மரங்கள் உள்ள மலைகளின் உச்சிகளையும், காட்டு ஆப்பிள் மற்றும் பேரி மரங்களையும் காணலாம்.

இவைகளுக்குக் கீழே தாறுமாறான அடிவளர்ச்சிப் புதர்களும், கொட்டை மரச் சோலைகளும், சிவப்பு இளரோஜா மலர்கொண்ட முட்செடிகளும், கதிர்க்கோல் பயன் தரு மரங்களும் உண்டு. புதர் களுக்குக் கீழே மலர்களும் புல்லும் உண்டு. மற்ற மலர்களைவிட உயரமாக நிற்கும் நீல அல்லி வட்டங்களைக் கொண்ட அவை கூட அடிப் பகுதியில் தான் வளர்கின்றன. அவைகளுக்குக் கீழே பெரணி களோடு பள்ளத்தாக்கின் அல்லி மலர்களும், விதைகளுள்ள மஞ்சள் மலர்ச் செடிகளும் உண்டு. இலை துளிர்த்த காட்டின் மென்மை யான நிலத்தில் தரைக்கு மிக அண்மையில் ஊதாப்பூக்களும், ஸ்ட்ராபெரி பழங்களும் காணப்படும்.

காட்டு நிறவறையின் அடித்தளம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கும். அங்கே மரங்கள், புதர்கள் மற்றும் மலர்களின் வேர்களை நாம் காண்கிறோம்.

பைன் அல்லது இலைகொண்ட மரக் காட்டின் ஒவ்வொரு நிலத் தளமும் தங்களுக்கென்று சொந்தக் குடியிருப்பாளர்களைக் கொண் டிருக்கிறது. பருந்து மிக உயரத்தில் தனது கூட்டைக் கட்டுகிறது. அதற்குக் கீழே மர உள்துளையில் மரங்கொத்தி தன் குடும்பத்துடன் இருக்கிறது. முட்செடிப் புதரில் பாடும் பறவைத் தனது கூட்டைக் கட்டுகிறது. தரைத் தளத்தில் வாழும் காட்டுப் பறவைச் சேவல்



அடியில் நடந்து செல்கிறது. தரைக்குக் கீழே, நிலவறையில் காட்டுச் சுண்டெலிகள் தங்களது அடி நிலப் புழை வழிகளையும் வீடுகளையும் கொண்டிருக்கின்றன.

இந்த மிகப் பெரிய வீட்டில் எல்லாவகையான அறைத் தொகுதி களும் உண்டு. மேல் தளப்பகுதிகளில் வெப்பமும் வறட்சியும் இருக்கும். தரைத் தளப்பகுதியில் இருளும் ஈரமும் இருக்கும். இந்தக் குளிர் அறைத் தொகுதிகளைக் கோடை இல்லங்களாக மட்டுமே பயன் படுத்த முடியும். ஆண்டு முழுதும் பயன்படுத்தக் கூடிய வெப்ப அறைத் தொகுதிகளும் உண்டு.

தரையிலுள்ள ஒரு பொந்து ஒரு வெப்ப அறைத் தொகுதிதான். ஐந்து அடி ஆழமுள்ள பொந்தில் வெப்ப நிலையை விஞ்ஞானிகள் கணக்கிட்டார்கள். இது குளிர் காலத்தில் அளக்கப்பட்டது. வெளிப் புறத்தில் $-18^\circ C$ சென்டிகிரேட் வெப்பநிலை இருந்த போது, பொந் தின் உள்ளே வெப்பமானி $+8^\circ$ ஐப் பதிவு செய்தது.

ஒரு மரப் பொந்தில் அதிகமான குளிர் இருக்கும். குளிர்காலத்தில் இங்கு ஒரு பறவை குளிரால் இறுகிப் போகக் கூடும். இருப்பினும் கோடையில் இது மிகவும் விரும்பத்தக்க ஓரிடமாகும். குறிப்பாக, எப்பொழுதுமே 'இரவு முறைமாற்றத்தில்' உள்ள ஆந்தைகளும், வௌவால்களும் சூரியனிடமிருந்து மறைந்து எங்காவது இருண்ட மூலையில் தூக்கம் போட்டே தங்கள் நாட்களைச் செலவிட விரும்பு கின்றன.

மக்கள் அடிக்கடி தங்களது அறைத் தொகுதிகளை, ஒரு வீட் டிலிருந்து மற்றொன்றுக்கும், ஒரு தளத்திலிருந்து பிறிதொன்றுக்கும் மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் காட்டில் இது நடைமுறையில் இயலாதது.

ஒரு காட்டுப் பறவைச் சேவல், இருளாக, ஈரமாகவுள்ள வீட்டை வறட்சியாக, வெப்பமாகவுள்ள அட்டாலிக்கு ஒருபோதும் மாற்றிக் கொள்ளாது. மேலும், அட்டாலியை விரும்பும் பருந்து, மரத்தின் அடிப்பகுதியில் தரையை ஒட்டித் தனது கூட்டை இடம் பெயர்க்க ஒருபோதும் ஒப்புக் கொள்ளாது.

காட்டின் கைதிகள்

ஓர் அணில் தனது அறைத் தொகுதியைப் பாலைவனத்தில் நெடுந் தொலைவு தாவும் ஒரு ஜெர்புவாவோடு மாற்றிக் கொள்வதாக நாம் கற்பனை செய்து பார்ப்போம். ஓர் அணில் காட்டில் வசிக்கிறது, அதே வேளை ஜெர்புவா திறந்த ஸ்டெப்பியிலோ, பாலைவனத்திலோ வசிக்கிறது.

அணிலினுடைய வீடு உயரே மரத்தின் மீது ஓர் உள்துளையிலோ, கிளைகளுக்கு மையத்திலோ இருக்கும். ஜெர்புவா நிலத்தில் ஒரு பொந்தில் வசிக்கிறது.

தனது புதிய வீட்டை அடைவதற்காக ஜெர்புவா மரத்தின் மீது ஏறவேண்டி இருக்கும். ஆனால் அதனால் இதைச் செய்ய முடியாது, ஏனெனில் அதனுடைய உள்ளங்கைகள் ஏறுவதற்கு ஏற்றனவல்ல.

மறுபுறத்தில், அணிலும் நிலத்திற்கு அடியில் வாழ்வது ஒருபோதும்

இயலாது. அதனது எல்லாப் பழக்கங்களும் வழிகளும் மரத்தில் வசிப் பனவற்றைப் போன்றவைகளாகும்.

அது எங்கே வசிக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ள நாம் அதனது வாலையும் உள்ளங்கைகளையும் பார்ப்பது மட்டும் அவசிய மானது.

ஓர் அணிலினுடைய உள்ளங்கைகளானது கிளைகளைப் பற்றிக் கொள்ளவும், மரத்திலிருந்து கொட்டைகளைப் பறிக்கவும் பைன் மரத்தை கூம்பு ஆக்கவும் ஏற்றதாக அமைந்திருக்கின்றன. அது கிளைவிட்டு கிளை தாவுகின்ற போது அதனுடைய வால் காற்றிலே ஒரு முறையான வான்குடை போல உதவி செய்கிறது. அணிலினு டைய வால், அது விரைந்து பாய வேண்டிய போதும், கீரியின விலங்கிடமிருந்து தப்பித் தாவ வேண்டிய போதும், அதனது இடர் மீட்புக்கு வருகிறது.

ஆனால், ஸ்டெப்பியில் வசிக்கும் ஜெர்புவா அணிலுக்கு முற்றிலும் மாறுபட்ட உள்ளங்கை அமைப்பையும் வாலையும் பெற்றிருக்கிறது. திறந்த ஸ்டெப்பியில் ஒளிந்து கொள்வதற்கு புதரோ, தரைப் பகுதியில் பாதுகாப்பைத் தரக் கூடிய ஒரு மரமோ கிடையாது. எதிரியிடமிருந்து தப்பிப்போக ஒரே வழி—ஓடிப் போய் மறைந்து போவதுதான். உண்மையில், தரைவழியாகச் செல்வதுதான். இதுதான் அந்த ஜெர்புவா உண்மையில் செய்வதாகும். தனது தலைக்கு மேலாக ஓர் ஆந்தையோ, கோட்டானோ வட்ட மிடுவதைக் கண்டவுடனேயே அது பாய்ந்து சென்று, பூமிக்கடியிலே உள்ள அநேகப் பொந்துகளில் ஒன்றில் எவ்வளவு விரைவாக அதனால் முடியுமோ அவ்வளவுக்கு ஓடி மறைந்து போய்விடும். இதன் காரண மாகத்தான் அது இத்தகைய உள்ளங்கைகளைப் பெற்றிருக்கிறது. அது தாவுகின்ற போது தனது நீண்ட பின்னங்கால்களைத் தரையில் தள்ளப் பயன்படுத்துகிறது. அதே வேளை அதனது சிறிய முன்னங்கால்களால் தோண்டுகின்றது. அது தனது எதிரிகளிடமிருந்து தனது பொந்தில் ஒளிந்து கொள்கிறது. அந்தப் பொந்து கோடை வெப்பத்திலிருந்தும், குளிர்காலக் குளிரிலிருந்தும் அதனைப் பாதுகாக்கிறது.

அதன் வால் எத்தகையது? ஜெர்புவாவின் வாலானது அதன் உள்ளங்கைகளாகப் பெரிதும் உதவுகின்றது. சுற்றிலும் பார்ப்பதற்காக இச்சிறு விலங்கு தனது பின்னங்கால்களில் உட்காருகின்ற போது, அதனது வால் தாங்கிக் கொள்ள உதவும் மூன்றாவது கால் போல துணை செய்கிறது. அது தாவுகின்ற போது, அதனுடைய வால் சுக்கானைப் போலத் தாவ வழிகாட்டுகிறது. அதற்கு வால் மட்டும் இல்லாது இருக்குமேயானால், அது காற்றில் குதிக்கின்ற ஒவ்வொரு முறையும் அந்த ஜெர்புவா குட்டிக்கரணம் போட்டு, ஒரு பெரிய வெடிப் பொலியோடு தரையில் விழும்.

ஆகவே, அணிலும் ஜெர்புவாவும் வீடுகளை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தால், ஸ்டெப்பிக்காக காட்டையும், பொந்துக்காக மர உள்துளையையும் மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தால், அவை தங் களுடைய வால்களையும் உள்ளங்கைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்.

காட்டிலும் ஸ்டெப்பியிலும் உயிர் வாழக் கூடிய பிறவற்றை நாம் நெருக்கமாக கற்றறிவோமானால், அவை ஒவ்வொன்றும் இந்த உலகத்தில் தங்களது இடத்தோடு கட்புலனாகாத சங்கிலியால், உடைத் தெறிவதற்கு மிகவும் கஷ்டமான சங்கிலியால், கட்டப்பட்டு இருக்கிறது என்பதை நாம் கண்டு கொள்ள முடியும்.

காட்டின் தரைத் தளத்தில் காட்டுப் பறவைச் சேவல் வசிக்கிறது, ஏனெனில் அதனது விருப்பமான உணவு நிலவறையில் இருக்கிறது. அதனது நீண்ட அலகு மண் புழுக்களைக் கொத்துவதற்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறது. ஒரு மரத்தின் மீது காட்டுப் பறவைச் சேவலுக்கு அக்கறையுள்ள எதுவும் இல்லையென்பதால், மரத்தின் மீது ஒன்றைக் கூட நாம் காண முடியாது.

ஆனால் நிலத்தில் மூன்று விரல் காலமைந்த அல்லது பெரிய புள்ளிகள் விழுந்த மரங்கொத்திக் குருவியை நாம் அரிதாகத்தான் காண முடியும். மரங்கொத்திக் குருவி ஃபிர் அல்லது பிர்ச் மரங் களின் தண்டுகளைக் கொத்துவதிலேயே தனது நாட்களைச் செலவிடு கிறது.

அது எதைக் கொத்திக் கொண்டிருக்கிறது? எதை எதிர் நோக்கிக் கொண்டு இருக்கிறது?

ஃபிர் மரப்பட்டை துண்டு ஒன்றை நாம் இழுத்துப் பார்த்தால், எல்லாத் திசைகளிலும் வளைந்த வெள்ளைக் கோடுகள் செல்வதை நாம் காண முடியும். எல்லா ஃபிர் மரங்களிலும் நிரந்தரக் குத்தகை தாரனும், குடியிருப்பவனுமான அச்சுக் கலையாளரான மரப்பட்டை வண்டு ஒன்று, மரத்திற்குள்ளாக கடித்து அதக்கிய புழை வழிகளே அவை. ஒவ்வொரு வளைந்த கோடுகளும் ஒரு சிறிய பள்ளத்தில் முடிகிறது. ஒவ்வொரு பள்ளத்திலும் மரப்பட்டை வண்டின் முட்டை யிலிருந்து வெளிவந்த புழு, கூட்டுப் புழுவாக மாறி பின்னர் வண் டாகிறது. இந்த வண்டு ஃபிர் மரத்தையே சுவீகரித்துக் கொள்கிறது. மரங்கொத்திக் குருவியின் வலுவான அலகால் மரத்தின் பட்டையை எளிதாகக் கொத்த முடியும். அதனது நாக்கும், வளைந்த கோடு களின் வழியாகச் சுழன்று சென்று முட்டையிலிருந்து வெளிவந்த புழுவைப் பிடிக்கக் கூடிய அளவுக்கு நீளமும் நெகிழும் தன்மையும் கொண்டது.

இம்முறையில் நாம் சங்கிலித் தொடர் கொள்கிறோம்: ஃபிர் மரம் — மரப்பட்டை வண்டு — மரங்கொத்திக் குருவி.

மரங்கொத்திக் குருவி மரத்தோடும், காட்டோடும் பிணைந்திருக்கும் பல சங்கிலிகளில் இதுவும் ஒன்று.

மரத்தின் மீது மரப்பட்டை வண்டு தனது உணவைக் காண்பது மட்டுமல்லாது, வேறு பல புழுப் பூச்சிகளையும் அவைகளது முட்டை களிலிருந்து வெளிவந்த புழுக்களையும் பெறுகின்றன. குளிர் காலத்தில் மரங்கொத்திக் குருவி பைன் மரக் கொட்டைகளிலிருந்து மிகுந்த சாமர்த்தியத்தோடு விதையைப் பெற்றுக் கொள்கிறது. அடிமரத் திற்கும் கிளைக்கும் இடையில் கூம்பைச் செருகி அதைத் தயாராக வைத்திருக்கிறது. அதனுடைய உறுதியான வாலும் வலுவான உள் ளங்கை போன்ற விரல்களும் அடிமரத்தின் மேலும் கீழும் ஏறுவதற்கு

ஏதுவாக இருக்கின்றன. பிறகு இது எங்ஙனம் எப்போதும் மரங்களுக் கிடையேயான தனது வாழ்க்கையை வேறு எதற்காகவும் மாற்றிக் கொள்ள முடியும்?

நாம் மரங்கொத்திக் குருவியையும் அணிலையும் காட்டின் கைதி களாகத்தான் பார்க்கிறோமே தவிர, குடியிருப்பாளர்களாக அல்ல.

மீன் கரைக்கு வந்தது எப்படி



இந்தப் பெரிய உலகத்தை உருவாக்கும் பல சிறிய உலகங்களில் ஒன்றுதான் காட்டின் சிறிய உலகு.

இந்தப் பூமியில் காடுகளும், ஸ்டெப்பிகளும் மட்டுமல்லாது, மலை களும், தூந்திரவெளிகளும் கடல்களும் மற்றும் ஏரிகளும் இருக்கின்றன.

ஒவ்வொரு மலையிலும் கட்புலனாகாத தடைகள் ஒரு சிறிய உலகத்தினை மற்றவொன்றிலிருந்து பிரிக்கின்றன.

ஒவ்வொரு கடலும் கட்புலனாகாத மேல் தளங்களால் அடி நில நீர்த் தளங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஏற்ற இறக்கமுடைய கடலலைப் பகுதிகளின் நீர் விளிம்பில் உள்ள பாறைகள் கணக்கற்ற சிப்பி உயிரிகளால் நிறைந்து உள்ளது. அவை பாறைகளோடு அவ்வளவு நெருக்கமாக உள்ளன. வலிமையான புயற்காற்றுக் கூட அதில் தலையிட்டுப் பிரிக்க முடியாது.

இன்னும் கீழே, சூரிய ஒளி படர்ந்த நீரில் பச்சை மற்றும் சாம்பல் நிறக் கடற்பாசிகளுக்கு மத்தியில் ஒளி வண்ணமய மீன்கள் விரைந்து வருகின்றன. ஊடுருவும் மெடுசாகக்கள் மேலாக மிதக் கின்றன, பல புறமுனைப்புடைய நட்சத்திர மீன்கள் மெதுவாக அடித்தளத்தின் மீது ஊர்கின்றன. அடி நில நீர் பாறைகள் அருந் திறல் வாய்ந்த விலங்குகளால் நிறைந்து காணப் படுகின்றன. அவை செடிகளைப் போல அசைவற்று நிற்கும். அவை தங்களது உணவைத் தேடிச் செல்லாது. அவைகளது வாய்களுக்கு உள்ளாகவே உணவைப் பெற முடிகிறது. அவை இரட்டைக் கழுத்துடைய பெரிய சாடி போலக் காணப்படும் சிவப்பு அஃபிடியாக்களாகும், நீரைக் குடிக்கின்ற போதே உட்செல்லும் குறு உயிரிகளால் தங்களது ஊட்டத்தைப் பெறுகின்றன. தங்களுக்கு மிக அண்மையில் நீந்திச் செல்லும் மீனை ஒளிமிக்க அனிமோன்கள் தங்களது இலைபோன்ற உணர்ச்சிக் கொடுக் கால் பிடித்துக் கொள்ளும்.

அடித்தளத்தில் முற்றிலும் மாறுபட்ட ஓர் உலகம் உள்ளது. கடலின் இருண்ட தளத்தில், இரவு ஒருபோதும் பகலாக மாறுவ தில்லை. அங்கு எப்போதும் வெளிச்சம் இல்லாமலே இருக்கும். கடலின் ஆழத்தில் வெளிச்சம் இருப்பதில்லை என்பதிலிருந்து அங்கு கடற்பாசி இல்லை என்பது பொருளாகும். கடற்பாசிக்கு வெளிச்சம் வேண்டும்.

மேலிருந்து கீழாக வடிகட்டி அனுப்பப்பட்ட விலங்கு, தாவரத்தின் மீந்த பொருட்கள் படியும் பெருங்கடலின் படுக்கை ஓர் இருண்ட கல்லறையாகும்.

நீண்ட உணர்ச்சிக் கொடுக்குகளுடன் கூடிய பத்துக்கால் நண்டுகள் இறுகாத சேற்றுப் படிவில் அலைகின்றன. அகன்ற வாய்களுடைய மீன்கள் இருட்டில் நீந்துகின்றன. சிலவற்றுக்குக் கண்களே இல்லை.

மற்றவைகள் தொலைநோக்கிகளைப் போல இரு கண்களைப் பெற்றிருக்கின்றன. தங்களது உடல் முழுக்க தீப்போன்ற புள்ளிகளைக் கொண்ட மீன்களும் இருக்கின்றன. பிரகாசமாக ஒளி ஏற்றப்பட்ட சாளரங்களைக் கொண்ட சிறு கப்பல்களைப் போல அவை காணப் படும். தங்களுக்கென்றே சொந்தமாக தீப்பந்தங்களைக் கொண்ட மீன்களும் உண்டு. அவற்றின் தலையில் வளர்ந்துள்ள உயரமான தண்டிலிருந்து அந்த ஒளி வருகிறது.

நமது சொந்த உலகத்தைப் போல அல்லாத எத்தனை விநோத மானது இது!

ஆனாலும் பிறகு, கடற்கரை என்ற ஒரே கோட்டினால் அவை பிரிக்கப் பட்டிருந்தாலும் கூட, கடலோர நெடுகிலும் ஆழமற்ற நீர்நிலை உள்ள நிலப் பகுதியில் வேறுபாடுடைய வறட்சி காணப்படு கிறது.

ஓர் உலகத்தின் குடியிருப்பாளர்கள் மற்றொன்றுக்குச் செல்ல முடியுமா? ஒரு மீன் கடலை விட்டு வறண்ட நிலப்பகுதிக்கு இடம் பெயர முடியுமா?

முற்றிலும் இயலாததாகவே தோன்றுகிறது. ஒரு மீன் நீர் வாழ்க் கையை ஏற்றுக் கொண்டுள்ளது. தரையில் அது வாழ வேண்டு மானால் செவுள்களுக்குப் பதிலாக நுரையீரல்களும் துடுப்புகளுக்குப் பதிலாக கால்களும் அதற்குத் தேவைப்படும். ஒரு மீன் தனது கடல் வாழ்க்கையை வறண்ட நிலப்பகுதி வாழ்க்கைக்கு மாற்றிக் கொள்ள வேண்டுமானால், அது மீனாக இல்லாது போனால் மட்டுமே முடியும்.

ஆனால் ஒரு மீனால் மீனாக இல்லாது போக முடியுமா?

இந்த வினாவை ஒரு விஞ்ஞானியிடம் நாம் கேட்டால், பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மீன் இனத்தின் சில வகைகள் உண்மையாகவே கரைக்கு வந்து, மீன்களாக இல்லாது போயின என்று நமக்குக் கூறுவார். நீரிலிருந்து நிலத்திற்கு ஏற்பட்ட இந்த மாற்றம் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டதல்ல, ஆனால் பல மில்லியன் ஆண்டுகளில் ஏற்பட்டது.

படிப்படியாக வறண்டு போய்க் கொண்டிருந்த ஆஸ்திரேலிய நதி களில் இருந்த கொடுங்கை மீன் இனத்தின் நீந்தும் சவ்வுப்பை ஒரு நுரையீரலை ஒத்திருந்தது. ஆண்டின் வறட்சியான காலத்தில், நீர் மட்டம் குறையத் தொடங்குகின்ற போது, நதிகள் எல்லாம் சேற்று மடுக்களாக மாறுகின்ற போது, பிற எல்லா மீனும் செத்துப் போகும். அவைகளது அழுகிய உடல்கள் நீரினை மாசுபடுத்தும். வறட்சிக் காலத்தில் கொடுங்கை மீன் மட்டுமே தப்பிப் பிழைக்கும். ஏனெனில் அதன் செவுள்களோடு நுரையீரல்களையும் அது பெற்றிருக் கிறது. அதற்குக் காற்றுத் தேவைப்படும் போது, நீரிலிருந்து தன் தலையை வெறுமனே வெளியே நீட்டினால் போதும்.

ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் சில வகை மீன் இனங்கள் உள்ளன. அவைகளால் நீரில்லாமல் கூட இருக்க முடியும். வறட்சியான காலத்தில் அவை தங்களைச் சேற்றுப் படுகைகளில் புதைத்துக் கொண்டு அசைவற்று அங்கேயே கிடக்கும். மீண்டும்

மழைக் காலம் வருகின்ற வரை அவை தங்களது நுரையீரல்களால் சுவாசித்துக் கொண்டிருக்கும்.

மீனுக்கு நுரையீரல்கள் வளர்ச்சி பெற்றிருக்க முடிந்தது என்பதே இதன் பொருள்.

ஆனால் கால்கள் என்ன ஆயின? ஆம், கால்களுந்தான், இதை மெய்ப்பிக்கும் உயிருள்ள ஆதாரங்கள். வெப்ப மண்டலத்தில் இருக்கின்ற சேற்று மீன் வகை, கரை நெடுகத் தாவிச் செல்வது மட்டுமல்லாது, மரங்களிலும் ஏறக் கூடியனவாக இருக்கின்றன. அவைகளின் ஜோடித் துடுப்புகள் அவைகளின் கால்களாகப் பயன்படுகின்றன.

இத்தகைய விநோதமான உயிரிகள் அனைத்தும் நீரிலிருந்து நிலத்திற்கு மீன் வந்திருக்க முடியும் என்பதற்கு உயிருள்ள சான்றாகும். ஆனால் இது உண்மையிலேயே நடைபெற்றது என்பதை நாம் எங்ஙனம் கூற முடியும்?

மரபற்றழிந்த விலங்குகளின் எலும்புகள் நமக்குக் கதை சொல்லும். பண்டையப் படிவுப் பொருள்களை அகழ்ந்தெடுத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மீனைப் போலவே தோன்றிய, ஆனாலும் மீன் அல்லாத, விலங்கின் எலும்புகளைக் கண்டனர். இது ஒரு நிலநீர் உயிரினம், தவளை அல்லது பல்லியின உயிர்வகை போன்றது. இந்த விலங்கு ஸ்டிகோசெஃபாளஸ் என அழைக்கப்படுகிறது. துடுப்புகளுக்கு பதிலாக அது ஒழுங்கான ஐந்து விரல் கொண்ட கால்களைப் பெற்றிருந்தது. கரைக்கு வந்த நேரங்களில், இந்தக் கால்களால், மெதுவாகவே என்றாலும், அதனால் நகர முடிந்திருக்கிறது.

சாதாரணத் தவளையை நாம் நெருக்கமாக உற்றுப் பார்க்கலாம். முட்டையிலிருந்து குஞ்சுபொரித்த போது அது ஒரு தலைப்பிரட்டை. அந்தத் தலைப்பிரட்டைக்கும் மீனுக்கும் இடையே மிகக் குறைந்த வேறுபாடுதான் காணப்படுகிறது.

ஆகவே, பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதாக, வறண்ட நிலத்திலிருந்து கடலைப் பிரிக்கும் தடையை சில மீன் இனங்கள் கடந்து வந்திருக்கின்றன. ஆனால் அவை வழிமுறையில் மாறியிருக்கின்றன. மீனிலிருந்து நீர்நில வாழுயிர் அருகிப் போயிற்று. மாற்றாக அவையே ஊர்வனவற்றிற்கு மூதாதையர்களாயின. ஊர்வன பாலூட்டிகளின் பறவைகளின் ஆதிகாலத்திய மூதாதையர்களாகும். நீரை முற்றாக மறந்துவிட்ட அநேகமானவை இதில் அடங்கும்.

அமைதியான சாட்சியங்கள்

புதைபடிவ விலங்குகளின் எலும்புகள், மில்லியன் கணக்கான ஆண்டுகளில் உயிரினங்கள் மாறாமலேயே இருக்கக் கூடியன அல்ல என்பதை நமக்குச் சொல்லும் அமைதியான சாட்சியங்களாகும்.

அவைகளை மாறவைப்பது எது?

ஆங்கில விஞ்ஞானி சார்லஸ் டார்வின் தனது பரிணாமக் கொள்கையை விரிவு படுத்துவதற்கு முன்னர் வரை இது ஒரு புதிராகவே இருந்தது. அவர் தொடங்கிய பணியானது வி. கொவலேவ்ஸ்கி மற்றும்

2–563

கே. திமிர்யாஸெவ் என்ற இரு ருஷ்ய விஞ்ஞானிகளால் தொடரப் பட்டது. அவர்களது விரிவடைந்த ஆய்வுகள் முடிந்தபோது, நமது முப்பாட்டர்கள் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாததை நமக்குத் தெளிவாக்கினார்கள்.

இந்த உலகத்தில் தான் வசிக்கக் கூடிய இடத்தின் சூழ்நிலை, சுற்றுப்புறம் ஆகியவற்றை ஒவ்வொரு உயிரியும் சுவீகரித்துக் கொள் கிறது. ஆனால் இந்த உலகத்தில் எதுவும் நிலையானதல்ல: வெப்ப மான தட்பவெப்பம் குளிரானதாக மாறுகிறது, ஒரு காலத்தில் சம வெளியாக இருந்த இடத்தில் மலைகள் தோன்றுகின்றன, கடல் நிலத்திற்கு வழி விடுகிறது, பைன் மரக் காடுகள் இலைகள் கொண்ட மரக் காடுகளால் அகற்றப் படுகின்றன.

தங்களைச் சுற்றிலும் உள்ள அனைத்தும் மாற்றங்கள் பெறுகின்ற போது, உயிரிகளுக்கு என்ன நேர்கிறது?

அவைகளும் மாறுகின்றன.

இருப்பினும், அவை எப்படி மாற வேண்டும் என்பதை முடிவு செய்வது அவைகளிடத்தில் இல்லை. ஒரு யானை திடீரென்று இலைகள், புற்கள் மற்றும் பழங்களை விட்டுவிட்டு புலால் உணவைக் கொள்ள முடியாது. ''எனக்குப் புழுக்கமாக இருக்கிறது,'' என்று ஒரு கரடி தனது மென் மயிரினை உரிக்கச் சொல்ல முடியாது.



தங்கள் விருப்பம் போல உயிரினங்கள் மாறிக் கொள்ள முடியாது. புதிய உணவுகளை உண்ணவும், புதிய நிபந்தனைகளின் கீழ் வாழவும் கட்டாயப் படுத்துகின்ற போதுதான் அவை மாறுகின்றன. ஏற்படக் கூடிய மாற்றங்கள் அனைத்தும் எப்பொழுதுமே அவைகளுக்கு நல்ல தாகவும், எப்பொழுதுமே பயனுள்ளதாகவும் இருப்பதில்லை.

புதிய சூழ்நிலைகளில் விலங்குகளும் தாவரங்களும் தாங்கள் உயிர் வாழத் தேவையானவை அவைகளுக்குக் கிடைக்காத போது, அவற் றின் மூதாதையர் செய்தது போல, அவற்றை விட்டு விலக முயல்வது அடிக்கடி நிகழ்கிறது.

அவை பட்டினி கிடக்கின்றன, உறைந்து போகின்றன. அல்லது ஒரு வேளை வழமையற்ற வெப்பம் அல்லது வறட்சியால் அவை துயர்படத் தொடங்கலாம். அவற்றின் எதிரிகளுக்கு அவை எளிதில் பலியாகலாம். அவைகளது கால்வழியினர் இன்னும் அதிகமாக வலிமை குன்றி இருப்பர். ஆகவே, புதிய நிலைகளில் தப்பிப் பிழைப்பது அரி தாகி விடும். முடிவில் மாற்றங்களை வெல்ல முடியாததால், அந்த இனம் முழுக்க அழிந்து போகும்.

ஆனால், உயிரினங்களுக்கு இந்த மாற்றம் உதவியானதாகவும், தீங்கு பயக்காததாகவும் அமைவதும் உண்டு, இத்தகு சாதகமான சூழ்நிலைகளில், மேற்கண்ட உதவிகரமான மாற்றங்கள் எதிர்வரும் தலைமுறையினர்க்கு மாற்றப்பட்டு, அவை சேகரிக்கப்பட்டு வலிமை யானதாக, ஒன்றாக்கப்பட்டனவாக மாறுகின்றன.

காலப் போக்கில் அவர்களது மூதாதையரைப் போல பின் சந்ததியினர் தோன்றுவதில்லை என்பதை நாம் காண்கிறோம். அவர்

களது மெய்ம் மூலமான இயல்பு மாறி விடுகிறது. தங்களது மூதாதையர்க்குத் தீங்கு பயப்பதாக இருந்த அதே சூழ்நிலைகளில் அவர்களால் வாழ முடிகிறது. புதிய வாழ்க்கைச் சூழ்நிலைகளை அனுசரித்து அவற்றோடு அவர்கள் ஒன்றிணைந்து போகிறார்கள். நடந்தது என்னவெனில், இயற்கைத் தேர்வு: புதிய சூழ்நிலைகளைச் சுவீகரித்துக் கொள்ளாத உயிரினங்கள் மாள்வுற்றன, ஏற்றுக் கொண்டவைகள் தப்பிப் பிழைத்தன.

திமிர்யாஸெவ் ஆய்வுக்கு வைத்த எடுத்துக் காட்டு இது தான். ஜெருசலேத்தில் உள்ள உண்ணத்தக்க கிழங்குடைய முள்ளியினச் செடி ஒன்று மலைகளில் நடப்பட்டது. சமவெளிகளில் விளையும், வெப்பச் சூழலில் வளர்கின்ற அச்செடி உயரமான காம்பும் அடர்த்தியான இலைகளும் கொண்டது. மலைகளில் அது வளர்ச்சி தடைப் படுத்தப் பட்ட செடியாக மாறியது. அதன் இலைகள் தரைக்குப் பக்கமாக விரிந்தன.

இந்த மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம் அச்செடி புதிய சுற்றச் சூழலில் தன்னை இணைத்துக் கொண்டதே ஆகும். மலைகளில் உள்ள தட்பவெப்ப நிலையும் மண்ணும் சமவெளியில் உள்ளதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த மாற்றம் அதற்கு நல்லதாக அமைந்தது. இப்போது அதனால் தனது இலைகளைப் பனியிலிருந்து சுலபமாக மறைத்துக் கொள்ளவும், பனிக் காலத்திய கடும் காற்றிலிருந்தும், உறைபனியிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளவும் முடிகிறது.

சூழ்நிலை மாற்றத்தால் உயிரினத்தின் இயல்பிலும் மாற்றம் ஏற்படுகிறது என்பன போன்ற எடுத்துக்காட்டுகள் ஏராளமாக இருக்கின்றன.

மீன்கள் படிப்படியாக நீர்நில உயிரினமாக மாறியதைக் கொண்டு இதை விளக்க முடியும்.

படிப்படியாக வறண்டு போய்க் கொண்டிருந்த வரலாற்றுக்கு முந்திய காலத்தியக் கடல்கள், ஏரிகள் இவற்றிலிருந்து இது மேலீடாகத் தொடங்குகிறது. புதிய வாழ்க்கை முறையோடு தங்களைச் சுவீகரித்துக் கொள்ளாத மீன் இனங்கள் எல்லாம் அழிந்து போயின. தப்பிப் பிழைந்தன எல்லாம் நீர் இல்லாமலேயே நீண்ட காலம் இருப்பதற்குக் கற்றுக் கொண்டன. வறட்சியான காலங்களில் வண்டல்களுக்குள் தங்களைப் புதைத்துக் கொண்டோ, தங்களது துடுப்புகளைக் கால் போல நகர்த்திக் கொண்டு அண்மையிலுள்ள குட்டைகளுக்கு ஊர்ந்து சென்றோ பிழைக்கும். வறண்ட நிலத்தில் உதவியாக இருக்கக் கூடிய ஒவ்வொரு சிறிய உடல் மாற்றத்தையும் இயற்கை பயன்படுத்திக் கொள்கிறது. இந்த மீன்களின் நீச்சல் சவ்வுப்பையானது மெல்லமெல்ல நுரையீரல்களாக மாறிவிட்டன. இணையான துடுப்புகளும் கால்களாக வளர்ச்சி பெற்றன.

இப்படியாகத்தான் நீரில் வாழ்வன சில மெல்ல மெல்ல நிலத்தின் மீது வாழ்வதற்குத் தங்களை மாற்றிக் கொண்டன.

தனது புதிய சுற்றுச் சூழலில் மீனின் துடுப்புகள், நீச்சல் சவ்வுப்பை

மற்றும் உடல் அமைப்பு மாற்றங்கள் ஏற்படுவதற்கு மாறுபடும் ஆற்றலே காரணமாகும்.

அந்த மாற்றங்கள் பயனுள்ளவையாக இருந்தால் மட்டுமே தேர்வு நிலைத்திருக்கிறது, அதே வேளை தீங்கு பயப்பது கழித்தகற்றப் படுகிறது.

மரபொப்புத் தொடர்பு இத்தகைய பயனுள்ள மாற்றங்களைத் திரட்டி ஒரு முகப்படுத்தி அடுத்து வரும் தலைமுறைக்குச் செலுத்துகிறது.

வி. கொவலேவ்ஸ்கி நுணுகி ஆராய்ந்தது போல, குதிரையின் வரலாற்றிலிருந்து இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ள முடியும்.

அடர்த்தியான காடுகளின் வழியாக ஒரு காலத்தில், கீழே வீழ்ந்து கிடந்த அடிமரங்களின் மீது தாறுமாறாக விரைந்து ஓடித்திரிந்த, ஒரு சிறிய விலங்கின் சந்ததிதான் குதிரை என்பதை நம்புவது உண்மையிலேயே சிரமமானதுதான். குதிரையைப் போல இந்தச் சிறிய விலங்கிற்குக் குளம்புகள் கிடையாது. ஆனால் ஐந்து விரல்களைக் கொண்ட உள்ளங்கைகளுடைய குட்டையான பக்க உறுப்புகள் உண்டு. காட்டின் ஒழுங்கற்ற தரையில் உறுதியான பிடிமானத்தைப் பெற இவை உதவின.

கால ஓட்டத்தில் பெருங்காடுகள், சமவெளிகளை ஏற்படுத்தும் வகையில் அருகின. குதிரையின் மூதாதையரான காட்டு வாழ்விலங்கு திறந்த சமவெளிக்கு அடிக்கடி வர வேண்டியதாக இருந்தது. ஆபத்து முன்னோக்கிய போது, காட்டில் இருப்பதைப் போல ஒளிந்து கொள்வதற்கு இங்கு இடமே இல்லாது போயிற்று. தப்புவதற்கான ஒரே வழி பறத்தல் மட்டுமே. திறந்த சமவெளிகளில் தப்புவதற்குக் காட்டைப் போல ஒளிந்து – கண்டு பிடிக்கும் முறையானது வால் நுனி போல மாறியதால், துரத்தலின் போது ஏராளமான காட்டு விலங்குகள் மாள்வுற்றன. மிக நீண்டதும், விரைந்து செல்வதற்கான கால்களைப் பெற்றவை மட்டுமே கொடிய விலங்குகளிடமிருந்து தப்பித்து, உயிர் பிழைக்க முடிந்தது.

ஓடுவதற்கு எந்த வகையிலும் உதவாத ஒவ்வொன்றையும் உதறித் தள்ளி விட்டு, விலங்கு விரைந்து ஓட ஏதுவான ஒவ்வொரு மாற்றத்தையும் கண்டறிந்து பாதுகாப்பதில் இயற்கை தனது தேர்வைத் திரும்பவும் நடத்தியது.

குதிரைகளின் முன்னோர்களது வாழ்க்கையைக் கண்டறிந்ததில் விரைந்து ஓடுபவைகளுக்கு அதிகமான கால்விரல்கள் தேவையில்லை என்பதையே இது புலப்படுத்துகிறது. வலுவாகவும் உறுதியாகவும் இருந்தால் அது ஒன்றே முற்றிலும் போதுமானது. ஒரு காலத்தில் மூன்று விரல்கள் கொண்ட இனமாக இருந்து, இறுதியில் ஒரு விரல் குதிரை இருப்பதாகத் தோன்றுகிறது. இன்று நாம் அறிந்திருக்கும் குதிரை ஒரே ஒரு நீண்ட விரலை மட்டுமே கொண்டது என்பது, நமக்கு வியப்பை மூட்டலாம்.

காட்டிலுள்ள தனது முதலாவது வீட்டை விட்டு குதிரை புறப்

பட்ட போது, அதன் கால்கள் மட்டுமே மாற்றமடைந்திருக்கவில்லை. அதன் முழு உருவமும் மாற்றமடைந்தது. எடுத்துக் காட்டாக, அதன் கழுத்தை எடுத்துக் கொள்வோம். அதனது கால்கள் நீளமாக வளர்ந்திருக்க, அதே வேளை அதனது கழுத்து அப்படியே குட்டை யாக இருந்தால், தனது கால்களுக்குக் கீழே உள்ள புல்லை குறித்த நேரத்தில் அடைய முடியாமற் போயிருக்கும். இது அவ்வாறு நிகழ வில்லை. ஏனெனில்; குட்டைக் கழுத்துள்ள குதிரைகளை, ஏற்கெனவே குட்டைக் காலுடையவற்றை நிராகரித்தது போல, இயற்கை நிரா கரித்து விட்டது.

குதிரையின் பற்கள் என்னவாயிற்று? அவைகளும் கூட மாறி விட்டன. சமவெளிகளில் குதிரை கரடுமுரடான, மென்மையற்ற செடிகளைத் தின்று, அதைத் தனது பின்கடைவாய்ப் பற்களால் அரைக்க வேண்டி இருந்தது. ஆகவே அதன் பற்கள் மாறிவிட்டன. இப்போது குதிரைகள் ஒழுங்கான எந்திரப் பற்களையும், பற்களுக்கான அரத்தையும் கொண்டிருக்கின்றன. அவையால் வைக் கோலைக் கூட அரைக்க முடியும்.

குதிரையினுடைய கால்களையும், விரல்களையும், கழுத்தையும் பற் களையும் மாற்றுகின்ற மகத்தான இந்தப் பணி முற்றுப் பெற ஐம்பது மில்லியன் ஆண்டுகளாயின. இந்த மாற்றத்தில் மாண்டு போன உயிர்கள் ஏராளம்!

அது வரையிலும், தரையிலிருந்து கடலையும், சமவெளிகளிலிருந்து காட்டையும் பிரிக்கின்ற தடைகள் நிரந்தரமானவை அல்ல என்பதே இதன் பொருள். கடல்கள் வறண்டு போவதோ, நிலம் வெள்ள மாவதோ உண்டு. சமவெளிகள் பாலைவனங்களாக மாறுகின்றன. கடல் வாழ் உயிரினங்கள் வறண்ட நிலத்திற்குள் ஊர்ந்து வருகின்றன. காட்டில் வசிப்பவர்கள் சமவெளி வாசிகளாகிறார்கள். ஆனால் தனது சிறிய உலகத்தை விட்டு, தனது சுற்றுச் சூழலில் உள்ள கட்டுகளை உடைத்து விட்டு, வெளியேறுவது என்பது ஒரு விலங்கிற்கு எத்துணை சிரமமானது. இந்தச் சங்கிலியை உடைத்தெறிந்த பின்னுங்கூட அவை சுதந்திரமாக இல்லை. வெறுமனே கட்புலனாகாத ஒரு கூண்டிலிருந்து மற்றொன்றுக்குத்தான் அது போய் இருக்கிறது.

சமவெளிகளுக்குச் செல்ல குதிரை காட்டை விட்டு வந்த போது, காட்டில் வாழ்ந்த ஒன்று என்பதை விட்டுவிட்டு சமவெளியில் வாழ்கின்ற ஒன்றாக மாறி இருக்கிறது, அவ்வளவுதான். ஒரு காலத் தில் ஒரு குறிப்பிட்ட இன மீன் நீரை விட்டு வெளியேறி வறண்ட நிலத்திற்கு வந்தது. அது திரும்பக் கடலுக்குள் போகவே இல்லை. அவ்வாறு போக வேண்டி இருந்தால் அது திரும்பவும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டி இருந்திருக்கும். கடலுக்குத் திரும்பிய அநேக நிலம்வாழ் இனங்கள் விஷயத்தில் இதுதான் நடந்தது. எடுத்துக் காட்டாக, திமிங்கிலம் ‘மீன்-போல்’ மாற வேண்டி இருந் தது. அதனது பூர்வீகத் தோற்றத்தை அறியாத மக்கள், அது உண் மையில் ஒரு பாலூட்டியாக இருந்தும், அதை மீன் என்றே நினைக் கிறார்கள்.

மனிதன் சுதந்திரத்திற்கு வழி காண்கிறான்

இந்த உலகத்திலே ஒரு மில்லியனுக்கு நெருக்கமாக மாறுபட்ட விலங்கினங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் தனது சொந்த சிறிய உலகத்தில், தான் ஏற்றுக் கொண்டதற்கேற்ப வாழ்கிறது.

சில இடங்களில் 'தள்ளிப் போ!' என்று கூறுகின்ற கட்புலனாகாத அடையாளத்தை ஓர் இனம் காணும், மற்றொன்று 'வருக!' என்ற கட்புலனாகாத அடையாளத்தைக் காணும்.

ஒரு துருவக் கரடி அதுவாகவே ஒரு வெப்பமண்டலக் காட்டிற்குள் வந்து விட்டதென்றால் என்ன நடக்கும் என்று சற்றே கற்பனை செய்து பார்ப்போம். அதற்கு மூச்சுத்திணறும், ஏனெனில் அதனுடைய மென் மயிர்த் தோலை அகற்ற முடியாது. ஆனால் வெப்பமண்டல வாசியான யானை போன்ற ஒன்று ஆர்க்டிக் பனியிலே இருக்குமானால் விறைத்து செத்துப் போகும். நீராவிக் குளியல் வாழ்க்கை நடத்துகின்ற ஒன்றிற்கு எதுவுமே இல்லை, தோலைத்தவிர.

இந்தப் பூமியில் ஒரே ஓர் இடத்தில்தான் துருவக் கரடியையும், யானையையும் அடுத்திருப்பவர்களாகக் காண முடியும். இங்கே தான் நாம் உலகின் எல்லாப் பகுதி விலங்குகளையும் பார்க்க முடியும். இங்கே, சமவெளியில் உள்ள விலங்குகள் காட்டு விலங்குகளிடமிருந்து இரண்டு கெசம் தூரத்திலும், அவைகளையடுத்து மலையில் வசிப்பனவும் இருக்கும்.

இந்த இடந்தான் விலங்ககம்.

விலங்ககத்தில் ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த கதவில் தென் ஆப்பிரிக்காவும், வட அமெரிக்காவுக்கு அடுத்த கதவில் ஆஸ்திரேலியாவும் இருக்கின்றன. உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் விலங்குகள் வந்திருக்கின்றன. ஆனால் அவை தாமாகவே வரவில்லை. மனிதன் தான் அவைகளை ஒரு சேர இங்கே கொண்டு வந்திருக்கிறான்.

அவை எல்லாவற்றையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பது எவ்வளவு தொல்லையானது என்பதைக் கற்பனை செய்து பார்ப்போம். ஒவ்வொரு விலங்கும் தனது சிறிய உலகத்தோடு பழக்கப்பட்டது. அதனது சொந்த சிறிய உலகத்தைப் போலவே எல்லாவற்றையும் விலங்ககத்தில் அதற்காக மனிதன் ஏற்பாடு செய்தாக வேண்டும்.

இங்குள்ள குளத்தில் ஒரு பெருங்கடலின் ஒரு பகுதி இருக்க வேண்டும், பாலைவனத்தின் ஒரு பகுதி கூட இருக்க வேண்டும்.

விலங்குகளுக்கு உணவளிக்கப்பட வேண்டும். ஒன்றையொன்று சாப்பிட்டு விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். துருவக் கரடிக்குக் குளிப்பதற்குக் குளிர்ந்த நீர் தேவைப்படும்; குரங்குகளுக்கு வெதுவெதுப்பானது வேண்டும்; சிம்மத்திற்கு ஒவ்வொரு நாளும் தன் பங்காகப் பச்சை இறைச்சி தேவைப்படும்; தனது இறக்கைகளை நீட்ட கழுகிற்கு இடம் தேவைப்படும்.

சமவெளிகள், காடுகள், மலைகள், பாலைவனங்கள் மற்றும் கடல்கள் இவற்றைச் சேர்ந்த விலங்குகளை செயற்கையாக ஒன்று சேர்த்தன் மூலம், சாவிலிருந்து அவைகளைக் காப்பதற்காக மனிதன் செயற்கையான சுற்றச் சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டியவனாக இருக்கிறான்.

மனிதன் தானே எத்தகைய விலங்கு போன்றவன்: சமவெளிகள், காடுகள் அல்லது மலைகள் இவற்றில் எதைச் சேர்ந்த விலங்கு?

காட்டில் வசிக்கிற ஒரு மனிதனை 'காட்டு மனிதன்' என்றும், சதுப்புநிலத்தில் வசிக்கிற ஒரு மனிதனை 'சதுப்புநில மனிதன்' என்றும் அழைக்க முடியுமா?

ஐயத்துக்கிடமின்றி முடியாது.

காட்டில் வசிக்கின்ற ஒரு மனிதனால் சமவெளிகளிலும் வசிக்க முடியும். சதுப்பு நிலத்தில் வசிக்கின்ற ஒரு மனிதன் வறட்சியான இடத்திற்கு இடம் பெயரும் போது அளவற்ற மகிழ்ச்சியடைவான்.

மனிதனால் எங்கு வேண்டுமானாலும் வசிக்க முடியும். மனிதன் போய்ச் சேராத இடம் என்று இந்தப் பூமியில் எந்த இடமும் கிடையாது. 'மனிதர்களே, விலகிப் போங்கள்!' என்று கூறுகின்ற கட்புலனாகாத அறிவிப்பும் எங்கும் கிடையாது. ஆர்க்டிக் பகுதியைப் புத்தாய்வு செய்கின்றவர்கள் மிதக்கும் பனிக்கட்டிப் பாளத்தில் வசிக்கிறார்கள். அவர்கள் திடீரென்று வெப்பமான பாலைவனத்திற்குச் செல்ல வேண்டியிருந்தால், எந்தச் சிரமமும் இல்லாமல் அவர்கள் இந்தப் பணியைச் செய்வார்கள்.

ஸ்டெப்பி நிலத்திலிருந்து காட்டிற்கோ காட்டிலிருந்து சமவெளிகளுக்கோ ஒரு மனிதன் இடம்பெயர வேண்டியிருந்தால் அவன் தனது கால்களையோ, கைகளையோ மற்றும் பற்களையோ மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை. அவனது உடல் அடர்த்தியான மென்மயிரால் மூடப்பட்டிராத காரணத்தால், அவன் தெற்கிலிருந்து வடக்காகச் செல்கின்றபோது, மடிந்து போக மாட்டான்.

ஒரு விலங்கினுடைய மென் மயிர் அதனைப் பாதுகாப்பது போல, ஒரு மென்மயிர் மேலங்கியும், காலணிகளும் குளிரில் மனிதனைப் பாதுகாக்கும்.

குதிரையை விட வேகமாகச் செல்ல மனிதன் கற்றிருக்கிறான், ஆனால் இதைச் செய்வதற்கு அவன் தனது ஒரு கால் விரலைக் கூட இழக்க வேண்டி வரவில்லை.

ஒரு மீனை விட விரைவாக நீந்த மனிதன் கற்றிருக்கிறான், ஆனால் இதற்காக அவன் தனது கைகளையும் கால்களையும் துடுப்புகளுக்காக மாற்றிக் கொள்ள வேண்டியதாகவில்லை.

ஊர்வன, பறவைகளாவதற்குப் பல மில்லியன் ஆண்டுகளாயின. இந்த மாற்றத்திற்காக அவை தங்களது முன்னங்கைகளை இழந்து, இறக்கைகளைப் பெற்றன. ஒரு நூறு ஆண்டுகளுக்கு உள்ளாகத்தான் மனிதன் பறப்பதற்குக் கற்றுக் கொண்டான், ஆனால் முதலாவதாக அவன் தனது கைகளை இழக்க நேரிடவில்லை.

விலங்குகளைச் சிறைப்படுத்தும் கட்புலனாகாத இத்தடைகள் வழியாக மாற்றம் ஏதுமில்லாமல் கடக்க் மனிதன் கற்றுக் கொண்டிருக்கிறான்.

தனக்கு மூச்சுவிடக் காற்று இல்லாத உயரத்திற்குக் கூட மனிதனால் போக முடியும். மேலும், பூமிக்கு உடல் நலத்தோடு திடமாகத் திரும்புகிறான்.

முன்னைய உயர எல்லைகள் எல்லாவற்றையும் சோவியத் விண் வெளியாளர்கள் முறியடித்த போது, வாழ்வின் சாதாரண உயரத்தையும், உயிர் வாழ்வனவற்றால் குடியமர்ந்த உலகின் எல்லைகளையும் உயர்த் தினார்கள்.

விலங்குகளும் பறவைகளும் இயற்கையை முழுக்கச் சார்ந்திருக் கின்றன. கணிதத் தொடர்புடைய ஒரு பிரச்சினைக்கான விடை, அந்தப் பிரச்சினையின் நிபந்தனைகளைப் பொருத்தது. இந்த உண்மை இயற்கைக்கும் பொருந்துகிறது. ஒவ்வொரு விலங்குமே ஒரு பிரச்சினை தான். வாழ்க்கை அதற்கு வெற்றிகரமாகத் தீர்வு காண்கிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட விலங்கிற்கும், வாழ்வதற்குத் தேவையான தகுதிகளே பிரச்சினையின் நிபந்தனைகளாகும். விடையோ, உள் ளங்கைகள், கால்கள், இறக்கைகள், துடுப்புகள், அலகுகள், பழக்கங் கள் மற்றும் மரபுக்கூறுகள் என விரிவான வகைப்படுத்துதலுக்கு உட்பட்டது. அந்த விலங்கு எங்கே, எப்படி வாழவேண்டி இருக்கிறது என்பதைப் பொருத்ததே விடை: உப்பு அல்லது நன்னீரில் அல்லது தரையில், கடலோர நெடுகிலும் அல்லது கடலில், பெருங்கடல் தரையில் அல்லது அடிப்பரப்புக்கு அண்மையில், வடக்கில் அல்லது தெற்கில், மலைகளில் அல்லது பள்ளத்தாக்குகளில், பூமியின் மேற் பரப்பில் அல்லது பூமிக்குக் கீழே, ஸ்டெப்பிகளில் அல்லது காடுகளில் போன்றவை. மற்றொரு முக்கியமான சிறப்பு அம்சம் தனக்கு அடுத்திருப்பவராக அது பெற்றிருக்கும் விலங்குகளாகும்.

விலங்கு தனது சுற்றுச் சூழ்நிலையையே முழுமையாகச் சார்ந்திருக் கிறது.

ஆனால் மனிதன் தனக்குப் பொருந்துகின்ற சுற்றுச்சூழ்நிலையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். மேலும் அடிக்கடி அவன் இயற் கையின் கைகளிலிருந்து நூலை வலிந்து பற்றி, தனக்கு விருப்பமில்லாத நிபந்தனைகளைக் குறுக்குக் கோடிட்டு அடித்து விடுகிறான்.



இயற்கையின் நூல் கூறிகிறது: ''பாலைவனத்தில் மிகக் குறைந்த அளவு நீரே இருக்கிறது.'' ஆனால் பாலைவனங்கள் வழியாக நாம் ஆழமான கால்வாய்களைத் தோண்டும் போது இதைக் குறுக்குக் கோடிட்டு அடித்து விடுகிறோம்.

இயற்கையின் நூல் கூறுகிறது: ''வடக்குப் பகுதிகளின் மண் தரிசாகும்.'' இந்த மண்ணில் விளையவைப்பதன் மூலம் நாம் மாற்று கிறோம். எப்போதும் நிலைத்திருக்கின்ற முதிரைப் புல்வகையையும், பயற்றின நெற்றுக்களையும் நடுவதன் மூலம் அந்நிலத்தை செழிப் பானதாக நாம் மாற்றுகிறோம்.

இயற்கை நூல் கூறுகிறது: ''குளிர் காலத்தில் குளிராகவும் இர வில் இருளாகவும் இருக்கும்.''

ஆனால் இந்த வார்த்தைகளை மனிதன் பொருட்படுத்துவதே இல்லை. குளிர் காலத்தில் வீட்டை வெதுவெதுப்பாகவும், இரவில் வெளிச்சத்தையும் ஏற்படுத்திக் கொள்கிறான்.

நமது சுற்றுச் சூழலை நாம் நிலையாக மாற்றிக் கொண்டே வருகிறோம்.

நம்மைச் சுற்றிலுமுள்ள காடுகள், பயிர் செய்வதனாலும், காட்டை

அழிப்பதனாலும், எப்போதோ தங்களது ஆரம்பகாலத் தோற்றத்தை இழக்கத் தொடங்கிவிட்டன.

நம்முடைய ஸ்டெப்பி நிலங்கள் முன்னைய மங்கலான காடாக வளர்ந்த தோட்டப் பகுதியாக இல்லை. அவை மனிதர்களால் பயிர் செய்யப் படுகின்றன.

நமது செடிகள், நமது ரை மற்றும் கோதுமை, நமது ஆப்பிள் மற்றும் பேரியினக்காய் ஆகியன ஒரு காலத்தில் காடாக வளர விடப்பட்ட தோட்டப்பகுதியில் வளர்ந்த முதிரைப் புல்லாகவோ, பழமரங்களாகவோ இல்லை.



இயற்கையில் எங்கே நாம் ‘ஆப்பிள்-பேரியினக்காய்’, இனிப்பு ஆப்பிள் பேரி இனப் பழம் காண முடியும்? அல்லது ஒரு பழம் பாதி இனிப்புச் செர்ரியாகவும் பாதி புளிப்புச் செர்ரியாகவும் இருக்க முடியுமா? ருஷ்ய விஞ்ஞானியும் தோட்டக்கலை நிபுணருமான இவான் மிச்சூரின் உருவாக்கிய பழங்களைத் தவிர வேறு அதிசயப் பழங்கள் உண்டா?

வீட்டு விலங்குகளான குதிரைகள், பசுக்கள் மற்றும் ஆடுகள் ஆகிய வற்றைப் பாலையில் காண முடியாது. அவை மனிதனால் திரட்டப் பட்டு இனப்பெருக்கம் செய்விக்கப் படுகின்றன.

கொடிய விலங்குகளைக் கூட அவைகளது வழிகளை மாற்றிக் கொள்ளும்படி மனிதன் செய்திருக்கிறான். சில மனிதக் குடியிருப்பு களுக்கும், வயல்களுக்கும் அருகிலேயே தங்களது உணவைத் தேடி வாழ்கின்றன, ஆனால் மற்றவை மனிதனிடமிருந்து தப்பிப்பதற்காக, பாலைவனங்களுக்கு உள்ளாகவே திரும்பச் சென்றுவிட்டன. மனிதன் அங்கு போய்ச் சேர்வதற்கு முன்னதாக, அவைகளது மூதாதையர் ஒருபோதும் அங்கு வசித்ததில்லை.

ஓர் உண்மையான பாலைவனத்தைப் பார்ப்பதற்காகப் பயணம் செய்ய வேண்டிய நேரத்தில் மக்கள் சிறப்பான கட்டுப்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் பூமியின் தோற்றத்தையே மனிதனால் முழுமையாக மாற்ற முடியும்.

எப்போதையும் விட இயற்கையின் எசமானனாக மனிதன் மாறிக் கொண்டு வருகிறான்.

இதுபோல எப்போதுமே இருந்ததில்லை.

பூமியை வாழிடமாகக் கொண்ட பிற விலங்குகளைப் போலவே, வரலாற்றுக்கு முந்திய கால நமது மூதாதையர்கள் வெறுமனே இயற்கைக்கு அடிமைப்பட்டு இருந்தார்கள்.

நமது மூதாதையர்களுடன் சந்திப்பு

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால், இப்போது நமது காடுகளும், சோலைகளும் உள்ள இடத்தில், வேறுவகையான மரங்கள், விலங்கு கள், புற்களுடன் கூடிய வேறு காடுகள் இருந்தன.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய அந்தக் காடுகளில் பிர்ச் மரங்கள், எலுமிச்சையின மரங்கள் மற்றும் பசுமை மாறா நறுமண மலர்ச் செடிகள், புன்னைச் செடிகள், தழை-மலர் வனப்பு மிக்க தாவரங்

கள் ஆகியவற்றின் அருகருகே மேப்பிள் மரங்கள் போன்றன வளர்ந்தன. திராட்சை, கொடிமுந்திரிகள் கொட்டை மரங்களில் சுற்றிப் படர்ந்தன. அழுமூஞ்சி காற்றாடி வகை மரங்களுக்கு அருகிருப்போராக கற்பூரமரங்களும், இனிப்புப் பிசின் மரங்களும் இருந்தன.

மட்டு மீறி வளர்ந்த மிகப் பெரிய மரங்களுக்கு அருகே நின்ற பெரிய ஓக் மரங்கள் குட்டையான வளர்ச்சி உடையன போல் காணப்பட்டன.

நமது இப்போதைய காட்டை நாம் ஒரு வீட்டுக்கு ஒப்பிடுவோமானால், வரலாற்றுக்கு முந்திய கால இத்தகைய காடு விண்தொடு கட்டிடமாக இருந்தது.

விண்தொடு கட்டிடத்தின் உயர் தளத்தில் வெளிச்சமும் இரைச்சலும் இருந்தன. மிகப் பெரிய வண்ண மலர்களுக்கிடையே பளபளப்பாகக் கொழுத்துப் போயிருந்த பறவைகள் இங்குமங்குமாகப் பறந்தன. அவைகளது இரைச்சல் காட்டில் எதிரொலித்தது.

குரங்குகள், அதே வேளையில், கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருந்தன.

ஏதோ ஒரு பாலத்தைக் கடப்பது போல, குரங்குகளின் கூட்டம் கிளைகளின் வழியாக ஓடிக் கொண்டிருந்ததைக் காணலாம். தங்களது சிறிய வாய்களில் பழங்களையும், கொட்டைகளையும் அதுப்பிக் கொண்டு, தாய்க் குரங்குகள் தங்களது குட்டிகளை இறுகப் பிடித்தபடி இருந்தன. கொஞ்சம் வயதானவை தங்களது தாய்களது கால்களை இறுகப் பிடித்துக் கொண்டன. அந்த இனத்தின் தளர்ந்து போன வயதான தலைவன் ஒரு பெரிய அடிமரத்தை விரைந்து பற்றிப் பிடித்து ஏறிக் கொண்டிருந்தது. அந்த இனம் முழுக்க அதைப்பின் பற்றிச் சென்றது.

இந்தக் குரங்குகள் என்ன இனத்தைச் சார்ந்தவை? அவைகளை நாம் இன்று விலங்ககத்தில் ஒருபோதும் காண முடியாது.

மனிதன், ஷிம்பான்ஸே, கொரில்லா ஆகிய அனைத்துக்கும் பொது மூதாதையரான அதே குரங்குகள் அருகிப் போயின. நமது வரலாற்றுக் காலத்துக்கு முந்திய காட்டு மூதாதையர்களை இப்போது நாம் சந்தித்தோம்.

அவர்கள் எல்லாருமே காட்டின் மேல்த் தளத்தில் வசித்தார்கள். மரத்திற்கு மரம் அவர்கள் பயணம் செய்தார்கள். தரைக்கு மேலே, பாலங்களிலும், நுழை மாடங்களிலும், மாடி முகப்புகளிலும் செல்வது போல கிளைவிட்டு கிளை சென்றார்கள்.

காடே அவர்களது வீடு. மரக்குச்சிகளால் கிளைகளில் கட்டப்பட்ட பெரிய கூண்டுகளில் அவர்கள் இரவில் முகாமிட்டார்கள்.

காடே அவர்களது கோட்டையாக இருந்தது. அவர்களது மிகப் பெரிய எதிரியாகிய நீண்ட சவரக் கத்திபோன்ற வாள் பற்களைக் கொண்ட புலியிடமிருந்து மறைந்து மேல்த்தளங்களில் இருந்தார்கள்.

காடே அவர்களது சேமிப்பறையாக இருந்தது. உயரமான கிளையின் மேலே அவர்கள் தங்களது உணவை, தாங்கள் உண்ணும் பழங்களையும் கொட்டைகளையும் வைத்திருந்தார்கள்.

ஆனால் காட்டின் கூரைக்குக் கீழே வாழ வேண்டியதனால், ஒரு கிளைக்குக் கிளை தாவவும், அடிமரத்தின் மீது பற்றிக் கொண்டு ஏறவும் இறங்கவும், மரத்திற்கு மரம் குதிக்கவும் அவை கற்றுக் கொள்ள வேண்டி இருந்தன. பழங்களைப் பிடுங்கவும், கொட்டைகளை உடைக்கவும் அவை தகுதியுடையனவாக வேண்டி இருந்தன. துருதுருப் பான விரல்களையும், ஆழ்ந்து பார்க்கும் கண்களையும், வலுவான பற்களையும் அவை பெற்றிருக்க வேண்டியதாயிற்று.

நமது மூதாதையர்களைக் காட்டோடு அநேகச் சங்கிலிகள், அது வெறுமனே காட்டோடு மட்டுமல்லாமல், மேல்த் தளங்களோடு பிணைத் திருந்தன. காடு வாழ் உயிரினங்கள் தங்களது கூட்டை விட்டு வெளி யேறி, தங்களது வீட்டின் எல்லைகளைத் தாண்டி அப்பால் செல்ல எங்ஙனம் துணிவு பெற்றன?



நமது கதாநாயகனின் பாட்டியும் தாயாதிகளும்

முன்னை நாட்களில், ஒரு மனிதனைப் பற்றிய நிதானமான கற்பனைக் கதையையும் அவனது சாதனைகளையும் பற்றி ஓர் எழுத்தாளர் எழுதத் தொடங்கும் போது, தனது நூலின் முதலாவது சில அத்தியாயங்களை அவர் வழக்கமாக தனது கதாநாயகனது குடும்பம் மற்றும் முன்னோர்கள் பற்றிய விவரமான வருணனைக்கு ஒதுக்கு வதுண்டு.

ஒரு சில பக்கங்களைப் படித்த உடனேயே, அவனது பாட்டி சிறுமியாக இருந்தபோது என்ன அணிந்திருந்தாளோ, அவனது தாய் தனது திருமண விழாவுக்கு முன்னர் எதைக் கனவு கண்டாளோ அந்த அருமையான சட்டைகளைப் பற்றி ஒருவர் அறிந்து கொள்ள முடியும். பிறகு உலகத்தில் கதாநாயகனது தோற்றம் பற்றிய, அவனது முதலாவது பல், முதலாவது வார்த்தைகள், முதலாவது நடை, முதலாவது குறும்பு விளையாட்டுகள் பற்றிய மிக நீண்ட வருணனை பின்தொடரும். பத்து அத்தியாயங்களுக்குப் பிறகு பையன் இலக்கண வகுப்பில் நுழைவான். இரண்டு பாகங்கள் முடிந்ததும் அவன் காதல் வயப்படுவான், மூன்றாவது பாகத்தில், பல சாதனை களுக்குப் பிறகு, அவன் காதலித்தவளது கரம் பற்றுவதில் இறுதி யாக வெற்றி பெறுவான். கதையானது நிச்சயமாக ஒரு முடிவுரை யுடன் நிறைவு பெற்றது. அதில் வயதான கதாநாயகனும், அவனது நரைவிழுந்த மனைவியும் தங்களது ஆப்பிள் கன்னத்தைக் கொண்ட பேரன் குறுநடை எடுத்து வைப்பதைப் பார்த்து மகிழ்வதாக இருக் கும்.

நாம் கூட, மனிதனது வாழ்க்கை பற்றியும் சாதனைகள் பற்றியும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். பண்டைக் காலத்திய புகழ் பெற்ற நாவலாசிரியர்களின் முன் மாதிரிகளைப் பின்பற்றி, நமது கதாநாயகனின் தூரத்து முன்னோர்கள் பற்றியும், அவனது குடும்பம் மற்றும் உறவினர்கள் பற்றியும், பூமியில் அவனது தோற்றம் பற்றியும், நடக்க, பேச, சிந்திக்கக் கற்றுக் கொண்டான் என்பது பற்றியும், அவனது போராட்டங்கள், அவனது மகிழ்ச்சிகள் மற்றும் துயரங்கள், அவனது வெற்றிகள் மற்றும் தோல்விகள் பற்றியும் நாம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். ஆனால் தொடக்கத்திலேயே நாம் பெரும் சிக்கலில் இருக்கிறோம் என்பதை நாம் கட்டாயம் சொல்லித்தான் ஆக வேண்டும்.

நமது கதாநாயகனின் 'பாட்டி'யை நாம் எங்ஙனம் விவரிக்க முடியும்? இந்தப் பாட்டி, நமது இனத்தைத் தோற்றுவித்த குரங்கு, இந்தப் பல மில்லியன் ஆண்டுகளில் இறந்து போய் விட்டது. அருங் காட்சியகத்திலும்கூட அவள் எப்படிக் காணப்பட்டாள் என்பதைக் கண்டு பிடிப்பது சிரமம். ஏனெனில் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் பல பகுதிகளில் கிடைத்த ஒரு சில எலும்புகளும், சில பற்களுமே விட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

நமது கதாநாயகனின் 'தாயாதிகள்' குறித்து நன்கு அறிந்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறோம்.

அதே வேளையிலே, தனது வரலாற்றுக்கு முந்திய கால வெப்ப மண்டலக் காடுகளை விட்டு வெளியேறிய மனிதன் இப்போது நிலத்தில் உறுதியாகக் கால் பதித்து நிற்கிறான் என்ற சொல்லின் முழுமையான பொருள், அவனது நெருக்கமான உறவினர்களாகிய கொரில்லா, ஷிம்பான்ஸே, கிப்பன், ஆரங்குடன் ஆகியன கொடிய காட்டு விலங்குகளாகவே நிலைத்துவிட்டன என்பதாகும். இத்தகு அற்பமான உறவு முறையோடு தொடர்பு கொள்ள மக்கள் எப்போதுமே விரும்புவதில்லை. அவை தூரத்து உறவினர்கள் என்பதைக் கூட சிலர் மறுக்க முயற்சிக்கிறார்கள். மனிதனும் மனித உருவை மிகுதியும் ஒத்த ஷிம்பான்ஸேயும் வரலாற்றுக்கு முந்திய கால ஒரே பாட்டியைக் கொண்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுவது பாவம் என்று கூட அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் உண்மை வெளிவரவே செய்யும். குரங்குகளோடு மனிதனுக்கு உள்ள உறவை நிருபிக்கும் ஆதாரங்களை இந்நூலின் பக்கங்களில் நாம் காண முடியும். ஆனால் இந்தத் தலைப்பில் நீண்ட, ஈடுபாடு கொண்ட விவாதம் நடத்தாமலேயே, விலங்ககத்தில் ஒரு மணி நேரம் செலவிட்டு மனித உருவை மிகுதியும் ஒத்த ஷிம்பான்ஸேக்களையும் ஆரங்குடன்களையும் உற்று நோக்குகின்ற எவரும் இந்தக் குரங்குகள் மற்றும் மனிதனது குடும்பங்களுக்கு இடையேயான ஒத்த தன்மையைக் கண்டு வியப்படையக் கூடும்.

நமது உறவினர்கள் ரஃபேலும் ரோசும்

பல ஆண்டுகளுக்கு முன்னர் ரஃபேல் மற்றும் ரோஸ் என்று பெயர் கொண்ட இரு ஷிம்பான்ஸேக்கள் புகழ்பெற்ற ருஷ்ய விஞ்ஞானி இவான் பாவ்லோவின் ஆய்வுக் கூடத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். லெனின் கிராடு அருகிலுள்ள கல்தூஷி கிராமத்தில் (இப்போது பாவ்லோவொ) அது அமைந்திருந்தது.

தங்களது அற்பமான காட்டு உறவினரோடு மக்கள் பெரிதும் அன்பாக இருப்பதில்லை: கூண்டுகளில் அவைகளைப் பார்த்து திடீர் வெடிப்பொலி செய்வார்கள். ஆனால் இந்த முறை ஆப்பிரிக்கக் காட்டிலிருந்து வந்த பார்வையாளர்கள் உற்சாகத்தோடு வரவேற்கப் பட்டார்கள். அவர்களுக்கெனத் தனியாக அறைத் தொகுதி ஒன்று கொடுக்கப் பட்டது. அதில் படுக்கையறை, உணவருந்தும் அறை, விளையாட்டு அறை மற்றும் குளியலறை அடங்கியிருந்தன. சொகுசான படுக்கைகளும், இரவு மேசைகளும் அந்தப் படுக்கையறையில் இருந்தன. உணவருந்தும் அறையிலிருந்த மேசை வெள்ளைத் துணியால் மூடப் பட்டிருந்தது. பக்கத்திலிருந்த அலமாரித் தட்டுக்களில் உணவு நிறைந்து இருந்தது.

இந்தச் சொகுசான தனியறைத் தொகுதியில், அதன் குடியிருப்பாளர்கள் குரங்குகள் என்பதற்கான அடையாளம் எதுவுமே இல்லை. சிற்றுண்டிகள் எந்நேரமும் தட்டுக்களில் வைத்தே பரிமாறப்பட்டன, உண்பதற்காக அதில் எப்போதும் கரண்டிகளும் இருந்தன. இரவில்

படுக்கைகள் தயாரிக்கப்பட்டு, இழை மொத்தைத் தலையணைகள் வைக்கப்பட்டன. சில நேரங்களில் அந்த விருந்திருந்தனர்கள் பண்பாட்டுக் குறைவினைக் காட்டும் வகையில், தட்டுகளிலிருந்த வேக வைத்து வதக்கிய பழத்தை உறிஞ்சிக் குடித்ததும், இரவில் தலையணை மீது தங்கள் தலைகளை வைப்பதற்குப் பதிலாக, சில வேளைகளில் அவை தங்கள் தலைகளின் மீதும் வைத்துக் கொண்டதும் உண்மை தான்.

இதற்கும் மேலாக, ரோசும் ரஃபேலும் மனிதர்களைப் போலச் சரியாக நடந்து கொள்ளாது, அவைகளைப் போலவே சரியாக நடந்து கொண்டன.

எடுத்துக்காட்டாக, எந்தக் குடும்பப் பெண்ணையும் போல ரோஸ் உணவுக்கூட நிலையடுக்கின் திறவுகோல் வளையத்தைத் திறக்கக் கற்றுக் கொண்டது. சாவிகள் காவற்பணி பொறுப்பாளரின் பையில் இருந்தன. ரோஸ் அவனுக்குப் பின்புறமாக ஊர்ந்து சென்று அவனிடமிருந்து அவற்றைப் பிடுங்கிக் கொள்ளும். உணவுக் கூட நிலையடுக்கிற்கு உடனே பாய்ச்சலில் போய்ச் சேரும். மேசையின் மீது ஏறி, நிற்கும், பிறகு பூட்டுக்குப் பொருத்தமான சாவியைக் கவனமாகப் பொருத்தும். முன்னால் உள்ள கண்ணாடிக்கு அப்பால் சுவையூட்டும் சீமைவாதுமை மரத்தில் திராட்சைகள் கொத்துக் கொத்தாகத் தொங்குவதை அதனால் பார்க்க முடிந்தது. மணிக் கட்டின் ஒரு திருப்பில் பூட்டைத் திறந்து, கொத்து திராட்சைகளை ரோஸ் தனது கையில் பெற்றுக் கொண்டது.

ரஃபேலையும் நாம் மறந்து விடக் கூடாது. பாடங்கள் நடத்திய போது எத்தகைய பார்வை அதனுடையது! அதனது பயிற்சிப் பொருட்கள் ஒரு கொத்து சீமை வாதுமைப் பழங்களும், வெவ்வேறு அளவுகளில் ஆன ஏழு கட்டைகளும் தான். ஆனால் இவை குழந்தைகள் விளையாடுகின்ற கட்டைகள் போன்றதல்ல. ரஃபேலினுடைய கட்டைகள் சற்று பெரியவை: சிறிய ஒன்று கால்ப்பந்து அளவுக்கு இருந்தது, அதே வேளை பெரியது மூன்றுகால் நாற்காலி அளவுக்கு உயரமிருந்தது. வாதுமைப் பழக் கொத்து கூரையிலிருந்து தொங்க விடப்பட்டது. ரஃபேலினுடைய சிக்கல் வாதுமைப் பழத்தை நெருங்கி அதைத் தின்பதுதான்.

முதலில் அதனால் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை.

காட்டில் அதன் வீட்டில், தான் விரும்பிய பழத்தைப் பெறுவதற்காக அது மிக உயரமாக அடிக்கடி ஏற வேண்டி இருந்தது. ஆனால் இங்கே பழமானது ஒரு கிளையில் இல்லை, அது காற்றில் தொங்கியது. ஏறிச்செல்ல ஏழு படிகளே இருந்தன. ஆனால் மிகப் பெரிய கட்டையின் உயரே ஏறினால் கூட அதனால் வாதுமைப் பழத்தை அடைய முடியவில்லை.

பழத்தை அடைய முயல்கையில், அது கட்டைகளை இங்குமங்குமாக உருட்டிய போது ரஃபேல் ஒன்றைக் கண்டு பிடித்தது: ஒரு கட்டைக்கு மேல் மற்றொரு கட்டையாக அடுக்கினால் அது தன்னை வாதுமைப் பழத்திற்கு மிக அருகாமையில் கொண்டு சேர்க்கும் என அறிந்தது. மெல்ல மெல்ல முதல் மூன்று கட்டைகளைப் பிரமிடு

போல எப்படியோ அமைத்தது, பிறகு நான்கை அதன் பிறகு ஐந்து கட்டைகளை. இது ஒன்றும் சுலபமான பணி அல்ல. அவை ஒவ்வொன்றையும் ஒன்றன்பின் ஒன்றாக அதனால் அடுக்க முடியாது, ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் அவை அமைக்கப்பட வேண்டும். முதலில் மிகப் பெரியது, அடுத்துப் பெரியது, இப்படி சிறிது சிறிதாகச் செல்ல வேண்டும்.

அநேக முறை ரஃபேல் சிறிய கட்டைகளின் மேல் பெரிய கட்டைகளை அடுக்க முயன்றது. எல்லாமே சரியத் தொடங்கிவிடும். அடுத்த முறை அந்தக் குவியல் சில நிமிடங்களுக்குள்ளாகச் சரிந்து கீழே விழ ரஃபேல் அதன் மேலே கிடக்கப்போவது போல காணப்பட்டது. ஆனால் இது ஒரு போதும் நிகழவே இல்லை. ஏனெனில் அது குரங்கு என்பதால் விரைவும் சுறுசுறுப்பும் கொண்டது.

இறுதியாக, பிரச்சினை தீர்க்கப்பட்டது. அளவுகளுக்கு ஏற்ப ரஃபேல் ஏழு கட்டைகளையும் உயரே அடுக்கிற்று. அதில் எழுதப்பட்டிருந்த எண்களை அதனால் படித்துப் பார்க்க முடியும் என்பது போல இருந்தது.

ஆடிக்கொண்டிருந்த பிரமிடின் உச்சியை அது அடைந்து உட்கார்ந்த போது, மிகவும் கஷ்டப்பட்டுப் பெற்ற வாதுமைப் பழத்தை ருசித்து உண்டது.

இதுபோன்ற ஒரு மனித இயல்பில் வேறு எந்த விலங்கால் நடந்து கொண்டிருக்க முடியும்? கட்டைகளின் பிரமிடு வடிவத்தைக் கட்ட முடியும் என்று நாம் ஒரு நாயை எதிர்நோக்க முடியுமா? போதாதற்கு நாய் மிகவும் புத்திசாதுரியமான ஒரு விலங்கு.

ரஃபேல் வேலை செய்வதைக் கவனித்த அனைவருமே மனிதர்களைப் போலவே தோற்றமளித்ததைக் கண்டு வியப்புற்றுப் போனார்கள். அதனால் ஒரு கட்டையை எடுத்து, தனது தோளுக்குத் தூக்கி பிரமிடுக்கு மேலே, ஒரு கையைத் தாங்கியபடி எடுத்துச் செல்ல முடிந்தது. ஆனால் அது தவறான அளவுக் கட்டையாக இருந்தால், ரஃபேல் அதைக் கீழே போட்டு விட்டு அதன் மேல் ஏதோ சிந்திப்பது போல உட்கார்ந்து விடும். சில கணநேர ஓய்வுக்குப் பிறகு அது திரும்பவும் போய், தனது தவறைத் திருத்த மீண்டும் வேலை செய்யத் தொடங்கும்.

ஒரு ஷிம்பான்ஸேயால் மனிதனாக முடியுமா?

ஆனால், இந்த மாதிரியான நிலையில், மனிதனைப் போலவே நடக்கவும், பேசவும், நினைக்கவும், வேலை செய்யவும் ஷிம்பான்ஸேயால் முடியாமற் போகுமா?

அநேக ஆண்டுகளுக்கு முன்னமேயே, புகழ் பெற்ற விலங்கு பயிற்றுநரான விளதீமிர் தூரொவ், இது சாத்தியமாகும் என்று கனவு கண்டார். தன்னுடைய பிரியமான ஷிம்பான்ஸே மிமசுக்கு பயிற்சி கொடுப்பதற்கு அநேக மாதங்களை அவர் செலவிட்டார். மிமஸ் ஒரு புத்திசாலி மாணவனாக இருந்தது. கரண்டி கொண்டு உண்ணவும், துவாலையைப் பயன்படுத்தவும், நாற்காலியில் உட்காரவும், மேசை விரிப்பில் துளியும் சிந்தாது சூப்பு அருந்தவும், பனிச் சறுக்கு

இழுப்பு வண்டியை குன்றின் மீது ஓட்டவும் அது கற்றுக் கொண்டது.

ஆனால் அது ஒருபோதும் மனிதனாக மாறவில்லை.

இதில் வியப்புறுவதற்கு எதுவுமே இல்லை. ஏனெனில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னமேயே மனிதனது வழியிலிருந்து குரங்கு பிரிந்துவிட்டது. மனிதனுடைய வரலாற்றுக்கு முந்திய கால மூதாதையர்கள் மரங்களின் உச்சிகளிலிருந்து தரைக்கு வந்தவர்கள். இரண்டு கால்களால் நடக்கவும் கற்றுக் கொண்டார்கள். இங்ஙனம் வேலை செய்வதற்கு தங்களது கைகளைச் சுதந்திரமானதாக ஆக்கிக் கொண்டார்கள். ஆனால் ஷிம்பான்ஸேயின் மூதாதையர்கள் மரங்களிலேயே நிலையாகத் தங்கிவிட்டார்கள். முன்னைக் காட்டிலும் மரவாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்டனர்.

இதன் காரணமாகத்தான் ஷிம்பான்ஸே மனிதனைப் போல உடல் அமைப்பைப் பெறவில்லை. அதனது கைகள் வித்தியாசமானவை, அதன் கால்கள் வித்தியாசமானவை, அதனது மூளை வித்தியாசமானது, அதனது நாக்கும் வித்தியாசமானது. ஷிம்பான்ஸேயினுடைய கையின் படத்தை மிகவும் நெருக்கமாக உற்று நோக்குவோம். அது மனிதனுடையதைப் போன்றது அல்ல. ஒரு ஷிம்பான்ஸேயினுடைய கட்டை விரலானது மிகவும் சிறியது. நமக்கு இருப்பது போல அதனுடைய மற்ற விரல்கள் ஒரே கோணத்தில் அமையவில்லை. ஆனால் நம்முடைய விரல்களில் மிகவும் முக்கியமானது கட்டை விரல்தான். கை என்று அழைக்கப்படும் ஐந்து தொழிலாளர் குழுவில் மிகவும் அவசியமானது. கட்டை விரலால் மற்ற எந்த நான்கு விரல்களோடு சேர்ந்தோ, தனியாகவோ வேலை செய்ய முடியும். இதன் காரணமாகத்தான் மனிதக் கையால் எவ்வளவு சிக்கலான கருவிகளையும் மிகத் திறமையுடன் பயன்படுத்த முடிகிறது.

ஒரு மரத்திலிருந்து ஒரு பழத்தைப் பறிக்க ஷிம்பான்ஸே விரும்புகின்ற நேரத்தில், அது தனது கைகளால் கிளையைப் பற்றியபடி தனது கால்விரல்களால் பழத்தைப் பறிக்கிறது. ஒரு ஷிம்பான்ஸே தரையில் நடக்கும் போது, அது தனது வளைந்த விரல்களின் மீது சாய்ந்து கொள்கிறது. இதன் பொருள் அது அடிக்கடி தன்னுடைய கைகளைக் கால்களாகவும், கால்களைக் கைகளாகவும் பயன்படுத்துகிறது என்பதாகும்.

ஆனால் விலங்கு பயிற்றுநர்கள் தங்களுடைய ஷிம்பான்ஸேக்களை மனிதர்களாக்க விரும்புகையில், கைகளிலும் கால்களிலும் உள்ள வேறுபாடுகளைத் தவிர்த்து, மற்றொரு மிக முக்கியமான வேறுபாட்டை அடிக்கடி மறந்து விடுகிறார்கள். ஷிம்பான்ஸேயினுடைய மூளை மிகச் சிறியது என்பதையும், மனித மூளையைவிட மிகக் குறைந்த அளவே வளர்ச்சி பெற்றது என்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இவான் பாவ்லோவ், மனித மூளையைக் கற்றறிய அநேக ஆண்டுகளைச் செலவிட்டார். அவர் ரோஸ் மற்றும் ரஃபேலின் நடத்தையில் மிகுந்த ஆர்வங் காட்டினார். மிக அண்மையில் அவைகளைப் பார்க்க வேண்டும் என அவர் 'குரங்கு இல்லத்தில்' பல மணி நேரங்களைச் செலவிட்டார். அவை முற்றிலும் அறிவில்லாமலேயே

3–563

நடந்து கொண்டன. எதையாவது செய்வதற்கு அவை தொடங்கும், பிறகு கவனம் சிதைந்து, அதை மறந்து விட்டு வேறு எதிலாவது ஆர்வங்கொண்டு செயல்படும்.

இவ்வாறாக, ரஃபேல் தனது பிரமிடைக் கட்டுவதில் மிகுந்த சுறுசுறுப்பாகவும், மிகவும் கருத்தூன்றியதாகவும் காணப்பட்டது. திடீ ரென்று, அது ஒரு பந்தை கவனிக்கும். கட்டைகள் பற்றிய எல்லா வற்றையும் மறந்து விட்டு, ரோமம் வளர்ந்த தனது நீண்ட கையால் பந்தை அடித்து விளையாடத் தொடங்கும். ஒரு கண நேரத்திற்குப் பிறகு பந்தை அது மறந்துவிட்டு, சுவரில் ஊர்ந்து செல்லும் ஒரு ஈயைக் கண்டுபிடிக்க ஆரம்பிக்கும்.

ஒருமுறை, இந்தக் குழப்பத்தைக் கவனித்த போது பாவ்லோவ் சொன்னார்:

''என்ன குழப்பம், என்ன குழப்பம்!''

ஆம், ஒழுங்கான, ஒரு முகப்படுத்தப்பட்ட மனித மூளை இயங்கு வது போல் அல்லாது, குழப்பமாக இயங்கும் குரங்குகளின் மூளை களை உண்மையாகப் பிரதிபலிப்பதாகவே அவைகளது நடவடிக்கை களும் குழப்பமாக இருக்கின்றன. இருப்பினும் ஷிம்பான்ஸே மிகவும் புத்தி கூர்மை உள்ளது. ஏராளமான கட்புலனாகாத சங்கிலிகளால் இணைக்கப்பட்ட சிறிய உலகமாகிய காட்டு வாழ்க்கையோடு அது தன்னை மிகவும் நல்லபடியாகப் பொருந்திக் கொண்டுள்ளது.

ரோசும் ரஃபேலும் வசித்த தனியறைத் தொகுதிக்கு ஒரு முறை நிழற்பட பதிவாளன் ஒருவன் வந்தான். இவைகளைப் பற்றி ஒரு திரைப்படம் தயாரிக்க அவன் விரும்பினான். அவைகளை வெளியே விட்ட அக்கணத்திலேயே, அவை அருகிருந்த மரத்தில் ஏறின. அதன் கிளைகளில் மகிழ்ச்சியாக ஆடத்தொடங்கின. மரத்தில் இருந்த போது, சொகுசான தனியறைத் தொகுதியில் இருந்ததைவிட வீட்டில் இருப்பது போல உணர்ந்தன.

ஆப்பிரிக்காவில் இந்த ஷிம்பான்ஸே காட்டின் மேல் தளத்தில் வசிக்கிறது. மரத்தில் அது தனது கூட்டைக் கட்டுகிறது. தனது எதிரிகளிடமிருந்து தப்புவதற்காக அது மரத்தில் ஏறுகிறது. தனது உணவாகிய பழங்களையும் கொட்டைகளையும் அது மரங்களிலேயே பெறுகிறது.



தங்களது இயற்கையான சுற்றுச் சூழல்களில் ஷிம்பான்ஸேக்கள் எங்ஙனம் வாழ்கின்றன என்பதைக் காண்பதற்காக ஒரு முறை ஒரு விஞ்ஞானி ஆப்பிரிக்காவிலுள்ள காமெரூனுக்குச் சென்றார்.

ஒரு டஜன் ஷிம்பான்ஸேக்களை அவர் பிடித்து, தனது பண்ணைக்கு அருகிலிருந்த காட்டில் அவற்றை விட்டு, வீட்டில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும்படி செய்தார். அவை தப்பிப் போகக் கூடாது என்பதற்காக அவர் ஒரு கட்புலனாகாத கூண்டைத் தயாரித் திருந்தார். கட்புலனாகாத அக்கூண்டு இரண்டு சாதாரணக் கருவி களின், கோடரி மற்றும் ரம்பம் உதவியால் தயாரிக்கப்பட்டது.

முதலாவதாக, காட்டின் சிறுபகுதியிலிருந்த மரங்கள் அனைத் தையும் மரம் வெட்டிகள் வெட்டிச் சாய்த்தார்கள். அந்தப் பகுதியில் ஒரு சிறிய மரங்களின் தீவு மட்டும் விடப்பட்டது. இந்த மரங்கள்

கொண்ட தீவில் தனது ஷிம்பான்ஸேக்களை அந்த விஞ்ஞானி விட்டார்.

குரங்குகள் காட்டில் வசிப்பனவாகையால் அவரது திட்டம் சரியானதென்று நிரூபனமாகியது. அதாவது அவை தங்களது சொந்த விருப்பத்தின் பேரில் காட்டை விட்டு ஒருபோதும் போகாது என்பது பொருள்படும். ஒரு ஷிம்பான்ஸே தனது வீட்டை ஒரு திறந்த வெளியில் ஏற்படுத்திக் கொள்ள முடியாது, இது போலவே ஒரு துருவக் கரடி தனது வீட்டை பாலைவனத்தில் ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

ஆனால் ஒரு ஷிம்பான்ஸே காட்டை விட்டு நீங்க முடியாத போது, அதனது தூரத்து உறவினரான மனிதனால் எங்ஙனம் முடியும்?

நமது கதாநாயகன் நடக்கக் கற்கிறான்

தனது கூண்டை உடைத்துக் கொண்டு வெளியேறவும், சுதந்திரமாக காடுகளை விட்டு நீங்கி ஸ்டெப்பிகளிலும் மரங்களற்ற சமவெளிகளிலும் தனது வீட்டை அமைத்துக் கொள்ளவும் நமது வரலாற்றுக்கு முந்தைய காட்டு முதாதையனுக்கு நூறாயிரக்கணக்கான ஆண்டுகள் பிடித்தன.

காட்டோடு தனக்கிருந்த தளையை உடைத்துக் கொண்டு வந்தது போல, மரங்களிலிருந்து கீழே இறங்கிய மரம் வாழ் விலங்கு தரையில் நடப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொண்டது.

இப்போதும் சரி முன்னையக் காலத்திலும் சரி ஒரு மனிதக் குழந்தை நடக்கக் கற்றுக் கொண்டது என்பது சாதாரண விஷயமல்ல. ஒரு நர்சரி பள்ளியைப் பார்வையிட்ட எவரும், ஒரு குறிப்பிட்ட வயதுவந்த ‘நகர்பவர்’ என்ற பிரிவினர் அங்கிருப்பதைக் காண முடியும். இந்தக் குழந்தைகள் ஒரே இடத்திலேயே உட்கார விரும்பாதவை, ஆனால் எப்படி நடப்பது என்பதை அறியாதவை. சில மாதங்கள் பெரு முயற்சி செய்து இந்த ‘நகர்பவர்கள்’, ‘நடப்பவர்கள்’ ஆக மாறுகிறார்கள். சற்று சிந்திக்கலாம்: எந்தத் துணையுமில்லாமல் நடக்கவும், தங்களது கைகளால் தரையைத் தொடாமலும், நாற்காலிகளையோ பெஞ்சுகளையோ பற்றிக் கொள்ளாமல் ஒரே சீராக நடக்க அவர்கள் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதை விட, இம்மாதிரி சமநிலைக்கு வருவது மிகவும் சிரமமானது.

ஆனால் நடக்கக் கற்றுக் கொள்வதற்கு ஒரு குழந்தைக்குச் சில மாதங்கள் ஆகுமேயனால், நமது வரலாற்றுக்கு முந்திய மூதாதையர்களுக்கு இந்தத் திறமையை வளர்த்துக் கொள்ள பல்லாயிரம் ஆண்டுகள் பிடித்திருக்கும்.

மிகு தொலைவான அந்தக் காலத்தில் மரங்களை விட்டுக் கீழே அவை குறுகிய காலங்களுக்குத்தான் வருவது வழக்கம். ஒரு வகையில் அவை எப்பொழுதும் தங்களது கைமுட்டிகளை நம்பி இருப்பதில்லை. மனிதக் குரங்கு அடிக்கடி செய்வது போல அவைகளது பின்னங்கால்

களால் இரண்டு அல்லது மூன்று ஓடுகிற எட்டுக்களையே அவை எடுத்துக் கொண்டன.

இருப்பினும், இரண்டு அல்லது மூன்று எட்டுக்கள் ஐம்பது அல்லது நூறு எட்டுகள் ஆவதில்லை.

மனிதனது கால்கள் அவனது கைகளை வேலை செய்ய விடுவித்தது எப்படி

நமது வரலாற்றுக்கு முந்திய மூதாதையர்கள் மரங்களில் வசித்த போது, பல்வேறு பணிகளைச் செய்ய தங்களது கால்களை விடுத்து கைகளாலேயே செய்ய படிப்படியாகக் கற்றுக் கொண்டார்கள். பழத்தையும் கொட்டைகளையும் பறிக்க, கவர்முள் வடிவுடைய அடிமரங்களில் கூடுகளைக் கட்டவும் அவை தங்களது கைகளைப் பயன்படுத்தின.

ஆனால் ஒரு கொட்டையைப் பற்றிப் பிடிக்கக் கூடிய ஒரு கை ஒரு குச்சி அல்லது ஒரு கல்லையும் பற்றிப் பிடிக்கும். மேலும் ஒரு குச்சியை அல்லது கல்லைப் பற்றிய அதே கைதான் அவற்றை நீளமானவையாகவும் வலுவானவையாகவும் ஆக்கின.

உடைப்பதற்குக் கடினமான ஒரு கொட்டையை ஒரு கல்லால் உடைக்க முடியும். சுவையான ஒரு வேரை தரையிலிருந்து ஒரு குச்சியால் தோண்டி எடுக்க முடியும்.

இவ்வாறாக வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் தனது உணவைப் பெறுவதற்காக அடிக்கடி இத்தகைய கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினான். குச்சியைக் கொண்டு தோண்டுவதன் மூலம் அதனால் வேர்களையும் கிழங்குகளையும் பிடுங்க முடிந்தது. பழைய மரத்தின் அடிக்கட்டைகளைக் கனமான பாறைகளைக் கொண்டு அடித்தபோது, அதற்குள்ளாக அதனால் புழுப் பூச்சிகளின் முட்டைப் புழுக்களைப் பெற முடிந்தது. இருப்பினும், நடப்பது போன்ற வேறு பணி செய்வதனின்றும் தனது கைகளை விடுவித்துக் கொள்வதன் மூலமே அதனால் தனது கைகளால் வேலை செய்யக் கூடிய ஒரே வழியாகும். அதனது கைகள் மிகவும் மும்முரமாக செயல்பட, நடக்கக் கூடிய பிரச்சினையை அதனது கால்களால் மட்டிலுமே தீர்க்கக் கூடியதாக அடிக்கடி ஏற்பட்டது.

இப்படியாக, அதன் கைகள் அதன் கால்களை நடக்க வைத்தன, மேலும் அதன் கால்கள் அதன் கைகளை வேலை செய்ய விடுவித்தன.

இப்போது ஒரு புதிய உயிரினம் பூமியில் காணப்பட்டது. அது தனது பின்னங்கால்களால் நடந்தது. தனது முன்னங்கால்களை வேலைக்குப் பயன்படுத்தியது.

தோற்றத்தில் இந்த உயிர் இன்னமும் ஒரு விலங்குபோலவே காணப்பட்டது. ஆனால் தன்னுடைய குச்சி அல்லது கல் இவற்றைத் திறம்படக் கையாளுவதை நாம் பார்த்திருப்போமேயானால், மனித இனத்தின் முதல் விலங்கு இதுதான் என்று உடனடியாகக் கூறி இருப்போம். இன்னும், கருவிகளைப் பயன்படுத்துவது பற்றி மனிதன் மட்டிமே அறிந்திருக்கிறான். விலங்குகளுக்குக் கருவிகள் இல்லை.

பாலைவனத்து ஒரு ஜெர்புவாவோ, நுன்னெலியோ தங்களுடைய பொந்தைத் தோண்டும் போது, இந்த வேலையைச் செய்யும் போது அவைகளுக்குத் தங்களுடைய உள்ளங்கைகள் மட்டுமே இருக்கின்றன. ஒரு மரத்துண்டை எலி கத்தரித்து கரம்பும் போது, அதைத் தனது பற்களாலேயே செய்கிறது, கத்தியால் அல்ல. மேலும், ஒரு மரங் கொத்தி ஒரு மரப்பட்டையை அலகினாற் கொத்தும் போது, அதைத் தனது அலகால் தான் செய்கிறதே தவிர, சிற்றுளியால் அல்ல.

நமது வரலாற்றுக்கு முந்திய மூதாதையர்களிடம் சிற்றுளி போன்ற அலகோ, மண்வாரி போன்ற உள்ளங்கைகளோ, சவரக்கத்தி போன்ற கூரிய பற்களோ இருந்ததில்லை.

ஆனால் மிகவும் கூரிய பற்களை விடவும், வலுவான அலகுகளை விடவும் மிகச் சிறந்த ஒன்றை அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்கள் கைகளைப் பெற்றிருந்தார்கள். கல்லுடைப்பான்களையும், மரத்தாலான நீண்ட வளை நகங்களையும் பற்றிப் பிடிப்பதற்கு அவர்களால் தங்க ளது கைகளைப் பயன்படுத்த முடிந்தது.

நமது கதாநாயகன் தரைக்கு வருகிறான்

மேற்கண்ட இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், தட்பவெப்ப நிலையானது மெல்ல மெல்ல மாறிக் கொண்டிருந்தது. நமது வரலாற்றுக்கு முந்தைய மூதாதையர்களால் குடியிருக்கப் பெற்ற காடுகளின் இரவுகள் மிகவும் குளிரானதாக மாறின, குளிர்காலங்கள் மிகவும் குளிர்ச்சியாயின. தட்பவெப்பமா னது இன்னமும் வெதுவெதுப்பாக இருந்துங்கூட அது வெப்பம் என்று அழைக்கப்படவில்லை.

குன்றுகள், மற்றும் மலைகளின் வடக்குச் சரிவுகளில் எப்போதும் இருந்த பசுமையான புல்லின மரங்கள், தழை-மலர் தாவர இனம் மற்றும் புன்னை வகை மரங்கள், படிப்படியாக ஓக் மற்றும் எலுமிச்சை யின மரங்களுக்கு இடம் கொடுத்தன.

ஆற்றோரப் படுகைகளில் சில வேளைகளில் ஓக் மற்றும் எலுமிச் சையின மரங்களின் இலைகளின் புதைவடிவச் சுவடுகளை மக்கள் காண்கிறார்கள். அந்த இலைகள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மழை வெள்ளத்தால் கீழே அடித்து வரப் பட்டவை என்பது தெரியவருகிறது.

தென் சரிவுகளிலும் உள் துளைகளிலும் இருந்த அத்தி மரமும் திராட்சையும் கடும் பனிக் காற்றுக்குத் தப்பிப் பிழைத்தன. வெப்ப மண்டலக் காடுகளின் எல்லைக் கோடானது தெற்கே தள்ளித் தள்ளிப் போய்விட்டது. இந்தக் காடுகளில் வசித்தவைகளான யானை யும், வாள் பற்களைக் கொண்ட புலியும் இப்போது மிகவும் அருகிக் கொண்டு வந்துவிட்டன. மேலும் அவை தெற்கு நோக்கி பின்வாங்கி விட்டன.

ஒரு காலத்தில் கொடிய காடாக வளர்ந்த இடத்தில், மரங்கள்

இடைவெளியிட்டு வெளிச்சமான நிலப்பகுதியை ஏற்படுத்த, அங்கு பெரிய மானும், காண்டாமிருகமும் புல்மேய்ந்தன. சில குரங்குகள் காடுகளிலிருந்து பின்வாங்கிப் போய்விட்டன. பிற இனங்கள் இறந்து போயின.

காட்டில் கொடி முந்திரிகள் மிக மிகக் குறையவே, அத்தி மரங்களைக் காண்பதும் அரிதாகிவிட்டது. காட்டு வழியே பயணம் செய்வது கூட மிகவும் சிரமமாகிக் கொண்டு வந்தது. ஏனெனில் அது குறைந்து போயிற்று. இப்போது அதன் குடியிருப்பாளர்கள், ஒரு மரக்கூட்டத்திலிருந்து மற்றொரு மரக்கூட்டத்திற்குச் செல்ல விரும்பினால், நிலத்தை நோக்கிப் பயணம் செய்ய வேண்டி இருந்தது. மரத்துவாசிக்கு இது ஒன்றும் எளிதான வேலையல்ல, ஏனெனில் அது நிலப்பகுதியிலுள்ள புலால் உண்ணும் விலங்கிற்கு மிகவும் எளிதாக இரையாகக் கூடிய வாய்ப்பு இருந்தது.

ஆனால் அவைகளால் எதையுமே செய்ய முடியவில்லை. பசி அவைகளை மரங்களின்றும் கீழே இறங்க வைத்தது.

நமது வரலாற்றுக்கு முந்தைய மூதாதையர்கள் மிகவும் அடிக்கடி நிலத்திற்கு வரவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். உணவைத் தேடி அவர்கள் அலைய வேண்டி இருந்தது.

அவர்களது பழக்கப்பட்ட கூண்டை விட்டு, அவர்களைச் சுவீகரித்துக் கொண்ட காட்டு உலகத்தைவிட்டு அவர்கள் வெளியேறிய போது என்ன நடந்தது?

அவர்கள் காட்டு விதிகளை உடைத்தெறிந்தார்கள், இயற்கை ஒவ்வொரு விலங்கையும் தளைப்படுத்தி இருந்த கட்டுக்களை அவர்கள் உடைத்தெறிந்தார்கள்.

விலங்குகளும் பறவைகளும் மாறும் என்பதை நாம் அறிவோம். இயற்கையில் எதுவுமே நிலையானதல்ல. ஆனால் இது அத்துணை எளிமையான பணி அல்ல. கூர்மையான வளை நகத்தைக் கொண்ட ஒரு சிறு காட்டு விலங்கு, இன்று நாம் அறிகின்ற குதிரையாக மாற பல மில்லியன் ஆண்டுகள் ஆயின. ஒவ்வொரு இளம் விலங்கும் அதனது பெற்றோர்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. எந்தவித வேறுபாடும் இருப்பதில்லை. எதிலிருந்து தோன்றியதோ, அதனின்றும் முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய உயிரினம் தோன்ற பல்லாயிரம் தலைமுறைகள் ஆகின்றன.

நமது வரலாற்றுக்கு முந்திய மூதாதையர்கள் குறித்து என்ன?

அவர்களது பழக்கங்களையும், வழிகளையும் அவர்களால் மாற்றிக் கொள்ள முடியாது போயிருந்தால், அவர்கள் குரங்குகளுடன் தெற்கு நோக்கிப் பின்வாங்க வேண்டி இருந்திருக்கும். ஆனால் அவர்கள் குரங்குகளைப் போலில்லை. ஏனெனில் அவர்கள் இப்பொழுது கல்லாலும் மரத்தாலும் ஆன பற்கள் மற்றும் வளை நகம் போன்ற கருவிகளின் உதவியோடு எப்படி உணவைப் பெறுவது என்பதை அறிந்திருந்தார்கள். காடுகளில் அரிதாகிக் கொண்டே வந்த சாறு நிரம்பிய தென்பகுதிப் பழங்கள் இல்லாமல் போனாலும் வாழ

அவர்களால் கற்றுக் கொள்ள முடிந்தது. காடுகள் அழிந்து கொண்டு வந்ததனால், அவர்கள் சிரமத்திற்காளாக நேரிடவில்லை, ஏனெனில் தரையில் நடப்பதற்கு அவர்கள் ஏற்கெனவே பழகியிருந்தார்கள். மேலும், திறந்த, மரங்களற்ற வெளிகளைப் பார்த்து அவர்கள் அஞ்சவில்லை. அவர்களது பாதையில் யாரேனும் எதிரிகள் கடக்க நேரிட்டால், மனிதக் குரங்கின் மந்தை முழுக்கவே குண்டாந்தடிகளாலும், கற்களாலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நேரிட்டது.

கடுமையான காலங்கள் குரங்கு மனிதர்களைச் சாகடிக்கவோ, ஒரு சேர அவர்களைத் தென்பகுதிக் காடுகளுக்குப் பின்வாங்கிச் செல்லவோ செய்யாது, அவர்களை வெறுமனே காலத்தோடு இணைந்து போகச் செய்து, முதல் மனிதக் குரங்காக்கி பின்னர் புதைபடிவ மனிதனாகவுமாக்கியது.

நமது தொலைதூர உறவினர்களான, குரங்குகள் என்னவாயின?

அவைகள் தென்பகுதிக் காடுகளுக்குப் பின்வாங்கி அங்கேயே நிரந்தர காட்டுவாசியாக தங்கிவிட்டன. மனிதக் குரங்குகளின் வளர்ச்சிக்கு மிகவும் பின்தங்கிவிட்டன. கருவிகளின் பயன்களை அவைகள் அறிந்து கொள்ளவில்லை. எனினும், விரைவானவை முன்னைக் காட்டிலும் நன்றாக கிளைகளில் ஏறவும் தாவவும் கற்றுக் கொண்டன.

மரமேறுவதில் மிகக் குறைந்த திறமை படைத்த, மர உச்சிகளில் தங்கள் வாழ்க்கையை எளிதில் உட்படுத்திக் கொள்ள முடியாத, பெரிய வலுவான குரங்குகளே தப்பிப் பிழைத்தன. கனத்தும் பெரியதாகவும் இருந்த குரங்கிற்கு மர உச்சியில் வாழ்க்கை சிரமமானதாகவே இருந்தது. ஆகவே இத்தகைய மிகப் பெரிய குரங்குகள் மரங்களை விட்டுக் கீழே வர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயின. கொரில்லாக்கள் இன்னமும் காட்டின் கீழ்த் தளத்திலேயே வாழ்ந்தன. அவற்றின் ஆயுதங்கள் கைத்தடிகளோ, கற்களோ அல்ல, மாறாக அவற்றின் சக்தி வாய்ந்த தாடை எலும்பிலிருந்து துருத்திக் கொண்டிருந்த பெரிய கூரிய பற்களேயாகும்.

இவ்வாறாக, புதைபடிவ மனிதனும் அவனது தொலைதூர உறவினர்களும் தங்கள் வழிகளில் நிரந்தரமாகப் பிரிந்து போயினர்.

விடுபட்ட தொடர்பு

இரண்டு கால்களாலும் நடக்க மனிதன் உடனடியாகக் கற்றுக் கொள்ளவில்லை. ஆரம்பத்தில் அவன் நிதானமின்றி தட்டுத்தடுமாறியே நடந்தான்.

முதல் குரங்கு மனிதன் எப்படிக் காணப்பட்டான்?

உலகத்தின் எந்தப் பகுதியிலும் குரங்கு மனிதன் உயிர் வாழ்ந்ததில்லை. ஆனால் அவனது எலும்புகள் மட்டும் சில இடங்களில் இன்னமுமா கண்டுபிடிக்கப்படவில்லை?

இந்த எலும்புகள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தால், மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பதை நிரூபிக்க இறுதிச் சான்றாக இருந்திருக்கும்.

குரங்கு மனிதன் ஒரு புதைபடிவ மனிதன், குரங்கையும் நவீன மனிதனையும் இணைக்கும் சங்கிலித் தொடரில் மிக முக்கியமான ஓர் இணைப்பு. இருப்பினும் இன்றியமையாத தொடர்பு, ஆற்றோர சேமிப்புகளின் சகதி மற்றும் மணல் அடுக்குகளில், எந்தவிதத் தடயமும் ஏற்படுத்தாது மறைந்து போய் விட்டது.

தரையை எப்படித் தோண்டுவது என்பது தொல்பொருள் துறையினர்க்குத் தெரியும். இவ்வாறு அவர்கள் தோண்டத் தொடங்குவதற்கு முன்னால், விடுபட்ட தொடர்பைக் காண்பது எந்த இடத்தில் என்பதை அவர்கள் கட்டாயம் முடிவு செய்ய வேண்டும். ஏதோ ஒன்றிற்காக உலக முழுதும் தேடுவது என்பது அவ்வளவு இலகுவான பணியல்ல. மேலும் வைக்கோற் போரில் விழுந்த ஊசியை விட, புதைபடிவ மனிதனது எலும்பு பூமியில் நன்கு மறைந்து கொள்ளும்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மானிய உயிரியலாளராகிய என்ஸ்ட் கேக்கெல் முதன் முதலாக, மனிதக் குரங்கின் (விஞ்ஞானிகளுக்கு Pithecanthropus என அறிமுகமானது) எலும்புகளைத் தெற்கு ஆசியாவில் எங்காவது கண்டுபிடிக்கலாம் என ஆலோசனை கூறினார். வரைபடத்தில் சரியான இடத்தைக் கூட அவர் சுட்டிக் காட்டினார். அந்த இடம் அழியாது பாதுகாக்கப்படும் எனவும் அவர் எண்ணினார். அவை சுந்தா தீவுகளாகும்.

அவரோடு அநேகம் பேர் உடன்பட்டுப் போகவில்லை. ஆனால் அவரது கருத்து மறந்து போய் விடவில்லை. ஒரு மனிதர் குறிப்பாக இதை ஆர்வத்தோடு நம்பி தனது பணியையும் விட்டு விட்டு சுந்தா தீவுகளுக்கு, குரங்கு மனிதனது எலும்புகள் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்ற இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

அந்த மனிதர் டாக்டர் எஜேன் ட்யுபுவா, ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தில் உடல் உறுப்புகளின் அமைப்புத் துறையின் விரிவுரையாளராக இருந்தார்.

பல்கலைக் கழகத்தில் அவரது அநேக சகாக்களும், பேராசிரியர்களும் வியப்பால் தங்களது தலைகளை ஆட்டினார்கள். காட்டு வாத்தைத் துரத்துகின்ற பணிபோல எந்த ஒரு சாதாரண மனிதனும் இம்மாதிரி புறப்பட மாட்டான் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் எல்லாருமே மிகவும் மரியாதைக்குரியவர்கள். அவர்கள் மேற்கொண்ட ஒரே பயணம் ஆம்ஸ்டர்டாம் தெருக்களிலிருந்து பல்கலைக் கழகம் வரை அன்றாடம் போய் வந்தது மட்டுந்தான்.

துணிகரமான தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக டாக்டர் ட்யுபுவா பல்கலைக் கழகத்தில் தனது பதவியையும் விட்டு விட்டார். இராணுவத்தில் பெயரைச் சேர்த்துக் கொண்டு, சுமாத்ராவுக்குக் கப்பலேறினார். அவர் அங்கே தங்கியிருக்கக் கடமைப்பட்ட மருத்துவராக இருக்க வேண்டும்.

அந்தத் தீவில் அவர் தங்கிய பிறகு, தனது ஓய்வு நேரம் முழுவதையும் கண்டுபிடிப்பதிலேயே செலவிட்டார். அவரது மேற்பார்வையில் தொழிலாளர்கள் மலையளவு நிலத்தைத் தோண்டி எடுத்தார்கள்.

ஒரு மாதம் சென்றது, பிறகு இரண்டாவது, அதன் பிறகு மூன்றாவது. மனிதக் குரங்கை ஒத்த எந்த எலும்பும் அங்கு கண்டுபிடிக்கப் படவில்லை.

தான் தவறவிட்ட ஒன்றை ஒரு மனிதன் தேடுகின்ற போது, அது எங்காவது இருக்கத்தான் வேண்டும் என்பது குறைந்தது அவனுக்காவது தெரியும். அவன் கஷ்டப்பட்டுத் தேடுவானேயானால், அவனுக்கு அது கிடைக்கும். ஆனால் இது டாக்டர் ட்யுபுவா விஷயத்தில் இல்லாது போயிற்று. அவர் சந்தேகந்தான் கொண்டார், அந்த எலும்புகள் உண்மையில் இருக்கின்றனவா என்பதை உறுதியாக அவரால் சொல்ல முடியவில்லை எனினும், அவர் உறுதியோடு தேடுதலைத் தொடர்ந்தார். ஓராண்டு கடந்தது, பிறகு இரண்டாவது, அதன் பின்னர் மூன்றாவது, ஆனால் 'விடுபட்டத் தொடர்பு' எங்குமே காணப்படவில்லை.

அவரது இடத்தில் வேறு யாரேனும் இருந்திருப்பார்களேயானால், இந்த எண்ணம் முழுவதுமே மடமையான செயல் எனக் கருதி இறுதியாக முயற்சியை கைவிட்டிருப்பார்கள், ஆனால் ட்யுபுவா பாதி வழியில் நிறுத்தக் கூடியவரல்ல.

மனிதக் குரங்கினுடைய எலும்புகளை அவரால் சுமாத்ராவில் கண்டுபிடிக்க முடியாது என்பதில் அவர் உறுதியான போது, தனது தேடுதலை ஜாவாவில் தொடர வேண்டும் என முடிவு செய்தார்.

இங்குதான் அவர் இறுதியில் வெற்றியடைந்தார்.

ட்யுபுவா, ஜாவாவில் திரினில் கிராமத்தின் அருகே சோலோ நதியின் கரையில் ஒரு புதைபடிவ மனிதனைக் கண்டுபிடித்தார். அந்த எலும்புகளில் ஒரு தொடை எலும்பு, இரண்டு பற்கள், மண்டை ஓட்டின் மேற்பகுதி ஆகியன அடங்கி இருந்தன. பிறகு அருகாமையில் பிற தொடை எலும்புகளின் துண்டுத் துணுக்குகள் கிடைத்தன.

தனது வரலாற்றுக்கால மூதாதையரின் மண்டை ஓட்டை ட்யுபுவா கூர்ந்து நோக்கிய பொழுது, அம்மனிதன் எம்மாதிரியாகக் காணப் பட்டான் என்பதைக் கற்பனை செய்து பார்க்க முயன்றார். அந்த மனிதக் குரங்கிற்குக் குட்டையான, தட்டையான நெற்றி, கண் களுக்கு மேலாக கனத்த எலும்பு விளிம்பைக் கொண்டதாக இருந் தது. முகம் மனிதன் போல அல்லாது, குரங்கு போலவே இருந்தது. ஆனால் மூளை ஓட்டைக் கவனமாக ஆராய்ந்து பார்த்ததில் மனித உருவான குரங்கை விட இது மிகவும் புத்திகூர்மையுடன் இருந் திருக்கிறது என்ற முடிவுக்கு ட்யுபுவா வந்தார். அவைகளை விட இதன் மூளை மிகவும் பெரியதாக இருந்தது.

மண்டையோட்டின் மேற்பகுதி, இரண்டு பற்கள் மற்றும் தொடை எலும்பு ஆகியன உண்மையில் அவ்வளவு கூறும்படியாக இல்லை. இருப்பினும், மிகுந்த கவனமான ஆராய்ச்சிக்குப் பிறகு, மனிதக் குரங்கின் வாழ்க்கை குறித்த அநேக ஆதாரங்களை ட்யுபுவாவால் மறுபரிசீலனை செய்ய முடிந்தது. இவ்வாறாக, தொடை எலும்பா னது, தனது வளைந்த கால்களால் அதனால் உலைந்து நடக்க முடி யும் என்பது நிரூபனமாயிற்று.

தனது மனிதக் குரங்கு காடுவெட்டித் திருத்தப்பட்ட நிலத்தின் குறுக்காக, தனது உடலை இரண்டாக வளைத்து, தனது முழங்கால் களை வளைத்து, தனது நீண்ட கைகளைத் தரையில் இழுத்துச் சென்றது போல ட்யுபுவா கற்பனை செய்தார். கனத்த புருவ விளிம்புகளுக்குக் கீழாக இருந்த கண்கள் தரையோடு பொருத்தப் பட்டது போல இருந்தன, ஏனெனில் உண்ணத்தக்க எதையும் அது தவறவிட விரும்பவில்லை.

அது குரங்காக அதன் பிறகு இருக்கவில்லை, ஆனால் மனிதனாக இன்னமும் மாறாமல் இருந்தது. ட்யுபுவா தனது புதைபடிவ மனிதக் குரங்கிற்கு *Pithecanthropus erectus* எனப் பெயரிட்டார். ஏனெனில் குரங்கை ஒப்பிடுகின்ற போது அதனால் நிச்சயமாக நிமிர்ந்து நிற்க முடிந்தது.

ட்யுபுவா தனது லட்சியத்தை இறுதியாக அடைந்துவிட்டார் என்று ஒருவர் எண்ணக் கூடும். புதிரான பித்தெகாந்த்ரோபஸ் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டே விட்டது! ஆனால் அவருடைய வாழ்க்கையில் தொடர்ந்து வந்தவை எல்லாம் மிகவும் சிரமமான நாட்களும் ஆண்டுகளுந்தான். மனிதப் பொல்லாங்கு கழிமடமையை உடைத்தெறி வதைவிட பூமியின் நெருக்கமான படுகையைத் தோண்டிச் செல்வது மிகவும் சுலபமானது என்பதை அவர் கண்டார்.

எஜேன் ட்யுபுவாவுடைய கண்டுபிடிப்பு எல்லாத் தரப்பிலிருந்தும் கோபத்தையும் கேலியையும் சந்திக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் மிக அதிகமான மக்கள் மனிதனும் குரங்கும் ஒரு பொதுவான வரலாற்றுக்கு முந்திய மூதாதையரைக் கொண்டிருந்தனர் என்பதை ஏற்றுக் கொள்ளவே இல்லை. சர்ச்சும் அதைப் பின்பற்றுவோரும் ட்யுபுவா கண்டுபிடித்திருந்த மண்டையோடு கிப்பன் குரங்கிற்குச் சொந்தமானது என்றும், தொடை எலும்பு மனிதனுடையது என்றும் கூறினார்கள். ட்யுபுவாவின் எதிரிகள் ஜாவாவில் கிடைத்த மனிதக் குரங்கை, ஒரு குரங்கு மற்றும் மனிதன் இவைகளின் கூட்டு என் பதோடு மட்டும் நிறைவு பெறவில்லை. மேலும் அவர்கள், கண் டெடுக்கப்பட்ட எலும்புகள் பூமியில் பல ஆண்டுகளுக்கு முற்பட்டது தான் என்றும், அவர் கூறுவது போல ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முற்பட்டது அல்ல என்றும் நிரூபிக்க முயன்றார்கள். *Pithecant-ropus erectus*யைத் திரும்பவும் புதைக்கத் தேவையான அனைத்தையும் செய்தார்கள். மண்ணைப் போட்டு அவனை மூடி, அவன் கண்டுபிடிக்கப் படவே இல்லை என்று நம்பும் படியும் செய்ய முயன்றார்கள்.

ட்யுபுவா தனது கண்டுபிடிப்பைத் துணிச்சலோடு எதிர் விளக்க மளித்து வழக்காடினார். விஞ்ஞானத்திற்கு அதனது அளப்பரிய முக் கியத்துவத்தை உணர்ந்த அனைவருமே அவர் பக்கம் நின்றார் கள்.

தனது எதிரிகளோடு விவாதம் செய்கையில் ட்யுபுவா, அந்த மண்டையோடு கிப்பன் குரங்கிற்குச் சொந்தமாக இருந்திருக்கவே

முடியாது, ஏனெனில் அக்குரங்கிற்கு நெற்றி எலும்பே கிடையாது, அதே வேளை பித்தெகாந்த்ரோபசுக்கு இருந்தது என்பதை நிரூபித்தார்.

ஆண்டுகள் சென்றன, ஆனால் *Pithecanthropus erectus* இன்னமும் மனிதக் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டே இருந்தது.

பிறகு, திடீரென்று, புதிதாக மனிதக் குரங்கின் எலும்புகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். இது ஏறத்தாழ ஜாவா மனிதனை ஒத்திருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓர் ஐரோப்பிய விஞ்ஞானி, சீனாவில் சீன மருந்தகம் ஒன்றிற்குள்ளாக இங்குமங்கும் சுற்றி வந்தார். பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த விநோதமான பொருட்களில், மனிதனது விரலையொத்த மூலிகை வேர், பல்வேறு தாயத்துகள், விலங்கு எலும்புகள் மற்றும் பிரித்து வைக்கப்பட்ட 'வேதாளத்தின் பற்கள்' ஆகியன அடங்கும். விலங்கினுடைய பற்கள் சேகரித்து இருந்ததில் ஒன்று நிச்சயமாக இடம் மாறி இருந்ததை அவர் கண்டார். ஏனெனில் அது நமக்குத் தெரிந்த எந்த விலங்கிற்கும் சொந்தமானதில்லை. ஆனாலும், ஒரு தோற்றத்திற்கு ஒரு மனிதப் பல்லாகவே தெரிந்தது.

அந்த விஞ்ஞானி பல்லை எடுத்து வந்து, ஐரோப்பாவிலுள்ள ஓர் அருங்காட்சியகத்திற்கு அதனை அனுப்பிவைத்தார். அது 'சீனப் பல்' என்ற கவனமான தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. பிறகு, பீகிங் நகரத்திற்கு அருகில் ஜோவுகோவுதியான் என்ற குகையில் அதே மாதிரியான பின் கடைவாய்ப் பல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. பிறகு பற்களின் சொந்தக்காரர் கண்டு பிடிக்கப்பட்டார். அது Sinanthropus எனப் பெயரிடப்பட்டது.



முழுமையான எலும்புக் கூடு ஒரு போதும் கண்டு பிடிக்கப்படவில்லை. புதிய கண்டுபிடிப்புகளில் ஐம்பது பற்கள், மூன்று மண்டையோடுகள், பதினோரு தாடை எலும்புத் துண்டுகள், ஓர் இடுப்பெலும்பின் முறிந்த துண்டு, தண்டெலும்பின் ஒரு கண்ணி, ஒரு கழுத்துப் பட்டை எலும்பு, ஒரு மணிக்கட்டு எலும்பு மற்றும் ஒரு கால் முறிவுத் துண்டு ஆகியன அடங்கும்.

இது நிச்சயமாக குகையில் வாழ்ந்தவர்க்கு மூன்று தலைகளும் ஒரே ஒரு கால் மட்டும் இருந்தன எனப் பொருளாகாது.

மொத்தத்தில் இதில் எந்தப் புதுமையும் இல்லை. வெறுமனே, மனிதக் குரங்குகளின் ஒரு பெரும் பகுதியினர் ஜோவுகோவுதியான் குகையில் வசித்திருக்கிறார்கள். வரலாற்றுக்கு முந்திய கால அவை கழிந்து நூறாயிரம் ஆண்டுகளாகிவிட்ட படியால் எலும்புகளில் பெரும் பாலானவை மறைந்து போய் இருக்கின்றன. ஆனால் கண்டெடுக்கப்பட்ட முறிந்த துண்டுகள், புதைபடிவக் குகை வாசிகளுடைய தோற்றத்தை மறுபடியும் அமைத்துப் பார்ப்பதற்குப் போதுமானவையாகும். ஏதாவது ஒரு விரல் மட்டிலுமே ஒரு விஞ்ஞானிக்குக் கிடைக்குமே

யானால், அவரால் முழு உடலையும் கொண்டுவர முடியும்.

நமது புதைபடிவ கதாநாயகன் எவ்வாறு தோற்றமளித்தான்?

நல்லது, திறந்த மனத்தோடு பேசுவோமானால், அவன் அவ்வளவு அழகிய வடிவத்தைப் பெற்றிருக்கவில்லை.

நாம் அவனைத் திடீரென்று சந்திக்க நேர்ந்தால், பெரும்பாலும் பேரதிர்ச்சியுற்றே போவோம், ஏனெனில் புதைபடிவ மனிதனது தட்டையான நெற்றி, முன் பிதுங்கிய முகம், நீண்ட மயிருடனான கைகள் ஆகியன ஒரு குரங்கைப் போலவே இருக்கும். மறுபுறத்தில், அதை நாம் ஒரு குரங்கென்று முடிவு செய்தால், உடனடியாக நமது மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டிவரும். ஏனெனில் எந்தக் குரங்கும் மனிதனைப் போல நிமிர்ந்து நடக்காது, எந்தக் குரங்கின் முகமும் மனிதனுடையதைப் போல அவ்வளவு ஒன்று போலத் தோன்றாது.

நாம் மனிதக் குரங்கினுடைய குகைக்குச் செல்வோமேயானால் நமது எல்லா சந்தேகங்களும் ஒரு முடிவுக்கு வந்துவிடும்.

அங்கே அது நதிக் கரை வரை தனது வளைந்த கால்களால் சென்றிருக்கிறது. திடீரென்று, அது அங்கே உட்கார்கிறது. ஒரு பெரிய பாறையின் மீது ஆர்வங்கொண்டது போலத் தோன்றுகிறது. அதைத் தூக்குகிறது, மிக அண்மையில் வைத்து அதனைப் பார்க்கிறது, பிறகு அதை மற்றொரு பாறையில் அடிக்கிறது. பிறகு எழுந்து முன்னோக்கி உலைந்து நடக்கிறது, தனது புதையலைச் சுமந்தபடி. இறுதியாக, அது கரையின் கூரான பகுதிக்கு வருகிறது. அங்கே, குகையின் நுழைவாயிலில், அதனது கிளையினர் கூடியிருந்தார்கள். ஒரு கல்லாயுதத்தைக் கொண்டு மறிமானின் பிணத்தை வெட்டிக் கொண்டிருந்த பறட்டைத்தலையும், தாடியும் கொண்ட ஒரு வயதான மனிதனைச் சுற்றி அவர்கள் கூட்டமாக நின்று கொண்டிருக்கிறார்கள். பச்சை இறைச்சியை தங்களது கைகளாலேயே பெண்கள் கிழித்தார்கள். துணுக்குகளைக் கேட்டுக் கெஞ்சியபடி சிறுவர்கள் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். குகைக்கு உள்ளாக எரிந்து கொண்டிருந்த நெருப்பிலிருந்து வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

கடைசிச் சந்தேகங்களும் மறைந்து போய் விட்டன. நெருப்பை உண்டாக்கவும், கல்லிலிருந்து ஆயுதங்களை வடிக்கவும் கூடிய ஏதேனும் ஒரு குரங்கு இந்த உலகத்தில் உண்டா?

ஆனால் நாம் இப்படிக் கேட்கக் கூடும்: மனிதக் குரங்கிற்குக் கல்லிலிருந்தும் எலும்பிலிருந்தும் ஆயுதங்களைச் செய்யவும், நெருப்பின் பயனும் தெரியும் என்று நமக்கு எப்படித் தெரியும்?

ஜோவுகோவுதியானில் உள்ள குகை விடை தந்திருக்கிறது. இத்தகைய புதைபடிவ மனிதர்களுடைய எலும்புகளைத் தந்த படுகைகளிலிருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஒழுங்கற்ற கல் ஆயுதங்களும், இருபத்தி மூன்று அடி ஆழத்திற்கு மணலோடு கலந்த புகை அடுக்கும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மனிதக் குரங்குகள் குகையில் எண்ணற்ற ஆண்டுகளுக்கு வசித்தன என்பதும், அவர்

கள் மூட்டிய நெருப்பு பகலும் இரவும் எரிந்து கொண்டிருந்தன என்பதும் பொருளாகும். மேலீடாகப் பார்க்கின்ற போது அவைகளுக்கு நெருப்பை உண்டாக்குவது எப்படி என்று தெரியாது, ஆனால் அதைச் 'சேகரிக்க' மட்டும் தெரிந்திருக்கிறது, உண்ணத்தக்க வேர்களையும், தங்களது கருவிகளாகக் கற்களையும் அவை சேகரிக்கத் தெரிந்தது போல.

காட்டில் தீப்பிடித்து எரிந்த பிறகு, நெருப்புக் காணப்பட்டது. வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் எரிகின்ற கங்கை எடுத்து, அதைக் கவனத்தோடு தனது குடியிருப்புக்கு எடுத்துப் போய் இருக்கிறான். அங்கே, மழைக்கும் காற்றுக்கும் பாதுகாப்பான குகையில், அந்நெருப்பை தனது மிகப் பெரிய கருவூலமாகப் பாதுகாத்து காப்பாற்றி வருவான்.

மனிதன் விதிகளை மீறுகிறான்

குச்சிகளையும் கற்களையும் திறம்படக் கையாளுவதற்கு நமது கதா நாயகன் கற்றுக் கொண்டான். இது அவனை வலிமை மிக்கவனாக வும், சுதந்திரமானவனாகவும் ஆக்கியது. இப்போது அவன் அருகில் பழமரங்களோ, கொட்டை மரங்களோ இல்லையென்றால் கவலைப் படவில்லை. தனது இருப்பிடத்தை விட்டு உணவைத் தேடி அவன் நெடுந்தொலைவுக்கு அலைவான்: ஒரு சிறிய காட்டு உலகை விட்டு மற்றொன்றுக்குச் சென்றான், திறந்த சமவெளிகளிலேயே நீண்ட காலத்திற்குத் தங்கியிருந்தான். தான் உட்கொள்ள வேண்டியவை களைத் தவிர்த்து, மற்ற உணவுகளைத் தின்றான். இப்படியாக எல்லா விதிகளையும் மீறினான்.

ஆகவே, ஆதி தொடக்கத்திலேயே இயற்கையின் விதிகளை மனிதன் மீறத் தொடங்கினான்.

மரத்தில் வாழ்ந்தவன், மர உச்சிகளை விட்டுக் கீழே இறங்கி தரையில் சுற்றித் திரிந்தான். இரண்டு கால்களாலும் நிமிர்ந்து நடக்கப் பிடிவாதமாக இணங்கினான். அது மட்டும் போதுமானவை யாக இல்லை, தனக்கு ஏற்காத பொருட்களையும் உண்ண அவன் தொடங்கினான். இயற்கையில் முன்னர் அறியாத முறைகளில் தனது உணவைப் பெற்று வந்தான்.



உலகத்தில் உள்ள எல்லா விலங்குகளும் தாவரங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கின்றன. ஏனெனில் அவை 'உணவூட்ட வட்ட சுழற்சி'யால் இணைக்கப் பட்டிருக்கின்றன. காடுகளில் அணில்கள் பைன் கொட்டைகளைத் தின்கின்றன, அதே வேளை கீரியின விலங்குகள் அணில்களைத் தின்கின்றன. இவ்வாறாக ஒரு சங்கிலித் தொடரைப் பெறுகிறோம்: பைன் கொட்டைகள் — அணில் — கீரியின விலங்கு. ஆனால் அணில்கள் பைன் கொட்டைகளை மட்டும் உண்பதில்லை. அவை நாய்க் குடைகளையும் இன்னும் பிற கொட்டைகளையும் உண்கின்றன. மேலும் கீரியின விலங்குகளால் மட்டும் அணிகள் வேட்டையாடப் படுவதில்லை. வேறு பிறவும் உண்டு. பறவைகளும், அணிலை வேட்டையாடும் வல்லூறும் அடங்கும். இவ்வாறக, நாம் மற்றுமொரு சங்கிலித் தொடரைப் பெறுகிறோம்: நாய்க் குடைகள் மற்றும் கொட்டைகள் — அணில் — வல்லூறு. காட்டில் குடியிருக்கக் கூடிய அனைத்தும் இத்தகைய சங்கிலிகளால் தொடர்பு கொண்டிருக் கின்றன.

நமது கதாநாயகன் தனது சொந்தக் காட்டு உலகத்தில் 'உணவூட்ட வட்ட சூழற்சி' என்ற சங்கிலியால் பிணிக்கப்பட்டிருந்தான். அவன் பழங்களையும் கொட்டைகளையும் உண்டான். அதே வேளை வாள் பற்களைக் கொண்ட புலி அவனை வேட்டையாடியது.

பிறகு, திடீரென்று நமது கதாநாயகன் இந்தச் சங்கிலிகளை உடைக்கத் தொடங்கினான். அதற்கு முன்னர் தான் ஒருபோதும்

உண்ணாதவற்றை உண்பதற்குத் தொடங்கினான். வாள் பற்களைக் கொண்ட புலிக்கும் பிற கொடிய விலங்குகளுக்கும் இரையாக மறுத்தான். அவையோ பல்லாயிரம் ஆண்டுகளாக அவனது மூதாதையர் களை கொன்று வந்திருக்கின்றன.

இத்தனை வீரம் மிக்கவனாக அவன் எங்ஙனம் மாறினான்? ரத்தவெறி பிடித்த கொடிய விலங்குகள் அவனுக்காகக் காத்திருந்த போது நிலப்பகுதிக்கு இறங்கிவர அவன் எங்ஙனம் துணிவு பெற் றான்? தனக்காக ஒரு பூனை மரத்திற்குக் கீழே காத்துக் கொண் டிருந்த போது ஒரு பறவை தனது மரத்திலிருந்து தாவிக் குதித்து கீழே வந்தால் எப்படியோ, அப்படி இருந்தது.

மனிதன் புதிதாகப் பெற்ற துணிச்சல் அவனது கைகளிலிருந்து வந்ததாகும். தனது கையில் அவன் பிடித்திருந்த கல்லும், வேர்களைத் தோண்டுவதற்காக அவன் பயன்படுத்திய குச்சியுமே அவனுடைய ஆயுதங்களாக இருந்தன. மனிதனுடைய முதற் கருவிகளே அவனது முதலாவது ஆயுதங்களாக மாறின.

பிறகு மீண்டும், மனிதன் காடுகளில் தனியாக அலைந்து திரியவே யில்லை.

தங்களைத் தாக்கிய எந்த விலங்கின் மீதும், மனிதக் கூட்டம் முழுமையாகச் சேர்ந்து தங்களது புதிய ஆயுதங்களால் துரத்தியது.

நாம் நெருப்பை மறந்துவிடல் ஆகாது. நெருப்பை தனது உற்ற துணையாகக் கொண்டு, மனிதனால் கொடுமையான விலங்கை அச் சுறுத்தித் துரத்த முடிந்தது.

மனிதக் கரங்கள் விட்ட சுவடுகளைப் பின்பற்றி

மரத்திலிருந்து நிலத்திற்கும், காட்டிலிருந்து நதிப் பள்ளத்தாக்கு களுக்குமாக பயணம் செய்த போது வரலாற்றுக்கு முந்திய மனிதன், மரத்தோடு தன்னைக் கட்டுப்படுத்தி இருந்த சங்கிலிகளை இறுதியாக உடைத்தெறியலானான்.

அவன் நதிப் பள்ளத்தாக்குகளை நோக்கி முன்னேறினான் என்பதை நாம் எங்ஙனம் அறிய முடிகிறது?

சுவடுகள் இருக்கின்றன, அவை நம்மை அங்கே நடத்திச் செல் கின்றன.

ஆனால் இந்தச் சுவடுகள் எல்லாம் எங்ஙனம் பாதுகாக்கப்பட்டன?

இவை காலடித் தடம் என்று வழக்கமாக அழைக்கக் கூடிய சுவடுகள் அல்ல. மனிதக் கைகளால் விட்டுச் செல்லப்பட்ட சுவடுகள் ஆகும்.

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னால், பிரான்சில் சோம் நதிப் பள்ளத்தாக்கை மணலுக்காகவும், சரளைக்கல்லுக்காவும் கூலியாட்கள் தோண்டிக் கொண்டிருந்தார்கள்.

வெகு காலத்திற்கு முன்னால், சோம் இளமையாக இருந்த போது, அது தரையைப் பிளந்துகொண்டு சென்றது. சுழன்று எழுவது போலிருந்ததனால் மிகப் பெரிய கற்பாளங்களை அது இழுத்துச் சென்றது. அவை நெடுகிலும் அடித்துச் செல்லப்பட்ட போது, அவை

ஒன்றோடொன்று முட்டி மோதி உரசிக் கொண்டதனால், வட்ட மான, வழவழப்பான சிறு துண்டுகளாக அவை மாறின. பின்னைய ஒரு காலத்தில், நதி மிகவும் அமைதியாகவும், மெதுவாக ஓடக்கூடிய தாகவும் மாறிய போது, இந்தக் கூழாங்கற்கள் மீது மணல் மற்றும் சகதி அடுக்குகள் ஏற்பட்டன.

கீழே இருந்த கூழாங்கற்களைப் பெறத்தான் அந்தக் கூலியாட்கள் தோண்டிக் கொண்டிருந்த இந்த மணலாகும்.

திடீரென்று, அவர்கள் விநோதமான பொருட்களைக் காணத் தொடங்கினார்கள். சில கூழாங்கற்கள் வழவழப்பாகவும் வட்டமாக வும் இல்லை. அவை ஒழுங்கில்லாமலும், சிராய்ப்புண்டும் காணப் பட்டன. இந்த வடிவத்தில் அவற்றை யார் மாற்றியிருக்கக் கூடும்? நிச்சயமாக நதியில்லை, அதனால் கற்களை வட்டமாகவும் வழவழப் பாகவுமே மாற்ற முடியும்.

அந்த இடத்திற்கு அருகே வசித்த ஒரு பழம் பொருள் ஆர்வலரான ஜாக் புஷே டெ பெர்தினுடைய கவனத்திற்கு இந்த விநோதக் கற்கள் கொண்டுவரப்பட்டன. சோம் பள்ளத்தாக்கின் கூழாக்கற் களில் தான் கண்டு பிடித்திருந்த அதிசயப் பொருட்களின் சேமிப்பை புஷே டெ பெர்த் ஏராளம் வைத்திருந்தார். அவைகளில் மிகப் பெரிய கம்பளியானைக் தந்தங்கள், காண்டாமிருகங்களின் கொம்புகள் மற்றும் குகைக் கரடிகளின் மண்டையோடுகள் ஆகியனவும் இருந்தன. இப்போது பசுக்களும் ஆடுகளும் வருவது போல, மேற்கண்ட எல்லா ராட்சச விலங்குகளும் சோமுக்கு நீர் அருந்துவதற்காகக் கீழிறங்கி வந்தன.

ஆனால் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் எங்கே? புஷே டெ பெர்த் அவனது எலும்புகளின் சுவடு எதையும் கண்டுபிடிக்க வில்லை.

பிறகு, அவர் மணலில் காணப்பட்ட விநோதமான சிக்கிமுக்கிக் கற்களைப் பார்த்தார். அதன் இரு புறங்களிலும் கொத்திச் செதுக்கி யது யாராக இருக்க முடியும்? இது மனிதனது கைகளால் மட்டுமே செய்திருக்க முடியும் என்று முடிவு செய்தார்.

பொழுது போக்கு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பரபரப்பூட்டு கிற கண்டுப்பிடிப்பை ஆராய்ந்தார். உண்மை, இவை வரலாற்றுக் காலத்துக்கு முந்திய மனிதனது எலும்புகளின் புதைபடிவங்கள் இல்லை. ஆனால் அவை அவர்கள் விட்டுச் சென்ற சுவடுகள், அவனது கடும் உழைப்பின் சுவடுகள். இதில் சந்தேகமே இருக்க முடியாது: இது நதியின் வேலையல்ல, மனிதனுடைய வேலை.

தனது கண்டுபிடிப்புகள் குறித்து புஷே டெ பெர்த் ஒரு நூல் எழுதினார். அவரது பணிக்கு வைத்த துணிச்சலான தலைப்பு இது தான்: *De l'industrie primitive* *.

அதன் பிறகு சண்டை ஆரம்பமானது. எல்லாத் தரப்பிலிருந்தும் அவர் தாக்கப்பட்டார், ட்யுபுவா பிறகு அநுபவித்தது போல.

* கற்காலத் தொழிற்சாலைபற்றி (பிரெஞ்சு).

4–563

அக்காலத்திய மிகப்பெரும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், தற்போதைக்கான பழம்பொருள் ஆர்வலருக்கு விஞ்ஞானக் கருத்தாற்றல் இல்லையென்றும், அவரது சிக்கிமுக்கிக்கல் 'கோடரிகள்' மோசடியானவை என்றும் நிரூபிக்க முயன்றார்கள். அவரது நூல் சட்டவிரோதமாக்கப்பட வேண்டும் என்றனர். ஏனெனில் மனிதன் படைப்புக் குறித்த சர்ச்சின் போதனைகளை அது எதிர்ப்பதாக உள்ளது என்பதாகும்.

இப்போர் பதினைந்து ஆண்டுகளுக்கு நீடித்தது.

புஷே டெ பெர்த் முடி நரைத்து வயதாகிப் போனார். ஆனால் அவர் தனது கருத்துக்களுக்காக, மனித இனத்தின் மிகப்பெரும் தொல்பழமையை நிரூபிக்கத் தொடர்ந்து போராடி வந்தார். அவரது முதலாவது புத்தகம் வெளிவந்த உடனேயே, அவர் இரண்டாவது, மூன்றாவது புத்தகங்களை எழுதினார்.

சக்திகள் சமபலமின்றி இருந்தன. இருப்பினும் புஷே டெ பெர்த் வென்றார். மிகவும் பிரபலமான ஆங்கில மண்ணூல் ஆராய்ச்சியாளர்களான சார்லஸ் லையில் மற்றும் ஜோசப் ப்ரெஸ்ட்விச், புஷே டெ பெர்தினுடைய கொள்கையை வெளிப்படையாகவே ஆதரித்தனர். இருவரும் சோம் பள்ளத்தாக்கையும், அகழ்ந்தெடுத்த இடங்களையும் பார்வையிட்டனர். புஷே டெ பெர்தினுடைய சேகரிப்புகளைக் காண்பதில் பல மணி நேரங்களைச் செலவிட்டனர். ஆழ்ந்து படித்த பிறகு, அவர் கண்டு பிடித்திருந்த கருவிகள் உண்மையிலேயே வரலாற்றுக்கு முந்திய மனிதனுடைய கருவிகள் என்றும், அவனது சமகாலத்திய மிகப்பெரும் தாய்நிலத்திற்குப் புதிதான யானைகள் மற்றும் காண்டாமிருகங்கள் இப்போது பிரான்சை விட்டும் ஐரோப்பாவை விட்டும் மறைந்து எங்கோ போய்விட்டன என்றும் அறிவித்தார்கள்.

லையிலுடைய நூலாகிய **மனிதனது தொல் பழமை** (**1863**இல் வெளியிடப்பட்டது) புஷே டெ பெர்தினுடைய எதிரிகளின் வாதங்களுக்கெல்லாம் ஒரு முடிவை ஏற்படுத்தியது. பிறகு அவர்கள் எல்லாருமே, உண்மையில் அவர் எதையும் கண்டுபிடிக்கவில்லை, ஏனெனில் வரலாற்றுக்கு முந்தைய காலக்கருவிகள் அநேக இடங்களில் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன என்று சொல்லத் தொடங்கினார்கள்.

இந்தப் புதிய வாதத்திற்குக் கிண்டலாக லையில் தந்த பதில்: ஒவ்வொரு நேரமும் விஞ்ஞானம் ஒரு முக்கிய கண்டுபிடிப்பை ஏற்படுத்துகிறது, அதை சமயப்பற்றில்லாதது எனக் குரல்கள் அறிவிக்கின்றன. ஆனாலும் இதே குரல்கள், இது ஒவ்வொருவரும் எப்போதோ அறிந்திருக்கின்ற உண்மைதான் என்று பின்னர் நிறைவடைகின்றன.

சோம் பள்ளத்தாக்கில் புஷே டெ பெர்த் கண்டெடுத்தது போன்ற பல சிக்கிமுக்கிக் கற்கள் இப்போது உலகத்தின் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு வழக்கமான இடங்கள், சரளைக் கற்களும், கூழாங்கற்களும் அமிழ்ந்து இருக்கக் கூடிய பழைய நதிப் படுக்கைகளேயாகும்.

இவ்வாறாகத் தற்கால மனிதனுடைய மண் வாரியானது, புதை படிவ மனிதன் எப்படி வேலை செய்வது என்பதை அறியத் தொடங்கிய, வரலாற்றுக்கு முந்திய காலக் கருவிகளை எதிர்ப்படுகிறது.

மிகப் பழைய மாதிரியான கற் கருவி சிக்கிமுக்கிக்கல்லே ஆகும். இதனுடைய இரண்டு பக்கங்களுமே மற்றொரு சிக்கிமுக்கிக்கல்லால் கொத்தப்பட்டிருக்கிறது. சற்று தொலைவில் கொத்தப்பட்ட கற்களின் சிதறல்கள் கிடந்தன.

இத்தகைய கற்கருவிகளே மனிதக் கைகளின் சுவடுகளாகும். இவை தான் நம்மை நதிப் பள்ளத்தாக்குகளுக்கும் மணற் படுகைகளுக்கும் அழைத்துச் செல்வன. அங்கேதான். படுகைகளிலும், ஆழமில்லாத நீர் நிலைகளிலும், புதைபடிவ மனிதன் தனது கல் வளைநகங்களை யும், பற்களையும் தயாரிக்கத் தேவையான பொருட்களை வேட்டை யாடினான்.

இந்த வேலை மனித வேலையாகும். ஒரு விலங்கோ, பறவையோ தனது உணவுக்காக வேட்டையாட முடியும், தனது கூட்டைத் தயாரிக்கத் தேவையான கட்டிடப் பொருட்களைத் தேட முடியும். ஆனால், கூடுதலான வளைநகங்களோ, பற்களோ தேவைப்படும் படி யான பொருட்களைத் தேடி அது ஒருபோதும் போகாது.

உயிருள்ள மண்வாரியும் உயிருள்ள பீப்பாயும்

பறவைகள், விலங்குகள் மற்றும் புழுப் பூச்சிகள் ஆகியவற்றின் வீடுகட்டும் திறமைகளை நாம் பெரும்பாலும் படித்தோ கேட்டோ இருக்கக் கூடும். முறையான தச்சுவேலைக்காரர்கள், கொத்தனார்கள், நெசவாளிகள், மற்றும் அவர்களிடையே தையல்காரர்களையும் நாம் அறிவோம். நீர்நாயின் கூர்மையான பற்கள், ஒரு மரவெட்டி போல ஒரு மரத்தை வீழ்த்த முடியும். பிறகு நீர்நாய்கள், வீழ்த்தப்பட்ட அடிமரங்களையும் கிளைகளையும் கொண்டு உண்மையான அணைக் கட்டுகளைக் கட்டுகின்றன. இத்தகைய அணைகள், கரைகளை மீறி நதி ஓடுமாறு செய்கிறது, பிறகு நீர்நாய்கள் விரும்பும் குட்டைகளை உருவாக்குகிறது.

உலர்ந்த பைன் மர ஊசிகளைக் கொண்டு தங்களது சிறுகுன்று களை ஏற்படுத்தும் சாதாரண சாம்பல்நிற எறும்புகள் குறித்து என்னவாயிற்று? ஒரு குச்சி கொண்டு எறும்புப் புற்றை இழுப்போமே யானால், அது எவ்வளவு திறமைவாய்ந்த விண்தொடு கட்டிடம் என் பது தெரியும்.

கேள்வி எழுகிறது: தங்களது கூடுகளையும், அணைகளையும் அழிப் பதை மனிதன் நிறுத்தி, எறும்புகளும் நீர்நாய்களும் அவனோடு தொடர்ந்து செல்லும் அந்நாள் எப்போதும் வருமா? இப்பொழுதி லிருந்து ஒரு மில்லியன் ஆண்டுகளில் எறும்புகள் தங்களுக்கென சொந்த எறும்புச் செய்தித்தாள்கள் வைத்திருப்பதும், எறும்புத் தொழிற் சாலைகளில் வேலை செய்வதும், எறும்பு விமானங்களில் பறப்பதும்,

எறும்பு இசையை வானொலியில் கேட்பதும் நடக்குமா? ஐயத்திற் கிடமின்றி இல்லை. இவை அனைத்திற்கும் காரணம் மனிதனுக்கும் எறும்புகளுக்கும் மிக முக்கியமான வேறுபாடு இருப்பதுதான்.

எது இந்த வேறுபாடு?

ஓர் எறும்பைவிட மனிதன் பெரியவன் என்பது தானா?

இல்லை.

மனிதன் இரண்டு கால்கள் மட்டுமே பெற்றிருக்கிறான், அதே வேளை எறும்புக்கு ஆறு கால்கள் இருக்கின்றன என்பதா?

இல்லை.

நாம் முற்றிலும் வேறுபட்ட ஒன்றைப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

மனிதன் எப்படி வேலை செய்கிறான் என்பதை எண்ணிப் பார்ப் போம். அவன் தனது வெறுங்கைகளையோ, தனது பற்களையோ பயன்படுத்துவதில்லை. அவன் ஒரு கோடரியையோ, மண்வாரியை யோ, சுத்தியலையோ பயன்படுத்துகிறான். ஆனால் எவ்வளவு நேரம் பார்க்கிறோம் என்பது முக்கியமல்ல, ஒரு எறும்புப் புற்றில் ஓர் எறும்புக் கோடரியோ, ஓர் எறும்புச் சுத்தியலையோ ஒருபோதும் நாம் காண முடியாது.

எதையாவது இரண்டாகக் கத்திரிக்க வேண்டி இருக்கும் போது, எறும்பு தனது தலையின் பகுதிகளாக உள்ள கத்திரிக்கும் உறுப்பைப் பயன்படுத்துகிறது. ஒரு குழியைத் தோண்ட வேண்டிய போது, அது தன்னோடு எப்போதும் எடுத்துச் செல்லும் நான்கு உயிருள்ள மண்வாரிகளைப் பயன்படுத்துகிறது. இந்த மண்வாரிகள் அதனுடைய ஆறு கால்களில் நான்கே ஆகும். முன்னதாக உள்ள இரண்டு தோண்ட, பின்னால் உள்ள மண்வாரி அதைப் பின்னுக்குத் தள்ள, இடையி லுள்ள இரண்டில் அது வேலை செய்கையில் தன்னைத் தாங்கிக் கொள்கிறது.

எறும்புகள் உயிருள்ள பீப்பாய்களைக் கூடப் பெற்றிருக்கின்றன. சில நேரங்களில் அவை 'எறும்புப் பசுக்கள்' என அழைக்கப்படும். சில இன எறும்புகள், தங்களுடைய குன்றுகளில், உயிருள்ள மிடாக் களைக் கொண்டு முகப்புத்தளம் முழுமையும் நிரப்பிக் கொள் கின்றன. அங்கே, இருண்ட தாழ்வான நிலவறைகளில், முகப்புத் தளத்தினுடைய கூரையைத் தட்டுகின்ற அளவுக்கு இந்தப் பீப்பாய்கள் வரிசைக்குமேல் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அவை அசைவற்று இருக்கும். பிறகு திடீரென்று ஒரு வேலைக்கார எறும்பு நிலவறைக்குள்ளாக வருகிறது. அதன் உணர்கொம்புகள் பீப்பாவை சில முறைகள் தொட்டு, அதற்கு உயிர் வரும்படி செய்து நகர வைக் கிறது.

பிறகு, அது ஒரு தலையும், ஒரு வயிறும், கால்களும் கொண் டிருப்பதை நாம் காண்கிறோம். எதார்த்தத்தில் அதனுடைய பெரிய உப்பிய அடிவயிறுதான் ஒரு பீப்பாவைப் போலத் தோன்றுகிறது. அதனது பற்கள் உள்ளிட்ட வாயின் உட்பகுதி திறந்திருக்கிறது. அதன் வாயில் ஒரு சொட்டுத் தேன் காணப்படுகிறது. வேலைக்கார எறும்பு, சற்று முன்னர் வந்தது, அந்தச் சொட்டை சிற்றிடை

யுணவாகத் துழாவி விட்டு, மீண்டும் வேலைக்குத் திரும்பிவிட்டது. பிறகு ‘எறும்புப் பசு’ கூரைக்குக் கீழே திரும்பவும் விரைந்து தூங்கப் போகிறது.

இவை எறும்பினுடைய ‘உயிருள்ள’ கருவிகள். அவை நம்முடையதைப் போல செயற்கையானவை அல்ல, அவை இயற்கையான கருவிகள். அதனால் ஒருபோதும் பிரிந்து இருக்க முடியாது.

நீர்நாயினுடைய கருவிகள் கூட அதனது அங்கமாகவே இருக்கின்றன. ஒரு மரத்தை வெட்டிச் சாய்ப்பதற்கு அதனிடம் ஒரு கோடரி கிடையாது. அது தனது பற்களைப் பயன்படுத்துகிறது. எறும்புகளும் நீர்நாய்களும் தங்களுடைய கருவிகளைத் தயாரிப்பதில்லை. பிறக்கும் போதே அவை உடன் பெற்றிருக்கின்றன.

அல்லது எடுத்துக் காட்டாக கிராஸ்பில் பறவையைப் பார்ப்போம்.

உணவுக்காக இப்பறவை உட்கார்கின்ற போது அது கத்தியையோ, குத்துக் கரண்டியையோ பயன்படுத்துவதில்லை. அதனது மேசைத் தட்டுமுட்டுக் கலங்களில் ஒரு ஜோடி இடுக்கிப்பொறியும் உண்டு. அதைக் கொண்டு திறமையான பைன் கூம்புகளைத் திறந்து, பைன் கொட்டைகளை வரிசை வரிசையாகக் கொத்துகிறது. இந்தப் பறவை தனது மேசைத் தட்டுமுட்டுக் கலங்களை ஒருபோதும் ஒதுக்கி வைப்பதில்லை (அது தூங்கும் போது கூட), இதற்கு மிகச் சாதாரணமான காரணம் அதனது சொந்த அலகே ஒரு கத்தியாகவும் குத்துக் கரண்டியாகவும் இருக்கிறது.

கொட்டைகளை உடைப்பதற்கு எப்படி கொட்டை உடைப்பானும் தக்கையை இழுப்பதற்குத் தக்கைதிருகியும் உள்ளன போல இந்தப் பறவையின் அலகும் பைன் கூம்புகளைத் திறப்பதற்கு ஏதுவாகச் சரியாக இருக்கிறது.

ஒரே ஒரு வித்தியாசந்தான். கொட்டைகளை உடைக்க மனிதன் கொட்டை உடைப்பானைக் கண்டுபிடித்திருக்கிறான், அதே வேளை அலகுமுனை வளைந்த பறவையானது, பல்லாயிரக் கணக்கான ஆண்டுக் காலத்தில், பைன் காட்டில் வாழவும், பைன் கூம்புகளிலிருந்து பைன் கொட்டைகளைக் கொத்தி எடுக்கவும் தன்னைப் பழக்கிக் கொண்டுவிட்டது. பார்த்தவுடனே இத்தகைய கருவிகளின் மீது ஒருவர் பொறாமைப் படக் கூடும். நம்முடைய ஒரு பகுதியான கருவியை நாம் ஒருபோதும் இழக்கவோ, தவறவிடவோ மாட்டோம். ஆனால் இதை நாம் எண்ணிப் பார்த்தால், இத்தகைய கருவிகள் உண்மையிலேயே நல்லனவல்ல என்பது தெரியும். அவற்றை ஒருபோதும் பொருத்தவோ, மாற்றவோ முடியாது.

வயது முதிர்ந்து தளர்ந்த போது, ஒரு நீர்நாய் தனது பற்களை ஒரு கத்தி தீட்டுபவரிடம் கொண்டு செல்ல முடியாது. மிகவும் விரைவாகவும், ஆழமாகவும் பறிக்கக் கூடிய வளர்ச்சியடைந்த ஒரு புதுக் கால் வேண்டுமென்று ஓர் எறும்பால் கேட்க முடியாது.

ஒரு கைக்குப் பதிலாக ஒரு மண்வாரியுடன் மனிதன்

மற்ற எல்லா பிற விலங்குகளையும் போல, மரம், இரும்பு, எஃகு போன்ற கருவிகள் இல்லாமல், உயிருள்ள கருவிகளை மட்டிலும் மனிதன் கொண்டிருந்தான் என்று நாம் கற்பனை செய்து பார்ப் போம்.

அவனால் ஒருபோதும் ஒரு புதிய கருவியை தயாரித்திருக்க முடியாது, பிறக்கும் போதே தன்னுடன் வந்த ஒன்றை மாற்றிக் கொண்டிருக்கவும் முடியாது. மேலும் அவன் ஒரு மண்வாரி வைத்துக் கொள்ள வேண்டி இருந்தால், அவன் மண்வாரி போன்ற ஒரு கையுடன் பிறந்திருக்க வேண்டும். ஒரு வகையில், நாம் இவை எல்லாவற்றையும் கற்பனையாக மட்டுமே காண்கிறோம், ஏனெனில் உண்மையில் இது போல ஒருபோதும் ஏற்படாது. ஆனால், இத் தகைய ஒரு விநோதமான பிறவி பிறந்துவிட்டது என்று நாம் கற் பனை செய்வோம். அவன் மிகச் சிறந்த தோண்டும் ஆளாக இருப்பது உறுதிதான் என்றாலும், தன்னைப் போல தோண்டும்படி அவன் வேறு யாருக்கும் ஒருபோதும் கற்பிக்க முடியாது. எப்படி நல்ல கண்பார்வை உள்ள ஒருவர் வேறு யாருக்கேனும் தனது கண்களைக் கொடுத்து உதவ முடியாதோ அது போலத்தான்.

இத்தகைய ஓர் உயிரி தனது மண்வாரி-கையை நாள் முழுக்க தன்னுடன் எடுத்துப் போக வேண்டி இருந்திருக்கும். ஆனால் அது பிற எந்த வகையான வேலைக்கும் பயனில்லாமல் போயிருக்கும். அந்த உயிரி இறந்த போது, அந்த மண்வாரி-கைக்கும் முடிவாகத் தான் இருந்திருக்கும். இந்தப் பிறவித் தோண்டி, தனது பேரக் குழந்தைகளோ, கொள்ளுப்பேரக் குழந்தைகளோ தனது மண்வாரி யை மரபு இயல்பாகப் பெற்றிருந்தாலேயே, தனது மண்வாரியை எதிர் காலத் தலைமுறையினர்க்குக் கொடுக்க முடியும்.

இருப்பினும், இது முற்றிலும் உண்மையல்ல. ஓர் உயிருள்ள கருவியானது எதிர்காலத் தலைமுறையினர்க்கு, அது அவர்களுக்குப் பயனுள்ளதாகவும், தீங்கு பயக்காததாகவும் இருந்தால் மட்டுமே, உயிரியின் ஓர் அங்கமாகும்.

மக்கள் நுன்னெலிகளைப் போல தரையில் வாழ்ந்தால், நிச்சயமாக அவர்களுக்கு மண்வாரி-கைகள் தேவைப்படும்.



ஆனால் தரைக்கு மேல் வாழக் கூடியவர்களுக்கு அத்தகைய கை தேவையற்ற ஆடம்பரமான ஒன்றாகவே இருக்கும்.

ஓர் உயிரிக்கு இயற்கையான கருவி படைக்கப்பட வேண்டுமானால் எண்ணற்ற விஷயங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், மகிழ்ச்சிக்குரிய வகையில் மனிதன் தன்னுடைய வளர்ச்சி யில் மற்றொரு பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். இயற்கை தனக்கு மண்வாரி-கையைத் தரும் என அவன் காத்திருக்கவில்லை. அவன் தானே ஒன்றைச் செய்து கொண்டான். மண்வாரி மட்டுமல்ல கத்தி, கோடரி போல இன்னும் எத்தனை எத்தனையோ உண்டு.

தன்னுடைய மூதாதையர்களிடமிருந்து பத்து விரல்களையும், பத்து கால் விரல்களையும், முப்பத்தியிரண்டு பற்களையும் அவன் மரபாகப் பெற்றுக் கொண்டதோடு, மிகவும் மாறுபட்ட ஆயிரக்கணக்கான —

நீண்டதும் குறுகியதும், மெலிந்ததும் கனத்ததும், கூர்மையானதும் மொட்டையானதும், துளைக்கின்ற, வெட்டுகின்ற, அடிக்கின்ற — கைகளை, அலகுகளை, பற்களை, வளைநகங்களை மற்றும் கைமுட்டிகளை, அவன் சேர்த்துக் கொண்டிருக்கிறான்.

பிற விலங்கு உலகத்தோடு கூட ஓட்டப்பந்தயத்தில் மிக விரைந்து செல்ல இது மனிதனுக்கு உதவியது. மற்றவர்களால் இவனைப் பிடிப்பது என்பது முற்றிலும் முடியாததாகி விட்டது.

செயலூக்கமுள்ள மனிதனும் செயலூக்கமுள்ள ஆறும்

புதைபடிவ மனிதன் மெல்ல மெல்ல மனிதனாக மாறிக் கொண்டு வந்த போது கல்லாலான வளைநகங்களையும், பற்களையும் உருவாக்க வில்லை, ஆனால் காளான்களையும் தீங்கனிகளையும் நாம் சேர்ப்பது போல அவற்றைச் சேகரித்தான். அவன் நதியினுடைய ஆழமற்ற பகுதிகளில் அலைந்து திரிந்த போது, அவனுக்காக இயற்கை பளபளப்பாக்கி குவித்து வைத்திருந்த கூர்மையான கற்களைக் கவனமாகத் தேடினான்.

நதியின் ஆழத்திலிருந்த பாறைகளின் மீது, பெரிய கற்குவியல்களை ஒன்றோறொன்று அடித்துக் கொண்டு ஒரு ராட்சச கிலுகிலுப்பைப் போல, ஒரு காலத்தில் பெரு நீர்ச்சுழி பாய்ந்தோடிய இடத்தில் இந்த 'இயலுருவான' கூர்மை பெற்ற கற்களை வழக்கமாகக் காண முடிந்தது. பெரிய நீர்ச் சுழியில் அதிகமாக உழைத்த நதி, தனது 'உழைப்பின்' விளைவுகள் குறித்து சிறிதளவே அக்கறை கொண்டது. ஆகவே தான் இயற்கையின் பணியால் கிடைத்த சில நூற்றுக் கணக்கான கற்கள் மனிதனுக்கு எந்தப் பயனும் இல்லாமல் போய் விட்டன.

உரிய காலத்தில் தனக்குத் தேவைப்பட்ட வடிவங்களில் கற்களை வடிக்க அவன் தொடங்கினான். அவனது முதலாவது கற்கருவிகளைத் தயாரிக்க ஆரம்பித்தான்.

அப்போது என்ன நடந்ததோ அது மனிதகுல வரலாற்றில் அநேக முறை நடைபெற வேண்டி இருந்தது. இயற்கையான வடிவத்தில் தான் கண்டதை மனிதன் எப்படியோ செயற்கையாக மாற்றினான். இயற்கையின் மிகப் பெரிய பணிமனையின் ஓரங்களில் ஒன்றில் மனிதன் தனது சொந்தப் பணிமனையை நிறுவினான். இயற்கையில் அவனால் காண முடியாத பொருட்களை, புதிய பொருட்களை அங்கே அவன் உருவாக்கினான்.

இது தான் கற்கருவிகளின் கதை, பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இது தான் உலோகத்தின் கதை. கண்டுபிடிப்பதற்குக் கஷ்டமாக இருந்த, இயலுருவான உலோகத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இயற்கை உலோகக் கலவையை மனிதன் உருக்கிப் பிரித்தெடுக்கத் தொடங்கினான். மேலும் ஒவ்வொரு முறையும் அவன் கண்டு பிடித்த ஏதோ ஒன்றிலிருந்து, புதிதாக ஒன்றைத் தானே காணக் கூடிய அளவுக்கு முன்னேற்றமடைந்தான். இயற்கையின் கடுமையான சட்டதிட்டத்திலிருந்து தனது சுதந்திரத்தைப் பெறக்கூடிய அளவுக்கு,

விடுதலையை நோக்கி அவன் மேலும் ஓர் அடி எடுத்துவைத்தான்.

ஆரம்பத்தில், தனது கருவிகளுக்குத் தேவையான பொருட்களை உருவாக்குவதற்கு அவனால் இயலாததாக இருந்தது. தான் காணக் கூடிய பொருட்களைக் கொண்டு, தனது தேவைகளுக்குப் பொருந்து கின்ற வகையில் வடிவமைக்கும் முயற்சியை அவன் தொடங்கினான்.

இந்த முறையில், ஒரு நல்ல கல்லைக் கண்டுபிடித்து, அதன் விழிம்புகளை மற்றொரு கல்லினால் கொத்தி ஒரு கருவியாக்க முடிந்தது.

இதைக் கொண்டு, கூரிய முனையுடைய சிக்கிமுக்கிக் கருவியையோ, கைக் கோடரியையோ போன்ற கனமான கருவியைத் தயாரிக்க முடியும். வெடித்துச் சிதறுகின்ற தூள்கள் கூட உடைப்பான்களாகவும், சுரண்டு கருவிகளாகவும் மற்றும் உளிகளாகவும் பயன்பட்டன.

பூமியின் ஆழத்தில் காணப்பட்ட வரலாற்றுக் காலத்திற்கு மிக முந்திய காலக் கருவிகள், இயலுருவான கற்களைப் போலவே தோன்றுகின்றன. துணுக்குக் கற்களாக்கிய இந்தப் பணியினைச் செய்தது யார், மனிதனா, நதியா, வெறுமனே வெப்பத்திலிருந்து குளிராக, மழையும் நீரும் உடன் சேர, மாற்றமடைந்த தட்ப வெப்ப நிலையாலா எனக் கூறுவது பல நேரங்களில் சிரமமாகி விடு கிறது.

இருப்பினும், ஐயத்திற்கிடமில்லாத பல கருவிகளும் உண்டு. இப் போது ஆழமான சகதி மற்றும் மணல் அடுக்குகளின் கீழே புதையுண்டு கிடக்கும், பண்டைக் கால நதிகளின் ஆழமற்ற நீர் நிலைகளும், நதிக் கரைகளும், வரலாற்றுக்கு முந்திய கால மனிதனது உண்மையான பணிமனைகள் என்பதை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இத்தகைய அகழ்ந்தெடுப்புகள் முற்றுப்பெற்ற கைக் கோடரிகளையும், கோடரி களாகச் செய்யப் பயன்பட்ட பாறைகளையும் தந்துள்ளன.

இத்தகைய கைக் கோடரிகள், ருஷ்யாவின் தெற்குப் பிராந்தியங் களிலும், சுகூமியை அடுத்த கடற்கரை மேற்பகுதியிலும், கிரிமியாவில் கியிக்-கொபா குகையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைக் கோடரியின் சிக்கிமுக்கிக் கல்லை நாம் ஆராய்ந்தோமானால், சிக்கிமுக்கிக் கல்லால் எவ்விடத்தில் கொத்தி கூர்முனையாக்கப்பட்டது என்பதை நாம் தெளிவாகக் காண முடியும். அது வளவளப்பாக மெருகிடப்பட்டதற்கான அடையாளங்களையும் நாம் காண முடியும்.

இத்தகைய வேலையை இயற்கை ஒருபோதும் செய்யாது. மனி தன் மட்டுமே இதனைச் செய்திருக்க முடியும்.



இதை விளங்கிக் கொள்வது அவ்வளவு சிரமமானதல்ல. இயற் கையில் எல்லாமே திட்டமில்லாமலும், இலக்கு இல்லாமலுமே தற் செயலாக நடைபெறுகின்றன. ஒரு நதியினுடைய பெருநீர்ச் சுழியானது எந்தவித நோக்கமோ காரணமோ இல்லாமல் கற்களை அடித்துக் கொண்டிருக்கிறது. மனிதனும் இதையேதான் செய்கிறான். ஆனால் அவன் இதை மனப்பூர்வமாகச் செய்கிறான். தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு அவனிடம் தகுந்த காரணம் இருக் கிறது. கல்லை மாற்றத் தொடங்கும் எளிமையான பணியிலிருந்து

தொடங்கி, தனது தேவைகளுக்குப் பொருந்தச் செய்யக் கண்டு கொண்டான். மனிதன் படிப்படியாக மாறத் தொடங்கினான். தனது தேவைகளுக்கு ஏற்றபடி இயற்கையையே அவன் மாற்றத் தொடங்கி னான்.

மற்ற பிற விலங்குகளினின்றும் இது அவனை ஒரு படி மேலே வைத்தது. அது அவனுக்கு இன்னும் அதிகமான சுதந்திரத்தைக் கொடுத்தது. ஏனெனில் கூர்மையான கல்லை இயற்கை தனக்குத் தரும் என இப்போது அவன் காத்துக் கொண்டிருக்கவில்லை.

இப்போது தனது சொந்தக் கருவிகளை அவன் தயாரிக்க முடிந்தது.

மனிதனது வாழ்க்கை வரலாற்றின் தொடக்கம்

ஒரு வாழ்க்கை வரலாறு வழக்கமாக ஒருவர் பிறந்த நாள் மற்றும் இடத்தோடு தொடங்குகிறது. எடுத்துக்காட்டாக:

''இவான் இவனோவ், தம்போவ் நகரத்தில் 1897ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாள் பிறந்தார்.''

இதே தகவல் சில நேரங்களில் மிகவும் அணி சிறப்பான நடையில் வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக:

''1897ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திய மழை கொட்டும் ஒரு நாளில், தனது குடும்பத்திற்கும், தனது சொந்த நகரத்திற்கும் பிற்காலத்தில் புகழ் சேர்க்கவிருந்த இவான் இவனோவ், தம்போவ் நகரத்தின் வெளிப்புறத்தே ஒரு சிறிய இல்லத்தில் பிறந்தார்.''

ஆனால் இங்கு நாம், இந்த நூலின் மூன்றாவது அத்தியாயத்தின் இடையில், இப்போது கூட நமது கதாநாயகன் எங்கே, எப்போது பிறந்தான் என்பதைக் குறிப்பிடவேயில்லை. உண்மையில், அவனது இயல்பான பெயரை நாம் உங்களுக்கு இன்னமும் சொல்லவில்லை. ஓர் இடத்தில் அவனை 'குரங்கு மனிதன்' என்றும் மற்றொரு இடத் தில் 'மனிதக் குரங்கு' என்றும் அழைக்கிறோம். இதோடு அவனை 'வரலாற்றுக்கு முந்திய கால மனிதன்', 'புதைபடிவ மனிதன்' மற்றும் 'நமது காட்டு மூதாதையர்' என்றெல்லாம் அழைக்கின் றோம்.

பெயர்களில் காணக் கூடிய இந்தக் குழப்பத்தை நாம் விளக்க முயற்சிப்போம்.

நாம் விரும்பினாலுங்கூட, நமது கதாநாயகனுடைய இயற்பெயரை உங்களுக்கு நம்மால் கூற இயலாது, ஏனெனில் அவனுக்கு அநேகப் பெயர்கள் இருக்கின்றன.

எந்த ஒரு வாழ்க்கை வரலாற்று நூலின் பக்கங்களை நாம் புரட்டினாலும், முதற் பக்கத்திலிருந்து கடைசி வரை கதாநாயகனு டைய பெயர் ஒருபோதும் மாறுவதில்லை என்பதை நாம் பார்க்க முடியும். ஆரம்பத்தில் அவன் ஒரு குழந்தை, பிறகு பையன், பிறகு மீசையும் தாடியும் கொண்ட மனிதன். ஆனால் பெயர் மட்டும் தொடக்கத்திலிருந்தே ஒன்றேதான். அவன் பெயர் இவானாக இருந் தால், அவனது வாழ்நாள் முழுக்க அவன் இவான் தான்.

நமது கதாநாயகனைப் பொருத்த மட்டில், விஷயங்கள் மிகவும் சிக்கலானதாக இருக்கின்றன.

அவன் தன்னைத்தானே ஓர் அத்தியாயத்திலிருந்து மற்றொன்றுக்குப் பெரிதும் மாற்றிக் கொள்வதனால், அதற்கேற்ப அவன் பெயரை நாம் மாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

வரலாற்றுக்கு முந்திய கால அனைத்து மனிதர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், அவர்களில் ஒரு குரங்கைப் போல இன்னமும் பெருமளவுக்குத் தோன்றக் கூடிய மனிதனது பெயர் பித்தெகாந்த்ரோபஸ், சினான்த்ரோபஸ், பிக்கின் மனிதன் மற்றும் ஹெய்டெல்பர்க் மனிதன் என்பதாகும்.

ஜெர்மனியில், ஹெய்டெல்பர்க் நகரத்திற்கு அருகே கண்டுபிடிக்கப் பட்ட மனிதனது தாடை எலும்புதான் ஹெய்டெல்பர்க் மனிதனைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள ஒரே தடயமாகும்.

இருப்பினும், அதற்குச் சொந்தக்காரன் மனிதனே என்பதற்கு அது போதுமான சான்றாகத் திகழ்கிறது. பற்கள் மனிதப் பற்கள், கோரைப் பற்கள் குரங்குகளுக்குப் போல கீழ்ப் பற்களுக்கு மேலாகத் துருத்திக் கொண்டிருக்கவில்லை.

ஆனால் ஹெய்டெல்பர்க் மனிதன் இன்னமும் உண்மையான மனிதனாகவில்லை. அவனது குரங்கு போன்ற கீழ்த்தாடை இதனை நமக்குத் தெரிவிக்கிறது.

பித்தெகாந்த்ரோபஸ், சினான்த்ரோபஸ், ஹெய்டெல்பர்க் மனிதன்!

நமது கதாநாயகனுக்கு, அவனது வாழ்க்கையில் ஒரே காலத்தில், அவனது ஒரே மாதிரியான வளர்ச்சிக் கட்டத்தில், மூன்று நீளமான பெயர்கள்.

ஆனால் அவன் மாறாமல் அப்படியே இருக்கவில்லை. அவன் தற்காலத்திய மனிதனைப் போல மிகமிக அதிகமாக மாறிக் கொண்டே வந்தான். ஒரு சிறு குழந்தை பையனாகி, பையன் வாலிபனாவது போல நமது வரலாற்றுக்கு முந்திய மனிதன் நியாண்டர்தால் மனிதனாகி, நியாண்டர்தால் மனிதன் குரோமன்யான் மனிதனானான்.

ஆக, நமது கதாநாயகனுக்கு மேற் கொண்டும் சில பெயர்கள் இருப்பதை நாம் காண முடிகிறது!

ஆனால் நாமாகவே முன்னோக்கிச் செல்ல வேண்டாம். இந்த அத்தியாயத்தில் அவன் ‘பித்தெகாந்த்ரோபஸ் – சினான்த்ரோபஸ் – ஹெய்டெல்பர்க் மனிதன்’ என அழைக்கப்படுகிறான்.

கருவிகள் செய்யப் பயன்படும் பொருட்களைத் தேடிக் கொண்டு, நதிக் கரைகளில் அவன் அலைந்து திரிந்ததில் அவனது காலமெல்லாம் போயிற்று. அவன் பொறுமையாக சிக்கிமுக்கிக் கற்களைக் கொத்திக் கொண்டும், கரடுமுரடான கைக் கோடரிகளை வடிவமைத்துக் கொண்டும் இருந்தான். இவற்றை விஞ்ஞானிகள் பழங்காலத்திய நதிப் படுகைகளில் இன்னமும் காண முடிகிறது.

இது காரணமாகத்தான் அவனுடைய பெயரை உங்களுக்குச் சொல்வது அத்தனை சிரமமானதாக இருக்கிறது.

அவன் எப்போது பிறந்தான் என்று உங்களுக்குக் கூறுவது அதை விடச் சிரமமானது. ஏனெனில் நாம் வெறுமனே சொல்லிவிட முடியாது: ''நமது கதாநாயகன் குறிப்பிட்ட இந்த ஆண்டில் பிறந்தான்'', ஏனெனில் மனிதன் ஒரே ஆண்டிலேயே மனிதனாகி விடவில்லை. நடக்கக் கற்றுக் கொள்ளவும், தனது கரடுமுரடான கருவிகளைத் தயாரிக்கவும் அவனுக்கு நூறு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகி இருக்கின்றன. ஆகையினால், மனிதன் எத்தனை வயதானவன் என்று யாராவது நம்மிடம் வினவினால், நாம் இப்படித்தான் விடையளிக்க முடியும்: ஏறத்தாழ ஒரு மில்லியன் வயது.

மேலும் மனிதன் எங்கே பிறந்தான் என்று கூறுவது மேலும் சிரமமானது.

நமது கதாநாயகனுடைய பாட்டி எங்கே வசித்தாள் என்பதைக் கண்டுபிடிக்க நாம் முயன்றோம், அதே புதைபடிவப் பாட்டி-குரங்கினுடைய சந்ததியினரில் மனிதன், ஷிம்பான்ஸே மற்றும் கொரில்லா அடங்குவர். விஞ்ஞானிகள் இந்தக் குரங்கை Dryopithecus என்றழைக்கின்றனர். அதனது முகவரியை நாம் தேடத் தொடங்குகின்றபோது, ஏராளமான ட்ரியோபித்தேக்கஸ்கள் இருந்ததாக நாம் அறிகிறோம். சில சுவடுகள் மத்திய ஐரோப்பாவுக்கும், பிற மேற்கு ஆப்பிரிக்காவுக்கும் வேறுபிற தெற்கு ஆசியாவுக்கும் அழைத்துச் செல்கின்றன.

தென் ஆப்பிரிக்காவில் ஆர்வ மூட்டும் பல கண்டுபிடிப்புகள் இருந்தன என்று அறிந்தவர்கள் நமக்குக் கூறுகிறார்கள். தங்களது பின்னங்கால்களால் நடக்கத் தெரிந்து, காட்டில் வசிக்காது திறந்த வெளியில் வாழ்ந்த குரங்குகளின் எலும்புகள் அங்கே கண்டுபிடிக்கப்பட்டன.

பிறகு நாம் ஆசியாவில் கண்டு பிடிக்கப்பட்ட பித்தெகாந்த்ரோபஸ் மற்றும் சினான்த்ரோபஸ் மீத மிச்சங்களை நினைவில் கொள்கிறோம். அதே வேளை ஹெய்டெல்பர்க் தாடை எலும்பானது ஐரோப்பாவில் காணப்பட்டது. அவ்வாறானால் எது மனிதனுடைய பிறந்த இடம்? மேலும் எந்தக் கண்டத்தில் மனிதன் பிறந்தான் என்பதை முடிவு செய்வது சிரமமானதென்றும், அவன் பிறந்த நாட்டைப் பற்றி எதுவுமே சொல்ல முடியாதென்றும் புரிந்து கொள்கிறோம்.

எங்கெல்லாம் கற்கருவிகள் கிடைத்ததோ, அவை ஒவ்வொன்றாக சரி பார்த்தபடி நமது தேடுதலை நாம் தொடங்க வேண்டும் என்று நாம் எண்ணுகிறோம். உள்ளபடியே, மனிதன் தனது சொந்தக் கருவிகளைத் தயாரிக்கத் தொடங்கிய போது மனிதன் உண்மையிலேயே மனிதனாகி இருக்கிறான். ஒரு வேளை இந்தக் கருவிகள் கிடைத்த இடங்கள், முதல் மனிதன் பூமியில் எங்கே தோன்றினான் என்பதை நாம் முடிவு செய்ய நமக்கு உதவலாம்.

சிக்கிமுக்கி கைக் கோடரிகள் கண்டு பிடிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்தையும், ஓர் உலக வரைபடத்தை நாம் எடுத்துக் கொண்டு அதில் குறிக்கிறோம். விரைவிலேயே அந்த வரைபடம் புள்ளிகளால்

நிரம்புகிறது. அவைகளில் பெரும்பாலானவை ஐரோப்பாவிலேயே இருக்கின்றன, ஆனால் சில ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ளன.

விடை இப்போது தெளிவாகி விட்டது: மனிதன் முதலாவதாகப் பழைய உலகத்தில் தோன்றியிருக்கிறான். உடனடியாகப் பல்வேறு இடங்களில் தோன்றியிருக்கிறான், ஒரு குறிப்பிட்ட எந்த இடத்திலுமல்ல.

ஏறத்தாழ இதுதான் நடைபெற்றிருக்க வேண்டும். ஒரு கணப்பொழுதுக்குக் கூட, ஒரு குறிப்பிட்ட ஜோடியிலிருந்து மனித இனம் முழுமையும், 'ஆதாம் குரங்கு' மற்றும் 'ஏவாள் குரங்கு' என்பது போல, தோன்றியிருக்கும் என நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட பகுதியில், ஒரு குறிப்பிட்ட குரங்குக் கூட்ட அமைப்புக்குள்ளேயே குரங்கு மனிதனாக மாறிய மாற்றம் ஏற்பட்டிருக்க முடியாது. அது உடனடியாகப் பல பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது. குரங்குகள் எப்படி நடப்பதும், தங்களது கைகளை வேலை செய்ய பயன்படுத்த கற்றுக் கொள்வதும் எல்லா இடங்களிலும் நிகழ்ந்திருக்கிறது. அவை வேலை செய்யத் தொடங்கிய உடனேயே, ஒரு புதிய சக்தி நடைமுறைக்கு வந்திருக்கிறது. அது தான் மேல்நிகழ்ச்சியாக அவற்றை மனிதர்களாக மாற்றியது. இந்தச் சக்தி மனித உழைப்புத்தான்.

மனிதன் நேரத்தை உருவாக்குகிறான்

இரும்புத் தாதும், நிலக்கரியும் எவ்வாறு வெட்டி எடுக்கப்படுகின்றன என்பதையும், நெருப்பு எவ்வாறு உண்டாக்கப்படுகிறது என்பதையும் ஒவ்வொருவரும் அறிவர்.

ஆனால் நேரம் எப்படி உருவானது?

நேரத்தை உருவாக்குவது எப்படி என்பதை நீண்ட காலத்திற்கு முன்பே மனிதன் அறிந்திருந்தாலும், இதற்கு விடையை மிகச் சிலரே அறிவர். முதலாவதாக அவன் கருவிகளைத் தயாரிக்கத் தொடங்கிய போது அவனது வாழ்க்கை, புதிதாக ஒன்றினால், அது உண்மையானது, மனிதத் தொழிலால் ஆன உழைப்பால், இடம் பெற்றிருந்தது. ஆனால் உழைப்பு நேரத்தை எடுத்துக் கொண்டது. ஒரு கற்கருவியை வடிவமைக்க, மனிதன் முதலாவதாக நல்ல கல்லைத் தேட வேண்டி இருந்தது, ஏனெனில் கோடரி கொண்டு எல்லாவற்றையுமே வேலை செய்து முடியாது.

கருவிகளுக்கு ஏற்ற மிகச் சிறந்த கல் சிக்கிமுக்கிக் கல்தான். அது உறுதியாகவும் கனமாகவும் இருந்தது. ஆனால் சிக்கிமுக்கிக் கற்பாளங்கள் காலுக்கடியில் கிடக்கவில்லை. அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டி இருந்தது. சிக்கிமுக்கிக் கல்லைத் தேடுவதில் மனிதன் பல மணி நேரங்களைச் செலவிட்டான். அடிக்கடி அவனது தேடுதல் வீணாய்ப் போயிற்று. பிறகு அவன் மிகக் குறைந்த எடையுள்ள சிக்கிமுக்கிக் கல் அல்லது மணற்பாறைகள் அல்லது சுண்ணாம்புக் கல் போன்ற மென்மையான பொருட்களையும் நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டி வந்தது.

பிறகு அவன் சரியான கல்லாகக் கண்டுபிடிப்பான். இருப்பினும் அது வெறும் கல்தான். அது மற்றொரு கற் கருவியால், சிக்கிமுக்கிக் கருவியால், கொத்தி வடிவமைக்கப்பட வேண்டி இருந்தது. இதுவும் நேரத்தை எடுத்துக் கொண்டது. இப்போது இருப்பன போன்று மனிதனுடைய விரல்கள் விரைவானதாகவும் திறமையுடையனவாகவும் அப்போது இல்லை. எப்படி வேலை செய்வது என வெறுமனே அவை கற்றுக் கொண்டிருந்தன. இதன் காரணமாகத்தான் தனது கரடுமுரடான கோடரிகளைத் தயாரிப்பதற்காக அவன் மிக அதிக மான நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது.

ஆனால் இந்த வேலையைச் செய்ய தேவைப்பட்ட நேரத்தை அவன் எங்கிருந்து பெற வேண்டி இருந்தது?

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்கு மிகக் குறைவான ஓய்வு நேரமே இருந்தது. இன்றைய நாளில் மிகச் சுறுசுறுப்பாக இருக்கக் கூடிய மனிதனை விட அவனுக்கு மிகக் குறைந்த நேரமே இருந்தது. காலையிலிருந்து இரவுவரை காடுகளின் வழியாக உணவைச் சேகரித்துக் கொண்டும், தனக்காகவும் தனது குழந்தைகளுக்காகவும், அவர்களது வாய்களில் போட்டு நேரடியாக உண்ணத்தக்க எதுவாக இருந்தாலும் தேடிக் கொண்டு அலைந்தான். உணவைச் சேகரிப்பதற் கும் உண்பதற்குமே எல்லா நேரமும் செலவாயிற்று, தூங்குவதற்குச் செலவழிக்கப்படவில்லை. ஏனெனில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் கண்ட உணவுகள் அவ்வளவு ஊட்ட மளிப்பதாக இல்லை, மேலும் அவனுக்கு ஏராளமாகத் தேவைப்பட்டது.

அவனது உணவில் பெர்ரி பழங்கள், கொட்டைகள், நத்தைகள், சுண்டெலிகள், இளந்தளிர்கள், வேர்கள், புழுப் பூச்சியின் கூட்டுப்புழு மற்றும் இத்தகைய அற்பமானவை அடங்கியிருந்தால் அவன் எவ்வளவு சாப்பிட வேண்டி இருந்திருக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பார்ப்போம்!

மான் கூட்டங்கள் இப்போது இடம் விட்டு இடம் சென்று புல்லையும் பாசியையும் சிறுகச் சிறுகக் கடித்துத் தின்றுகொண்டு அசைபோடுவது போல மனிதக் கூட்டங்களும் காடுகளில் அலைந்து திரிந்தன. ஆனால் உணவைத் தேடுவதிலும், அசைபோடுவதிலுமே மனி தன் தனது முழுநாளையும் செலவிட வேண்டியிருந்திருக்குமேயானால், எப்போது அவன் வேலை செய்திருக்க முடியும்?

அதனையடுத்து வேலை ஓர் அருமையான தன்மை கொண்டது என்பதை மனிதன் கண்டுபிடித்தான். அது அவனது நேரத்தை எடுக்காததோடு மட்டுமல்லாது, நிறைய நேரத்தையும் அவனுக்குத் தந்தது.

உண்மையிலேயே, ஒருவருக்கு ஒரு வேலை செய்ய எட்டு மணி நேரமாகின்றபோது, அதே வேலையை நான்கு மணி நேரத்தில் செய்ய முடிந்தால், நாம் நான்கு மணி நேரத்தை மீதப்படுத்த முடியும். நம்மைப் போல இரண்டு மடங்கு விரைவாக வேலை செய்யக் கூடிய ஒரு கருவியை நாம் கண்டுபிடித்திருந்தால், நமக்கு

வழக்கமாக ஆகும் நேரத்தில் பாதி நேரத்தை மீதப்படுத்த முடிந் திருக்கும்.

வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் இதைக் கண்டுபிடித்தான்.

சிக்கிமுக்கிக் கல்லைக் கூராக்குவதற்கு அவனுக்கு பல மணி நேரங் கள் தேவைப்பட்டது. ஆனால் பிறகு அவன் கூர்மையான கருவியைப் பயன்படுத்தி மரப்பட்டைக்குக் கீழே இருக்கக் கூடிய முட்டைப் புழுவை எடுத்திருக்கலாம்.

சிக்கிமுக்கிக் கல்லால் ஒரு குச்சியைக் கூராக்குவதற்கு அதிக நேரம் பிடித்திருக்கும். ஆனால் பிறகு இந்தக் கூர்மையான குச்சியைப் பயன்படுத்தி சுவையான வேர்களைத் தோண்டுவதோ, சிறிய விலங்கு களைக் கொல்வதோ மிகவும் சுலபமானதாக இருந்திருக்கும்.



தனக்காகவும் தனது குழந்தைகளுக்காகவும் உணவை எளிதாகவும் விரைவாகவும் சேகரிக்கும் வரலாற்றுக்கு முந்திய கால மனிதனுக்கு வேலைசெய்ய நிறைய நேரத்தை இது தந்தது. தன்னுடைய ஓய்வு நேரத்தில், தனது கருவிகளை எப்போதும் கூர்மையானதாகவும், நன்றாகவும் இருக்கும் படி செய்தான். ஆனால் உணவுக்காக ஏற்பட்ட ஒவ்வொரு புதிய கருவி என்பது முடிவில் நிறைய நேரத்தைச் சேமித்தது என்பதும் பொருளாயிற்று.

வேட்டையாடுதல் மனிதனுக்கு நிறைய ஓய்வு நேரத்தைத் தந்தது. ஏனெனில் புலால் மிகுந்த ஊட்டச் சத்துள்ளதாக இருந்தது. அரை மணி நேரத்திற்குச் சாப்பிட்ட புலாலானது ஒரு நாள் முழுக்க அவன் பசியைத் தீர்ப்பதாக இருந்தது. ஆனால் ஆரம்பத்தில் மக் களுக்கு மிகக் குறைவான புலாலே கிடைத்தது. ஒரு குச்சி அல்லது ஒரு கல்லைக் கொண்டு ஒரு பெரிய விலங்கைக் கொல்வது சிரம மானதாக இருந்தது. மேலும் ஓர் எலியில் அதிகமான புலாலும் இல்லை.

மனிதன் இன்னமும் ஓர் உண்மையான வேட்டைக் காரனாக வில்லை.

மனிதன் — ஒரு திரட்டுபவன்

நமது காலத்தில் ஒரு திரட்டுபவனாக இருப்பது மிகவும் எளிது. நம்மில் அநேகம் பேர் காடுகளில் தீங்கனிகளையும், காளான்களையும் திரட்டியிருந்திருப்போம்.

ஆனால் காளான்களையோ, கொட்டைகளையோ திரட்டுவது தான் நம்முடைய முக்கியமான வேலை என்று கணநேரத்திற்குக் கற்பனை செய்து கொள்வோம். நமக்கு எப்போதும் நல்ல சாப்பாடு கிடைக்கும் என்று நாம் நினைக்கிறோமா? காளான்கள் பறிக்கச் செல்லும் போது சில வேளைகளில் நாம் கூடைவழிந்து நமது குல்லாயில் விழும் அளவுக்குக் கொண்டுவருவோம். ஆனால் சில நேரங்களில், காடுகளில் ஒரு நாள் முழுக்க எதுவுமே இல்லாமல் அலைந்து, கூடையின் அடி யில் ஒரே ஒரு வதங்கிப் போன காளானோடு களைத்துப் போய் வீடு திரும்புவோம்.

நம்முடைய நண்பனாகிய பத்து வயதுப் பெண் ஒருத்தி காளான்

பறிக்கச் செல்லும் போதெல்லாம் பெருமையோடு கூறுவாள்:

''நான் ஒரு நூறு நல்ல காளான்களைக் கண்டுபிடிப்பேன்!''

ஆனால் பெரும்பாலான நேரங்களில் அவள் வெறுங்கையோடுதான் திரும்புவாள். வீட்டில் அவளுக்காக வேறு உணவு காத்துக் கொண் டிருக்காவிட்டால், அவள் பசியால் இறக்க நேரிட்டிருக்கக் கூடும்.

வரலாற்றுக் காலத்துக்கு முந்திய மனிதன், திரட்டுபவன் இதை விடக் கடினமான வாழ்க்கையைப் பெற்றிருந்தான். அவன் பசியால் சாகாமல் இருந்ததற்கு ஒரே காரணம், அவனால் எதைக் கண்டு பிடிக்க முடிந்தாலும் அதைத் தின்பதற்குக் கவலைப்படாமலும், உணவை வேட்டையாடுவதற்காகத் தனது நாட்களைச் செலவிட்டது மாகும். மரங்களில் வாழ்ந்த அவனது மூதாதையர்களைக் காட்டிலும் இவன் வலிமையானவனாகவும், சுதந்திரமானவனாகவும் இருந்தாலும், இவன் நிலை பரிதாபகரமாகவே இருந்தது, உண்மையில் அரைப் பட் டினி கிடந்த உயிரைக் காட்டிலும் மேலாக இல்லை.

இதற்கிடையில், பூமியின் பரப்பில் ஒரு பயங்கரமான விபத்து ஏற்பட இருந்தது.

விபத்து நெருங்குகிறது

ஒருபோதும் தெளிவடைய முடியாத காரணங்களால் வட பகுதியின் பனிக்கட்டிகளின் மேற் பாகங்கள் இடம் பெயர்ந்து தெற்கு நோக்கி நகர ஆரம்பித்தன. மிகப் பெரிய பனி ஆறுகள், சரிவுகளை உழுது கொண்டும், குன்றின் உச்சிகளைக் கூறு போட்டுக் கொண்டும், செங் குத்துப் பாறைகளை உடைத்துக் கொண்டும், நெருக்கிக் கொண்டும், பெரிய மலைகளின் உடைந்த பாறைகளை எடுத்துக் கொண்டும், குன்றுகளுக்கும் சமவெளிகளுக்கும் மேலாக ஓடின. பனிக்கட்டிப் பாளங் களுக்கு முன்புறமாக உருகிய பனியானது கொந்தளிப்பான ஆறு களைப் பெருகச் செய்ய, அது ஆற்றுப் படுகைகளை ஏற்படுத்துமாறு ஆழமான நீள்வரிப் பள்ளங்களை பூமியில் தோண்டியது.

ஒரு பெரிய ராணுவ வெற்றியாளர்களைப் போல வடக்கிருந்து பனிக்கட்டி முன்னேறி வந்தது. வரும் வழியில் மலை உச்சிகளி லிருந்து வந்த பனிக்கட்டிக் குவியல்களுடனும், மலையில் ஒதுங்கிய பொருள்களுடனும் சேர்ந்து கொண்டது.

சோவியத் யூனியனிலும், அண்டை நாடுகளிலும் உள்ள சமவெளி களின் கற்பாளங்களில் ஐந்து மாறுபட்ட பனியுகங்களின் சுவடுகளை நாம் காண முடியும். சில வேளைகளில் கரீலியாவின் அடர்த்தியான பைன்மரக் காடுகளில் பாசி படிந்த மிகப் பெரிய கற்பாளத்தைத் திடீரென்று நாம் பார்க்க நேரிடலாம். அங்கு இது எப்படி ஏற்பட் டிருக்க முடியும்? பனிக்கட்டிக் குவியல் ஒன்றினால் அது விட்டுச் செல்லப்பட்டிருக்கும்.

வட பகுதி பனிக்கட்டிக் குவியல்கள் தெற்கு நோக்கி ஏற்கெனவே நகர்ந்திருக்கக் கூடும், ஆனால் அவை ஒருபோதும் தென் பகுதியில் ஊடுருவி வந்ததில்லை. வோல்கோகிராட் மற்றும் ட்னீப்ராபெத் ரோவ்ஸ்க் நகரங்களைப் பொருத்த மட்டில் ருஷ்யாவில் பனிக் கட்டிக் குவியல்கள் வந்திருக்கின்றன. மேற்கு ஐரோப்பாவில் அவை ஜெர்மனியின் மலைகள் நிறைந்த பகுதி வரையிலும் சென்றன. பிரிட்டீஷ் தீவுகளின் பெரும் பகுதியை அவை மூடிவிட்டன. வட அமெரிக்காவில் அவை பெரிய ஏரிகளுக்குக் கீழ்ப் பகுதிவரை நகர்ந்து சென்றன.

பனிக்கட்டிக் குவியல்கள் மெதுவாக முன்னோக்கி ஊர்ந்து சென் றன. பூமியில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் தங்கியிருந்த இடங்களில் சிறிது காலத்திற்குப் பிறகு இவைகளின் குளிர் காற்றலை உணரப்பட்டது. இருப்பினும், கடல் உயிரினங்கள்தான் பனிக் கொடுங் காற்றை முதலாவதாக உணர்ந்தன.

கடற்கரை நெடுகிலும் இன்னமும் வெதுவெதுப்பாகத்தான் இருந் தது. காடுகள் புன்னை வகை மரங்களாலும், தழை-மலர் கொண்ட தாவர இனங்களாலும் நிறைந்து காணப்பட்டன. தென்பகுதி ராட்சச யானைகளும், காண்டாமிருகங்களும் சமவெளிகளின் உயரமான புற் களின் வழியாகச் சுற்றித் திரிந்தன. ஆனால் கடல்களின் நீரானது

5–563

மிக மிகக் குளிர்ச்சியாக மாறிக் கொண்டு வந்தது. கடல் நீரோட்டங்கள் — கடல்களுக்கு இடையே பாயும் நதிகள் போல — வடக்கிருந்து பனிக்கட்டிக் குவியல்களின் குளிரை எடுத்துச் சென்றன, சில வேளைகளில் மிதக்கும் பனிக்கட்டிப் பாளங்களும் இருந்தன.

கடற்கரையோர அடுக்குகள் வெதுவெதுப்பான கடல்கள் குளிர்கடல்களாக மாறிய கதையை நமக்குக் கூறுகின்றன. வெப்பத்தை விரும்பும் விலங்குகளும், தாவரங்களும் இன்னமும் தரையில் குடியிருந்த அந்நேரத்தில், கடல்களின் மக்கள் தொகை மாறத் தொடங்கியது. அக்காலத்திய மண்ணியல் படுகைகளைப் படிப்போமேயானால், குளிர்ந்த நீரில் மட்டுமே வாழக் கூடிய இப்பி இன உயிர்களின் ஓடுகளை நாம் காண முடியும்.

காடுகளின் போர்

பனிக்கட்டிக் குவியல்களின் வருகையானது நிலப்பகுதியில் உணரப்பட்டது.

தன்னுடைய சரியான இடத்தை விட்டு ஆர்க்டிக் இப்போது தெற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை! வடபகுதி தூந்திரா மற்றும் பைன் காடுகளையும் இது தெற்கு நோக்கித் தள்ளியது.

தூந்திரா தைகாவோடு பகிரங்கப் போரை அறிவித்தது. தைகா பின்வாங்க வேண்டி இருந்தது. ஆகவே இலைகள் கொண்ட காடுகளும் நெருக்கமாகத் தொடங்கின.

காடுகளின் மாபெரும் போர் தொடங்கியது.

இப்பொழுது கூட காடுகள் ஒன்றையொன்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ஃபிர் மற்றும் ஆஸ்ப் மரம் இரண்டும் கடுமையான எதிரிகள். ஆஸ்ப் மரம் நிழலை வெறுக்கிறது, அதே வேளை ஃபிர் அதனைப் பொருட்படுத்துவதில்லை.

ஒரு ஃபிர் காட்டில் நாம் ஆஸ்ப் மரங்களைப் பார்க்க நேர்ந்தால், இளந்தளிர்களைவிட பெரிதாக அவை இல்லாதிருப்பதைக் காணலாம். நிழல் தரும் ஃபிர் அவைகளை வளர விடுவதில்லை. ஆனால் ஃபிர் மரங்களை மனிதன் வெட்டிச் சாய்த்த பிறகு ஆஸ்ப் மரங்கள் திரும்பவும் பிரகாசமான சூரிய ஒளியில் உயிர்பெற்று விரைந்து வளரத் தொடங்கும்.

பிறகு ஒவ்வொன்றும் மாறத் தொடங்குகின்றன. ஃபிர் மரங்களின் அடியில் வளர்ந்த நிழலை விரும்பும் பாசிகள் வாடி மடியும். வெட்டாது விடப்பட்ட சிறிய ஃபிர்கள் காலை உறைபனியால் நோய்பிடிக்கத் தொடங்கின. அவைகளது தாய்களான மிகப் பெரிய ஃபிர்கள் உயிருடன் இருந்த போது, இளம் ஃபிர்கள் அவைகளில் அகன்ற பசுமையான கிளைகளில் நிழலில் அருமையாக நின்றன. ஆனால் அவை திறந்த வெளியில் தனியாக விடப்பட்ட போது அவை நோய்ப் பிடித்து, வளர்வதை நிறுத்திக் கொண்டன.

இப்போது ஆஸ்ப் மரங்கள் வெற்றியாளர்களாகி விட்டன. முன்னதாக, எதிரி ஃபிர்கள் தங்களது கிளைகளின் வழியாக விட்ட சூரிய ஒளியின் புள்ளிகளை மட்டுமே அவைகளால் பெற முடிந்தது. இப்

போது, ஃபிர்கள் வெட்டி வீழ்த்தப்பட்ட போது, ஆஸ்ப் மரங்கள் காட்டின் ஆட்சியாளர்களாக மாறிவிட்டன.

சில ஆண்டுகளுக்குள், ஒரு காலத்தில் அடர்த்தியாக ஃபிர் காடுகள் இருந்த இடத்தில், பிரகாசமான ஆஸ்ப் மரக் காட்டை நாம் காண் கிறோம்.

ஆனால் காலம் கடந்து செல்கிறது. மேலும், காலம் மிகப் பெரிய ஒரு வேலையாளன். சிறுகச் சிறுக, ஆரம்பத்தில் முற்றிலும் அறிய முடியாதவாறு, அது காட்டு வீட்டைத் திரும்பவும் கட்டுகிறது. ஆஸ்ப் மரங்கள் உயர உயர நெருக்கமாக வளர்கின்றன, ஆரம்பத்தில் லேசாகவும், அழுத்தமில்லாமலும் இருந்த அதன் அடிமரங்களின் நிழல்கள் அடர்த்தியாகவும், இருளாகவும் மாறுகின்றன. ஃபிர்களோடு நடந்த போரில் ஆஸ்ப் மரங்கள் வென்றன, ஆனால் அவைகளின் வெற்றியிலேயே அவைகளின் சாவையும் அமைத்துக் கொண்டன.

ஒரு மனிதன் தனது சொந்த நிழலால் ஒருபோதும் கொல்லப் பட்டதில்லை. மேலும் இது ஒரு மரத்தின் வாழ்விலும் ஏற்படுகிறது. ஆஸ்ப் மரங்களின் கிளைகளுக்குக் கீழே இளம் ஃபிர்கள் சிறியதாக வும், சுருங்கிப் போயுமிருந்தன. உரிய காலத்தில் இந்த நுண்ணிய எதிரிகள் திரும்பவும் வாழ்க்கை பெறுகின்றன. கீழே விழுந்த ஆஸ்ப் மரங்களின் இலைகள் கனத்த போர்வை போல தரையை வெது வெதுப்பாக வைத்திருந்தன. விரைவிலேயே அது சிறிய ஃபிர்களால் மூடப்பட்டது. இருபது ஆண்டுகளில் ஃபிர்களினுடைய உச்சிகள் ஆஸ்ப் மரங்களின் உச்சிகளை எட்டின. இப்போது காடு, காற்றும் வெளிச்ச மும் கலந்ததாக இருந்தது. ஆஸ்ப் மரங்களின் இளம் பச்சையானது, ஃபிர்களின் கரும் பச்சையான உச்சிகளோடு காணப்பட்டன. ஃபிர்கள் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருந்தன. உரிய காலத்தில் அவை களது கரும்பச்சை ஊசிகள் ஆஸ்ப் மரங்களுக்கு மேலாக நிழலை ஏற்படுத்தின.

ஆஸ்ப் மரங்களுக்கு முடிவு வந்து சேர்ந்தது. ஃபிர்களின் நிழலில் அவை வாடத் தொடங்கின. இப்போது ஃபிர் மரங்கள் காட்டின் ஆட்சியாளர்களாகி விட்டனர். அவை தங்களுடைய முன்னாளைய வலிமையை திரும்பப் பெற்றிருந்தன.

மனிதனும் அவனது கோடரியும் அவைகளது வாழ்க்கையோடு தலையிடுகின்ற போது, இது போலத்தான் காடுகள் ஒன்று மற்றொன் றோடு போர் தொடுக்கின்றன.



ஆனால் பனியுகத்தின் குளிர் அவைகளின் வாழ்க்கையோடு குறுக் கிட்ட போது, காடுகளின் போர் மிகவும் கடுமையானதாக இருந்தது.

வெப்பத்தை விரும்பக் கூடிய மரங்களை அந்தக் குளிர் கொன்று போட்டு, வட பகுதிக் காடுகளுக்கு வழி விட்டது. பைன்கள், ஃபிர்கள் மற்றும் பிர்ச் மரங்கள், ஓக்குகள் மற்றும் எலுமிச்சை இனங்களுக்கு எதிராகப் போர் அறிவித்தன; ஓக்குகளும், எலுமிச்சை இனங்களும் பின்வாங்க வேண்டியதாகி விட்டது, இவ்வாறு செய்கின்ற போது பசுமைமாறா தாவரங்களான புன்னை வகை மரங்கள், தழை-மலர் கொண்ட தாவர இனங்கள் மற்றும் அத்தி மரங்களை யும் நெருக்கமில்லாதபடி செய்துவிட்டன.

அண்டி வாழும் வெப்பத்தை விரும்புகின்ற மரங்கள் பாதுகாப்பற்ற இடங்களில் காற்றுக்கும், குளிருக்கும் இலக்காகி உயிர் பிழைக்க முடியாமல், வெற்றியாளர்களுக்கு வழிவிட்டபடி மடிந்து போயின.

அவை பாதுகாப்பைக் கண்ட ஒரே இடம் மலைகள்தாம். அங்கே, ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட பள்ளத்தாக்கிலும், வெப்பத்தை விரும்பும் மரங்கள் ஒளிந்து கொண்டன. ஆனால் பின்னர் மற்ற பனிக்கட்டிப் பாளங்கள் மலையின் உச்சிகளினின்றும் கீழே நகர்ந்த போது, அவை களோடு முன்நின்ற மலை தூந்திரா, மலை ஃபிர்கள் மற்றும் பிர்ச் மரங்களைக் கொண்டு வந்தன.

காடுகளினுடைய இந்தப் போர் பல்லாயிரக் கணக்கான ஆண்டு களுக்கு நீடித்தது. தோற்றுப் போன ராணுவத்தின் கடைசி வகை யான வெப்பத்தை விரும்பும் மரங்கள் தெற்கு நோக்கி மேன் மேலும் பின்வாங்கிச் சென்றன.

ஆனால் ஊடுருவல் காரர்களை எதிர்த்து நடத்திவந்த தங்களுடைய போரில் காடுகள் அழிந்த போது, அக்காடுகளில் வாழ்ந்த விலங்குகள் என்னவாயின?

தற்காலத்தில் ஒரு காடு நெருப்பால் அழிக்கப்படும் போதோ, வெட்டி வீழ்த்தப்படும் போதோ, அதனோடு அதில் வசிக்கக் கூடிய உயிரினங்களும் அழிந்து போகின்றன, அதே வேளை மற்றவை எப் படியோ தப்பித்துக் கொள்கின்றன. ஒரு ஃபிர் காடு வெட்டப்படு கின்ற போது, அதனுடைய தல மக்கள் தொகையினரான—கிராஸ் பில் பறவை, கிங்லெட் பறவை மற்றும் பிற காணாமற் போய் விடு கின்றன.

நிழலுள்ள ஃபிர் காட்டில் தங்களுடைய பழைய வீடுகளில் ஒரு புதிய ஆஸ்ப் காடு உண்டாகிறது. இப்புதிய வீட்டிற்கு மற்ற பறவை களும், மற்ற விலங்குகளும் இடம் பெயர்கின்றன.

அநேக ஆண்டுகளுக்குப் பிறகு, ஃபிர்கள் திரும்பவும் ஆஸ்ப் மரங்களை வெல்கின்ற போது, ஃபிர் காடு காலியாக இருப்பதில்லை. அதில் கிராஸ்பில்கள், கிங்லெட்கள் மற்றும் அவைகளின் நண்பர் களால் நிரம்புகின்றது.

ஒரு காடு அழிவதும், மீண்டும் உருவாவதும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உதிரித் தொகுப்பல்ல, அவை ஒருங்கிணைந்த நெருக்க மாக முடியப்பட்ட உலகம் போன்றவை.

இதுதான் பனியுகத்திலும் கூட நடைபெற்றது. வெப்ப மண்டலக் காடுகள் மறைந்தபோது, விலங்குத் தொகுதியும் கூடவே மறைந்து போயின. ராட்சச யானைகள் மறைந்து போயின, காண்டாமிருகங் கள் மற்றும் நீர்யானைகள் தெற்கு நோக்கிச் சென்றன, மேலும் வர லாற்றுக்கு முந்திய கால மனிதனுடைய கொடிய எதிரியாகிய வாள் பற்களைக் கொண்ட புலி, இறுதியில் இறந்தே போயிற்று.

ஒரு பெரும் எண்ணிக்கையான சிறிய விலங்குகளும் பறவைகளும் செத்து மடிந்தன, அல்லது தெற்கு நோக்கி பறந்து விட்டன.

இதைத் தவிர வேறு மாதிரியாக இருந்திருக்க முடியாது. ஒவ் வொரு விலங்கும் தன்னுடைய சிறிய உலகத்தோடு, அதனுடைய காட்டோடு கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் காட்டு உலகமானது அழி

வுற்ற போது, அதனுடைய குடியிருப்பாளர்களில் பலரை அழித்து விட்டது.

மரங்களும், புதர்களும் மற்றும் உயர்ந்த புட்களும் வாடியபோது, அவைகளுக்குப் பின்னே ஒளிந்து கொண்டு, அவைகளால் ஊட்டம் பெற்ற விலங்குகள் உணவும், உறைவிடமும் இல்லாது போயின. ஆனால் இத்தகைய அமைதியான புல் உண்பவைகள் இறந்தபோது, இவைகளை உண்ணும் வழக்கத்தைக் கொண்ட புலால் உண்ணும் கொடிய விலங்குகளும் கூட பட்டினியால் இறந்தன.

தங்களது காடு செத்து மடிகின்ற போது, 'உணவூட்ட வட்டச் சுழல்களால்' அதனோடு தொடர்பு கொண்ட அனைத்து விலங்குகளும் தாவரங்களும் இறந்தன.

முன்னைக் காலங்களில் துடுப்பு வலிக்கும் படி தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள், கப்பலோடு மூழ்கிப் போனார்கள், ஏனெனில் அவர்கள் துடுப்புகளோடு பிணைக்கப் பட்டிருந்தார்கள்.

எந்த வகையிலும் பிழைக்க வேண்டி, ஒரு விலங்கு தன்னுடைய தளைகளை உடைக்க வேண்டியிருந்தது: தான் வழக்கமாக உண்ணுகின்ற உணவுவகையினை விடுத்து மாறுபட்ட உணவை உண்பதற்குத் தொடங்கவும், அதனுடைய வளை நகங்களையும் பற்களையும் மாற்றிக் கொள்ளவும், குளிரிலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்காக நீண்ட முடியையோ, மென் மயிரையோ வளர்த்துக்கொள்ளவும் வேண்டியிருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், விலங்கு தானே மாறிக்கொள்ள வேண்டியிருந்தது.

ஒரு விலங்கு மாற வேண்டும் என்பது எவ்வளவு சிரமமானது என்பதை நாம் அறிவோம். குளம்பு வடிவில் ஒரே ஒரு கால்விரல் கொண்டதாக நாம் அறியும் விலங்காக மாற ஒரு குதிரைக்கு எத்தனை மில்லியன் ஆண்டுகள் பிடித்தன என்ற வரலாற்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தென்பகுதி விலங்குகளுக்கு வடபகுதி காட்டில் தப்பிப் பிழைப்பது மிகவும் கஷ்டமானதாக இருந்தது.

இவை போதாது என்பது போல வடபகுதிக் காடுகளின் மயிரடர்ந்த குடியிருப்பவைகள் அவைகளோடு தெற்கு நோக்கி வந்தன: இவை மயிரடர்ந்த காண்டாமிருகம், கம்பளியானை, குகைச் சிம்மம், குகைக் கரடி போன்றவை, வடபகுதி காட்டில் இவையனைத்தும் வசதியாக இருந்தன.

அவைகளுடைய அடர்ந்த, மயிரடர்ந்த தோல்களே அவைகளது மிகப் பெரிய கருவூலமாக இருந்தன. கம்பளியானையும், மயிரடர்ந்த காண்டாமிருகங்களும் குளிருக்கு அஞ்சவில்லை. தென்பகுதியில் இருந்த யானை, காண்டாமிருகம் மற்றும் நீர்யானை இவைகளுக்குப் போன்ற வெறும் தோல் மட்டும் இல்லாது, வெதுவெதுப்பான மயிரடர்ந்த தோல்களைப் பெற்றிருந்தன.

வடபகுதிய விலங்குகளில் சில குளிரிலிருந்து தப்பிப்பதற்கு வித்தியாசமான வழியைக் கண்டு கொண்டன: குகைகளில் அவை ஒளிந்து கொண்டன.

வடபகுதி விலங்குகள் புதிய காட்டில் உணவுக்காக இரந்து

திரிய வேண்டி நேரிடவில்லை, ஏனெனில் இந்தக் காடு அவைகளுடையது, அவைகளுடைய உலகம்.

தோற்கடிக்கப்பட்ட காடுகளைச் சேர்ந்த விலங்குகள் இப்போது, வடபகுதிக் காட்டின் புதிய ஆட்சியாளர்களோடு போருக்கு இறங்க வேண்டியிருந்தது.

இப்போது, அவைகளில் சில தப்பிப் பிழைத்ததில் நாம் வியப்புறுகிறோமா?

ஆனால் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் குறித்து என்னவாயிற்று? அவனுக்கு என்ன நேர்ந்தது?

தப்பிப் பிழைத்தவர்களில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதனும் ஒருவன் என்பது வெளிப்படையானது, அவனும் அழிந்து போயிருப்பானேயாகில், நாம் இந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்க முடியாது.

தாங்கள் வாழ்ந்த பகுதியில் தட்பவெப்பமானது குளிராக மாறினாலுங் கூட, வெதுவெதுப்பான நாடுகளில் வாழ்ந்த மக்கள் உயிர் பிழைப்பதற்காக குளிரை எதிர்த்துப் போரிட வேண்டி நேரவில்லை.

முன்னோக்கி வந்த சறுக்குப் பனிக்கட்டிப் பாளங்களால் பேரச்சத்தை அநுபவித்த அந்த மனித உயிர்களின் நிலை மிகவும் மோசமானதாக இருந்தன.

ஒவ்வோர் ஆண்டும் அவர்கள் புதிய பனிக்காலம் வருவதைக் கண்டார்கள். அது மிகவும் அஞ்சத்தக்கதாக இருந்தது. அவர்கள் நடுநடுங்கி உறைந்து போனார்கள். தங்களையும் தங்களுடைய இளம் வாரிசுகளையும் வெதுவெதுப்பாக வைத்துக் கொள்ள வேண்டி குவியல் போல நெருங்கிக் கிடந்தார்கள்.

பசி, கொடிய பனி மற்றும் கொடிய விலங்குகள் அவர்களை முற்றாகக் கொன்றொழிப்பது போல அச்சுறுத்தின.

முன்னாளைய இந்த மனிதர்கள் தங்களைச் சுற்றிலும் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருப்பார்களேயானால், உலகத்திற்கு முடிவு வந்துவிட்டது என்றே பெரும்பாலும் முடிவு செய்திருக்கக் கூடும்.

உலகத்தின் முடிவு

உலகத்தினுடைய முடிவு அநேக முறைகள் குறி கூறப்பட்டன.

மத்திய காலத்தில், வானத்தின் குறுக்காக வால்மீன் ஒன்று பளிச்சிட்டபோது, நெருப்புப் போன்ற அதனுடைய வால்ப் பகுதியைக் கண்டு, மக்கள் குறுக்கும் நெடுக்குமாக வந்தபடி கூறுவார்கள்:

''உலகத்தினுடைய முடிவு நெருங்கி விட்டது.''

'கறுப்புச் சாவு' என்று பெயர் பெற்ற பிளேக் நோய் நகரங்களிலும் கிராமங்களிலும் மக்களைக் கொன்று கல்லறைகளை நிரப்புகின்ற போது மக்கள் இவ்வாறு கூறுவார்கள்:

''உலகத்தினுடைய முடிவு நெருங்கி விட்டது.''

போர் மற்றும் பசி போன்ற கஷ்டமான காலங்களில் மூடநம்பிக்கை கொண்ட மக்கள் அச்சத்தால் இவ்வாறு முணுமுணுப்பார்கள்:

''உலகத்தினுடைய முடிவு நெருங்கி விட்டது.''

ஆனால் இதற்கேற்ப உலகத்திற்கு முடிவு ஏதும் வந்து விடவில்லை.

வானத்திலே தெரிகின்ற வால்மீனின் தோற்றம் இயற்கையை மீறிய ஓர் அடையாளமில்லை என்பது இப்போது நமக்குத் தெரியும். வால்மீனானது சூரியனைச் சுற்றிச் செல்லும் தனது போக்கில் சென்று கொண்டிருக்கிறது. அது இப்படித்தான் இருக்க வேண்டும் என மூடநம்பிக்கை கொண்ட மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி அது கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை.

பசி, தொத்து நோய்கள், மற்றும் போர்கள் இவைகளால் உலகத்திற்கு முடிவு வந்துவிட்டது என்பது பொருளாகாது என்பதையும் நாம் அறிவோம். பேரிடருக்கான காரணத்தை அறிவதுதான் முக்கியமானதாகும். நமக்குக் காரணம் தெரிந்தால், அந்தத் தீங்கை இலகுவாக நம்மால் வெற்றி கொள்ள முடியும்.

இருப்பினும், அறியாமையும் முட்டாள்தனமும் கொண்ட மக்கள் மட்டும் உலகத்தின் முடிவைப் பற்றி குறி கூறுவதில்லை. உலகத்தினுடைய மனித இனத்தினுடைய முடிவைப் பற்றி இத்தகைய குறி கூறக் கூடிய விஞ்ஞானிகளும் இருக்கவே செய்கிறார்கள். எரிபொருள் பற்றாக்குறையால் மனித இனம் மேல் நிகழ்வாக அழியப் போகிறது என்று அவர்களில் சிலர் கூறுகிறார்கள். நிலக்கரி படிவுகள் படிப்படியாகச் சுருங்கிக் கொண்டு வருகிறது, காடுகள் அருகிக் கொண்டு வருகின்றன, அடுத்த சில நூற்றாண்டுகளில் போதுமான எண்ணெய் கிடைக்காமல் போகப் போகிறது என்பன போன்றவற்றைக் கூறிக் கொண்டு இதை நிரூபிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். பூமியில் எரிபொருளே இல்லாமல் போகும் போது, தொழிற்சாலைகளில் உள்ள எந்திரங்கள் எல்லாம் இயங்காது நின்று விடும், ரயில்கள் ஓடுவதை நிறுத்திக் கொள்ளும், தெருக்களிலும் வீடுகளிலும் இருக்கக் கூடிய வெளிச்சமெல்லாம் இல்லாமற் போகும். பெரும்பாலான மக்கள் குளிராலும் பசியாலும் மடிவார்கள், தப்பிப் பிழைப்பவர்கள் கூட திரும்பவும் கொடிய காட்டுமிராண்டி போலாவார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இது நிச்சயமாக பயங்கரமான எதிர்காலந்தான்!

ஆனால் உண்மையில் இப்படித்தான் விஷயங்கள் இருக்கப் போகின்றனவா?

பூமியிலுள்ள எரிபொருள் இருப்பு அபரீதமானது. பல புதிய எண்ணெய் மற்றும் நிலக்கரி வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன, இனிமேலும் கண்டுபிடிக்கப்பட விருக்கின்றன.

காடுகள் வெட்டப்படுவன மட்டுமல்ல, ஒவ்வோர் ஆண்டும் புதியவைகள் நடப்படுகின்றன.

ஆனால் எரிபொருள் இருப்பு ஒரு நாள் முடிந்து போனாலும் அது உண்மையிலேயே நாமறிந்த உலகத்திற்கு ஒரு முடிவை ஏற்படுத்து மா?

இல்லை, ஏற்படுத்தாது.

பூமியில் வெளிச்சத்திற்கும் சக்திக்கும் எரிபொருள் மட்டுமே ஒரே ஆதாரமில்லை. தலையாய ஆதாரசக்தியாக இருப்பது சூரியன்தான். நமது எரிபொருள் இருப்பு இல்லாமற் போகின்ற நேரத்தில், நமது விஞ்ஞானிகள் சூரிய சக்தியினால் இரவில் தெரு விளக்குகளையும்

வீட்டு விளக்குகளையும் ஏற்றவும், ரயில்களையும் எந்திரங்களையும் ஓட்டவும், நமது சமையலைச் செய்வதையும் எப்படி என்பனவற்றைக் கற்றுக் கொண்டிருப்பார்கள் என்பது குறித்து நாம் கணப் பொழுதும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. சோதனை முறையிலான முதல் சூரிய சக்தி நிலையங்களும், முதல் சூரிய சக்தி அடுப்புகளும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளன.

''இப்போது, ஒரு நிமிஷம் பொறுங்கள்,'' என உலகத்தைப் புதைப்பதற்கு விரைந்து கொண்டிருக்கும் மக்கள் கூறுகிறார்கள். ''மொத்தத்தில், மேல் நிகழ்வாக சூரியனும் குளிர்ச்சியாகிப் போகும். புதிய சில நட்சத்திரங்களைப் போல சூரியன் அத்துணை வெப்பமாகவும், பிரகாசமாகவும் இல்லை. பல்லாயிரக் கணக்கான மில்லியன் ஆண்டுகள் கடக்கும், சூரியனுடைய வெப்பநிலையானது குறைந்து, பூமி மிகவும் குளிருடையதாகும்.

''பெரிய பனிக்கட்டிச் சறுக்குகள் பூமிக்கு மேலாக உள்ள மனிதனுடைய அறிவுத்திறம் குறைந்த அமைப்புக்களை துடைத்து விடும். துருவக் கரடிகள் வெப்பமண்டலங்களில் சுற்றித் திரியும். மக்கள் ஒரு போதும் உயிர் வாழ மாட்டார்கள்.''

ஒரு புதிய பனியுகம் தொடங்கினால் ஒரு வகையில் வாழ்க்கை இரக்கமற்றதாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் இத்தகைய பனிக்கு இடையேதான் தப்பிப் பிழைக்க முயன்றான். எதிர்கால மனிதன் பனியால் இறந்து போவான் (இன்றையக் காட்டிலும் விஞ்ஞானம் மிகவும் வளர்ச்சியுற்றதாக இருக்கப் போகையில்) எனக் கண நேரம் நாம் ஏன் சிந்திக்க வேண்டும்?

அந்தக் குளிரைச் சமாளிப்பதற்கு அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை நம்மால் குறிகூற முடியும். சூரியனுடைய சக்தியோடு இணை சேர்ப்பதற்கு அவர்கள் அணுசக்தியையும் பயன்படுத்துவார்கள்.

ஒரு பொருளினுடைய உள்ளணுவில் அது அடங்கி இருப்பதால், அணுசக்தியினுடைய அளவுக்கு ஒருபோதும் முடிவே இருக்கப் போவதில்லை. அதைப் பாதுகாப்பாக வெளிக் கொணர்வது மட்டுமே ஒரே ஒரு பிரச்சினையாகும்.

இருப்பினும், வரலாற்றுக்கு முந்திய கால மனிதனை விட்டு நெடுந் தூரம் வந்த பிறகு, திரும்பவும் கடந்த காலத்திற்கு வந்திருக்கிறோம்.

புதிய உலகின் தொடக்கம்

தனது சொந்தக் காட்டோடு இருந்த தளைகளை மனிதன் உடைத்தெறியாமல் இருந்திருப்பானேயானால், காட்டு உலகத்தின் சாவு, இவனுக்கும் முடிவாக இருந்திருக்கும்.

ஆனால் உலகம் முடிந்து போகவில்லை, அது மாறிக் கொண்டு மட்டுமே இருந்தது. பழைய உலகமானது முடிவுக்கு வந்து, புதிய ஒன்று தொடங்கியது.

இந்தப் புதிய, மாறிய உலகில் தப்பிப் பிழைப்பதற்காக மனிதன் மாற வேண்டி இருந்தது. அவன் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்ட உணவு மறைந்தது; புதிய, மாறுபாடான உணவைத் தேடுவதற்கு

அவன் கற்க வேண்டி இருந்தது. பைன் மற்றும் ஃபிர் கூம்புகள் அவனது பற்களுக்குக் கடுமையானவையாக இருந்தன. தென்பகுதி காடுகளின் மென்மையாதும், சாறு நிறைந்த பழங்களைப் போல எல்லாமே இருக்கவில்லை.

வெப்பமான நாட்கள் குளிராக மாறின. பூமியைப் பற்றிய எல்லாவற்றையுமே சூரியன் மறந்து விட்டது போலக் காணப்பட்டது. அதனுடைய வெப்பமான, பிரகாசமான ஒளியில்லாமல் வாழ மக்கள் கற்றுக் கொள்ள வேண்டி இருந்தது.

எவ்வளவு விரைவாக முடியுமோ அந்த அளவுக்கு அவர்கள் மாற வேண்டி இருந்தது!

எல்லா உயிரினங்களிலும், வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் மட்டுமே விரைந்த மாற்றத்திற்குத் தகுதியுடையவனாக இருந்தான்.

இந்நேரத்தில் வேறு எந்த விலங்காலும் முடியாத அளவுக்குத் தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவன் கற்றுக் கொண்டிருந்தான்.

மனிதனது மிகப் பெரிய எதிரியாகிய வாள் பற்களைக் கொண்ட புலி, திடீரென்று நீளமான ரோமம் பெற்று வளர முடியவில்லை, ஆனால் மனிதனுக்கு முடிந்தது. இதைச் செய்வதற்கு அவன் ஒரு கரடியைக் கொன்று, தோலை அணிந்து கொள்ள வேண்டியது மட்டுமே இருந்தது.

வாள் பற்களைக் கொண்ட புலியால் நெருப்பை உண்டாக்க முடியவில்லை, ஆனால் மனிதனால் முடிந்தது, ஏனெனில் நெருப்பின் பயனை ஏற்கெனவே அவன் அறிந்திருந்தான்.

தன்னையும், ஓரளவுக்கு இயற்கையையும் மாற்றக் கூடிய அளவுக்கு முன்னோக்கி வளர்ந்திருந்தான் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன்.

அதிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகள் கடந்திருந்தாலுங் கூட, இயற்கையில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் என்ன மாற்றங்களை ஏற்படுத்தினான், அவன் தன்னைத்தானே எவ்வாறு மாற்றிக் கொண்டான் என்பதையும் நாம் இன்னமும் கூடக் காண முடியும்.

கற் பக்கங்களாலான புத்தகம்

காலுக்கடியில் பூமி ஒரு வியப்பார்வத்திற்கு உரிய புத்தகமாகக் கிடக்கிறது.

பூமியின் ஒவ்வொரு அடுக்கும், படுகைகளின் ஒவ்வொரு அடுக்கும் இந்தப் புத்தகத்தின் ஒரு பக்கமாகும்.

இந்தப் பக்கங்களுக்கு மேலாக, கடைசி ஒன்றில் நாம் வசிக்கிறோம். முதலாவது வரும் பக்கங்கள் பெருங்கடல்களுக்கு அடியில், பெருங்கடல் தரையின் ஆழத்தில், கண்டங்களின் அடித்தளங்களுக்குக் கீழே இருக்கின்றன.

இந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயங்களைத் தற்கால மனிதன் இன்னமும் அடையவில்லை. அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் இன்னமும் யூகிக்கத்தான் முடிகிறது.

ஆனால் மேற்புறத்தில் பக்கங்கள் அமைந்திருப்பது, புத்தகத்தைப் படிப்பது நமக்கு எளிமையாக இருக்கிறது.

சில பக்கங்கள், லாவாவின் வெப்பமான நீரோடைகளால் கருகியும்

சிதைந்தும் போய்விட்டன. பூமியின் மேற்புறத்தின் மீது மலைச் சங்கிலிகள் எவ்வாறு வளையமிட்டிருக்கிறது என்பதை அவை நமக்குக் கூறுகின்றன. மற்ற பக்கங்கள் பூமியின் மேலடுக்கு உயர்ந்து விழுந்ததும் கரைகளை விட்டுப் பெருங் கடல்களைத் தள்ளியதும், பிறகு திரும்பவும் பின்னுக்குத் திரும்பியதையும் கூறுகிறது.

உண்மையில் அவை கடற்சங்குகளால் ஆனது போல, அந்தப் பக்க அடுக்குகள் வெள்ளையாகவும் இருக்கின்றன. நிலக்கரி போல கறுப்பாக உள்ள பக்கங்களும் உண்டு.

அவை உண்மையில் நிலக்கரியால் செய்யப்பட்டவை. அதனது கறுப்புத் திரள் பூமியில் ஒரு காலத்தில் வளர்ந்த பெருங்காடுகளின் கதையை நமக்குக் கூறுகிறது.

இங்குமங்கும், ஒரு புத்தகத்தில் உள்ள படத்தைப் போல, அடர்த்தியாக வசித்து பின்னர் நிலக்கரியாகிய இலை அல்லது ஒரு விலங்கின் கூடு இவற்றின் பதிவை நாம் காண்கிறோம்.

இவ்வாறாக, ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் செல்கின்ற போது, பூமியினுடைய வரலாற்றை நாம் படிக்க முடிகிறது. மேலும் மிகவும் கடைசிப் பக்கங்களில் மட்டுமே, புத்தகத்தின் மிக உச்சியில், இறுதியாக நாம் புதிய கதாநாயகனுக்கு—மனிதனுக்கு வருகிறோம். ஆரம்பத்தில், இந்தப் பெரிய புத்தகத்தில் அவன் ஒரு முக்கியப் பாத்திரமல்ல என்று ஒருவர் நினைக்கக் கூடும். ஏனெனில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ராட்சச யானை அல்லது காண்டா மிருகத்திற்குப் பக்கத்தில் அவன் மிகவும் நுண்ணியதாகவே காணப்பட்டான். ஆனால் நாம் படித்துச் செல்கின்றபோது, புதிய கதாநாயகன் துணிவு பெற்று, முதல் இடத்திற்கு முன்னேறுவதை நாம் பார்க்கத் தொடங்குகிறோம்.

இந்தப் பெரிய புத்தகத்தினுடைய முக்கிய கதாபாத்திரமாக மட்டும் மனிதன் மாறிவிடாமல், அதனுடைய ஆசிரியர்களில் ஒருவராகவும் ஆகும் காலம் வருகிறது.

இங்கே, ஒரு நதியின் மேல்த்தளத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தில், பனியுகத்தின் சேமிப்புகளுக்கிடையே, நன்கு தெளிவாக வரையப்பட்ட கறுப்புக் கோட்டை நாம் காண்கிறோம்.

இந்தக் கறுப்புக் கோடானது கட்டைக்கரியால் இடப்பட்டது. இப்பொழுது திடீரென்று கட்டைக்கரியின் அடுக்கு மணல் மற்றும் களிக்கு இடையில் எங்ஙனம் தோன்ற முடியும்? ஒரு வேளை அது காட்டுத் தீயாகவும் இருக்கக் கூடும்?

ஆனால் காட்டுத் தீ பெரிய பரப்புக்கு எரிந்த கட்டையை விட்டுச் செல்கிறது. அதே வேளை இந்தக் கட்டைக் கரியின் கோடு மிகச் சிறியதாகவே இருக்கிறது. கூடாரங்களில் ஏற்றப்பட்ட தீ தான் இத்தகு சிறிய கட்டைக்கரி அடுக்கை விட்டுச் சென்றிருக்க முடியும்.

மேலும் மனிதன் மட்டுமே ஒரு கூடாரத்து தீயை உண்டுபண்ணியிருக்க முடியும்.

மேலும், தீக்குப் பக்கத்தில் மனிதக் கைகள் வேலை செய்த பிற சுவடுகளை நாம் கண்டுபிடிக்கிறோம்: சிக்கிமுக்கிக் கற்கருவிகள்,

மற்றும் வேட்டையில் கொல்லப்பட்ட விலங்குகளின் முறிந்த எலும்பு கள்.

தீயும் வேட்டையாடுதலுமே, பனியுகம் வந்து நுழைந்த போது வரலாற்றுக்கு முந்திய கால மனிதனைக் காப்பாற்றிய இரு விஷயங் களாகும்.

காடுகளினின்றும் மனிதன் நீங்குதல்

கரடுமுரடான வடபகுதிக் காடுகளில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்கு எந்த உணவும் அரிதாகவே இருந்தது. ஆகையால் அவன் காடுகளின் வழியாக இரையைத் தேடி அலையத் தொடங் கினான். யாராவது வந்து கொத்திக் கொண்டு போகட்டும் எனக் காத்துக் கொண்டு இரை ஓரிடத்திலே இருக்காதாகையால், ஓடி ஒளிந்து, திரும்பிச் சண்டையிடும்.

வெப்ப நாடுகளில் கூட மனிதன் தனது உணவோடு அடிக்கடி புலாலைச் சேர்க்கத் தொடங்கினான்.

புலால் வயிற்றை நிரப்புவதாக இருந்தது, புலால் அவனுக்கு அதிக வலிவைக் கொடுத்து, வேலை செய்ய அதிகமான நேரத்தையும் தந்தது. மனிதனுடைய வளர்ந்துவந்த மூளை மிகவும் ஊட்டமுள்ள உணவைத் தேடியது.

வளர்ச்சியுற்ற மனிதனுடைய கருவிகள், அவனுக்கு வேட்டையாடு தலுக்கு முக்கியக் கருவிகளாயின.

வேட்டையாடுதல் இன்றி வடக்கே உயிர் பிழைப்பது என்பது முடியாததாகும்.

சிறிய விலங்குகளான சுண்டெலிகளால் தனது பசியை மனிதன் நிறைவு செய்ய முடியாதவனாக இருந்தான். பெரிய இரையை அவன் விரும்பினான். ஆழமான பனிச் சறுக்கல்கள், பனிப் புயல்கள், மற்றும் உறைபனி ஆகியன வடபகுதிக் காடுகளில் வேட்டையாடுதலைக் கஷ்டமாக்கியது. இதன் பொருள் மனிதன் புலாலைச் சேகரித்து வைக்க வேண்டி இருந்தது என்பதாகும்.

எந்த மாதிரியான விலங்குகளை வரலாற்றுக் காலத்துக்கு முந்திய மனிதன் வேட்டையாடினான்?

அப்போது காடுகளில் இருந்தவை அநேக பெரிய விலங்குகள் தான். மான்கள் அடைசல் அற்ற பகுதியில் புல் மேய்ந்தன. காட்டுப் பன்றிகள் காட்டில் தரையைத் தோண்டின. ஆனால் சமவெளிகளில் ஏராளமான பெரிய விலங்குகள் இருந்தன. மயிரடர்ந்த காட்டுக் குதிரைக் கூட்டங்கள் பெரிய விரிந்த சமவெளிகளில் புல் மேய்ந்தன. முதுகில் கூன் விழுந்த காட்டெருதுக் கூட்டங்கள் இடிமுழக்கம் போல அதிக வேகத்தில், பூமி நடுங்கும் படி ஓடின. நீண்ட மயிர் கொண்ட ராட்சசக் கம்பளியானைகள் நகரும் மலைகள் போல நிலம் நடுங்குமாறு சென்றன.

வரலாற்றுக்கு முந்திய கால மனிதனைப் பொருத்த மட்டில், எல் லாமே நகர்ந்து கொண்டும், தப்பித்துக் கொண்டும் சென்ற இரை யைப் பின் தொடர வேண்டும் என வேட்கையுற்றதுதான்.

ஆகவே, இந்த இரை தேடும் வேட்டையில், தனது சொந்தக் காடுகளை விட்டு வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் புறப்பட்டான்.

மனிதர்களின் சிறிய கூட்டங்கள் சமவெளிகளுக்குள்ளாக மேலே மேலே துணிந்து சென்றன. மனிதன்-திரட்டுபவன் ஒருபோதும் வாழ்ந்திராத, முன்னர் ஒருபோதும் வாழ்ந்திருக்க முடியாத இடங்களில், காடுகளுக்கு அப்பால் தொலைவில் அவர்களுடைய முகாமில் தீ வளர்த்தது, வேட்டையாடிய இடங்கள் ஆகியவற்றின் சுவடுகளை நாம் காண்கிறோம்.

வார்த்தையைத் திருத்தமாகப் பயிலக் கற்க வேண்டும்

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் முகாமிட்டிருந்த இடங்களில் வேட்டையின் போது கொல்லப்பட்ட விலங்குகளின் எலும்புகளைக் காண முடியும். அவைகளில் குதிரைகளின் மஞ்சள் நிறமான விலாவெலும்புகள், எருதுகளின் கொம்புள்ள மண்டையோடுகள், காட்டுப் பன்றிகளின் கூரிய பற்கள் உள்ளன. சில வேளைகளில் எலும்புத் தொகுதிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அதன் பொருள் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே மனிதன் நீண்ட காலத்திற்குத் தங்கியிருந்திருக்கிறான் என்பதுவேயாகும்.

காட்டெருது, காட்டுப் பன்றி மற்றும் குதிரைகளின் எலும்புகளுக்கு இடையே சில வேளைகளில் விஞ்ஞானிகள் கம்பளியானைகளின் ராட்சச எலும்புகளைக் காண்பது மிகவும் ஆர்வமூட்டக் கூடியதாக இருக்கிறது: மிகப் பெரிய மண்டையோடுகள், நீண்ட, வளைந்த தந்தங்கள், அரத்தைப் போன்ற பற்கள் மற்றும் மிகப் பெரிய கால்களும் சிதறியபடி காணப்படுகின்றன.

இத்தகைய ஒரு ராட்சச விலங்கைக் கொல்வதற்கு நிச்சயமாக பெரும் வலிமையும் துணிவும் தேவைப்பட்டிருக்கும்! ஆனால் அதனுடைய உடலைத் துண்டுகளாக வெட்டவும், பிறகு அவற்றை முகாமிட்டிருந்த இடத்திற்கு இழுத்துச் செல்லவும் இன்னும் அதிகமான வலிமை தேவைப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு காலும் கிட்டத்தட்ட ஒரு டன் எடை இருக்கிறது, ஒரு பெரிய மனிதன் உள்ளே சுலபமாக நிற்கக் கூடிய அளவுக்கு மண்டையோடு பெரிதாக இருக்கிறது.

யானைகளை வேட்டையாடுவதற்குரிய விஷேடத் துப்பாக்கிகளுடன் இந்நாளைய வேட்டைக்காரர்களுக்கு ஒரு கம்பளியானையைக் கொல்வது அவ்வளவு சுலபமானதாக இருக்க முடியாது. ஆனால் வரலாற்றுக்கு முந்தியகால மனிதன் துப்பாக்கி எதையும் பெற்றிருக்கவில்லை. அவனிடம் இருந்ததெல்லாம் சிக்கிமுக்கிக் கற் கத்தி அல்லது கூரிய முனையுடன் கூட பன்றி வேட்டைக்குரிய ஈட்டிதான்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளில் சிக்கிமுக்கிக் கற்கருவிகள், அருமையானவையாகவும், மிகவும் மாறுபட்டவைகளாகவும் மாற்றமடைந்தன.

இவ்வாறாகத்தான் வரலாற்றுக்கு முந்தியகால மனிதன் சிக்கிமுக்கிக் கற்கத்தி அல்லது அம்புத் தலையைத் தயாரித்தான். முதலில், ஒரு கல்லினுடைய மேலடுக்கைத் தனியாக எடுக்கும்படி அடித்தான். பிறகு அவன் புடைப்புக்களைக் கொத்தி எறிந்து விட்டு, துணுக்குகளாக உடைத்தான். இறுதியாக, இத்தகைய துணுக்குகளை, தனக்குத் தே

வைப்பட்டது போன்ற வெட்டுக் கருவிகளைச் செய்யப் பயன்படுத்தினான்.

பொருத்தமற்றதும், சமாளிக்க முடியாததுமான சிக்கிமுக்கிக் கல் போன்ற ஒரு பொருளைக் கத்தியாகச் செய்வதற்கு மிகத் திறமை தேவைப்பட்டது. இது காரணமாகத்தான் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் சிக்கிமுக்கிக் கற்கருவியைத் தான் பயன்படுத்திய பிறகு தூக்கி எறியவில்லை, ஆனால் அதைப் பெரிதும் மதித்தான், எப்பொழுதெல்லாம் அது கூர் மழுங்குகிறதோ அப்போது கூராக்கிக் கொண்டான். மனிதன் தனது கருவிகளைச் செல்வமெனப் போற்றினான் ஏனெனில் அவன் தனது உழைப்பையும் நேரத்தையும் மதித்தான்.

ஆனால் அவன் எப்படி முயன்றான் என்பது ஒரு பொருட்டல்ல, அவனது கல் இன்னமும் ஒரு கல்லாகவே இருந்து வந்திருக்கிறது. கம்பளியானை போன்ற ஒரு பெரிய விலங்கைச் சந்தித்த போது சிக்கிமுக்கி முனையோடு கூடிய அம்புத்தலை ஓர் அற்பமான ஆயுதமாகவே இருந்தது. பீரங்கிப் படை வண்டியை எஃகு காப்பது போல ஒரு கம்பளியானையினுடைய தோல் அதனைப் பாதுகாத்தது.

இருப்பினும் வரலாற்றுக்கு முந்திய மனிதன் கம்பளியானைகளைக் கொன்றான். பல்வேறு முகாமிடங்களில் கண்டெடுக்கப்பட்ட கம்பளி யானையின் மண்டையோடுகள், தந்தங்கள் ஆகியனவற்றை இதற்கு ஆதாரங்களாக நாம் கொள்கிறோம்.

புதைபடிவ மனிதன் எங்ஙனம் கம்பளியானையைக் கொன்றான்? ‘மனிதன்’ என்பது ‘மக்கள்’ என்பதைக் குறிக்கும் சொல் என்பதைப் புரிந்து கொண்டவர்களால் இதையும் புரிந்து கொள்ள முடியும். ஒரு தனிப்பட்ட மனிதனே எல்லாமாக இருந்துவிடவில்லை, ஆனால் தங்களது கைகளைக் கொண்டு, மூளைகளை ஒன்று சேர்த்து, எப்படிக் கருவிகளைத் தயாரிப்பது, வேட்டையாடுவது, தீயை உண்டாக்குவது, கூடாரங்களைக் கட்டுவது, நிலத்தை உழுவது என்பதைக் கற்றுக் கொண்டார்கள். மனிதன் மட்டுமேயல்ல, மனித சமூகமே, லட்சோபக் கணக்கானோரின் கடுமுயற்சியால், கலாசாரத்தையும் விஞ்ஞானத்தையும் உருவாக்கி இருக்கிறது.

ஒரு மனிதன் மட்டும் தனிமையில் இருந்தால் ஒரு கொடிய விலங்காகவே இருந்திருக்கக் கூடும்.

மனித சமூகத்திற்குள்ளாக வேலையானது விலங்கை மனிதனாக மாற்றியது.

இறுதியில் பெரிய முன்னேற்றத்தை அடையும் வரை பிடிவாதமாக உழைத்த ஆரம்பகால ராபின்சன் குரூஸோ போன்ற வரலாற்றுக்கு முந்திய கால வேட்டைக்காரனைச் சித்தரிக்கும் புத்தகங்கள் இருக்கின்றன.

ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் உண்மையிலேயே அவ்வாறு ஒதுக்கமாக இருந்திருந்தாலும், முதலாவது மனிதர்கள் பெரும் மக்கட்கும்பலாக இல்லாது குடும்பமாகவே வாழ்ந்திருப்பார்களே யானாலும், அவர்கள் ஒருபோதும் மக்களாக மாறியிருக்க முடியாது. ஒரு மனிதக் கலாசாரத்தை ஒருபோதும் ஏற்படுத்தி இருக்கவும் முடியாது.



மேலும் டேனியல் டிஃபோ சித்தரித்திரிப்பது போல ராபின்சன் குரூஸோவுக்கு விதி இருக்கவில்லை. ஒரு கப்பலில் கலவரத்தைத் தொடங்கி வைத்த ஒரு மாலுமியின் உண்மையான வாழ்க்கையைத் டிஃபோவினுடைய நூல் அடியொற்றி இருந்தது. பெருங்கடலுக்கு மத்தியில் தனித்த ஒரு சிறிய தீவில் சாவதற்காக அவன் விடப்பட்டான். பல ஆண்டுகளுக்குப் பிறகு கடற் பயணம் மேற்கொண்ட சில பயணிகள் அந்தத் தீவுக்கு வந்து, அந்த மனிதன் முற்றிலும் மூர்க்கமானவனாக இருப்பதைக் காண்கிறார்கள். அந்தப் பழைய மாலுமி நடைமுறையில் எப்படிப் பேசுவது என்பதை மறந்து போயிருந்தான். ஒரு மனிதன் என்பதை விட ஒரு காட்டு விலங்கு போலவே இருந்தான்.

மனிதன் தனிமையில் இருப்பதை நவீன மனிதனே நோவற்றதாகக் காண முடியாதபோது, வரலாற்றுக்கு முந்தியகால மக்களைப் பற்றி என்ன பேசப்பட்டிருக்கும்!

அவர்களை மனிதர்களாக்கிய ஒரே விஷயம் அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தார்கள், ஒன்றாக வேட்டையாடினார்கள். தங்கள் கருவிகளை ஒன்று சேர்ந்தே தயாரித்தார்கள் என்ற உண்மையேயாகும்.

மனித இனக் குழு முழுமையும், ஒரு கம்பளியானையை வேட்டையாடுவதில் பங்கெடுத்துக் கொண்டது. அதனது மயிரடர்ந்த பக்கங்களில் ஒன்றல்ல, டஜன் கணக்கான பன்றி வேட்டைக்குரிய ஈட்டிகள் வீசியெறியப்பட்டன. மனித இனக் குழுவானது பல கால்கள் கொண்ட, பல கைகள் கொண்ட ஓர் உயிரி போல அந்த விலங்கைப் பின்தொடர்ந்து சென்றது. டஜன் கணக்கான கைகள் மட்டுமல்ல, டஜன் கணக்கான தலைகளுங்கூட சேர்ந்து வேலை செய்ய வேண்டி இருந்தது.

மனிதர்களை விட பல மடங்கு பெரியதாகவும், வலிமையுள்ளதாகவும் அந்தக் கம்பளியானை இருந்தாலும், மக்களே அதிகப் புத்திசாலிகளாக இருந்தனர்.

கம்பளியானையைச் சுற்றி நின்று புதர்ச் செடிகளுக்குத் தீயிடுவார்கள். தீ நாக்குகளைக் கண்டு அந்த விலங்கு அஞ்சி நடுங்கிற்று, அதனது மயிரடர்ந்த தோல் புகைந்து அழன்றெறியத் தொடங்கும், நெருப்புப் பின்பற்ற அது ஓடத் தொடங்கும். வேட்டைக்காரர்கள் சூழ்ச்சியாகத் திட்டமிட்டபடி அது நேராகப் பள்ளத்திற்குள் செல்லுமாறு தீ அதனை வழி நடத்தியது. ஓடிச் சென்ற அது பள்ளத்தில் மாட்டிக் கொள்ளும்.

அதைக் கொல்வதற்கு வேட்டைக்காரர்கள் சுற்றி வளைத்து நிற்பார்கள்.

ஒரு கம்பளியானைக்குப் பொறி வைத்துக் கொள்வது என்பது அவ்வளவு சுலபமான செயலன்று. ஆனால் அதை முகாமிடத்திற்கு இழுத்துக் கொண்டு வருவது அதை விடக் கஷ்டமானது. பெரும்பாலும் முகாமிடம் ஒரு நதியின் வறண்ட கரையில் உயரமாக அமைந்திருந்தது. குடிப்பதற்கான நீரை ஆறு மக்களுக்குத் தந்தது. அதே வேளை ஆழமற்ற நீர் நிலைகளும், நதிக்கரைகளும் அவர்களது

கருவிகள் அனைத்திற்கும் தேவைப்பட்ட முக்கியப் பொருளாகிய சிக்கி முக்கிக் கற்களைக் கொடுத்தது.

ஆகையால், பள்ளத்திலிருந்து உயரமான நதிக்கரைக்குக் கம்பளி யானையை அவர்கள் இப்போது இழுத்து வர வேண்டி இருந்தது.

இங்கேயும், இரண்டல்ல, பல டஜன் கைகள் ஒன்று சேர வேண்டியிருந்தது. மக்கள் தங்களது கூர்மையான நுனியுடைய சிக்கி முக்கிக் கற்களை ஆழமாக வெட்டுவதற்குப் பயன்படுத்தினார்கள். கம்பளியானையின் கனத்த தோலையும், உறுதியான தசைத்தளை களையும், பெருமளவு தசைகளையும் கண்டார்கள். மிகவும் அநுபவ மிக்க முதிர்ந்த வேட்டைக்காரர்கள் மண்டையோட்டைப் பிளக்க, உடலிலிருந்து கால்களைப் பிரிக்க எங்கே வெட்ட வேண்டுமென்று இளைஞர்களுக்குக் காட்டினார்கள். இறுதியில், விலங்கின் பிணம் துண்டு போடப்பட்ட பிறகு, அவர்கள் நீண்ட முன்னோக்கிய பயணத்தைத் தொடங்கினார்கள்.

வேலை வேகமாக நடக்க வேண்டும் என்பதற்காக ஒரு மாதிரி யான பண்ணிசைத்துக் கொண்டு, பெரும் குழுக்களாகப் பிரிந்து, பெரிய மயிரடர்ந்த காலையோ, நீண்ட உடலுடன் கூடிய தலையை யோ தரையெங்கும் இழுபட அவர்கள் வீட்டிற்கு இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

மிகவும் களைப்புற்ற அவர்கள் இறுதியாக முகாமை வந்தடைந்தார் கள். அங்கு தான் எத்தனை மகிழ்ச்சி! ஒரு கம்பளியானையானது ஒரு பெரும் விருந்துக்குரியது என்பதை அவர்கள் அறிவார்கள். அதற் காகத்தான் அவர்கள் நீண்ட காலமாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கம்பளியானையானது பல நாட்களுக்குத் தேவையான உணவுக் காகச் சேமித்து வைக்கக் கூடியது என்பதை அவர்கள் அறிவார்கள்.

போட்டியின் முடிவு

மற்ற விலங்குகளுடனான மனிதனது போட்டி ஒரு முடிவுக்கு வந்தது. மிகப் பெரிய எல்லா விலங்குகளையும் வென்று விட்டு இறுதிக் கோட்டை எட்டுவதில் அவன்தான் முதலாவதாக இருந்தான்.

பூமியில் மக்களுடைய எண்ணிக்கையும் விரைவாகப் பெருகத் தொடங்கியது. ஒவ்வொரு ஆயிரமாண்டுக் காலம் கடக்கவும், ஒவ் வொரு நூற்றாண்டு கடக்கவும் பூமியில் மிகமிக அதிகமான மக் கள் தோன்றினார்கள். இறுதியில் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

மனித இனத்திற்கு என்ன நேர்ந்ததோ அது பிறந்த விலங்கு களுக்கும் ஏற்பட்டிருக்க முடியாது.

எடுத்துக்காட்டாக, முயல்களால் மக்களைப் போல பல்கி இருக்க முடியுமா?

உண்மையில் முடியாது. முயல்கள் பெருமளவிற்கு வளர்ச்சியடைந்த உடனேயே, ஓநாய்களின் எண்ணிக்கையும் பெருமளவுக்கு வளர்ச்சி யடைந்திருக்கும். அதிகமான எண்ணிக்கையில் முயல்கள் இருக்கக் கூடாது என்பதில் ஓநாய்கள் நிச்சயமாக உறுதியாக இருந்திருக்கும்.

ஆகவே, காட்டு விலங்குகளின் எண்ணிக்கையானது முடிவு இல்லா மல் வளர்ந்து கொண்டே இருக்க முடியாது. அதற்கு குறிப்பிட்ட எல்லை

உண்டு. அதைக் கடப்பது என்பது அவைகளுக்கு மிகவும் சிரமமானது.

விலங்குகளுக்கு இயற்கை வகுத்திருந்த எல்லைகளைப் போல தனக்கிருந்த எல்லா எல்லைகளையும், வரன் முறைகளையும் மனிதன் கடந்து எவ்வளவோ காலமாகிவிட்டது. கருவிகளைச் செய்ய அவன் கற்றுக் கொண்டிருந்தபோது, முன்னர் தான் ஒருபோதும் சாப்பிட்டு அறியாத உணவுகளை அவன் சாப்பிடத் தொடங்கிய போது, இயற்கை அவனிடம் அன்பாக இருக்கும் கட்டாயத்திற்கு ஆளானது. முன்னதாக ஒரு மனித இனக்குழு உணவுக்காக இரந்து நின்ற இடங்களில், விரைவிலேயே இரண்டு அல்லது மூன்று இனக்குழுக்களால் தங்கியிருக்க முடிந்தது.

அதன் பிறகு, பெரிய விலங்குகளை அவன் வேட்டையாடத் தொடங்கிய போது, எல்லைகளை அவன் இன்னும் மேலே தள்ளிச் சென்றான்.

இப்பொழுது உண்பதற்கான செடிகளைத் தேடிக் கொண்டு பகல் முழுதும் புல்வெளிகளில் செல்ல வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. காட்டெருது, குதிரைகள், கம்பளியானைகள் அவனுக்காகப் புல் மேய்ந்தன. மலையளவு புல்லை உட்கொண்டபடி இந்த நான்கு கால் விலங்குகளின் மந்தைகள் ஸ்டெப்பிகளில் சுற்றி வந்தன. நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு டன் கணக்கான புல்லை கிலோக் கணக்கான புலாலாக மாற்றிக் கொண்டபடி அவை எடை பெருத்துக் கொண்டிருந்தன. ஒரு காட்டெருதையோ ஒரு கம்பளியானையையோ மனிதன் கொன்ற போது, பல்லாண்டு காலப் போக்கில் தயாரிக்கப் பட்டிருந்த சக்தி இருப்பைக் கைவசம் பெற்றவனாக மனிதன் மாறுகிறான்.

இத்தகைய சக்தி இருப்பு அவனுக்குப் பெரிதும் தேவைப்பட்டது. ஏனெனில் புயல் அல்லது பனிப்புயல் அல்லது கடுமையான குளிர் இவற்றின் போது அவனால் வேட்டையாடப் போக முடியாது. குளிர் காலத்திலும் கோடைக் காலத்திலும் மகிழ்ச்சியான எழுச்சி மிக்க நேரம் கடந்து சென்றன.

இருப்பினும், ஒரு மாற்றம் மற்றொரு மாற்றத்தைக் கொண்டு வந்தது.

மனிதன் இருப்பு வைக்கத் தொடங்கினான் என்றால், ஒரே இடத்தில் நீண்ட காலத்திற்கு அவன் தங்கி இருக்க வேண்டி இருந்தது என்பதே பொருளாகும். முகாமைக் கலைப்பது என்பது மிகவும் கஷ்டமானது என்பதும் பொருளாகும். மேலும், ஒரு கம்பளியானையின் பிணத்தை அவனால் எடுத்துவரவும் முடியாது.

தங்கி விடுவதற்கான வேறு காரணங்களும் அவனுக்கிருந்தன. முன்னைய காலங்களில் ஒவ்வொரு மரமும் காட்டு விலங்குகளிடமிருந்து இரவில் பாதுகாக்கின்ற அவனது வீடாக இருந்திருந்தது. இப்பொழுது அத்தகைய விலங்குகளுக்கு அவ்வளவாக அவன் அஞ்சவில்லை. ஆனால் அவன் ஒரு புதிய எதிரியைப் பெற்றிருந்தான் — குளிர்.

குளிரிலிருந்தும் பனிப்புயலிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு நம்பகமான தங்குமிடத்தைத் தேட வேண்டிய அவசியம் அவனுக்கிருந்தது.

மனிதன் தனது உலகை அமைக்கிறான்

தன்னைச் சுற்றிலும் உள்ள மிகப் பெரிய குளிர் உலகத்திற்கு மத்தியில் சிறிய வெதுவெதுப்பான தனது சொந்த உலகத்தை மனிதன் கட்டத் தொடங்கிய நேரம் இறுதியாக வந்தது. எங்கோ குகையின் நுழைவாயிலிலோ, செங்குத்துப் பாறையின் அடியிலோ மழை, பனி மற்றும் காற்று இவற்றினின்றும் பாது காத்துக் கொள்வதற்காக செயற்கை வானத்தை உருவாக்கினான். அந்த வானம் தோல்களாலும், கிளைகளாலும் இருந்தன. தனது சிறிய உலகத்திற்கு மத்தியில் ஒரு சூரியனை ஏற்றிக் கொண்டான். அது இரவில் வெளிச்சத்தையும், குளிர் காலத்தில் அவனுக்கு வெதுவெதுப்பையும் தந்தது.

வரலாற்றுக்கு முந்திய கால வேட்டைக்காரர்களின் முகாமிடங்களின் சில இடங்களில் கூடாரக்கால் நடுவதற்கான குழிகள் இருந்த தடங்கள் இன்னமும் இருக்கின்றன. வட்டமான கால்களுக்கு மையத்தில் கருகிப்போன கற்கள் கிடக்கின்றன. ஒரு காலத்தில் அதுதான் வரலாற்றுக்கு முந்திய கால மனிதனுடைய செயற்கைச் சூரியனைச் சுற்றி நின்ற அடுப்படி.

அவனது கூடாரத்தின் சுவர்கள் எப்போதோ தூசியாகிப் போய் விட்டன. ஆனால் அவை ஒரு காலத்தில் எங்கு நின்றன என்பதை நாம் சரியாக அறிய முடிகிறது. அந்தச் சிறிய உலகத்திற்குள்ளான தரைப்பரப்பு முழுவதும், அதை உருவாக்கிய மனிதனது கதையை நமக்குக் கூறுகிறது.

சிக்கிமுக்கிக் கத்திகள், சிக்கிமுக்கிக் கற்களின் துணுக்குகள், பாளங்கள், முறிந்துபோன விலங்கு எலும்புகள், கட்டைக்கரி, அடுப்படியின் சாம்பல்கள் — இவை எல்லாமே மணலாலும் சகதியாலும் கலந்து, ஒரு கலவை போல ஆகியுள்ளது. இதை நாம் இயற்கையில் ஒருபோதும் காண முடியாது.

எப்போதோ மறைந்து போன கூடாரத்தின் கட்புலனாகாத சுவர்களைத் தாண்டி அப்பால் சில எட்டுகள் நாம் எடுத்து வைத்த உடனேயே, மனிதனது கடும் உழைப்பை நினைவுபடுத்தும் ஒவ்வொன்றும் மறைந்து போகின்றன. நிலத்தில் அதற்கு மேல் எந்தக் கருவியும் புதைந்திருக்கவில்லை, அடுப்படியிலிருந்த எந்தக் கட்டைக்கரியோ, சாம்பலோ இல்லை, எந்த முறிந்து போன விலங்கு எலும்புகளும் இல்லை.

இவ்வாறாக, மனிதனால் உருவாக்கப்பட்ட இயற்கையின் முற்றிலும் மாறுபட்ட வகை, தன்னைச் சுற்றிலுமிருந்த ஒவ்வொன்றிலிருந்தும் கட்புலனாகாத ஒரு கோட்டால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மனிதக் கரங்கள் வேலை செய்த சுவடுகளுக்காக நாம் பூமியைத் தோண்டுகின்ற போது, சிக்கிமுக்கி கத்திகளையும், சுரண்டு கருவிகளையும், நூறு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக குளிர்ந்து போயிருந்த அடுப்படிக் கரியையும் பிரித்தெடுத்து நாம் ஆராய்கின்ற போது, மனிதனது முதலாவது உலகத்தின் முடிவு மனித இனத்தின் முடிவு அல்ல என்பதை நாம் தெளிவாகக் காண முடிகிறது. ஏனெனில் தனக்காக ஒரு புதிய உலகத்தை உருவாக்கிக் கொள்ளக் கூடியவனாக மனிதன் இருந்தான்.

கடந்த காலத்தை நோக்கி முதற் பயணம்

காட்டெருது மற்றும் கம்பளியானை வேட்டைக்காரர்களுடைய கூடாரங்களில் காணப்பட்ட துணைக் கருவிகளின் தொகுதிகளில் மிகவும் பொதுவான இரண்டு சிக்கிமுக்கிக் கற்கருவிகள் உண்டு: ஒன்று முக்கோண வடிவத்தில், இரு புறமும் கூராக்கப்பட்டது; மற்றொன்று அரைவட்ட வடிவச் சில்லு, கூரிய முனையுடையது.

இத்தகைய ஒவ்வொரு கருவிகளுமே ஒரு குறிப்பிட்ட வேலைக்கென வெளிப்படையாகவே வடிவமைக்கப்பட்டவை. இல்லையெனில் அவை தோற்றத்தில் இவ்வளவு மாறுபட்டுக் காணப்பட வேண்டியதில்லை.

ஒவ்வொன்றும் என்ன காரியத்திற்குரியவை என்பதை நாம் எங்ஙனம் கண்டுபிடிக்க முடியும்?

இந்தக் கருவிகளின் தோற்றமே சில மறைசெய்திகளைத் தருகின்றன.

இருப்பினும், கற்காலத்திற்கு நாம் திரும்பிச் சென்று தங்களுடைய கற்கருவிகளைக் கொண்டு வரலாற்றுக்கு முந்தியகால மனிதர்கள் எங்ஙனம் வேலை செய்தார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஒரு நாவலில் இது போன்ற ஒரு வாக்கியத்தை நாம் மிகவும் அடிக்கடி காண்கிறோம்: ''பத்தாண்டுகளுக்குப் பின்னே நாம் திரும்பிச் செல்கிறோம்.'' அத்தகைய ஒரு நூலின் ஆசிரியர்க்கு அவ்வாறு செய்வது மிகவும் இலகுவாக இருக்கிறது. ஏனெனில் அவர் விரும்புவது போல அவரால் எந்நேரத்திலும் எந்த இடத்திற்கும் போக முடியும். தனது கதாபாத்திரங்களைப் பற்றி மிகவும் அற்புதமான கற்பனையைப் படைக்க முடியும்.

ஆனால் நம்முடைய மிகவும் உண்மையான கதையில் நாம் என்ன செய்ய முடியும்? இங்கு எதையும் கற்பிப்பதற்கு நமக்கு உரிமையில்லை. இத்துடன், நாம் திரும்பிச் செல்கின்ற போது, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு நாம் திரும்பிச் செல்ல வேண்டி இருக்கிறது!

எனினும், கற்காலத்திற்கு இன்னமும் நாம் திரும்பிப் போக முடியும்.

இதைச் செய்ய நாம் விரும்பினால், இத்தகைய ஒரு நீண்ட பயணத்திற்குத் தேவையான எல்லாவிதச் சாதனங்களையும் நாம் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில், பயணத்திற்குரிய தோள்பையில் மடித்து வைப்பது போன்ற கூடாரத்துணியும், முரட்டுத் துணியாலான தரை விரிப்பும் அவசியம் வேண்டும். பிறகு கூடாரத்திற்குரிய கம்புகள், கயிறுகளைக் கட்டுவதற்கு மரமுளைகள், மரமுளைகளைத் தரையில் பதிப்பதற்குச் சிறிய கோடரி ஆகியன வேண்டும். இது போலவே வேறு பல பொருட்களும் வரிசையாக நமக்குத் தேவைப்படும்: சூரியனிடமிருந்து தலையைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு தக்கையாலான தலைக் கவசம், ஒரு கொப்பரை, ஒரு சமையலடுப்பு, ஒரு கோப்பை, ஒரு கத்தி, ஒரு கரண்டி, ஒரு குத்துக் கரண்டி, ஒரு திசைகாட்டி மற்றும் ஒரு வரைபடம். நம்முடைய பொருட்களை எல்லாம் மூட்டை கட்டிக் கொண்ட பிறகு, நமது துப்பாக்கியையும்



உடன் எடுத்துக் கொண்டு (நமது உணவுக்காக நாம் வேட்டையாட வில்லை என்றால் கற்காலத்தில் நம்மால் உயிர் பிழைக்க முடியாது) ஒரு பயண முகவரிடம் சென்று, ஒரு கப்பல் சீட்டு வாங்க வேண்டும்.

நீங்கள் வாங்கிய சீட்டு பையில் இருக்கையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் ஆழ்கடல் கப்பல் ஒன்றில் நாம் ஏறிக் கொள்ளலாம்.

ஒரு சில வார காலத்தில் நாம் மெல்பர்னில் இருப்போம்.

கற்கருவிகளை வைத்துக் கொண்டு மக்கள் வேலை செய்கின்ற இடங்கள் இன்னமும் பூமியில் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கும் போது மிகவும் ஆர்வமூட்டக் கூடியதாக இருக்கிறது. அவைகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று. அதன் பொருளாவது காலத்தை நோக்கி பின் செல்வதை விட இடத்தை நோக்கிச் செல்லலாம் என்பதாகும். நீண்ட காலத்திற்கு முன்னர் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என் பதைக் கண்டுபிடிக்க விரும்புகின்ற போது இது போலத்தான் விஞ் ஞானிகள் செய்கிறார்கள்.

இன்னமும் கல் உபகரணங்களைப் பயன்படுத்தக் கூடிய தொன்முது மக்கள் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்கள். தங்களுடைய இத்தகைய கருவிகளை எங்ஙனம் பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் யாரிடம் அறிந்து கொள்ள விருக்கிறோமோ, அவர்கள் தான் நாம் காணச் செல்கின்ற மக்கள்.

முள் நிறைந்த, புதர்ச் செடி சோலைகள் இடையிட்டு நிற்கிற வறண்ட, மனிதவாடையற்ற சமவெளிகளின் வழியாக தொன்முது வேட்டைக்காரர்களின் கூடாரங்களுக்கு நாம் நமது பாதையை அமைத் துக்கொண்டு செல்கிறோம். நதியின் அருகில் மரங்கள் செறிந்த இடத்திற்குக் கீழே, மரப்பட்டையாலும் கிளைகளாலும் உருவாக்கப் பட்ட அவர்களது கூடாரங்களுக்கு நாம் வந்து சேர்கிறோம்.

கூடாரங்களுக்கு அருகே சிறுவர்கள் துரத்திப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள், அதே வேளை ஆண்களும் பெண்களும் பக்கத் தில் உள்ள தரையில் குந்திக் கொண்டு சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மயிரடர்ந்த தலையுடனும் நீண்ட தாடியுடனும் கூடிய ஒரு கிழவன் ஒரு கங்காருவை உரித்துக் கொண்டிருக்கிறான். அந்தக் கிழவன் முப்பட்டை வடிவான சிக்கிமுக்கி வெட்டுக் கருவியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். கற்றுக் கொள்வதற்காக நாம் முடிவு செய்த சிக்கிமுக்கிக் கற்கருவி அதுவே தான்!

இயற்கையாக, ஆஸ்திரேலியாவின் தொன்முது மக்கள் வரலாற் றுக்கு முந்திய கால மக்கள் இல்லை. அவர்களுடைய வரலாற்றுக்கு முந்திய கால மூதாதையர்களிடமிருந்து அவர்களை ஆயிரக் கணக் கான தலைமுறைகள் பிரித்து விட்டன. கடந்த காலத்தின் ஒரு சிறிய எச்சம் அவர்களுடைய கற்கருவிகள். ஆனால் இத்தகை கடந்த காலத்தின் எச்சமிச்சங்களே நமது பல புதிர்களை விடுவிக்கக் கூடியவை. தொன்முது மக்கள் வேலை செய்வதை நாம் கவனிக்கும் போது, சிக்கிமுக்கி முப்பட்டை மனிதனுடைய கருவி என்பதை நாம் அறிய முடிகிறது. அது வேட்டைக்காரனின் கருவியாகவும் இருக்கிறது. அதைக் கொண்டு வலையில் வீழ்த்தப்பட்ட அல்லது

காயம்பட்ட கொடு விலங்கைக் கொல்லவும், அதைப் பிளக்கவும், அதன் தோலை எடுக்கவும் செய்தான்.

மற்றொரு கற்காலக் கருவி — அரைவட்ட வடிவ வெட்டுக் கருவி — செயல்படுவதைப் பார்க்க வேண்டி நாம் இன்னும் சற்று தொலைவுக்குத் தென் ஆஸ்திரேலியாவிலுள்ள தாஸ்மானியா என்ற தீவுக்குச் செல்ல வேண்டி இருக்கும். மிக அண்மைக் காலங்களில் கூட அங்கு பெண்கள் துணிகளை வெட்டவும், தோலை வாராக வெட்டவும், மறைவுகளைச் செய்யவும் இந்தச் சிக்கிமுக்கிக் கற்களைத்தான் பயன்படுத்தினார்கள்.

இந்தக் கருவிகளிடையே பங்கீடு இருந்தது என்பது மக்கள் மத்தியிலும் உழைப்புப் பங்கீடு இருந்தது என்பதே பொருளாகும். கற்கால வேட்டைக்காரர்களின் காலத்திலிருந்தே இது இருந்து வந்திருக்கிறது.

காலம் செல்லச் செல்ல முற்றிலும் அதிகமான பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது. அவை எல்லாவற்றையும் சமாளிப்பதற்காக, சிலர் ஒரு குறிப்பிட்ட வகையான வேலையை மட்டுமே செய்ய வேண்டியிருந்தது, அதே வேளை மற்றவர்கள் வேறு பிற வேலைகளைச் செய்தார்கள். வேட்டைக்காக ஆண்கள் அங்கிருந்து சென்ற வேளை, அடுப்படி அருகில் பெண்கள் சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கவில்லை. அவர்கள் புதிய கூடாரங்களைக் கட்டினார்கள், விலங்குத் தோல்களிலிருந்து ஆடைகளை நறுக்கினார்கள், உண்ணத்தக்க வேர்களைச் சேகரித்தார்கள், உணவை இருப்பு வைத்தார்கள்.

ஆனால் வேறுவகையான உழைப்புப் பங்கீடும் அங்கு இருந்தது: இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் இடையேயானது.

ஆயிரமாண்டுப் பள்ளி

ஒவ்வொரு வேலையைச் செய்வதற்கும் சரியான வழி இருக்கிறது. எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கான அறிவு விண்ணிலிருந்து விழுவதில்லை. அறிவு என்பது மற்றவர்களிடமிருந்து முயன்று பெறக் கூடிய ஒன்றாகும்.

ஒவ்வொரு தச்சனும், ஒரு ரம்பம், ஒரு கோடரி, ஓர் இழைப்புளி ஆகியவற்றை உருவாக்கிக் கொண்டும், இத்தகுக் கருவிகள் அனைத்தையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதைக் கண்டறிந்து கொண்டும் வேலை தொடங்க வேண்டுமானால், இந்தப் பூமியில் எந்தத் தச்சனுமே இருந்திருக்க மாட்டான்.

புவியியலைக் கற்க வேண்டி, நாம் ஒவ்வொருவரும் முதன் முதலாக உலகைச் சுற்றி வந்து, அமெரிக்காவை மீண்டும் கண்டுபிடித்து, ஆப்பிரிக்காவை ஆய்வு செய்து, எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி, எல்லா முனைகளையும், குடாக்களையும் எண்ணிக் கொண்டு போக வேண்டி இருந்தால், நாம் ஓர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலுங்கூட, அதைச் செய்வதற்கு நமக்கு நேரமே போதாது போகும்.

மேன்மேலும் நாம் முன்னேறுகின்ற போது, மேலும் நாம் கற்க வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு புதிய தலைமுறையும், முந்திய தலைமுறையிடமிருந்து எப்போதும் வளர்கின்ற அறிவையும், தகவலையும், கண்டுபிடிப்புகளையும் பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் விஞ்ஞா

னத்தின் ஒவ்வொரு துறையும் புதிய கண்டுபிடிப்புகளைக் கொண்டு வந்து சேர்க்கிறது. விஞ்ஞானத்தின் எண்ணிக்கை மேலும் பெருகிக் கொண்டே இருக்கிறது. ஒரு காலத்தில் பௌதிகம் மட்டுமே இருந்தது. இப்போது புவிமைய பௌதிகம் மற்றும் வான் கோளவியல் பௌதிகம் இருக்கின்றன. முன்பு வேதியல் மட்டுமே இருந்தது. இப்போது அவை புவிமைய வேதியல், உயிர் வேதியல் மற்றும் வேளாண் வேதியல் என இருக்கின்றன. புதிய அறிவினுடைய தாக்கத்தால் விஞ்ஞானங்கள் உயிர் அணுக்கள் போல விரிவடைந்து, உடைந்து, பல்கிப் பெருகு கின்றன.

இயற்கையாக, கற்காலத்தில் எந்தவித விஞ்ஞானங்களும் இல்லை. மனித இனத்தின் பட்டறிவானது ஒன்று சேர்வது அப்போதுதான் தொடங்கியிருந்தது. மனிதனுடைய வேலை இப்போது இருப்பன போல அவ்வளவு பன்முகப்பட்டதாக இல்லை. இது காரணமாகத்தான் தனது கல்வியை முற்றுப்பெறச் செய்வதற்கு ஒரு மனிதனுக்கு நீண்ட காலம் பிடிக்கவில்லை. இன்னும், அவனுங்கூட கற்றுக் கொள்ள வேண்டியன இருந்தன.

ஒரு காட்டு விலங்கைச் சுற்றி வளைக்கவும், தோலை உரிக்கவும், கூடாரம் கட்டவும், சிக்கிமுக்கி வெட்டுக் கருவி தயாரிக்கவும் அவனுக்கு அறிவும் திறமையும் தேவைப்பட்டன.

எங்கிருந்து அறிவு வரும்?

மனிதன் எந்தத் திறமைகளுடன் பிறப்பதில்லை. அவைகளை அவன் தேடிப் பெற்றுக் கொள்கிறான்.



விலங்கு உலகத்தை எந்த அளவுக்கு அவன் பின்தங்க வைத்து விட்டான் எப்போது என்பதை நாம் உணர முடிகிறது.

ஒரு விலங்கு தனது பெற்றோர்களிடமிருந்து, தனது மென் மயிரையோ, தனது உடல் அமைப்பையோ மரபுரிமையாகப் பெறுவது போல, எல்லாவகை உயிர்க் கருவிகளையும், அவைகளைப் பயன் படுத்துவது குறித்த அறிவையும் மரபுரிமையாகப் பெறுகிறது. எப்படிக் குழி பறிப்பது என்பதை ஒரு பன்றி கற்றுக் கொள்ள வேண்டியதில் லை. ஏனெனில் அதற்கெனவே வலிமையான கூர் முகவாயுடன் பிறக் கிறது. கட்டையைப் பல்லால் அரைப்பது எப்படி என்று ஒரு நீர் நாய் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அதனுடைய கூர் மையான உளிப்பல் தானே வளர்ந்தவை. இதனால் தான் விலங்கு கள் பணிமனைகளையோ, பள்ளிகளையோ வெற்றிருக்கவில்லை.

சற்று முன்னர் பொரிக்கப்பட்ட ஒரு சிறிய வாத்துக்குஞ்சு உடனேயே ஈக்களையும், நீர் மூட்டைப் பூச்சிகளையும் பிடிக்கத் தொடங்குகிறது. அவைகளைப் பற்றி யாரும் இதற்கு எப்போதும் கற்பித்ததில்லை. ஒரு குயிலினுடைய புதிதாகச் சிறகு முளைத்த பறவைக் குஞ்சுகள், அவைகளது உண்மையான பெற்றோர்கள் அவை களைப் பார்த்துக் கொள்வதற்கு மாறாக, விநோதமான கூட்டில் வளர்கின்றன. ஆனால் இலையுதிர் காலம் வரும் போது, அவை தாங் களாகவே வெளியேறி, அதற்கு முன்னர் எவரும் அவைகளுக்கு வழி யேதும் காட்டாத போதும், ஆப்பிரிக்காவிற்குத் தங்களது வழியைப் பார்த்துச் செல்கின்றன.

விலங்குகள் தங்களது பெற்றோர்களிடமிருந்து நிச்சயமாக ஏராள மானவற்றைக் கற்றுக் கொள்கின்றன. ஆனால், ஒரு பள்ளியை ஒத்திருப் பது போன்ற எதைப் பற்றியும் கேள்வி இருக்க முடியாது.

மனிதர்களைப் பொருத்த மட்டில் இது முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயமாக இருக்கிறது.

மனிதன் தனது சொந்தக் கருவிகளைத் தயாரிக்கிறான் ஏனெனில் அவைகளோடு அவன் பிறக்கவில்லை.

அதன் பொருள் இத்தகைய கருவிகளின் பயனையோ, தனது திறமைகளையோ தனது பெற்றோர்களிடமிருந்து அவன் மரபுரிமை யாகப் பெறவில்லை என்பதுவாகும், ஆனால் அவற்றை தனது மூத்த வர்களிடமிருந்தோ, தனது ஆசிரியர்களிடமிருந்தோ கற்கிறான்.

மக்கள் இலக்கணம் மற்றும் எண்கணித அறிவோடு பிறந்திருப் பார்களேயானால், ஒவ்வொரு சோம்பேறி மாணவனும் மகிழ்ச்சியடைந் திருப்பான். பிறகு பள்ளிகளுக்கான தேவையே இருந்திருக்காது. ஆனால் இது உண்மையிலேயே நலம் பயப்பதாக இருக்காது. பள்ளி களே இல்லாது இருந்தால், எதையும் புதிதாகக் கற்றுக் கொள்ள மக்களால் இயலாமற் போயிருக்கும். எல்லா மனிதத் திறமைகளும் அறிவும் ஒரே அளவில் இருப்பது போலவே இருந்திருக்கும். எடுத்துக் காட்டாக ஓர் அணிலினுடைய திறமைகளைப் போல.

திறமைகளுடன் மக்கள் பிறப்பதில்லை என்பது மனித இனத்திற்கு மகிழ்ச்சி தருவதாகும். அவர்கள் படிக்கிறார்கள், கற்கிறார்கள், மனித அநுபவம் என்ற பொதுவான களஞ்சியத்திற்கு ஒவ்வொரு தலைமுறையும் தனது பங்காக எதையாவது சேர்க்கிறது. இந்த அநுபவம் நிலையாக வளர்கிறது. மேலும் மனித இனம் அறிமுகமில்லாத எல்லைகளுக்கு மேன்மேலும் அப்பால் செல்கிறது.

சோவியத் நாட்டில் ஏழு வயதடைந்த ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் பதிவு செய்யப்படுகிறது.

சோவியத் நாடே மொத்தத்தில் பள்ளிக்குச் சென்று மேன்மேலும் அறிவைப் பெறுகின்றது.

ஆயிரமாண்டுப் பள்ளி, மனித உழைப்புப்பள்ளி, இன்று எப்படி இருக்கிறானோ அம்மனிதனை உருவாக்கியிருக்கிறது; அது அவனுக்கு விஞ்ஞானம், பொறியியல் மற்றும் கலை இவற்றைத் தந்திருக்கிறது, அவனது கலாசாரப் பாரம்பரியத்தை அவனுக்குத் தந்திருக்கிறது.

ஆயிரமாண்டுப் பள்ளியில் முதலில் கற்காலத்தில் தான் மனிதன் நுழைந்தான். முதிர்ந்த, அநுபவம் வாய்ந்த வேடுவர்கள், வேட்டை யாடும் கடினமான கலையை இளம் பையன்களுக்குக் கற்றுக் கொடுத் தார்கள்: அதனது சுவடுகளைக் கொண்டே ஒரு விலங்கை எங்ஙனம் அடையாளங் கண்டு கொள்வது, கலவரப்படுத்தி விடாமல் ஒரு விலங் கின் அருகே எங்ஙனம் செல்வது.

தற்காலத்திலும் வேட்டையாடுதலுக்குக் கூடப் பெரும் திறமைகள் தேவையிருக்கின்றன. இருப்பினும், அன்றைக்கு இருந்ததைவிட இன் றைக்கு ஒரு வேடுவனாக இருப்பது மிகவும் சுலபமானது. ஒரு வேடுவன் தனது சொந்த ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டியதில்லை என்ற ஒரே காரணமே யாகும். கற்காலத்தில் வேடுவர்கள் தங்களது

சொந்த கைத்தண்டுகளையும், வெட்டுக் கருவிகளையும், ஈட்டிகளுக் கான அம்புத்தலைகளையும் தயாரித்தார்கள். தனது இனக் குழுவைச் சேர்ந்த இளம் பையன்களுக்குக் கற்றுத் தரக்கூடிய வயதான ஒரு வேடுவனும் இருந்தான்.

பெண்களுடைய வேலைக்கு வேறுவிதத் திறமைகள் வேண்டியிருந் தது. ஏனெனில் பெண்கள் குடும்பத் தலைவி, சிற்பி, மரம் வெட்டி மற்றும் தையல்காரி இவைகளின் தொகுப்பேயாகும்.



ஒவ்வொரு மனிதக் குலமரபிலும் இருந்த வயது வந்த, அநுபவம் வாய்ந்த ஆண்களும் பெண்களும் தங்களது நீண்ட வாழ்க்கை ஓட் டத்தில் பெற்ற அறிவையும் அநுபவத்தையும் தங்களது குலமரபைச் சேர்ந்த வயது வந்த இளைஞர்களுக்கும் குமாரிகளுக்கும் கொடுத்தார் கள்.

ஆனால் திறமையும் அநுபவமும் எங்ஙனம் கடத்தப்பட்டிருக்கக் கூடும்?

நாம் எதை ஏற்கெனவே அறிந்திருக்கிறோமோ அதைக் காட்டு வதன் விளக்குவதன் மூலமாகத்தான்.

இதற்கு மனித இனத்திற்கு மொழி தேவைப்பட்டது.

தங்களுடைய உயிர்க் கருவிகளையும், தங்களுடைய உள்ளங்கை களையும் பற்களையும் எப்படிப் பயன்படுத்துவது என்று ஒரு விலங்கு சிறிய விலங்குக்குச் சொல்லித் தர வேண்டியதில்லை. அதன் காரண மாகத்தான் எப்படிப் பேசுவது என்பதை விலங்குகள் அறிந்திருக்க வில்லை.

ஆனால் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் பேச அறிந்து இருந்தான்.

மற்றவர்களோடு சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகளுக்காக அவனுக்குப் பொதுவான ஒரு மொழி தேவைப்பட்டது. பழைய தலை முறையினரின் அநுபவத்தையும் திறமைகளையும் புதிய தலைமுறைக்குக் கொடுப்பதற்கு மக்களுக்கு வார்த்தைகள் தேவைப்பட்டன.

கற்காலத்தைச் சேர்ந்த வரலாற்றுக்கு முந்திய கால மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் எங்ஙனம் பேசிக் கொண்டார்கள்?

கடந்த காலத்தை நோக்கி இரண்டாவது பயணம்

நாம் திரும்பவும் கடந்த காலத்திற்கே செல்வோம், ஆனால் இந்த முறை நாம் முன்பு போல அல்லாமல் சுலபமாகச் செய்வதற்கு முயற்சி செய்வோம்.

தொலைதூர நாடுகளுக்கு நாம் புறப்படுகின்ற போது, நாம் கப்பலில் பயணம் செய்ய வேண்டிய அவசியமில்லை, வீட்டை விட்டு வெளியேறாமலே கூட நம்மால் செய்ய முடியும்.

வானொலியைத் திருப்பிக் கொண்டு, குமிழைத் திருகிக் கொண்டு, நமது அறைவிட்டுக் கிளம்பாமலேயே உலகத்தின் எந்தப் பகுதிக்கும் நம்மால் செல்ல முடியும். நம்மிடம் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருந்தால் கேட்பது மட்டுமல்லாமல், எத்தனையோ கிலோமீட்டர் களுக்கு அப்பால் உள்ள மக்களைப் பார்க்கவும் முடியும். பெரும்

தொலைவுகளைக் கடக்க வானொலியும் தொலைக் காட்சியும் நமக்கு உதவியிருக்கின்றன.

ஆனால் எத்தனையோ பல ஆண்டுகளுக்கு முன்பிருந்த மக்களை நாம் எங்ஙனம் பார்க்க முடியும், கேட்க முடியும்?

இடப் பரப்பைக் கடந்து நம்மை அழைத்துச் செல்லும் ஒரு வானொலி, ஒரு தொலைக்காட்சிப் பெட்டியைப் போல, காலத்தைக் கடந்து நம்மை அழைத்துச் செல்லக் கூடிய கருவி ஏதேனும் உள்ளதா?

ஆம், இருக்கிறது: திரைப்படம்.

திரையில் உலகம் முழுமையையும் நாம் காண முடியும், மேலும் இன்றைய உலகத்தை மட்டுமல்ல, நேற்றைய உலகத்தைக் கூடத் தான்.

ஆர்க்டிக் பயணம் மேற்கொண்ட முதல் வெற்றிவீரர்களைச் செஞ் சதுக்கத்தில் வரவேற்கின்ற ஊர்வலக் காட்சியை நாம் இங்கே காண் கிறோம். பிறகு ஒரு பிரம்மாண்டமான வெந்நிற பலூன் ஆகாயத் தில், ஒரு புதிய பூமி செயற்கைக் கோள் போல, அலைவதை நாம் பார்க்கிறோம். அது ஒரு மீவளி மண்டில பலூன் ஆகும்.

ஆயினும், ஒரு திரைப்படக் காமிராவானது, ஒரு கப்பல் மாதிரி, ஆனால் அது கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டிற்கு முன்னர் நம்மை எங்கும் தொலைவிற்கு அலைத்துச் செல்லாது. திரைப்பட காமிரா வானது முற்றிலும் அண்மைக்காலக் கண்டுபிடிப்பு.

முதல் ‘பேசும்’ படங்கள் 1927இல் வெளிவந்தன.

காலத்தைப் பின்னோக்கிக் கடந்தவாறு நாம் பயணம் செய்யும் போது, ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு நாம் மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும், மேலும் அவை படிப்படியாக மோச மானதாகவே இருக்கும்: ஒரு நீராவிக் கப்பலிலிருந்து ஒரு பாய்மரக் கப்பலுக்கு, ஒரு பாய்மரக் கப்பலியிருந்து சாதாரணப் படகிற்கு.

இப்பொழுது நாம் ஊமைப் படங்களின் திரைக்கு மாறுகிறோம். நம்மால் கடந்த காலத்தைக் காண முடியும், ஆனால் கேட்கத்தான் முடியாது.

பிறகு ஒலிப்பதிவு முறை இசைப் பெட்டிக்கு வருகிறோம். நம்மால் குரலைக் கேட்க முடியும், ஆனால் அவர் தெளிவாகப் பேசிக் கொண் டிருந்தாலுங்கூட யார் பேசிக் கொண்டிருப்பது என்பதைக் காண முடியாது.



திரும்பவும் நம்முடைய கப்பல்கள் அவை புறப்பட்ட கரைகளுக்கு அப்பால் தொலைவிற்கு நம்மை எடுத்துச் செல்லாது.

1895க்கு முன்னர் என்ன நடந்தது என்பதை ஒரு திரைப்படத்தால் கூட நமக்குக் காட்ட முடியாது.

மேலும் 1877க்கு முன்னர் பேசப்பட்ட வார்த்தைகளை ஒலிப்பதிவு முறை இசைப் பெட்டி திரும்ப பேசிக் காட்டாது. ஏனெனில் அப் போதுதான் அது முதலாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

குரல்கள் அழிந்து போய், எழுத்து வடிவங்களில் மட்டுமே சலிப் பூட்டுவது போல, புத்தகங்களில் உள்ள அச்செழுத்து வரிசைகளைப் போல காணப்படும்.

பழைய மாதிரியிலான புகைப்படங்களிலும், பாதரச ஆவி முறையில் எடுக்கப்பட்ட படங்களிலும் மறைந்து போன புன்னகையும் தோற்றங் களுமே தெரியும்.

பழைய குடும்ப ஆல்பம் ஒன்றைப் பார்க்கலாம். அதில், பச்சைப் பட்டு உறைக்கும், வெண்கல ஊக்குகளுக்கும் கீழே, பல தலைமுறை யினரின் வாழ்க்கையை நாம் கண்டுபிடிக்க முடியும்.

அட்டைப் பக்கங்களில் ஒன்றில் 1870களில் சிறுமிகள் உடை யணிந்தது போல உடையணிந்த ஒரு சிறுமியினுடைய மங்கலான புகைப்படத்தை நாம் காண்கிறோம். அழகான ஒரு பூங்காக் கதவில் அவள் சாய்ந்து கொண்டிருக்கிறாள். அது போன்ற ஒன்றை நாம் புகைப்பட நிலையத்தில் மட்டுமே காண முடியும்.

அதை அடுத்து அதே பக்கத்தில், தடித்த வழுக்கைத் தலை மண மகனுக்கு அருகில் வெள்ளை உடையுடுத்தி ஒரு மணமகள் நின்று கொண்டிருக்கிறாள். விரலில் பெரிய மோதிரம் அணிந்த அவனது கை, பாதியாக வெட்டப்பட்ட பளிங்குத் தூண் மீது இருக்கிறது. தனது மணமகளைக் காட்டிலும் குறைந்தது முப்பது ஆண்டுகளாவது மூத்தவனாக மணமகன் காணப்படுகிறான். முதல் புகைப்படத்தில் காணப்பட்ட சிறுமியைப் போல மணமகளின் கண்கள் சூதுவாதற்று அஞ்சமுற்றது போல இருக்கிறது.

இங்கு அவளுக்கு நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகள் ஆகியிருக் கும். அவளை அடையாளம் காண்பது நமக்குச் சிரமமானது. அவளது நெற்றி அருந்துணுக்குகள் நிறைந்த கருப்புப் பூத்தையல் போட்ட குல்லாய்க்குக் கீழே இருக்கிறது. அவளது கண்கள் களைப்புற்று உள்ளன. அவளது கன்னங்கள் குழிவிழுந்து இருக்கின்றன. அந்தப் புகைப்படத்தின் பின்புறம் புகைப்பட நில்லயத்தின் முத்திரை: சிறகு டைய குழந்தை உரு ஒரு புகைப்படக் கருவியைத் தூக்கிப் பிடித்தபடி. மேலும், அந்தச் சிறகுடைய குழந்தை உருவிற்குக் குறுக்காக ஒரு வாசகம் எழுதப் பட்டிருக்கிறது. வயதான காலத்தில் நடுக்கமுற்ற கை யால் எழுதப்பட்டிருக்கிறது: ''எனது அன்புக்குரிய பேத்திக்கு, உனது அன்புள்ள பாட்டி.''

இங்கே, ஆல்பத்தின் ஒரே பக்கத்திலேயே, ஒரு மனிதனுடைய வாழ்க்கை முழுதும் இருக்கிறது.

மிகவும் பழையதாகப் போகப் போக, படத்திலிருப்பவர்களின் முகத்தோற்றங்களும், உணர்ச்சிக் குறிப்புகளும் இந்தப் புகைப்படங் களில் மிகவும் மங்கலாகிப் போய் விடுகிறது. பாய்ந்தோடும் ஒரு குதிரையையோ, நீரில் தலை கீழாகப் பாய்கின்ற ஒரு நீச்சல் காரனையோ மிகச் சுலபமாக இன்று நம்மால் மிக அருமையான புகைப்படம் எடுக்க முடியும். ஆனால் ஆரம்பகால புகைப்படக் காரர்கள் ஒரு விஷேடமான பற்றுக் கட்டை கொண்ட கைவைத்த நாற்காலி வைத்திருந்தார்கள். அதனோடு ஒருவருடைய தலையையும் தோள்களையும், ஓர் அங்குலத்தில் சிறிதளவு கூட அசைய முடியாத வாறு பிணைத்து வைத்துவிடுவார். இத்தகைய புகைப்படங்களில் காணக் கூடிய மக்கள் இயற்கையாக இல்லாது உறைந்து போனது போலவும், விநோதமாகவும் காணப்படுவதில் வியப்பில்லை.

ஆனால் 1838க்கு முன்னால் எந்தப் புகைப்படங்களும் எடுக்கப் படவில்லை. நமது பயணத்தை தொடர்கின்ற போது, கடந்த காலத் தின் பிற ஆதாரங்களை நாம் முழுமையாக நம்பியிருக்க வேண்டி யிருக்கிறது. புகைப்படக் கருவியின் கண்ணைப் போல அவை துல்லிய மாகவோ, புலனால் அறியக் கூடியதாகவோ இல்லாது போனாலும் பரவாயில்லை.

கடந்த காலத்தைத் திரும்பவும் நாம் உருக்கொணர வேண்டியிருந் தால், கலைக்காட்சிக் கூடங்கள், ஆவணக் காப்பகங்கள் மற்றும் நூல கங்கள் இவற்றில் பாதுகாக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் ஆதாரங்களை நாம் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டி உள்ளது.

அதன் பிறகு, நெடுஞ்சாலை நெடுகிலும் விரைந்து செல்லும் மைல் கற்களைப் போல நூற்றுக்குப் பின் நூறாக ஆண்டுகள் பறந்து செல்லும்.

நாம் திரும்பவும் 1440ஆம் ஆண்டிற்கு மாறுகிறோம். அதற்கு முன்னால் அச்சிடப்பட்ட நூல்கள் எவையும் இல்லை. அச்சுக் கோர்ப்ப வரது தெளிவான கருப்பு அச்சானது படியெடுப்பவரின் விசித்திர மான சுருளால் இடம் பெயர்ந்தது.

அவனது தூவற்பேனா படம் எழுதுவதற்குரிய தோலின் குறுக்காக மெதுவாகச் செல்கிறது, அவனுக்குப் பின்னால் நாம் கடந்த காலத் திற்குப் படிப்படியாக, எழுத்து எழுத்தாகச் செல்கிறோம்.

நமது பயணம் நம்மை இன்னும் தொலைவிற்கு அழைத்துச் செல் கிறது, தோலில் எழுப்பட்ட புத்தகங்களிலிருந்து நாணற்புல் தாளில் எழுதப்பட்ட சுருள்களுக்கும், கற்கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களுக்கும் செல்கிறது.

பண்டைய கால மக்களால் நமக்குக் கையளிக்கப்பட்ட எழுத்தானது மிகவும் புதுமையானதாகவும், புதிரானவையாகவும் இருந்தன.

இறுதியாக, எழுத்தும் மறைந்து போகிறது, பண்டைய குரல்கள் அசைவற்றுப் போகின்றன.

ஆனால் பிறகு என்ன?

பிறகு நாம் பூமியில் மனிதனுடைய சுவடுகளைத் தேடுகிறோம். மறந்து போன புதை மேடுகளை நாம் தோண்டுகிறோம், பண்டைய கருவிகளை, முன்னாளைய பாதுகாப்பிடங்களின் கற்களை, எப்போ தோ உயிரற்றுப் போன அடுப்படி கட்டைக்கரிகளைச் சோதனை செய்கிறோம்.

இத்தகைய கடந்த காலத்திய எல்லா மீந்த பகுதிகளும் மனிதன் எங்ஙனம் வாழ்ந்தான், வேலை செய்தான் என்பதை நமக்குக் கூறு கின்றன.

ஆனால் அவைகளால் மனிதன் எங்ஙனம் பேசினான், நினைத்தான் என்பதைக் கூற முடியுமா?

அடையாள மொழி

ஒரு குகையின் உட்புறத்திலோ, வரலாற்றுக்கு முந்திய கால வேட் டைக்காரர்களின் கூடாரப் பகுதியிலோ, விஞ்ஞானிகள் வரலாற்றுக்கு முந்திய கால மக்களையோ, இன்னுஞ் சரியாகச் சொல்லுமிடத்தில், அவர்களது மீந்த பகுதிகளையோ அடிக்கடி கண்டுபிடித்தார்கள்.

1924இல், சோவியத் தொல்பொருள் துறையினர் சிம்ஃபெரோபல் அருகில் கியிக்-கொபா குகையில் ஒரு புதைபடிவ மனிதனுடைய மீந்த பகுதிகளைக் கண்டெடுத்தார்கள். குகையின் மையத்தில் தோண்டப்பட்ட நாற்கட்ட வடிவான குழியில் எலும்புக் கூடு புதைக்கப் பட்டிருந்தது. அதனருகே, செங்குத்துப் பாறைகள் பாதுகாப்பாக நிற்க, ஒரு கலைமானின் மீந்த பகுதிகளையும் சில சிக்கிமுக்கிக் கற்கருவி களையும் அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

மற்றும் இது போன்ற கற்கால கூடாரப் பகுதி உஸ்பெகிஸ் தானில் தெஷிக்-தாஷ் குகையில் கண்டுபிடிக்கப்பட்டது.

வரலாற்றுக்கு முந்திய கால வேட்டைக்காரர்கள் ஒரு மலையின் ஒடுங்கிய சரிவில் வசித்தார்கள். தடுமாறாதவர்களாக இருந்தார்கள். ஏனெனில் அவர்களது முக்கிய இரை, பிடித்துக் கொல்வதற்கு மிகவும் சிரமமான மலை வெள்ளாடு.

அதே குகையில் எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தையின் மண்டையோடும், எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டன. அருகே சிக்கி முக்கிக் கற்கருவிகளும், விலங்கு எலும்புகளும் இருந்தன.

பழைய கற்காலத்தைச் சேர்ந்த மனிதனுடைய புதைபடிவ மீந்த பகுதிகள் ருஷ்யாவில் மட்டும் கண்டெடுக்கப்படவில்லை, வேறு பல நாடுகளிலுங்கூட கண்டெடுக்கப்பட்டுள்ளன. உண்மையில், அவை ஒவ் வொரு கண்டத்திலும், அமெரிக்காவைத் தவிர்த்து, கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இத்தகைய முதலாவது கண்டுபிடிப்புகளில் ஒன்று ரைன் பகுதியின் ஒரு பள்ளத்தாக்கில் நியாண்டர்தாலில் மேற்கொள்ளப்பட்டதால், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்த மீந்த பகுதிகளுக்கு நியாண் டர்தால் மனிதன் எனப் பெயரிட்டார்கள்.

இப்பொழுது நாம் நமது கதாநாயகனை நியாண்டர்தால் மனிதன் என்று அழைப்போம். அவனுக்கு நாம் ஒரு புதிய பெயர் சூட்டியுள் ளோம். ஏனெனில் அவனது மூதாதையர் பித்தெகாந்த்ரோபசிடமிருந்து அவனைப் பிரித்த நூறு, ஆயிரக் கணக்கான ஆண்டுகளில் அவன் பெருமளவுக்கு மாறிப் போய்விட்டான்.

அவனது முதுகு நிமிர்ந்து இருக்கிறது, அவனது கைகள் இன்னும் விரைவானதாக இருக்கின்றன, அவன் முகம் மனிதனைப் போலவே இருக்கிறது.

வழக்கமாக ஓர் எழுத்தாளர் தனது கதாநாயகனின் தோற்றத்தைப் பெரும் கற்பனையோடும், அதிகமான விவரத்தோடும் விளக்குவார். எடுத்துக்காட்டாக, இது போன்ற சொல்லமைப்புகளைப் பயன்படுத்து வார்: ''அவனது கனல்கக்கும் கண்கள்'', ''அவனது பெருமைக்குரிய ரோமானிய மூக்கு'', ''அவனது முடியானது அண்டங்காக்கையின் இறகு போல அவ்வளவு கருமையாக இருந்தது''. ஆனால் அவனது மூளையின் அளவைப் பற்றி அவர் ஒருபோதும் பேசியிருக்கவே மாட் டார்.

நமது விவகாரம் முற்றிலும் மாறுபட்டதாகும். நமது கதாநாயக னுடைய மூளையின் அளவு நமக்கு அதிமுக்கியம் வாய்ந்தது. அவ

னது கண்களது வெளிப்பாடுகள், அவனது முடியின் நிறம் இவைகளை விட அதிக ஆர்வத்தை நமக்கு ஊட்டுகிறது.

நியாண்டர்தால் மனிதனுடைய மண்டையோட்டைக் கவனமாக அளந்து பார்த்த பின்னர், பித்தெகாந்த்ரோபசை விட இவனது மூளை பெரியது என்று கூறுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆகவே, பல்லாயிரக் கணக்கான ஆண்டு உழைப்பு வீண் போகவில்லை என்பதை நாம் காண்கிறோம். அவை மனிதனை முழுமையாக மாற்றி விட்டன. ஆனால் அவை அவனது கைகளையும், தலையையும் அவனது வேறு எந்த உறுப்பைக் காட்டிலும் மாற்றி விட்டது. ஏனெனில் அவன் கைகள் வேலை செய்ய வேண்டி இருந்தன, அவனது தலை அவைகளை இயக்க வேண்டியிருந்தது.

வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் சிக்கிமுக்கிக் கல் கோடரி கொண்டு, சிக்கிமுக்கிக் கல்லிற்குப் புதிய வடிவம் கொடுக்க முயன்ற போது, அவன் தன்னையும் தனது சொந்த விரல்களையும் மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டிருந்தான். அவை மிக விரைவானதாகவும், திறமையானதாகவும் மாறிக் கொண்டிருந்தன. அவன் தனது மூளையை மாற்றிக் கொண்டிருந்தான். அது மிகவும் பல் கூட்டுத் தொகுதியாக மாறிக் கொண்டிருந்தது.

நியாண்டர்தால் மனிதனைப் பார்க்கையில் அவன் குரங்கு இல்லை என்று நாம் கூறுவோம்.

ஆயினும் அவன் எங்ஙனம் ஒரு குரங்கைப் போல தோற்றமளித்தான்!

அவனது குள்ளமான நெற்றி அவனது கண்களுக்கு மேலாக நீட்டிக் கொண்டிருக்கிறது. அவனது கோரைப் பற்கள் மற்ற பற்களை விடச் சாய்வாக அமைந்து வாய்க்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன.

நியாண்டர்தால் மனிதனுடைய நெற்றியும், கன்னமும் நம்மைப் போல் தோன்றச் செய்யாத இரு கூறுகளாகும். அவனது நெற்றி பின்னோக்கிச் சரிவாக உள்ளது, சொல்லப் போனால் கன்னம் என்பதே இல்லை.

நெற்றிப் பகுதியே இல்லாத மண்டையோட்டின் மூளையானது, இன்றைய மனித மூளையின் சில பகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. கீழ்த்தாடை குட்டைக் கன்ன எலும்பானது இன்னமும் மனிதனின் பேச்சுக்குத் தகுதியடையவில்லை.

அது போன்ற ஒரு நெற்றியையும், ஒரு கன்னத்தையும் கொண்ட ஒரு மனிதனால் நாம் செய்வதுபோல சிந்திக்கவோ பேசவோ முடியாது.

இப்போதுங்கூட, வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் பேச வேண்டி இருந்தான். பொதுவில் செய்யப்பட்ட வேலைக்குப் பேச்சுத் தேவைப்பட்டது. ஒரே வேலையைப் பலராகச் சேர்ந்து செய்கின்ற போது, அவர்கள் செய்யப் போகின்ற வேலையைப் பற்றி ஒத்துக் கொள்ள வேண்டி இருந்தது. தனது நெற்றி வளர்ச்சியடைகின்ற வரை, அவனது தாடை முக்கியமானதாக மாறுகின்ற வரை மனிதனால் காத்திருக்க முடியாது. ஏனெனில், பிறகு அதற்காக அவன்

ஆயிரக் கணக்கான ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்திருக்கும்.

ஆனால் மற்றவர்களுக்கு அவன் எங்ஙனம் தெரிவித்தான்?

அவனால் எவ்வளவு நன்றாக முடியுமோ அவ்வளவு செய்தான். தான் என்ன சொல்ல விரும்பினானோ, அதைத் தனது உடல் முழுவதையும் பயன்படுத்திச் சொன்னான். பேசுவதற்கு அவனுக்கு விஷேடமான உறுப்பு எதையும் அவன் இன்னமும் பெறவில்லையாத லால், அவன் தனது கைகளையும், தனது முக தசைகளையும், தனது தோல்களையும், தனது கால்களையும் பயன்படுத்தினான்.

நீங்கள் எப்போதாவது ஒரு நாயுடன் பேசியிருக்கிறீர்களா? தனது எசமானனிடத்தில் எதையாது சொல்ல விரும்புகின்ற போது, ஒரு நாய் அவனது கண்களைப் பார்க்கிறது, தனது மூக்கால் அவனை உரசுகிறது, அவனது தொடையில் தனது உள்ளங்கைகளை வைக் கிறது, தனது வாலை ஆட்டுகிறது, கிளர்ச்சியால் பிறண்டுகிறது, வாய் பிளக்கிறது. அது வார்த்தைகளைப் பயன்படுத்த முடியாது. ஆகவே தனது முழு உடலையும்—மூக்கு நுனியிலிருந்து வால் நுனி வரை—அது பயன்படுத்தி தனது தகவலைத் தெரிவிக்கிறது.

வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் வார்த்தை எப்படிச் சொல் வது என்பதை அறியாது இருந்தான். ஆனால் அவனுக்குக் கைகள் இருந்தன. தன்னைத் தானே புரிந்து கொள்வதற்கு அவை அவனுக்கு உதவின. வேலை செய்வதற்கு அவன் தனது கைகளைப் பயன் படுத்தினான், ஆனால் வேலை செய்வதற்கு அவனுக்கு ஒரு மொழியும் தேவைப்பட்டது.

''அதை வெட்டு'' என்று கூறுவதற்கு மாறாக, வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் தனது கையால் காற்றில் வெட்டினான்; ''அதை எனக்குக் கொடு'' என்று கூறுவதற்குப் பதிலாக, அவன் தனது கையை நீட்டினான்; ''இங்கே வா'' என்று கூறுவதற்குப் பதிலாக தன்னை நோக்கித் தனது கையை அலைத்துக் கொண்டான். தனது கைகளுக்கு உதவியாக அவன் தனது குரலையும் பயன் படுத்தினான்: தனது கைகளின் பாவனையை மற்ற மனிதனைக் கவனிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக அவன் கர்ஜிக்கவும் முணுமுணுக்கவும் கூச்சலிட வும் செய்தான்.

ஆனால் இவை எல்லாவற்றையும் நாம் எங்ஙனம் அறிகிறோம்?

தரையில் நாம் கண்டெடுக்கும் சிக்கிமுக்கிக் கல்லின் ஒவ்வொரு துண்டும், கடந்த காலத்தின் ஒரு துணுக்காகும். ஆனால் உடைந்து போன சைகைகளின் துணுக்குகளை நாம் எங்கே காண முடியும்? எப்போதோ தூசியாகிப் போய் விட்ட கைகளின் சைகைகளை நாம் எங்ஙனம் திரும்பக் கட்ட முடியும்?

வரலாற்றுக்கு முந்திய அம்மக்கள் நமது மூதாதையர்களாக மட்டும் இல்லாது இருந்திருப்பார்களேயானால், அது நமக்கு இயலாததாகவே போயிருக்கும். ஆகவே அவர்கள் நமக்கு ஒரு மரபுரிமையை விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

பேசும் கைகள்

முன்னர் ஒரு முறை ஓர் அமெரிக்க இந்தியர் லெனின்கிராடு பார்க்க வந்தார். அவர் நெஸ் பெர்ஸ் இனத்தைச் சேர்ந்தவர் ('ஊடுருவும் மூக்குகள்' என்பது பொருள்). ஜேம்ஸ் ஃபென்னிமோர் கூப்பர் இது பற்றி நிறைய எழுதியிருக்கும் போர்க் கோடரியைக் கையிலேந்திய இந்தியர்களைப் போலவே அவர் தோற்றமளிக்கவில்லை.

அமெரிக்காவிலிருந்து வந்த அந்தப் பார்வையாளர் பதனிட்ட மான்தோல் செருப்பு அணிந்திருக்கவில்லை; சிறகுகள் கொண்ட தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை. வியாபார நோக்கிலான சீருடை அணிந் திருந்தார். ஆங்கிலத்தையும் தனது சொந்த இன மொழியையும் சரள மாகப் பேசினார்.

ஆயினும், இந்த இரு மொழிகளோடு அவர் ஒரு மூன்றாவது மொழியையும் அறிந்திருந்தார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந் தியர்களிடையே காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்ற ஒன்று அது.

உலகத்தில் அதுதான் மிகவும் எளிமையான மொழியாக இருக்கிறது. அதைப் படிப்பதாக நாம் முடிவு செய்தால், வினை விகற்பங் களையும், வேற்றுமைப் பாகுபாடுகளையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. நம்மில் பலருக்கு ஒரு தலைவலியாக இருக்கும் வினைச் சொல்லில் கருத்துப் புனைவு நிலைகள், முடிவெச்சங்கள் மற்றும் வினையெச்சங்கள் எதும் அதில் இல்லை. சரியான உச்சரிப் பைக் கற்றுக் கொள்வது என்பது மிக எளிது. ஏனெனில் நாம் எதையுமே உச்சரிக்க வேண்டியதில்லை.

அந்தப் பார்வையாளர் பேசிய மூன்றாவது மொழி ஒலிகளின் மொழியல்ல, கையசைவுகளைக் கொண்ட ஒரு மொழியாகும்.

இந்த மொழியின் ஓர் அகராதி பெரும்பாலும் இது போலவே காணப்படும்.

சைகை மொழி அகராதியிலிருந்து ஒரு பக்கம்

வில் — ஒரு கை கற்பனை வில்லைப் பிடித்திருக்கும், மற்றொன்று கற் பனை நாணைப் பற்றி இழுக்கும்.

செவ்விந்தியர் கூடாரம் — ஒன்றோடு ஒன்று பிணைந்த விரல்கள் ஒரு கூடாரம் போல அமைக்கிறது.

வெள்ளை மனிதன் — ஒரு தொப்பியின் விளிம்பைச் சுட்டிக் காட்டு வது போல நெற்றிக்குக் குறுக்காக கை வருகிறது.

ஓநாய் — இரு காதுகளை அமைப்பதற்காக இரண்டு நீட்டிய விரல் களுடன் கூடிய கை.

முயல் — மேலே உள்ளது போல, இரண்டு நீட்டிய விரல்களுடன் கூடிய கை, முயலினுடைய இரண்டு நீளக் காதுகளையும், ஒரு வட்டமான முதுகையும் குறிக்க ஒரு வட்டமான இயக்கம்.

மீன் — ஒரு மீன் நீந்துவதை பிரதிபலிக்க விரல்கள் ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றன, கை குறுக்கும் நெடுக்குமாக அலைகிறது; அதன் வால் வலது இடது புறங்களில் திரும்புகிறது.

தவளை — ஐந்து விரல் நுனிகளும் மாறி மாறி ஒன்று சேர்ந்து தத்திச் செல்லும் இயக்கத்தைக் குறிக்கும்.

மேகம் — கை முட்டிகள் இரண்டும் தலைக்கு மேலாக இருந்து ஒரு மேகத்தைக் குறிக்கும்.

பனி — மேலே உள்ளது போல, கை முட்டிகள் இரண்டும் தலைக்கு மேலாக இருக்கும், ஆனால் விரல்கள் மெதுவாக முறுக்குப் பிரிந்து, பனித்திவலை மிதப்பது போல மாறும்.

மழை — மேலே உள்ளது போல, கை முட்டிகள் இரண்டும் தலைக்கு மேலாக இருக்கும், ஆனால் விரல்கள் முறுக்குப் பிரிந்து விரைந்து கீழே வந்து விடும்.

நட்சத்திரம் — மின்னுகின்ற ஒரு நட்சத்திரத்தைப் பிரதிபலிப்பது போல, இரண்டு விரல்கள் ஒன்று சேர்ந்து, பிறகு பிரிந்து தலைக்கு மேலாக வரும்.

இந்த மொழியில் ஒவ்வொரு வார்த்தையும் காற்றில் வரையப் படும் ஒரு படமேயாகும்.

மிகப் பண்டைக் காலத்தில் எழுதுவது, எழுத்துக்களாலான வார்த் தைகளால் அல்ல, ஆனால் படங்கள். ஆகவே மிகப் பண்டைய சை கைகளும் பட வார்த்தைகளாகவே இருந்தன.

இயற்கையாகவே, இந்திய இனக் குழுக்களுடைய சைகை மொழி, வரலாற்றுக்கு முந்திய கால மனிதனுடைய மொழி அல்ல. நவீன இந்திய இனக் குழுக்களுடைய சைகை மொழி, பிற எந்த வர லாற்றுக்கு முந்திய வரலாற்றில் ஒருபோதும் காண முடியாத அநேக வார்த்தைகளைக் கொண்டது. இங்கே மிகச் சமீபத்திய 'பட' வார்த்தைகள் இருக்கின்றன:

தானியங்கிவாகனம் — இரு சக்கரங்களைக் குறிக்க கைகளுடன் கூடிய இரு வட்டங்கள், பிறகு ஒரு கற்பனை திருப்புக் கருவியை இயக்கு தல்.

இரயில் — கைகளுடன் கூடிய இரண்டு வட்டங்கள், பிறகு எஞ்சினி லிருந்து நீராவி உயர்வதைக் காட்ட ஒரு கையையும் தோளையும் அலைபோல முன்னோக்கி நகர்த்திக் காட்டுவது.

இவை மிகவும் புதிய அடையாளங்கள். ஆனால் மிகப் பெரும்பாலும் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் சை கைகளை, அடையாள மொழி அகராதியிலும் நாம் காண்கிறோம்.

தீ — கூடாரத்திலிருந்து புகை வந்து கொண்டிருப்பதைக் குறிக்க கையையும் தோளையும் அலைபோல மேல்நோக்கி உயர்த்துவது.

வேலை — ஒரு கை காற்றை வெட்டுவது போல.

''வேலை'' என்று சொல்ல விரும்பிய போது, ஒருவேளை வர லாற்றுக்கு முந்திய கால மனிதர்கள் கையைக் காற்றில் வெட்டிக் காட்டியிருப்பார்கள் என்று யாருக்குத் தெரியும். மொத்தத்தில், முத லாவது சிக்கிமுக்கிக் கல் ஆயுதம் கோடரியாகத் தான் இருந்தது.

நமது சொந்த அடையாள மொழி

நமக்கென்று நமது சொந்த அடையாள மொழியை நாம் பாதுகாத்து வந்திருக்கிறோம்.

''ஆம்'' என்று நாம் சொல்ல விரும்பும் போது, நாம் எப்பொழுது மே வார்த்தை சொல்வதில்லை. மிகவும் அடிக்கடி, நாம் வெறுமனே தலையசைக்கிறோம்.

''அந்த இடத்தில்'' என்று நாம் சொல்ல விரும்பும் போது, நாம் சில வேளைகளில் சுட்டிக்காட்டுகிறோம். நாம் ஒரு விஷேட 'பேசுகிற விரலை'ப் பெற்றிருக்கிறோம், அது ஆட்காட்டி விரல் என்று அழைக் கப்படும்.

யாரையாவது நாம் வாழ்த்தும் போது, நாம் தலை குனிகிறோம். நாம் நமது தலையை ஆட்டுகிறோம், நமது தோள்களைக் குலுக்கு கிறோம், நமது கைகளைப் பிரித்துக் காட்டுகிறோம், நாம் முகஞ் சுளிக்கிறோம், நமது உதட்டைக் கடிக்கிறோம், எதன் மீதாவது நமது விரலை ஆட்டுகிறோம், மேசையைக் குத்துகிறோம், நமது காலை மிதிக்கிறோம், நமது கைகளை முறுக்குகிறோம், நமது கை களை இதயத்தில் வைத்து அழுத்துகிறோம், நமது கைகளை நீட்டு கிறோம், நமது கையைக் கொடுக்கிறோம், மேலும் முத்தமிடுவது போல அடையாளம் செய்கிறோம்.

இங்கே ஒரு முழுமையான உரையாடல் நடந்திருக்கிறது, இதில் ஒரு வார்த்தை கூடப் பேசப்படவில்லை.

இந்தப் 'பேச்சில்லாத மொழி', இந்த அடையாள மொழி இறந்து போய்விட விரும்பவில்லை. உண்மைதான், அதற்குச் சில சாதகங்களும் இருக்கின்றன. சில வேளைகளில் ஒரு தனிப்பட்ட சைகை, ஒரு நீண்ட பேச்சை விட அதிகமானதைச் சொல்ல முடியும். ஒரு நல்ல நடிகர் பேசாதுதான் இருப்பார். ஆனால் ஒரு அரைமணி நேரப் போக்கில் அவரது கண் புருவங்கள், கண்கள், உதடுகள் நூற்றுக் கணக்கான வார்த்தைகளுக்கு மேலாக நமக்குச் சொல்லிவிடும்.

ஆயினும், நமது பேச்சில் அடையாள மொழியைப் பயன்படுத்துவது நல்ல பழக்கவழக்கமல்ல.

வார்த்தைகளால் மிகவும் சுலபமாக நாம் சொல்ல முடிகின்ற போது, நமது கைகளையோ, கால்களையோ பயன்படுத்தி எதையாவது நாம் ஏன் சொல்ல வேண்டும்! மொத்தத்தில், நாம் வரலாற்றுக்கு முந்திய கால மக்களல்ல. நமது காலை மிதிப்பது, பொருட்களைச் சுட்டிக்காட்டுவது, நமது தலைகளை அலைப்பது போன்ற பழக்கங் களை மறந்து விடுவது நல்லது.

இனியும், நாம் என்ன சொல்ல விரும்புகிறோம் என்பதைத் தெரிவிப்பதற்கு அமைதியான மொழி ஒன்றே உள்ளது போன்ற நேரங்கள் அநேகம் வருவதுண்டு.

கொடி அடையாளங்களால் இரண்டு கப்பல்கள் ஒன்றோடு ஒன்று 'பேசுவதை' நாம் எப்போதாவது பார்த்திருக்கிறோமா? காற்றுக்கும், அலைகளுக்கும் மேலாகச் சில வேளைகளில் வெடிச் சத்தத்திற்கு மேலாக ஒருவர் பேசுவதைக் கேட்க குரல் தேவைப்படாது, ஊது கொம்பே தேவைப்படும். இது போன்ற நேரங்களில், நமது காதுகள் நமக்குப் பயன்பட மறுத்துவிடும், நமது கண்களை மட்டுமே நாம் நம்பி யிருக்க வேண்டி வரும்.

பெரும்பாலும் நாம் அடையாள மொழியைத் தான் அடிக்கடி பயன்படுத்துகிறோம். பாடம் நடந்து கொண்டிருக்கும் போது, ஆசிரி யருடைய கவனத்தை ஈர்க்க விரும்பினால் நமது கையையே நாம் உயர்த்துகிறோம். மேலும் இதுதான் சரியானது. ஒரே நேரத்தில் முப்

7–563

பது அல்லது நாற்பது குழந்தைகள் பேசிக் கொண்டிருப்பதை நம் மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

ஆக, அடையாள மொழி சில நல்ல கூறுகளைக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம், பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளில் அது தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது, அது இன்னமும் தேவைப்படவே செய்கிறது.

அடையாள மொழியைப் பேச்சு வெற்றி கொண்டது, ஆனால் முழுமையாக அல்ல. இப்போது வெல்லப்பட்டது வெற்றி பெற்றதனுடைய அடிமையாகி விட்டது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்பு காக்கஸஸைச் சேர்ந்த ஆர்மீனிய கிராமங்களில் ஒரு பெண், தனது கணவனைத் தவிர வேறு எந்த ஆணுடனும் பேசுவதற்கு அநுமதிக்கப்படவில்லை. மற்றொரு மனிதனிடம் அவள் எதையாவது சொல்ல விரும்பும் போது அடையாள மொழியைப் பயன்படுத்த வேண்டி இருந்தது.

சிரியா, ஈரான் மற்றும் உலகத்தின் அநேகப் பகுதிகளில் அடையாள மொழிகள் இருந்தன.

எடுத்துக்காட்டாக, ஈரான் ஷாவினுடைய அரண்மனையின் பணி பாட்கள் அடையாள மொழியை மட்டுமே பயன்படுத்த அநுமதிக்கப் பட்டார்கள். அவர்களுக்குச் சமமானவர்களோடு பேசிக் கொள்கின்ற போது மட்டுமே அவர்கள் வார்த்தைகளைப் பயன்படுத்தலாம். ‘பேச்சு உரிமை’ என்ற வார்த்தையின் முழுமையான பொருளில் சொல்வதானால் அந்தத் துரதிட்டம் பிடித்தவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது.

ஆக, எப்போதோ மறைந்து போனவற்றின் மீத மிச்சங்களை நமது இன்றைய காலத்திலும் காண்கிறோம்.

மனிதன் தனது மூளையை ஈட்டுகிறான்

காட்டிலுள்ள ஒவ்வொரு விலங்கும், எல்லாப் பக்கங்களிலிருந்தும் தன்னை வந்து அடையக் கூடிய ஆயிரக் கணக்கான அடையாளங்களைக் கேட்கவும், கவனிக்கவும் செய்கிறது.

ஒரு கிளை முறிகிறது—அது ஓர் எதிரியாக இருக்கக் கூடும்—தப்பி ஓடவோ, தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளவோ விலங்கு தயாராகிறது.

இடி முழங்குகிறது, காற்று காட்டை அலைக்கழிக்கிறது, கிளைகளிலிருந்து இலைகள் விழுகின்றன—புயற்காற்றிலிருந்து தப்ப விலங்குகள் தங்களது கூடுகளில், வளைகளில் ஒளிந்து கொள்கின்றன.

இலைகள் மற்றும் காளான்கள் அழுகல் நாற்றம் கலந்த மண் வாசனைக்கும் மேலாக இரை வாசனை வருகின்ற போது, அந்த வாசனையைத் தொடர்ந்து விலங்கும் ஓசைப்படாது பின்பற்றிச் செல்கிறது.

ஒவ்வொரு சருகின் சலசலப் பொலியும், ஒவ்வொரு வாசனையும், புல்லில் உள்ள ஒவ்வொரு தடயமும், ஒவ்வொரு ஒலியும் அல்லது ஊதல் ஒலியும் எதையோ ஒன்றைக் குறிக்கிறது, விரைவான கவனத்தையும் அது ஈர்க்கிறது.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் வெளி உலகத்து சமிக்கையை உற்றுக் கேட்டான். ஆயினும், ஒரு மாறுபட்ட சமிக் கையும் விரைவில் புரிந்து கொள்ளக் கற்றுக் கொண்டான். அவனது இனக்குழுவைச் சேர்ந்த மக்கள் அவனுக்கு அனுப்பிய அடையாளங் களும் இருந்தன.

எடுத்துக்காட்டாக, காட்டில் ஒரு மான் சென்றதற்கான அடை யாளங்களை, வரலாற்றுக்கு முந்திய கால ஒரு வேட்டைக்காரன் பார்த்தால், தனக்குப் பின்னால் உள்ள மற்ற வேட்டைக்காரர் களுக்குச் சமிக்கையாக தனது கையை ஆட்டியிருப்பான். அவர்கள் விலங்கைப் பார்க்கவில்லை, ஆனால் அவனது சமிக்கை அவர்களை விழிப்புடன் இருக்க வைத்தது. மானினுடைய நீண்ட கொம்பு களையும், சுரிப்புற்ற காதுகளையும் உண்மையிலேயே அவர்கள் பார்த் திருந்தது போல, தங்களுடைய ஆயுதங்களை மிகவும் இறுக்கமாகப் பிடித்து நிற்பார்கள்.

விலங்கினுடைய சுவடுகள் ஒரு சமிக்கை.

வேட்டைக்காரனின் கை நெக்கித் தள்ளுவது ஏதோ ஒரு சமிக்கை பற்றிய ஒரு சமிக்கை என்பதைப் பிறருக்குச் சொல்வதாகும்.

ஒவ்வொரு முறையும் வேட்டைக்காரர்களில் ஒருவன் தரையில் ஒரு சுவட்டைப் பார்த்தபோதும் அல்லது புதர்களுக்குக் கீழே ஊர்ந்து செல்லும் ஒரு விலங்கின் சலசலப் பொலியைக் கேட்ட போதும், இந்தச் சமிக்கை பற்றிய ஒரு சமிக்கையைப் பிற வேட்டைக்காரர்களுக்கு அவன் அனுப்புவான்.

இந்த வகையில், இயற்கை மனிதனுக்கு அளித்த ஒன்றிற்கு, தனது இனக்குழு உறுப்பினர்கள் தங்களுக்கிடையே செய்யும் சமிக்கைக்கு மேலாக மற்றுமொரு சமிக்கை பேச்சு ஆகியது.

தனது நூல்களில் ஒன்றில் இவான் பாவ்லோவ் மனிதனது பேச்சை ''சமிக்கைகள் பற்றிய ஒரு சமிக்கை'' எனக் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில், இத்தகைய பேச்சு சமிக்கைகள் ஒலிகளாகவும் சைகை களாகவுமே இருந்தன. ஒரு மனிதனுடைய கண்கள், காதுகளால் அவை பெறப்பட்டு ஒரு மையத் தொலை பேசி நிலையத்திற்கு அனுப்புவதைப் போல அவனது மூளைக்கு அனுப்பப்பட்டன. ஒரு 'சமிக்கை பற்றிய ஒரு சமிக்கை' —''ஒரு விலங்கு நெருங்கிக் கொண் டிருக்கிறது'' —மூளை பெற்றுக் கொண்ட போது, உடனடியாக உத் தரவைப் பிறப்பித்தது: கைகளே, உங்களது பன்றி வேட்டைக்குரிய ஈட்டியை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்; கண்களே, கவனமாக புதர் களைப் பாருங்கள்; காதுகளே, ஒவ்வொரு சலசலப்பையும், சடக் கொலியையும் உற்றுக் கேளுங்கள். அந்த விலங்கு இன்னமும் கண்ணிற் படவோ, காது கேட்டும் தொலைவிலோ இல்லை, ஆனாலும் அதற் காக வேட்டைக்காரன் தயாராக இருந்தான்.

அடையாளங்களும், கூக்குரல்களும் அதிகமாக, 'ஒரு சமிக்கை பற்றிய சமிக்கைகள்' மிகவும் அடிக்கடி மூளையை அடைய மனித மண்டையோட்டில் நெற்றிப் பகுதியில் உள்ள 'மைய நிலையத்திற்கும்' வேலை அதிகமாகிறது. இதன் பொருள் 'மைய நிலையம்' விரி வடைந்து கொண்டே போக வேண்டும் என்பதாகும். மூளையில்

இன்னும் அதிகமான செல்கள் தோன்றின, அவைகளுக்கிடையேயான தொடர்புகள் முன்னைக் காட்டிலும் சிக்கலானதாக மாறின. மூளையும் பெரிதாக மாறியது.

ஒரு பித்தெகாந்த்ரோபசுடையதைக் காட்டிலும் நியாண்டர்தால் மனிதனுடைய மூளை 400லிருந்து 500 கனசதுர சென்டிமீட்டர்கள் பெரிதாக இருந்தது. அவனது மூளை வளர்ச்சியுற்றதால், வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் சிந்திப்பதற்குக் கற்றுக் கொண்டான்.

'சூரியன்' என்பதைக் குறிக்கும் ஒரு சமிக்கையைப் பார்த்த போதோ, கேட்டபோதோ, சூரியனைப் பற்றி அவன் சிந்தித்தான். அந்நேரத்தில் நடு இரவாக இருந்தாலுங்கூட அவன் சிந்திப்பான்.

பன்றியைக் கொல்லும் ஈட்டியைக் கொண்டு வர வேண்டும் என அவன் சமிக்கை தரப்பட்டபோது, அந்நேரத்தில் அது எங்குமே காணப்படா விட்டாலுங்கூட, அவன் ஈட்டியைப் பற்றிச் சிந்தித்தான்.

பொதுவில் செய்யப்பட்ட வேலை, பேசுவதற்கு மனிதனுக்குக் கற்றுத் தந்தது, பேசுவதற்கு அவன் கற்றுக் கொள்ள வேண்டி இருந்த போது, அவன் சிந்திக்கவும் கற்றுக் கொண்டான்.

மனிதன் இயற்கையிடமிருந்து தனது மூளையைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளவில்லை. தனது கைகளுடைய உழைப்பின் மூலமாக அதைப் பெற்றான்.

நாக்கும் கைகளும் எங்ஙனம் இடம் மாற்றிக் கொண்டன

மிகக் குறைவான கருவிகளே இன்னமும் இருந்ததாலும், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனது அநுபவம் இன்னமும் வரையறைக் குட்பட்டதாக இருந்ததாலும், ஒருவரது திறமைகளை மற்றவருக்குக் கற்றுக் கொடுக்க மிகவும் எளிமையான அடையாளங்களே போதுமானவையாக இருந்தன.

ஆனால் மனிதனுடைய உழைப்பு மிகவும் பன்முகப்பட்டதாக மாற, அடையாளங்களும் மிகவும் பன்முகப்பட்டவையாக மாறின. ஒவ்வொரு பொருளுக்கும் சிறப்பான ஓர் அடையாளத்தை வைத்துக் கொள்ள வேண்டி இருந்தது, மேலும் அந்த அடையாளம் அந்தப் பொருளைத் துல்லியமாக விளக்க வேண்டி இருந்தது. இதனாலேயே பட அடையாளம் நடைமுறைக்கு வந்தது. வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் விலங்குகள், கருவிகள், மரங்கள் மற்றும் பிற பொருள்களை காற்றில் வரைந்தான்.

எடுத்துக்காட்டாக, ஒரு முள்ளம் பன்றியை அவன் விவரிக்க விரும்பினால், அதைக் காற்றில் வரைவதோடு மட்டும் அவன் நின்றுவிடவில்லை. அப்போதைக்கு அவனே ஒரு முள்ளம் பன்றியாகவும் மாறினான். ஒரு முள்ளம் பன்றி எப்படி நிலத்தைப் பறிக்கும் என்பதையும் அது தனது உள்ளங்கைகளைப் பக்கவாட்டில் பரப்பி முள் மயிர் இறகைச் சிலிர்க்கும் என்பதையும் மற்றவர்களுக்கு அவன் காட்டினான்.

சைகை மூலமாக இந்தக் கதையைச் சொல்ல வேண்டியதனால், வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் நமது காலத்தின் ஓர் உண்மையான ஓவியனைப் போல கூர்ந்து கவனிக்க வேண்டியவனாக இருந்தான்.

''நான் நீர் குடித்திருக்கிறேன்'' என்று நாம் சொல்லும் போது, இதை யாரிடம் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோமோ அவரால் நம்முடைய வார்த்தைகளிலிருந்து நாம் குடித்தது கண்ணாடிக் குவளையிலிருந்தா, போத்தலிலிருந்தா, கையைக் குவித்துக் கொண்டா என்பதைப் புரிந்து கொள்ள முடியாது.

அடையாள மொழி வாயிலாக எங்ஙனம் தான் புரிந்து கொள்வது என்பதை இன்னமும் மறந்து போயிராத ஒருவன் இதையே வித்தியாசமான முறையில் கூறுவான்.

அவன் தனது குவித்த கைகளை வாய்க்கு நேராகக் கொண்டு வருவான், கற்பனை நீரை நாவால் துழாவிக் குடிப்பான். அவனைக் கவனிப்பவர்கள் அந்நீர் எவ்வளவு சுவையாகவும், குளிர்ச்சியாகவும், புத்துணர்ச்சி ஊட்டுவதாகவும் உள்ளது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

''பிடி'' அல்லது ''வேட்டை'' என்று நாம் கூறுவோம். ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் வேட்டைக்காட்சி முழுவதையும் நடித்துக் காட்டிவிடுவான்.

அடையாள மொழியானது சில வேளைகளில் மிகவும் உணர்ச்சி விளக்கமானதாக இருக்கும், ஆனால் மற்ற நேரங்களில் அதைக் காண முடியாமற் போகும்.

அது உணர்ச்சி விளக்கமானதாக இருந்தது, ஏனெனில் அது ஒரு நிகழ்ச்சியையோ, பொருளையோ மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது. ஆனால் அதுவும் கூட மிகக் குறைவான அளவிலேயே இருந்தது.

அடையாள மொழியில் நாம் நமது வலக் கண்ணையோ, இடக் கண்ணையோ சுட்டிக்காட்ட முடியும், ஆனால் வெறுமனே ''கண்'' என்று கூறுவது மிகவும் கஷ்டமானது.

ஒரு பொருளைத் தெளிவாக விளக்க நாம் அடையாளங்களைப் பயன்படுத்த முடியும், ஆனால் எந்த அடையாளமும் பிண்டமல்லாத கருத்தை விளக்க முடியாது.

அடையாள மொழிக்கு வேறு குறைபாடுகளும் உண்டு. இரவு நேரத்தில் நம்மால் அடையாள மொழியாக எதையும் கூற முடியாது. ஏனெனில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை ஒருவரும் காண முடியாதாகையால் இரவில் எந்த அளவுக்கு நமது கைகளை அலைக்கிறோம் என்பது முக்கியமில்லாது போகிறது. பட்டப் பகல் வெளிச்சத்தில் கூட ஒருவரையொருவர் எப்பொழுதுமே அடையாள மொழியைப் புரிந்து கொள்ள முடியாது.

ஸ்டெப்பி நிலத்து மக்கள் அடையாள மொழியில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள முடியும், ஆனால் காட்டில், வேடுவர்கள் ஒருவரோடு ஒருவர் அடர்த்தியான புதர்களால் பிரிக்கப்பட்டிருக்கும் போது, இது முடியாது.

அக்காலத்தில் தான் ஒருவனை ஒருவன் புரிந்து கொள்வதற்குத் தங்களுக்கு ஒலிகள் தேவைப்படுகின்றன என்பதை மக்கள் கண்டறிந்தார்கள்.

ஆரம்பத்தில், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனின் நாக்கும்

தொண்டையும் மிகவும் கட்டுப் பாடற்றவையாக இருந்தன. ஓர் ஒலியானது மற்றொரு ஒலிபோலவே இருந்தது. தனிப்பட்ட ஒலிகள் ஒருங்கிணைந்த போது உறுமலாகவும், கத்தலாகவும், கிறீச் கொலியாக வும் இருந்தன. கடைசியாக தனது நாக்கைத் தெளிவாகப் பேசவைப் பதற்கு மனிதனுக்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டது.

எல்லா அடையாளங்களுக்குமே நாக்கின் இயக்கத்தைப் பார்ப்பது முடியாததாகவே இருந்தது, ஆனால் அவைகளது மிகப் பெரிய அனுகூலம் அவைகளைக் கேட்க முடிந்தது ஆகும்.



சில இனத்தைச் சேர்ந்த மக்கள் ''நடப்பதற்கு'' என்று வெறுமனே சொல்ல மாட்டார்கள். ''உறுதியாக நடக்க'', ''கனத்த மனிதர் களைப்போல அழுத்தமாக நடக்க'', ''முன்னோக்கி விரைந்து ஓட'', ''முறுக்கிக் கொண்டு நடக்க'', ''லேசாக நொண்டியபடி தலையை முன்னுக்கு வளைத்தபடி நடக்க'' என்று அவர்கள் கூறுவார்கள்.

ஒலியில் உள்ள இத்தகைய ஒவ்வொரு வெளிப்பாடும் ஒரு படம் போல ஒரு மனிதனுடைய நடக்கும் பாணியின் ஒவ்வொரு விவரத் தையும் தெளிவாக விளக்குகிறது. அவற்றில் உறுதியான நடை, அரு வருப்பாக நடப்பவனுடைய உறுதியான நடை, தனது முழங்கால் களை வளைக்காமல் விறைப்பாக நடப்பவனுடைய உறுதியான நடை ஆகியன அடங்கும்.

எத்தனை விதமான நடக்கும் பாணிகள் இருக்கின்றனவோ அத் தனை விதமான உணர்ச்சி வெளிப்பாடுகள் இருக்கின்றன.

இந்த வகையில் பட அடையாளமானது மேல் நிகழ்வாக ஒலி அடையாளத்தால் மாற்றப்பட்டது.

இங்ஙனமாகத்தான் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன், அடை யாளங்கள் மற்றும் வார்த்தைகள் மூலமாகப் பேசக் கற்றுக் கொண் டான்.

நதியும் அதனது அடி மூலங்களும்

பழைய காலத்தை நோக்கி மேற்கொண்ட பயணத்தின் போது நாம் என்ன கண்டுபிடித்தோம்?

ஒரு கண்டுபிடிப்பாளர் நதிநெடுக தனது பயணத்தைச் செய்த போது, அடி மூலத்தைக் கண்டுபிடித்தது போல நாமும், மனித அநு பவங்கள் என்ற மிகப் பெரிய நதியாக பிரவாகமெடுக்கவிருந்த ஒரு சிறிய ஓடைக்கு வந்திருக்கிறோம்.

அங்கே, நதியின் ஊற்றுக் கண்ணில், மனித சமூகத்தின், மொழி யின் மற்றும் காரணத்தின் தொடக்கங்களையும் நாம் கண்டோம்.

ஒவ்வொரு துணையாறுகளோடும் அது சேர்ந்த உடனேயே ஒரு நதி மிகவும் ஆழமாவதைப் போல, மனித அநுபவங்கள் என்ற ஆறும் ஆழமாகவும் அகலமாகவும் மாறுகிறது. ஏனெனில் ஒவ்வொரு புதிய தலைமுறையும் தான் சேகரித்த அநுபவங்களை அதனோடு சேர்க்கிறது.

தலைமுறைக்குப் பின் தலைமுறையாக கடந்த காலத்தில் மறைந்து போயின. மனிதர்களும், இனக் குழுக்களும் எந்த விதத் தடயமும் இன்றி மறைந்து போயின, நகரங்களும் கிராமங்களும் துணுக்கு

களாகி தூசியாகி, எப்போதுமே இல்லாதவாறு போயின. காலத்தின் அழிவுக் கரங்களை எதிர்த்து நிற்கக் கூடிய எதுவுமே இந்த உலகத்தில் இருந்ததில்லை என்பது போலக் காணப்படுகிறது. ஆனால் மனித இனம் சேகரித்த அநுபவம் தப்பிப் பிழைத்தது. அது காலத்தை வென்றுவிட்டது, அது நமது மொழியில், திறமைகளில், விஞ்ஞானங்களில் உயிர் வாழ்கிறது. ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், வேலையில் ஒவ்வொரு அசைவும், விஞ்ஞானத்தின் ஒவ்வொரு கருத்துப் படிவமும் கடந்த எல்லாத் தலைமுறைகளினுடைய அநுபவங்களினின்றும் ஒருங்கு சேர்க்கப்பட்டவையாகும்.

ஒரு நதியின் கிளை நதிகளில் ஒன்று கூட எப்போதுமே இல்லாது போய்விடாதது போல இந்தத் தலைமுறைகளின் உழைப்பெல்லாம் வீணாகிப் போய்விடவில்லை. நமக்கு முன்னால் வாழ்ந்த மக்கள், இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய எல்லாருடைய உழைப்பும் மனித அநுபவம் என்ற ஆற்றில் கலந்து இருக்கிறது.

நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் தொடக்கமாக நதியின் ஊற்றுக் கண்ணை நாம் அடைந்து விட்டோம். இவ்வாறாகத்தான் மனிதன், வேலை செய்கின்ற, பேசுகின்ற, சிந்திக்கின்ற ஓர் உயிருருவாக வெளிவந்தான்.

நம்மிடமிருந்து குரங்கைப் பிரித்த நூறு ஆயிரக்கணக்கான ஆண்டுகளை நாம் திரும்பிப் பார்க்கும் போது, பிரெடெரிக் எங்கெல்ஸ், உழைப்பே மனிதனை உருவாக்கியது எனக் கூறிய பொன் மொழிகளை நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.



கைவிடப்பட்ட வீட்டில்

நிலையான முடிவாக மக்கள் ஒரு வீட்டை விட்டு வெளியேறுகின்ற போது, அவர்கள் விட்டுச் சென்ற பொருட்கள் அங்கு அப்பொழுதுமே நிலையாக இருக்கும். அங்கு துளையில் அடைக்கப்பட்ட காகிதம், உடைந்த மட்பாண்டத் தொகுதிகள், காலி கூஜாக்கள் காலியான அறைகளில் சிதறிக்கிடக்கும். குளிர்ந்து போன அடுப்பின் மீது நொறுங்கிப்போன பானைகளும், தட்டுகளும் குப்பைக் கூளமாய் இருக்கின்றன. இந்த அலங்கோலத்தைக் கவலையோடு பார்த்தபடி அடிப்பகுதி உடைந்துபோன ஒரு விளக்கானது சன்னல் படிக்கட்டில் கிடக்கிறது.

ஒரு மூலையில் ஒரு பழைய கைவைத்த நாற்காலி உள்திணிக்கப்பட்டபடி அமைதியாகச் சிறுதுயில் கொண்டிருக்கிறது. அதன் பழைய குடியிருப்பாளர்களோடு அது சேர்ந்து வெளியேறவில்லை, ஏனெனில் இதற்கும் ஒரு கால் போய்விட்டது.

அங்கிருந்த சில நொறுங்கிப் போன மீதமிச்சங்களைக் கொண்டு அக்குடும்பம் இங்கு எங்ஙனம் வாழ்ந்தது என்பதைச் சித்தரிப்பது மிகவும் கஷ்டமானது. ஆனால் இதே போன்ற பிரச்சினையைத்தான் ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் சந்திக்க வேண்டி இருக்கிறது. ஒரு வீட்டிற்குள் நுழைவதில் எப்பொழுதுமே அவர்தான் கடைசி ஆள். இப்போதுங்கூட ஒரு வீட்டைக் கண்டுபிடித்தாலே அவர் அதிர்ஷ்டக்காரர்தான். அதன் கடைசி குடியிருப்பாளர்கள் அதைக் கைவிட்டு விட்டுப் போன ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு அவர் வருகிறார். சில நேரங்களில் அவர் காண்பதெல்லாம் நொறுங்கிய சுவர்களும், அடித்தளத்தின் சில பகுதிகளுமேயாகும். இங்கு ஒவ்வொரு உடைசலும் ஒரு கண்டுபிடிப்பு, ஒவ்வொரு துணுக்கும் ஓர் அதிர்ஷ்டம்.



அதனுடைய மொழியைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவர்க்கு ஒரு பழைய வீடு நிறையவே சொல்ல முடியும்!

பழைய கல்லாலான சிதைந்த சிறு தூண்களும், பாசி படிந்த சுவர்களும் ஏராளமான மக்களையும் நிகழ்ச்சிகளையும் பார்த்திருக்கிறது!

ஆனால் பிற வீடுகள், உலகத்தின் மிகப் பழமையான வீடுகள் — வரலாற்றுக்கு முந்திய கால மனிதனது குகைகள் — இன்னும் அதிகமானவற்றைச் சந்தித்திருக்கின்றன.

ஐம்பதனாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மக்கள் வாழ்ந்த குகைகளும் கூட இருக்கின்றன! அதிர்ஷ்டவசமாக, மலைகள் எல்லாம் நிலைத்து நிற்கக் கூடிய பொருட்களால் ஆகி இருக்கின்றன, மனிதக் குடியிருப்புகளின் சுவர்கள் நொறுங்கிப் போவதைப் போல, ஒரு குகையினுடைய சுவர்கள் நொறுக்குவதில்லை.

இங்கு அது போன்ற ஒரு குகை. அது தனது குடியிருப்பாளர்களை மாற்றிக் கொண்டே இருக்கிறது. அந்தக் குகையின் முதல் எசமானனாக நிலத்தடி நீரோட்டம் இருந்தது. அது களியையும், மணலையும், கூழாங்கற்களையும் கொண்டுவந்தது.

பிறகு நீர் வழிந்து போனது. குகையில் வசிப்பதற்காக மக்கள் வந்தார்கள். அவர்களைப் பற்றி அந்தக் களியில் கண்டெடுக்கப்பட்ட கரடு முரடான சிக்கிமுக்கிக் கல் வெட்டுக் கருவிகள் ஓரளவுக்குச் சொல்லும். இறந்த விலங்குகளை உரிப்பதற்கும், எலும்புகளிலிருந்து புலாலை வெட்டுவதற்கும், நல்லியைப் பெறுவதற்காக எலும்புகளை நொறுக்கவும் இத்தகைய வெட்டுக் கருவிகளை வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் பயன்படுத்தினான். இதன் பொருள் இந்த மக்களெல்லாம் வேடுவர்களாக இருந்தனர் என்பதாகும்.

அநேக ஆண்டுகள் கடந்தன. வேடுவர்கள் குகையைக் கைவிட்டு விட்டார்கள். பிறகு புதிய குடியிருப்பாளர்கள் உள்ளே நுழைந்தார்கள். குகையின் சுவர்கள் மெதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கின்றன. அது குகைக் கரடியால் செய்யப்பட்டது. தனது வீட்டினுடைய கரடுமுரடான கற்சுவர்களின் மீது மயிரடர்ந்த தனது தோலை அது உரசியதால் ஏற்பட்டது. இங்கு தான் கரடி அல்லது, இன்னும் சரியாகச் சொன்னால், இங்குதான் அதனுடைய குறுகிய மூஞ்சியுடன் கூடிய அகன்ற நெற்றி கொண்ட மண்டையோடு இருக்கிறது.

சேமிப்புகளின் அடுத்த அடுக்கில் மனிதக் குடியிருப்பின் சுவடுகளை நாம் மேலும் காண முடிகிறது. அவை கட்டைக்கரி, கூடாரத்து சாம்பல்கள், நொறுங்கிய எலும்புகள், சிக்கிமுக்கிக் கற் கருவிகளும், எலும்புக் கருவிகளும் ஆகும். குகையில் வாழ்வதற்காக திரும்பவும் மக்கள் வந்தார்கள். நாம் அவர்களைப் பார்க்க முடியாது, ஆனால் அவர்களைப் பற்றிய அநேக விஷயங்களை நம்மால் கண்டு பிடிக்க முடியும். அவர்கள் விட்டுச் சென்ற சிதைவுகளை மட்டிலுமே நாம் பார்க்க வேண்டி இருக்கிறோம். அநுபவமில்லாத ஒருவன் இவை வெறுமனே சிக்கிமுக்கிக் கற்களின் துண்டுகள் என்று கூறுவான். ஆனால் நாம் மிக நெருக்கமாகப் பார்த்தால், கரடுமுரடான வெளித் தோற்றம் வெட்டுகருவி மற்றும் தமரூசிக்கானது என்பதை நம்மால் கூற முடியும். கருவிகளில் ஒன்றினுடைய வெட்டும் விளிம்பானது ஒரு கத்தியைப் போல இருக்கிறது, அதே வேளை மற்றொன்று தமரூசி போல கூர்மையான முனையைக் கொண்டிருக்கிறது.



இவை நமது தற்காலத்திய கருவிகளுக்கு முன்னோடி போன்றவை. இவைகளில் மிகவும் பழமையானது நமது சுத்தியலாகும்: அது ஒரு வட்டமான சிக்கிமுக்கிக் கற் கோடரி ஆகும்.

குகையின் குப்பைக் கூளமான அடிப்பரப்பை நாம் தோண்டுவோமானால், அந்தச் சுத்தியலுக்கு மிகவும் தள்ளி இல்லாது ஒரு பட்டடைக் கல்லை நாம் கண்டுபிடிப்போம்.

சுத்தியல் சிக்கிமுக்கிக் கல்லால் ஆனது.

பட்டடைக் கல் எலும்பால் ஆனது.

இது தனது வேலையை நம்பிக்கையோடு செய்திருந்தாலும் நாம் பார்த்திருக்கின்ற பட்டடைக் கற்களைப் போல காணப்படவில்லை. இது வெட்டவும் வடுப்படுத்தவும் பட்டிருக்கிறது, ஏனெனில் ஒரு கருவியால் உருமாற்றப்பட்டிருக்கிற போது பட்டடைக்கல் வேகமான தாக்குதல்களைப் பெற்றிருக்கிறது.

இந்தக் கருவிகளிலிருந்து நாம் எதைக் கற்றுக் கொள்ள முடிகிறது?

முன்னால் இருந்தவர்களை விட குகையின் புதிய மனிதக் குடியிருப்பாளர்கள் மிக அதிகமாகவே முன்னேறி இருந்தார்கள் என்பதை அவை நமக்குக் கூறுகின்றன. கடந்து போன ஆயிரக் கணக்கான ஆண்டுகளில், மனிதனுடைய உழைப்பு வித்தியாசமானவைகளாகவும், பன்முகப்பட்டவைகளாகவும் மாறி இருந்தன.

முதல் குடியிருப்பாளர்கள் எந்தவகையான வேலையைச் செய்வதானாலும் கூர்மையாக்கப்பட்ட அதே கல்லையே பயன்படுத்தினார்கள். இப்போது வெட்டுவதற்கு ஒரு கருவியும், கொத்துவதற்கு ஒன்றும், செதுக்குவதற்கு ஒன்றுமாக இருந்தன. கூரிய ஒடுக்கமான முனையோடு இருந்த கருவி விலங்கின் தோலில் துளையிட்டு, உடையாக வெட்டுவதற்குப் பயன்பட்டது. கூரிய அம்பு முனையானது பன்றி வேட்டைக்குரிய ஈட்டியாகும்.

இப்போது மனிதனுக்கு அதிகமான வேலையும், அதிகமான அக்கறைகளும் இருந்தன. காலங்கள் மாறிவிட்டன, தட்பவெப்ப நிலையானது குளிராகவும் கடுமையாகவும் இருந்தது. இப்போது மனிதன் கரடித்தோலாலான உடை பற்றியும், குளிர்காலத்திற்காக உணவு சேமித்துவைப்பது பற்றியும், வசிப்பதற்கு ஒரு வெதுவெதுப்பான இடம் பற்றியும் கவலைப்பட வேண்டி இருந்தது. அங்கே பல்வேறு வேலைகள் இருந்தன, அவைகளுக்காக பல திறப்பட்ட கருவிகளும் வேண்டியிருந்தன.

இவ்வாறாக, நமது சொந்தத் தொலைதூர மூதாதையர்களின் குடியிருப்புக்களில், நமது சொந்தக் கருவிகளின் பொருட்களின் ஆதி மூலங்களை நாம் காண்கிறோம்.

ஆயினும், நமக்காகக் காலம் பாதுகாத்து வைத்திருந்த பொருட்களை மட்டுமே நாம் காண முடிகிறது. மேலும் காலம் என்பது ஓர் அற்பமான பாதுகாவலன். மிகவும் நிலைத்து நிற்கக் கூடிய சாதனங்களால் ஆன பொருட்களை மட்டுமே அது பாதுகாக்கிறது. இந்த நேர்வில் அது கல்லாலோ, எலும்பாலோ ஆன பொருட்களை மட்டிலுமே பாதுகாத்தது. மரத்தாலோ, விலங்கின் தோல்களாலோ ஆன எல்லாவற்றையுமே காலம் இழந்து விட்டது. இது காரணமாகவே நாம் தமரூசியைக் காண்கிறோம், ஆனால் இது தயாரித்து உதவிய துணியை நாம் காண முடியவில்லை; இது காரணமாகவே நாம் சிக்கிமுக்கிக் கல் அம்புத் தலையைக் காண்கிறோம், ஆனால் மரத்தாலான எறிபடையைக் காண முடியவில்லை.

நாம் காணும் எஞ்சி இருக்கின்ற பொருட்களைக் கொண்டு, மறைந்து போன பொருட்களை நாம் ஊகிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் காணுகிற மங்கலான சுவடுகளையும் துண்டுகளையும் கொண்டு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தூசியாகிப் போய்விட்ட பொருட்களை நாம் திருத்திக்கட்ட வேண்டியுள்ளது.

எனினும், நமது தேடுதலைத் தொடரலாம்.

ஓர் இடிபாட்டை ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் தோண்டுகின்றபோது, வழக்கமாக அவர் மேற் பகுதியிலிருந்து கீழ்ப்பகுதி

நோக்கி தனது பணியைத் தொடர்கிறார். முதலில் முதலாவதாக இருக்கின்ற அடுக்குகள் ஆராயப்படுகின்றன, பிறகு மேன் மேலும் கீழாக பூமிக்குள், வரலாற்றின் ஆழத்திற்குள் செல்கிறார். தொல் பொருள் ஆராய்ச்சியாளர் புத்தகத்தைப் பின்புறத்திலிருந்து படித்துக் கொண்டிருக்கிறார், கடைசி அத்தியாயத்தில் தொடங்கி முதல் அத் தியாயத்தில் முடிக்கிறார். நமது கதையை நாம் மாறுபட்ட முறையில் தொடங்கியிருக்கிறோம். மிகவும் ஆழமான படுகைகளிலிருந்து, குகை வரலாற்றின் முதலாவது அத்தியாயங்களிலிருந்து நாம் தொடங்கியிருக் கிறோம். இப்போது நாம் உயர உயரச் செல்கிறோம், தற்காலத்திற்கு மிகமிக அண்மையில் வந்து கொண்டிருக்கிறோம்.

பிறகு என்ன நடந்தது?

படுகைகளின் அடுக்குகளைப் பயில்வதன் மூலம், மக்கள் குகையைப் பல முறை கைவிட்டுச் சென்றதையும், திரும்பவும் பல முறை வந்ததையும் நாம் காண்கிறோம். குகையில் மக்கள் இல்லாத போது கழுதைப் புலிகளும், கரடிகளும் வசிப்பதற்காக அங்கு வந்தன, அதே வேளையில் அடுக்கிற்கு மேல் அடுக்காக தூசியானது உட்புறம் சேர்ந்திருக்கிறது. மேற் பாறையின் துண்டுகள் குகையின் தரையில் விழுந்திருக்கும், அநேக ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய மனித இனக் குழு திரும்பவும் அதைக் கண்டெடுத்தபோது, முன்னாளைய குடி யிருப்பாளர்களைப் பற்றி அவர்களுக்குச் சொல்ல எதுவுமே இருந்த தில்லை.

ஆண்டுகள், நூற்றாண்டுகள், ஆயிரமாண்டுகள் கடந்தன. வெளிப் புறங்களில் மக்கள் வீடுகளைக் கட்டத் தொடங்கினார்கள், குகைகளில் இயற்கைப் பாதுகாப்பைப் பயன்படுத்துவதை அவர்கள் நிறுத்திக் கொண்டார்கள். மேலும் இறுதியாக குகை கைவிடப்பட்டது. அவ்வப் பொழுது பசுமையான மலைச் சரிவுகளில் தங்களது மந்தைகளை ஓட்டிச் செல்லும் மேய்ப்பர்கள் ஒன்றிரண்டு நாட்களுக்கு இங்கு தங்கு வதுண்டு, அல்லது மழையால் பிடித்துக் கொள்ளப்பட்ட பயணிகள் குகையில் பாதுகாப்பைத் தேடிச் செல்வதுண்டு.

அதன் பிறகு கடைசியும் இறுதியுமான குகை வரலாற்றின் அத்தியாயம் தொடங்குகிறது. மக்கள் திரும்பவும் குகைக்கு வந்தார் கள். ஆனால் இம் முறை அவர்கள் மறைவிடத்தைத் தேடி வரவில்லை, அங்கு ஒரு காலத்தில் வாழ்ந்திருந்த மக்களைப் பற்றி தங்களால் என்னவெல்லாம் முடியுமோ அவைகளைக் கண்டுபிடிப்பதற்காக வந் தார்கள்.

தாமதமாக வந்த இவர்கள் பண்டைக் காலக் கற்கருவிகளைத் தோண்டுவதற்காக உருக்காலான நவீன கருவிகளோடு வந்து சேர்ந் தார்கள்.

ஒன்றன் பின் ஒன்றாக அவர்கள் அடுக்கைத் தோண்டிய போது, பண்டைக்காலத்தை அறியும் இந்த ஆராய்ச்சியாளர்கள் குகை வர லாற்றை ஆதித் தொடக்கத்திலிருந்து கடைசிவரை படித்தார்கள்.

அவர்கள் கண்டெடுத்த கருவிகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, பல்வேறு விதமான திறமைகளையும், மனித அநுபவங்களையும் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொன்றுக்கு எப்படி வளர்ந்திருந்தன என்பதை

அவர்களால் பார்க்க முடிந்தது. வரலாற்றுக்கு முந்திய காலம் கடந்த பிறகு, கரடுமுரடான கருவிகள், முன்னேற்றமாகவும் அருமை யானதாகவும், மிக வித்தியாசப்பட்டும் இருந்த கருவிகளால் மாற்றம் பெற்றதை அவர்கள் கண்டார்கள். இங்ஙனமாக, கரடுமுரடான கோ டரி முதலில் முக்கோண வடிவமைந்த வெட்டுக் கருவிகளாலும் அரைவட்ட வடிவமான சுரண்டு கருவிகளாலும் இடம் பெயர்ந்தன, அதன் பிறகு நன்கு வடிவமைக்கப்பட்ட சிக்கிமுக்கிக் கற்கலாளான பல்வேறு மாதிரியான அம்புத்தலைகள், சுரண்டு கருவிகள், துளையிடு கருவிகள், தமரூசிகள் தோன்றின. பின்னர் புதிய பொருட்களைக் கொண்டு கருவிகள் செய்யப்பட்டன. எலும்பையும் மான் கொம் பையும் கொண்டு சிக்கிமுக்கிக் கருவிகளின் தனித்தனி பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டன. எலும்பு, விலங்கின் தோல்கள் மற்றும் மரக்கட்டை இவற்றில் வேலை செய்வதற்கு விஷேடமான கருவிகள் இருந்தன. வரலாற்றுக்கு முந்திய கால மனிதன், எலும்பு உடைக்கும் கருவி செய்ய சிக்கிமுக்கிக் கல்லையும், விலங்குத் தோல்களுக்காக ஒரு சுரண்டு கருவியையும், கடற் சிப்பிகளைத் துளையிடுவதற்காக துளையிடு கருவியையும் பயன்படுத்தினான். காலம் செல்லச் செல்ல அவனது செயற்கை வளைநகங்களும், பற்களும் பல்வகையில் மிகவும் கூரானதாக மாறிக் கொண்டு வந்தன. இரையைப் பிடிப்பதற்காக அவன் பயன்படுத்திய கை மிகவும் நீளமாகிக் கொண்டே வந்தது.

நீளமான தோள்

வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் ஒரு சிக்கிமுக்கிக் கல் அம்புத் தலையை ஒரு குச்சியுடன் சேர்த்த போது, அவன் தனது தோளை நீளப்படுத்திக் கொண்டான்.

இது அவனை வலுவுள்ளவனாகவும் துணிச்சல் உள்ளவனாகவும் ஆக்கியது.

முன்னதாக, அவன் திடீரென்று ஒரு கரடியைச் சந்தித்தால், அச்சத்தில் பயந்து ஓடியிருப்பான், மயிரடர்ந்த குகை வாசியோடு சண்டையிட மிகவும் அஞ்சமுற்றான். ஒரு சிறிய விலங்கை அதிகமான சிரமமில்லாமல் அவனால் பிடித்துக் கொல்ல முடிந்தது. ஆனால் கரடியோடு சவால் விடுகின்ற அளவுக்கு அவன் துணியவில்லை. கரடியின் கூர்மையான நகங்களிலிருந்து தன்னால் ஒருபோதும் தப்பிக்கவே முடியாது என்பதையும் கூட அவன் நன்றாகவே அறிந் திருந்தான்.

ஆனால் இது எல்லாம் அவன் பன்றி வேட்டைக்குரிய ஈட்டியைப் பெற்றிருந்தற்கு முன்புதான். பன்றி வேட்டை ஈட்டி அவனைத் துணிச்சல் மிக்கவனாக்கியது. இப்பொழுது அவன் கரடியைப் பார்த்த போது அச்சத்தால் பயந்து ஓடவில்லை. ஆனால் தைரியத்தோடு அதைத் தாக்கினான். பன்றி தனது பின்னங்கால்களில் எழுந்து நின்று வேடுவனைத் தாக்க ஆரம்பிக்கும். ஆனால் அதனது உள்ளங்கை அவனைச் சென்று அடைவதற்கு முன்னமேயே, வேடுவனுடைய கூர் மையான சிக்கிமுக்கிக் கல் அம்புத் தலையானது அதனுடைய மயிர டர்ந்த வயிற்றுக் குள்ளாகப் பாய்ந்தது. ஏனெனில் பன்றி வேட்டை

ஈட்டியானது கரடியின் வளைநகங்களை விட மிகவும் நீளமானதாக இருந்தது.

அடிப்பட்ட கரடி சீற்றத்தோடு முன்னே பாய, ஈட்டியானது அதன் வயிற்றுக்குள் இன்னும் ஆழமாகப் போயிருக்கும்.

ஆனால் வேடுவனின் ஈட்டி உடையுமேயானால் அவனுக்கு எந்த வாய்ப்புமே இருந்திருக்காது.

பிறகு கரடி அவன் மீது பாய்ந்து, நகத்தால் கீறி அவனைக் கொன்றிருக்கும்.

ஆயினும், கரடி அரிதாகத்தான் வெற்றி பெற்றது. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதன் வேட்டைக்கு ஒருபோதும் தனியாகச் சென்றதில்லை என்பதை நாம் அவசியம் நினைவுகூர வேண்டும். முதல் எச்சரிக்கை ஒலி கேட்டவுடனேயே இனக்குழு முழுக்க ஓடி வந்து கொண்டிருக்கும். மக்கள் கரடியைச் சுற்றி வளைந்து நின்று, அவர்களது கற் கத்திகளால் அதனைக் கொல்வார்கள்.

முன்பெல்லாம் அவன் ஒருபோதும் கற்பனையே செய்து பார்த்திராத இரை வகையை பன்றி வேட்டை ஈட்டி, வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்குத் தந்தது. குகைகளுக்கு உட்புறமாக ஆழத்தில் கற்பாளங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பொருள் வைக்கும் அறைகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இன்னமும் கண்டுவருகிறார்கள். கற்பாளங்கள் அகற்றப்படுகின்ற போது, அவைகளுக்குக் கீழாக கரடி எலும்புகளின் குவியல் இருப்பதை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். வேடுவர்கள் வெற்றி பெற்றார்கள் என்பதையே இதன் மூலம் அறிய முடிகிறது. ஏனெனில் சேமித்து வைக்கக் கூடிய அளவுக்கு அவர்கள் போதுமான கரடி இறைச்சியைக் கொண்டிருந்தார்கள் என்பது வெளிப்படை.

கரடி போன்ற அலங்கோலமான விலங்குகளை மட்டிலுமே மனிதன் வேட்டையாடி இருந்தால், பயன்படுத்தப்பட்ட அனைத்து ஆயுதங்களிலும் பன்றி வேட்டை ஈட்டியே மிகச் சிறந்ததாக இருந்திருக்கும். ஆனால் அவனை விட மிக விரைவாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்த விலங்குகளையும் அவன் வேட்டையாட வேண்டியிருந்தது.

வேடுவர்கள் சமவெளிகளில் அலைந்து திரிந்ததனால், அவர்கள் காட்டுக் குதிரைகளின், காட்டெருதுகளின் கூட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. மேய்ந்து கொண்டிருக்கும் விலங்குகளை நோக்கி அவர்கள் ஊர்ந்து செல்வார்கள். ஆனால் முதலாவது சலசலப்போ, இரைச்சலோ கேட்டதுமே, அந்த மந்தை முழுக்க தொலைதூரத்திற்கு விரைந்தோடிச் செல்லும்.

வரலாற்றுக்கு முந்திய கால மனிதனுடைய தோள்கள் இத்தகைய விலங்குகளை வேட்டையாட முடியாத அளவுக்குக் குட்டையாக இருந்தன. ஆனால் பிறகு வேட்டையே அவனுக்கு ஒரு புதிய வலுவான பொருளாகிய எலும்பை விநியோகம் செய்தது.

தனது சிக்கிமுக்கிக் கல் வெட்டுக் கருவியை, நேரானதும் கூர்மையானதுமான ஓர் எலும்பு அம்புத்தலையைச் செய்வதற்கு அவன் பயன்படுத்தினான். பிறகு அவன் அதை ஒரு சிறிய மரத்தாலான அம்புடன் இணைத்துக் கொண்டான். இப்போது அவன் ஒரு புதிய

ஆயுதத்தைப் பெற்றிருந்தான்—எறி ஈட்டி. தனது கனமான பன்றி வேட்டை ஈட்டியை பாய்ந்தோடும் ஒரு குதிரை மீது ஒரு வேடுவன் ஒருபோதும் வீசி எறிந்திருக்க மாட்டான். ஆனால் அவனால் லேசான எறி ஈட்டியை அதன் மீது தூக்கி எறிந்திருக்க முடியும். ஏனெனில் அது வெகு தூரம் சென்றது.

இப்போது மனிதனுடைய தோள் இன்னமும் நீளமானதாக மாறியது. பறந்து செல்லும் ஓர் ஆயுதத்தை—ஓர் எறி ஈட்டியை—பயன்படுத்தி, பாய்ந்து செல்லும் ஒரு குதிரை மறைந்து போகும் நேரத்திற்கு முன்பாகவே வேடுவனால் அதைச் சாய்க்க முடிந்தது.

உண்மையில், நகர்ந்து போய்க் கொண்டிருக்கிற ஓர் இலக்கின் மீது தாக்குவது என்பது சுலபமான காரியமன்று. அதற்காக ஒரு மனிதன் வலுவான தோளையும், கூர்மையான கண்ணையும் பெற்றிருக்க வேண்டியிருந்தது.

சிறுவனாக இருந்த போதே எறி ஈட்டியை எறிய ஒரு வேடுவன் கற்றிருந்தான். இருப்பினும், ஒரு நூறு எறி ஈட்டிகள் எறியப்பட்டால், ஒரு டஜன் மட்டுமே குறியை அடிப்பது வழக்கத்திற்கு மாறான ஒன்று அல்ல.

நூற்றாண்டுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மாறின. காட்டுக் குதிரைகளும் காட்டெருதுகளும் மிகவும் குறைந்து வரத் தொடங்கின, அவைகளது பூட்டோடழிப்புக்கு வரலாற்றுக்கு முந்திய கால மனிதனே பெரிதும் காரணமாக இருந்தான். இப்பொழுது மிகவும் அடிக்கடி வேடுவர்கள் வெறுங்கையோடு திரும்ப வேண்டியிருந்தது. இன்னும் அதிகத் தொலைவில் உள்ள இலக்கை எட்டக் கூடிய வகையில் ஒரு புதிய ஆயுதம் அவர்களுக்குத் தேவைப்பட்டது. வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் அவனது தோளை இன்னும் நீளமாக்கக் கூடிய எதையோ ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டி இருந்தது.

அவன் ஒரு புதிய ஆயுதத்தைக் கண்டுபிடித்தான்.

உறுதியான ஓர் மரத்தின் இளங்கொப்பை அவன் வெட்டினான், அதை வில்லாக வளைத்து அதன் ஓரங்களை வில் நாண் கொண்டு கட்டினான்.

இப்போது வேடுவன் ஒரு வில்லைப் பெற்றிருந்தான்.

வில் நாணை அவன் மெதுவாக இழுத்தபோது, அது அவனது தசைகளின் இழுவிசை முழுவதையும் ஒன்று சேர்த்தது.

பிறகு, அவன் அதைச் செலுத்தியபோது, அதனது சக்தி முழுவதும் உடனடியாக அம்புக்கு மாறியது. அம்பு வீச்சானது ஒன்றைக் கொல்வதற்காக பருந்து கீழே பாய்வதைப் போலிருந்தது.

அம்பும் எறி ஈட்டியும் இரண்டு சகோதரர்கள் போன்றவை. ஆனால் அம்பு தனது சகோதரனைக் காட்டிலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இளையது.

ஓர் ஈட்டியைச் செய்வதற்கு வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயின.

ஆரம்பத்தில் அவன் வில்லிலிருந்து எறி ஈட்டியையே எறிவது வழக்கம், அம்பை அல்ல. இதனால் தான் அவன் தனது வில்களை மிகவும் பெரிதாகத் தயாரிக்க வேண்டியிருந்தது. பல அவனைப் போலவே உயரமாக இருந்தன.

இவ்வாறாக, தனது வலுவற்ற குட்டையான தோளை நீளமானதாக வும் வலுவுள்ளதாகவும் மனிதன் மாற்றினான். ஒரு மானினுடைய கொம்பிலிருந்தோ, ஒரு கம்பளியானையின் தந்தத்திலிருந்தோ கூர்மை யான அம்புத்தலைகளைத் தயாரிக்க அவன் கற்றுக் கொண்ட போது, விலங்குகளின் ஆயுதங்களை — அவைகளது கொம்புகளையும் தந்தங் களையும் — அவைகளுக்கு எதிராகவே அவன் பயன்படுத்தலானான். இது அவனை எல்லா உயிரினங்களிலும் வலிமை வாய்ந்தவனாக ஆக்கி யது.

ஓர் எறி ஈட்டியை எறிந்த, வில் நாணை இழுத்த கையானது சாதாரணக் கையாக இனிமேலும் இருக்கவில்லை, அது ஒரு ராட்சச னுடைய கையாக இருந்தது.

இளம் ராட்சசன் வேட்டையாடச் சென்றபோது, அவன் மட்டுமே ஒளிந்து மறைந்து சென்று ஒரு தனி விலங்கைக் கொல்லவில்லை, அவன் அந்த இனம் முழுவதையுமே வேட்டையாடினான்.

பனிக்கட்டிக் குவியல் குறைந்த பிறகே வில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் நாம் நமது கதாநாயகனை பனியுகத்தின் இடையில் விட்டு விட்டோம்.

உயிருள்ள அருவி

பிரான்சில், சொலுத்ரே எனும் பிரதேசத்தில் ஒரு செங்குத்துப் பாறை இருக்கிறது.

அந்தப் பாறையின் அடியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அளவுக்கதிகமான முறையில் எலும்புக் குவியல் ஒன்றைக் கண்டுபிடித் தார்கள். அவைகளுக்கு இடையே கம்பளியானைகளின் தோள்பட்டை எலும்புகள், வரலாற்றுக்கு முந்திய கால எருதுகளின் கொம்புகள், குகைக் கரடிகளின் மண்டையோடுகள் இருந்தன.

ஆனால் வேறெந்த விலங்கைக் காட்டிலும் குதிரைகளின் எலும்பு களே அதிகமிருந்தன. சில இடங்களில் இத்தகைய எழும்புக் குவியல்கள் ஒரு மனிதனை விட உயரமாக இருந்தன. விஞ்ஞானிகள் இறுதியாக எலும்புகளை இனம் வாரியாகப் பிரித்த போது, குறைந்தது நூறு ஆயிரக்கணக்கான குதிரைகளின் மீதமிச்சங்கள் அதில் அடங்கி இருந் தன என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

இத்தகைய மிகப் பெரிய குதிரை புதைவெளி எங்கிருந்து வந் திருக்கக் கூடும்?

மிக நெருக்கமாக ஆராய்ந்தபோது, எலும்புகளில் அநேகம் முறிந் தும், உடைந்தும், எரிந்தும் போயிருப்பதை அவர்கள் கண்டுபிடித் தார்கள். வரலாற்றுக்கு முந்திய கால சமையற்காரர்களில் கைகளில் இருந்த பின்னர் இந்த எலும்புகள் அங்கு குவிந்திருக்க வேண்டும் என்பது பிறகு தெளிவானது. வழக்கத்திற்கு மாறான இந்தக் குதிரைப் புதைகுழி மிகப்பெரிய ஒரு சமையற்கட்டுக் குப்பைக் குவியல் தவிர்த்து வேறொன்றுமில்லை.

இத்தகைய மிகப்பெரிய ஒரு குப்பைக் குவியல் ஒரே ஆண்டிலேயே சேர்ந்திருக்க முடியாது. ஆகவே, ஐயத்திற்கிடமின்றி மக்கள் அங்கே பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள்.

ஆனால், செங்குத்துப் பாறையின் அடியில் அத்தகைய குப்பைக் கூளம் ஏன் இருக்க வேண்டும்? சமவெளிகளின் சமதளங்களில் வைத்துக் கொள்வதற்குப் பதிலாக வேடுவர்கள் தங்களது கூடாரத்தை இங்கு வைத்துக் கொள்ளும்படி ஏற்பட்டது வெறுமனே தற்செயலானது தானா?

இதுபோலத்தான் நடந்திருக்க வேண்டும்.

சமவெளிகளில் ஒரு குதிரைக் கூட்டத்தைப் வேடுவர்கள் பார்த்ததும். உயரமான புற்களில் ஒளிந்து கொண்டு அவர்கள் எச்சரிக்கையோடு ஊர்ந்து சென்றார்கள். ஒவ்வொரு வேடுவனும் அநேக எறி ஈட்டி களைக் கொண்டிருந்தான். முன் வரிசையில் நின்றவர்கள் பின்னுக்கு இருந்தவர்களுக்கு, குதிரைகள் எங்கே இருந்தன என்பதைச் சுட்டிக் காட்டியும், அவை எத்தனை இருந்தன என்பதை அவர்களுக்குச் சொல்லியும், எந்தவகையில் அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள் என் பதையும் அடையாளம் செய்து காட்டினார்கள்.

பிறகு வேடுவர்கள் பக்கவாட்டில் ஒரே வரிசையாக, மந்தைக்கு மிக நெருக்கமாகச் சுற்றிவளைத்துச் செல்வார்கள். ஸ்டெப்பியில், கருப்புப் புள்ளிகள் போலக் காணப்பட்ட குதிரைகள் இப்போது மிகத் தெளிவாகத் தெரிந்தன. அவை பெரிய தலைகளையும், ஒடுங்கிய கால்களையும், நீண்ட மயிரடர்ந்த தோல்களையும் பெற்றிருந்தன.

மந்தை அபாயத்தை உணர்ந்தன. ஓர் எதிரியை அவை ஊகித்துக் கொண்டன, பாய்ந்தோடுவதற்குத் தயாராக இருந்தன. ஆனால் அது மிகவும் சுணங்கிப் போய்விட்டது. எறி ஈட்டிகள் மேகம் போல அவை மீது வீசி எறியப்பட்டன. பெரிய அலகுகளுடன் கூடிய சிறகு களற்ற பறவைக் கூட்டம் போல அது பாய்ந்தது.

அந்த எறி ஈட்டிகள் விலங்குகளினுடைய முழங்கால்கள், முதுகு கள், கழுத்துகள் இவற்றை துளைத்துச் சென்றன. எந்த வழியில் அவை போயிருக்க வேண்டும்? எதிரிகளால் குதிரைகள் மூன்று புறங்களிலும் சூழ்ந்து வளைத்துக் கொள்ளப்பட்டன. தங்களைச் சுற்றி திடீரென்று எழுந்து நிற்கும் உயிர்ச் சுவரின் வழியாகத் தப்பித்துச் செல்லக் கூடிய ஒரே ஒரு பாதை மட்டுமே இருந்தது. திறந்த வழி வழியாக, பெரிதாகக் கணைத்துக் கொண்டு, இடிமுழக்கம் போல அந்த மந்தை வேடுவர்களிடமிருந்து தப்பியோடத் தொடங்கின. ஆனால் எதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்களோ அது சரியாக இதுதான். அவர்கள் குன்றை நோக்கி, செங்குத்துப் பாறை வரை குதிரைகளைத் துரத்தினார்கள். அச்சத்தால் கலக்கமுற்ற குதிரைகள் எங்கு ஓடிக் கொண்டிருக்கிறோம் என்ற கவலையில்லாது பாய்ந்தோடின. பாய்ந்தோடுகிற வால்களும், வியர்க்கும் முதுகளும் உயிருள்ள விசை நீரோட்டம் போலக் காணப்பட்டன. அந்த நீரோ டையாது குன்றின் உச்சி வரை சென்றன. அதன் பிறகு, திடீரென்று செங்குத்துப் பாறையானது அவைகளுக்கு முன்னால் நின்றது. அடுத்த கணத்தில் முன் சென்ற குதிரைகள் விளிம்பில் நின்றன. முன் நின்ற அபாயத்தை அவை கண்டன. பலமாகக் கணைத்துக் கொண்டு பின்வாங்கின. ஆனால் அதற்கு மிகவும் சுணங்கிப் போயிற்று. அவை களால் நிற்க முடியவில்லை. ஏனெனில் பின்னுக்கு வந்தவைகள்

அவைகளை முன்னுக்கு அழுத்தி, பாறைக்குக் கீழே அவற்றை உந்தித் தள்ளின.

அதன் பிறகு உயிருள்ள விசை நீரோட்டம் உச்சிக்குச் சென்று உயிருள்ள அருவிபோல விழுந்து, அடிப்புறத்தில் இறந்துபோன உடைந்த உடல்களின் குவியாக மாறியது.

வேட்டை முடிந்தது.

செங்குத்துப் பாறையின் அடிப்பகுதியில் கூடாரத்தீ பிரகாசமாக எரிந்தது. அந்த இனக்குழு முழுமைக்கும் பொதுச் சொத்தாகி விட்ட அந்த வேட்டைப் பொருளைக் கிழவர்கள் பங்கு போட்டார்கள். ஆனால் நல்ல துண்டுகள் துணிச்சலான, மிகவும் திறமையான வேடுவர்களுக்கே சென்றன.

புதிய மக்கள்

கடிகாரத்தின் நேரங்காட்டுங் கையை நாம் பார்க்கும் போது அது அசைவற்றுக் காணப்படுகிறது. ஆனால் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் கடந்து நாம் அதைப் பார்க்கிறோம். அதன் கை நகர்ந்திருக்கிறது.

வாழ்க்கையிலுங்கூட இது உண்மையானது. நமது சுற்றுச் சூழலிலோ, நம்மிடத்திலோ ஏற்படும் மாற்றங்களை நாம் உடனடியாக அறிந்து கொள்வதில்லை. வரலாற்றின் காலங்காட்டும் கை இயக்கமற்றது என நாம் நினைக்கிறோம். பல ஆண்டுகளுக்குப் பிறகே திடீரென்று அந்தக் கை நகர்ந்திருப்பதை நாம் கவனிக்கிறோம். நாமே கூட மாறிப் போயிருக்கிறோம், நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றும் வித்தியாசமாக இருக்கிறது.

நமது நாட்குறிப்புகள், புகைப் படங்கள், செய்திப் பத்திரிகைகள் மற்றும் நூல்கள் இவற்றைக் கொண்டு நாம் பழையனவற்றை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு நமக்குப் பொருட்கள் இருக்கின்றன. ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மூதாதையர்கள் பழையவற்றோடு புதியதை ஒப்பிட்டுப் பார்க்கும்படி எதையுமே பெற்றிருக்கவில்லை. வாழ்க்கையானது அசைவற்றது, மாறாதது என்று அவர்கள் நினைத்தார்கள். கடிகாரத்தின் முகப்பில் உள்ள எண்கள் இல்லாமல் கடிகாரத்தினுடைய கை இயங்குவதைக் காண்பது போலவே, பழையவற்றைப் புதியனவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் எதையும் அறிந்து கொள்வது இயலாததாகும்.

தனக்கு யார் தங்களது திறமைகளைத் கற்றுத்தந்தார்களோ, அவர்களது எல்லாவித இயக்கங்களையும் முறைகளையும், ஒவ்வொரு கைவினைஞனும் கற்கருவிகளைக் கொத்துகையில் பிரதிபலித்தான்.

புதிய வீட்டை அமைப்பதில், தங்களது பாட்டிகள் தங்களுக்காக எப்படி அமைத்துக் கொண்டார்களோ அது போலவே துல்லியமான முறையில் அடுப்பைப் பெண்கள் அமைத்தார்கள்.

பண்டைய வழக்கப்படியே வேடுவர்கள் தங்களது இரையைப் பதுங்கிச் சென்றே பிடித்தார்கள்.

மேலும், எல்லார்க்கும் முற்றிலும் அறியாமலேயே, தங்களது கருவிகளையும், தங்களது இருப்பிடங்களையும், தங்களது வேலை முறை

களையும் மக்கள் படிப்படியாக மாற்றினார்கள்.

ஒவ்வொரு புதிய கருவியும் பழைய ஒன்றைப் போலவே ஆரம்பத்தில் இருந்தது. முதலாவது எறி ஈட்டி, பன்றி கொல்லும் ஈட்டியைவிட மிகவும் வித்தியாசப் பட்டிருக்கவில்லை. ஆனால் அம்பும் பன்றி கொல்லும் ஈட்டியும் தனித்தனியாக இருந்தன. வில்லோடும் அம்போடும் வேட்டையாடுவது என்பது பன்றி கொல்லும் ஈட்டியோடு வேட்டையாடுவது போன்றதே அல்ல.

மனிதனுடைய கருவிகளும் ஆயுதங்களும் மட்டுமே மாற்றமடையவில்லை — அவனும் தானே மாறிக் கொண்டிருந்தான். அகழ்ந்தெடுக்கப் பட்ட பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளிலிருந்து இதைக் காண முடியும், குகைக்குள் ஆரம்பத்தில் நுழைந்தவர்களையும், பனியுகத்தின் கடைசியில் வெளியேறிய மனிதனையும் நாம் ஒப்பிட்டுப்பார்த்தால், அவர்கள் இருவரும் இரு மாறுபட்ட உயிரினங்களாக இருந்தனர் என நாம் நினைக்கக் கூடும். நியாண்டர்தால் மனிதன் தான் குகைக்குள் முதலாவதாக நுழைந்தவன். அவனது முதுகு வளைந்து இருந்தது, நடப்பதற்குப் பதிலாக ஒரு வகையில் அவன் தடுமாறி விழுந்தான், அவனது முகத்தில் எந்த நெற்றியும் இல்லை, கன்னமும் இல்லை. ஆனால் குகையை விட்டுக் கடைசியாக வெளியேறிய நல்ல உடற்திறம் வாய்ந்த குரோமன்யான் மனிதன் நாமிருப்பதை விட தோற்றத்தில் எந்தவகையிலும் மாறுபட்டிருக்கவில்லை.

‘வீட்டின் வரலாற்றில்’ முதல் அத்தியாயம்

மனிதனுடைய வாழ்க்கை முறை மாறியது போலவே அவனது இருப்பிடமும் மாறியது. அவனது வீட்டின் வரலாற்றைப் பற்றி நாம் எழுத வேண்டியிருந்தால், நாம் ஒரு குகையிலிருந்து தொடங்க வேண்டும். இந்தக் குடியிருப்பு, இயற்கையால் உருவாக்கப்பட்டது, வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் கண்டுபிடித்த ஒன்று, கட்டப் பட்டதில்லை.

ஆனால் இயற்கை ஓர் அற்பமான கட்டிடக் கலைஞன். மலைகளையும் மலை குகைகளையும் அது உண்டாக்கிய போது, அதனுடைய குகைகளில் யாரேனும் எப்போதும் வாழ்ந்தார்களா என்பதைப் பற்றி துளி கூடக் கவலைப்பட்டதில்லை. இதன் காரணமாகத்தான், வரலாற்றுக்கு முந்திய கால மனிதர்கள் வசிப்பதற்காக ஒரு குகையைச் சுற்றிலும் தேடிக் கொண்டிருந்த போது, தாங்கள் தேடிக் கொண்டிருந்ததை அவர்கள் அபூர்வமாகக் கண்டார்கள். அதன் மேற் கூரையானது ஒன்று மிகத் தாழ்வாக இருக்கும், அல்லது சுவர்கள் அச்சுறுத்துவது போல இருக்கும், அல்லது உள்புறத்திற்கு ஊர்ந்து செல்ல முடியாதபடி வாயில் மிகச் சிறியதாக இருந்தது.

குடியிருப்பை ஒழுங்கு செய்வதற்காக இனக்குழு முழுமையுமே வேலை செய்யச் சென்றது. அவர்கள் சிக்கிமுக்கிக் கல் சுரண்டு கருவிகளையும் மரக் கட்டைகளையும் கொண்டு தரையையும் சுவர்களையும் சுரண்டி சமப்படுத்தினர்கள்.

வாசலுக்கு அருகே அவர்கள் அடுப்புக்காக ஒரு குழியை வெட்டி,

கற்களை வரிசையாக அடுக்கினார்கள். தங்களது குழந்தைகளுக் காகத் தாயார்கள் தரையில் சிறு குழிகளைத் தோண்டி, பாய்களை விரிப்பதற்குப் பதிலாக அடுப்பிலிருந்து சாம்பலைத் தூவி 'சிறு படுக்கை களை'க் கட்டினார்கள்.

குகையின் ஒரு தொலைவான மூலையில் கரடி இறைச்சியையும், மற்ற பொருட்களையும் வைப்பதற்காகச் சாமான் அறை ஒன்றை ஏற்பாடு செய்தார்கள்.

இவ்வாறாகத்தான் வரலாற்றுக்கு முந்திய கால மனிதர்கள், தங் களது உழைப்பின் மூலமாக இயற்கை தயாரித்த ஒரு குகையை மனிதர்கள் தங்குவதற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தார்கள்.

காலம் செல்லச் செல்ல அவர்கள் தங்களது குடியிருப்புக்களை வசதியுள்ளதாக்க மேன்மேலும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

செங்குத்துப்பாறை ஒன்று இயற்கையில் கூரைபோல் அமைந்திருப் பதை அவர்கள் கண்ட போது, அதைச் சுற்றி சுவர்களைக் கட்டினார் கள். நான்கு சுவர்களைப் போல பயன்படக் கூடிய ஏதாவது ஒன்றை அவர்கள் கண்ட போது, அவற்றை கூரையால் மூடினார்கள்.

தென் பிரான்ஸின் மலைகளில் வரலாற்றுக்கு முந்திய காலக் குடியிருப்பின் மீதமிச்சங்களை இன்னமும் ஒருவர் காண முடியும். தல மக்கள் அதற்கு விநோதமான பெயரைத் தந்திருக்கிறார்கள். ''பிசாசின் அடுப்பு'' என அவர்கள் அழைக்கிறார்கள். பெரிய பாறை களாலான இந்தப் பாதுகாப்பான இடத்தில் உள்ள அடுப்பு அருகே ஒரு பிசாசு மட்டுமே கணகணப்பைப் பெற்றிருக்க முடியும் என அவர்கள் நினைத்தார்கள். தங்களது வரலாற்றுக்கு முந்திய கால மூதாதையர்களைப் பற்றிய சிறந்த அறிவு அவர்களுக்கு இருந் திருக்குமேயானால், ''பிசாசின் அடுப்பு'' மனிதக் கைகளால் கட்டப் பட்டவை என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

இங்கு வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவர்கள் ஒரு மேற் பாறையால் பாதுகாக்கப்பட்ட இரண்டு சுவர்களைப் பார்த்திருக் கிறார்கள். சுவர்கள் மலைப் புறங்களில் உருண்டோடிய பாறைகளால் உருவாக்கப்பட்டிருந்தன. மற்ற இரு சுவர்களை அவர்கள் கட்டினார் கள். அவர்கள் கண்டுபிடித்த இரண்டோடு இவைகளை இணைத்தார் கள். ஒன்று பெரிய பாறைத் துண்டுகளால் ஆனது, மற்றது மரக் கிளைகளை விலங்குத் தோல்களால் ஒன்று சேர்த்துத் தூண் போல ஆக்கப்பட்டது. நான்காவது சுவர் எப்படி இருந்திருக்கும் என்பதை நம்மால் ஊகந்தான் செய்ய முடியும், மேல் நிகழ்வு காரணமாக காலம் அதனைத் தூசி ஆக்கிவிட்டது.

சுவர்கள் நிலச்சரிவிற் குடைந்தமைக்கப்பட்ட மறைகுழியை, அதாவது ஒரு பெரிய துவாரத்தைச் சுற்றி இருந்தன. துவாரத்தின் அடிப்புறத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சிக்கிமுக்கிக் துண்டுகளையும், எலும்பாலும் மான் கொம்புகளாலுமான கருவிகளையும் கண்டுபிடித்தார் கள்.

''பிசாசின் அடுப்பு'' பாதி வீடாகவும் பாதி குகையாகவும் இருக் கிறது. இங்கிருந்து உண்மையான வீடு அதிகத் தொலைவில் இல்லை.

இரண்டு சுவர்களைக் கட்ட வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் கற்றுக் கொள்ளத் தொடங்கியதுமே, நான்கைக் கட்டுவதற்கு விரைவிலேயே அவன் கற்றுக் கொண்டான்.

ஆக இங்ஙனமாக முதலாவது வீடுகள் தோன்றின, குகையிலோ, தொங்கும் பாறைக்குக் கீழாகவோ இல்லாது, திறந்த வெளியில் ஏற்பட்டன.

வரலாற்றுக்கு முந்திய வேடுவர்களின் குடியிருப்பு

தோன் பகுதியில் சகாரினோ கிராமத்தில் 1925ஆம் ஆண்டைய இலையுதிர்காலத்தில் அந்தோனொவ் என்ற விவசாயி களிமண்ணுக்காகத் தனது முற்றத்தைத் தோண்டிக் கொண்டிருந்தான். ஒரு புதிய அறையைப் பூசுவதற்கு அவனுக்குக் களிமண் தேவைப்பட்டது.

ஆனால் அவனது மண்வாரி தரையில் புதையுண்ட எலும்புகளைத் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருந்தது.

அந்நேரம் பார்த்து கிராமத்து ஆசிரியர் விளதீமிரோவ் போய்க் கொண்டிருந்தார். அந்தோனொவ் அவரைக் கூப்பிட்டு புகார் செய்தான்:

''இந்த எலும்புகளெல்லாம் எங்கிருந்து வருகின்றன என்று எனக்குத் தெரியவில்லை! என்னால் தோண்டக் கூட முடியவில்லை. மேலும் எனது மண்வாரியைக் கூட கிட்டத்தட்ட உடைத்து விட்டேன்.''

ஒருவேளை, அந்தோனொவ் வேறு யாரிடமாவது பேசியிருந்திருந்தால், அந்த மனிதன் ஒரு நிமிட நேரம் நின்றுவிட்டு தன் பாதையில் போயிருப்பான்.

ஆனால் அந்தக் கிராமத்து ஆசிரியர் விஞ்ஞானத்தில் மிகுந்த அக்கறை கொண்டவராக இருந்தார்.

அவர் முற்றத்திற்கு வந்து, நன்கு வளவளப்பாக்கப்பட்டது போலக் காணப்பட்ட மஞ்சள் தந்தத்தின் கனத்த துண்டு ஒன்றை ஆராய்ந்து பார்த்தார்.

இத்தகைய ஒரு பெரிய தந்தம் ஒரு ராட்சச கம்பளியானைக்குத்தான் சொந்தமாயிருக்க வேண்டும் என்பது மிகவும் தெளிவாகத் தெரிந்தது.



தோன் பகுதியில் கம்பளியானைகளா! அது உண்மையில் ஆச்சரியப்படத்தக்கதாகவே இருந்தது.

அந்த ஆசிரியர் இத்தகைய எலும்புக்குவியலை ஒரு வண்டியிலேற்றி அவற்றைப் பக்கத்திலிருந்த நகரத்திற்குக் கொண்டு சென்றார். அங்கு ஒரு சிறிய உள்ளூர் அருங்காட்சியகம் இருந்தது.

அது போன்ற ஒரு சிறிய அருங்காட்சியகத்தில் நீங்கள் எப்போதாவது இருந்திருப்பீர்களேயானால், விநோதமான பொருட்கள் அடிக்கடி காட்சிப் பெட்டிகளில் அருகருகே வைத்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஓர் அறையில் பளிங்காலான ரோமரின் காதல் தெய்வமும், 17ஆம் நூற்றாண்டைய பெருங்குடி மகனின் எண்ணெய் வண்ண ஓவியமும் இருப்பதை நாம் காண முடியும்.

மற்றொரு அறையில், உள்ளூர் கனிப்பொருட்களும் மற்றும் தாவரங்களின் தொகுப்பிற்கு அடுத்து, தாள் ஊறல் கூழ் மொத்தை ஒன்

றைப் பித்தெகாந்த்ரோபஸ் தனது மயிரடர்ந்த கையில் பிடித்திருப்பது போன்ற ஓர் உருவம் இருக்கிறது.

விளதீமிரோவ் எலும்புகளைக் கொண்டுவந்த அருங்காட்சியகம் இது போன்ற ஓர் அமைப்புக் கொண்டிருந்தது.

அருங்காட்சியகப் பாதுகாவலர் கம்பளியானைத் தந்தத்தையும் மற்ற எலும்புகளையும் தனது விவரப்பட்டியலில் வெறுமனே பதிந்துவிட்டு கனிப்பொருட்களுக்கும் பித்தெகாந்த்ரோபசுக்கும் அடுத்து காட்சிக்கு வைத்திருப்பார்.

ஆனால் இதைவிட அதிகமாக அவர் செய்தார். உடனடியாக அவர் லெனின்கிராடுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். மனித இன ஆராய்ச்சி இயல் மற்றும் இனப் பரப்பு விளக்கவியல் அருங்காட்சி யகத்திற்கு முகவரியிட்டார். ருஷ்ய விஞ்ஞானிகளாலும், கண்டுபிடிப் பாளர்களாலும் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டு அன்பளிப்பாகத் தரப்பட்ட அரிய தொகுப்புகள் அடங்கிய அந்தப் பழைய கட்டிடம் நேவா நதிக் கரையில் இருக்கிறது.

விரைவிலேயே லெனின்கிராடிலிருந்து ஸம்யாதின் என்ற தொல் பொருள் ஆராய்ச்சியாளர் ககாரினோவிற்கு வந்து சேர்ந்து கிராமத்து ஆசிரியரின் ஒத்துழைப்போடு தோண்டும் பணியைத் தொடங்கினார்.

இதுபோன்றவை அடிக்கடி நிகழ்கிறது: ஓர் ஆசிரியரோ, கிராமத்து நூலகரோ, பண்டைய கலாசாரம் பற்றிய பொருள் ஒன்றை பார்க் கின்ற போது, தனது கண்டுபிடிப்புப் பற்றி அண்மையிலுள்ள அருங் காட்சியகத்திற்கு எழுதுகிறார். நகரத்திலிருந்து விஞ்ஞானிகள் கிராமத் திற்கு வந்து அகழ்ந்தெடுக்கும் பணிக்குத் தலைமையேற்பார்கள்.

ககாரினோவில் அவர்கள் என்ன கண்டுபிடித்தார்கள்?

தோண்டத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் சிக்கிமுக்கிக் கல் சுரண்டு கருவிகள், வெட்டு கருவிகள், ஓர் எலும்பு தமரூசி, ஒரு இடையில் ஒரு துளையிடப்பட்ட துருவநரிப் பல், கட்டைக்கரியோடு கலந்த கம்பளியானை மற்றும் பிற விலங்குகளின் எலும்புகளின் அடுப்புக் கரியோடு கலந்து கிடந்தன.

களிமண்ணில் காணப்பட்ட இதே போன்ற சிக்கிமுக்கிக் கற் கருவிகளும், தந்தத்தின் துணுக்குகளும் ஏற்கெனவே அந்தோனொவின் அறைச் சுவர்களைப் பூசுவதற்குப் பயன்படுத்தப் பட்டிருந்தன. களிமண் ணோடு அது போன்றவை ஏராளமாகக் கலந்திருந்த படியால், அந்த விவசாயக் குடும்பத்தினர் அந்தக் களிமண் கலவையிலிருந்து அவைகளைப் பிரித்தெடுப்பதில் நேரத்தைச் செலவிட வேண்டாமென முடிவு செய்தனர்.

பல மாதங்களுக்கு அவர்கள் தோண்டிக் கொண்டே இருந்தார் கள், மேலும் புதிய பொருட்களையும் கண்டுபிடித்துக் கொண்டிருந் தார்கள். அவர்களது கண்டுபிடிப்புக்களில் கருவிகள், ஆபரணங்கள், மிகச் சிறிய உருவச்சிலைகள் மற்றும் விலங்குகளின் எலும்புகள் அடங்கி யிருந்தன. ஒவ்வொன்றும் மிக கவனத்தோடு பிரப்பங்கழி வேய்ந்த கூடைகளில் வைக்கப்பட்டு லெனின்கிராடுக்கு அனுப்பப்பட்டன. அங்கே, பல்வேறு துறையைச் சேர்ந்த நிபுணர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்கள்.

கருவிகள் செய்ய எந்த மாதிரியான கல் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கனிப்பொருள் நிபுணர்கள் முடிவு செய்தார்கள். அந்த வரலாற்றுக்கு முந்திய கால மக்கள் என்ன விலங்குகளை வேட்டையாடி இருப்பார்கள் என்பதைப் பழங்கற்கால ஆராய்ச்சியாளர் கண்டு பிடிக்கத் தொடங்கினர். திறமையான மூலவடிவ மறுபுனைவாளர்கள், காலத்தால் அழிந்து போன எலும்பு சிறிய உருவங்களுக்கு அவைகளது முன்னைய வடிவத்தைக் கொண்டுவந்தார்கள்.

இதற்கிடையில், ஒரு தொல்பொருள் ஆராய்ச்சிக்குழுவினர் தோண்டும் வேலையைத் தொடர்ந்தார்கள். தொல் பொருள் சின்னங்களை அகழ்ந்தெடுக்கும் போது பின்பற்ற வேண்டிய எல்லா விதிகளையும் பின்பற்றினார்கள். வெகு சீக்கிரத்திலேயே அந்த வரலாற்றுக்கு முந்திய கால வேடுவர்களின் குடியிருப்புப் பற்றிய ஒரு தெளிவான படத்தை அவர்கள் காணத் தொடங்கினார்கள்.

வடிவத்தில் அது ஓர் வட்டமான மறைகுழிபோல் இருந்தது. சுவர்கள் கற் பாளங்களாலும், கம்பளியானையின் தந்தங்களாலும், தாடை எலும்புகளாலும் பாதுகாக்கப்பட்டன. கழிகளால் ஆன சுவர்கள் விலங்குத் தோல்களால் மறைக்கப்பட்டு இருந்தன. உயரச் சேர்ந்த கம்புகள் ஒரு கூரைபோல உருவெடுத்தன. கனமான கற் பாளங்களும், கம்பளியானையின் எலும்புகளும் சுவர்களின் வெளிப் புறத்தில் அவற்றை உறுதியாகச் செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டன.

வெளிப்புறத்தில் அந்தக் குடியிருப்பு ஒரு பெரிய கூடாரம் போலக் காணப்பட்டது.

சுவர்களுக்கு அருகில் எலும்பில் செதுக்கப்பட்ட பெண்களின் சிறு உருவங்கள் இரண்டைக் கண்டுபிடித்தார்கள். ஒன்று மெலிவாகவும் மற்றது தடித்தும் காணப்பட்டன. எலும்பைச் செதுக்கியவன் பெரும் பாலும் அவர்களை உயிராகப் பார்த்துத்தான் செதுக்கி இருக்க முடியும். பெண்களுடைய திருக்கு முறுக்கான தலைமயிர் வாரல் காணரிய ஒன்றாக இருந்தன.



அடிமரம் போல பயன்பட்ட தரையின் நடுவில் ஒரு வட்டவடிவ ஒட்டை போடப்பட்டிருந்தது. அதனுள்ளே காணப்பட்ட பொருட்கள் கட்டாயம் மிக அரியனவாகத்தான் இருந்திருக்க வேண்டும்: ஓர் எலும்பு ஊசியும், துருவ நரியின் பற்களிலான குமிழ்மணிகளும், கம்பளியானையின் ஒரு வாலும் இருந்தன.

வரலாற்றுக்கு முந்திய கால குடியிருப்பாளர்கள் தைப்பதற்கு ஊசியைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்; குமிழ்மணிகள் ஆபரணங்களாக இருந்தன; ஆனால் ஒரு கம்பளியானையின் வாலைப் பாதுகாக்க ஏன் இத்தனை பெரிய அக்கறையை அவர்கள் கொண்டிருக்க வேண்டும்?

கண்டெடுக்கப்பட்ட பிற செதுக்கிய சிறு சிற்பங்கள், வரலாற்றுக்கு முந்திய கால வேடுவர்கள் விலங்குத் தோல்களை தங்களது தோள்களுக்கு மேலாகவும், அதற்குப் பின்னால் ஒரு வால் ஊசலாடுவது போலவும் சித்தரிக்கின்றன. இது அவர்கள் எந்த விலங்குத் தோலை அணிந்திருந்தார்களோ அந்த விலங்கு போலவே காட்டுகிறது. இதை

ஏன் அவர்கள் செய்திருக்க வேண்டும்? இது பற்றி நாம் பிறகு பார்ப்போம். ஆயினும், இப்போது வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் வசித்த இடம் பற்றி நாம் என்ன அறிய முடியும் என்பதை நாம் இன்னமும் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம்.

ககாரினோ கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டது போன்ற வேறு பல கூடார இடங்கள் சோவியத் யூனியனின் பல்வேறு பகுதிகளில் கண் டெடுக்கப்பட்டுள்ளன. வரோனெழ் என்ற நகரத்திற்கு அருகே ஒரு சிறிய கிராமத்தில் அநேக எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன, ஆகவே அது விரைவிலேயே கோஸ்தென்கி ('எலும்பு கிராமம்') என வழங்கலா யிற்று.

இந்த எலும்புகள், வரலாற்றுக்கு முந்திய கால மக்கள் வேட்டை யாடிய விலங்குகளாகிய கம்பளியானைகள், குகைச் சிம்மங்கள், குகைக் கரடிகள் மற்றும் குதிரைகளைச் சேர்ந்தவை.

கோஸ்தென்கி கூடார இடம் பற்றிய ஒரு முழுமையான ஆய்வை பி. யெபிமென்கோ மற்றும் செ. ஸம்யாதின் ஆகிய இரு சோவியத் தொல்பொருள் நிபுணர்கள் மேற்கொண்டனர்.

வேடுவர்கள் ககாரினோவில் இருந்தன போன்று ஒன்றல்ல, அநேக மறை குழிகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும், எல்லாருமே மொத்தமாக வேட்டையாடியிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் கண்டுபிடித்தார்கள். இங்கு நன்கு செய்யப்பட்ட சிக்கிமுக்கிக் கல் மற்றும் எலும்புக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அது போலவே செதுக்கப்பட்ட சில பெண் சிறு உருவங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளில் ஒன்று பச்சை குத்தியும் தோல் முந்தானையுடனும் காணப்படுகிறது. அந்த மக்கள் தோலைப் பதப்படுத்துவது எப்படி என்பதை அறிந்திருந்தார்கள் என்பதையே காட்டுகிறது.

வரலாற்றுக்கு முந்திய கால வேடுவர்களின் இத்தகைய குடியிருப்பு கள் நமது சொந்த வீடுகளைப் போல இருக்கவில்லை. வெளியிலிருந்து பார்ப்பதற்கு ஒரு கூரைபோல காணப்பட்டது. அது ஒரு வட்டமான சிறு குன்று போலத் தோன்றியது. நுழைவு வழி 'புகைப் போக்கி' தான். ஏனெனில் கூரையில் ஓர் ஓட்டை போடப்பட்டிருந்தது. அதன் வழியாகத்தான் நெருப்புப் புகை வெளியேறியது.

மண்சுவர்களுக்கு நெடுகிலும் பெஞ்சுகளுக்குப் பதிலாக கம்பளியா னையின் தாடை எலும்புகள் இருந்தன. பூமித்தாய்தான் அவர்களது படுக்கையாகவும் இருந்தது. சமப்படுத்தப்பட்ட முக்கோண வடிவமான பரப்பில், தலையணைக்காக மண்குவியல்களுடன், அவர்கள் தூங்கினார் கள்.

எலும்புப் பெஞ்சுகளும் தரைப் படுக்கைகளும் கொண்ட இந்த வீட்டின் மேசைகள் கற்களாலும் செய்யப்பட்டிருந்தன.

நல்ல வெளிச்சமான இடத்தில், அடுப்படிக்குப் பக்கத்தில் பணிக் கென ஒரு பெஞ்சு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது வளவளப்பான கற்பாளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்மீது அநேகக் கருவிகளை, கொத்தப்பட்டதும் முறிவுற்றதுமான சிக்கிமுக்கிக் கல், எலும்பு இவற்றின் முற்றுப் பெறாத பொருட்களை தொல்பொருள் நிபுணர்கள் கண்டுபிடித்தார்கள். மேசையின் மீது கையளவுக்கு

எலும்புக் குமிழ்மணிகள் சிதறிக் கிடந்தன. சில குமிழ்மணிகள் பளபளப்பாக்கப்பட்டும், அவைகளுக்கிடையே துளையிடப்பட்டும் இருந்தன. மற்றவை இன்னும் முடிக்கப் பெறாமலேயே இருந்தன. அநேக இடங்களில் எலும்புச் சிராய்களில் தொழிற்கலைஞன் வெட்டுக் குறியிட்டிருக்கிறான். ஆனால் அதைக் குமிழ்மணிகளாக உடைக்க அவனுக்கு நேரமில்லை. மக்கள் தங்களது வேலையை நிறுத்தும் படியும், தங்களது வீட்டைக் கைவிட்டுப் போகும் படியும் ஏதோ நடந்திருக்க வேண்டும். அந்த ஆபத்து நிச்சயமாக மிகப் பெரிதாக இருந்திருக்க வேண்டும். இல்லையெனில், உண்மையில் இத்தகைய அருமையான அம்புத் தலைகளையும், துளைகள் கொண்ட எலும்பு ஊசிகளையும் எலும்பு சிராய்களையும் பல்வேறு வேலைகளுக்கான சிக்கிமுக்கி கல் வெட்டுக் கருவிகளையும் அவர்கள் ஒருபோதும் விட்டுச் சென்றிருக்க மாட்டார்கள்.

இத்தகைய கருவிகளை எல்லாம் தயாரிப்பது இலகுவானதாக இருந்திருக்க முடியாது. குடியிருப்பில் கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு பொருட்களையும் செய்வதற்கு பல மணி நேரம் செலவாகி இருக்கும். எடுத்துக் காட்டாக, இதோ ஓர் எலும்பு ஊசி, மனித இன வரலாற்றில் முதல் வகையான ஊசி. இது போன்ற மிகச் சிறிய பொருளைத் தயாரிப்பதற்கு இன்னும் அதிகமான திறமை தேவைப்பட்டிருக்கும்.

மற்றுமொரு கூடாரத்து இடத்தில், தேவையான எல்லா உபகரணங்களோடும், எலும்புச் சிராய்களையும் பாதி முடிக்கப்பட்ட ஊசிகளையும் கொண்ட எலும்பு ஊசி தயாரிப்பதற்கான ஒரு முழுமையான பணிமனை கண்டுபிடிக்கப்பட்டது. அப்படியே விட்டுச் செல்லப்பட்டது போல எல்லாமே இருந்தன.

நமது நவீன உலகத்தில் எலும்பு ஊசிகளுக்கு ஏதேனும் உபயோகம் இருந்திருந்தால் மட்டுமே, உண்மையில் உற்பத்தி நாளையே கூட தொடங்கப்படக் கூடும்.

ஆனால் இந்த வேலையை முடிக்கக் கூடிய ஒரு கைவினைக் கலைஞனைக் கண்டுபிடிப்பதில் நமக்குச் சிரமமிருக்கிறது.

இவ்வாறாகத்தான் எலும்பு ஊசி தயாரிக்கப்பட்டது. முதலில் ஒரு முயலினுடைய எலும்பிலிருந்து ஒரு சிராய் சிக்கிமுக்கிக் கல்லால் வெட்டப்பட்டது. பின்னர் அது சிக்கிமுக்கிக் கல் அரத்தால் கூர்மையாக்கப்பட்டது. பிறகு ஒரு கூர்மையான சிக்கிமுக்கிக் கல்லால் அதில் துளை போடப்பட்டது. இறுதியாக, ஊசியானது ஒரு கற்பாளத்தால் பளபளப்பாக்கப்பட்டது.

ஒரே ஒரு ஊசியைத் தயாரிக்க எத்தனை கருவிகளும், எவ்வளவு நேரமும் தேவைப்பட்டிருக்கின்றன!

எலும்பு ஊசி தயாரிக்கக் கூடிய திறமைவாய்ந்த தொழிற் கலைஞனை ஒவ்வொரு இனக்குழுவும் பெற்றிருக்கவில்லை. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் ஓர் எலும்பு ஊசி என்பது மிக அரியனவாகப் பாதுகாக்கப்பட்டவைகளில் ஒன்றாகும்.

வரலாற்றுக்கு முந்திய கால வேடுவர்களின் கூடாரத்தங்குமிடத்தை நாம் பார்க்கலாம்.

பனி மூடிய ஸ்டெப்பியின் மத்தியில் சில சிறு மேடுகளை நாம்

காண்கிறோம். அவை ஒவ்வொன்றிலிருந்தும் புகை சுருண்டு வருகிறது. மேடுகளில் ஒன்றை நாம் நெருங்கி, புகைப் போக்கி வழியாக உள்ளே ஏறுகிறோம். நமது கண்களில் நீரை வரவழைக்கக் கூடிய புகை மேகங்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் செல்கிறோம்.

நாம் ஒரு மாயக் குல்லாயை அணிந்து கொண்டு கட்புலனாகாதவாறு போனதாக நம்பிக் கொள்வோம். நம்மை யாரும் காண முடியாது. வீட்டினுள்ளே புகையாகவும், இருளாகவும், இரைச்சலாகவும் இருக்கிறது. குறைந்தது பத்து பெரிய நபர்களும் அநேகக் குழந்தைகளும் இங்கு இருக்கிறார்கள்.

புகைக்கு நமது நீர்வழியும் கண்கள் பழக்கப்பட்டு விட்டபோது, மக்களுடைய முகங்களையும் உடல்களையும் பார்க்கத் தொடங்குகிறோம். அவர்களிடத்திலே குரங்கு போன்ற எதுவுமே காணப்படவில்லை. அவர்கள் உயரமாகவும், நல்ல உடற்கட்டோடும் வலுவோடும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உயரமான கன்ன எலும்புகளும், நெருக்கமாக அமைந்த கண்களும் உள்ளன. அவர்களது கறுத்த உடலில் சிவப்பு மையால் எழுதப்பட்ட வடிவங்கள் உள்ளன.

பெண்கள் தரையில் வட்டமாக உட்கார்ந்து கொண்டு எலும்பு ஊசிகளால் விலங்குத் தோல்களிலிருந்து ஆடைகளைத் தைக்கிறார்கள். குழந்தைகள், எந்தவிதமான விளையாட்டுப் பொருள்களும் இல்லாது, குதிரையின் காலுடனும் கலைமானின் கொம்புடனும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அடுப்படிக்குப் பக்கத்தில் தனது கல்லாலான பணிக்குரிய பெஞ்சில் கைவினைக் கலைஞன் சப்பணம் போட்டு உட்கார்ந்திருக்கிறான். அவன் ஓர் எறி ஈட்டி தயாரிப்பதற்காக எலும்பு அம்புத் தலையை ஒரு மரக்கட்டையுடன் பொருத்திக் கொண்டிருக்கிறான். அவனுக்கு அருகில் மற்றொரு கைவினைக் கலைஞன் சிக்கிமுக்கிக் கல் கத்தியால் ஒரு வடிவத்தைச் செதுக்கிக் கொண்டிருக்கிறான்.

அது என்ன வடிவம் எனக் காண்பதற்காக நாம் இன்னும் அருகாமையில் செல்வோம்.

அவன் ஓர் எலும்புத் தட்டில் மேய்ந்து கொண்டிருக்கும் ஒரு குதிரையின் உருவத்தைச் செய்திறமிக்க கீறல்களால் வரைந்திருந்தான்.

குதிரையினுடைய எடுப்பான கால்களையும், வளைந்த கழுத்தையும், சிறிய பிடரி மயிரையும், பெரிய தலையையும் அவன் மிகுந்த பொறுமையோடும் திறமையோடும் சித்திரித்திருக்கிறான். உயிருடன் நகர்வது போல அந்த விலங்கு காணப்படுகிறது. தனது மனக் கண்ணில் ஒவ்வொன்றையும் ஓவியன் பார்க்கிறான் என்பது போலக் காணப்படுகிறது.

இப்பொழுது ஓவியம் முடிந்துவிட்டது. ஆனால் ஓவியன் இங்கு நிறுத்தவில்லை, அவன் தனது வேலையைத் தொடர்கிறான். குதிரைக்குக் குறுக்காக ஒரு கோட்டை வரைகிறான், பிறகு இரண்டாவது, அடுத்து மூன்றாவது. ஒரு விநோதமாகக் காணக் கூடிய வரைபடம் குதிரையின் உடலுக்கு மேலாகத் தோன்றுகிறது. வரலாற்றுக்கு முந்திய கால ஓவியன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? இன்றைய

ஓவியன் பெருமைப்படத்தக்க ஓர் ஓவியத்தை ஏன் அவன் பாழாக்கிக் கொண்டிருக்கிறான்?

அந்த வரைபடம் மேன் மேலும் சிக்கலுடையதாக மாறுகிறது. பின்னர், நாம் வியப்புறும் வகையில், அந்தக் குதிரையின் படத்திற்கு மேலாக ஒரு கூடாரத்தின் படம் தோன்றியிருப்பதை நாம் பார்க் கிறோம். இதற்கு அடுத்து ஓவியன் மற்றொரு கூடாரத்தை வரை கிறான், பிறகு மற்றொன்று. ஏன், அது ஒரு கூடார இடம்!

இந்த விநோதமான ஓவியம் என்னவாக இருக்க வேண்டும்? இந்த மாதிரி இருக்க வேண்டும் என்ற ஓவியனது வெறும் கற்பனை யின்பாற் பட்டதுதானா?

இல்லை, இத்தகைய விநோதமான ஓவியங்களின் மொத்தத் தொ குதிகளுமே வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவர்களின் குகை களில் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று கம்பளியானை, அதன் மீது இரண்டு கூடாரங்கள் வரையப்பட்டுள்ளது. காட்டெருமையின் ஒரு படத்தின் மீது மூன்று கூடாரங்கள் உள்ளன. ஒன்றின் நடுவில் காட்டெருமையின் பிணம் பாதி உண்ணப்பட்ட நிலையில் இருந்தது. தலை, முதுகெலும்பு மற்றும் கால்கள் முதலியன தொடப்படவில்லை. பெருத்த தாடை மயிர் கொண்ட தலை முன்னங்கால்களுக்கு இடையில் இருக்கிறது. அந்த உடலுக்கு அருகில் இரண்டு வரிசையில் மக்கள் இருக்கிறார்கள்.

விலங்குகள், மனிதர்கள், கூடாரங்கள் இவைகளின் அருமையான வரைபடங்கள் எலும்புத் தட்டுகள், கற்பாளங்கள், சிக்கிமுக்கிக் கல் ஆகியவற்றில் உள்ளன. ஆனால் இவைகளில் மிகப்பெரும் எண்ணிக்கை யிலானவற்றை குகைகளின் சுவர்களில்தான் காண வேண்டியுள்ளது.

நமது குகையை நாம் தோண்டிக் கொண்டிருந்த போது, சுவர் களில் நாம் எந்த வரைபடங்களையும் காணவில்லை.

ஆனால் எங்கு மக்கள் உண்டார்களோ, தூங்கினார்களோ, வேலை செய்தார்களோ, குகையின் அந்த நுழைவாயிலில் மட்டுமே நாமிருக் கிறோம்.

இப்பொழுது நாம் நூற்றுக்கணக்கான மீட்டர்களுக்கு நீண்டு செல்லக் கூடிய சுரங்கப்பாதை வழியாக உள்ளே ஆழமாகச் சென்று மூலை முடுக்குகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

சுரங்கக் கலைக் காட்சிக்கூடம்

நமது மின்பொறிக் கைவிளக்கை எடுத்துக் கொண்டு குகைக்குள் சென்று ஆராயலாம். இங்கே ஒவ்வொரு திருப்பத்திலும் ஒவ்வொரு சந்திப்பிலும் சுலபமாக வழிதவறிப் போவதற்கு வாய்ப்புண்டு என்பதை நாம் அவசியம் நினைவில் கொள்ள வேண்டும்.

கல்லாலான நடைக் கூடம் ஒடுக்கமாகிக் கொண்டே போகிறது. மேற் கூரையிலிருந்து நீர்த் துளிகள் விழுகின்றன. நமது விளக்குகளை உயர்த்தி சுவர்களை ஆராய்கிறோம்.

நிலத்தடி நீரோடைகள் குகையை மின்னுகின்ற பளிங்காய் அழகு செய்திருந்தன. ஆனால் இங்கு மனிதக் கரம் எப்போதும் படவே இல்லை.

குகைக்கு உள்ளாக மேலும் நாம் தொடர்கிறோம். திடீரென்று யாரோ கத்துகிறான்:

''பாருங்கள்!''

சுவரில் காட்டெருதினுடைய மிகப் பெரிய ஓவியம் காணப் படுகிறது. அது சிவப்பு மற்றும் கறுப்பு மையால் எழுதப்பட்டிருக்கிறது. விலங்கு தன்னுடைய முன்னங்கால்களில் விழுந்து கிடக்கிறது. அதனது கூன்விழுந்த முதுகில் பல எறி ஈட்டிகள் குத்திக் கொண்டிருக்கின்றன.

அந்த ஓவியத்திற்கு முன்னால் நாம் மௌனமாக நிற்கிறோம். இது நூறு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ஓவியனால் வரையப்பட்டது.

சற்று தள்ளி நாம் மற்றொரு ஓவியத்தைக் கண்டுபிடிக்கிறோம். ஒரு விநோதமான வேதாள உரு நடனமாடுவது போலக் காணப்படு கிறது. ஒரு விலங்கைப் போல் காணக் கூடிய மனிதனாகவோ, மனி தனைப் போல் காணக் கூடிய விலங்காகவோ அது இருக்க வேண்டும். இந்த வேதாள உரு தாடியுடைய தலையையும், நீண்ட வளைந்த கொம்புகளையும், கூன் விழுந்த முதுகையும் மயிரடர்ந்த வாலையும் கொண்டிருந்தது. அதனது தோள்களும் கால்களும் ஒரு மனிதனைப் போலவே இருக்கின்றன. அது ஒரு வில்லை ஏந்திக் கொண்டிருக் கிறது.

மிகவும் அண்மையில் பார்க்கையில் அந்த வேதாள உரு, ஒரு காட்டெருமையின் தோலை அணிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனாக இருக்கிறது.

இன்னும் தள்ளி மற்றொரு ஓவியம், ஒரு மூன்றாவது, ஒரு நான்காவது...

இந்த விநோத கலைக்காட்சிக் கூடம் என்ன மாதிரியானது?

இன்றைய நாட்களில் ஓவியர்கள் நன்கு வெளிச்சம் வரக் கூடிய சித்திரக் கூடங்களில் பணி புரிகின்றார்கள். எப்பொழுதும் நன்கு வெளிச்சம் படக் கூடியவாறு படங்கள் எல்லாம் கலைக்காட்சிக் கூடங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

மனிதக் கண்களுக்கு அப்பால் இருக்கும்படி ஓர் இருண்ட குகையில் கலைக்காட்சிக் கூடத்தை அமைக்கும்படி இந்த வரலாற்றுக்கு முந்திய கால மக்களை எது ஏற்படுத்தி இருக்க வேண்டும்?

இந்த ஓவியர்கள் இத்தகைய படங்களை மற்றவர்களுக்காக வரைய வில்லை என்பது முற்றிலும் தெளிவாக இருக்கிறது.

ஆனால் இது இவ்வாறு இருக்குமானால், அவன் ஏன் வரைந் திருக்க வேண்டும்? விலங்கின் முக மூடிகளோடு நடனமாடக் கூடிய இந்த உருவங்கள் என்னவாக இருந்திருக்க முடியும்?

புதிரும் அதனது விளக்கமும்

''நடனத்தில் சில வேடுவர்கள் பங்கு கொள்கிறார்கள். ஒவ்வொரு வரும் ஓர் எருமைத் தோலையோ, கொம்புள்ள எருமை முகமூடியை யோ தங்களது தலையில் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வேடுவனும் ஒரு வில்லையோ எறி எட்டியையோ வைத்திருக்கிறான். நடனம் ஓர் எருமை வேட்டையை உருவகப்படுத்துகிறது. நடனமாடுபவர்களில் ஒரு

வன் களைப்படைகிற போது, கீழே விழுந்து கொண்டிருப்பது போல அவன் நம்ப வைக்கிறான். பிறகு மற்றொரு நடனக்காரன் அவன் மீது கூரற்ற அம்பை எறிகிறான். எருமை காயமுறுகிறது. வட்டத்தை விட்டு கால்களைப் பிடித்து இழுத்து அவன் வெளியேற்றப் படுகிறான். மற்றவர்கள் அவனுக்கு மேலாகத் தங்களது கத்திகளை அலைக்கிறார்கள். பிறகு அவர்கள் அவனைப் போக விடுகிறார்கள். வட்டத்தில் அவனது இடம் மற்றொரு நடனக்காரனால் எடுத்துக் கொள்ளப் படுகிறது. அவனுங்கூட எருமை முகமூடியே அணிந்திருக்கிறான். சில வேளைகளில் நடனம் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு தொடர்ந்து நடைபெறுகிறது. ஒரு கணங்கூட ஒருபோதும் நிற்பதில்லை.''

பண்டைக்கால வேடுவர்களின் நடனத்தை ஒரு பார்வையாளர் இங்ஙனமாகத்தான் விவரிக்கிறார். ஆனால் இதை அவர் எங்கு பார்த்திருக்கக் கூடும்?

வட அமெரிக்கச் சமவெளிகளில் இதை அவர் பார்த்திருக்கிறார். அங்கே பண்டைக்கால வேடுவர்களின் பழக்கங்களை இன்னமும் பின் பற்றி வருகின்ற சில இந்திய இனக் குழுவினர் இருக்கிறார்கள்.

இவ்வாறாக, வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ஓவியர் குகைச் சுவரில் சித்திரித்திருந்த அதே போன்ற வேட்டை நடனம் பற்றிய ஒரு விளக்கத்தை, ஒரு கண்டுபிடிப்பாளரின் நாட்குறிப்பில், நாம் திடீரென்று காண்கிறோம்.



இப்போது புதிரான ஓவியத்தின் பொருளை நாம் அறிகிறோம். ஆனால் இந்தப் புதிருக்கு விளக்கம் காண்பதில் நாம் மற்றொன்றையும் காண்கிறோம். அநேக வாரங்களுக்கு நீடிக்கக் கூடிய அந்நடனம் எத்தன்மையது?

ஒரு நடனம் மகிழ்ச்சிக்காகவோ, ஒரு கலைக்காகவோ தான் இருக்க வேண்டும் என நாம் கருதுகிறோம். ஒரு மகிழ்ச்சிக்காக வேண்டி, முழுச் சோர்வடைந்து அவர்கள் நீக்கப்படும் வரை இந்தியர்கள் உண்மையாகவே தொடர்ச்சியாக மூன்று வாரங்களுக்கு நடனம் ஆடினார்களா? மிகப் பெரிய கலை ரசிகர்கள் என்பதற்காக ஆடினார்களா? மேலும் இதை விட, அவர்களது நடனம் ஒரு நடனம் என்பதைக் காட்டிலும் ஒரு வினைமுறையாகவே இருக்கிறது.

இனக் குழுவின் மாயமந்திரவாதி தனது புகைக்குழாயிலிருந்து ஒரு குறிப்பிட்ட திசையில் புகை வரும்படி செய்கிறார், கற்பனையாக ஒரு விலங்கைப் பின்தொடர்வது போல, நடனமாடுபவர்கள் அதைப் பின்தொடர்கிறார்கள். மந்திரவாதி புகையோடு நடனத்தை நடத்துகிறார். நடனக்காரர்களை வடக்கிலோ, தெற்கிலோ, கிழக்கிலோ மேற்கிலோ அனுப்புகிறார்.

ஆனால் நடனத்திற்கு மாயமந்திரவாதி ஒருவன் பொறுப்பாக இருந்தால், அது ஒரு நடனமல்ல, ஒரு மந்திரச் சடங்கு என்றே பொருள் கொள்ள முடியும்.

தங்களது விநோதமான அசைவுகள் மூலமாகத் தத்திக் குதித்து, விநோதமான மந்திரச் சக்தியுடன் எருதுகளின் மீது மந்திரத்தைச் செலுத்தி வசப்படுத்தி, மரமற்ற பரந்த சமவெளிகளிலிருந்து, அவற்றை

வெளியே விரட்டலாம் என இந்தியர்கள் நம்பினார்கள்.

ஆக, குகைச் சுவரில் காணப்பட்ட நடன உருவம் இதுதான்! அவன் வெறுமனே நடனக்காரன் மட்டுமல்ல, ஒரு மந்திரச் சடங்கைச் செய்யக் கூடியவனுமாவான். தீப்பந்த வெளிச்சத்தில் உள்ளே சுரங்கத் திற்குள்ளாக சென்று ஓவியம் வரையத் தனது பாதையை அமைத்துக் கொண்டவன் வெறுமனே ஓவியனாக மட்டும் இல்லை, சூனியக்காரா னாகவும் இருந்திருக்கிறான்.

விலங்குகளின் முகமூடிகளோடும் வேடுவர்களையும், காயமுற்ற காட் டெருமையையும் படம் வரைவதன் மூலம், வேட்டை வெற்றியடைய வேண்டும் என்ற மந்திரத்துடன் அவன் தனது பில்லி சூனியத்தைச் செய்து கொண்டிருக்கிறான்.

மேலும் வினைமுறையிலான நடனம் எல்லாவற்றுக்கும் உதவும் என அவன் உறுதியாக நம்பினான்.

இது நமக்கு நம்ப முடியாததாகவும், அறிவுக்கு ஒவ்வாததாகவும் காணப்படுகிறது.

நாம் ஒரு புதிய வீட்டைக் கட்டத் தொடங்கும் போது, தச்சு வேலைக்காரர்கள், கொத்தனார்கள் இவர்களது அசைவுகளைப் பிரதி பலிப்பது போல அடித்தளத்தைச் சுற்றி நாம் குதிநடை போடுவ தில்லை. வேட்டைக்குப் போவதற்கு முன்னர் ஒரு துப்பாக்கியோடு நாம் சுற்றிவந்து நடனமாடுவதில்லை. ஆனால் முட்டாள்தனமானது என்று நாம் கருதும் விஷயங்களை, நமது வரலாற்றுக்கு முந்திய கால மூதாதையர்கள் மிக முக்கியமான வேலையாகக் கருதியிருக்கிறார்கள்.

புதிர் ஓவியங்களில் ஒன்றுக்கு நாம் இப்போது தீர்வு கண்டிருக் கிறோம். மேலும் நடனமாடக் கூடிய ஒரு மனிதனது உருவம் சுவரில் ஏன் வரையப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்கிறோம்.

ஆனால் விநோதமாக இருக்கக்கூடிய ஓவியங்களும் இருந்தன.

குகையில் ஓர் எலும்புத் தட்டில் ஒரு கதை முழுக்க வரையப்பட் டிருப்பதை நாம் காண்கிறோம் என்பதை நினைவுகூர வேண்டும். ஒரு காட்டெருமையின் பிணத்தைச் சுற்றிலும் இரு வரிசையிலும் நெடுக வேடுவர்கள் நிற்பது போன்ற படம். காட்டெருமையினுடைய தலையும், முன்னங்கால்கள் மட்டுமே முடிக்கப்படாமல் இருக்கின்றன.

இந்த ஓவியம் என்னவாக இருக்க முடியும்?

இந்த முறை நாம் விடை காண விரும்பினால், வட அமெரிக்கா விற்குச் செல்வதற்கு பதிலாக ருஷ்யாவின் தூரத்து வட பகுதிக்கு நாம் புறப்பட்டாக வேண்டும்.

நமது நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட கரடியை வேட்டை யாடிய வேடுவர்கள் ‘கரடி விருந்து’ நடத்திய சில இடங்கள் சைபீரி யாவில் இருக்கின்றன. பிணமானது வீட்டிற்குள்ளாகக் கொண்டுவரப் பட்டு, மரியாதையாக வைக்கப்படும், கரடியின் தலையை அதனது உள்ளங்கைகளுக்கு இடையே வைத்தார்கள். ரொட்டியிலோ, பிர்ச் மரப்பட்டையிலோ செய்யப்பட்ட சில மான் உருவங்கள் தலைக்கு அருகே வைக்கப்பட்டன. கரடிக்குப் படையல்கள் நடந்தன. பிர்ச் மரப்பட்டைகளின் வளைந்த துண்டுகளால் கரடியின் தலை அலங் கரிக்கப்பட்டது. அதே வேளை வெள்ளிக் காசுகள் அதன் கண்கள்

மீது வைக்கப்பட்டன. பிறகு ஒவ்வொரு வேடுவனும் மாறிமாறி அந்தக் கரடியிடம் சென்று அதனுடைய மூஞ்சியை முத்தமிட்டார்கள்.

அநேக நாட்களுக்கு, அல்லது, இன்னும் சரியாகச் சொன்னால் அநேக இரவுகளுக்கு நீடித்த ஒரு விருந்திற்கு இது தொடக்கமே ஆகும்.

ஒவ்வொரு இரவும் வேடுவர்கள் பிணத்தைச் சுற்றிக் கூடி, பாடி ஆடுவார்கள். பிர்ச் பட்டையிலோ, மரத்திலோ ஆன முகமூடிகளை அவர்கள் அணிந்து கொண்டு கரடி அருகில் வருவார்கள். அதற்கு முன்னால் குனிந்து நின்று, கரடியின் நடையைப்போல பாசாங்கு செய்தபடி, பிறகு அவர்கள் தங்களது நடனத்தைத் தொடங்குவார்கள்.

பாடலும் ஆடலும் முடிந்த பிறகு, அவர்கள் கரடியின் புலாலை உண்பதற்காகக் கீழே உட்கார்வார்கள், ஆனால் தலையும் முன்னங் கைகளும் ஒருபோதும் தொடப்படவில்லை.

எலும்புத் தட்டில் எழுதப்பட்ட ஓவியத்தினுடைய பொருளை நாம் இப்போது தெரிந்து கொள்கிறோம். அது ஒரு 'காட்டெருமை விருந்தை'ச் சித்தரித்தது. படத்திலுள்ள மக்கள் காட்டெருமையைச் சுற்றி நின்று கொண்டு, தனது தசைகளைத் தந்தமைக்காக அதற்கு நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மறுமுறையும் இது போலவே அவர்களிடம் அன்பு காட்டும்படி அதைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

அமெரிக்க இந்தியர்களிடம் நாம் திரும்பிச் சென்றிருப்போமேயானால், இதே போன்ற வேடுவர்கள் விருந்துகளை நடத்தியதை நாம் கண்டுபிடித்திருக்க முடியும்.

குய்சுவன் இனக் குழுவைச் சேர்ந்த வேடுவர்கள் கொல்லப்பட்ட மானினுடைய பின்னங்கால்களை கிழக்கு நோக்கி வைத்தார்கள். அதன் தலைக்கு அருகே ஒரு தட்டு உணவை அவர்கள் வைத்தார்கள். ஒவ்வொரு வேடுவனும் மாறிமாறி மானை நெருங்குகிறான். அதனது தலையிலிருந்து வால்வரை தனது வலது கையால் தடவிக் கொடுத்து, அதைக் கொல்வதற்குத் தன்னை விட்டமைக்கு நன்றி கூறுகிறான்.

''ஓய்வு பெறு, மூத்த சகோதரனே!'' என்று இறந்த விலங்கை நோக்கி அவன் கூறுகிறான்.

பிறகு மந்திரவாதி பேசுகிறான், மானை நோக்கி தனது உரையை நிகழ்த்துகிறான்:

''நீ உன்னுடைய கொம்புகளை எங்களுக்காகக் கொண்டு வந்தாய், இதற்காக உனக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.''

அத்தகு விநோதங்கள் அங்கே...

மனிதர்களாக மாறிய விலங்குகளையும், விலங்குகளாக மாறிய மனிதர் களையும் குறித்த தேவதைக் கதைகளைக் குழந்தைப் பருவத்தில் நாம் எல்லாருமே படித்து அநுபவத்திருக்கிறோம்.

தேவதைக் கதைகளை நாம் நம்பியிருந்தால், உலகமானது அன் பானதும் கொடுமையானதும், காணக் கூடியதும் காண முடியாததுமான புதிரான உயிரினங்களால் நிறைந்து போயிருக்கும். பாசாங்கு செய்யக் கூடிய இந்த உலகத்தில் கொடிய மந்திரவாதிகள் அல்லது பயங்கரமான சூனியக்காரிகளது மந்திரச் சொல்லுக்கு எதிராக ஒருவர் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்.

நமது கண்களையே நாம் ஒருபோதும் நம்ப முடியாது போகும். ஏனெனில் அருவருப்பான தேரையானது அழகிய பெண்ணாக திடீ ரென்று மாறக் கூடும், அதே வேளை அழகிய இளைஞன் ஒரு கொடிய பாம்பாக மாறக் கூடும். இங்கே ஒவ்வொன்றும் தங்களது சொந்த விதிமுறைகளைப் பின்பற்றுகின்றன: இறந்தது உயிருடன் வருகிறது, துண்டிக்கப்பட்ட தலையால் பேச முடிகிறது, மூழ்கிப்போன பெண்கள் செம்படவர்களை நீருக்குள் ஆசை காட்டி இழுக்கிறார்கள்.

புகழ்பெற்ற ருஷ்யக் கவிஞரான அலெக்ஸாந்தர் புஷ்கினுடைய பாடல்களில் ஒன்றில் கீழ்வரும் வரிகளை நாம் காண்கிறோம்:

> அத்தகு விநோதங்கள் அங்கே,
> ஓர் பூதம் அலைகிறது,
> ஓர் கடற்கன்னி கிளைகளுக்கிடையே அமர்கிறாள்.



தேவதைக் கதையை நாம் படிக்கின்றபோது இதை நம்புவதற்கு நாம் தயாராகி விடுகிறோம். ஆனால் புத்தகத்தை மூடிய உடனேயே நமது உண்மையான உலகத்திற்கு நாம் திரும்பி வருகிறோம், அங்கே எந்தவித மந்திரவாதிகளோ, சூனியக்காரிகளோ இல்லை, அங்கே ஒவ் வொன்றையும் விளக்கிச் சொல்ல முடியும். ஒரு தேவதைக் கதை எவ் வளவு ஈர்த்துப் பற்றுவதாக இருந்தாலும் நம்பக் கூடிய ஓர் உல கத்தில் வாழ்வதற்கு உண்மையிலேயே நாம் அக்கறை கொள்வதில்லை. அங்கே மூளை உதவியற்றுப் போகிறது. அங்கே ஒருவன் அதிர்ஷ்டக் காரனாகப் பிறக்க முதலாவதாக ஓநாயாக மாறும் ஆற்றலுடைய மனிதனையும், சூனியக்காரியையும் தப்பி உயிர்பிழைக்க வேண்டும்.

ஆனால் சரியாக இதே போலத்தான் உலகம் ஆக்கப்பட்டிருக்கிறது என்று வரலாற்றுக்கு முந்திய கால நமது மூதாதையர்கள் நினைத் தார்கள். அவர்கள் நம்பியிருந்த உலகத்திற்கும், அவர்கள் வாழ்ந்த உண்மையான உலகத்திற்கும் இடையே அவர்கள் எந்த வித்தியாசத் தையும் காணவில்லை. உலகத்தில் நடப்பன ஒவ்வொன்றும் பூமியை ஆளும் நல்ல அல்லது கெட்ட ஆவிகளால் ஆனதே என்று அவர்கள் நினைத்தார்கள்.

9–563

பாறைமீது கால் தடுமாறி நாம் விழுகின்ற போது வேறு யார் மீதும் பழிபோடாது நம்மை நாமே, நமது திறமையின்மைக்காகக் குறைபட்டுக் கொள்கிறோம்.

ஆனால் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் தன்னைத்தானே குறைபட்டுக் கொள்ளவில்லை, தனது பாதையில் கல்லை வைத்த தீய சக்தியைப் பழி கூறினான்.

ஒரு மனிதன் கத்தியால் குத்தப்பட்டு மடிகிற போது நாம் கத்தியால் குத்தப்பட்டு அவன் இறந்தான் என்று கூறுகிறோம்.

ஆனால் வரலாற்றுக்கு முந்தியகால மனிதன் அவனைக் கொன்ற அந்தக் கத்தி பில்லி சூனியம் வைக்கப்பட்டது என்று சொல்லியிருப்பான்.

எனினும், 'தீக் கண்ணால்' நோய் பிடிக்கக் கூடும், திங்கட்கிழமை எதையும் தொடங்குவது அதிர்ஷ்டமற்றது, நமது பாதையில் கறுப்புப் பூனை குறுக்கிட்டால் அது நமக்குத் தீயதை வரவழைக்கும் என்று நம்பக் கூடிய மக்கள் உலகெங்கும் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இத்தகை மக்கள் முட்டாள்கள் என்று நாம் நினைக்கிறோம். நமது நாளில், காலத்தில் மூடநம்பிக்கை கொண்டிருப்பதற்கு மன்னிப்பே இல்லை. ஏனென்றால் நல்ல ஆவிகளும் கெட்ட ஆவிகளும் பற்றிய எல்லாவிதமான நம்பிக்கைகளும் நமது அறியாமையிலிருந்து ஏற்படுவதாகும். மேலும் அறியாமை என்பது மூலைகளில் ஏற்படும் நூலாம்படை போன்றதாகும்.

எனினும், சூனியக்காரர்களையும் கெட்ட ஆவிகளையும் நம்பிய நமது வரலாற்றுக்கு முந்தியகால மூதாதையர்களை நாம் கேலி செய்ய முடியாது. இது இயற்கை விதிகளை விளக்குவதற்கு அவர்கள் மேற்கொண்ட வழிமுறையாகும். ஏனெனில் சரியான விடைகளைக் கண்டுபிடிப்பதில் அவர்கள் மிகக் குறைந்த அறிவையே பெற்றிருந்தார்கள்.

முற்காலத்தில் ஆஸ்திரேலிய இனக் குழுக்கள் அநேகம் இந்த அளவில்தான் இருந்திருந்தன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால ஆப்பிரிக்கக் கண்டுபிடிப்பாளர் ஒருவர் இதைப் போலத்தான் சொல்லியிருக்க வேண்டும்:

''புது மாதிரியான கப்பல் தளவாடங்களுடன் கூடிய பாய்மரக் கப்பலையோ, மற்ற கப்பல்களைவிட அதிகமான குழாய்களுடன் கூடிய ஒரு நீராவிக் கப்பலையோ பார்த்தவுடன் கடற்கரை நெடுகிலும் உள்ள பூர்வீககுடிமக்கள் பெரியதும் உணர்ச்சி வயப்பட்டுப் போகிறார்கள். ஒரு மழை மேலங்கி, விநோதமாகக் காணக் கூடிய தொப்பி, ஓர் அசைந்தாடும் நாற்காலி அல்லது இதற்கு முன் அவர்கள் பார்த்திராத ஒரு கருவி ஆகியன அவர்களுக்குப் பெருத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன.''

இது ஏனெனில் அவர்கள் இதற்கு முன் ஒருபோதும் பார்த்தேயிராத பொருளில் ஏதேனும் சூனியம் இருக்கக் கூடும் என்று அவர்கள் நினைப்பதேயாகும்.

எல்லாப் பொருட்களுமே ஒருவகையில் தொடர்பு கொண்டவை

என்பதை அநுபவம் அவர்களுக்குக் காட்டி இருக்கிறது. ஆனால் இது ஏன் இவ்வாறாக இருக்கிறது என்பதை அவர்கள் அறியாத தால், மற்றபொருட்களில் ஏதாவது மந்திர சக்தி இருக்கக் கூடும் என்று அவர்கள் தொடர்ந்து நம்புகிறார்கள்.

'தீக் கண்ணை'த் தொலைப்பதற்குரிய ஒரே வழி தாயத்து அணி வதுதான் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது முதலைப் பற்களா லான கழுத்தாரமாகவோ, யானையின் வால் நுனியில் வளரக் கூடிய முடியால் ஆன கைவளையாகவோ இருக்கும். தன்னை அணிந் திருப்பவனைத் தொல்லையிலிருந்து காக்கும் பாதுகாவலன் தாயத்து என நம்பப்படுகிறது.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மக்கள் மிகப் பெரும்பாலும் மந்திரம், சூனியம் மற்றும் மாந்திரீகத்தை நம்புகின்றனர். தொல் பொருள் ஆராய்ச்சியின் அகழ்விடங்களில் கிடைத்த தாயத்துக்களில் இருந்தும், குகைகளின் உள்புறத்தில் மந்திர ஓவியங்களிலிருந்தும் இதற் கான ஆதாரத்தை நாம் காண்கிறோம்.

உலகைப் பற்றி நமது மூதாதையர் என்ன நினைத்தார்கள்

இந்த உலகத்தினுடைய சட்டங்களை ஒருவன் அறியாதபோது, இதில் வாழ்வது என்பது ஒரு மனிதனுக்குக் கஷ்டமானதாகும். தெரியாத வலிமைகளின் சக்தியால் அவன் தளர்ந்தும், முழுமையாக ஆதரவற்றும் போய்விட்டான். ஒவ்வொரு பொருளும் ஒரு தாயத்தாக இருக்கக் கூடும் என்று அவன் நம்பினான். ஒவ்வொரு மனிதனும் மாந்திரீக வாதியாக இருக்கக் கூடும் என நம்பினான். பழிவாங்கக் கூடிய, அமைதியற்ற இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் உயிருடனிருப் பவர்கள் மீது மந்திரத்தைச் சொல்லத் தயாராக இருந்தனவென்று அவன் நம்பினான். வேட்டையில் கொல்லப்பட்ட ஒவ்வொரு விலங் கும் தன்னைக் கொன்றவனைப் பழிவாங்குவதற்காகத் திரும்பி வரக் கூடும். தொல்லை இல்லாமல் இருக்க வேண்டிய ஒருவன் ஆவிகளைத் தொடர்ச்சியாக கேட்டுக் கொள்ளவும், கெஞ்சவும், பசப்பி இணங்கச் செய்யவும் வேண்டியிருந்தது. படையல்கள் செய்து அவைகளை ஒருவன் சாந்தப்படுத்த வேண்டியிருந்தது.

அறியாமை அச்சத்தை வளர்க்கிறது.

மேலும் மனிதன் அறிவில் பின்தங்கி நின்றதால், இந்த உலகத்தின் ஒரு எசமானன் போல அவனால் நடந்து கொள்ள முடியவில்லை, ஆனால் இரங்கத்தக்க பிச்சைக்காரனைப்போல அஞ்ச மட்டுமே செய் தான்.

எனினும், இயற்கையின் எசமானனாகத் தன்னைக் கருதிக் கொள்ள இன்னமும் அவனுக்கு நேரம் வரவில்லை. இப்பொழுது அவன் உலகத் திலுள்ள எல்லா விலங்குகளைக் காட்டிலும் வலிமையுள்ளவனாக இருக்கிறான். அவன் ஒரு கம்பளியானையை வெற்றி கொண்டிருக் கிறான். அதை எப்படி சமாளிப்பது என்று அறியாததால் இயற்கையின் மிகப் பெரிய சக்திகளோடு ஒப்பிடுகின்ற போது, அவன் இன்னமும் அற்பமான உயிரியாகவே இருந்தான்.

வெற்றியடையாத ஒரு வேட்டை, பல வாரங்களுக்குப் பட்டினி

என்பது பொருளாயிற்று. ஒரு பனிப்புயலால் கூடாரம் முழுமையுமே பனியில் மூழ்கியது.

பிறகு இயற்கைச் சக்திகளின் மேலாண்மை பெறுவதை நோக்கி மெல்லமெல்ல, படிப்படியாக முன்னேற மனிதனுக்குச் சண்டையிடும் வல்லமையைத் தந்தது எது?

அவன் உண்மையில் தனிமையில் இல்லாமல் இருந்ததால்தான் அவன் தனது வலிமையைப் பெற்றுக் கொண்டான்.

சமூகம் முழுமையும், இனக்குழு முழுமையும் இயற்கையின் எதிர்ப்பு சக்திகளை ஒன்று சேர்ந்து போரிட்டது. அவர்களது பொதுவான உழைப்பின் மூலம் அவர்கள் இணைந்தே பணிபுரிந்தார்கள், அவர்கள் இணைந்தே அறிவையும் அநுபவத்தையும் பெற்றார்கள்.

உண்மை, இதை அவர்கள் சிரமத்தோடுதான் உணர்ந்தார்கள். ஐயத்திற்கிடமின்றி, அவர்கள் தங்களுக்கேயுரிய சொந்த வழியில் புரிந்து கொண்டார்கள்.

மனித சமூகம் என்னவென்பது அவர்களுக்குத் தெரியாது. ஆனால் ஒருவருக்கொருவர் கட்டுண்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டார்கள். ஒரு தனிப்பட்ட இனக் குழுவின் மக்கள் உண்மையில் ஒரு தனித்த, பெரிய, பல தோள்களையுடைய நபராகத் திகழ்ந்தனர்.

அவர்களை எது ஒருசேர இணைத்திருந்தது?

அவர்கள் ரத்தப்பிணைப்புக்களால் கட்டுண்டு இருந்தார்கள். பெரிய குடும்பங்களாக மக்கள் வாழ்ந்தார்கள். குழந்தைகள் தங்கள் தாய் களுடன் வாழ்ந்தனர், அவர்கள் பெரியவர்களாகி அவர்களுக்கென சொந்தமாகக் குழந்தைகளைப் பெற்றிருந்த போது, அவர்கள் இன்னமும் தங்களுடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள், அத்தைகள் மற்றும் மாமன்கள், தாயார்கள் மற்றும் பாட்டிகள் இவர்களோடு சேர்ந்தே வாழ்ந்தார்கள்.

இவ்வாறாகக் குடும்பம் வளர்ந்தது.

வேடுவன் வாழ்ந்த வரலாற்றுக்கு முந்திய காலச் சமூகமானது அவனது சொந்தக் குடும்பம், ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றிய இனக் குழுவாகவே இருந்தது. பெற்றிருந்த ஒவ்வொன்றுக்கும் தங்களது மூதாதையர்களுக்கு அவர்கள் கடமைப்பட்டவர்கள் என மக்கள் நம்பினார்கள். அவர்களது மூதாதையர்கள் வேட்டையாடுவதற்கும், தங்களது கருவிகளைச் செய்வதற்கும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் தங்களுடைய குடியிருப்புக்களையும், நெருப்பின் பயனையும் சந்ததியினர்க்குத் தந்துவிட்டார்கள்.

வேலை செய்வது, வேட்டையாடுவது என்பது தங்களது மூதாதையர்களின் விருப்பத்தை நிறைவு செய்வது என்பது பொருளாகும். யார் தனது மூதாதையர்களது விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தானோ அவன் தொல்லையிலிருந்தும் ஆபத்திலிருந்தும் காப்பாற்றப்பட்டான். அவர்களது மூதாதையர்கள் அன்றாட வாழ்வில் கட்புலனாகாத ஓர் அங்கமாகத் திகழ்ந்தனர். ஒவ்வொரு வேட்டையின் போதும் அவர்களுடைய ஆவிகள் அவர்களுக்குத் துணை சென்றன. குடியிருப்புக்களில் அவர்கள் எப்பொழுதுமே இருந்து வந்தார்கள். இத்தகைய ஆவிகள் எல்லாம் காண்பவையாகவும், எல்லாம் அறிந்தவையாகவும் இருந்தன. தவறு

செய்கின்றவனைத் தண்டிக்கவும், நல்லது செய்கின்றவனுக்கு வெகு மதியளிக்கவும் அவைகளால் முடியும்.

இவ்வாறாக, பொதுவான உழைப்பு பொது நன்மைக்கானது என்பது வரலாற்றுக்கு முந்திய கால மனிதனின் மனத்தில் ஏற்பட்டது, பொது மூதாதையர்க்குக் கீழ்ப்படிதல், ஆசையை நிறைவேற்றுதல் என்பதைவிட மேலானதாக அது இருக்கவில்லை.

எனினும், இன்று நாம் காண்பது போல வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் தனது உழைப்பின் மேன்மையை புரிந்து கொள்ளவில்லை.

வரலாற்றுக்கு முந்திய கால வேடுவன் வாழ்ந்ததும் தனது குடும்பத்திற்கு உணவளித்ததும் அவன் கொன்ற காட்டெருமையை வைத்துத் தான் என நாம் கருதுகிறோம். ஆனால் காட்டெருமை அவனுக்கு உணவளித்ததாக அவன் நம்பினான். இப்பொழுதும் கூட, பண்டைக் காலத்திலிருந்ததைப் போல, பசுவை நமது கொடுப்பவர் என்றும், பூமியைத் 'தாய் பூமி' என்றும் நாம் அழைக்கிறோம். அதனிடமிருந்து பால் கறக்க பசுவின் அநுமதியை நாம் கேட்பதில்லை. இனியும், பசு நமக்கு பால் 'கொடுக்கிறது' என்று நாம் கூறுகிறோம்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவனுடைய 'கொடுப்பவன்' ஒரு விலங்காகவே இருந்தது. ஒரு காட்டெருமையாக இருக்கட்டும், ஒரு கம்பளியானையாகவோ, ஒரு மானாகவோ இருக்கட்டும். ஒரு விலங்கைத் தான் கொன்றதாக வேடுவன் எண்ணியதில்லை, அது தனது தசையையும், தனது சொந்தத் தோலையும் இவனுக்குத் தானாகவே தந்தது என அவன் நம்பினான். ஒரு விலங்கை அதனது விருப்பத்திற்கு மாறாகக் கொல்ல முடியாது என இந்தியர்கள் நம்பினார்கள். ஒரு காட்டெருமை கொல்லப்பட்டால், மக்களுக்காகத் தன்னை தியாகம் செய்ய அது விரும்பி இருந்ததே காரணமாகும், அதற்காகவே அது கொல்லப்பட விரும்பியது.

ஒரு காட்டெருமை இனக் குழுவினுடைய கொடுப்பவனாகவும் பாதுகாப்பவனாகவும் இருந்தது. அதே வேளை, அவர்களது பொது மூதாதையரையும் அவர்கள் இனக்குழுவின் பாதுகாவலராகக் கருதினார்கள்.

ஆகையால் வரலாற்றுக்கு முந்தியகால மக்களது மனத்தில் (தாங்கள் வாழ்ந்த உலகைப் பற்றி அப்போதும் கூட தெளிவற்ற எண்ணத்தையே கொண்டிருந்தார்கள்) மூதாதையர்-பாதுகாவலர், இனக் குழுவிற்கு உணவளித்த விலங்கு-பாதுகாவலர் இரண்டும் இணைந்தது என்ற எண்ணம் இருந்தது.

''நாம் காட்டெருமையின் குழந்தைகள்,'' என வேடுவர்கள் சொன்னார்கள். மேலும் தங்களது மூதாதையர் காட்டெருமையே என்று அவர்கள் உண்மையில் நம்பினார்கள். வரலாற்றுக்கு முந்திய கால ஓவியன் ஒரு காட்டெருமையின் படத்தையும், அதன் உடல்மீது பின்னர் மூன்று கூடாரங்களையும் வரைந்ததன் பொருளாவது: ''காட்டெருமையின் குழந்தைகளுடைய முகாம்.''

தனது அன்றாட வேலையில் விலங்குகளுடன்தான் மனிதன் நெருக்கமாக உறவு கொண்டிருந்தான். ஆனால் அது ரத்த உறவு முறை

இல்லாத ஓர் உறவு என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை. எந்த உறவிலும் பொதுவான ஏதோ ஒன்று இருக்கிறது என் பது பொருளாகும். ஒரு விலங்கை அவன் கொன்ற போது, அதனி டம் தனது மன்னிப்பைக் கோரினான். தனது மூத்த சகோதரரிடம் பேசுவதுபோல அதனிடம் உரையாற்றினான். தனது நடனங்களிலும், மந்திரச் சடங்குகளிலும் தனது விலங்குச் சகோதரனைப் போல பின் பற்ற முயன்றான்.

''நான்'' என்று தன்னை அழைத்துக் கொள்வதற்கு மனிதன் இன்னமும் கற்றிருக்கவில்லை. அவன் இன்னமும் தன்னை இனக் குழு வினுடைய ஒரு பகுதியாகவும் ஒரு கருவியாகவும் கருதினான். ஒவ் வொரு இனக்குழுவும் தனக்கென்று சொந்தப் பெயரையும், குலமரபுச் சின்னத்தையும் பெற்றிருந்தது. அவர்களது பொது மூதாதையரும் பாதுகாவலருமான விலங்கின் பெயரே அது. ஓர் இனக்குழு ''காட் டெருமை'' என்றும் மற்றொன்று ''கரடி'' என்றும் மூன்றாவது ''மான்'' என்றும் அழைக்கப்பட்டது. இனக்குழுவினுடைய உறுப்பினர்கள் ஒரு வருக்கொருவர் தங்களது உயிர்களைக் கொடுப்பதற்கும் தயாராக இருந்தனர். இனக்குழுவினுடைய பழக்கங்களை அவர்களது குலமரபுச் சின்னத்தின் விருப்பமாக கருதினார்கள், குலமரபுச் சின்னத்தின் விருப் பமே அவர்களுக்குச் சட்டமாக இருந்தது.

நமது மூதாதையர்களோடு உரையாடுதல்

வரலாற்றுக்கு முந்தியகால மனிதனது குகைக்குள்ளாக நாம் திரும்ப வும் சென்று அடுப்படியில் அவனருகில் சேர்ந்து கொள்வோம். அவனது நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் பற்றி அவனிடம் நாம் பேசலாம்.

நமக்காகவே குறிப்பாக அவன் விட்டுச் சென்றது போலக் காணப் படும் குகை ஓவியங்களையும், அலங்கரிக்கப்பட்ட தாயத்துக்களையும் நாம் சரியாகப் புரிந்து கொண்டால், நமது ஊகங்கள் சரியானவையாக இருந்தால் அவனை நம்மிடம் பேசவைப்போம்.

ஆனால் குகையினுடைய எசமானனை நாம் எங்ஙனம் பேசவைக்க முடியும்?

அடுப்படியிலிருந்த சாம்பல்களை காற்று பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அடித்துக் கொண்டு போய்விட்டது. ஒரு காலத் தில் நெருப்புக்குப் பக்கத்தில் அமர்ந்து, சிக்கிமுக்கிக் கற்களாலும் எலும்புகளாலும் கருவிகளைச் செய்து, விலங்குத் தோல்களால் தங் களது ஆடைகளைத் தைத்துக் கொண்டவர்களது எலும்புகள் எப்போ தோ தூசியாக மாறிவிட்டன. காய்ந்து, மஞ்சள் நிறமாகிப் போன புதைபடிவ மனித மண்டையோட்டை தரையில் தொல்பொருள் நிபு ணர்கள் மிக அரிதாகத்தான் க்ண்டெடுக்கிறார்கள்.

மண்டையோட்டை நம்மால் பேசவைக்க முடியுமா?

கருவிகளின் துண்டு சிராய்களைக் காண்பதற்காகவும், வரலாற் றுக்கு முந்திய கால மனிதன் இந்தக் கருவிகளைக் கொண்டு எங்ஙனம் வேலை செய்தான் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவும் நாம் குகையைத் தோண்டினோம்.

ஆனால் வரலாற்றுக்கு முந்தியகால மனிதனுடைய பேச்சின் துண்டு களையும் சிராய்களையும் நாம் எங்கு கண்டுபிடிக்க முடியும்?

நமது சொந்த நவீன மொழிகளில்தான் அவைகளை நாம் தேடி யாக வேண்டும்.



இது மாதிரியான தோண்டுதலுக்கு நமக்கு மண்வெட்டி தேவையில் லை, ஏனெனில் நாம் நிலத்தில் அல்லாது, அகராதியில்தான் தோண்டிக் கொண்டிருக்கப் போகிறோம். ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு வார்த் தையும் கடந்த காலத்தின் அரிய துணுக்குகளைப் பாதுகாத்து வந் திருக்கிறது. அது இப்படித்தான் இருக்க முடியும். மொத்தத்தில், நூறு, ஆயிரக் கணக்கான தலைமுறைகளின் அநுபவம் நமது மொழி களுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

நாம் இப்படிக் கூறலாம்: ஒரு மொழியைப் படிப்பதையும் விஷயங் களைக் கண்டுபிடிப்பதையும் விட எது எளிமையானதாக இருக்க முடி யும்! நாம் செய்ய வேண்டியதெல்லாம் மேசையில் உட்கார்ந்து ஓர் அகராதியின் பக்கங்களைப் புரட்டுவதுதான்!

ஆனால் இது அவ்வளவு இலகுவானது இல்லை.

பண்டைக் கால வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் ஆராய்ச்சியாளர்கள் உலகம் முழுக்கப் பயணம் செய்கிறார்கள், செங் குத்தான மலைகளில் ஏறுகிறார்கள், பெருங்கடல்களைக் கடக்கிறார் கள். சில வேளைகளில் உயரமான மலைகளின் சுவருக்கு அப்பால் தொலைவில் தங்களது சிறிய இனத்தைக் கட்டிக் கொண்ட மக்கள் மற்ற மொழிகளில் மறைந்து போய்விட்ட பண்டைக் கால வார்த்தை களை நிலைநிறுத்தி வைத்திருக்க முடியும்.

ஒவ்வொரு மொழியும் மனித இனத்தின் நீண்ட சாலையில் ஒரு கூடார இடம் போன்றது. ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா இவற்றின் வேட்டையாடும் இனக்குழு மக்களின் மொழி கள், தாம் எப்போதோ பின்னுக்கு விட்டுவிட்ட கூடார இடங்களாகும். பிறகு நாம் மறந்து போயிருந்த பண்டைக்கால சொற்கூறுகளையும் வெளிப்பாடுகளையும் காண்பதற்காக ஆராய்ச்சியாளர்கள் பெருங்கடலைக் கடந்து பாலினீஷியாவிற்குச் செல்கிறார்கள்.

வார்த்தைகளைத் தேடுகின்ற தங்களுடைய முடிவற்ற ஆராய்ச்சி யில் தென் பகுதிப் பாலைவனங்களுக்கும், வடக்கின் தூந்திரப் பகுதிக்கும் ஆழமாகச் செல்கிறார்கள்.

சோவியத் யூனியனின் தொலை தூர வடக்கிலுள்ள மக்கள், தனிப்பட்ட சொத்து இல்லாத போது, ''எனது'' என்பதன் பொருளை, எடுத்துக்காட்டாக ''எனது வீடு'', ''எனது நாய்'' என்பன போன்ற வற்றை அறியாத காலத்திலிருந்து அவர்களை வந்தடைந்திருக்கின்ற வார்த்தைகளையே பயன்படுத்துகிறார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வரலாற்றுக்கு முந்திய கால கூடாரமையங்களின் கருவிகளையும், குடியிருப்புகளின் மீத மிச்சங் களையும் தோண்டுவது போல, பண்டைக் காலப் பேச்சின் மீதமிச்சங் களை நாம் அறிய விரும்பினால் இது போன்றவற்றை மொழிகளில் தான் நாம் தோண்டி எடுக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் அகராதி தொல்பொருள் ஆராய்ச்சியாளராக

முடியாது. அதற்காக நமக்கு சிறப்பான பயிற்சியும் அறிவும் தேவைப் படும். ஏனெனில் அருங்காட்சியம் போல பழைய வார்த்தைகள் ஒரு மொழியில் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கவில்லை. நூற்றாண்டு காலப் போக்கில் வார்த்தைகள் அநேக முறைகள் மாறிவிட்டன. அவை ஒரு மொழியிலிருந்து மற்றொன்றுக்குப் பயணம் செய்திருக்கின்றன, ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கின்றன, பகுதி, விகுதிகளை மாற்றிக் கொண்டன. ஒரு கருகிப் போன மரத்தின் வேர்போல, சில வேளை களில் பழைய வார்த்தைகளின் வேர் தவிர மற்றது மிஞ்சவில்லை. அந்த வேரிலிருந்துதான், அந்த வார்த்தை ஆரம்பத்தில் எங்கிருந்து வந் தது என்பதை நாம் கண்டு கொள்ள முடியும்.

ஆயிரக் கணக்கான ஆண்டு காலப் போக்கில் வார்த்தைகளில் வடிவங்கள் மட்டும் மாறவில்லை, அவற்றின் அருத்தங்களும் கூட மாறியிருக்கின்றன. ஒரு வார்த்தை அடிக்கடி புதிய அருத்தத்தைத் தரும்போது, முன்னதைவிட முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கிறது.

இன்னமும் இது நிகழ்கிறது. புதியதாக ஒன்று கண்டு பிடிக்கப்படும் போதோ, தயாரிக்கப்படும் போதோ அதற்காக புதிய வார்த்தையை நாம் எப்போதுமே உண்டாக்குவதில்லை. சில வேளைகளில் நாம் சுற்றிலும் பார்த்துவிட்டு, ஒரு பழைய வார்த்தையைக் கண்டுபிடித்து அந்தப் புதிய பொருளில், அது தான் அதனது அடையாளத் துண்டுக் குறிப்பாக இருந்தது போல, ஒட்டி விடுகிறோம்.

எடுத்துக்காட்டாக 'விண்' என்ற சொல்லை எடுத்துக் கொள் வோம். இந்த அடிச் சொல்லினின்றும் 'விண்ணியல்', 'விண்வெளி', 'விண்ணாய்வு' போன்ற புதிய சொற்களை உருவாக்கி உள்ளோம். இது போல 'அழகு' என்ற சொல்லினின்றும் 'அழகியல்' என்ற புதிய சொல் உருவாக்கப்பட்டுள்ளது.

நமது மொழியின் மேலடுக்கில் மிக அண்மையில் ஏற்பட்ட மாற் றங்களே இவை. இதனால் தான் இத்தகைய வார்த்தைகளின் முன் னாளைய அருத்தங்களைக் கண்டுபிடிப்பது மிகவும் இலகுவானதாக இருக்கிறது.

ஆனால் இன்னும் கீழே நாம் செல்ல, வேலைச் சுமை கடினமானதா கிறது. மறைந்து போன ஒரு வார்த்தையின் பண்டைய அருத்தத்தைக் கண்டுபிடிக்க ஒருவர் மொழிகளில் மிகப் பெரும் பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும்.

சிங்கம் என்ற சொல்லுக்குப் 'பெரிய நாய்' என அருத்தமும் நரி என்ற சொல்லுக்கு 'சிறிய நாய்' என்ற அருத்தமும் கொண்ட மொழி கள் இருக்கின்றன. இதனால் தான் 'சிங்கம்', அல்லது 'நரி' என்ற சொற்களுக்கு வெகு காலத்திற்கு முன்பே 'நாய்' என்ற வார்த்தை இருந்தது தெரிகிறது.

பண்டைய பேச்சின் சிம்புகள்

பேரவையாளர் இ. மெஷ்சனினோவ் யுககீர் மொழியில் 'மனிதன்மான் கொல்' என்ற சொல் இருப்பதாக எழுதுகிறார். இது ஒரு நீண்ட, செயல் நயமற்ற சொல். இதன் அருத்தத்தை விளங்கிக் கொள்வது இன்னும் கஷ்டமானதாக இருக்கிறது.

யார் கொன்றது யாரை? மனிதன் மானைக் கொன்றானா, மான்

மனிதனைக் கொன்றதா, இந்த இரண்டும் சேர்ந்து வேறுயாரையேனும் கொன்றனவா, வேறுயாரேனும் இந்த இரண்டையும் கொன்றதா?

ஆனால் யுககீர் இந்தச் சொல்லைப் புரிந்து கொள்கிறான். ''ஒரு மனிதன் ஒரு மானைக் கொன்றான்'' என அவன் சொல்ல விரும்பும் போது, அவன் பயன்படுத்துவது இந்தச் சொல்லைத்தான்.

இத்தகைய விநோதமான சொல் எங்ஙனம் தோன்றியிருக்கக் கூடும்?

வேலை செய்வது, வேட்டையாடுவது, ஒளிந்து மறைந்து சென்று மானைக் கொன்றது ஆகியனவற்றைச் செய்தது அவன்தான் என்பதை உணராத போது, தன்னை 'நான்' என்று மனிதன் இன்னமும் சுட்டிக்கொள்ளாத காலத்திற்கு முன்னர் இது செல்கிறது. மானைக் கொன்றது அவனில்லை என்று அவன் நம்பினான், ஆனால் அவனது இனக்குழு, அவனது இனக்குழு கூட அல்ல, இனந்தெரியாத எல்லாவற்றையும் ஆளுவதாக ஏதோ ஒரு சக்தி இருப்பதாக நம்பினான். மிகப் பண்டையக் காலத்தில் இந்த உலகத்தில் மிகவும் அற்பமான, உதவியற்ற உயிரியாகவே மனிதன் தன்னை எண்ணினான். ஏனெனில் இயற்கை அவனுக்குக் கீழப்படியவில்லை.

ஒரு நாள் 'மனிதன்மான்கொல்' இனம் புரியாத சக்தியின் விருப்பத்தைத் தொடர்ந்து வெற்றியடைந்தது. மறுநாள் வேட்டை வெற்றி பெற்றி பெறவில்லை, மக்கள் வெறுங்கையோடு கூடாரத்திற்குத் திரும்பினார்கள். 'மனிதன்மான்கொல்' என்ற வெளிப்பாட்டிற்கு எந்த மனிதனும் பொறுப்பாக இல்லை. இதற்கு யார் பொறுப்பு என்பதை வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் எங்ஙனம் அறிந்து கொள்வான்? அவனா? மானா? மானுக்கும் தனக்கும் பொது மூதாதையரான தனது தெரியாத பாதுகாவலரால் தனக்குத் தரப்பட்டது மான் என்பதை அவன் நம்பவில்லையா?

நமது தோண்டுதலில், மனிதப் பேச்சின் ஆரம்ப முதல் அடுக்கிலிருந்து மற்றொன்றுக்கு நாம் முன்னேறிச் செல்வோமானால், விளங்காத சக்திகளின் கைகளில் மனிதன் தன்னை ஒரு கருவியாகக் கருதிய காலத்திய பேச்சின் மீத மிச்சங்களை நாம் அடிக்கடி எதிர்ப் படுகிறோம்.

சுக்சி மொழியில் இதுபோன்ற ஒரு சொற்றொடர் இருக்கிறது: ''மனிதன் மூலமாக இறைச்சி கொடுக்கிறது அவன் நாய்க்கு.''

இது முற்றிலும் தாறுமாறானதாக நமக்குத் தெரிகிறது. நாம் இப்போது செய்வது போல மக்களுக்குச் சிந்திக்கத் தெரியாத போது, நீண்ட காலத்திற்கு முன்னர் சேமிக்கப்பட்ட பேச்சின் அடுக்கிலிருந்து இந்தச் சொற்றொடரை நாம் மேலே தோண்டி எடுக்கிறோம்.

''மனிதன் தனது நாய்க்குக் கொஞ்சம் இறைச்சி கொடுக்கிறான்,'' என்று சொல்வதற்குப் பதிலாக, அவர்கள் கூறுகிறார்கள்:

''மனிதன் மூலமாக இறைச்சி கொடுக்கிறது அவன் நாய்க்கு.''

பிறகு யார் மனிதன் மூலமாக இறைச்சியைக் கொடுப்பது?

ஒரு விளங்காத சக்தி மனிதனை ஒரு கருவி போலப் பயன்படுத்துகிறது.

''நான் சால்வை பின்னுகிறேன்'' என்று சொல்வதற்கு பதிலாக,

தகோதா இந்தியர்கள் ''பின்னிக் கொண்டு என்னால்'' என்கிறார்கள். பின்னுவதற்கு ஊசியை ஒருவன் பயன்படுத்துகிறான் என்பதில்லாமல் ஒரு மனிதனே ஊசிபோல பின்னிக் கொள்கிறான் என்பது போலா கிறது.

பண்டைக் காலப் பேச்சு வடிவங்களின் மீத மிச்சங்களை எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இன்னமும் காண முடிகிறது.

இவ்வாறாக, ''Il fait froid'' ''அது குளிர்ச்சியாக இருக்கிறது'' என்பதை பிரெஞ்சு மொழியில் ஒருவர் கூறுகிறார். ஆனால் வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்த்தால் அது இப்படித் தான் பொருள் படும்: ''அவன் குளிர்ச்சியை உண்டு பண்ணுகிறான்''.

மறுபடியும் உலகை ஆளுகின்ற 'அவன்' என்ற விளங்காத புதிரைக் காண்கிறோம்.

ஆனால் எடுத்துக்காட்டுகளுக்காக நாம் அந்நிய மொழிகளைப் பார்க்க வேண்டியதில்லை. ருஷ்ய மொழியிலும், பண்டைய சிந்தனை முறைகளில் தேவைக்கதிகமான எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, ''அவன் இடியினால் கொல்லப்பட்டான்'', ''அவன் பேய் அடித்துக் கொல்லப்பட்டான்'', ''அவனை இருளடித்து விட்டது'' என்று கூறுகிறார்கள். அதாவது மனிதனுக்கு அப்பாற்பட்ட மூன்றாவது சக்தி ஒன்று மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று பலரால் நம்பப்பட்டு வந்தது. இந்தச் 'சக்தி' கட்புலனாகாத ஒன்று என்பது வெளிப்படையானது.

எந்த விளங்க முடியாத சக்திகளையும் நாம் நம்பவில்லை, ஆனால் இத்தகைய சக்திகளை எல்லாம் உறுதியாக நம்பிய வரலாற்றுக்கு முந்திய கால மூதாதையர் மொழிகளின் மீத மிச்சங்களை நமது பேச்சு இன்னமும் காப்பாற்றி வருகிறது.

இவ்வாறாக, ஒரு மொழியினுடைய அடுக்குகளைத் தோண்டுகின்ற போது, நாம் சொற்களை மட்டும் காணவில்லை, ஆனால் வரலாற்றுக்கு முந்திய கால மக்களின் சிந்தனைகளையும் காண்கிறோம். வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் ஒரு விநோதமான, விளங்கிக் கொள்ள முடியாத உலகத்தில் வாழ்ந்தான், அங்கே அவன் வேலை செய்யவில்லை, வேட்டையாடவில்லை. ஆனால் அங்கே வேலை செய்யவும், மானைக் கொல்லவும் யாரோ அவனைப் பயன்படுத்தினார், என்னவென்று தெரியாத ஏதோ ஒன்றின் ஆசைக்கேற்பத்தான் அங்கே எல்லாமே நடைபெற்றன.

ஆனால் காலங் கடந்தது. மனிதன் வலிமையானவனாக ஆனதும், தன்னைப் பற்றிய உலகத்தையும், உலகத்தில் தனது சொந்த இடத்தைப் பற்றியும் மிக நன்றாகப் புரிந்து கொள்ளத் தொடங்கினான். 'நான்' என்ற சொல் அவனது மொழியில் தோன்றியது, அதனைக் கொண்டு செயல்பட்ட, போராடிய, பொருட்களை உருவாக்கிய மனிதன் தோன்றினான், இயற்கை அவனது சுயமான விருப்பத்தை நிறைவேற்றுகிறது.

''மனிதன்மான்கொல்'' என்று நாம் கூறிக் கொள்வதில்லை. ''மனிதன் மானைக் கொன்றான்'' என நாம் கூறுகிறோம். மேலும் எந்த மொழியிலும் அவ்வப்பொழுது இன்னமும் பழமையின் நிழல்

பளிச்சிடுகிறது. நாம் கூற மாட்டோமா: ''அது அவ்வாறு இருக்க முடியாது'', ''அது அவ்வாறு இருக்க முடியும்'', ''அது அதிர்ஷ்டமில்லாதது''.

முடியும் அல்லது முடியாது என்று யார் கருதுகிறார்? யார் அதனை அதிர்ஷ்டமில்லாது செய்வது?

விதி!

ஆனால் விதி என்பது வரலாற்றுக்கு முந்திய கால மனிதனை மிகவும் அச்சுறுத்திய 'ஏதோ' ஒன்று தான்.

'விதி' என்ற சொல் இன்னமும் நமது மொழிகளில் இருந்து வருகிறது. ஆனால் அது எதிர்காலத்தில் மறைந்து போகும் என்று யாராலும் உறுதியாகச் சொல்ல முடியும்.

விவசாயி நம்பிக்கையோடுதான் நிலத்தை உழுகிறான். நல்லது அல்லது மோசமான மகசூல் அவனைப் பொருத்தது என்பதை அவன் அறிவான்.

விளையாத நிலத்தை வளமுள்ள நிலமாக மாற்றும் அநேக விவசாய எந்திரங்கள், உரங்கள் அவனது உதவியாளர்கள், தாவரங்களின் வாழ்க்கையை மேற்பார்வை செய்ய விஞ்ஞானம் அவனுக்கு உதவி செய்கிறது.

ஒரு மாலுமி நம்பிக்கையோடுதான் கடலுக்குள் பயணமாகிறான். ஆழமில்லாத இடங்களைப் பற்றி விஷேட கருவிகள் அவனுக்கு எச்சரிக்கின்றன. கடலில் எப்போது புயலை எதிர்பார்க்கலாம் என்று முன்கூட்டியே அவனுக்குத் தெரிவிக்கின்றன.

''அது அவனுடைய விதி'', ''அது முன் விதித்தமை'' – ஒருவர் அபூர்வமாகக் கேட்கக் கூடிய வெளிப்பாடுகள் இவை.

அறியாமை அச்சத்தை வளர்க்கிறது. அறிவு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அது இயற்கையின் அடிமையாக ஒருபோதும் இல்லாது அதன் எசமானனாக மனிதனை ஆக்குகிறது.

பனிக்கட்டி குவியல் பின் செல்கிறது

ஒவ்வோராண்டும் பனி உருகத் தொடங்குகின்ற போது எங்கு பார்த்தாலும், காட்டிலும், வயல் வெளிகளிலும், கிராமத்து வீதிகளிலும், சாலையோரப் பள்ளங்களிலும், கொந்தளிப்பான நீர்க்குமிழி போன்ற ஓடைகளும், சிற்றாறுகளும், அருவிகளும் திடீரென்று தோன்றுகின்றன.

வீட்டிற்குள்ளே இருக்க முடியாத குழந்தைகளைப் போல அவை துண்டாகியும் அழுக்கடைந்த பனிக்கட்டியின் கீழிலிருந்து பீறிட்டுக் கொண்டு வருகின்றன. நீரோடைகள் கற்களின் மீது, சாலைகளின் நெடுகே அழுத்திக் கொண்டு முன்னேறி வருகையில், தங்களது மகிழ்ச்சியான ஒலியுடன் கூடிய ஓட்டத்தால் காற்றை நிரப்புகின்றன.

சூரிய ஒளிபடும் சரிவுகளிலிருந்தும் திறந்த வெளிகளிலிருந்தும் பனி பின்வாங்கி, சில வேளை மே மாதம் வரை வெப்பமான சூரியக் கதிர்களினின்றும் மறைந்திருக்கக் கூடிய, பள்ளத்தாக்குகளிலும், குழிகளிலும், சுவர்களுக்குப் பின்புறமுள்ள நிழல் படிந்த மூலைகளிலும் ஒளிந்து கொள்ளச் செல்கிறது.

ஒரே இரவிற்குள்ளாக இயற்கை மாறுவதுபோலக் காணப்படுகிறது. வறண்ட மலைகளின் மீது பச்சைப்புல் ஆடையணிவிக்கவும், மரங்களின் வெறுமையான கிளைகளில் இலைகளைக் கொண்டுவரவும் சூரியனுக்கு மிகச் சில நாட்களே பிடிக்கின்றன.

ஒவ்வொரு வசந்தகாலத்திலும் குளிர்காலத்தின் போது போர்வை போல கிடந்த பனி உருகத் தொடங்கியதுமே இது ஏற்படுகிறது.

ஆனால் வரலாற்றுக்கு முந்திய காலங்களில், ஒரு வெள்ளைத் தொப்பி போல உலகத்தை மூடியிருந்த ராட்சசப் பனிப் போர்வை இறுதியாக உருகத் தொடங்கிய போது, என்ன நடந்தது?

ஓடைகளும், சிற்றாறுகளும் ஏற்படுவதற்கு மாறாக பனிக்குக் கீழிருந்து பெரும் ஆறுகள் பொங்கிப் பெருக்கெடுத்தன. அவைகளில் அநேகமானவை இன்னமுங்கூட வழிநெடுகிலும் உள்ள சிற்றோடைகளின் நீரையும், நதிகளையும் சேர்த்துக் கொண்டு கடலை நோக்கிச் செல்கின்றன.

இது இயற்கையின் மிகப் பெரிய கிளர்ச்சியாக இருந்தது. மிகச் சிறந்த வசந்தகாலம் வடபகுதிய பெருங்காடுகளின் வறண்ட சமவெளிகளைப் புதுமைப்படுத்தியது.

ஆனால் வசந்தகாலம் தானே திடீரென்று வருவதில்லை. சில வேளைகளில், மே மாதத்தில் வெக்கையான ஒரு நாளுக்குப் பிறகு குளிர் காற்று திடீரென்று வீசும், மறுநாள் காலை நாம் எழுந்து பார்க்கும் போது கூரை உச்சிகளில் பனி நிற்கிறது. வெளிப்புறத்தில் ஒவ்வொன்றும் வெள்ளையாய், வசந்தமே வந்திராதது போலவே காணப்படுகிறது.

மிகப் பெரிய வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வசந்தம் ஒரு வகையில் உடனடியாகப் பனியை வென்று வரவில்லை. பனிக்கட்டிக் குவியல்கள் மெதுவாகக் குறைந்தன, அவைகளது விருப்பத்திற்கு

மாறாக அவை பின்னுக்குத் தள்ளப்படுவன போலக் காணப்பட்டன. நூற்றாண்டு காலமாக இருந்தவை, எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தொத்தி நின்றன.

சில நேரங்களில், ஓரளவுக்குப் பின்வாங்கிச் சென்றபடி, பனிக்கட்டிக் குவியல்கள் நின்றுவிட்டன. தங்களுடைய பலத்தைக் காட்டுவது போல நின்று அவை திரும்பவும் முன்னோக்கி வந்தன. தூந்திரா பனிக்கட்டிக் குவியல்களோடு தெற்கு நோக்கி நகர்ந்தது, அது தன்னோடு தனது சொந்த உறுதியான நண்பனாகிய கலைமானையும் கூடவே அழைத்து வந்தது.

பாசியும், கற்பாசியும் சமவெளிகளுக்கு மேலாகப் புற்களை நெருக்கியபடி படர்ந்தன. புல்வெளிகளை நோக்கிக் காட்டெருமைகளும் குதிரைகளும் தொலை தூரத்து தெற்கில் நகர்ந்தன.

மிக நீண்ட காலத்திற்கு வெப்பத்திற்கும் குளிருக்கும் நடந்த சண்டையில் முடிவில் வெப்பமே வென்றது.

உருகிக் கொண்டிருந்த பனிக்கட்டிக் குவியல்களுக்கு உள்ளேயிருந்து பெரும் நதிகள் விரைந்து வெளிவந்தன. உலகை மூடியிருந்த பனிக்குல்லாய் சுருங்கவும், திரைவுறவும் தொடங்கியது. பனியின் எல்லைக்கோடு வடக்கே தொலைவுக்கு நகர்ந்தது, அதனுடன் தூந்திராவும் சென்றது. ஒரு காலத்தில் பாசியும், கற்பாசியும், அருகலாக வளைந்த சிறிய பைன் மரங்களும் இருந்த பகுதிகளில் இப்போது ஒரு மீட்டருக்கும் அதிகமான சுற்றளவுள்ள பைன்மரங்களோடு கூடிய அடர்ந்த காடுகள் தோன்றின.

இப்போது வெப்பம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

பைன் மரங்களின் இருண்ட பச்சைப் பாசிகளுக்கு மேலாக, ஆஸ்ப் மற்றும் பிர்ச் மரங்களின் பிரகாசமான பச்சை கிரீடங்கள் மீண்டும் மீண்டும் தலைகாட்டும். அவைகளைத் தொடர்ந்து வட பகுதியில் அகன்ற இலைகளைக் கொண்ட ஓக் மரங்களும், லார்ச் மரங்களும் ஒரு பெரிய படைபோல நின்றன.

'பைன் மரங்களின் காலம்' என்பது இப்பொழுது 'ஓக் மரங்களின் காலம்' என்றாகியிருந்தது. ஒரு காட்டு வீடு மற்றொன்றுக்கு வழி விட்டிருந்தது.

ஒவ்வொரு காட்டு வீடும் தனக்கெனத் தனி குடியிருப்பாளர்களைக் கொண்டிருந்தன.

இலை மரக் காடுகள் வடக்கு நோக்கி நகர்ந்த போது புதர்களும், காளான்களும், தீங்கனிகளும் காட்டு உணவைத்தின்ற விலங்குகள் செய்ததுபோல அவைகளோடு சென்றன. இன்னும் அவைகளோடு பன்றி, காட்டுமான், காட்டெருமை, கம்பீரமான கொம்புகளுடன் கூடிய சிவப்பு மான் ஆகியனவும் இருந்தன. இனிப்பு விருப்பங்கொண்ட பழுப்புக் கரடி, காட்டுத் தேன் தோகையுள்ள அடிவளர்ச்சிப் புதர்களை முறித்துக் கொண்டு சென்றன. கீழே விழுந்து கிடந்த இலைகளின்மீது சமீபத்தில் சென்ற முயல் தடங்களைத் தொடர்ந்து ஓநாய்கள் ஓசையின்றி விரைந்து ஓடின. வட்ட முகங் கொண்ட, குட்டையான உள்ளங்கைகளைக் கொண்ட நீர்நாய்கள் காட்டு நீரோடைகளின் குறுக்காக தங்களது அணைகளைக் கட்டின. ஒரு பெரும்

எண்ணிக்கையிலான பறவைகள் பாடல்களாலும், வாத்துக்கள் மற்றும் நாரைகளின் ஒலிகளாலும் காடு நிறைந்து போனதை காட்டு ஏரி களுக்கு மேலாகக் கேட்க முடிந்தது.

பனிக் கைதிகள்

இயற்கையில் இத்தகைய மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த வேளையில், பக்கங்களில் பார்வையாளனாக மனிதனால் நின்று கொண்டிருக்க முடியாது. திரையரங்கில் இயற்கைக் காட்சி களைப் போல, அவனைச் சுற்றி ஒவ்வொன்றும் மாறிக் கொண்டிருந் தது. ஆனால் ஒரு நாடகத்தைப் போலல்லாது ஒவ்வொரு காட்சி யும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளை எடுத்துக் கொண்டன. அதே வேளை மேடையானது மில்லியன் கணக்கான சதுர மைல்கள் பரப்பை எடுத்துக் கொண்டது.

மேலும் இந்த உலகம் முழுமையுமான காட்சியில், மனிதன் ரசி கனாக இருக்கவில்லை, நடிகர்களில் ஒருவனாக இருந்தான்.

ஒவ்வொரு முறையும் அமைப்புகள் மாறின, தப்பிப் பிழைப் பதற்காக மனிதனும் தனது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

தூந்திரா தெற்கு நோக்கி நகர்ந்த போது, அது தன்னுடன் கலைமானையும் கொண்டு வந்தது. விலங்குகள் அதனுடைய கைதிகள் போலவும், அதனோடு கட்டுண்டவை போலவும் இருந்தது. இந்தக் கட்புலனாகாத தளையில் கலைமான் ஒரு முனையிலும், தூந்திராவின் பாசி மற்றும் கற்பாசி மறு முனையிலும் இருந்தன.

கலைமான் பாசியையும் கற்பாசியையும் மேய்ந்தது. தூந்திராவில் நடமாடியது. கலைமானைப் பின்தொடர்ந்து மனிதனும் சென்றான்.

ஸ்டெப்பிகளில் மனிதன் குதிரைகளையும் காட்டெருமைகளையும் வேட்டையாடினான். ஆனால் தூந்திராவில் அவன் கலைமானை வேட்டையாட வேண்டி இருந்தது.

கலைமானைத் தவிர வேறு எதை அவனால் தூந்திராவில் வேட்டை யாட முடிந்தது?

கம்பளியானைகள் எல்லாம் ஏற்கெனவே இறந்து போயிருந்தன. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் ஆயிரக் கணக்கானவைகளை பூண்டோடு ஒழித்து விட்டான். தனது குடியிருப்புக்களுக்கு அருகே கம்பளியானைகளின் எலும்புகளை மலைபோலக் குவித்து விட்டான். உணவுக்காக ஏராளமான குதிரைக் கூட்டங்களைக் கொன்று போட் டிருந்தான். வளமை நிறைந்த புல் வறண்ட கற்பாசிக்கு இடம் விட்டபோது எஞ்சிப் பிழைத்தவைகள் தெற்கே சென்றுவிட்டன.

ஆகவே தூந்திராப் பகுதியில் ஒரே ஒரு கொடுப்பவராக கலைமான் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய கால மனிதனுக்கு விளங்கியது. அவன் அதன் இறைச்சியை உண்டான், மானின் தோலை அணிந்து கொண் டான், கலைமானின் கொம்புகளிலின்றும் எறி ஈட்டிகளையும், குத்துக் கருவியையும் தயாரித்தான். இதன் காரணமாகத்தான் அவன் தனது முழு வாழ்க்கையும் கலைமானைப் பின்பற்றிச் செல்லவேண்டி இருந் தது.

எங்கெல்லாம் கலைமான் மந்தைகள் சென்றனவோ, மனிதன்

பின்தொடர்ந்து சென்றான். இனக் குழு முகாம் அமைத்த போது, பெண்கள் உடனடியாக தங்களது கூடாரங்களை அமைத்துக் கொண்டு அவற்றைத் தோல்களால் மூடினார்கள். ஒரே இடத்திலேயே நீண்ட காலத்திற்கு அவர்கள் தங்கியிருக்க மாட்டார்கள் என்பது அவர் களுக்குத் தெரியும். புதிய மேய்ச்சல் நிலத்தைத் தேடி கலைமான் மந்தைகள் சென்றபோது, பின்தொடர்வதைத் தவிர மக்களுக்கு வேறு இருக்கவில்லை. பெண்கள் கூடாரங்களைப் பிரித்து தங்கள் முதுகுகளில் போட்டுக் கொண்டார்கள். அவர்கள் தூந்திரா வழியாகக் களைப்பு மேலீட்டால் உலைந்து நடந்தார்கள். அதே வேளை ஆண்கள் அவர்களுக்கு அருகே எழுச்சிமிக்க நடை போட்டார்கள். ஈட்டிகளையோ, எறிபடைகளையோ தவிர வேறு எதையும் அவர்கள் எடுத்துச் செல்லவில்லை. வீட்டு விவகாரங்கள் பற்றிக் கவலைப்படு வது ஆணினுடைய வேலையாக இருக்கவில்லை.

ஆனால் பிறகு தூந்திரா வடக்கு நோக்கிப் பின்வாங்கியது, அதனு டன் கலைமானும் சென்றது. தூந்திரா இருந்த இடத்தில் கடந்து செல்ல முடியா மிகப் பெரும் காடுகள் தோன்றின.

அப்போது வரலாற்றுக்கு முந்திய கால இனக்குழுவினர்க்கு என்ன நேர்ந்தது?

கலைமான் மந்தைகளைத் தொடர்ந்து சில வேட்டையாடும் இனக் குழு வடக்கு நோக்கி ஆர்க்டிக்கிற்குச் சென்றது. இது மிகச் சுலபமான வழியாகவும் இருந்தது. ஏனெனில் வட பகுதி தட்பவெப்ப நிலைக்கு ஏற்கெனவே அவர்கள் பழகிப்போய் இருந்தார்கள். கொடிய பனியுகம் நூறாயிரக்கணக்கான ஆண்டுகளில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் குளிரை எதிர்த்துப் போராடுவதற்கும் விலங்குகளின் வெதுவெதுப்பான மென்மயிர்த் தோலால் தனது ஆடைகளைத் தயாரிக்கவும் கற்றுக் கொண்டு விட்டான். வெளியே குளிர் கடுமையாக இருக்க, மறை குழிகளின் வசிக்குமிடங்களிலுள்ள அடுப்பில் தீ பிரகாசமாக எரிந்தது.

அங்கேயே பின்னுக்குத் தங்கிவிடுவதை விட, ஆர்க்டிக் பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்வது மிகவும் எளிமையானதாக இருந்தது. எனினும் மிகு உழைப்பற்ற எளிய பாதையானது, எப்போதுமே மிகச் சிறந்த பாதையாக இருப்பதில்லை. தூந்திராவோடு வடக்கே சென்ற மனித இனத்தின் பகுதியானது கடைசியில் காணாமலே போய்விட்டது, ஆகையால் அதைப் பொருத்தமட்டில், பனியுகமானது ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு நீடித்தது. இயற்கை கொடுமை யானதாகவும், விறைப்பானதாகவும் இருந்தாலும், இயற்கையுடனான முற்றுப்பெறாத சண்டையை நடத்திக் கொண்டு, கிரீன்லாந்தின் எஸ்கிமோக்கள் பனிக்கட்டிக்கும், குளிருக்குமிடையே இன்னமும் வாழ் கிறார்கள்.

பின்னுக்குத் தங்கிவிட்ட இனக் குழுவினருடைய விதியானது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. முதலில், வளர்ந்து வந்த காடுகளுக்கிடையே அவர்களது வாழ்க்கை இன்னும் கஷ்டமானதாக இருந்தது. ஆனால் மேல் நிகழ்வாக அவர்களது மூதாதையர்கள் பல் லாயிரக் கணக்கான ஆண்டுகளாக கைதிகளாக இருந்த பனிச் சிறை யிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அவர்களால் முடிந்தது.

மனிதன் காடுகளோடு போரிடுதல்

முன்னாளில் தூந்திரா இருந்த இடத்தில் எழுந்த காடுகள் நமது இன்றைக் காடுகளைப் போலவே இருக்கவில்லை. அது ஆயிரக்கணக் கான மைல்களுக்கு நீண்டு உறுதியான உட்புக முடியாத பெரிய மரங்களாலும் புதர்களாலும் சுவர் போல அமைந்து, நதிகள் மற்றும் ஏரிகளின் கரைகள் வரையிலும், சில இடங்களில் கடற்கரை வரையி லுங்கூட நீண்டு கிடந்தன.

இந்த விநோதமான புதிய உலகத்தில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் சுலபமான வாழ்க்கையைப் பெற்றிருக்கவில்லை.

காடு தன்னுடைய மயிரடர்ந்த உள்ளங்கைகளால் அவனது குரல் வளையை நெரித்தது, அவனை நகரவோ, மூச்சுவிடவோ கூட அது விடவில்லை. மரங்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டும், சிறிய நிலப்பகுதிகளை ஒழுங்குபடுத்திக் கொண்டும் அவன் தொடர்ச்சியாக காட்டுடன் போராட வேண்டியிருந்தது.

தூந்திராவிலோ, ஸ்டெப்பியிலோ வரலாற்றுக்கு முந்திய கால மனி தன் கூடாரம் அமைப்பதற்கு ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுப் பதில் எந்தச் சிரமத்தையும் படவில்லை. ஆனால் காட்டில் இயற்கை யிடமிருந்து இந்தத் திறந்த வெளியை ஆரம்பத்தில் அவன் வலிந்து பற்றிப் பிடுங்க வேண்டியிருந்தது.

இங்கே நிலத்தின் ஒவ்வொரு சிறு பகுதியும் மரங்களாலும் அடர்ந்த புதர்களாலும் நிரம்பியிருந்தது. எதிரியின் கோட்டையைத் தாக்குவது போல அவன் காட்டைத் தாக்க வேண்டியிருந்தது.

ஆனால் ஆயுதங்களில்லாமல் ஒருவனால் போராட முடியாது.

மரங்களை வெட்டி வீழ்த்துவதற்காக அவன் ஒரு கோடரியைப் பெற்றிருக்க வேண்டியிருந்தது.

ஆகவே முப்பட்டை வடிவமான கனத்த சிக்கிமுக்கிக் கல்லுக்கு ஒரு நீளமான கைப்பிடியைப் பொருத்தினான்.

முன்னதாக மரங்கொத்தி மட்டுமே மரங்களைத் தாக்கிக்கொண்டி ருந்த இடத்தில் இப்போது ஒரு புதிய ஓசை ஒலித்தது. இப்புதிய ஒலி பறவைகளையும் விலங்குகளையும் அச்சுறுத்தியது. முதலாவது மரங் களை வீழ்த்திக் கொண்டிருந்த முதலாவது கோடரிகளின் ஓசையே அது.

கூர்மையான சிக்கிமுக்கிக் கல் மரத்தை ஆழமாக வெட்டியது. வெட்டிலிருந்து கனமாக செடிப்பால் வடிந்தது. மரம் வெட்டியின் கால்களில் விழுந்த போது அந்த மரம் முரிந்து புலம்பியது.

மிகப் பொறுமையாக வெட்டி வீழ்த்தி, காட்டு உலகில் தங்களுக் கென ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொண்டு நாளுக்கு நாள் மக்கள் தொடர்ந்து துப்புரவு செய்தார்கள்.

ஓர் இடத்தைச் சுத்தம் செய்து முடிந்த போது, மரக்கட்டை களையும், புதர்களையும் எரித்துவிட்டார்கள்.

இவ்வாறாகத்தான் அவர்கள் காட்டை எதிர்த்துச் சண்டையிட்டு வெற்றி பெற்றார்கள். ஆயினும், தோற்கடிக்கப்பட்ட எதிரியை அவர் கள் தனியே விட்டுவிடவில்லை.

கிளைகளை வெட்டி வீழ்த்திய பிறகு, மரத்தின் ஒரு முனையைக் கூராக்குவார்கள், அதை ஒரு கற்சுத்தியல் கொண்டு நிலத்தில் ஆழமாகப் பதிப்பார்கள். முதலாவது கம்பத்திற்கு அருகில் மற்றுமொரு

10–563



கம்பத்தை ஊண்டுவார்கள், பிறகு மூன்றாவது, நான்காவது என ஒரே வரிசையில் அமையும். விரைவிலேயே அவர்கள் ஒரு சுவரைப் பெற்றார்கள். கம்பங்களுக்கிடையே உள்ளும் புறமுமாக கிளைகளை உட்புகுத்தி சுவரை வலுவுள்ளதாகச் செய்வார்கள். சீக்கிரத்திலேயே காட்டிற்கு மத்தியிலே ஒரு சிறிய காட்டைப் போல் காணப்பட்ட ஒரு மரத்தாலான சிறுகுடில் ஏற்பட்டது. கிளைகளோடு கூடிய அடிமரங்கள் இங்கு சுவர்களை ஏற்படுத்துவதற்காக இணைத்துக் கட்டப்பட்டன. ஆனால் இத்தகைய அடிமரங்கள் வளரவே இல்லை. மனிதன் அவைகளை வைத்தபடியே அவை உறுதியாக நின்றன.

காட்டு உலகத்தில் தனக்கு ஓர் இடத்தை உருவாக்கிக் கொள்வது வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்குச் சிரமமாக இருந்திருந்தால், அங்கே உணவைக் கண்டுபிடிப்பது அதை விடச் சிரமமானதாக அவனுக்கு இருந்திருக்கும்.

திறந்த சமவெளிகளில் மந்தைகளாய் வாழ்ந்த விலங்குகளை அவன் வேட்டையாடினான். தொலைவில் இருந்தபடியே ஒரு மந்தையைக் காண்பது சுலபமானதாக இருந்தது. ஏனெனில் ஒரு சிறிய குன்றின் உச்சியில் இருந்து கொண்டு சுற்றிலும் பல மைல்களுக்கு ஒருவரால் பார்க்க முடிந்தது.

ஆனால் காட்டில் இது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. காட்டு வீடானது குடியிருப்பாளர்களால் நிறைந்து காணப்பட்டிருந்தாலும், அவைகளை யாரும் காண முடியாததாக இருந்தது. தங்களது குரல்களாலும், சலசலப்புக்களாலும், சீச்சொலிகளாலும் எல்லா அடுக்குகளையும் அவை நிரப்பின. ஆனால் அவைகளைக் கண்டுபிடிப்பது சிரமமானதாக இருந்தது.

தாழ்வாக உள்ள இலைகளை முன்னும் பின்னும் அசைத்தபடி ஏதாவது காலுக்கடியில் சலசலத்தோ, தலைக்கு மேல் பறந்தோ செல்லும்.

இத்தகைய எல்லாவிதச் சலசலப்புகளுக்கும் வாசனைகளுக்கும் மத்தியில், பிரகாசமான அடிமரங்களுக்கிடையே பிரகாசமான விலங்கு வாழிடங்களை வரலாற்றுக்கு முந்திய கால மனிதனால் எங்ஙனம் பிரித்தறிய முடிந்தது?

ஒவ்வொரு காட்டுப் பறவையும், காட்டு விலங்கும் தங்களுக்கென சொந்தமான பாதுகாப்பு நிறத்தைப் பெற்றிருந்தன. பறவையின் இறகுகள் கொத்தப்பட்ட அடிமரங்கள் போலக் காணப்பட்டன. காட்டின் அரைகுறை இருட்டில் விலங்குகளின் செம்பழுப்பு மென்மயிர் செத்து விழுந்த இலைகளின் நிறத்தைப் போலிருந்தது.

ஒரு விலங்கைப் பின்தொடர்ந்து செல்வது மிகவும் கஷ்டமானதாக இருந்தது. ஆனால் ஒரு முறை மிக அண்மையில் அது வந்து விட்டால், அதன் மீது ஆயுதத்தை வீசி எறிய வேடுவன் ஒரே ஒரு வாய்ப்பே பெற்றிருந்தான். குறியைச் சரியாக வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இல்லாவிடில் விலங்கு புதர்களில் ஒளிந்து மறைந்து போகக் கூடும்.

அப்போது தான் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவன் தனது எறி ஈட்டியை, விரைந்து துல்லியமாகப் பாயும் அம்புக்காக

மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. தனது வில்லைக் கையிலும், தனது அம்புக் கூட்டைத் தோள் மீதும் தொங்கவிட்டு, காட்டுப் பன்றிகளைத் தேடி புதர்க் காட்டின் வழியாகப் பாதையமைத்துக் கொண்டும், வாத்துக்களையும் தாராக்களையும் தேடி சதுப்பு நிலங் களிலும் அவன் சென்றிருப்பான்.

மனிதனின் நான்கு கால் நண்பன்

ஒவ்வொரு வேடுவனும் ஒரு நம்பிக்கையான நண்பனைப் பெற்றிருந் தான். அவனது நண்பன் நான்கு உள்ளங்கைகளையும், மென்மையான பெரிய காதுகளையும் கறுத்த அறியும் அவாமிக்க ஒரு மூக்கையும் பெற்றிருந்தான்.

வேட்டையின் போது இந்த நான்கு கால் நண்பன் வேட்டை விலங்குகளைக் கண்டுபிடிப்பதில் அவனுக்கு உதவினான். உணவின் போது அவன் தனது எசமானனுக்கு அருகில் அமர்ந்து ‘‘எங்கே எனது பங்கு?’’ என்று கேட்பது போல கண்களையே உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பான்.

இதே நான்கு கால் நண்பன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதனுக்கு நம்பிக்கையோடு பணிபுரிந்து வந்திருக்கிறது. மனிதன் வில் அம்போடு வேட்டையாடிய அந்தப் பண்டைக் காலத்திலேயே நாயைப் பழக்கிவிட்டான்.

யெனிசேவில் அஃபோன்தோவா மலையில் சோவியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டும் போது, வரலாற்றுக் காலத்துக்கு முந்திய வேட்டைக் கூடாரத்து இடம் ஒன்றில் ஒரு நாயின் எலும்பு களைக் கண்டெடுத்தார்கள். எலும்புகள் ஓர் ஓநாயின் எலும்புகளை ஒத்திருந்தன. ஆனால் மூஞ்சி மட்டும் விலக்கானதாகச் சற்றுக் குட்டையாக இருந்தது.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ஒரு மனிதனுடைய நாய் பெரும்பாலும் அவனது குடியிருப்பைப் பாதுகாத்தது, வேட்டையில் அவனுக்கு உதவியது. ஆரம்பகால காட்டுக் குடியிருப்புகள் சமையல்கூட குப்பை கொட்டுமிடத்தைக் கொண்டிருந்தன. அதில் நாய்ப் பற்களின் சுவடுகளுடனுடன் கூடிய விலங்குகளின் எலும்புகளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். அப்போதுகூட ஓர் எலும்புக்காகக் கெஞ்சிக் கொண்டு உணவு வேளையின் போது ஒரு மனிதனுடைய நாய் அவனுக்குப் பக்கத்திலேயே இருந்ததை நாம் காண்கிறோம்.

தனக்கு எந்தவிதப் பயனுமே அதனால் இல்லாது இருந்திருக்குமே யானால், எந்த மனிதனும் ஒரு நாயை வைத்து உணவு கொடுத் திருக்க மாட்டான்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் குட்டியாக இருக்கும் போதே நாயை எடுத்து தனக்கு உதவியாக இருப்பதற்கும், காட்டில் வேட்டை விலங்குகளைக் கண்டு பிடிப்பதற்கும் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

தனது உதவியாளனைக் கண்டுபிடிப்பதில் அவன் தவறு செய்யவில்லை. அவன் பன்றித் தடங்களைப் பார்ப்பதற்கும், மானின் காலடி ஓசை யைக் கேட்பதற்கும் முன்னமேயே அவனது நாய் விறைத்து நின்று அந்த வாசனையைப் பிடிப்பதற்காகத் தனது மூக்கை உயர்த்தி நிற்கும்.

புதர்கள் எவ்வாறு மணத்தன? சற்று முன்னர் இங்கே சென்றது யார்? இரண்டு அல்லது மூன்று மோப்பங்கள் அந்தத் தடத்தைக் கண்டுபிடிக்கப் போதுமானதாக இருந்தன. இப்போது நாய் எதையும் கேட்க்வும் இல்லை, பார்க்கவும் இல்லை, அது தனது முக்கியக் கடமையில் தன் வயமானதாகி விடும். விலங்கு சென்ற தடத்தைப் பின்பற்றி காட்டின் வழியாக அது இலகுவாக விரைந்து ஓடும். அதனது எசமானன் அதைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டியது மட்டுமே இருந்தது.

மனிதன் நாயைப் பழக்கிய பிறகு அவன் மேலும் வலிமையுடைய வனாக மாறினான். தனது சொந்த மூக்கைவிட மிகவும் நுண்ணுணர்வு டைய நாயின் மூக்கைத் தனக்குச் சேவை செய்யும்படி ஆக்கிக்கொண்டான்.

எனினும், நாயின் மூக்கைத் தனக்குச் சேவை செய்யும்படி செய் ததைவிட மேலும் பலவற்றைப் பயன்படுத்திக் கொண்டான். அதனது நான்கு கால்களையும் அவன் எடுத்துக் கொண்டான். தனது வண்டி யை இழுக்க முன்பெல்லாம் ஒரு குதிரையை அவன் இணைப்பதற்கு முன், அவனது பாரங்களையும், குடும்பத்தையும் இழுக்க நாய்களைப் பயன்படுத்தினான்.

சைபீரியாவில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேட்டை முகாம் கள் ஒன்றில் ஒரு நாயின் மீத மிச்சங்களுக்கு அருகில் ஒரு சேணத்தின் மீத மிச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

வேட்டைக்கு மட்டுமே நாய்கள் மனிதனுக்கு உதவாமல், அவர் களை தூக்கிச் செல்லவும் செய்திருக்கிறது என்பது பொருள்படுகிறது.

இப்படியாகத்தான் மனிதனது சிறந்த நண்பனாகிய—அவனது நாயோடு, நாம் முதலாவதாக அறிமுகமாகிக் கொள்கிறோம்.

மலைகளில் பயணிகளைக் காப்பாற்றிய, போர்க் களத்திலிருந்து காயமுற்றவர்களைத் தூக்கிச் சென்ற, வீட்டையும் நாட்டு எல்லை களையும் பாதுகாத்த இத்தகைய புத்திசாலித்தனமான விலங்குகளைப் பற்றி எத்தனை உண்மைக் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன! வீட்டில், வேட்டையில், போரில், ஆய்வுக் கூடத்தில் நாய்கள் நமது நம்பிக்கைக் குரிய சேவகனாகத் திகழ்கின்றன.

விஞ்ஞான முன்னேற்றத்திற்காகவும், மனிதகுல மேம்பாட்டுக்காகவும், ஆய்வு மேசையில் விஞ்ஞானி ஒரு நாயை வைக்கும் போது, தனது எசமானனுக்காகத் தனது உயிரைத் தரத் தயாராக இருப்பதைக் காட்டுகின்ற கண்களோடு அது அவரை நம்பிக்கையோடு பார்க்கிறது.

லெனின்கிராடுக்கு அருகில் பாவ்லோவோ நகரத்தில், மூளை வேலை செய்வதைப் பற்றி விஞ்ஞானிகள் படிக்கும் ஆய்வுக் கட்டிடத்திற்கு முன்னால், ஒரு மிகப் பெரிய நினைவுச் சின்னம் இருக்கிறது.

இந்த நினைவுச் சின்னம் நமது நம்பிக்கைக்குரிய நான்கு கால் நண்பனின் புகழுக்காக எழுப்பப்பட்டிருக்கிறது.

மனிதன் நதியோடு போரிடுதல்

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதர்கள் எல்லாருமே தங்களது வீடுகளைப் புதர்க்காட்டில் அமைத்துக் கொள்ளவில்லை. அடர்த்தியான காடுகளை விட்டு வெளியேறி நதிகள் மற்றும் ஏரிகளின் கரைகளில் குடியேறிவர்களும் உண்டு.

நீருக்கும் காட்டிற்கும் இடைப்பட்ட குறுகலான நிலப்பகுதியில் அவர்கள் தங்களது மரக் குடில்களைக் கட்டினார்கள்.

காட்டை விட நதிக்கரையில் அதிக இடமிருந்தது. ஆனால் அதில் வசிப்பது அதைப் போலவே சிரமமானதாக இருந்தது.

நதியானது ஓய்வுதராத அண்டை வீட்டுக்காரன். இளவேனிற் காலத்தில் அது வெள்ளப்பெருக்கெடுத்து, அதன் கரைகளை நீர் எட்டிய போது பனிக்கட்டித் துண்டுகளையும், மூழ்கிய மரங்களையும் சேர்த்து, அடிக்கடி மனிதனால் கட்டப்பட்ட குடிசைகளையும், இழுத்துக் கொண்டு சென்றது. வெள்ளத்திலிருந்து தப்பியோடிய மக்கள் பக்கத்திலிருந்த மரங்களின் மீது ஏறி, சீற்றங்கொண்ட நதி வடியும் வரை அதிலேயே காத்துக் கொண்டு இருந்தார்கள். நதி தன்னுடைய படுக்கைக்குத் திரும்பச் சென்றபோது அவர்கள் கரையிலிருந்த தங்களது சீர்குலைந்த எறும்புப் புற்றைத் திரும்பவும் கட்டத் தொடங்குவார்கள்.

ஆரம்பத்தில், ஒவ்வொரு வெள்ளமும் மக்கள் அறியாமலேயே வந்தன. ஆனால் நதியினுடைய போக்குகளை அவர்கள் கற்றறிந்த பிறகு, அதிலிருந்து வெற்றியடைய அவர்களால் முடிந்தது.

மக்கள் அநேக மரங்களை வெட்டி அவற்றைக் கட்டுமரம் போல ஒன்றாகக் கட்டினார்கள். கட்டுமரத்தை அவர்கள் நதிக்கரையில் வைத்தார்கள். பிறகு அவர்கள் கட்டைகளின் இரண்டாவது அடுக்கை முதலாவதன் குறுக்காக வைத்தார்கள். இவ்வாறாக, அடுக்கின் மேல் அடுக்காக அவர்கள் உயரமான மேடையைக் கட்டினார்கள். பிறகு தங்களது குடிசைகளை அந்த மேடையின் மீது கட்டினார்கள். இப்பொழுது அவர்கள் வெள்ளத்திற்கு அஞ்சவில்லை. ஏனெனில் கொந்தளித்த நதி தனது கரைகளைவிட்டு வெளியேறிய போது, அவர்களது வாசற்படியைக் கூட அதனால் எட்ட முடியவில்லை.

இது மிகப்பெரும் வெற்றியாகும். ஏனெனில் அவர்கள் தாழ்வான கரையை உயரமான கரையாக மாற்றியிருந்தார்கள்! நமது நதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இப்பொழுது நாம் கட்டும் எல்லா அணைக் கட்டுக்களுக்கும், அணைக் கரைகளுக்கும் இந்த மரத்தாலான மேடையே தொடக்கமாக இருந்தது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் நதியோடு போராடுவதில் அதிகக் காலத்தையும் சக்தியையும் செலவிட்டான்.

ஆனால் முதலாவதாக நதிக்கரையில் அவனைக் குடியேறும் படி செய்தது எது? நீருக்கு அருகில் வாழ்வதற்கு அவன் விரும்பியது ஏன்?

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்கு ஆறு பெரும் கவர்ச்சியாக இருந்தது அதனுடைய மீனுக்காகத்தான்.

ஒரு மீனவனாவதற்கும் வேடுவனால் எங்ஙனம் கற்றுக் கொள்ள முடிந்தது? மொத்தத்தில், அப்போது வேட்டையாடுவதைக் காட்டிலும் மீன் பிடிப்பதற்கு அநேகவிதமான கருவிகள் அவனுக்குத் தேவைப் பட்டன. தனது இரையை வலைபோடுவதற்குப் பல்வேறு வழிகள் அவனுக்குத் தேவைப்பட்டன.

நிகழ்ச்சிக் கோவையில் ஏதாவது விடுதலை நாம் காணும் பொழுது, விடுபட்ட தொடர்புகளைக் கண்டுபிடிக்க முயல்கிறோம்.

வேடுவன் ஒரே இரவில் ஒரு மீனவனாக மாறியிருக்க முடியாது. ஆகவே, மீனைப் பிடிப்பதற்குக் கற்றுக் கொள்ளும் முன்னர், அவன் மீனுக்காக வேட்டையாடினான்.

உண்மையில் இப்படியாகத் தான் நடைபெற்றது. முதலாவது மீன் பிடி கருவி ஒரு மீன் ஈட்டி, இந்த எறிபடையானது வேட்டையாடப் பயன்பட்ட எறி ஈட்டியைப் போலவே இருந்தது.

பாறைகளுக்கிடையே ஒளிந்து கொண்ட மீனை எறிவதற்காக இடுப்பளவு நீரில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் கடந்து சென்றான். பிறகு வேறு வழிகளிலும் மீனைப் பிடிப்பதற்கு அவன் கற்றுக் கொண்டான். கொட்டைகளை வைத்துப் பறவைகளைப் பிடிப்பதற்கு அவன் ஏற்கெனவே கற்றுக் கொண்டிருந்தான். தனது கொட்டைகளை நீரில் போட்டும் முயற்சி செய்தான். இவ்வாறாக, காலப் போக்கில், மீன் பிடிப்பதற்கு கொட்டைகளைப் பயன்படுத்த மக்கள் தொடங்கினார்கள்.

மீன் ஈட்டிகளையும், எறிபடைகளையும், மீன் வலைகளுக்கான கல் நிறைகளையும், எலும்பாலான கொக்கிகளையும் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டி எடுத்திருக்கிறார்கள்.

வேடுவ-மீனவர்களின் வீடு

ஒரு சோவியத் தொல்பொருள் அறிஞரான எஸ். தோல்ஸ்தோவ் மற்றும் அவரது சகாக்கள் அமு-தாரியா நதியும் ஏரல் கடலும் சங்கமிக்கும் இடத்திற்கு அருகேயுள்ள கிஸில்-கூம் பாலைவனத்து மணலில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவ-மீனவர்களின் ஒரு கூடார மையத்தைக் கண்டுபிடித்தார்கள்.

மணற்குன்றின் உச்சிக்கு அருகே, மணலும் களியும் சேர்ந்த அடுக்கிற்குக் கீழே நன்கு செய்யப்பட்ட சிக்கிமுக்கிக் கற்கருவிகளையும், மட்பாண்டங்களின் சிதறல்களையும், கழிவுகளின் குவியல்களையும் அவர்கள் கண்டுபிடித்தார்கள். அடுப்படிக் கூளத்தில் அநேகப் பன்றி, மான் மற்றும் சிறுமான் வகை எலும்புகள் கிடந்தன. ஆனால் குவியலானது பெரும்பாலும் பெருந்தீனிவகை மற்றும் நன்னீர்வகை மீன்களின் எலும்பாலும் நிறைந்திருந்தது. அவர்களது முக்கிய உணவாக மீன் இருந்தது காணப்பட்டது.

எரிந்துபோன குடியிருப்புகளின் சுவடுகளும் அங்கிருந்தன. சாம்பல்கள், கரிக் கட்டைகள், எரிந்து போன பறவையின் துண்டுகள் ஆகிய வற்றால் நிறைந்த குழிகளே எஞ்சி நின்றன. வட்டத்தின் மையப் பகுதியில் கருமையான கட்டைக்கரிக் கோடுகள் இருந்தன. இங்கு, குடியிருப்பின் மையப்பகுதியில், தூய வெண்ணிறமான சாம்பலும் அதற்குக் கீழே நன்கு சிவந்த மணலும் காணப்பட்டது.

இந்த மைய அடுப்படியைச் சுற்றிலும் இருந்த பிற அடிப்படிகள் கறுத்தும், அழுக்கான சாம்பலோடும், சமையற்கட்டு குப்பைக் கூளங்களோடும் இருந்தன.

அந்தக் கூடார மையத்தில் கண்டெடுக்கப்பட்டவைகள் இவைதாம். மூலக் குடியிருப்பைத் திரும்பக் கொணர்வதும், இத்தகைய சில எரிந்து போன மீத மிச்சங்களிலிருந்து அதனது குடியிருப்பாளர்களின்

வாழ்க்கையை விவரிப்பதும் விஞ்ஞானிகளின் பணியாக இருந்தது.

தொல்பொருள் ஆராய்ச்சியைப் பற்றி அதிகம் தெரியாதவர்களால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமற் போயிருக்கக் கூடும். ஆனால் கட்டைக் கரியும், சாம்பலும் கிடந்த குழிகளின் மீதுதான் முன்னர் கூரையைத் தாங்கிய கம்புகள் நின்றன என்பதைத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் உணர்ந்தார்கள். குடியிருப்பை அழித்து விட்ட அந்தத் தீயின் போது மையப் பகுதியிலிருந்து தரையில் விழுந்த கம்புகளின் கருகிப் போன துண்டுகளே அவை.

மைய அடுப்படியில் உணவு ஏதும் சமைக்கப்படவில்லை. அவ்வாறு செய்யப்பட்டிருந்தால், சாம்பல்கள் அவ்வளவு சுத்தமாகவும் வெள்ளை யாகவும் இருந்திருக்க முடியாது. அங்கு சாம்பலின் அடுக்கு மிகவும் கணமாக இருக்கிறது. ஏனெனில் மைய அடுப்படியில் பண்டைய வழக்கப் படி அணையாத நெருப்பாக தீ பகல் இரவு எந்நேரமும் எரிந்து கொண்டிருக்கும் படி பார்த்துக் கொள்ளப்பட்டது.

இந்த அனற் கொழுந்தை தீயால் மட்டுமே நிலை பெயரச் செய்திருக்க முடியும்.

வீட்டுப் பெண்கள் கூரைக் கம்புகளுக்கிடையே அமைந்திருந்த மற்ற அடுப்படிகளில் சமையல் செய்தார்கள். அதனால் தான் சாம்பல் அத்தனை அழுக்காக இருந்தன. தரை முழுக்க ஒரே எலும்பாகக் கிடந்தன.

அங்கே பல அடுப்படிகள் இருந்தன என்பது அங்கே அநேகப் பெண்கள் இருந்தார்கள் என்பது பொருள்படும். இந்த எல்லாப் பெண்களும், அவர்களது கணவன்கள் மற்றும் குழந்தைகள் குருதித் தொடர்புடைய உறவினராய் ஒரே சமூகமாக இருந்தார்கள்.

நூறு அல்லது அதற்கும் அதிகமான ஆட்கள் அடங்கியதாக இந்தச் சமூகம் பெரியதாக இருந்தது. அதனால் தான் குடியிருப்புப் பெரியதாக இருந்தது. நுழை வாசலின் வலப் புறத்தில் சமையல் அடுப்படிகள் இருந்தன. இடப் புறம் காலியாக வெறுமனே இருந்தது.

வீட்டின் உள்புறமாக வெற்று இடம் அவர்களுக்கு ஏன் தேவைப் பட்டது?

இதற்கான விடையை, மத்திய ஆசியாவிலிருந்து வெகு தொலைவு தள்ளியிருக்கக் கூடிய அந்தமான் தீவுகளின் பொதுவான குடியிருப்புக் களில் காணக் கூடியதாக இருந்தது. இந்தத் தீவுகளின் மக்கள் இந்தக் காலி இடத்தை மந்திரச் சடங்குகளையும், விழாக்களையும் நடத்து வதற்குப் பயன்படுத்தினார்கள்.

இங்கும் கூட, நுழைவாயிலின் இடப்புறத்தில், சுவரை ஒட்டி மிகச் சிறிய அடுப்படிகளை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டு பிடித்தார்கள். இங்கு பெரும்பாலும் சமூகத்தின் திருமணமாகாத உறுப்பினர்கள் வசித்தார்கள்.

இவ்வாறாக, வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த மீனவர் களின் இத்தகைய வீடுகளைத் தங்களது மனக் கண்களில் புனர்வடிவம் செய்ய அவர்களால் முடிந்தது.

ஆயினும், மீத மிச்சங்கள் தங்களது மீனை அவர்கள் எங்ஙனம்

பிடித்தார்கள் என்பது எதையும் கூறவில்லை. கட்டுமரங்கள் வைத்திருந்தார்களா என்பது தெரியவில்லை.

ருஷ்யாவில் லதோகா ஏரிக் கரையில் இத்தகையதொரு வள்ளம் கண்டுபிடிக்கப்பட்டது.

எல்லாக் கப்பல்களுக்கும் பாட்டன்

அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் லதோகா ஏரியிலிருந்து அதிகத் தொலைவில்லாத இடத்தில் ஆட்கள் ஒரு கால்வாய் தோண்டிக் கொண்டிருந்தார்கள். தூள் நிலக்கரிப் பகுதியைத் தோண்டிய போது, மனித மண்டையோடுகளையும் சிக்கிமுக்கிக் கற்கருவிகளையும் அவர்கள் கண்டார்கள்.

இது பற்றித் தொல்பொருள் ஆய்வாளர் கண்டுபிடித்து உள்ளனர். அருங்காட்சியகத்தில் பார்வைக்காகப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது போல, சதுப்பு நிலத்தில் கிடைத்த எல்லாவகையான பொருட்களையும் எடுத்துவர அவர்கள் தொடங்கினார்கள். ஒரு சிக்கிமுக்கிக் கல் கை கோடரி, ஒரு சிக்கிமுக்கிக் கல் சுத்தியல், மீன்பிடி கொக்கி, அம்புத் தலை, பல் முனை போலமைந்த எறிபடை, ஒரு முத்திரை போலத் தோன்றுமாறு செதுக்கப்பட்ட ஓர் எலும்புத் தாயத்து ஆகியவற்றை வெளியே எடுத்தார்கள். அத்தகைய எல்லாப் பொருட்களும் சிக்கிமுக்கிக் கல்லாலும் எலும்பாலும் ஆனவையே என அவர்கள் கண்டுபிடித்த பின்னர், மிகப் பெரிய கண்டுபிடிப்பை, சிதைவடையாத ஒரு வள்ளம், அவர்கள் வெளிக் கொணர்ந்தார்கள். ஒரு மனிதன் மிகச் சுலபமாக அதில் ஏறி கடற்பயணம் செய்யக் கூடியவாறு அது மிக நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது.

மொத்தத்தில் அது நமது இற்றை நாளையக் கலங்கள் போலத் தோன்றவில்லை. நமது படகுகள் நீராவிக் கப்பல் மற்றும் மீசல் கப்பல்கள் ஆகிய எல்லாவற்றுக்கும் பாட்டன், ஒரு பெரிய ஓக் மரத்தின் அடிப்பகுதியில் தோண்டி எடுக்கப்பட்டது.

அடிமரத்தைக் குடைந்து செய்யப்பட்ட அந்தப் படகை நாம் உற்றுப் பார்த்தால், ஓக் மரத் தண்டை எந்த மாதிரியாக சிக்கிமுக்கிக் கற் கோடரி வெட்டி எடுத்திருக்கிறது என்பதை நாம் காண முடியும்.

மரத்தை எங்கெல்லாம் கோடரி நீளவாக்கில் கொத்தியிருக்கிறதோ அந்த இடங்கள் மிகவும் மோசமாகிப் போய் விடாது, அதன் அடிப்பரப்பு வளவளப்பாகவே இருக்கிறது. ஆனால் வில்லிலும் படகின் பின் பகுதியிலும், குறுக்கு வெட்டிலும் கோடரியின் வேலை உண்மையிலேயே சோர்வடையச் செய்வதாக இருந்தது. அங்கே மரம் எல்லாப் பக்கங்களிலும் கொத்தப்பட்டிருந்தது. அதில் முழுக்க புடைப்புக்களும், உள் துளைகளும் உள்ளன. சிக்கிமுக்கிக் கல் பற்கள் ஓக்கில் பதியப் பெற்றவை போல உள்ளன. சில இடங்களில் மரத்தின் முடிச்சுகளிலோ, திருகிக் கொண்டு நின்ற இடங்களிலோ கோடரி வேலை செய்ய மறுத்திருக்கின்றன. பிறகு, மரத்தோடு ஆன கோடரியின் சண்டையில், நெருப்பு அதன் இடர் மீட்புக்கு வந்தது.

படகின் பின்பகுதி முழுக்க எரிந்து கருகி, கரு நீல நிலக்கரி ஓடு போல மாறுகிறது.

மரத்தைக் குடைந்து செய்யப்பட்ட படகைச் செய்வதற்குப் பயன் பட்ட சிக்கிமுக்கிக் கற் கோடரியை விஞ்ஞானிகள் அதனருகே கண்டுபிடித்தார்கள். வெட்டும் முனையானது பளபளப்பாகவும் கூரான தாகவும் இருந்தது. அதிகத் தொலைவில் இல்லாது தூள் நிலக்கரி யோடு சானை தீட்டும் கருவி புதைந்து கிடந்தது. இதன் பொருள் சிக்கிமுக்கிக் கற் கருவிகள் முன்னர் போல ஒரு வடிவமாக மட்டும் செதுக்கப்படாது, பளபளப்பாகவும் கூர்மையானதாகவும் செய்யப்பட் டன என்பதாகும்.

ஒரு வலுவான ஓக் மரத்தை முனை மழுங்கிய ஒரு கோடரியால் எப்பொழுதேனும் வெட்ட முடியுமா?

ஓர் ஓக் மரத்தைக் குடைந்து செய்யும் ஒரு படகாக மாற்ற மனிதனுக்கு நீண்ட காலமும் அதிக உழைப்பும் தேவைப்பட்டது.

இறுதியாக, வேலை முடிவுற்றது. சிறிய படகு மிதக்கவிடப்பட்டது. மீனவ இனத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய எறிபடைகளையும், மீன்பிடி கொக்கிகளையும், மீன் ஈட்டிகளையும் மற்றும் பல்வேறு வகையான வலைகளையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு ஏரிகளுக்குள் ளாகச் சென்றார்கள்.

ஏரி மிகப் பெரியதாக இருந்தது, அதில் ஏராளமான மீன்கள் இருந்தன, ஆனால் கரையை விட்டுத் தள்ளிப் போவதற்கு மக்கள் துணியவில்லை. ஏனெனில் நீர் புதிய அறிமுகமில்லாத உலகமாக இருந்தது. அது எங்ஙனம் இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியும்? அடுத்து என்ன நடக்கும் என்று அவர்களால் எங்ஙனம் ஊகிக்க முடி யும்? ஒரு நாளைக்கு அது மேடு பள்ளமற்றதாகவும் அமைதியாகவும் இருந்தது. மறுநாளோ அது சீற்றங் கொண்ட பெரிய அலைகளாக மாறியது.

எந்தப் புயலாலும் கீழே சாய்க்க முடியாத பெரிய ஓக் மரமானது இப்போது அலைகளுக்கு மேலாக ஒரு மரத்துண்டு போல வகுந்து சென்றது.

கரையை நோக்கி மக்கள் அச்சத்தோடு படகைச் செலுத்தினார் கள். அங்கே உறுதியான தரை அவர்களுக்காகக் காத்திருந்தது. அவர்களது கால்கள் தரையில் நடக்கப் பழகியிருந்தன. பூமி ஊசலாட வில்லை, அவர்களைச் சந்திப்பதற்காக அது எழுந்து வரவில்லை, அது அவர்களை உருட்டிவிடவில்லை.

ஆகவே வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன், ஒரு சிறு குழந்தையைப் போல, தன்னை ஆளாக்கிவிட்ட அன்னை பூமி மீது நெருக்கமாக இருந்தான்.

வானம் போல நீண்டு கிடந்த ஆபத்தான நீர்ப்பரப்பின் மீது மீனைத் தேடிப் பின்னுக்குச் செல்வதைவிட, கரைக்கு மிக அண்மை யில் மீன் வரட்டும் என மீனவன் காத்திருந்தான்.

காலப்போக்கில், மிகுந்த எச்சரிக்கையுடன், அவர்கள் நம்பிக்கை யைப் பெறத் தொடங்கினார்கள், மேலும் தொலைவிற்குச் சென்றார் கள்.

நீர் ஆரம்பமானபோது மனிதனுடைய உலகம் முடிகின்ற நேரமாக இருந்தது. ஒவ்வொரு ஆற்றின் கரையும் ‘குறுக்கே செல்லக் கூடாது’

என்ற அறிவிப்புப் பலகையைத் தாங்கிய கட்புலனாகாத சுவரைக் கொண்டிருக்கிறது.

ஆனால் கட்புலனாகாத இந்தச் சுவர் வழியாக மனிதன் முன்னேறிச் சென்றான். தனது புதிய உலகத்தின், நீர் உலகத்தின் எல்லைகளுக்கு அவன் இன்னும் நெருங்கி வந்தான். ஆனால் எந்த ஒரு புதிய முயற்சியிலும் முதல் அடி எப்பொழுதுமே கடினமானதாகவே இருக்கும். எந்த ஒரு கரையையும் முழுமையாக உடைத்தெறியக் கூடிய நேரம் அவனுக்கு வரும்.

மரத்தைக் குடைத்து செய்யப்பட்ட படகில் அவன் பயணம் செய்யமாட்டான். ஆனால் தொலை தூரத்துத் தொடுவானங்களையும், தன்னைப் போலவே மனிதர்களைக் கொண்ட புதிய நாடுகளையும் கண்டுபிடிப்பதற்காக ஒரு கப்பல் அவனைக் கடலுக்குள்ளே எடுத்துச் செல்லும்.

முதலாவது கைவினைஞர்கள்

ஒரு கோடரி, ஓர் இழைப்புளி, ஒரு சுத்தியல் மற்றும் ஒரு துளையிடு கருவி இவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதை மிகச் சமீபத்தில் கற்றுக்கொண்ட இளம் கைவினைஞர்களாகிய உங்களிடம் நான் பேசுகிறேன்!

எதிர்காலத்தில் எஃகு தயாரிப்பவர்கள், ரசாயன நிபுணர்கள், விமானங்களையும் எந்திரங்களையும் வடிவமைப்பாளர்கள், வீடுகளையும் கப்பல்களையும் கட்டுபவர்கள் ஆகிய உங்களிடம் பேசுகிறேன்!

உங்களுடைய தொழிற்கருவிகளையும், உங்களுடைய வேலையையும் விரும்புகின்ற உங்களுக்காகவே இந்நூல் எழுதப்பட்டது.

நீங்கள் வேலை செய்யக் கூடிய மரம் அல்லது உலோகத்தோடு உங்களது தொழிற்கருவிகள் நடத்தும் போர் எவ்வளவு கடினமானது என்பதையும், அந்தப் பணி முடிகின்ற போது நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சி கொள்வீர்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

ஒரு துண்டுக் கட்டையை நீங்கள் கையில் எடுக்கின்ற போது, எந்தப் பொருளை உண்டாக்க விரும்புகிறீர்கள் என்பதை மனத்தில் நீங்கள் கற்பனை செய்கிறீர்கள். அது மிக இலகுவாகவே காணப்படுகிறது. நீங்கள் இங்கு கொஞ்சம் அறுத்தெடுக்க வேண்டியிருக்கிறது, அங்கு ஒரு துளை போட வேண்டியுள்ளது, இங்கு ஒரு துண்டை வெட்ட வேண்டியிருக்கிறது. ஆனால் மரக்கட்டை ஒத்துக் கொள்வதில்லை. தன்னை இரண்டாக வெட்டக் கூடிய கத்திவாளை தனது சக்தி கொண்ட மட்டும் எதிர்க்கிறது.

இந்தப் போரில் ஒன்றன் பின் ஒன்றாகக் கருவிகள் சேர்ந்து கொள்கின்றன. ஒரு கத்தியால் வேலையைச் செய்ய முடியாத போது, ஒரு கோடரியால் செய்ய முடிகிறது. ஒரு கோடரி போதுமான வலிமை பெற்றிருக்கவில்லை என்றால், தனது டஜன் கணக்கான கூர்மையான பற்களுடன் ஒரு ரம்பம் போரைத் தொடர்கிறது.

இதற்குள்ளாக மறைந்திருந்த உபரியான, நீங்கள் வடிவமைக்க விருந்த கட்டையில் இருந்த, மரமானது அறுபட்டுத் துண்டுகளாகி ரம்பத் தூளாகி விடுகிறது.

நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள். ஆனால் இது உங்களுடைய

வெற்றி மட்டும் அல்ல. உங்களது வெற்றி சாத்தியமானதற்குக் காரணம், பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் அனைத்துக் கைவினை ஞர்களும் கண்டுபிடித்து செம்மைப்படுத்திய நீங்கள் பயன்படுத்திய கருவிகளாலேயாகும். இத்தகைய கருவிகளைத் தயாரிப்பதற்கான புதிய பொருட்களையும் பயன்படுத்தும் புதிய முறைகளையும் அவர்கள் தேடிக் கண்டுபிடித்தார்கள்.

இங்கே, இந்நூலின் பக்கங்களில், முதலாவது கத்திகளையும், கோடரி களையும், சுத்தியல்களையும் செய்த முதலாவது கைவினைஞர்களைப் பற்றி நீங்கள் ஏற்கெனவே படித்திருக்கிறீர்கள்.

அவர்கள் வேலை செய்வதை நீங்கள் பார்த்தீர்கள். உங்களது வே லை சிரமமானதாக இருப்பது போலவே அவர்களுடையதும் இருந்தது. ஆனால் முடிவில் அது அளவற்ற மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது.

இத்தகைய முதலாவது தச்சர்கள், உழவர்கள் மற்றும் கொத்தர் கள் உடைகளாக விலங்குத் தோல்களையே அணிந்தனர். அவர்களது தொழிற்கருவிகள் கரடுமுரடானதாகவும், கனமானதாகவும் இருந்தன. ஒரு சிலை தயாரிக்க நமக்கிருக்கும் சிரமத்தை விட ஒரு மண் சமை யல் பாண்டத்தைத் தயாரிப்பது அவர்களுக்கு மிகவும் சிரமமானதாக இருந்தது.

ஆனால், தங்களது அன்றாட உழைப்பின் மூலம் உலகின் முகத்தை இப்பொழுது மாற்றிக்கொண்டிருக்கும் கட்டிட அமைப்பாளர்கள், வேதி யல் வல்லுநர்கள், உருக்குத் தயாரிப்பாளர்கள் என்ற பெரிய ராணுவத் தில் இத்தச்சர்களும், உழவர்களும், குயவர்களும் முதலவதாக நின்றனர்.

உதாரணமாக, பண்டைய குயவர்களை எடுத்துக் கொள்வோம். இயற்கையில் காணப்படாத ஒரு புது மாதிரியான பொருளை முதன் முதலாகத் தயாரித்தவர்கள் அவர்கள் தான். முன்னதாக, வர லாற்றுக் காலத்திற்கு முந்திய ஒரு கைவினைஞன் சிக்கிமுக்கிக் கற் கோடரியைத் தயாரித்த போதோ, எலும்பு எறிபடையைத் தயாரித்த போதோ அவன் பயன்படுத்திய பொருளை உருவாக்கவில்லை, அதன் வடிவத்தை மட்டுமே வெறுமனே மாற்றினான். ஆனால் இதுவோ இது போல முன்னர் ஒருபோதும் ஏற்பட்டிராத ஒன்று. களிமண் பாண்டம் ஒன்றை மனிதன் செய்து அதை கூடாரத் தீயில் வைத் தான். அத்தீயானது, அறிந்து கொள்ள முடியாதபடி, களிமண்ணின் எல்லாத் தன்மைகளையும் மாற்றியது.

முன்னதாக, களிமண் ஈரமானபோது அது எப்பொழுதுமே மென் களியாகத்தான் மாறியது. ஆனால் அது நெருப்பில் வைக்கப்பட்ட பின்னர், அது நீரைக் கண்டு அஞ்சவில்லை. அதனுடைய வடிவத்தை மாற்றாமலும், அதை மென்மையானதாக மாற்றாமலும் நீரை அதற் குள் விட முடிந்தது.

களிமண்ணை ஒரு புதிய பொருளாக மாற்றுவதற்கு வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் நெருப்பைப் பயன்படுத்தினான். இது இரட்டிப்பு வெற்றியாக இருந்தது: களிமண்ணுக்கு மேலாக ஒரு வெற்றி, நெருப்புக்கு மேலாக ஒரு வெற்றி. உண்மை, முன்னதாக, குளிரிலிருந்து காப்பாற்ற, கொடிய விலங்குகளிடமிருந்து விலகி நிற்க, காட்டை அழித்து துப்புரவு செய்ய, நெருப்பு அவனுக்கு உதவி இருந்

திருக்கிறது. அவன் தனது மரக்குடைவு படகைச் செய்தபோது, அவனது கோடரிக்கு உதவவும் வந்திருக்கிறது. நெருப்பு உண்டாக்கு வதன் ரகசியத்தை மனிதன் இப்போது அறிந்து கொண்டான். இரண்டு மரத் துண்டுகளை அவன் உரசிய பொழுதெல்லாம், அது பணிவோடு முன்னே தோன்றியது.

இப்போது மனிதன் நெருப்புக்குப் புதியதும் மிகச் சிரமமானதுமான பணியைக் கொடுத்தான், ஒரு பொருளிலிருந்து மற்றொன்றாக மாற்று வது.

நெருப்பின் விநோதமான தன்மைகளை மனிதன் அறிந்து கொண்ட போது, களிமண்ணை வேகவைக்கவும், தனது உணவைச் சமைக்கவும், தனது ரொட்டியைச் சுடவும், செம்பை உருக்கவும் செய்தான்.

இயற்கை உலோகக் கலவையிலிருந்து இரும்பை எடுக்கவும், மணலி லிருந்து கண்ணாடியைத் தயாரிக்கவும், மரத்திலிருந்து காகிதம் தயா ரிக்கவும் நெருப்பு நமக்கு உதவி செய்கிறது. எஃகு தயாரிப்பவர்கள் மற் றும் வேதியல் நிபுணர்கள் கொண்ட ஒரு பெரிய படை எஃகு ஆலை களில் எரிகின்ற தீயைக் கட்டுப்படுத்துகிறார்கள். இந்த எல்லாவகை உலைகளும், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய குயவன் தனது முதலா வது, ஒழுங்கற்ற குறுகிய அடிப்பரப்பைக் கொண்ட பானையைச் சுட்ட அடுப்படியிலிருந்து தங்களது தொடக்கத்தைப் பெற்றிருக்கின்றன.

விதை ஒரு சாட்சியாகிறது

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய கூடாரமையங்களில் ஒன்றில் தொல் பொருள் நிபுணர்கள் கண்டுபிடித்த ஏராளமான பிற பொருட் களோடு அநேக மண்சாடிகளும் இருந்தன.

வெளிப் புறத்தில், மிக எளிமையான ஒன்றோடொன்று மாறி மாறிப் பின்னிச் செல்லும் கோடுகளைக் கொண்ட மாதிரியில் மண் சாடிகள் அழகுபடுத்தப்பட்டிருந்தன. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய குயவர்கள் தங்களது பானைகளை எங்ஙனம் உருவாக்கினார்கள், நெருப்பில் சுட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்ளும் ஒரு குறிப்பே இந்த மாதிரி என்று சில விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

புரிமுறுக்குக் கூடை ஒன்று உள்புறம் களிமண் அடுக்கால் நிறைத்து வைக்கப்பட்டது. பிறகு அந்தக் கூடை நெருப்பில் வைக்கப்பட்டது. உள்புறம் பானையை விட்டபடி நாணல்கள் எரிந்து போயின, பானை யின் வெளிப்புறம் இருந்த தாவரத்தின் தண்டுகள் ஒன்றோடொன்று மாறி மாறிப் பின்னிச் செல்லும் வடிவத்தை ஏற்படுத்தி இருந்தன.

பிறகு, புரிமுறுக்குக் கூடையின் உதவியில்லாமலேயே மட் பாண் டங்களைச் சுடுவதற்குக் குயவர்கள் கற்றுக் கொண்ட போது, சுடப் படாத பானைகளில் ஒழுங்கான குறுக்குக் கோடுகளைப் போட்டு அலங்கரிக்கத் தொடங்கினார்கள். தங்களது பாட்டிகளும் கொள்ளுப் பாட்டிகளும் பயன்படுத்தியதைப் போன்று காணப்படாவிட்டால் அது நன்றாகச் சமைக்காது என்று அவர்கள் நினைத்தார்கள்.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் சில தெரியாத, புதிரான சக்தியும் தரமும் ஒவ்வொரு பொருளுக்குள்ளும் மறைந்து இருக்கிறது என கைவினைஞர்கள் நம்பினார்கள். ஒருவகையில் பானையின் உண்மை யான சக்தி அதனது வடிவமைப்பில் தான் இருந்தது என்பதை யாரால்

கூற முடியும்! வடிவத்தை அவர்கள் மாற்றியிருந்தால், அதற்காக அவர்கள் எப்பொழுதும் வருத்தப் பட்டிருந்திருப்பார்கள். பிறகு அந்தப் பானை அவர்களது கெட்ட அதிர்ஷ்டத்தையும், கெட்ட நேரத்தையும், பசியையும் கொண்டுவந்திருக்கும். சில நேரங்களில், கெட்ட கண்ணிலிருந்து பானையைப் பாதுகாக்க, அதன் மீது ஒரு நாயின் படத்தைக் குயவன் வரைவதுண்டு.

நாய் மனிதனுடைய உதவியாளாக இருந்தது. அவன் வேட்டையாடிய போது அவனுடன் அது துணை சென்றது, அவனது வீட்டைக் காவல் காத்தது.

பானையின் மீது ஒரு நாயின் படத்தைக் குயவன் வரைந்தபோது, அவன் தனக்குத்தானே சொல்லிக் கொள்வான்: நாய் ஒரு காவல் நாய், பானையையும் அதில் உள்ள ஒவ்வொன்றையும் அது காவல் காக்கட்டும்.

குறுக்குக் கோடுகளால் அலங்கரிக்கப்பட்ட மண் சாடிகள் அநேக இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவைகளில் ஒன்று, பிரான்சில் கம்பிஞ்யி நகரத்திற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது, முற்றிலும் புகழ் வாய்ந்ததாகிவிட்டது. அதன்மீது பார்லி விதைகளின் அச்சுப் பதிக்கப்பட்டிருப்பதை அறிந்தபோது, விஞ்ஞானிகள் வியப்பு மேலிட்டுப் போனார்கள்.

தாங்கள் கண்டுபிடித்தது கண்டு அவர்கள் பரபரப்புற்றார்கள். அது வெறுமே ஒரு தானியமாக இருக்கவில்லை, அது ஒரு சாட்சியாக இருந்தது, வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த மாபெரும் மாற்றங்களுக்கு மிகச்சிறிய சாட்சி.

அங்கே தானியம் இருந்ததென்றால், வேளாண்மை கட்டாயம் இருந்திருக்க வேண்டும். அதனால் தான் அவர்கள் தானிய நசுக்கிகளையும், சிக்கிமுக்கிக் கல் நிலக்கூம்புகளையும் ஒரே இடத்திலேயே கண்டுபிடித்தார்கள்.

வேடுவர்களும் மீனவர்களும் வெளிப்படையாகத் தெரியுமாறு உழவர்களாகவும் மாறியிருந்தார்கள். இது எங்ஙனம் ஏற்பட்டிருக்க முடியும்?

தொடக்கத்தில், இனக் குழுவின் எல்லா உறுப்பினர்களுமே வேட்டையாடவும் மீன் பிடிக்கவும் செய்யவில்லை. ஆண்கள் வேட்டையின் மீது அப்பால் சென்ற போது, பெண்களும் குழந்தைகளும், கூடைகளோடும் மட்பானைகளோடும் உண்ணத் தக்கவைகளைத் தேடி இரந்து திரிந்தார்கள். கடற்கரையோரத்தில் அவர்கள் சிப்பிகளைப் பொறுக்கினார்கள். காடுகளில் அவர்கள் காளான்கள், பெர்ரிப் பழங்கள் மற்றும் கொட்டைகளைச் சேகரித்தார்கள். கருவாலிக்காய்களைத் தின்பதை அவர்கள் எந்தவகையிலும் பொருட்படுத்தவில்லை. அவர்கள் கருவாலிக்காய்களைத் தோண்டி, அதன் மாவிலிருந்து தட்டையான ரொட்டி தட்டிச் சுட்டார்கள். அதனால் தான் கருவாலிக்காய் என்ற சொல், ரொட்டி என்ற பொருளில் அநேக மொழிகளில் நீண்ட காலத்திற்கு நீடித்தது.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ஓர் இனக் குழு தேன் கூடு

ஒன்றைக் கண்ட போது அளவற்ற மகிழ்ச்சியடைந்தது.

செங்குத்துப் பாறை ஒன்றில் ஒரு பெண் தேன் சேகரிப்பது போன்ற ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அவள் ஒரு மரத்தின் மீது இருப்பதாகக் காட்டப்படுகிறாள். ஒரு கை உள்துளையிலும், அதே வேளை மற்றொரு கை ஒரு பெரிய சாடியையும் பற்றியிருக் கிறது. கோபமுற்ற தேனீக்கள் அவளைச் சுற்றி மொய்க்கின்றன. ஆனால் அவளோ அது பற்றி பொருட்படுத்தாது, தேனடையை அள்ளி எடுக்கிறாள்.

பெண்களும் குழந்தைகளும் தங்களது வெளிப் பயணத்தின் போது பெற்ற பெர்ரி, தேன், காட்டு ஆப்பிள், மற்றும் பேரியினக் காய் இவற் றோடு வழமையாகத் திரும்பினார்கள்.

இப்போது ஒரு விருந்து சாப்பிடும் நேரம் வந்துவிட்டது! ஆனால் தங்களது சேமிப்பு உணவைப் பயன்படுத்துவதில் பெண்கள் அவசரங் காட்டவில்லை. குழந்தைகளையெல்லாம் துரத்திவிட்டு, அவர்களால் முடிந்த அளவுக்குப் பானைகளிலும், சட்டிகளிலும், பீப்பாய்களிலும் எல்லாவற்றையும் சேமித்து வைத்தார்கள். வேட்டையாடுவது ஒரு நிச்சயமற்றதாக இருந்ததால், இத்தகைய சேமிப்பு உணவுகள் எப் பொழுதுமே கைக்கு உதவியாக இருந்தன.

இவ்வாறாக, வெதுவெதுப்பான தட்பவெப்ப நிலை மக்களை மறு படியும் பொருள் திரட்டுபவர்களாக்கிற்று. இது ஓர் அடி பின்னுக்குச் சென்றது போலக் காணப்பட்டது. உண்மையில், இது முன்னுக்கு ஒரு தாவல் தாவியதாகும். ஏனென்றால் தேடுபவர்களிடமிருந்து உழுபவர் களைப் பிரிக்கும் அந்தக் கோட்டைத் தாண்டியதன் மூலம் அவர்கள் விதைக்கத் தொடங்கினார்கள்.

பெண்கள் திரும்பவும் பழங்களையும், பெர்ரிகளையும், பார்லி, கோதுமை போன்ற கூலவகைத் தானியங்களையும் கொண்டுவந்தார் கள். தானியங்களைப் பானைகளிலும் கூடைகளிலும் சேமித்து வைத் தார்கள். ஆனால் தானியம் சுலபமாக உதிர்ந்து போகுமாதலால், சில தானியங்கள் நிச்சயமாக முளைக்கத் தொடங்கி விடும்.

தொடக்கத்தில், தாங்கள் சேகரித்திருந்த தானியத்தில் கொஞ்சத்தை உதிர விட்டதன் மூலம், மக்கள் எதிர்பாராத விதமாகத்தான் விதையை நட்டார்கள். பிறகு அவர்கள் விதைப்பதற்கவே குறிக்கோளோடு விதையைத் தூவினார்கள்.



புதையுண்டு போய் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்ட தானியங் களைப் பற்றிய கற்பனைக் கதைகளையும், புராணக் கதைகளையும் அநேக இனத்தினர் இன்னமும் காப்பாற்றுகின்றனர்.

பண்டைக் காலங்களில் பெண்கள் தங்களது களைக்கொட்டுகளால் நிலத்தைக் கிளறி பின்னர் அதில் தானியங்களைப் புதைத்த போது, ஒரு விநோதமான கடவுளை அவர்கள் புதைத்துக் கொண்டிருப் பதாகவும், அது தங்கக் காதுகளுடைய தானியத்தோடு அவர்களிடம் திரும்பவும் வரும் எனவும் அவர்கள் நம்பினார்கள். இலையுதிர் காலத்தில், அவர்கள் அறுவடையைச் சேகரித்தபோது பாதாள உலகத் திலிருந்து கடவுள் திரும்பவும் வந்துவிட்டார் என அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள்.

கடைசிக் கதிர்க்கட்டைக் கட்டி அதைத் தரையில் போட்ட போது, அதைச் சுற்றி அவர்கள் பாடவும் ஆடவும் செய்தார்கள். அது வெறும் நடனமாக இருக்கவில்லை. அது ஒரு மந்திரச் சடங் காக இருந்தது. இறந்து போனவர்களிடமிருந்து தானியங்கள் திரும்பி வந்ததைப் புகழ்ந்து பெண்கள் பாடினார்கள். அப்போது போல எப் பொழுதுமே தங்களிடம் தாராளமாக இருக்கும்படி பூமியை அவர் கள் கேட்டுக் கொண்டார்கள்.

புதியதில் பழையது

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னதாக, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒவ்வொரு இளவேனிற் காலத்தின் போதும் அறுவடையை முடித்துக்கொண்டதும் பெண்கள் 'அறுவடை யை'க் கொண்டாடிய இடங்கள் ருஷ்யாவில் இருந்தன.

கடைசிக் கதிர்க் கட்டை எடுத்து அவர்கள் அதைச் சுற்றி ஒரு சட்டை போலவும் ஒரு கைக் குட்டை போலவும் கட்டுவார்கள். பிறகு, கைகளைக் கோத்துக் கொண்டு, வட்டமாக நின்று கொண்டு பண்ணிசைப்பார்கள்:

இன்று அறுவடை
நமது நிலமதில்,
இறையைப் புகழ்வோம்.
ஓர் நிலம் அறுவடையானது,
மறு நிலம் உழுதாயிற்று,
இறையைப் புகழ்வோம்.

விசித்திரமான சந்தம் மாறாத இந்த இறைவணக்கப் பாடலானது. கிராமத்து இளைஞர்களும் குமரிகளும் தாங்கள் மாலை வேலையில் வெளியே நடந்து செல்கின்றபோது பாடக் கூடிய கிளர்ச்சியூட்டக் கூடிய பாடல் அடிகளைப் போலில்லை.

'அறுவடை' என்பது ஒரு பண்டைய சடங்கு, ஆதி முதல் உழ வர்களிடமிருந்து காலங்காலமாக கடந்து வந்த ஒன்றாகும். ஏராள மான சடங்குகள் விளையாட்டு மற்றும் பாடல்கள் வடிவில் நம்மை வந்து சேர்ந்துள்ளன.

குழந்தைகள் கை கோத்துப் பாடுவது:

ஓ, நாங்கள் தினை விதைத்தோம்,
தினை, தினை.
ஓ, நாங்கள் தினை விதைத்தோம்,
ஆம், நாங்கள் விதைத்தோம்.

இந்த விளையாட்டுப் பாடல் கூட பண்டைக் காலத்தில் வழிபாட்டு முறைப் பாடலாகவே இருந்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுக் காலத் தில் அதன் பின்னணியில் இருந்த மந்திரமானது முற்றாக மறைந்து போய்விட்டது. எஞ்சியிருந்ததெல்லாம் வேடிக்கை மட்டுமே.

ஃபிர் மரத்தைப் பற்றித்தான் என்ன! ஒரு காலத்தில் ஃபிர் மரம் புனிதமாக இருந்தது. அதைச் சுற்றிலும் நின்று மக்கள் நடனமாடினார் கள். தங்களது மந்திர அசைவுகள் தூங்கிக் கொண்டிருக்கிறக் காடு களுக்கும், வயல்களுக்கும் திரும்ப உயிரைக் கொண்டுவரும் எனவும், குளிர்காலத்திற்குப் பிறகு வசந்தகாலத்தைக் கொண்டுவரும் எனவும்

அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

புதிய ஆண்டிற்கு மரத்தின் மீது ஆபரணங்களைத் தொங்கவிடுவதில் விருப்பங்கொண்ட குழந்தைகளிடம், அம்மரம் ஒரு புனித மரமாகக் கருதப்பட்டது என்று சொன்னால் சிரிப்பார்கள். மாதக் கணக்கான படிப்பிற்குப் பிறகு விடுமுறை நாளின் போது, குளிர்காலத்தின் மத்தியில் அவர்களுக்கு அது ஒரு மகிழ்ச்சியான விடுமுறை நாள் சின்னமாக இருக்கிறது.

ஏராளமான பண்டைய வழிபாட்டு முறைகளும், மந்திரச் சடங்குகளும் இற்றை நாள் குழந்தைகளுடைய விளையாட்டுக்களிலும் பாடல்களிலும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

மழையே, மழையே தூரப்போ,
மீண்டும் வருவாய் மற்றொரு நாளில்!

இந்த ராகத்தைக் குழந்தைகள் பாடும் போது, இது மழையை நிறுத்துவதற்கோ, மேகங்களைக் கலைந்து போகச் சொல்வதற்கோ அல்ல. வார்த்தைகள் மழையை ஒன்றும் பாதிக்காது என்பதை அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். அவர்கள் இந்தப் பாடலைப் பாடுகிறார்கள் ஏனெனில் அது வேடிக்கையாக இருக்கிறது.

ஒரு காலத்தில் முற்றிலும் மாறுபட்ட அருத்தத்தைக் கொண்டிருந்த பாடல்களைப் பாடுவதையும், விளையாட்டுக்களை விளையாடுவதையும் வளர்ந்த பெரியவர்கள் கூடப் பொருட்படுத்துவதில்லை.

இவ்வாறாக பண்டைக்கால நம்பிக்கைகளும், மந்திரச் சடங்கு முறைகளும் வேடிக்கை விளையாட்டுக்களில் இடம் பெற்றிருக்கின்றன.

எனினும், விளையாட்டுக்களைக் காட்டிலும் மற்றவைகளில் அவை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

சர்ச்சுகளில் ஈஸ்டர் கொண்டாட்டங்கள் நடைபெறும் போது, வழிபாட்டுச் சொற்கள் பண்டைய மந்திரப் பாடல்களையே பிரதிபலிக்கின்றன.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய உழவர்களின் பாடலைப் போல, இத்தகைய வழிபாடுகளும் மரணத்தையும், புத்துயிர்ப்பையும் பற்றிப் பேசுகின்றன.

எப்போதோ விளையாட்டுக்களாகவும், நடனங்களாகவும் மாறிய உலகிற்கு அப்பாற்பட்ட விஷயங்கள், சர்ச்சுகளில் மட்டும் புனிதச் சடங்குகளாக நிலைத்து இருக்கின்றன.



பண்டையக் காலங்களிலிருந்து ஏராளமான மூடநம்பிக்கைகளும், தப்பெண்ணங்களும் நம்மை வந்தடைந்திருக்கின்றன.

ஒரு குதிரை லாடத்தைக் கண்டால் அது தங்களுக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்றும், தங்களது இடது தோளுக்கு மேலாக வளர்பிறையைப் பார்த்தால் அது தங்களுக்கு அவப்பேறைக் கொண்டு வரும் என்றும் நம்பக் கூடிய மக்கள் இன்னமும் அளவுக்கதிகமாகவே உள்ளனர்.

உக்லிச் நகரை ஒட்டிய ஒரு கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த பெண் ஒருத்தி, புரட்சிக்கு முந்திய காலங்களில் தனது கிராமத்துப் பெண்கள்

தங்களது கோழிக் கூடுகளில் ஒரு 'கோழிக் கடவுளை'த் தொங்க விடுவது வழக்கம்.

'கோழிக் கடவுள்' என்பது நடுவில் துளையிடப்பட்ட ஒரு கல். கல்லாலான 'கோழிக் கடவுள்' கற்காலத்தைச் சேர்ந்த ஒன்று, எனினும் அது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட உயிருடன் இருந்தது.

வியத்தகு களஞ்சியம்



தங்களது களைக்கொட்டுகளைக் கொண்டு பெண்கள் சுறுசுறுப்பாக நிலத்தைக் கொத்திக் கொண்டு இருந்த வேளையில், ஆண்கள் சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கவில்லை. வேட்டையாடுவதில் தங்களது நாட்களை அவர்கள் செலவிட்டார்கள், தங்களது வெற்றிச் சின்னங்களோடு மாலையில் காலந்தாழ்த்தித் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

தங்களது மூத்த சகோதரர்களும் தந்தைகளும் திரும்ப வந்து கொண்டிருப்பதைக் குழந்தைகள் பார்த்த போது, அவர்களைச் சந்திப்பதற்காக ஓடிச் செல்வார்கள், அவர்களது வேட்டை வெற்றி தந்ததா இல்லையா என்பதைக் காணச் சென்றார்கள். அதனது வாயிலிருந்து துருத்திக் கொண்டிருந்த தந்தங்களுடன் குருதி வழிந்த பன்றித் தலையையோ, மானின் கிளைபடர்ந்த கொம்புகளையோ அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு உற்று நோக்குவார்கள். சிறிய மருளுகின்ற ஆட்டுக் கடாரியையோ, துணையற்றுப் போன கொம்பில்லாத கன்றுக் குட்டியையோ வேடுவர்கள் உயிரோடு கொண்டுவந்தால், அவர்களது மகிழ்ச்சி இன்னும் அதிகமாகியது.

தாங்கள் சிறைப் பிடித்த நான்கு கால் விலங்குகளை வேடுவர்கள் உடனே கொன்றுவிடுவதில்லை. அவை ஒரு வேலியடைப்புக்குள் விடப்பட்டு, நன்கு வளரும்படி உணவு கொடுக்கப்பட்டன. வீட்டிற்குப் பக்கத்தில் கன்றுக்குட்டி கத்தும் போதும், ஆட்டுக் குட்டி குரல் எழுப்பும் போதும், வேடுவர்கள் இயலமைதியோடு இருந்தனர். மறு நாள் வேட்டையின் போது வெறுங்கையோடு திரும்பினாலுங்கூட அவர்கள் பசியோடு இருக்க வேண்டி வராது என்பதை அவர்கள் அறிவார்கள். வேலியடைப்புக்குள்ளாக சேமிப்பில் அவர்கள் வைத்திருந்தனர். தாங்களாகவே வளர்ந்து பல்கிப் பெருகக் கூடிய வகையினதாக இந்தச் சேமிப்புகள் இருந்தன.

தொடக்கத்தில் மக்கள் கால்நடைகளைத் தங்களது இறைச்சிக்காகவும் தோல்களுக்குமாகவே வைத்திருந்தனர். கால்நடை வளர்ப்பில் உள்ள மிகப் பெரும் லாபத்தை அவர்கள் அறியவில்லை. வேடுவர்கள் கத்துகின்ற இந்த விலங்குகளைத் தங்களது உணவுக்காகவே கண்டார்கள். இரைக்காகவே அவைகளைக் கொல்லத் தொடங்கினார்கள். கொல்வதைவிட ஒரு பசுவையோ, ஓர் ஆட்டையோ வளர்ப்பது மிகவும் இலாபகரமானது என்பதைப் புரிந்துகொள்வது அவர்களுக்குச் சுலபமானதாக இல்லை.

ஒரு பசுவை நாம் ஒரு முறை மட்டுமே உண்ண முடியும், ஆனால் அதனது பாலை பல ஆண்டுகளுக்குப் பருக முடியும். முடிவில், அவர்கள் ஒரு பசுவை கொல்லாது விடுவார்களே யானால், அதிகமான

இறைச்சியைப் பெற முடியும், ஏனெனில் ஒரு பசு ஒவ்வொரு ஆண்டும் கன்றினுகிறது.

செம்மறியாட்டுக்கும் இதே உண்மை பொருந்தியது. செத்துப்போன ஆட்டிலிருந்து தோலையுரிப்பது ஒன்றும் பிரச்சினையாக இருந்ததில்லை. தனது தோலைப் பாதுகாக்கும்படி ஒரு செம்மறியாட்டை விட்டு வைப்பது மிகவும் லாபகரமானதாக இருந்தது. ஏனெனில் ஒவ்வொரு முறை வெட்டப்பட்டப் போதும் புதிதாக கம்பளி வளர்ந்தது. இந்த முறையில் ஒவ்வொரு ஆட்டிலிருந்தும் பத்து ஆடுகளை அவர்களால் அடைய முடிந்தது. நான்கு கால் கைதிகளை உயிர் வாழவிட்டு, பதிலாக அவைகளிடமிருந்து திறையைப் பெறுவது நல்லதாக இருந்தது.

பசு, ஆடு, குதிரை இவைகளை மனிதன் பழக்கப்படுத்திக் கொண்ட போது, தனது சொந்த விருப்பத்திற்கேற்ப அவைகளைப் பெருக்கத் தொடங்கினான். அவை உணவு கொள்ளுமாறும், குளிரிலிருந்து பாதுகாப்பைப் பெறும்படியும் அவன் பார்த்துக் கொண்டான். ஆனால் பதிலுக்கு பசு முன்னைக் காட்டிலும் அதிகமான பாலைக் கொடுக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அது இப்போது தனது கன்றுக்குட்டிக்கு மட்டுமல்லாது, தனது எசமானர்களுக்கும் உணவு கொடுக்க வேண்டி யிருந்தது. காலப் போக்கில் கனமான சுமைகளைத் தூக்க குதிரை கற்றுக் கொண்டது. இப்பொழுது ஆடு தனக்காகவும் தனது எசமானர் களுக்காகவும் போதுமான கம்பளியைப் பெற்றிருந்தது.

அதிகமான பால்தரும் பசுக்கள், வலுவான குதிரைகள், நீளமான கம்பளி கொண்ட ஆடுகள் ஆகியனவே மந்தையில் விடப்பட்டன. இந்த வகையில் புதிய வளர்ப்பு விலங்குகள் நடைமுறைக்கு வந்தன.

இந்த நிலைக்கு மக்கள் உடனடியாக வந்துவிடவில்லை. வேடுவனுக்கு ஓர் உழவனாக மாறுவதற்குப் பல நூற்றாண்டுகள் பிடித்தன.

இறுதியாக என்ன நடந்தது?

ஒரு வியத்தகு களஞ்சியத்தை மக்கள் கண்டுபிடித்தார்கள். நிலத்தில் சேகரித்திருந்த தானியத்தை அவர்கள் ஒளித்து வைத்தார்கள். அவர் கள் விதைத்த ஒவ்வொரு தானியத்திற்கும் ஏராளமான தானியங்களாக நிலம் திரும்பத்தந்தது.

அவர்கள் பிடித்த எல்லா விலங்குகளையும் கொல்லவில்லை. அவர்கள் விட்டு வைத்தவை வளர்ந்து பல்கின.

மனிதன் கட்டற்றவனாக மாறினான். இயற்கை மீது குறைந்த அளவே சார்ந்திருப்பதாக அவன் உணர்ந்தான். அதற்கு முன்னர் ஒரு விலங்கைப் பிடித்துக் கொல்ல முடியுமா என்பதையும், தனது கூடைகளை நிரப்பும் அளவுக்குப் போதுமான தானியத்தைத் தன்னால் பெற முடியுமா என்பதையும் அவன் ஒருபோதும் அறிந்ததில்லை. இயற்கையின் அபூர்வ சக்திகள் அவனுக்கு உணவை அனுப்பியும் இருக்கலாம், அனுப்பாமலும் இருக்கலாம். இப்பொழுது இயற்கைக்கு உதவுவதற்கு மனிதன் கற்றுக் கொண்டிருந்தான். தனது சொந்த தானியத்தை வளர்ப்பதற்கு, தனது சொந்தப் பசுக்களையும் ஆடுகளை யும் பெருக்குவதற்கு அவன் கற்றுக் கொண்டிருந்தான். காட்டுக் கனி வகைகளைத் தேடி பெண்கள் இனிமேலும் செல்ல வேண்டி வரவில்லை. காட்டு விலங்குகளைத் தேடிக் கொண்டும், பிடித்துக் கொண்டும் தங்

களது நாட்களை வேடுவர்கள் செலவிட வேண்டி நேரவில்லை.

இப்போது தானியக் கதிர்கள் வீட்டிற்கு அருகிலேயே வளர்ந்தன. அதே வேளை பசுக்களும் ஆடுகளும் பக்கத்திலேயே புல் மேய்ந்தன.

மனிதன் ஒரு வியத்தகு களஞ்சியத்தை கண்டுபிடித்திருந்தான். இன்னும், அதை அவன் உடனடியாகக் கண்டுபிடித்து விடவில்லை என்பதே மிகவும் சரியானதாக இருக்க முடியும். ஆனால் தனது உழைப்பின் மூலம் அதை உருவாக்கி இருந்தான்.

தனது வயல்களுக்காகவும், மேய்ச்சல் நிலங்களுக்காகவும் அவனுக்கு நிலம் தேவைப்பட்டது. நிலத்தைக் காட்டிலிருந்து வென்று பெற வேண்டியிருந்தது. விதைப்புக்கு முன்னதாக அதைப் பிளக்க வேண்டி இருந்தது. எத்தனை இடர் தரும் பணி இது!

காலாற அவன் நடந்து செல்ல வேண்டியிருந்தது போல மனிதன் தனது சுதந்திரத்தையும் விடுதலையையும் நோக்கிச் சிற்றுலா செல்ல வில்லை. ஆயிரக்கணக்கான தடைகளைத் தாண்டி, தனது வழியில் அவன் உடைத்தெறிந்து செல்ல வேண்டி இருந்தது. அவனது புதிய செயலூக் கம் தனது சொந்த மகிழ்ச்சிகளையும், கவலைகளையும் பெற்றிருந்தது. பயிரைச் சூரியன் எரிந்து விடக் கூடும், மேய்ச்சல் நிலத்தில் உள்ள பச்சைப் புற்களை அது காயவைத்து விடும். அதிகமான மழையுங்கூட தானியத்தை அழுகச் செய்துவிடும்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவன் ஒரு காட்டெருதையோ, கரடியையோ தனக்கு இறைச்சி தரும்படி கேட்டான். வரலாற்றுக் காலத்திற்கு முந்திய உழவன் நிலத்தையும், வானத்தையும், சூரியனையும், மழையையும் தனக்கு நல்ல விளைச்சலைத் தரும்படி கேட்டான்.

மேலும் மக்கள் புதிய கடவுளர்களைப் படைத்தார்கள். இந்தக் கடவுளர்கள் இன்னமும் பழையவைகளைப் போலவே பெரும்பாலும் இருந்தனர். மரபுப்படி, விலங்குகளைப் போலவோ, விலங்குத் தலை கொண்ட மனித உருப் போலவோ அவர்கள் உருவாக்கப்பட்டார்கள். ஆனால் இத்தகைய விலங்குகள் புதிய பெயர்களையும், புதிய நோக் கங்களையும் கொண்டிருந்தன.

ஒன்று வானம் என்று அழைக்கப்பட்டது, மற்றது சூரியன் என்றும் மூன்றாவது பூமி என்றும் ஆயின. அவைகளைப் பொருத்தே ஒளியும் இருளும், மழையும் வறட்சியும் இருந்தன.

நமது மனிதன் பெரியவனாக வளர்ந்திருந்தான். ஆனால் தனது சொந்த பலத்தை அவன் இன்னமும் அறியவில்லை. தனது அன்றாட உணவு, தனது சொந்த உழைப்பின் விளைவாக வந்தது என்பதற்குப் பதிலாக, வானத்திலிருந்து வந்த நன்கொடை என்று அவன் இன்ன மும் நம்பினான்.

காலத்தின் கரங்கள் முன்னோக்கி நகர்த்தப்பட்டன

காலத்தின் கரங்களை நாம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் நகர்த்துகிறோம். நவீன காலத்திலிருந்து நம்மை ஐம்பது நூற்றாண்டுகள் மட்டுமே பிரிக்கும்.

ஐம்பது நூற்றாண்டுகள்! யாராவது ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றியோ, மக்களைப் பற்றிய வரலாறு குறித்தோ நாம் பேசிக் கொண்டிருக்கும் போது இது மிக நீண்ட காலந்தான். ஆனால் இங்கே நாம் எந்த ஒரு மனிதனைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கவில்லை, நாம் மனித இனத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

மனித இனமானது ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு நெருக்கமானது. அதனால் தான் ஐம்பது நூற்றாண்டுகள் மிகப் பெரிய காலமாகத் தோன்றவில்லை.

ஆகவே, காலத்தின் கரங்கள் முன்னோக்கி நகர்த்தப்பட்டன. சூரியனைச் சுற்றி பூமி பல்லாயிரக்கணக்கான சுற்றுகள் வந்துவிட்டன. இந்தக் காலத்தில் உலகத்திற்கு என்ன நேர்ந்தது? ஒரு வகையில் உச்சியில் அது மொட்டையானதாக ஆகிவிட்ட என்று கூறுவதற்கு ஒரு பார்வை பார்த்தாலே போதுமானது.

வெண்ணிறப் பனிக் குல்லாயைச் சுற்றி அடர்த்தியான பசுங்காடுகள் வளர்ந்த காலம் ஒன்று இருந்தது. இப்பொழுது காடுகளெல்லாம் குறைந்துபோய், ஸ்டெப்பியின் பரந்த வெளிகள் அதனுள்ளே ஊடுருவி விட்டன. இங்குமங்கும் ஒளிபடர்ந்த இட ஒழிப்பால் காடு பின்னுக்குத் தள்ளப்பட்டது. நாணலுக்கும், புதர்களுக்கும் இடம் விட்டபடி, ஆறுகளுக்கும் ஏரிகளுக்கும் அருகே காடுகள் பின்னுக்குச் சென்றுவிட்டன.

ஆனால் நதியின் வளைவுக்கு அருகேயுள்ள குன்றில் உள்ளது என்ன? சரிவுக்கு மேலாக மஞ்சள் கைக்குட்டையைப் போர்த்தியது போலக் காணப்படுகிறது...

மனிதக் கைகளால் மாற்றம் செய்யப்பட்ட பூமியின் சிறு துண்டு அது. தங்கக் கதிர்களிடையே பெண்களின் வளைந்த முதுகுகளையும் நாம் காண்கிறோம். கதிர்களை அறுவடை செய்யும் போது அவர்களது அரிவாள்கள் சுணக்கமில்லாது இயங்கின.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னமேயே சுத்தியல் வேலை செய்ததை முதலில் நாம் பார்த்தோம். ஆனால் அரிவாள் ஒன்றை நாம் சந்திப்பது இதுதான் முதல் முறை. நாம் காணுகிற அரிவாள் போன்றதல்ல. ஏனெனில் அது சிக்கிமுக்கிக் கல்லாலும் மரத்தாலும் தயாரிக்கப்பட்டது. ஒரு மரக்கட்டையில் சிக்கிமுக்கிக் கல் வெட்டுக் கருவிகள் சேர்க்கப்பட்டன.

நாம் சந்தித்த வயலானது உலகத்திலேயே முதலானவைகளில் ஒன்று. காடாக வளர்ந்த பரந்த தோட்டப் பகுதிகளில் அத்தகைய மஞ்சள் கைக்குட்டைகள் இன்னும் சில இருக்கின்றன.

தானியத்தின் எல்லாப் புறங்களிலும் களைகள் அடைத்துக் கொண்டு நின்றன. ஏனென்றால் மக்கள் அவைகளை எதிர்த்துப் போராட இன்ன



மும் கற்றிருக்கவில்லை. மேலும், முடிவில் கூலக் கதிர்களே வெல்லும். ஒரு தங்கக் கடல் போல பூமியை மஞ்சள் நிற வயல்கள் மூடுகின்ற நேரம் வரும்.

தொலைவில் வெண்ணிற, வெயிற்பட்ட மேனியோடு, பல வண்ணப் புள்ளிகள் வாய்ந்த ஒரு சிறிய கூட்டத்தை நதிக்குப் பக்கமாக பசுமையான மேய்ச்சல் நிலத்தில் நாம் காண்கிறோம். சில வேளைகளில் பிரிந்தும், பின்னர் திரும்பவும் ஒன்று சேர்வதுமாக அவை நகர்ந்து கொண்டிருக்கின்றன.

சில உருவங்கள் மற்றவைகளை விடப் பெரிதாக இருக்கின்றன. ஆம், அது பசுக்களின், வெள்ளாடுகளின், செம்மறியாடுகளின் ஒரு மந்தை. மனித முயற்சியால் பெருக்கப்பட்டு மாற்றப்பட்ட இவை போன்ற விலங்குகள் இன்னமும் மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆனால் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டிய தங்களது காட்டு உறவினர்களைக் காட்டிலும் இவை மிக வேகமாகப் பல்கிப் பெருகுகின்றன.

இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகள் சென்ற பிறகு உலகத்தில் பசுக்களையும் காளைகளையும் விட மிகக் குறைவான காட்டு எருமைகளே மிஞ்சும்.

வயல்களும், மந்தையும் அங்கே இருக்குமானால், இதன் அருகே கட்டாயம் ஒரு குடியிருப்பு இருக்க வேண்டும். அது இங்கு தான், நதியின் உயரமான கரைதான். மற்றவைகளைப் போல இது வேட்டையாடுகின்ற கூடாரமையமல்ல. கம்புகளையும் கிளைகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட குடிசைகள் இங்கு இல்லை. மாறாக, மச்சடைப்புடன் கூடிய உண்மையான மரத்தாலான வீடுகளே இருக்கின்றன. சுவர்கள் களிமண்ணால் பூசப்பட்டிருக்கின்றன. நுழைவாயிலில் கைமரம் ஒன்று நீட்டிக் கொண்டிருக்கிறது. அது வெட்டியமைக்கப்பட்ட எருதின் தலையைத் தாங்கி நிற்கிறது. இந்த வீட்டைக் காக்கும் கடவுள் இது. குடியிருப்பு முழுமையும் உயரமான இடுமுள் வேலியாலும், மண் சுவர்களாலும் வளைந்து நிற்கிறது.

காற்றிலே புகை, எரு, புதுப்பால் இவற்றின் மணம் வீசியது.

வீட்டிற்கு அருகே குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள், அதே வேளை அண்மையிலுள்ள சேற்றில் பெண்பன்றிகளும், பன்றிக் குட்டிகளும் உருளுகின்றன. திறந்த கதவின் வழியாக அடுப்படியில் நெருப்பு எரிவதை நம்மால் காண முடியும். ஒரு கிழவி தட்டையான ஏராட்டிகளைச் சுட்டுக் கொண்டிருக்கிறாள். சமைக்கப்படாத பிசைந்த மாவை வெப்பமான சாம்பல் மீது வைத்து அதன் மீது மண்ணாலான பாத்திரத்தை மூடுகிறாள். இதுதான் அவளது சூட்டடுப்பு. வளைவான மரத்தட்டுக்களும் குவளைகளும் அவளுக்கு அருகே பெஞ்சின் மீது இருக்கின்றன.

கிராமத்தை விட்டு நீங்கி நாம் கீழே ஆற்றுக்குச் செல்லலாம். கரையை ஒட்டிய சதுப்பு நிலத்தில் நீர் நிறைந்த மரத்தைக் குடைந்து செய்த படகானது அசைந்தாடிக் கொண்டிருக்கிறது. நதிவரை நமது பாதையில் சென்று அது எங்கிருந்து ஓடுகிறதோ அந்த ஏரிக்குச் சென்றால், நாம் மற்றொரு கிராமத்தைப் பார்க்கிறோம். ஆனால்

இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இரண்டாவது கிராமம் ஒரு தீவை ஒத்திருக்கிறது.

முதலில், கூர்ங்கழிகள் ஏரியின் அடிவரை சென்றிருக்கின்றன. கூர்ங்கழிகளோடு கட்டைகள் பொருத்தப் பட்டிருந்தன. கட்டைகளின் அடுக்கில் பலகைத் தொகுதிகள் இணைக்கப்பட்டிருந்தன. நீளமான ஆடுகின்ற பாலங்கள் மரத்தீவையும் கரையையும் இணைக்கிறது. அதனருகே வலைகளும், மீன்பிடி கொக்கிகளும் காய்ந்து கிடக்கின்றன. ஏரி கட்டாயம் மீன் நிறைந்து இருக்க வேண்டும். ஆனால் இந்த கிராமத்தின் மக்கள் மீனவர்கள் மட்டுமல்ல. வீடுகளுக்கிடையே இங்கு மங்கும் வட்டவடிவமான கூர்மையான கூரைகளுடன் கூடிய கூலக் களஞ்சியங்களை நாம் காண்கிறோம். வைக்கோற் புரிமுறுக்கால் கூலக் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு அடுத்து மாட்டுத் தொழுவம் உள்ளன.

இந்தப் பண்டைய குடியிருப்பு மிகவும் எதார்த்தமானதாக நமது கற்பனையில் தோன்றினாலும், அது தூசியாக எப்போதோ மாறிவிட்டது. முன்னாளைய வீடுகளின் கூரை முகடுகளை நீர் மூடியிருக்கிறது. இத்தகைய குடியிருப்புக்களின் மீதமிச்சங்களை ஏரியின் அடிப் பகுதியில் நாம் எங்ஙனம் கண்டுபிடிக்க முடியும்? முற்றிலும் இயலாததாகவே தோன்றுகிறது. ஆனால் ஓர் ஏரி நூற்றாண்டு காலங்களாக தான் பாதுகாத்து வைத்திருக்கின்ற ரகசியத்தை நமக்குத் திறந்து காட்டுவதும் சில நேரங்களில் நிகழ்கிறது.

ஏரியின் கதை

1853ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் கடுமையான வறட்சி ஒன்று ஏற்பட்டது. சமவெளிகளில் இருந்த நதிகளெல்லாம் வறண்டு போயின. ஏரிகளிலிருந்த நீரெல்லாம் கரைகளிலிருந்து பின்வாங்கி வண்டல் படிந்த அடிப்பகுதிக்கு வந்துவிட்டன. த்ஸூரிக் ஏரியின் விளிம்பில் அமைந்திருந்த ஓபர்மைலென் நகரத்தில், வறட்சியைச் சாதகமாகக் கொண்டு ஏரியில் வீட்டு மனை பெறுவதில் வெற்றி கண்டார்கள்.

ஏரியின் மற்ற பகுதியினின்றும் நீருக்கு மேலாக உயரமாகியிருந்த வறண்ட நிலத்தின் துண்டுப் பகுதியின் குறுக்காக அவர்கள் ஓர் அணையைக் கட்ட வேண்டியிருந்தது என்பது இதன் பொருளாகும்.

வேலை தொடங்கிற்று. முன்னர் ஞாயிற்றுக் கிழமைகளில் இந்நகரத்து மக்கள் நீலம் மற்றும் பச்சைநிறப் படகுகளில் செல்லும் வழக்கமாக இருந்த இடத்தில், அணை கட்டுவதற்காக பாரத்திற்கு மேல் பாரமாக மண்ணைக் கொண்டு வந்த போது, வண்டியோட்டிகள் தங்களது குழுவைச் சேர்ந்த பாரவண்டிகளைப் பார்த்துக் கூச்சல் போட்டார்கள். இப்பொழுது எதிர்பாராத விதமாக வறண்ட நிலமாகிப் போய்விட்ட, ஏரியின் அடியில் ஓரிடத்தில் அவர்கள் அணைக்குத் தேவையான மண்ணை எடுத்தார்கள். பிறகு, திடீரென்று, மண்வாரிகளில் ஒன்று, சிதைவுக்குள்ளான கூர்ங்கழி ஒன்றைத் தட்டியது. அதன் அருகில் இரண்டாவது மூன்றாவது கூர்ங்கழிகளைக் கண்டுபிடித்தார்கள். முன்னதாக மக்கள் வெளிப்படையாகவே இங்கு வேலை செய்திருக்கிறார்கள். மண்வாரி எடுத்த ஒவ்வொரு புதிய மணலும் சிக்கி

முக்கிக் கற் கோடரிகளையும், மீன்பிடி கொக்கிகளையும், ஓட்டுச் சில்லு களையும் எடுத்து வந்தன. விரைவிலேயே தொல்பொருள் ஆய்வாளர் கள் இவ்விடம் சேர்ந்தனர். ஒவ்வொரு கூர்ங்கழியையும், ஏரியின் அடி யில் கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு பொருளையும் அவர்கள் ஆய்ந் தறிந்தார்கள், ஒரு காலத்தில் த்ஸூரிக் ஏரியின் கரைகளில், தாவடிக் கோல் மீது உயர்த்தப்பட்டு நின்ற கிராமத்தின் படத்தை அவர்கள் ஒரு தாளில் மறுவடிவமைத்து எழுதினார்கள்.

பலகை மீது கட்டப்பட்டு கூர்ங்கழிகள் மீது நிறுத்தப்பட்ட இது போன்ற கிராமங்களின் மீதமிச்சங்கள் ருஷ்யாவில் மாஸ்கோவுக்கு அருகில் கிளாஸ்மா ஆற்றிலும் மூரோம் அருகில் வெளெத்மா ஆற்றி லும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கு கண்டெடுக்கப்பட்ட அநேகப் பொருட்களில் மீன் எலும்புகள், எறிபடைகள், மீன் கொக்கிகள் ஆகியனவும் உண்டு...

தொல்பொருள் ஆய்வாளர்கள் அண்மையில் சுவிட்ஸர்லாந்தில் நோய்ஷதேல் ஏரியை ஆராய்ந்தார்கள். ஏரிப் படுகையின் மாதிரிகளை அவர்கள் எடுத்தார்கள். அது பல அடுக்குகளால் ஆனாது என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

சினையப்பத்தில் நிரம்பியுள்ளதை மேல் ஓட்டிலிருந்து சுலபமாகப் பிரிக்க முடிவது போல, இங்கும் ஓர் அடுக்குத் தொடங்கியவுடன் அடுத்தது முடிவது மிகத் தெளிவாக இருக்கிறது. கீழடுக்கில் மணலும் பிறகு வரும் அடுக்கில் மனிதக் குடியிருப்புகள் மற்றும் சாமான்களின் மீதமிச்சங்களுடன் கூடிய வண்டலும், பிறகு மறுபடியும் மணல் அடுக் கும் வருகின்றன. இந்த அடுக்கு அநேக முறை மாறிமாறி வருகிறது. ஓரிடத்தில் கட்டைக் கரியின் அடுக்கு இரண்டு மணல் அடுக்குகளுக்கு இடையே கனமாக இருந்தது.

இந்த அடுக்குகள் எல்லாம் எங்ஙனம் ஏற்பட்டிருக்க முடியும்?

மணலை மட்டிலுமே நீர் சேமித்து வைக்கும். கட்டைக் கரி எங்கிருந்து வந்தது?

ஒரு தீயிலிருந்துதான் இது வந்திருக்க முடியும்.

இந்த அடுக்குகளை கவனமாக ஆய்ந்த பிறகு தொல்பொருள் ஆய்வாளர்கள் ஏரியின் வரலாற்றை அறிந்தார்கள். ஒரு காலத்தில், மிக நீண்ட காலத்திற்கு முன்னால், மக்கள் ஏரிக்கு வந்தார்கள். கரை நெடுகிலும் ஒரு குடியிருப்பைக் கட்டினார்கள். பிறகு, அநேக ஆண்டுகள் கழித்து, ஏரியில் நீர் நிறைந்து கரைகளில் வெள்ளம் பாய்ந்தது.

தங்களது வெள்ளம் சூழ்ந்த கிராமத்தை மக்கள் கைவிட்டுவிட்டார் கள். கட்டமைப்புப் பொருட்களெல்லாம் நீரில் அழுகி கீழே விழுந்து விட்டன. ஒரு காலத்தில் தூக்கணாங்குருவிகள் தங்களது கூடுகளைக் கட்டிய கைமரங்களுக்கு அடியில் சிறிய மீன் கூட்டங்கள் இங்குமங்கு மாகத் திரிந்தன. கூரிய பற்களைக் கொண்ட பெருந்தீனி பைக் மீன்கள், ஒரு காலத்தில் குடியிருப்பின் வாசலாக இருந்த இடத்தில் மெதுவாக நீந்திச் சென்றன. அடுப்படிக்குப் பக்கத்தில் உள்ள கல்லிருக் கைக்குக் கீழே நண்டுகள் தங்களது உள்ளங்கைகளை அசைத்தன.

விரைவிலேயே மீதமிச்சங்கள் வண்டல் படுகைக்குக் கீழே புதையுண்டு மணலால் மூடப்பட்டன.

காலப்போக்கில் ஏரி மாறியது. கரைகளிலிருந்து நீர் பின்வாங்கிச் சென்றது. தரைப் பகுதி வெளித் தெரிந்தன. ஒரு காலத்தில் கிராமம் நின்ற மண்படுகை திரும்பவும் வெளித் தோன்றியது. ஆனால் கிராமத்தைத்தான் எங்குமே காண முடியவில்லை, ஏனெனில் மீதமிச்சங்கள் மணலில் ஆழமாகப் புதையுண்டு போய்விட்டன.

இப்பொழுது மக்கள் திரும்பவும் கரைக்கு வந்தார்கள். கோடரிகளின் ஒலி காற்றில் நிறைந்து நின்றது. மரத்துண்டுகள் மஞ்சள் தரையில் புள்ளி போட்டன. நீருக்கு அருகில் ஒன்றன் பின் ஒன்றாக திடமான புதிய வீடுகள் எழுந்தன.

மக்களுக்கும் ஏரிக்கும் இடையிலான போர், வெற்றி இப்பொழுது ஒரு புறத்திலும், இப்பொழுது மற்றொரு புறத்திலுமாகத் தொடர்ந்தது. மக்கள் தங்களது வீடுகளைக் கட்டினார்கள், அவற்றை ஏரி அழித்தது.

முடிவில், போரினால் மக்கள் களைப்புற்றார்கள். முன்னர் போல ஓரங்களில் இல்லாது, நீருக்கு மேலாகத் தங்களது வீடுகளைக் கட்டுவதென்று அவர்கள் முடிவு செய்தார்கள். உயரமான கழிகளை ஏரியின் அடியில் செலுத்தினார்கள். பலகையிணைப்புகளுக்கு இடையேயிருந்த ஓட்டைகளின் வழியாக கீழே நீர் சிதறியடிப்பதை அவர்களால் பார்க்க முடிந்தது. ஆனால் இப்பொழுது அது அவர்களைக் கவலையுறச் செய்யவில்லை. அது விரும்பிய அளவுக்கு உயரமாக எழுந்து கொள்ளலாம், ஆனால் பலகையிணைப்பை ஒருபோதும் நெருங்க முடியாது.

எனினும், ஏரி வாழ் மக்கள் மற்றொரு எதிரியை — தீயைப் — பெற்றிருந்தார்கள்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய குகை மனிதர்கள் நெருப்புக்கு அஞ்சவில்லை. ஏனெனில் அவர்கள் குகைகளின் கற் சுவர்கள் ஒருபோதும் நெருப்புப் பற்றுவதில்லை.

ஆனால், முதலாவது மரத்தாலான வீடுகள் கட்டப்பட்ட உடனேயே முதலாவது நெருப்பும் பிடித்தது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதனுக்கு பணிவோடு சேவை செய்துவந்த நெருப்பின் செந்தனல் இப்போது தனது பற்களை வெளிக் காட்டியது.

நோய்ஷதேல் ஏரியின் அடியில் காணப்பட்ட கட்டைக் கரியின் கனமான அடுக்கானது, தீ விபத்து ஏற்பட்ட ஓர் இடமாகும்.

எத்தனை பயங்கரமான பேரிடர் அது! தீ நாக்குகளினின்றும் தப்பிக்க, தங்களது குழந்தைகளைத் தங்களோடு அழுத்திப் பிடித்தபடி, மக்கள் நீருக்குள் குதித்தார்கள். தொழுவங்களில் கால்நடைகள் அலறின. ஆனால் விலங்குகளை வெளியே விட நேரமில்லை. மரத்தாலான கிராமம் சொக்கப்பனை போல, எல்லாத் திசைகளிலும் தீ நாக்குகளைப் பரப்பியபடி பயங்கரமாக எரிந்தது.

உண்மையிலேயே தீ பயங்கரமான ஒரு பேரிடராக இருந்தது.

ஆனால் கிராமத்தவர்களது வீடுகளை அழித்த அதே நெருப்பு நமது அருங்காட்சியகங்களுக்கு வேண்டிய விலைமதிக்க முடியாத பொ

ருட்களைப் பாதுகாத்தது. அவை மரத்தாலான அடுக்களை தட்டு முட்டுக் கலங்கள், மீன்பிடி வலைகள், மற்றும் தானியங்களும், தாவரத் தின் நடுத்தண்டுகளுமாகும்.

மிக விரைவாக எரியக் கூடிய பொருட்களை என்ன அற்புதம் பாதுகாத்தது?

இப்படித்தான் நடந்தது.

பல்வேறு பொருட்கள் தீப் பற்றிக் கொண்டவுடன், நீருக்குள்ளாக விழுந்தன. நீர் அவைகளைப் பாதுகாத்தது, அது நெருப்பை அணைத்து விட்டது. எந்தச் சேதமும் இல்லாமல் அவை அடியிலே மூழ்கிப் போயின. அங்கே அவைகளுக்காக ஒரு புதிய ஆபத்து எதிர்நோக்கி நின்றது: அவை நீரிலே அழுகிப் போயிருக்கக் கூடும். இரண்டாவது முறையும் அவைகளைக் காத்தது என்னவெனில், அவை எரிந்து போயிருந்ததேயாகும். கட்டைக் கரியின் மெல்லிய அடுக்கு அழுகிப் போவதினின்றும் அவற்றைத் தடுத்தது.

நெருப்பும் நீரும் தனித்தனியாகச் செயல்பட்டிருக்குமானால் இந்தப் பொருட்கள் அனைத்தையும் கட்டாயம் அழித்திருக்கக் கூடும். ஆனால் அவை கைகோர்த்து வேலை செய்ததனால், ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன் நெய்யப்பட்ட அழியத்தக்கதாகிய பட்டுத் துணி மாதிரி யை இன்றளவும் பாதுகாத்திருக்கின்றன.

முதல் துணி

முதல் துணியானது கையால் நெய்யப்பட்டது.

இன்றுங்கூட நெசவுக்காக எஸ்கிமோக்கள் தறியைப் பயன்படுத்து வதில்லை, அவர்கள் தங்களது துணியைக் கைகளிலே நெய்கிறார்கள். நூல்கள் நீளவாக்கில் செல்லும்மாறு (நெசவிழையை) ஒரு சட்டத்தில் இணைக்கிறார்கள், பிறகு ஓடக் கட்டையைப் பயன்படுத்தாமல் நூழை (ஊடிழை) குறுக்கு வாட்டத்தில் கையாலேயே செலுத்துகிறார்கள். இன்னும், தற்காலத்திய தறி இந்த மிகச் சிறிய மரச்சட்டத்தில் தான் தனது தொடக்கத்தைக் கொண்டிருந்தது.

ஏரியின் அடியில் கண்டுபிடிக்கப்பட்ட கருகியும் கறுத்தும் போன கந்தல் மனிதனது வாழ்க்கையில் மிக முக்கியமான நிகழ்ச்சியை நமக்குக் கூறுகிறது. எப்பொழுதுமே விலங்கின் தோல்களையே அணிந்து வந்த மனிதன், தானே வயல்களில் விதைத்து அறுவடை செய்த வற்றினால் தயாரிக்கப்பட்டிருந்த நார்ப்பட்டை இப்பொழுது தனக் காகத் தயாரித்தான்.

துணி கண்டுபிடிக்கப்படுவதற்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே பிறந்திருந்த ஊசி, வாழ்க்கையில் தனது சரியான இடத்தைப் பெற்றது. விலங்குகளின் தோல்களன்றி தனித்தனித் துணிகளை ஒன் றாகத் தைக்கத் தொடங்கியது.

அழகிய தனது நீல மலர்களுடன் மென்னயச் சணல் தரும் செடி வயல்கள் என்பது வீட்டுப் பெண்களுக்கு மிகுந்த கவலையையும், அக்கறையும் கொண்டது என்பது பொருளாயிற்று.

அறுவடையினால் அவர்களது தோள்கள் வலியெடுத்தன. இன்னும் மென் சணற் செடியை வெட்டியிருக்க அதுதான் நேரம். முதலில்

அவர்கள் ஒவ்வொரு செடியையும் வேரோடு சேர்த்துப் பிடுங்க வேண்டியிருந்தது. பிறகு சணலைக் காயவைத்து சுத்தம் செய்து மீண்டும் காயவைக்க வேண்டியதாயிற்று. ஆனால் இது மட்டும் போதாது. காய்ந்த சணலை மீண்டும் அடித்துத் துவைத்து நொய் தாக்க வேண்டியிருந்தது. இப்போது கிராமத்துக் குழந்தைகளின் செம்மை செய்யப்பட்ட தலைமயிர் போல சணல் தயாராகிவிட்டது. பிறகு நூற்புக்கதிர்கள் சணற் கூளத்தை நூலாகச் சுற்றத் தொடங்கின. இன்னும் அது நூலாக மாற்றப்பட்ட பிறகே அதை நெய்ய முடிந்தது.

துணி தயாரிப்பதற்கு ஏராளமான வேலைகள் பிடித்தன. ஆனால் அவர்களது எல்லாச் சிரமங்களையும் காட்டுவது போல அழகிய கைக்குட்டைகளையும், ஓர இழைவரிசைகளும், கரைக் கட்டுகளும் கொண்ட குட்டைப் பாவாடைகளையும் பெண்கள் கொண்டிருந்தனர்.

முதலாவது சுரங்கத் தொழிலாளர்களும் உருக்குத் தயாரிப்பாளர்களும்

தற்காலத்தில் எந்தக் குடும்ப அமைப்பும் இயற்கையில் கண்டுபிடிக்க முடியாத, செயற்கையாகச் செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டிருக்கின்றன.

இயற்கையில் செங்கலாகவோ பீங்கானாகவோ, வார்ப்பிரும்பாகவோ காகிதமாகவோ கிடைப்பதில்லை. பீங்கானையும், வார்ப்பிரும்பையும் செய்வதற்கு, எந்தவித அடையாளமுமின்றி முற்றாக அவற்றை மாற்றுவதற்கு, இயற்கையில் கிடைக்கக் கூடிய பொருட்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. வார்ப்பிரும்பு உருக்கிப் பிரிக்கப்பட்ட இரும்புத் தாதுவைப் போலவா இருக்கிறது? ஒளி ஊடுருவும் படியான மெல்லிய பளிங்கு குவளையைப் பார்த்து, அது தயாரிக்கப் பயன்பட்ட களிமண்ணை நம்மால் கற்பனை செய்ய முடியுமா?

திண்காரை, பளிங்கு நிறத்தாள், பிளாஸ்டிக், செயற்கைப் பட்டு, செயற்கை ரப்பர் ஆகியன குறித்து என்னவாயிற்று? மலைகளில் திண்காரை செங்குத்துப் பாறையை நாம் எப்போதேனும் காண முடியுமா? மரத்திலிருந்து தயாரிக்கக் கூடிய பட்டில் பட்டுப்புழு எங்கே இருக்கிறது?

பொருட்களை மேலாட்சி செய்வதன் மூலம், மனிதன் மேன்மேலும் இயற்கையின் ரகசியங்களைக் கண்டுபிடித்தான். அவன் ஒரு கல்லை மற்றொரு கல்லால் கூர்மையாக்குவதற்குத் தொடங்கினான். இன்று அவன் தன்னால் பார்க்க முடியாத மிக நுண்ணிய அணுத்துகள்களை — மூலக்கூறுகளைக் கையாளுகின்றான்.

பருப்பொருள் விஞ்ஞானமாகிய வேதியலுக்கு நீண்ட காலத்திற்கு முன்பாகவே இந்த நடைமுறை தோன்றியது. துழாவித் தேடியபடி, என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமலேயே, பருப்பொருளை மாற்றுவதற்கு மனிதன் கற்றுக் கொண்டான்.

முதலாவது குயவர்கள் தங்களது களிமண் பானைகளை நெருப்பிலிட்டபோது, அவர்களை அறியாமலேயே பருப்பொருளை மேலாட்சி செய்யத் தொடங்கினான். இது இலகுவான பணியாக இருக்கவில்லை. ஒரு கல்லை மாற்றுவது போல, நமது கைகளில் இருக்கக்

கூடிய மிக துண்ணிய பருப்பொருள் அணுக்கூறுகளை நாம் மாற்றவோ, மறுவடிவமைக்கவோ இயலாது. தங்களது கைகளது வலிமைக்கும் மேலாக வேறு ஏதேனும் சக்தி, பருப்பொருளை மாற்றும் ஆற்றல் படைத்த ஒரு சக்தி இங்கு அவர்களுக்குத் தேவைப்பட்டது.

நெருப்பைத் தனது உதவியாளாக இருக்கும்படி மனிதன் வைத்துக் கொண்ட போது, இந்தச் சக்தியை அவன் கண்டான். நெருப்பு களிமண்ணைச் சுட்டது, மாவை ரொட்டியாக மாற்றியது. நெருப்பு தாமிரத்தை உருக்கியது.

ஏரிகளின் அடிப்பரப்பில் சிக்கிமுக்கிக் கற்கருவிகளுக்கு அருகில் முதலாவது செம்புக் கருவிகளையும் நாம் காண்கிறோம்.

நூறு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக தனது கற்கருவிகளைத் தயாரித்துக் கொண்டுவந்திருந்த மனிதன் எங்ஙனம் திடீரென்று அவைகளை உலோகத்தில் தயாரிக்கக் கற்றுக் கொண்டான்? தனக்குத் தேவைப்பட்ட உலோகத்தை அவனால் எங்கிருந்து பெற முடிந்தது?

வயல்கள் மற்றும் காடுகள் வழியாக நாம் நடந்து செல்கின்றபோது தூய்மையான செம்பை மொத்தமாக நாம் ஒருபோதும் பார்த்ததில்லை. இப்பொழுதெல்லாம் இயலுருவான செம்பு என்பது மிக அரிதான ஒன்றாகும். ஆனால் இது போன்ற நிலைமை எப்பொழுதுமே இருந்ததில்லை. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இப்போது இருப்பதைக் காட்டிலும் மிக அதிகளவு செம்பு பூமியில் இருந்தது. உண்மையில் அது காலடியில் தான் கிடந்தது. ஆனால் மக்கள் அது பற்றி அக்கறை காட்டவில்லை, ஏனெனில் தங்களது கருவிகளைத் தயாரித்துக் கொள்ள சிக்கிமுக்கிக் கல்லைப் பெற்றிருந்தார்கள்.



சிக்கிமுக்கிக் கற்களுக்குத் தட்டுப்பாட்டை அவர்கள் உணரத் தொடங்குகின்ற வரை இந்தச் செம்பை அவர்கள் அறிந்து கொள்ளவேயில்லை. இந்தத் தட்டுப்பாட்டிற்கு அவர்களே பெரிதும் காரணமாக இருந்தார்கள். ஏனெனில் சிக்கிமுக்கிக் கல்லை அவர்கள் ஒருபோதும் அரிதாகப் பயன்படுத்தியதில்லை. ஒரு புதிய கருவியை அவர்கள் தயாரித்த போது, கரணை எனப்படும் ஒரு பெரிய சிக்கிமுக்கிக் கற் பாளத்தை, ஒரு சிறிய கருவியைத் தவிர எதுவும் மிஞ்சாத நிலைவரை படிப்படியாகத் தூளாக உடைத்துக் கொண்டே போவார்கள். குன்றுபோல் குவிந்த சிக்கிமுக்கிக் கற் துண்டுகளும் சிராய்களும் கருவிகள் செய்வதற்குப் பயனற்றவையாய் அவர்களது குடியிருப்புக்களைச் சுற்றிலும் குவியல்களாகக் கிடந்தன. இன்றுங்கூட தச்சனது பணிமனையில் எங்கு நோக்கினும் மரச் சீவல் சுருள் குவிந்துள்ளதை நம்மால் கூற முடியும்.

நூறாயிரக் கணக்கான ஆண்டு காலப் போக்கில் சிக்கிமுக்கிக் கல்லின் பெரும் சேமிப்பு சுருங்கிப் போயிற்று. அநேக நாடுகளில் சிக்கிமுக்கிக் கல் பஞ்சம் ஏற்பட்டது. இது மிகப் பெரும் பேரிடராக இருந்தது. நமது தொழிற்சாலைகளுக்கும், எந்திர சாதனங்களுக்கும் தேவையான இரும்பு இல்லாது போனால் என்ன நடக்கும் என்று சற்றுக் கற்பனை செய்து பார்ப்போம். இரும்புத் தாதுவைத் தேடும்

தங்களது முயற்சியில் பூமிக்குள்ளாக மேன்மேலும் ஆழமாக சுரங்கந் தோண்டுவோர் தோண்டவேண்டி வரும். ஏனெனில் மேற்பரப்பை ஒட்டிய இருப்புகள் அனைத்தும் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு விட்டன.

சரியாக இது போலத்தான் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மக்கள் செய்ய வேண்டியிருந்தது. உலகத்தின் முதலாவது சுரங்கங்களைத் தோண்டத் தொடங்கினார்கள்.

சில வேளைகளில் நாம் இத்தகைய பண்டைய எறிபடைகளைச் சீமைச் சுண்ணாம்புப் படிவுகளுக்கிடையே காண்கிறோம். ஏனெனில் சிக்கிமுக்கிக் கல்லும் சீமைச் சுண்ணாம்பும் அடுத்தடுத்துக் காணப்படுகின்ற நண்பர்கள்.

நிலப்பரப்பிற்குக் கீழே முப்பது அல்லது நாற்பது அடிக்குச் சென்று வேலை செய்வது என்பது அந்தக் காலத்தில் மிகவும் அச்சந்தருவதாக இருந்தது. சுரங்கத்திற்குக் கீழே மக்கள் ஒரு கயிறு அல்லது வெட்டுத் தடங் கொண்ட கழி மூலமாக இறங்கினார்கள். கீழே இருளாகவும் புகையாகவும் இருந்தது. ஒரு மரத் துண்டு எரிகின்ற வெளிச்சத்திலோ, சிறிய எண்ணெய் விளக்கு எரிகின்ற வெளிச்சத்திலோ ஆண்கள் வேலை செய்தார்கள். காற்றுப் போக்கும், பலமான மர வேலைகளும் உள்ளடக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்று சுரங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஆனால் அந்நாட்களில் சுரங்கத்தின் சுவர்களையும் கூரையையும் வலிமையூட்டுவது பற்றி எதையும் யாரும் அறிந்திருக்கவில்லை. பெரும் பாறைத் தொகுதிகள் அடிக்கடி அப்படியே பெயர்ந்து விழுந்து கீழே இருக்கக் கூடிய சுரங்க வேலையாட்களைப் புதைத்து விடும். பண்டைய சிக்கிமுக்கிக் கற் சுரங்கங்களில் பெரும் சீமைச் சுண்ணாம்புத் தொகுதிகளில் புதையுண்ட சுரங்க வேலையாட்களின் நொறுங்கிய எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த எலும்புக் கூடுகளுக்கு அருகே அவர்களது கருவிகள் கிடக்கின்றன — மான் கொம்புகளால் ஆன குத்துக் கோடரிகள்.

இதே போன்ற இரு எலும்புக் கூடுகள் ஒரே சுரங்கத்தில் கிடைத்துள்ளன. ஒன்று வளர்ந்த மனிதனுடையது மற்றது ஒரு குழந்தையினுடையது. ஒரு தந்தை பெரும்பாலும் தனது மகனைத் தன்னுடன் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் திரும்பி வராமலே போனார்கள்.

ஒவ்வொரு நூற்றாண்டும் செல்லச்செல்ல சிக்கிமுக்கிக்கல் குறைந்து கொண்டே போயிற்று. சுரங்கம் தோண்டுவதற்கே மிகமிகக் கடினமாகியது. எனினும், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்குச் சிக்கிமுக்கிக் கல் தேவைப்பட்டது. அதிலிருந்து தனது கோடரிகளையும், கத்திகளையும் மண் கிளறிகளையும் அவன் தயாரித்தான்.

நம்பிக்கையிழந்த நிலையில் சிக்கிமுக்கிக் கல்லுக்கு மாற்றை அவன் கண்டுபிடிக்க வேண்டியவனான்.

இப்போது தான் செம்பு அவனது உதவிக்கு வந்து நின்றது. மிக அண்மையில் அதனை அவன் காணத் தொடங்கினான்: இது என்ன பச்சைக் கல், இதனை எதற்காவது பயன்படுத்த முடியுமா?

ஒரு துண்டு சுத்தமான செம்பை அவர்கள் பொறுக்கி எடுத்த போது, அதனைச் சுத்தியல் கொண்டு அடிக்கத் தொடங்கினார்கள். ஏனெனில் அவர்கள் செம்பை ஒரு கல் என்று நினைத்து, சிக்கிமுக்கிக் கல்லைச் செய்தது போல வேலை செய்ய முயற்சித்தார்கள். சிக்கி முக்கிக் கல் சுத்தியலின் அடிகள் செம்புப் பாளத்தை இறுக்கி அதனது தோற்றத்தையே மாற்றியது. ஆனால் சுத்தியலில் அடிப்பதற்கு ஒரு வழி முறை இருந்தது. அடிகள் மிகவும் பலமாக இருந்தால், செம்பு எளிதில் நொறுங்கத் தக்கதாகவும் முறிவுறத் தக்கதாகவும் மாறிவிடும்.

இப்படியாகத் தான் மனிதன் முதலாவதாக உலோகத்தை அடித்து உருவாக்க—வேலை செய்யத்—தொடங்கினான். உண்மை, இது இன்னமும் குளிர்ந்த நிலையிலேயே இருந்தது. ஆனால் வெப்பமாக அடித்து உருவாக்குவதற்கு அது மிகவும் தொலைவில் இல்லை.

சில நேரங்களில் சுத்தமான செம்போ, செம்புக் கனியமோ நெருப்பில் விழுந்து விடுவது உண்டு. அல்லது ஒருவேளை தனது களிமண் பானைகளைச் சுட்டது போல இதையும் சுடுவதற்கு மனிதன் முயன்றான். நெருப்பு அணைந்த போது, அங்கே, சாம்பலுக்கும் அடுப்படியாய் இருந்த கற்களுக்கும் இடையே செம்பின் உருகிய குமிழ் இருந்தது.

தாங்கள் செய்திருந்த 'அதிசயத்தை' மக்கள் வியப்புடன் கூர்ந்து நோக்கினார்கள். ஆனால், 'நெருப்பின் ஆவி' தான் கரும்பச்சை நிறமான கல்லை பளிச்சிடும் சிவப்பு நிறச் செம்பாக மாற்றியது என்று அவர்கள் நம்பினார்கள். அதைக் கொண்டு அவர்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருந்தார்கள்.

செம்புக் குமிழானது துண்டுகளாக உடைக்கப்பட்டது. அவை ஒவ்வொன்றும் பிறகு சிக்கிமுக்கிக் கல் சுத்தியலால் கோடரித் தலைகளாகவும், குத்துக் கோடரிகளாகவும், பட்டாக்கத்திகளாகவும் செய்யப்பட்டன.

இவ்வாறாக மனிதன் ஒரு கடினமான, ஒளி மிக்க உலோகத்தை அதிசய சேமிப்பறையில் கண்டுபிடித்தான். ஒரு துண்டு இயற்கை உலோகக் கலவையை நெருப்புக்குள் அவன் எறிந்தான், அது அவனிடம் செம்பாக மாறித் திரும்பியது.

இந்த அதிசயம் மனித உழைப்பால் கொண்டுவரப்பட்டது.

ருஷ்யாவில் முதல் உழவர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில், வி. ஹ்வொய்கோ என்ற ருஷ்ய தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கீவ் பிராந்தியத்தில் திரிபோல்யே என்ற கிராமத்திற்கு அருகே வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேளாண்மைக் குடியிருப்பு ஒன்றின் மீந்த பகுதிகளைக் கண்டுபிடித்தார்.

பிறகு, இதே போல அநேக கிராமங்களின் மீந்தபகுதிகள் ருஷ்யாவின் தென்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன.

சோவியத் காலங்களில் தி. பஸ்ஸெக் மற்றும் பி. பொகயேவ்ஸ்கி இந்த ஆய்வைத் தொடர்ந்தார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்

னால் உழவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நாம் கற்பனை செய்து பார்ப்பதற்கு அவர்களது பணிகள் உதவின..

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய கிராமமானது உயரமான ஒரு வேலியால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. மையப் பகுதியில் சுற்றி வளைக்கப்பட்ட ஒரு சதுக்கம் இருந்தது. அச்சதுக்கத்தைச் சுற்றிலும் கூர்மையான உச்சிகளுடன் கூடிய மரத்தாலான வீடுகள் இருந்தன.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட களிமண் மாதிரியால் ஆன ஒரு சிறிய வீடு கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. அது ஒரு விளையாட்டுப் பொருள் போலவே இல்லை. பெரும்பாலும் மந்திரச் சடங்குகளில் பயன்படும் ஒரு பொருளாக இருந்திருக்கும்.

ஒருவேளை, மிகச் சிறிய பெண் உருவச் சிலைகளை உட்புறம் கொண்ட இந்தச் சிறிய வீடு தீய சக்திகளினின்றும் ஆபத்துக்களினின் றும் உண்மையான பெரிய வீட்டைப் பாதுகாக்கும் என மக்கள் நினைத்தார்கள்.

இச்சிறிய மாதிரி வீட்டின் வாசலின் வலப் புறம் ஒரு சூட்டடுப் பும், இடப் புறத்தில் உயரமான மேடையில் பல்வேறு அளவிலான பெரிய பாத்திரங்களும் இருந்தன. மேடைக்கு அருகில் மாவு அரைப் பான் ஒன்றிற்கு மேலாக ஒரு பெண் குனிந்திருப்பது போன்ற உரு வம் இருக்கிறது. நுழைவாசலுக்கு எதிர்புறம் உள்ள சன்னலில் ஒரு பலிபீடம் இருக்கிறது. சூட்டடுப்புக்கு அருகில், அதனைப் பார்த்துக் கொள்ளக் கூடிய மற்றொரு பெண்ணின் உருவமும் இருக்கிறது.

இது போன்ற ஒரு வீடு, ஒரு வீடு என்று அழைப்பதற்கு எல்லாவித உரிமையும் பெற்றிருந்தது. அதனது கூரை கைமரங்களால் நிறுத்தப் பட்டிருந்தது. கணப்படுப்பும், அதன் கணப்படுப்பு படுக்கையும் ஒரு ருஷ்ய மாதிரி கணப்படுப்பாக இருந்தது. நன்கு சுடப்பட்ட களிமண் ணால் தரை உருவாக்கப்பட்டிருந்தது. வீடு கட்டப்பட்ட பொழுதே தளத்தின் மீது நெருப்புவைத்து சூடாக்கினார்கள். களிமண் கொண்டு பூசப்பட்ட சுவர்கள் உருவரைகளைக் கொண்டிருந்தன.

ஒவ்வொரு வீடும் தடுப்புச் சுவர்களால் ஆன இது போன்ற சில அறைகளைக் கொண்டிருந்தன.

எனினும், கிராமங்களில் மிகப் பெரிய மறைகுழிகளில் மனைகளும் இருந்தன.

இதற்குள்ளாக திறமைவாய்ந்த குயவர்கள், கொல்லர்கள், செம்பு வேலையாளர் ஏற்பட்டிருந்தனர்.

மூன்று அடி உயரமுள்ள பாத்திரங்களை உருவாக்கவும், அவற்றை வர்ண உருவரைகளால் அலங்கரிக்கவும் குயவர்கள் கற்றுக் கொண்டிருந் தார்கள். பெரிய கண்கள் கொண்ட மனித முகம், ஒரு விலங்கு அல் லது சூரியன் இவற்றைப் போன்றிருக்கக் கூடிய நாடாக்கள், சுருள் வட்டங்கள் மற்றும் வேடிக்கை விசித்திரமான சுருள்களுடன் கூடிய திருக்கு மறுக்கான உருவரைகள் கொண்ட இளஞ்சிவப்பு நிறத்தாலான பாத்திரங்களும் தொல்பொருள் ஆய்வில் கிடைத்துள்ளன.

பூமியில் பாதுகாக்கப்பட்ட பொருட்களை நாம் ஆய்ந்து பார்க் கையில் சிக்கிமுக்கிக் கல்லிலிருந்து செம்புக் கற்களுக்கு மாற்றம் ஏற்

பட்டுக் கொண்டிருந்ததை நம்மால் பார்க்க முடிகிறது.

மிகப் பண்டைக்காலக் கருவிகள் அனைத்தும்—வெட்டுக் கருவிகள், செதுக்குக் கருவிகள் மற்றும் அம்புத் தலைகள்—சிக்கிமுக்கிக் கற்களாலும் எலும்பாலுமே செய்யப்பட்டிருந்தன.

மண்கிளறிகள் சிக்கிமுக்கிக் கற்களாலோ, மானின் கொம்பாலோ செய்யப்பட்டிருந்தன. ஒரு மரக் கைப்பிடியை இணைப்பதற்காக மண் கிளறியில் ஓர் ஓட்டை போடப்பட்டிருந்தது.

பசு மாட்டின் தோள்பட்டை எலும்பாலோ, மரத்தாலோ செய்யப் பட்ட பயிர் அரிவாளால் தானியம் அறுவடை செய்யப்பட்டது. மரத் தாலான ஒரு பயிர் அரிவாளால் தண்டுகளின் குறுக்காக வெட்ட முடியாததால் சிக்கிமுக்கிக் கல் பற்கள் அதனோடு இணைக்கப் பட்டிருந்தன.

இதே போன்ற கிராமங்களில் முதலாவது செம்புக் கருவிகளை—அகன்ற தகடுகளைக் கொண்ட கோடரிகளைச்—செய்வதற்கான அச்சுக்களை நாம் காண்கிறோம்.

எந்த மாதிரியான புதிரை தானியங்கள் பயிர் செய்யப்பட்டன என்பதையும் நம்மால் அறிய முடிகிறது. கொலமிய்ஷினோவில் உள்ள கிராமத்து வீடுகளில் சுவர்களைப் பூசுவதற்குப் பயன்பட்ட களிமண்ணில் கோதுமை, பார்லி, ரை மற்றும் சாமை தானியங்களைத் தொல் பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மனித உழைப்பின் நாட்காட்டி

நாம் காலத்தை ஆண்டுகளாகவும், நூற்றாண்டுகளாகவும், ஆயிரமாண்டுகளாகவும் கணக்கிட்டு வருகிறோம். ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனின் வாழ்க்கையைப் படிக்கக் கூடியவர்கள் ஒரு வித்தியாசமான நாட்காட்டியை, காலத்தை அளக்க ஒரு வித்தியாசமான அளவை, பயன்படுத்த வேண்டியிருந்தது. ''பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்'' என்பதற்கு பதிலாக நாம் ''பழைய கல் யுகத்தில்'', ''புதிய கல் யுகத்தில்'', ''செப்பு யுகத்தில்'', ''வெண்கல யுகத்தில்'' என்கிறோம். இது ஓர் ஆண்டு நாட்காட்டியல்ல, ஆனால் மனித உழைப்பின் நாட்காட்டியாகும். என்ன மாதிரியான வளர்ச்சியை, எந்தப் பாதையில் மனித இனம் கடந்து வந்திருக்கிறது என்பதை இது நமக்குத் துல்லியமாகக் கூறுகிறது.

ஒரு நாட்காட்டி என்பது சிறியதும் அல்லது பெரியதுமான கால அளவுகளைக் கொண்டது: ஒரு நூற்றாண்டு, ஆண்டு, மாதம், நாள், மணி.

மனித உழைப்பின் நாட்காட்டியும் கூட தனக்கென பெரியதும் சிறியதுமான அளவுகளைக் கொண்டிருக்கிறது. ''கல் யுகம், கொத்தப் பட்ட கருவிகளின் காலம்'' அல்லது ''கல் யுகம், பளபளப்பாக்கப் பட்ட கருவிகளின் காலம்'' என்று நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

நமது கதை இப்போது நம்மை மனித இனத்தின் வரலாற்றுக் காலத்தில், எப்போது சிக்கிமுக்கிக் கற் கருவிகளை உலோகக் கருவிகள் இடம் பெயர்த்ததோ, எப்போது விவசாயமும் கால்நடை வளர்ப்பும்

முதலாவதாகத் தோன்றியதோ அப்போது அழைத்துச் செல்கிறது. இந்த வேலைப் பங்கீடு பொருள் மாற்றங்களைக் கொண்டு வந்தது. ஓரிடத்தில் செம்புக் கோடரிகள் செய்யப்பட்டிருந்தால், அவை படிப் படியாக மற்ற இனக்குழுக்களுக்கும் செல்லத் தொடங்கின.

மரத்தைக் குடைந்து செய்யப்பட்ட படகுகளில் மக்கள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொன்றுக்கு ஆறுகளில் சென்று தானியத்தைத் தோலுக்காகவும், துணியை மட்பாண்டங்களுக்காகவும் மாற்றிக் கொண்டார்கள். ஓர் இனக்குழுவிடம் ஏராளமான செம்பு இருந் திருக்கும், அதே வேளை மற்றொரு குழு தனது திறமைவாய்ந்த குய வர்களுக்குப் பெயர் பெற்றிருந்தது. ஏரியில் எங்காவது கூர்ங்கழி மீது அமைத்த கிராமத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் தங்களிடமிருந்த பண்டங்களை மாற்றிக் கொள்வதற்காக தங்களது அண்டைவீட்டார் களைச் சந்திக்கக் கூடியிருப்பார்கள். தங்களது அநுபவத்தாலும், தங் களது புதிய வேலை முறைகளாலும் உருவாக்கி இருந்த பொருட்களை மாற்றிக் கொண்டார்கள்.



இங்கு மக்கள் அடையாள மொழியைப் பயன்படுத்த வேண்டி வந்தது. ஏனெனில் ஒவ்வொரு இனக்குழுவும் தனக்கென சொந்த மான பேச்சு மொழியைக் கொண்டிருந்தன. எனினும், பார்வையாளர் கள் சென்ற பிறகு, அவர்கள் மற்றவர்கள் தயாரித்த பொருட்களை மட்டும் தங்களோடு எடுத்துச் செல்வதில்லை, மாறாக இங்கு தாங்கள் கற்றுக் கொண்ட விநோதமான புதிய சொற்களையும் எடுத்துச் செல்வார்கள். இந்த முறையில் இனக்குழுவின் பேச்சு வழக்குகள் குறுக்கிட்டு ஒன்றிணைந்தன. அதே நேரத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னாலுள்ள அருத்தம் புதிய சொல்லோடு பயன்படுத்தப்பட்டது. அண்டைய இனக்குழுக்களின் தெய்வங்கள் இவர்களுடைய சொந்தக் கடவுளர்களோடு சேர்ந்து இடம் பிடித்தார்கள். அங்கு தோற்றுவிக்கப் பட்ட அநேக நம்பிக்கைகள் எதிர்காலத்தில் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானவையாக மாறியிருந்தன.

கடவுளர்கள் விரைந்து பயணம் செய்தனர். புதிய இடங்களில் அவர்களுக்குப் புதிய பெயர்கள் கொடுக்கப்பட்டன, ஆனால் அவர்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளக் கூடியவர்களாகவே இருக்கின்ற னர்.

பண்டைக்கால மக்களது சமயங்கள் குறித்து நாம் ஆராய்கின்ற போது பாபிலோனிய தம்முஸ், எகிப்திய ஓசிரிஸ் மற்றும் கிரேக்க அடோனிஸ் ஆகிய ஒரே ஒரு கடவுளையே நாம் அடையாளம் கண்டு கொள்கிறோம். ஒரே ஒரு பண்டைய விவசாயக் கடவுள்தான் இளவேனிற் காலத்தில் இறந்து போய் திரும்பவும் வசந்தத்தில் கீழ் உலகிலிருந்து கொண்டு வரப்படுகிறது.

சில வேளைகளில் கடவுளின் பயணத்தை நம்மால் ஒரு வரைபடத் தில் கூட வரைய முடியும்.

எடுத்துக்காட்டாக, அடோனிஸ் செமிட்டியர்கள் வாழ்ந்த சிரியா விலிருந்து கிரீசுக்கு வந்தவர். அவருடைய பெயர் இதற்குச் சான்றாக அமைகிறது. ஏனெனில் செமிட்டியர்களின் மொழியில் அடோனிஸ் என் பது எசமானன் என்று பொருள்படும். இது ஒரு வார்த்தை என்பது

12–563

கிரேக்கர்களுக்குத் தெரியாது. அதை அவர்கள் ஓர் இடுகுறிப் பெயராக ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த முறையில் பொருள்கள், வார்த்தைகள் மற்றும் சமயங்கள் மாற்றிக் கொள்ளப்பட்டன.

இந்த மாற்றம் எப்பொழுதுமே அமைதியாக நடைபெற்றது என்று கூறுவது தவறானதாகவே இருக்க முடியும். செம்பு, துணி மற்றும் தானியம் போன்று மற்றவர்கள் உற்பத்தி செய்திருந்ததை 'பார்வை யாளர்கள்' கட்டாயப்படுத்தி பெறக் கூடியதாக இருந்ததால் அவ் வாறு செய்வதற்கு அவர்கள் தயங்கவில்லை. இந்த முறையில் ஏற் பட்ட பண்டமாற்றங்கள் பெரும்பாலும் நியாயமற்றதாகவே இருந்தால், ஒரு வழிப்பறியாகவே மாறியிருந்தது. பார்வையாளர்களும் விருந் தளித்தவர்களும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டனர். விவாதத் தில் வல்லமை மிக்கவனே வென்றான். ஓர் அந்நியனைக் களவாடு வதிலோ, கொல்வதிலோ எந்தத் தவறுகளும் இல்லை.

ஆகவே ஒவ்வொரு கிராமமும் ஒரு கோட்டையைப் போலத் தோற்றமளிக்கத் தொடங்கியதில் வியப்பில்லை. எதிர்பாராத விதமாக தேவையற்ற பார்வையாளர்கள் நுழைவதைத் தடுக்க கிராமத்தைச் சுற்றி மண் கோட்டை எழுப்பப்பட்டு, இடு முள் வேலி இடப்பட்டது.

மற்ற இனக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களிடம் மக்கள் மிகக் குறைந்த அளவு நம்பிக்கையே கொண்டிருந்தனர். ஒவ்வொரு இனக் குழுவும் தங்களையே 'மக்கள்' என்றும், மற்ற இனக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களை மக்கள் என்றும் கருதவில்லை. தங்களைத் தாங்களே 'சூரியனின் குழந்தைகள்' அல்லது 'வானத்து மக்கள்' என்று அழைத்துக் கொண்ட வேளையில், பிற இனக்குழுவினர்களுக்கு கேவல மான பட்டப்பெயர்களைக் கொடுத்தார்கள். சில வேளைகளில் அத் தகைய மக்களை அவர்களது பெயர்களால் அறிந்து கொள்கின்ற வரை இந்தப் பெயர்களே நிலையான பெயர்களாகி விட்டன.



மற்றைய இனக் குழுக்களின் மீதான வெறுப்பைப் பற்றி வரலாற் றாசிரியர்களாலும், கண்டுபிடிப்பாளர்களாலும் எழுதப்பட்ட நூல்களை நாம் படித்த போது நமது காலத்திலுங்கூட அடுத்த மக்கள் மீது இனவாதிகள் மனமார வெறுப்பை வளர்த்து வருவது நமது மனத்தில் படுகிறது. அவர்கள் 'மக்கள்' என்று தங்களை மட்டுமே கருதுகிறார் கள், அதே வேளையில் மற்றவர்கள், அவர்களது கருத்துப்படி மக்களே யல்ல, ஆனால் தரம் தாழ்ந்த ஏதோ ஒன்று போலக் கருதுகிறார் கள்.

ஓர் உயர்ந்த இனம் ஒன்று என்பது போல உலகத்தில் எதுவுமே இல்லை என வரலாறு நமக்குக் கற்பித்திருக்கிறது. மிகவும் முன்னேறிய மக்களும் இருக்கிறார்கள். பண்பாட்டு நிலைக்குக் குறைந்த மக்களும் இருக்கிறார்கள். மனித உழைப்பின் நாட்காட்டிப்படி, சமகாலத்திய மக்கள் எல்லாருமே ஒரே வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னால், ருஷ்யாவில் எல்லா மக்களுமே ஒரே மாதிரியான முன்னேற்றத்தைப் பெற்றிருக்கவில்லை. சிலர் எந்திரக் காலத்திலே வாழ்ந்து கொண்

டிருந்தார்கள், மற்றவர்களோ வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மரக் கலப்பைகளைக் கொண்டு உழுது கொண்டும், வரலாற்றுக் காலத் திற்கு முந்திய தறிகளில் துணிகளை நெய்து கொண்டும் இருந்தார் கள். தங்களது கருவிகளை எலும்புகளில் செய்து கொண்ட மக்களும் இருந்தார்கள். இரும்பு இருந்ததைக் கூட அவர்கள் அறியவில்லை.

சோவியத் யூனியனின் மிக முன்னேறிய மக்கள் கடந்த காலத்தில் மிகவும் பின்தங்கிப் போய்விட்ட மக்களுக்கு உதவுகிறார்கள். கடந்த டஜன் கணக்கான ஆண்டு காலத்தில் மத்திய ஆசியா, சைபீரியா மற்றும் தொலைதூர வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னேறி விட்டார்கள்.

மனித உழைப்பின் நாட்காட்டிப்படி எங்கள் நாட்டின் எல்லா மக்களுமே ஒரு சோஷலிச சகாப்தத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் எங்கள் நாட்டைச் சேர்ந்த எல்லா மக்களுமே சமமானவர்கள்.

இரண்டு சட்டங்கள்

கடல் கடந்து சென்ற கண்டுபிடிப்பாளர்கள் புதிய நாடுகளை மட்டும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் எப்போதோ மறந்து போய்விட்ட வரலாற்றுக் காலத்தையும் கண்டுபிடிப்பது அடிக்கடி நிகழ்ந்தது.

ஆஸ்திரேலியாவை ஐரோப்பியர்கள் கண்டுபிடித்த போது அது மிகப் பெரும் வெற்றியாக இருந்தது. ஏனெனில் அவர்கள் ஒரு கண்டம் முழுவதையும் கண்டுபிடித்து அதைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

ஆனால் அவர்களது வெற்றி ஆஸ்திரேலியர்களுக்கு மிகப் பெரிய துயரமாக அமைந்தது. மனித வரலாற்று நாட்காட்டிப்படி அவர்கள் இன்னமும் மற்றொரு யுகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஐரோப்பிய மரபுகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, ஐரோப்பிய முறைகளுக்குக் கீழ்ப்படிந்து போகவும் அவர்கள் விரும்பவில்லை. அவர்களுடைய இந்தத் 'தவறுக்காக' அவர்கள் மன்னிக்கப்படவில்லை. அவர்கள் வேட்டையாடப்பட்டார்கள், கொடிய காட்டு விலங்குகளைப் போலத் துரத்தப்பட்டார்கள். ஆஸ்திரேலியர்கள் இன்னமும் கூடாரங்களில் வாழ்ந்த அதே வேளையில், ஐரோப்பிய நகரங்களில் மிகப் பெரிய கட்டடங்கள் எழும்பிக் கொண்டிருந்தன. தனிச் சொத்து என்பதன் பொருளை ஆஸ்திரேலியர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதே நேரம் ஐரோப்பாவிலே பணக்கார நிலக்கிழாருக்குச் சொந்தமான காட்டில் ஒரு மனிதன் மான் ஒன்றைக் கொன்றுவிட்டால், சிறையிலே தூக்கி எறியப்பட்டான்.

ஆஸ்திரேலியர்களுக்குச் சட்டமாக இருந்தது ஐரோப்பியர்களுக்குக் குற்றமாக இருந்தது.

ஆஸ்திரேலிய வேடுவர்கள் ஆட்டு மந்தையைச் சந்தித்த போது, மகிழ்ச்சியால் குரல் எழுப்பியபடி அதைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். மந்தையை நோக்கித் தங்களது எறி ஈட்டிகளையும், வளை தடிகளையும் வீசினார்கள். ஆனால் ஐரோப்பிய விவசாயிகளுடைய துப்பாக்கிகள் வழக்கமாக இத்தருணத்தில் தலையிட்டன.

ஐரோப்பிய விவசாயி ஆட்டைத் தனது சொந்தச் சொத்தாகக் கருதினான். அதே வேளை பண்டைக்கால ஆஸ்திரேலிய வேடுவன் அதைக் கண்டுபிடிப்பது ஓர் அதிசயம் என்று கருதினான். ''யார் வாங்கி வந்து ஓர் ஆட்டை வளர்க்கிறார்களோ அது அவர்களுக்குச் சொந்தமானது,'' என்பது ஐரோப்பியர்களின் சட்டமாக இருந்தது. ''பொறி வைத்து விலங்கைப் பிடிக்கிற வேடுவனுக்கே அது சொந்தம்,'' என்பது ஆஸ்திரேலியர்களின் சட்டமாக இருந்தது.

தங்கள் காலத்தியச் சட்டங்களை ஆஸ்திரேலியர்கள் கடைப்பிடித்த காரணத்தால், மந்தையில் நுழைந்து விட்ட ஓநாயைப் போல, மனிதர்கள் என்று கருதாது அவர்களை ஐரோப்பியர்கள் சுட்டு வீழ்த்தினார்கள்.

ஆஸ்திரேலியப் பெண்கள் உருளைக் கிழங்கு வயலை மாற்றுகின்ற

போது மீண்டும் இந்த இரு சட்டங்களும் மோதிக் கொண்டன. கண நேரத் தயக்கமின்றி அவர்கள் சுவைமிக்க தண்டங்கிழங்கைப் பிடுங்கத் தொடங்கினார்கள். வியப்பேதுமில்லை: இங்கு ஏராளமான உண்ணத்தக்க கிழங்குகள் இருந்தன—எல்லாம் ஒரே இடத்தில்! ஏன், இங்கு ஒரு மணி நேரத்தில் பிடுங்கக் கூடியதை ஒரு மாதத்தில் கூட அவர்கள் ஒருபோதும் சேகரித்ததில்லை.

ஆனால் அவர்களது இந்த திடீர் அதிர்ஷ்டமே அவர்களது பேரிடராகவும் இருந்தது. வெடிகள் கேட்கத் தொடங்கும். பெண்கள் தங்களது சுமைகளோடு தரையில் விழுவார்கள். தங்களை யார் எதற்காகக் கொன்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியாமலேயே கீழே விழுந்தார்கள்.

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது இரு வேறுபட்ட அயலார்களுக்கிடையே இந்தச் சண்டையைப் புதுப்பித்தது.

பழைய 'புதிய உலகம்'

அமெரிக்காவைக் கண்டுபிடித்த ஐரோப்பியர்கள் தாங்கள் ஒரு புதிய உலகத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக நினைத்தார்கள்.

இந்த நிகழ்வைக் கொண்டாடக் கூடிய வகையில் மரபுரிமைச் சின்னந் தாங்கிய மேலங்கி கூட கொலம்பசுக்கு வழங்கப்பட்டது.

ஆனால் இந்தப் 'புதிய உலகம்' உண்மையில் ஒரு பழைய உலகமாகவே இருந்தது. ஐரேப்பியர்கள் தாங்கள் அறியமாலேயே, தாங்கள் எப்போதோ மறந்துவிட்ட தங்களது பழமையைக் கண்டுபிடித்தார்கள்.

இந்தியர்களுடைய பழக்க வழக்கங்கள் கட்டுப்பாடற்றதும் விநோதமானதும் என்றும் அவர்கள் நினைத்தார்கள். இந்தியர்களது வீடுகள், உடைகள் மற்றும் வழிகள் எந்தவகையிலும் அவர்களுடையதைப் போல இம்மியும் இருக்கவில்லை.



வட பகுதிய இந்தியர்கள் தங்களது அம்புக் கூடுகளையும், அம்புத் தலைகளையும் சிக்கிமுக்கிக் கற்களிலும் எலும்புகளிலும் தயாரித்தார்கள். இரும்பைப் பற்றி எதையுமே அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனினும், அவர்கள் விவசாயத்தை அறிந்திருந்தார்கள்: சோளம், பூசணிக்காய், அவரை மற்றும் புகையிலை பயிர் செய்தார்கள். அவர்களது முக்கியத் தொழில் வேட்டையாடுவது. மரவீடுகளில் வசித்தார்கள். உயரமான வேலிகளால் அவர்களது கிராமம் சூழப்பட்டிருந்தது.

தெற்கே, மெக்ஸிகோவில் இந்தியர்கள் செம்பாலான கருவிகளையும், தங்கத்தாலான அணிகலன்களையும் கொண்டிருந்தார்கள். பச்சை செங்கற்களால் ஆன பெரிய வீடுகளைப் பெற்றிருந்தார்கள்.

அமெரிக்காவுக்குச் சென்ற முதலாவது காலனியாதிக்கவாதிகளும், வெற்றியாளர்களும் இவை எல்லாவற்றையும் மிக விரிவாகத் தங்களது நாட்குறிப்புகளில் குறித்து வைத்துள்ளார்கள்.

ஆனால் வாழ்க்கை முறையை விவரிப்பதை விட பொருட்களை விவரிப்பது என்பது மிகவும் இலகுவானது.

அமெரிக்காவிலிருந்த வாழ்க்கை முறையானது ஐரோப்பியர்களுக்கு விநோதமானது, அவர்களால் அதனைப் புரிந்து கொள்ள முடிய

வில்லை. மேலும் அவர்களது வருணனைகள் கூட மிகவும் தெளிவற்றும் குழப்புவதாகவும் இருக்கின்றன.

'புதிய உலகானது' பணமில்லாத, வணிகர்கள் இல்லாத, பணக் காரனோ ஏழையோ இல்லாத ஓர் உலகமாக இருந்தது. தங்கத்தால் எப்படிப் பொருட்களைச் செய்வது என்பதை அறிந்திருந்த சில இந் திய இனக்குழுவினர் அங்கு இருந்தனர். ஆனால் தங்கத்தின் மதிப்பு அவர்களுக்குத் தெரியாது.

கொலம்பசினுடைய மாலுமிகள் பார்த்த முதலாவது இந்தியர்கள் தங்களது மூக்கு வழியாக தங்கக் கம்பிகளைச் செருகிக் கொண்டும், தங்களது கழுத்துகளைச் சுற்றி தங்கக் கழுத்தணியும் அணிந்து கொண்டும் காணப்பட்டார்கள். ஆனால் கண்ணாடியிலான குமிழ்மணி களுக்காகவும், சிற்றணிகளுக்காகவும் விருப்பத்துடன் இத்தகைய தங் களது அணிகலன்களைப் பண்டமாற்றிக் கொண்டனர்.

கடல் கடந்து சென்ற அந்நியர்கள் இந்த உலகத்திலுள்ள எல்லா மக்களும் எசமானர்கள், வேலைக்காரர்கள் என்றும், நிலக்கிழார்கள் விவசாயிகள் என்றும் பிரிக்கப்பட்டவர்கள் என்பதை அறிவார்கள். ஆனால் இங்கோ மக்கள் அனைவரும் சமமான இருந்தனர். ஓர் இனக்குழு எதிரி ஒருவனை சிறைப் பிடித்தபோது அவனை அடிமை யாகவோ, வேலைக்காரனாகவோ மாற்றவில்லை. ஒட்டு மொத்தமாக அவனைக் கொன்று விடுவார்கள் அல்லது சுவீகரித்துக் கொள்வார்கள்.

இங்கே யாரும் ஒரு மாளிகையையோ, வீட்டையோ, எஸ்டேட் டையோ சொந்தமாகப் பெற்றிருக்கவில்லை. 'நீண்ட வீடுகள்' என அழைக்கப்பட்ட இனத்தினரின் வீடுகளிலே மக்கள் வாழ்ந்தார்கள். இனக்கிளையினர் அனைவருமே ஒன்றாக வாழ்ந்தார்கள். பெரிய குடும் பத்தின் உணவு மற்றும் உடைக்கு அனைவருமே சமமான பொறுப் புடையவர்களாக விளங்கினர். நிலம் எந்த ஒரு தனி மனிதனுக்கும் சொந்தமாக இல்லை, ஆனால் இனக்குழு முழுமைக்கும் சொந்தமாக இருந்தது. எசமானனது நிலத்தில் வேலை செய்யக் கூடிய பண்ணை அடிமைகள் யாரும் இல்லை. இங்கே எல்லா மனிதர்களும் சுதந்திரமாக விளங்கினார்கள்.

நிலமானிய அமைப்பு இருந்த காலத்தில், பண்ணையடிமை முறை இருந்த நேரத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்களைக் குழப்ப இது ஒன்றே போதுமானதாகும்.

மற்றவர்களுக்குச் சொந்தமான பொருளைத் தான் தொட்டால், மணியக்காரரின் பணி முதல்வர் தனது கழுத்துப் பட்டையைப் பிடித்திழுத்து தன்னைச் சிறைக்கு இழுத்துச் செல்வார் என்பது ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். இங்கு நிலக்கிழா ருடைய மேலாள்களோ, தனிப்பட்ட சொத்தோ சிறைச்சாலைகளோ கிடையாது. இன்னும் எல்லா விஷயங்களிலும் ஓர் ஒழுங்கு இருந்தது. ஐரோப்பாவில் செய்ததைக் காட்டிலும் வித்தியாசமான முறையில் மக்கள் இந்த ஒழுங்கை கடைப்பிடித்தார்கள்.

பணக்காரனுக்குச் சொந்தமான எதையும் ஏழை ஒருபோதும் எடுக்காது பார்த்துக் கொள்ளவும், வேலையாட்கள் தங்களது எச மானர்களுக்கு எப்பொழுதுமே பணிந்து போகவும், பண்ணையடிமைகள்

தங்களது நிலக்கிழார்களுக்காத் தங்களது வாழ்நாள் முழுக்க உழைக்கவும் செய்யும் வகையில் ஐரோப்பாவில் சட்டங்கள். ஆனால் இங்கோ ஒரு மனிதன் தனது குடும்பத்தாலும் இனக்குழுவாலும் பாதுகாக்கப் பட்டான். ஒரு மனிதன் கொல்லப்பட்டால், அவனது கிளையினர் முழுவதும் பழிதீர்த்துக் கொண்டனர். கொன்றவனுடைய உறவினர்கள் இறந்து போனவனுடைய உறவினர்களிடம் தங்களை மன்னிக்கும் படி கேட்டு, சமாதான படையல்களையும் அவர்களுக்குக் கொண்டு வந்து தந்தால் கொன்றது முடிவில் அமைதியாக முடியும்.

ஐரோப்பாவில் பேரரசர்களும், மன்னர்களும் இளவரசர்களும் இருந் தனர். ஆனால் இங்கோ மன்னர்களும் இல்லை, மணி முடிகளும் இல்லை. இனக்குழுவினர் அனைவர்க்கும் முன்பாக இனக்குழுவின் எல் லா விவகாரங்களும் குழுத் தலைவர்களால் முடிவு செய்யப் பெறும். அவர்களது தகுதிகளின் அடிப்படையில் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். பதவியைச் சரியாக நிருவகிக்க முடியாது போனால் அவர்கள் பதவியை விட்டு இறக்கப்பட்டார்கள். தலைவன் என்பவன் இனக்குழுவுக்கே எசமானன் அல்ல. சில இந்திய மொழிகளில் **தலைவன்** என்ற சொல் வெறுமனே பேச்சாளர் என்றே பொருள் பெற்றுள்ளது.

பழைய உலகத்தில் அரசனே நாட்டின் தலைவனாக இருந்தான். குடும்பத்தின் தலைவனாக தந்தை இருந்தான். அரசானது மிகப் பெரிய மக்கள் பிரிவைக் கொண்டிருந்தது. அதே வேளை குடும்பம் மிகச் சிறியதைக் கொண்டிருந்தது. அரசன் நியாயம் வழங்கி தனது குடிகளைத் தண்டித்தான். தந்தை நியாயம் வழங்கி தனது குழந்தை களைத் தண்டித்தான். அரசன் தனது நாட்டைத்தன் மகனுக்கு விட்டுச் சென்றான். தந்தை தனது தோட்டத்தை மகனுக்கு விட்டுச் சென்றான்.

ஆனால் இங்கே, புதிய உலகத்தில், தனது குழந்தைகள் மீது தந்தை எந்த அதிகாரமும் பெற்றிருக்கவில்லை. குழந்தைகள் தாயா ருக்குச் சொந்தமானவையாக இருந்தன, அவளுடனே தங்கினர். 'நீண்ட வீட்டில்' பெண்களே காரியமாற்றினார்கள். ஐரோப்பியக் குடும்பங் களில் மகன்கள் வீட்டிலேயே தங்கிவிட்டனர். அதே வேளை மகள்கள் தங்களது கணவன்மார் வீடுகளில் வசிக்கச் சென்றார்கள். இங்கோ அது முற்றிலும் மாறுபட்டு இருந்தது. மனைவி தனது கணவனைத் தனது தாயாரின் வீட்டிற்கு அழைத்து வந்தாள். மனைவியே குடும்பத் தலைவியாக இருந்தாள்.

ஆரம்பகால கண்டுபிடிப்பாளர் இப்படித்தான் எழுதினார்:

''வழக்கமாகப் பெண்களே குடும்பத்தை நடத்தினார்கள். ஒருவருக் கொருவர் எப்பொழுதுமே துணையாக நின்றார்கள். தங்களது பொருட் களை அவர்கள் பொதுவில் வைத்திருந்தார்கள். ஆனால் ஓர் அற்பமான அளிப்பவனாக இருந்த அதிர்ஷ்டமில்லாத கணவனுக்குத்தான் வாழ்க் கைத் துயரமிருந்தது! வீட்டில் அவனுக்கு எத்தனை குழந்தைகள் உண்டு, எத்தனை உடைமைகள் உண்டு என்பதெல்லாம் ஒரு பொருட் டேயல்ல, தனது படுக்கையைச் சுருட்டிக் கொண்டு கண நேர அறிவிப்பில் வெளியேறுமாறு கட்டளையிடப்படுவான். எதிர்க்க அவன்

முயன்றால், உண்மையிலேயே அவனது நிலை மிகவும் இரங்கத் தக்கதாக இருக்கும். அவனது வாழ்க்கை துயரமிக்கதாக மாறும். ஓர் அத்தையோ, ஒரு பாட்டியோ அவனுக்காகப் பரிந்து ஓரிரு வார்த்தைகள் பேசவில்லை என்றால், அவன் தனது இனக்குழுவிற்கே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும், அல்லது வேறொரு கிளையைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டியிருக்கும். அப்போது பெண்கள் ஏராளமான அதிகாரங்களைப் பெற்றிருந்தார்கள். ஒரு தலைவனுடைய கொம்பைப் பிடுங்கி எறிவதற்கு (அவர்கள் அழைத்தது போல) அவர்கள் இரண்டு முறை யோசித்தது கிடையாது. அது அவசியம் என்று அவர்கள் நினைத்த போது, அவன் தலைவன் இல்லை, ஆனால் இனக்குழுவின் மற்ற எவரைப்போலவும் சாதாரண வீரனாக இருப்பான். இதே முறையில் ஒரு புதிய தலைவனைத் தேர்ந்தெடுப்பது எப்பொழுதுமே பெண்களைப் பொருத்ததாக இருந் தது.''

பழைய உலகத்தில் ஒரு பெண் தனது கணவனுடைய வேலை யாளாக இருந்தாள். ஆனால் இந்திய இனக்குழு மக்களுக்கிடையே ஒரு பெண்ணே வீட்டின் தலைவியாக இருந்தாள். சில வேளைகளில் அவள் இனக்குழுவின் தலைவியாகவும் இருந்தாள். இந்தியர்களால் சிறைப் பிடிக்கப்பட்டு, நெத்-னோ-குவா என்ற பெயருடைய இந்தியப் பெண்ணால் தனக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜான் டேன்னர் என்ற ஓர் அமெரிக்கரைப் பற்றி கவிஞர் பூஷ்கின் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இது ஓர் உண்மையான கதை. ஒட்டாவா இனக் குழுவின் தலைவியாக நெத்-னோ-குவா விளங்கினாள். மேலும் அவளது போர்ப் படகு ஓர் அடையாளக் கொடியை எப்பொழுதுமே கொண் டிருந்தது. அவள் ஒரு பிரிட்டீஷ் துறைமுகத்திற்கு வந்தபோது, ஒரு பீரங்கி வேட்டுவரிசையோடு எப்பொழுதும் வரவேற்கப்பட்டாள். இந்தப் பெண்ணை இந்தியர்கள் மட்டுமல்லாது, வெள்ளையர்களும் மரியாதை செய்தார்கள்.

இத்தகைய குடும்பங்களில் பெற்றோர் மரபுப்பண்பு தந்தையால் இல்லாது தாயாராலே நிர்ணயிக்கப்பட்டது என்பதில் எந்த வியப்பும் இருக்க முடியாது. ஐரோப்பாவில் குழந்தைகள் தங்கள் தந்தைகளின் கடைசிப் பெயரைப் பெற்றிருந்தார்கள், ஆனால் இங்கோ அவர் களுடைய தாய்களின் பெயர்களைக் கொண்டிருந்தார்கள். தந்தை மானின் இனக்குழுவாகவும், தாய் கரடி இனக்குழுவாகவும் இருந் தால், குழந்தைகள் கரடி இனக்குழுவைச் சேர்ந்திருந்தன. ஒவ்வொரு கிளை மரபும் பெண்களாலும், அவர்களது குழந்தைகளாலும், அவர் களது பெண் மக்களின் குழந்தைகளாலும், அவர்களது பேத்திமார்களின் குழந்தைகளாலும் உருவாகி இருந்தது.

இவை எல்லாமே ஐரோப்பியர்களுக்கு மிகப் பெரிய புதிராக இருந்தன. இந்தியர்கள் கட்டுப்பாடற்ற வழிமுறைகளைக் கொண்டவர் கள் என்றும், அவர்களே காட்டுமிராண்டிகள் என்றும் அவர்கள் கூறி னார்கள்.

தங்களுடைய மூதாதையர்கள், வில்களும் அம்புகளும் இருந்த காலங்களில், முதலாவது சிறு படகுகளும், முதலாவது மண்கிளறிகளும்

இருந்த காலங்களில், இதே போன்ற பழக்க வழக்கங்களைக் கொண் டிருந்தார்கள் என்பதை அந்நேரத்திலே அவர்கள் மறந்து விட்டிருந் தார்கள்.

முதலாவது காலனிவாதிகளும், வெற்றியாளர்களும் இந்திய இனக் குழுவின் தலைவர்களை திருவாளர்கள் என்றும் நிலக்கிழார்கள் என்றும் வருணித்தார்கள். 'தலைவர்' என்ற பட்டம் அரச மரியாதைக்குரிய பட்டம் என்றும் குல மரபுச் சின்னத்தைப் பெரு மகனாரின் குடும்ப மரபுச் சின்னம் என்றும் அவர்கள் எண்ணினார்கள். தலைவர்கள் கூட்டத்தை செனட் என்றும் தலைமைப் போர் வீரனை மன்னன் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஒரு ராணுவத் தளபதியை நாம் அரசன் என்று அழைப்பது போல அது அவ்வளவு விநோதமாக இருந் தது.

நூற்றாண்டுகள் கடந்தன, ஆனாலும் அமெரிக்காவில் குடியேறிய வெள்ளையர்கள் தல மக்களின் பழக்க வழக்கங்களை இன்னமும் அறிந்து கொள்ளவில்லை. லூயீஸ் மோர்கன் என்ற ஓர் அமெரிக்கர் தன்னுடைய **பண்டைய சமூகம்** என்ற நூலில் இரண்டாவது முறையாக அமெரிக்காவைக் கண்டுபிடிக்கின்றவரை இந்தத் தப்பெண்ணம் நீடித் தது. இராக்குயஸ் மற்றும் அஸ்டெக் இந்தியர்களின் வாழ்க்கை முறையானது ஐரோப்பியர்கள் எப்போதோ மறந்து போய்விட்ட வளர்ச்சிக் கட்டத்தின் ஒரு நிலை என்பதை அதில் அவர் நிரூபித் தார்.

ஆனால் மோர்கனின் புத்தகம் 1877இல் வெளிவந்தது. அதே வேளை அமெரிக்காவை வெற்றி கொண்ட முதலாவது நபர்களைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

வெள்ளையர்கள் இந்தியர்களைப் புரிந்து கொள்ளவில்லை. மாற் றாக இந்தியர்களும் வெள்ளையர்களைப் புரிந்து கொள்ளவில்லை. ஒரு கையளவு தங்கத்திற்காக ஒரு வெள்ளையன் எதற்காக மற்றொரு வனின் குரல்வளையை நெரிக்கத் தயாராக இருந்தான் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. வெள்ளையர்கள் எதற் காக அமெரிக்காவுக்கு வந்தார்கள் என்பதையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. 'மற்றவருடைய நிலத்தை வெற்றி கொள்ளு தல்' என்பதன் பொருளையும் அவர்கள் விளங்கிக் கொள்ள முடிய வில்லை.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மக்கள் நிலம் இனக்குழு முழுமைக் கும் சொந்தமானது என்றும், அது தங்களுடைய பாதுகாக்கும் ஆவி களால் பாதுகாக்கப்பட்டது என்றும் நம்பினார்கள். மற்றவர்களுடைய நிலத்தை எடுப்பது என்பது மற்ற இனக்குழுவின் கடவுளர்களின் சீற்றத்தைக் கிளறுவதாகும்.

இந்தியர்களும் கூட ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டனர். ஆனால் ஓர் இனக்குழு மற்றொரு இனக்குழுவை வென்ற போது அம்மக்களை அவர்கள் அடிமைகள் ஆக்கவில்லை. தங்களது வழிமுறை களையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றும் படியோ, அவர்களது தலைவர்களைப் பதவி நீக்கம் செய்வதோ இல்லை. தோற்றுப் போன இனக்குழுவை வெறுமனே அவர்களே திறை செலுத்தும் படி செய்

தார்கள். ஒரு தலைவன் தனது சொந்த இனக்குழு அல்லது கிளை மரபினரால் மட்டுமே பதவி நீக்கம் செய்யப்பட்டான்.

இரண்டு உலகங்கள், இரண்டு சமூக முறைகள் மோதிக் கொண்டன. அமெரிக்காவை வெற்றி கொண்ட வரலாறு என்பது இரண்டு உலகங்களின் போராட்ட வரலாறே ஆகும்.

மெக்ஸிகோவை ஸ்பானியர்கள் வெற்றி கொண்டது இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமையும்.

தவறுகளின் சங்கிலித் தொடர்

*1519*இல், மெக்ஸிகோவின் கடற்கரையோரமாக மூன்று பாய்மரங்கள் கொண்ட பதினோரு கப்பற் தொகுதிகள் தோன்றின. கப்பல்கள் பீப்பாய் போன்ற பக்கங்களைக் கொண்டிருந்தன. நீருக்கு மேலாகக் கப்பலின் முகப்பும், பின் பகுதியும் உயரமாகத் தூக்கிக் கொண்டிருந்தன. கப்பற் தளத்தில் இருந்த சதுக்கங்களிலிருந்து பீரங்கியின் வாய்ப் பகுதிகள் நீட்டி நின்றன. அதே வேளை எறி ஈட்டிகளும், காலாட்படை வீரர்களின் துப்பாக்கிகளும் பக்கங்களில் கிடந்தன. அகன்ற தோள்களையுடைய தாடிவைத்த மனிதன், தட்டையான தொப்பியைத் தனது கண்களுக்குக் கீழாக இழுத்துவிட்டுக் கொண்டு, கப்பற் கொடிமரத்தின் அடியில் நின்றான். அவனது கூர்மையான கண்கள் தட்டையான கடற்கரையையும், கரையோரத்தில் அரை நிருவாணமாகக் கூடி நின்ற இந்தியர்கள் கூட்டத்தையும் உற்று நோக்கின.

அந்த மனிதனின் பெயர் கோர்டெஸ். மெக்ஸிகோவை வெல்வதற்காக ஸ்பெயினிலிருந்து அனுப்பப்பட்ட படையெடுப்புக்கு அவன் தான் தலைவன். உண்மை, அவனது நியமனத்தை நீக்கக் கூடிய ஸ்பானிய ஆளுநரின் கடிதமென்றை அவன் வைத்திருந்தான். ஆனால் கோர்டெஸ் போன்ற துணிச்சல்காரர்களுக்கு நீக்க உத்தரவு என்ன மாதிரி பொருள்பட்டது! ஒரு பெருங்கடல் நீர் அவனை ஸ்பெயினிலிருந்து பிரித்தது. இங்கோ, அவனது கப்பல்களில் அவன் தான் அரசனாக இருந்தான்.

கப்பல்கள் நங்கூரம் போட்டன. வரும் வழியில் தீவுகளில் கோர்டெஸ் சிறைப் பிடித்திருந்த இந்திய அடிமைகள் சிறிய படகுகளில் பீரங்கிப் பீப்பாய்களையும், துப்பாக்கி வெடிகளையும், பலசரக்குச் சாமான்கள் அடங்கிய பிரப்பங்கூடைகளையும், துப்பாக்கிகளையும் கீழே இறக்கத் தொடங்கினார்கள். அச்சமுற்ற, கனைத்துக் கொண்டிருந்த குதிரைகள் கீழிருந்து கப்பல் மேற்தளத்துக்குக் கொண்டுவரப் பட்டன. எல்லாவற்றிலுமே மிகக் கடினமான பணியாக இருந்தது அவைகளை படகுகளில் இறக்கி கரையில் கொண்டு போய்ச் சேர்த்ததாகும்.

இத்தகைய மிதக்கும் வீடுகளையும், துணிகளுக்கு அடியில் தங்களது உடல்களை மறைத்து வெளிறிய முகங் கொண்ட மக்களையும், அவர்களது விநோதமான ஆயுதங்களையும் இந்தியர்கள் கூர்ந்து பார்த்தார்கள். ஆனால் பறக்கும் பிடரி மயிர்களையும் வால்களையும் கொண்டு கனைத்துக் கொண்டிருந்த விலங்குகளையும் பார்த்துப் பெரி

தும் அதிசயித்துப் போனார்கள். இத்தகைய பெரு விலங்கை அவர்கள் முன்னர் பார்த்ததே இல்லை.

வெள்ளை மனிதர்களுடைய வருகை பற்றிய வதந்தி கடற்கரை வழியாகப் பரவி நாடு முழுக்க மலைகள் வரை சென்றது. அங்கே, உயரமான சுவர் போன்ற மலைகளுக்குப் பின்னால் இருந்த பள்ளத்தாக்கில் அஸ்டெக்கியர்களின் கிராமங்களாகிய **புவேப்ளொகள்** (செவ்விந்தியர் குடியிருப்புகள்) இருந்தன. இந்தக் குடியிருப்புக்கள் அனைத்திலுமே மிகப் பெரியது தெனோஹ்தித்லான் ஆகும். அது ஓர் ஏரியின் மத்தியில் நிலத்துடன் பாலங்களால் இணைக்கப்பட்டிருந்தது. அதனது பளபளப்பான, வெள்ளையடிக்கப்பட்ட வீடுகளும், பொன் முலாமிட்ட கோபுரக் கூரைகளும் தொலைவில் கூடப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அஸ்டெக்கியர்களின் போர்த் தலைவனாகிய மோன்டிஸூமா தனது போர்வீரர்களுடன் மிகப் பெரிய வீட்டில் வசித்தான்.

வெள்ளை மனிதர்களின் வருகை பற்றிய வார்த்தை மோன்டிஸூமாவை அடைந்த போது, படைத்துறை ஆய்வுக் குழுவை ஒன்றாக அழைத்தான். என்ன செய்வது என்பதை முடிவுகட்ட முயல்வதில் தலைவர்கள் நெடு நேரம் கடுமையாகச் சிந்தித்தார்கள். இந்த வெள்ளை மனிதர்கள் எதற்காகத் தங்கள் நாட்டிற்கு வந்திருக்கிறார்கள், அவர்கள் எதை விரும்பினார்கள் என்பதைப் புரிந்து கொள்வது தான் அவர்களது முக்கியப் பிரச்சினையாக இருந்தது.

வெள்ளை மனிதர்கள் தங்கத்தை விரும்புகிறார்கள் என்பதை வதந்திகளின் வாயிலாகத் தலைவர்கள் அறிந்தார்கள். ஆகவே வெள்ளை மனிதர்களுக்குத் தங்கத்தை அன்பளிப்பாகக் கொடுத்து, அவர்களைத் தங்களுடைய நாட்டிற்கே திரும்பிப் போகும்படி கேட்டுக் கொள்வது என்று குழு முடிவு செய்தது.

இது ஓர் அழிவார்ந்த தவறாகி விட்டது. தங்கம் வெள்ளை மனிதர்களுக்குப் பேராசை கொண்ட வேட்கையைத் தான் ஏற்படுத்த முடியும். ஆனால் அஸ்டெக்கியர்கள் இது பற்றி அறியவில்லை. அதை அறிந்திருக்க வழியுமில்லை. ஏனெனில் இந்தியர்களும் வெள்ளை மனிதர்களும் மாறுபட்ட சகாப்தத்தைச் சேர்ந்த மக்கள்.

மோன்டிஸூமா தனது தூதுவர்களைத் தங்களுடைய அன்பளிப்புக்களுடன் வண்டிச் சக்கரங்கள் அளவுடைய தங்க வளையங்களுடனும், தங்க ஆபரணங்களுடனும், தங்க உருவச் சிலைகளுடன் அனுப்பிவைத்தான்.

இத்தகைய செல்வங்களை தரையிலே அவர்கள் புதைத்திருப் பார்களேயானால், மிகப் புத்திசாலித்தனமான செயலைச் செய்தவர்களாகி இருப்பார்கள்.

கோர்டெசும் அவனது ஆட்களும் தங்கத்தைப் பார்த்தபோது, அஸ்டெக்கியர்களின் விதி உறுதிப்படுத்தப்பட்டது.

கோர்டெஸ் திரும்பவும் கடல் கடந்து செல்ல வேண்டுமெனத் தூதுவர்கள் கேட்டது வீணாகியது. அவர்களை எதிர்நோக்கி நின்ற கஷ்டங்களுடனும், ஆபத்துக்களுடனும் நாட்டின் இதயம் வரை பயணம் வரத் தயாராக இருந்த அழையாத பார்வையாளர்களை அவர்கள் அச்சுறுத்தியது வீணாகியது.

முன்னதாக மெக்ஸிகோவின் தங்கம் பற்றி ஸ்பானியர்கள் கேள்விப் பட்டு மட்டுமே இருந்தனர், ஆனால் இப்பொழுது அவர்கள் தங்களது சொந்தக் கண்களாலேயே பார்த்துக் கொண்டிருந்தனர். இந்தக் கதைகள் உண்மையாகிப் போனதில் அவர்களது கண்கள் பேராசை யால் எரிந்தன.

தூதுவர்களுடைய சொற்கள் அவர்களுக்கு முட்டாள்தனமாகப் பட்டது. தங்களுடைய இலக்கு இவ்வளவு அண்மையில் இருந்தபோது, அவர்களால் எங்ஙனம் கடல் கடந்து திரும்பச் செல்ல முடியும்!

அவ்வாறு செய்வது பித்துப் பிடித்தது போன்றாகும் என்று அவர்கள் நினைத்திருக்கக் கூடும். ஏனெனில் மிக நீண்ட பெருங் கடற்பயணத்தை மேற்கொண்ட போது அவர்கள் அத்தகைய நல அழிவுக்கு ஆட்பட்டுப் போயிருந்தார்கள். பாறையைப் போல அவ்வளவு கடினமான ரொட்டி வற்றல்கள், கூட்டம் நிறைந்து வழிந்த நெருக் கடியான கப்பல் அறையிலுள்ள ஒதுக்கிடங்கள், முதுகெலும்பை உடைக் கும் தார் பூசிய கப்பல் தளவாட வேலை, புயல்கள் மற்றும் பாய் மடிக் கூறுகள், எனினும் தங்களை எதிர்நோக்கி நின்ற செல்வத்திற் காக அத்தனை துயரங்களையும் அநுபவித்தார்கள்.

கோர்டெஸ் முகாமை முடித்துக் கொண்டு புறப்பட வேண்டு மென்று தனது ஆட்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் தங்களது அடிமைகளின் முதுகுகளில் ஆயுதங்களையும், சாமான்களையும் ஏற்றி னார்கள். சுமையால் விலங்குகளாகிப் போன மனிதர்கள், மூச்சுக்காக ஏங்கியபடி, புலம்பலுடன் சாலை நெடுகிலும் அலைந்து நடந்தார் கள். ஆனால் அவர்கள் எங்ஙனம் தடுத்திருக்க முடியும்? பின்னுக்குத் தங்கிவிட்டவர்கள் வெள்ளை மனிதர்களது வாட்களால் விரைவு படுத்தப்பட்டார்கள், மறுத்தவர்களது தலைகள் எல்லாம் சீவப்பட் டன.

இந்த முதலாவது பயணத்தைச் சித்தரிக்கும் ஓர் அஸ்டெக் ஓவியம் கண்டெடுக்கப்பட்டது. மூன்று சாலைகள் வழியாக அரைத் துணிகளோடு ஆண்கள் நடந்து செல்வதை நாம் பார்க்கிறோம். பீரங்கி வண்டிச் சக்கரத்தைத் தனது தோளில் சுமந்தபடி ஒருவனும், மற்றவன் கைநிறையத் துப்பாக்கிகளைச் சுமந்தபடியும், மூன்றாமவன் ஒரு பிரம்புக் கூடை நிரம்ப உணவு சம்பந்தப்பட்ட பொருட்களுடனும் தோன்றுகிறார்கள். ஸ்பானிய அதிகாரி ஓர் இந்தியனுடைய தலைக்கு மேலாகத் தனது கைத்தண்டை உயர்த்தியிருக்கிறான். அவன் இந் தியனை அவனது தலைமயிரைப் பற்றிப் பிடித்தபடி, வயிற்றில் உதைந்து கொண்டிருக்கிறான். அதனருகிலே சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவப்படம் வரையப்பட்ட ஒரு செங்குத்துப் பாறை இருக்கிறது.

வெற்றியாளர்கள் தங்களைச் 'சிறந்த கத்தோலிக்கர்களாக' எண்ணிக் கொண்டனர், தாங்கள் வென்ற நாடுகளுக்குச் சிலுவையை யும் தூக்கிச் சென்றார்கள்.

ஓவியத்தைச் சுற்றிலும் பரவலாக அநேக இந்தியர்களது தலைகளும் கைகளும் இருக்கின்றன.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவது என்ன என்பதை இங்ஙன

மாகத்தான் சுதந்திரமான இந்தியர்கள் முதலில் கண்டுபிடித்தார்கள்.

மெதுவாக, ஆனால் உறுதியாக ஸ்பானியர்கள் முன்னேறினார்கள். அதன் பிறகு, ஒரு மலைப்பாதையிலிருந்து ஓர் ஏரியையும் அதன் நடுவே ஒரு நகரத்தையும் அவர்கள் பார்த்தார்கள்.

அஸ்டெக்கியர்கள் எந்த எதிர்ப்பையும் செய்யாததால், 'விருந்தினர்கள்' நகருக்குள் நுழைந்தார்கள். அவர்கள் செய்த முதலாவது காரியம் வீரர்களின் தலைவனாகிய மோன்டிஸூமாவை, தங்களுக்கு விருந்தளித்தவனைச் சிறைப் பிடித்ததேயாகும்.

கோர்டெஸ் உத்தரவுப்படி மோன்டிஸூமா சங்கிலியால் பிணைக்கப்பட்டான். தன்னுடைய கைதி ஸ்பெயின் மன்னருக்குப் பிணையப் பொருளாக கடப்பாடு கொண்டிருப்பதாக கோர்டெஸ் தெரிவித்தான். திரும்பச் சொல்லும்படி கூறப்பட்ட எல்லா வார்த்தைகளையும் கைதி பணிவோடு திரும்பக் கூறினான். ஓர் அரசன் எப்படியிருப்பான், ஓர் உறுதி மொழி என்பது என்ன என்பவைகளை அவன் அறிய மாட்டான்.

தான் வென்றுவிட்டதாக கோர்டெஸ் நினைத்தான். மெக்ஸிகோவின் அரசனைச் சிறைப்பிடித்து விட்டதாக அவன் நினைத்தான். சிறைப் பிடிக்கப்பட்ட மன்னன் தனது ஆட்சியை ஸ்பெயின் மன்னருக்குக் கொடுத்து விட்ட படியால் எல்லாமே நன்றாக இருந்தன. இப்படித்தான் கோர்டெஸ் நினைத்தான். ஆனால் அவன் துயரத்தோடு தவறாகக் கருதிவிட்டான். ஸ்பானிய முறைகளைப் பற்றி மோன்டிஸூமா அறியாதிருந்தது போலவே, அவனும் மெக்ஸிகன் முறைகளை அறியாது இருந்தான். மோன்டிஸூமா ஓர் அரசன் என்று அவன் நினைத்தான். ஆனால் உண்மையில் அவன் ஒரு படைத் தலைவன் மட்டுமே, அவனது நாட்டை ஆளுவதற்கு அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

மிக விரைவாகவே தனது வெற்றியைக் கோர்டெஸ் கொண்டாடினான்.

பிறகு அஸ்டெக்கியர்களால் முடியும் என்று அவன் ஒருபோதும் எதிர்பாராததைச் செய்தார்கள்: மோன்டிஸூமாவின் சகோதரனைப் புதிய படைத் தலைவனாக அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

ஸ்பானியர்கள் தங்களது இருப்பிடமாகக் கொண்டிருந்த பெரிய வீட்டின் மீது புதிய தலைவன் தனது வீரர்களோடு ஒரு தாக்குதல் தொடுத்தான்.

ஸ்பானியர்கள் பீரங்கிகளோடும் துப்பாக்கிகளோடும் போரிட்டனர்.

அஸ்டெக்கியர்கள் கற்களோடும் வில் அம்புகளோடும் போரிட்டனர்.

ஓர் அம்பினுடைய, ஒரு கல்லினுடைய வலிமையைக் காட்டிலும் பீரங்கிக் குண்டும், துப்பாக்கிரவையும் வலிமை மிக்கவை. ஆனால் அஸ்டெக்கியர்கள் தங்களது சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள், அவர்களை எதுவும் தடுத்து நிறுத்த முடியவில்லை. பத்துப் பேர் கொல்லப்பட்டால், அவர்களுடைய இடங்களை ஒரு நூறு பேர் எடுத்துக் கொண்டார்கள். சகோதரனுக்காகச் சகோதரனும், மருமகனுக்காக மாமனும் பழிவாங்கினார்கள். சாவைப் பற்றி ஒருவரும் அஞ்சவில்லை.

தனது கிளைமரபோ, இனக்குழுவோ ஆபத்தில் இருக்கும் போது ஓர் அஸ்டெக்கிற்கு உயிர் என்பது ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை.

விஷயங்கள் மிகவும் மோசமாகப் போய்க் கொண்டிருப்பதைக் கோர்டெஸ் பார்த்தபோது, அஸ்டெக்கியர்களிடம் சமரசப் பேச்சு வார்த்தை தொடங்க வேண்டுமென்று அவன் முடிவு செய்தான். மோன்டிஸூமா மெக்ஸிகோவின் அரசனாக இருந்தபடியால் அவன் சிறந்த இடையீட்டாளனாக இருக்க முடியும் என்று அவன் நினைத்தான். தங்களுடைய ஆயுதங்களைக் கீழே போடும்படி தனது மக்களுக்கு மோன்டிஸூமா உத்தரவிட வேண்டுமென்று அவன் நினைத்தான்.

ஸ்பானியர்கள் அவனது சங்கிலிகளை அவிழ்த்தார்கள். வீட்டின் தட்டையான கூரைக்கு அவன் கொண்டு செல்லப்பட்டான். ஆனால் அவன் ஒரு கோழையைப் போல, ஓர் இனப் பகைவனைப் போல நிற்க வேண்டிவந்தது. கற்களும் அம்புகளும் அவன் மீது சொரிந்தன. எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒரு குரல் கிளம்பியது:

''பேசாதிரு, கயவனே! நீ ஒரு வீரனே அல்ல! நீ ஒரு பெண், நெய்யவும் நூற்கவும் பிறந்தவன்! இந்த நாய்கள் உன்னைக் கைதியாகப் பிடித்திருக்கின்றன! நீ ஒரு கோழை!''

மோன்டிஸூமா படுகாயமுற்று கீழே விழுந்தான்.

தாக்கியவர்களுக்கிடையே கோர்டெஸ் எப்படியோ தப்பிச் செல்ல முடிந்தது. அவனது ஆட்களில் பாதிப் பேர் கொல்லப்பட்டிருந்தனர். அதிர்ஷ்டவசமாக, அஸ்டெக்கியர்கள் அவனைப் பின்தொடர்ந்து வரவில்லை. இல்லாவிடில் அவனால் தெனோஹ்தித்லானிலிருந்து உயிருடனே திரும்பிப் போயிருக்க முடியாது.

ஆனால் அவனைத் தப்பிப் போக அஸ்டெக்கியர்கள் விட்டபோது, மற்றொரு பயங்கரமான தவறையும் அவர் செய்து விட்டார்கள். ஏனெனில் கோர்டெஸ் மற்றுமொரு படையைத் திரட்டிக் கொண்டு, தெனோஹ்தித்லானைப் பிடிப்பதற்குத் திரும்பிவந்தான்.

தங்களது நகரத்தை ஸ்பானியர்களிடமிருந்து காத்தபடி அநேக மாதங்களுக்கு அஸ்டெக்கியர்கள் துணிச்சலாகப் போரிட்டார்கள். ஆனால் பீரங்கிகளுக்கு எதிராக அவர்களது வில்களும் அம்புகளும் என்ன செய்ய முடியும்? கடைசியில் தெனோஹ்தித்லான் பிடிக்கப்பட்டு சூறையாடப்பட்டது.

இரும்பு யுகத்திய மக்கள் செம்பு யுகத்திய மக்களை வென்றார்கள். எதிர்நோக்கி வந்த புதிய முறைகளுக்கு முன்னால் பழைய சமூக அமைப்புப் பின்வாங்கிச் செல்ல வேண்டியிருந்தது.

ஏழு கூட்டிணைந்த புதை மிதியடிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கதை ஒன்று இருக்கிறது. ஓர் இளைஞன், புதைமிதியடிகள் தயாரிப்பவர்கள் வழமையாகத் தயாரிக்கும் சாதாரண மாதிரி போன்றல்லாது ஒரு ஜோடி மந்திர ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகள் விற்றான். இந்தக் கதையில் வரக் கூடிய இளைஞன் ஒருவகையில் கவனக்குறைவானவன். ஒரு விநோத மான நிகழ்வை அவன் உடனடியாகக் கண்டுபிடிக்கவில்லை. சந்தையிலிருந்து அவன் வீட்டிற்குத் திரும்பும் வழியில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். திடீரென்று பயங்கரமான குளிரை அவன் உணர்ந்தான். சுற்றிலும் பார்த்தான். பனியால் தான் சூழப்பட்டிருப்பதையும், மங்கலான செந்நிறச் சூரியன் தொடுவானத்திற்குக் கீழே மூழ்கிக் கொண்டிருப்பதையும் கண்டான். என்ன நடந்ததென்றால், அவன் அறிந்து கொள்ளாத வகையில் ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகள் அவனை ஆர்க்டிக் வட்டத்திலிருந்து அப்பால் தூக்கி வந்திருந்தது!

மிக அற்புதமான கண்டுபிடிப்பிலிருந்து அதிகளவு பெற வேறு எந்த நபரேனும் முயற்சி செய்திருக்கக் கூடும். ஆனால் கதையில் வரும் இளைஞன் பணம் பெருக்குவதில் எந்தவகையிலும் ஆர்வங் காட்டவில்லை. அவன் விஞ்ஞானத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தான். ஆகவே உலகைப் பற்றி தன்னால் என்னவெல்லாம் பார்க்கவும் படிக்கவும் இயலுமோ அதற்கு இந்தத் தனது அரிய வாய்ப்பைப் பயன்படுத்த முடிவு செய் தான். தன்னுடைய ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகளில் உலகம் முழுமையும் தெற்கிலிருந்து வடக்காகவும், வடக்கிலிருந்து தெற்காகவும் அவன் ஓடிவந்தான். குளிர்காலத்தில் பனி நிறைந்த சைபீரியத் தைகாவிலிருந்து வெப்பமான ஆப்பிரிக்கப் பாலைவனத்திற்கு ஓடிவந்தான். இரவில் கிழக்கு அரைக்கோளத்திலிருந்து மேற்கு அரைக்கோளத்திற்குச் சென்றன்.

அவனது அலங்கோலமான கறுப்புச் சட்டை அணிந்த, சேகரிப்புகளைப் போட்டு வைப்பதற்கான ஒரு பெட்டி தோளில் தொங்க, படிக்கட்டுகளில் ஏறுவதுபோல அவன் தீவுவிட்டுத் தீவுக்கு, ஆஸ்திரேலியாவிலிருந்து ஆசியாவுக்கும், ஆசியாவிலிருந்து அமெரிக்காவுக்கும் தாவக் கூடும்.

மலையிலிருந்து மலைக்கும், கழன்று எரியும் எரிமலைக்கு மேலாக, பனிநிறைந்த உச்சிகளுக்கு மேலாக தாதுப் பொருட்களையும் புற்களையும் அவன் சேகரித்தான். பண்டைய கோவில்களையும் குகைகளையும் ஆராய்ந்தான். பூமியையும் இதில் உயிர்வாழ்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் ஆராய்ந்தான்.

மனிதனது வாழ்க்கை குறித்து ஆராய்கின்ற வரலாற்றாசிரியர்க்கும் ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகள் ஒரு ஜோடி தேவைப்படுகிறது. இந்நூலின் பக்கங்களில் நாம் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்கும், ஒரு சகாப்தத்திலிருந்து மற்றொரு சகாப்தத்திற்கும் சென்றோம்.

13–563



சில வேளைகளில் தலையைச் சுற்றுவது மாதிரி பெரிய இடை வெளிகளிலிருந்து விர்றென்ற ஒலியுடனும், சூடு பறக்கவும் காற்றுக் கிழித்துக் கொண்டு செல்வதை நாம் உணர்கிறோம். ஆனால் ஒரு போதும் நின்றுவிடாது நாம் மேலே செல்கிறோம். முறையான புதை மிதியடிகளில் செல்லும் மக்களைப் போல வழியிலே நின்று எல்லா விவரங்களையும் நம்மால் ஆராய முடியாது.

நாம் பல நூற்றாண்டுகளைத் தாண்டி வந்துவிட்ட நிலையில், ஒரு வேளை நாமறியாமலேயே சில விஷயங்கள் நடந்து விட்டன. ஆனால் நாம் நமது ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகளை ஒரு நிமிடத்திற் கேனும் எடுத்துவிட்டால், சாதாரண நடை வேகத்தில் நாம் தொடர்ந்து சென்றிருக்க முடியும். விவரங்களின் மத்தியில் நமது பாதையை நாம் ஒருபோதும் தெளிவாகப் பார்த்திருக்க முடியாது. காட்டிலுள்ள ஒவ்வொரு மரத்தையும் நாம் அண்மையில் ஆராய்ந்தோமானால், மரங்களுக்காகக் காட்டைப் பார்க்க முடியாது என்பதை நாம் காண முடியும்.

நமது ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகளில் நாம் ஒரு சகாப்தத் திலிருந்து மற்றொரு சகாப்தத்திற்கு மட்டும் செல்லவில்லை, ஆனால் விஞ்ஞானத்திலிருந்து விஞ்ஞானத்திற்குச் சென்றோம்.

தாவர மற்றும் விலங்கு விஞ்ஞானத்திலிருந்து, மொழி விஞ்ஞானத் திற்கும், மொழி விஞ்ஞானத்திலிருந்து கருவிகளின் வரலாற்றிற்கும், கருவிகளின் வரலாற்றிலிருந்து சமயங்களின் வரலாற்றிற்கும், சமயங் களின் வரலாற்றிலிருந்து பூமியின் வரலாற்றிற்கும் நாம் சென்றோம்.

இது இலகுவான பணியாக இருக்கவில்லை, ஆனால் வேறு வழி ஏதும் இல்லை. தனக்குப் பணியாற்றுவதற்காக மனிதன் விஞ்ஞானங் களைப் படைத்தான். பூமியில் மனிதனுடைய வாழ்க்கை பற்றியும், உலகத்தில் அவனது இடம் பற்றியும் நாம் பேசுகின்றபோது நமக்கு எல்லா விஞ்ஞானங்களுமே தேவைப்படுகின்றன.

இப்பொழுது நாம் அமெரிக்காவில் ஸ்பானியர்கள் வென்ற காலக் கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இப்பொழுது நாம் ஐரோப்பாவிற்கு கி.மு. 4000 முதல் 3000 வரையிலான காலத்திற்குத் திரும்பி வருவோம். இரோக்குயஸ் மற்றும் அஸ்டெக்கியர்களைப் போன்ற இனக்குழுவை நாம் காண முடியும். பெண்களே எல்லாவற்றையும் நிர்வகித்து வந்த ‘நீண்ட வீட்டை’ நாம் காண முடியும்.

இங்கே பெண்கள் மதிக்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள்தான் வீட்டைக் கட்டியவர்கள், இனக்குழுவின் நிறுவனர்கள். குளிர்காலத் திற்குத் தேவையான உணவைச் சேமிப்பதை பெண்கள் பார்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் நிலத்தை உழுகிறார்கள், விதைக்கிறார்கள் மற்றும் அறுவடையும் செய்கிறார்கள்.

ஆண்கள் செய்வதை விட அதிகமான வேலையைப் பெண்கள் செய் கிறார்கள், ஆனால் அதிகமாக மதிக்கப்படுகிறார்கள். இதன் காரண மாகத்தான் ஒவ்வொரு வீட்டிலும் செதுக்கிய எலும்போ, சிக்கிமுக்கிக் கல்லால் ஆன பெண்ணின் உருவமோ, இனக்குழுவின் தாய் என்பதை உருவகப்படுத்தும் வகையில் இருக்கிறது. அவளது ஆவி வீட்டைப்

பாதுகாத்தது. அமோக விளைச்சலை வேண்டியும், தங்களது எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியும் மக்கள் அவளை வணங்கினார்கள்.

நூற்றாண்டுகளுக்குப் பிறகு வீட்டின் இந்தத் தாய்-பாதுகாவலர் கிரேக்க நகரமாகிய ஏதென்ஸில் திரும்பியிருந்தது. அங்கே அவள் நகரத்தைப் பாதுகாப்பவளாக எறி ஈட்டியைக் கையில் ஏந்திய கிரேக்கப் பெண்கடவுளாகிய ஆதினாவாக மாறி இருந்தாள். நகரத்தைப் பாதுகாக்க அவளது பெயராலேயே அமைந்த ஏதென்ஸில் பெண்ணின் சிறு உருவச் சிலையாக இல்லாது, மிகப் பெரிய பெண்கடவுளின் சிலையாக நின்றது.

பழைய கட்டிடத்தில் முதலாவது கீறல்கள்

நமது நினைவுகளிலே எந்தவிதமான மீந்த பகுதிகளும் இல்லாமற் போனாலும், முன்னாளைய சமூக வாழ்க்கை பற்றிய எச்சமிச்சங்களை நமது மொழிகள் இன்னமும் பாதுகாத்து வருகின்றன.

குழந்தைகள் அந்நியர்களை விளிக்கின்றபோது ருஷ்யாவில் செய்வது போல 'அத்தை' அல்லது 'மாமா' என்பதோ, வயதில் மூத்த அந்நியர்களை 'தாத்தா' அல்லது 'பாட்டி' என்பதோ, கிளைமரபின் எல்லா உறுப்பினர்களுமே உறவினர்களாக இருந்த சமூக அமைப்பின் எச்சமிச்சங்களே யாகும்.

மேலும் நாம் அடிக்கடி ஆண்கள் கூட்டத்தைப் பார்த்துப் பேசும் போது 'சகோதரர்கள்' என்றும், நமது மகன் இல்லாத ஒரு சிறுவனை 'மகனே' என்றும் அழைக்கிறோம்.

கடந்த காலத்திய இத்தகு எச்சமிச்சங்களைப் பிற மொழிகள் கூட இன்னமும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளன. ஜெர்மனியில் 'எனது மருமகன்கள், மருமகள்கள்' என்று அழைப்பதற்குப் பதிலாக 'என் சகோதரியினுடைய குழந்தைகள்' என்று அவர்கள் கூறுகிறார்கள். இது எவ்வாறெனில் எப்போதோ மறந்துபோன பண்டையக் காலங்களில் சகோதரியின் குழந்தைகள் கிளைமரபுடன் தங்கியிருந்தார்கள். அதே வேளை சகோதரனின் குழந்தைகள் அவனது மனைவின் கிளைமரபைச் சேர்ந்து இருந்தார்கள். ஒரு சகோதரியின் குழந்தைகள் உறவினர்களாக இருந்தார்கள், அவர்கள் 'மருமகன்கள் மற்றும் மருமகள்கள்' ஆவர், அதே வேளை ஒரு சகோதரனுடைய குழந்தைகள் அப்படியல்ல. ஏனெனில் அவர்கள் மற்றொரு கிளைமரபைச் சார்ந்திருந்தார்கள்.

பண்டைய அரசான சாக்ஸியில் அரசனுடைய வாரிசாக அவனது சகோதரி மகன் இருந்தான், அவனது சொந்த மகனல்ல.

சமீபத்தில் கூட, கடந்த நூற்றாண்டில் ஆப்பிரிக்காவில் அஷந்தி நாட்டில் அதனுடைய அரசன் 'நானெ' என்று அழைக்கப்பட்டான். அதன் பொருளாவது 'தாயார்களின் தாய்' என்பதாகும்.

மத்திய ஆசியாவிலுள்ள சாமர்கண்டில் அரசன் 'அஃப்ஷின்' என்று அழைக்கப்பட்டான். பண்டைக் காலத்தில் இது 'வீட்டின் தலைவி' என்று பொருள்பட்டது.

தாயாரே குடும்பத் தலைவியாகவும், வீட்டை ஆட்சி செய்பவளாக

வும் இருந்த தாய்வழியாட்சி முறையின் நினைவு மக்கள் மனத்தில் எங்ஙனம் நிலை நின்றன என்பதற்கு நாம் இன்னும் அநேகச் சான்று களைப் பார்க்க முடியும்.

மக்கள் நீண்ட காலத்திற்கு அதை நினைவு வைத்திருப்பார்களேயா னால், கிளைமரபானது மிக வலிமையாக இருந்தது என்பதே இதன் பொருளாகும். ஆனால் எது இதனைச் சிதைத்தது?

அமெரிக்காவில் இந்த வாழ்க்கை முறையானது ஐரோப்பிய வெற்றி யாளர்களுடைய வருகையினால் அழிந்தது. ஐரோப்பாவில், அமெரிக்கா கண்டுபிடிக்கப்படுவதற்கு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, அது தன்னைத் தானே நொறுக்கிக் கொண்டது. கரையான்களால் ஒரு வீடு தின்னப்பட்டு அழிவது போல ஆகிவிட்டது.

கிளைமரபின் விவகாரங்களை மேன்மேலும் மனிதர்கள் மேற் கொள்ளத் தொடங்கிய போதுதான் இவை எல்லாமே ஆரம்பமாயின.

தொடக்கத்திலிருந்தே பெண்கள்தான் நிலத்தை உழுதார்கள், அதே நேரம் ஆண்கள் கால்நடைகளைப் பார்த்துக் கொண்டார்கள். மந்தைகள் இன்னமும் மிகச் சிறியனவாக இருந்தபோது, நிலத்தை உழும் பெண்களின் வேலை மிக முக்கியமானதாக இருந்தது. மிகக் குறைவான இறைச்சியே கிடைத்தது. சுற்றுக்குப் போதுமான பால் ஒருபோதும் இருந்ததில்லை. பெண்கள் அறுவடை செய்து தானியங் களைச் சேகரிக்கவில்லையென்றால் உண்பதற்கு எதுவுமே இருந்திருக் காது. சில வேளைகளில் கையளவு உலர்ந்த தானியமோ, பார்லியில் செய்த தட்டையான ஒரு ரொட்டியோ தான் முழுமையான உணவாக இருந்தது. இதனோடு தானியத்தைப் போல பெண்களால் சேகரிக்கப் பட்ட காட்டுத் தேனோ, பழங்களோ சேர்ந்து கொண்டன. பெண்கள் தான் குடும்பத்தை நடத்தினார்கள், ஆகவே அதை அவர்கள் ஆட்சி செய்யவும் தொடங்கினார்கள்.

ஆனால் இதுவே எப்பொழுதும் வழக்கமாக இருக்கவில்லை. ஸ்டெப்பியில் முதிரை தானியங்களை வளரச் செய்வது மிகவும் கஷ்ட மானதாக இருந்தது. வளமை ததும்பிய காட்டுப் புற்கள் முதிரைப் பயிர்களுக்கு இடங்கொடுக்க விரும்பவில்லை. அவைகளது வலிமையான வேர்கள் பூமியின் ஆழ்த்தில் சென்றன. மேலும் மண்வெட்டி பூமியைக் கிளறி விட்ட போது அது மென்மையான பூமியின் மேற்பரப்பை வெட்டிச் செல்லவில்லை. கெட்டியான மண்கட்டிகளால் அது தடுக்கப் பட்டது. கன்னி நிலம் உடைப்பதற்கு மிகவும் கடினமானதாக இருந் தது.

ஆகவே மூன்று அல்லது நான்கு பெண்கள் சேர்ந்து மண்கிளறிகளை அலைய விட்டார்கள். ஆனால் இன்னமும் மேற்பகுதியை மட்டுமே அது கீறிச் சென்றது.

உழுசாலில் விதைக்கப்பட்ட விதைகளைச் சூரியன் காய வைத்தது. மேலும் பறவைகளும் வெளியே கொத்தி எடுத்தன. முளை விட்டுக் கிளம்பிய இளம் தளிர்கள் இங்குமங்குமாக சிறிதளவே இருந்தன.

பின்னர் வறட்சியும் நிலத்தில் தனது சொந்தத் தேர்வை நடத்தியது. இளம் முதிரைப் பயிர் கதிர்களை அது கருக்கியது. திண்ணிய உறுதி யான களைச் செடிகளையே விட்டு வைத்தது.

அறுவடை நேரம் வந்தபோது, அறுப்பதற்கு ஏதுமில்லா திருப் பதையே பெண்கள் கண்டார்கள். உயரமான களைச் செடிகளுக்கு இடையே மிக அரிதாகத்தான் தானியக் கதிர்களை அவர்களால் பார்க்க முடிந்தது. நிலை குலையச் செய்துவிட்டுப் பின்னர் வெற்றி யோடு திரும்பிய எதிரியின் பதாகைகளைப் போல ஸ்டெப்பிப் புற்கள் காற்றில் அலைந்தன.

தானியங்களுக்குப் பதிலாக களைச் செடிகள்! பட்ட அத்தனை துயரங்களுக்கும், முதுகை முரிக்கும் வேலைக்கும் அது தகைமை உடையதுதானா?

ஆனால் களைச் செடிகள் மக்களுக்கும் தானியம் கால்நடைக்கு மாக இருக்கின்றன. சமவெளிகளில் பசுக்களும் ஆடுகளும் நிம்மதியான வாழ்க்கை நடத்தின. ஒவ்வொரு படியிலும் அவர்களுக்காக ஒரு விருந்து காத்துக் கொண்டிருந்தது.

கடந்து சென்ற ஒவ்வொரு ஆண்டிலும் மந்தைகள் வளர்ந்தன. தங்களது பட்டாக் கத்திகளை இடைவாரில் சொருகிக் கொண்டு கிளைமரபைச் சேர்ந்த ஆண்கள் அவைகளைப் பின்பற்றிச் செல்ல வேண்டியிருந்தது. மேய்ப்பனின் சிறந்த நண்பனாகிய, அவனது நாய் மந்தையை மேய்க்கவும் பிரிந்து போய்விடாமல் இருக்கவும் அவனுக்கு உதவின. மந்தைகள் இன்னும் வேகமாகப் பல்கிப் பெருகின. ஒவ்வொரு ஆண்டும் மக்களுக்கு அதிகமான பால், இறைச்சி, கம்பளி ஆகியன தந்தன.

இப்போது வீட்டில் போதுமான தானியம் இருக்கவில்லை. ஆனால் ஆட்டுப் பாலில் செய்யப்பட்ட ஏராளமான பாலாடைக் கட்டி இருந் தன. செம்மறியாட்டுக் குட்டி இறைச்சி புழுக்கல் உண்டி குடும்பத்துப் பானைகளில் குமிழி கிளப்பின.

ஸ்டெப்பிகளில் மனிதனுடைய வேலை, மேய்ப்பவனின் வேலை மிக முக்கியமானதாகத் தொடங்கியது.

வட பகுதிக் காடுகளில் ஆண் விரைவிலேயே தனது கிளைமரபில் தலைவன் என்ற தனது நிலையைப் பெறத் தொடங்கினான்.

செங்குத்துப் பாறையொன்றில் வரைப்பட்ட ஓர் உழவனின் பண் டைய ஓவியம் ஒன்று சுவீடனில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ஓவியம் மிகவும் செப்பமற்றதாகவும், சுமாராகச் செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. உழவர்கள் மக்களில் கேலிக்குரியவர்கள் போல, சிறுவர் கள் வரைந்தது போலக் காணப்படுகிறார்கள். ஆனால் எவ்வளவு நன்றாக அல்லது மோசமாக அது வரையப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி நாம் அக்கறை கொள்ளவில்லை, ஏனெனில் அதனை ஒரு சாட்சியமாகத் தான் பார்க்கிறோமே தவிர, ஓர் ஓவியமாக அல்ல. கலப்பையைப் பின்பற்றி உழவன் செல்வதையும், ஒரு ஜோடி எருதுகள் அதனை இழுத்துச் செல்வதையும் இந்த சாட்சியம் நமக்குக் கூறுகிறது.

மனிதகுல வரலாற்றில் ஏறத்தாழ இதுதான் முதலாவது கலப் பையாக விளங்குகிறது. மேலும் இது ஒரு மண்கிளறியைப் போலக் காணப்படுகிறது. ஒரே ஒரு வித்தியாசம் அதனோடு ஒரு நீளமான கம்பு இணைக்கப்பட்டிருப்பதும், மக்களுக்குப் பதிலாக எருதுகள் அதனை இழுத்துக் கொண்டிருப்பதுமாகும்.

ஆக மனிதன் தனது முதலாவது 'மோட்டாரை'க் கண்டுபிடித்து விட்டான்! கலப்பையோடு பூட்டப்பட்ட ஓர் எருது உண்மையில் ஓர் உயிருள்ள மோட்டார்தான். நமது உருக்கு டிராக்டர்களின் உயிருள்ள முதாதையர். எருதின் கழுத்தில் ஒரு நுகத்தடியை மனிதன் வைத்த போது, அவன் தனது சொந்தச் சுமையை விலங்கிற்கு மாற்றினான். இவ்வாறாக அவனுக்கு இறைச்சி, பால் மற்றும் தோல்களைக் கொடுத்திருந்த கால்நடைகள் இப்போது தங்களுடைய வலிமையையும் கொடுத்தன.

மெதுவான, வலிமை வாய்ந்த எருதுகள் தங்களது கழுத்துக்களில் நுகத்தடிகளை மாட்டிய வண்ணம் முதலாவது மரக் கலப்பைகளை இழுக்கத் தொடங்கின. மண்கிளறிகளைக் காட்டிலும் இத்தகு கலப்பை கள் நிலத்தை ஆழமாக வெட்டின. கிளறிய நிலமானது ஒரு கறுப்பு நாடாபோல நீண்டு காணப்பட்டன.

முதலாவது உழவன் தனது வலிமை அனைத்தையும் கலப்பைக் கைப்பிடியில் இறக்கினான்.

இப்பொழுது எருது அவனது சுமையை எடுத்துக் கொண்டது. அது உழுதது, கதிரடித்தது, அவனது தானியத்தைச் சுமந்தது. இலையுதிர் காலத்தில் எருதுகள் சூட்டடிப்புக் களத்திற்குக் கொண்டு செல்லப்பட் டன. தங்களது குளம்புகளால் தானியத்தைக் கதிரடித்தன. பிறகு நுகத்தடி மாட்டப்பட்டு வயல்களிலிருந்து தானியத்தை மூட்டைகளில் ஏற்றி வீட்டிற்கு எடுத்துச் சென்றன.

கால்நடை வளர்ப்பு வேளாண்மையை இணைத்து வளம் பெருக் கின. மேய்ப்பன் உழவனாகவும் மாறினான். மேலும் இது அவனுக்கு வீட்டில் இன்னும் அதிகாரத்தைத் தந்தது.

உண்மை, பெண்களும் தங்கள் பங்கிற்கு முழுமையான வேலை பெற்றிருந்தனர். அவர்கள் நூற்கவும் நெய்யவும் செய்தார்கள், தானி யத்தை அறுவடை செய்தார்கள், குழந்தைகளை வளர்த்தார்கள். ஆனால் அவர்கள் தங்களது முன்னைய அதிகாரத்தையும், சிறப்பை யும் இழந்து விட்டிருந்தனர். புல்வெளிகளிலும், வயல்களிலும் ஆண்களே எசமானர்களாக இருந்தனர்.



தங்களுக்கு ஏதேனும் மகிழ்ச்சியைத் தராத போது அடிக்கடி ஆண் களைப் பார்த்து வீட்டில் இப்பொழுது திட்டுவதில்லை. தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமல்லாமல் ஆண்கள் திரும்பவும் பேசத் தொடங்கினார்கள். முன்னரெல்லாம் ஓர் ஆணை வீட்டை விட்டுத் துரத்துவது மாமியார்களுக்கும், அத்தைகளுக்கும், பாட்டி களுக்கும் மிகவும் இலகுவானதாக இருந்தது. இப்போது அவனுக் காகக் கவலைப்படத் தொடங்கினார்கள். ஏனெனில் தங்கள் குடும் பத்தில் திருமணம் செய்து கொண்டுள்ள மற்றொரு கிளைமரபைச் சேர்ந்த இந்த அந்நியன் அவர்கள் எல்லாருக்குமாக வேலை செய்து கொண்டிருந்தான், கிளைமரபுக்கு உணவூட்ட அவன் உதவி செய்து கொண்டிருந்தான். இப்பொழுது தங்களது சொந்த ஆண்களைப் பிற கிளைமரபினர்க்குக் கொடுப்பதில் அவர்கள் மிகக் குறைந்த ஆர்வமே காட்டினர்.

கிளைமரபுகளுக்கிடையே மேலாண்மையைப் பெறுவதற்காக ஆண்

கள் தங்களுக்கிடையே ராணுவ உடன்படிக்கைகளை வரைந்து கொண்டார்கள்.

முன்னதாக, ஓர் ஆண் இறந்த போது, அவனது சகோதரியின் குழந்தைகள் அவனது உரிமையுள்ள வாரிசாக இருந்தனர். இந்த இனக்குழுச் சட்டத்தை மாற்றுவதற்கு ஆண்கள் முயன்றார்கள்.

ஆப்பிரிக்காவின் துவரெக் இனத்தின் நாடோடி மக்களிடையே பரம்பரை உடைமையானது 'நேர் உரிமையான' பங்கு என்றும் 'மற்ற' பங்குயென்றும் பிரிக்கப்பட்டது. இந்த 'நேர் உரிமையான' பங்கு சகோதரியினுடைய குழந்தைகளுக்குச் சென்றன. இதில் இறந்து போனவன் தனது காலத்தில் தனது தாயிடமிருந்து பெற்றிருந்த அனைத்தும், பொது வீட்டில் வேலை செய்த போது சேர்ந்த அனைத்தும் அடங்கும். 'மற்ற' பங்கில் போர் வெற்றிச் சின்னங்களும், வாணிகத்தின் வாயிலாகச் சேர்த்திருந்தவைகளும் அடங்கும். அது அவனுடைய குழந்தைகளுக்குச் சென்றது.

தாய் வழிச் சமுதாயமானது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு நீடித்தது. அதன் பிறகு பழைய வாழ்க்கை முறையானது, பழைய ஓக் மரத்தைப் போல விரிசல் விடத் தொடங்கியது.

மிகவும் அடிக்கடி கிளைமரபைச் சேர்ந்த மக்கள் பழைய முறைகளுக்கு எதிராகச் சென்றனார். முன்னதாக, மனைவிதான் தனது கணவனைத் தனது குடும்பத்திற்குள் சேர்த்துக் கொள்வதுண்டு. இப்பொழுது கணவன் தனது வீட்டிற்கு ஒரு மனைவியைக் கூட்டி வந்தான்.

இது பழைய முறைகளுக்கு எதிரானது என்பதால், இந்தப் பழக்க வழக்கத்தை மீறக் கூடிய ஒருவன் குற்றவாளியாகக் கருதப்பட்டான்.

ஓர் இளைஞன் மற்றொரு கிளைமரபிலிருந்து ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வெறுமனே நடந்து வந்து விட முடியாது. அவளை அவன் திருட வேண்டியிருந்தது, அவளைத் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது.

நடு இரவில் இளைஞனும் அவனது ஆண் உறவினர்களும், எறி ஈட்டிகளையும் பட்டாக்கத்திகளையும் ஏந்தியபடி, தனது மனைவியாகத் தேர்ந்தெடுத்திருந்த கிளைமரபைச் சேர்ந்த இளம் பெண்ணின் வீட்டிற்குள் ஊர்ந்து செல்வார்கள்.

குரைக்கும் நாய்கள் வீட்டிலுள்ள அனைவரையும் எழுப்பிவிடும். நரைத்த முடிகொண்ட வயதான தாத்தாக்களும், மணமகளின் தாடியில்லாத இளைய சகோதரர்களும் தங்களுடைய ஆயுதங்களுக்காக விரைந்து செல்வார்கள். சண்டை செய்யும் ஆண்களுடைய பயங்கரமான ஒலிகள் பெண்களின் அழுகையை ஓடச் செய்துவிடும். இறுதியாக, மணமகன் தனது கிளைமரபினர் புடை சூழ, தனது உயிருள்ள ஊதியத்தை – தனது மனைவியைத் தூக்கிக் கொண்டு பின்வாங்கிச் செல்வான்.

ஆண்டுகள் கடந்தன. காலப்போக்கில், இனக்குழுச் சட்டத்தின் இந்த மீறலானது இனக்குழுவின் பழக்கவழக்கமாயிற்று. பிறகு மணமகன் மற்றும் மணமகள் உறவினர்களுக்கிடையேயான 'சண்டை' ஒரு சடங்காக மாறியது.



குருதி சிந்துவது அன்பளிப்புகள் ம்ற்றும் மீட்டுப்பணம் கொடுப்பதன் மூலம் மாற்றப்பட்டது. மணமகளுடைய அழுது கொண்டிருந்த தாயார், சகோதரிகள், நண்பர்கள் திருமணச் சடங்கிலே பங்கு கொண்டார்கள், அது ஒரு விருந்தில் முடிந்தது.

விநோதமான கிளைமரபுக்கும், விநோதமான வீட்டிற்கும் வந்து சேர்ந்துவிட்ட இளம் மணமகள் தனது பயங்கரமான விதியை நினைத்து அழுவதைக் கூறும் பண்டைக் காலத் துயரமிக்க பாடல்களை இன்னமும் நினைவில் கொண்டிருக்கக் கூடிய மக்கள் இருக்கிறார்கள்.

மேலும் அவளது விதிக்காக எரிச்சல் கொள்ளத் தேவையில்லை. விநோதமான வீட்டில் அவளது கணவனின் கருணையை நம்பித்தான் அந்த இளம் பெண் இருந்தாள். தனது தொல்லைகளை எடுத்துச் சொல்வதற்கு யாருமே அவளுக்கு அங்கில்லை. ஏனெனில் அவளது மாமன்-மாமியரும், அவள் கணவனின் எல்லா உறவினர்களும் எப்பொழுதுமே அவன் பக்கமே நின்றனர். ஒரு மனிதன் தனது வீட்டிற்குள் ஓர் இளம் மணமகளைக் கொண்டு வந்தது, குடும்பத்தில் ஒரு கூடுதலான வேலையாள் போலவே கருதப்பட்டது. கணப் பொழுதிற்குக் கூட அவள் சோம்பேறியாக உட்கார்ந்து விடக் கூடாது என்பதையும், அவளது எளிமையான பங்கிற்கு மேலாக அவள் ஒரு துளியளவு கூடுதலாக உண்டு விடக் கூடாது என்பதையும் ஒவ்வொருவரும் உன்னிப்பாக கவனித்தார்கள். தாயார் ஆட்சி நடத்திய குடும்பம் தந்தை ஆட்சி நடத்திய குடும்பமாக மாறியது.

இப்பொழுது குழந்தைகள் தங்களது தாயாரின் குடும்பத்தோடு தங்கியிருக்கவில்லை. அவர்கள் தங்களது தந்தையின் குடும்பத்தோடு தங்கினார்கள். உறவுகள் தந்தை குடும்பத்தை வைத்துத் தான் நிர்ணயிக்கப்பட்டன, தாயரை வைத்து அல்ல. ருஷ்யாவில் ‘இன்னார் மகன்’ என்பதைச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கினார்கள். ஒரு மனிதனுடைய சொந்தமான முதலாவது பெயராக அவன் தந்தையின் முதலாவது பெயர் இருந்தது.

தந்தைவழிப் பெயரைப் பயன்படுத்துவது இங்கிருந்துதான் வந்திருக்கிறது. ஆகவே தான் நாம் ஒருவரை ‘பியோத்தர் இவானோவிச்’ என அழைக்கிறோம். முன்னைய காலங்களில் இது ‘பியோத்தர், இவானின் மகன்’ எனப் பொருள்பட்டது.

முதலாவது நாடோடி மரபினர்

ஒரு காலத்தில் அவன் கண்டுபிடித்திருந்த வியத்தகு களஞ்சியத்திலிருந்து மேன்மேலும் அன்பளிப்புகளை மனிதன் பெற்றுக் கொண்டே இருந்தான். ஆயிரக் கணக்கான செம்மறியாடுகள் ஸ்டெப்பியில் புல் மேய்ந்தன. மென்மையான கரிசல் மண்ணை அகழ்ந்து சென்ற தனது எருதுகளை அதட்டிச் செல்லும் உழவனின் குரல் வயல்வெளியில் கேட்டது.

வளம் நிறைந்த பள்ளத்தாக்குகளில் முதலாவது பழத்தோட்டங்களும், திராட்சைத் தோட்டங்களும் இனிமையாக அரும்பவிழ்த்திருந்தன. மாலை நேரங்களில் அத்தி மரங்களுக்குக் கீழே பேசுவதற்காக மக்கள் ஒன்று கூடுவார்கள்.

மனிதனது உழைப்பு அவனுக்கு அநேக இன்பங்களை வழங்கியிருந் திருக்கிறது. ஆனால் இப்பொழுது அவன் கடினமாகவும், கூடுதலாகவும் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு திராட்சைக் கொத்தும், ஒவ்வொரு கோதுமை கதிரும் மனித உழைப்பில் நிறைந்து நின்றன.

திராட்சைத் தோட்டங்களைப் பார்த்துக் கொள்வதில் அதிகமான கடும் உழைப்புத் தேவைப்பட்டது. கனமான திராட்சைக் குலைகள் சேகரிக்கப்பட்ட பிறகு, சாறு எடுப்பதற்காக அவை கற்களில் வைத்து பிழியப்பட்டன. திராட்சைகள் இடிக்கப்பட்டு பிழியப்பட்டன. அவற்றின் கருஞ்சிவப்புக் குருதி ஆட்டுத் தோல் பைகளுக்குள் சென்றன. ஆட்டுத் தோல் உடையுடுத்தி, தனது துயரங்களையும், திராட்சை ரசத்தின் பெருமைகளைப் புகழ்ந்தும், அற்புதமான ஒரு கடவுளைப் பற்றிய மறை ஆற்றல் பாடல்களை மக்கள் பாடினார்கள்.

நதிகளின் தாழ்வான பகுதிகளில், ஒவ்வொரு வசந்தத்தின் போதும் பொங்கிப் பெருகிய நீர் நிலத்தை வளமுடையதாக்கியது. நல்ல மக சூலைப் பெறுவதற்கு இயற்கையும் தன்னாலியன்ற பங்கைச் செய்வது போலக் காணப்பட்டது.

ஆனால் இங்குங்கூட உழவனின் கைகள் ஓய்வு பெறவில்லை. மக்கள் பதுங்கு குழிகளைத் தோண்டினார்கள், வயல்களுக்கு நீர் வராமல் தடுப்பதற்காக அணைகளைக் கட்டினார்கள். எங்கு அதிகம் தேவைப்பட்டதோ அங்கே கால்வாய் வெட்டிக் கடத்தினர்.

தங்களது மண்ணை வளமுண்டாக்கும் நதியை வணங்கினார்கள். இதற்கிடையே, முதுகெலும்பு ஒடிய அவர்கள் பாடுபடாது போவார் களேயானால் களைச் செடிகளைத் தவிர வேறெதுவும் விளையாது என்பதை மறந்து போயிருந்தார்கள்.

காலம் செல்லச் செல்ல, உழவர்கள் இன்னும் மிகுதியான அக்கறை யைக் கொண்டிருந்தார்கள். கால்நடை வளர்ந்தவர் எந்தவகையிலும் ஓய்வெடுக்க நேரமின்றி இருந்தார். அவனது கண்களுக்கு முன்னா லேயே ஸ்டெப்பியின் பசுமையான மேய்ச்சல் தரைகளில் மந்தைகள் வளர்ந்து பல்கிக் கொண்டிருந்தன. மந்தை பெரிதாக இருக்கையில், மேய்ப்பனுக்குக் கூடுதலான வேலை இருந்தது. ஒரு டஜன் செம்மறி யாடுகளை மேற்பார்த்துக் கொள்வது என்பது ஒரு வேலை, ஆனால் ஓர் ஆயிரத்தைப் பார்த்துக் கொள்வது என்பது முற்றிலும் மாறுபா டான ஒன்று. ஒரு பெரிய மந்தை மேய்ச்சல் தரையை மிக விரை வாக நாசப்படுத்தியது, அதனை வேறு புல்வெளிகளுக்கு, கிராமத்தை விட்டு வெகு தொலைவிற்கு அப்பால், ஓட்டிச் செல்ல வேண்டியிருந்தது.

முடிவில், கிராமம் முழுமையுமே தங்களது குச்சிகளை எடுத்துக் கொண்டு மந்தைகளைப் பின்தொடர்ந்து சென்றது. தங்களது கூடாரங்களை மூட்டை கட்டிக் கொண்டு, தங்களது உடைமைகளை ஒட்டகங்களின் முதுகுகளில் ஏற்றிக் கொண்டு, தங்களை முன்னோக்கி நின்ற தங்களது உயிருள்ள செல்வத்தை நோக்கிப் புறப்பட்டுச் செல் வார்கள்.

தங்களுக்குப் பின்னே கைவிட்டுச் சென்ற வயல்களில் விரைவாகவே களைப் பயிர்கள் வளர்ந்திருக்கும். ஆனால் இத்தகு வயல்களை விட்டுச் செல்வதற்கு அவர்கள் உண்மையாகவே வருந்தவில்லை,

ஏனெனில் வறண்ட ஸ்டெப்பிகளில் ஒரு நல்ல அறுவடை என்பது மிகவும் அரிதான ஒன்றாகவே இருந்தது.

வரலாற்றில் முதன் முறையாக, ஒரு தனித்த இனக்குழு மட்டும் வேலைப் பங்கீட்டைச் செய்து கொள்ளவில்லை, ஆனால் பல்வேறு இனக்குழுக்களுக்கிடையேயும் இருந்தன.

ஸ்டெப்பிகளில் கால்நடைகளைப் பெருக்கும் மேய்ப்பர்களின் இனக் குழுக்கள் தோன்றின. அவர்கள் தானியங்களுக்காக கால்நடைகளை மாற்றிக் கொண்டனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே ஒருபோதும் இருந்ததில்லை, ஆனால் இடம் விட்டு இடமாக, ஒரு மேய்ச்சல் நிலத்திலிருந்து மற்றொன்றுக்குமாக அலைந்து திரிந்தார் கள்.

நாடோடி மரபினரின் வாழ்க்கை கரடுமுரடானதாகவும் சுதந்திர மாகவும் இருந்தது.

தலைக்கு மேலே பரந்த நட்சத்திரங்கள் கொண்ட வானத்தைத் தவிர எதுவுமே இருக்காது, திறந்த சமவெளியில் அவர்கள் தங்களது கூடாரங்களை அமைத்துக் கொள்வார்கள். பெரிய ஸ்டெப்பியே அவர் களுடைய வீடாக இருந்தது. அவர்களுடைய நீண்ட குடிபெயர்ச்சிப் பயணத்தில் அலைந்து செல்லும் ஒட்டகங்களின் முதுகுகளில் குழந் தைகள் ஊசலாடியபடி தூங்கினார்கள். ஏனெனில் அந்த ஒரு தொட் டிலையே அவர்கள் அறிவார்கள்.

எனினும், நாம் பேசும் காலத்தில் மேய்ப்பர் இனங்களுக்கிடையே உண்மையான நாடோடி மரபினர் மிகக் குறைவாக இருந்தனர்.

உயிருள்ள கருவி

ஒரு நாடோடி மரபினருடைய வாழ்க்கை அமைதியானதாகவோ, அரவமற்றதாகவோ இல்லை. அவர்கள் சுற்றித் திரிகின்ற போது, உழவர்களுடைய வயல்களுக்கும் மந்தைகளுக்கும் வந்த போது, நாடோடி மரபினர் தாங்கள் பயிர் செய்திராத ஒன்றை வலுக்கட் டாயமாக அடிக்கடி எடுத்துக் கொண்டார்கள். ஒரு நதிப் பள்ளத்தாக் கிற்கு வரும்போதோ, ஸ்டெப்பியைத் தொடர்ந்த காட்டிற்கோ வரும்போது, வழியிலுள்ள கிராமங்களை எரிக்கவும், கொள்ளை யடிக்கவும், தானியங்களை மிதித்துத் துவைக்கவும், கால்நடைகளைக் கடத்தவும், கிராமத்தார்களைக் கைதிகளாக பிடிக்கவும் செய்வார்கள்.

பெரும்பாலும் அவர்களுக்குக் கைதிகள் தேவைப் பட்டார்கள், ஏனெ னில் அவர்களை வேலை செய்ய வைக்கவும், மந்தைகளைப் பார்த்துக் கொள்ள வைக்கவும் முடியும்.

இவ்வாறாகத்தான் நாடோடி மரபின் மேய்ப்பர்கள் வாழ்ந்தார் கள். ஆனால் விவசாயிகள் எந்தவகையிலும் குறிப்பாக அமைதியை விரும்பக் கூடியவர்களாக இல்லை.

இலையுதிர்காலத்தில், அறுவடை நடக்கும் போது, அண்டை அயலார்களைத் தாக்கி அவர்களுடைய தானிய இருப்புக்களையும், துணி, ஆபரணங்கள் மற்றும் ஆயுதங்களையும் திருடுவது பற்றி அவர்கள் பொருட்படுத்துவதில்லை. மீண்டும் ஒருதரம் அவர்களது மிகச் சிறந்த வெற்றிக் கருவூலமாக விளங்கியது கைதிகள் தாம். குழிகளைத் தோண்ட

வும், அணைகள் கட்டவும், எருதுக் கூட்டங்களை ஓட்டவும் கூடுதலான கைகள் விவசாயிகளுக்குத் தேவைப்பட்டன.

தொடக்கத்தில், கைதிகள் அடிமைகளாக்கப்படவில்லை. ஏனெனில் கூடுதலான ஒரு ஜோடி கைகளால் எந்த வித விஷேட லாபமும் இல்லை. மனிதன் உழைத்தாலுங்கூட, அவன் ஈட்டிய அளவிற்கு அவன் சாப்பிட்டான்.

பெரிய மந்தைகள் ஏற்பட்ட போது, ஒருவன் பயன்படுத்தக் கூடியதைவிடக் கூடுதலாக தானியம், இறைச்சி மற்றும் கம்பளி ஆகிய வற்றை ஒரு மனிதனது வேலை உற்பத்தி செய்த போது எல்லாமே மாறிப் போயின. தங்களது தேவைகளுக்கு அதிகமாகவே புதிரை தானியங்களை, தங்களது தானியத்திற்குக் கம்பளியை மாற்றிக் கொள் வதற்காக, பயிர் செய்வதற்குத் தொடங்கினார்கள். இதே போலவே இடையர்களும் அவர்களது சொந்தத் துணிகளுக்கும் இறைச்சிக்கும் தேவைப்பட்டதற்கு மேலாக மிகப் பெரிய ஆட்டு மந்தைகளை வைத்துக் கொள்ள முயன்றார்கள். ஏனெனில் கூடுதலான கம்பளியைத் தானியத்திற் காகவும் ஆயுதங்களுக்காகவும் வியாபாரம் செய்ய முடியும்.

இத்தகைய பண்டமாற்றும், அடிக்கடி செய்த கொள்ளையும் சில கிளைமரபினர்களையும் குடும்பங்களையும் மற்றவர்களை விட பணக் காரர்களாக வைத்திருந்தன. அவர்களது விலங்குக் கூட்டங்கள் பெரி யனவாக இருந்தன. அதிகமான புதிரை தானியங்களை அவர்கள் பயிர் செய்தார்கள். இத்தகைய விலங்குக் கூட்டங்களைப் பார்த்துக் கொள்ளவும், இத்தகைய நிலங்களை உழவும் போதுமான வேலை யாட்களை அவர்கள் பெற்றிருக்கவில்லை. இப்போதுதான் சில மக்கள் மற்றவர்களை அடிமைகளாக்கத் தொடங்கினார்கள்.

ஓர் அடிமையின் வேலை அவனது எசமானனுக்கும் அவனுக்கும் உணவளித்தது. எல்லா எசமானர்களுமே செய்ய வேண்டியிருந்ததெல் லாம் அடிமை அதிகமாக வேலை செய்து, குறைவாகச் சாப்பிடும்படி பார்த்துக் கொள்வதுதான். ஆகவே ஒரு மனிதன் மற்றொரு மனித னைத் தனது உயிருள்ள கருவியாக ஆக்கினான்.

மனிதனின் தரம் தாழ்த்தப்பட்டது. இவனை ஒரு எருது போலக் கருதி இவனது கழுத்திலே ஒரு நுகத்தடி மாட்டப்பட்டது.

சுதந்திரத்தை நோக்கிய பாதையில், இயற்கை சக்திகளின்மீது அவன் எசமானனாகிய போது, தனது சக மனிதனுக்கு மனிதன் அடிமை யானான்.

முன்னதாக, தன்னை விவசாயம் செய்த அனைவருக்கும் நிலம் பொதுச் சொத்தாக இருந்தது. இப்பொழுது அடிமை விவசாயம் செய்யத் தொடங்கினான், நிலம் அவனுக்குச் சொந்தமாக இருக்க வில்லை.

அவன் ஓட்டிய எருது அவனுடைய எருதாக இல்லை. அவன் செய்த அறுவடை அவனுக்குச் சொந்தமாக இருக்கவில்லை.

பண்டைய எகிப்தில் அடிமை எருதுகள் கூட்டத்தை ஓட்டிச் செல் லும் போது பாடியபடி வினையாற்றினான்:

கோதுமை கதிர்களைச் சவட்டி நசுக்கிடு, எருதுகளே!
கோதுமை கதிர்களைச் சவட்டி நசுக்கிடு!
அறுவடை எனது எசமானனுக்குரியது.

மனிதகுல வரலாற்றில் முதன் முறையாக அங்கே எசமானர்களும் அடிமைகளும் தோன்றினார்கள்.

நினைவும் நினைவுச் சின்னமும்

கடந்த காலத்தை நோக்கிய நமது பயணமானது ஒரு வகையில் மிகவும் சிரமமான ஒன்று. ஏனெனில் நாம் பார்வையாளர்களைப் போலல்லாது கண்டுபிடிப்பாளர்களைப் போல குகைகளின் திருக்கு மறுக்கான பாதைகளில் அலைந்து திரிந்தோம். நாம் கண்டுபிடித்த ஒவ்வொரு புதிய பொருளுமே விடுவிக்கப்பட வேண்டிய புதிர்களாக இருந்தன. வழி நெடுகிலும் எந்தவித அறிவிப்புப் பலகைகளும் இல்லை, நமது கண்டுபிடிப்பில் நமக்கு உதவக்கூடிய வகையில் சரியான பாதையைச் சுட்டிக்காட்டக்கூடிய அம்புக்குறிகள் இல்லை. கல் யுகத்தில் வாழ்ந்த மனிதன் நமக்காக என்ன மாதிரியான அடையாளங்களை விட்டுச் சென்றிருக்க முடியும்? எப்படி எழுதுவது என்பது கூட அவனுக்குத் தெரியாது!

இப்பொழுது, பாதை நெடுகிலும் அடையாளங்கள் உள்ள சாலைக்கு நாம் இறுதியாக வந்து சேர்ந்துள்ளோம். கல்லறைக் கற்களிலும், கோவில் சுவர்களிலும் உள்ள கல்வெட்டுச் செதுக்கல்களை நாம் முதலாவதாகக் காண்கிறோம். தீய ஆவிகளை விரட்டியடிக்கும் நோக்கத்தோடு செதுக்கப்பட்ட மந்திர அடையாளங்களாக இனிமேலும் அவை விளங்கிக் கொண்டிருக்கவில்லை. மக்களுக்காகவும் மக்களைப் பற்றியும் உள்ள முழுமையான படக்கதைகள் அவை.

எனினும் நமது எழுத்துக்களை எதுவும் ஒத்திருக்கவில்லை. ஓர் எருது என்பது ஓர் எருதின் படமாகும். ஒரு மரமானது அதனது எல்லாக் கிளைகளோடும் வரையப்பட்டுள்ளது.

எழுத்தின் வரலாறு படவார்த்தைகளோடு தொடங்குகிறது. இந்தப் படங்கள் எளிமையாக்கப்படுவதற்கும், அடையாளங்களாக மாற்றப்படுவதற்கும் பல நூற்றாண்டுகள் கடந்தன.

நமது அரிச்சுவடியினுடைய எழுத்துக்கள் எந்தப் படங்களிலிருந்து ஏற்பட்டிருக்கின்றன என்பதை ஊகிப்பது மிகவும் கஷ்டமானதாகும். A என்ற எழுத்து காளையினுடைய தலை என்பதை யார் சிந்தித்துப் பார்க்கக் கூடும்? ஆனால் Aயை நாம் தலை கீழாகத் திருப்பினோமானால், அது ஒரு கொம்புத் தலையை ஒத்திருக்கிறது என்பதை நாம் காண முடியும். பண்டைய செமிட்டிய மொழியிலே கொம்புத் தலைக்காக A நின்றது, முதலாவது சொல் 'அல்லிஃப்' எனப்பட்டது, இதற்கு 'காளை' என்பது பொருள்.

இதே முறையில் அரிச்சுவடியினுடைய எல்லா எழுத்துக்களின் வரலாற்றையும் நம்மால் தடங்காண முடியும். 'கண்' என்பதற்கு O என்ற எழுத்தும், ஒரு நீளமான கழுத்தில் நின்ற தலையை P என்ற எழுத்தும் காட்டின என்பதை நாம் காண முடியும்.

ஆனால் நமது ஏழு கூட்டிணைந்த புதைமிதியடிகள் நம்மை இன்னும்

வெகு தொலைவிற்கு அப்பால் தூக்கிச் சென்றிருக்கிறது.

உண்மையில், நமது கதையில் முதலாவது படவார்த்தைகள் தோன்றிய கட்டத்தை நாம் இப்பொழுதுதான் அடைந்திருக்கிறோம்.

மிகவும் மெதுவாகவும், நிச்சயமில்லாமலுமே மனிதன் எழுதுவதற்குக் கற்றுக் கொண்டான்.

எனினும், அவன் கற்றுக் கொண்டது சரியான நேரமாகவே இருந்தது.

கற்றுக் கொள்வதற்கு வேண்டிய அறிவோ, புள்ளி விவரங்களோ அதிகமாக இல்லாதிருந்த காரணத்தால், மனிதர்கள் கற்றுக் கொண்ட அனைத்துமே அவர்களது நினைவுகளில் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது. மரபுவழிக் கதைகள், பழங்கதைகள் மற்றும் தேவதைக் கதைகள் ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவனுக்குச் சொல்லப்பட்டன. ஒவ்வொரு முதியவருமே ஓர் உயிருள்ள புத்தகமாக இருந்தனர். கதைகள், மரபுவழிக்கதைகள், மற்றும் பொது அறிவுச் சட்டங்களை மக்கள் மனப்பாடம் செய்து ஓர் அரிய சுமைபோல தங்களது குழந்தைகளுக்குத் தெரிவித்தனர். ஏனெனில் மாற்றாக அவர்களும் அவர்களது குழந்தைகளுக்கு அதனை அளிக்க முடியும். ஆனால் இந்தப் பளு அதிகமாக, அவை எல்லாவற்றையும் நினைவில் வைத்திருப்பதும் கஷ்டமாயிற்று.

ஆகவே நினைவுச்சின்னம் ஒரு மனிதனது நினைவுக்கு உதவ வந்தது. அநுபவத்தை மாற்றுகின்ற போது, பேச்சு மொழிக்கு எழுத்து மொழி உதவத் தொடங்கியது. ஒரு படைத் தலைவனுடைய போர் வினைகள், போர்கள் ஆகியன, பின்னால் வரும் தலைமுறையினரின் மனத்தில் பசுமையாக நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக, அவனது கல்லறையில் சித்திரிக்கப்பட்டன.

பிற நட்பு இனக்குழுக்களின் படைத் தலைவர்களுக்குத் தூதுவர்கள் அனுப்பப்பட்ட போது, சில பட வார்த்தைகள் ஒரு மரப்பட்டைத் துண்டிலோ, மண் பலகையிலோ நினைவுக் குறிப்பாகக் குறித்து வைக்கப்பட்டன.

கல்லறை முதலாவது நூலாக இருந்தது; மரப்பட்டை முதலாவது எழுது தாளாக இருந்தது.

நமது தொலைபேசிகள், வானொலிக் கருவிகள், ஒலிப்பதிவு நாடாக் கருவிகள் ஆகியன குறித்து நாம் பெருமைப் படுகிறோம். இவை எல்லாமே காலத்தையும் இடத்தையும் நாம் வென்று நிற்பதற்கு உதவுகின்றன. நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் நமது குரல்களைக் கடத்துவதற்கு நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். நமது குரல்கள் நாடாவில் பதியப்பட்டது. இந்த ஒலிப் பதிவுகள் இப்பொழுதிலிருந்து நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கூடத் தெளிவாகப் பேசும். நாம் மிகப் பெருமளவில் முன்னேற்றமடைந்திருக்கிறோம், ஆனால் நமக்கு முன்னால் வாழ்ந்தவர்களுடைய சாதனைகளை நாம் மறந்து விடக் கூடாது. நாம் பிறப்பதற்கு முன்னர் எப்போதோ நமது மூதாதையர்கள் மரப்பட்டையில் எழுதியதன் மூலம் இடத்தையும், கல் நினைவுச் சின்னங்களில் செய்திகளைப் பொறித்ததன் வாயிலாக நேரத்தையும் முதலாவதாக வென்றார்கள்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற மிகப் பெரிய போர் வினைகளையும், சண்டைகளையும் பற்றிய கதையை நமக்குக் கூறும் இத்தகைய ஏராளமான நினைவுச்சின்னங்கள் தப்பிப்பிழைத்திருக்கின்றன. வாட்களையும், எறி ஈட்டிகளையும் சுழற்றி வீசிய போர்வீரர்களின் உருவங்கள் கல்லில் பொறிக்கப்பட்டிருக் கின்றன. இவர்கள் வெற்றி அணிவகுப்பில் வீடு திரும்புகின்ற வெற்றி யாளர்கள், அதே வேளை இவர்களுக்குப் பின்னால் இவர்களது கைதி கள் தலைகளைத் தொங்கப் போட்டபடி, முதுகுப்புறம் கைகள் கட்டப் பட்டபடி, உலைந்து நடக்கிறார்கள். மேலும் இங்கே, பட வார்த்தை களுக்கு மத்தியில், அடிமைத்தனத்திற்கும் சமத்துவமின்மைக்கும் அடை யாளமாய் கைவிலங்கின் ஓர் ஓவியத்தை நாம் காண்கிறோம். இந்த அடையாளம் மனித இன வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கத்தை, அடிமை முறையின் ஆரம்பத்தை நமக்குக் கூறு கிறது.

இதே போன்ற அநேகப் பட ஆதாரங்களை எகிப்திய கோவில் களின் சுவர்களில் நாம் பிறகு காண்போம்.

ஒரு நீண்ட வரிசையில் அடிமைகள் நின்று கட்டுமான இடத்திற்குச் செங்கல்களை இழுத்துக் கொண்டு வருவதை ஒன்று சித்திரிக்கின்றது. ஓர் அடிமை தனது தோளில் சில செங்கல்களை அடுக்கியிருக்கிறான். மற்றவன் அடுக்குக் குவியல் கீழே சாய்ந்து விடாதபடி ஆதரவாகத் தனது இரு கைகளையும் நீட்டிக் கொண்டிருக்கிறான். விவசாயிகள் இரண்டு வாளிகளில் நீரைச் சுமப்பது போல், மற்றொருவன் செங்கல் களை ஒரு நுகத்தடியில் சுமந்து கொண்டிருக்கிறான். கொத்தன்கள் ஒரு சுவரைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். செங்கல் குவியலின் மீது ஒரு மேற்பார்வையாளர் உட்கார்ந்து கொண்டிருப்பது போலக் காட்டப்படுகிறது. அவர் தனது முழங்கையை முழங்காலின் மீது வைத்துக் கொண்டிருக்கிறார். ஒரு நீளமான குச்சியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். இவர் வேலை செய்ய வேண்டியதில்லை. அவரது வேலை மற்றவர்களை வேலை செய்யச் செய்வதேயாகும். கட்டுமான இடத்திற்கு அருகில் மற்றொரு மேற்பார்வையாளர் மேலும் கீழும் நடந்து கொண்டிருக்கிறார். அவர் தனது குச்சியை அச்சுறுத்தும் வகை யில் ஓர் அடிமையின் தலைக்கு மேலாக உயர்த்திக் கொண்டுள்ளார். அவரது விருப்பத்திற்கு மாறாக அந்த அடிமை ஏதோ செய்துவிட் டது போலத் தோன்றுகிறது.

அடிமைகளும் சுதந்திர மனிதர்களும்

பூண்டிலிருந்து ரோஜா எதுவும் எப்போதும் வளர்வதில்லை,
சுதந்திர மனிதன் எவனும் எப்போதும் அடிமையாய்ப் பிறப்பதில்லை.

அடிமை முறை சமூக வாழ்க்கையோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன் றாக விளங்கிய காலத்தில் கிரேக்கக் கவிஞர் மெக்காராவின் தியோக் னிஸ் இவ்வாறு எழுதினார்.

எனினும், தொடக்கத்தில் அடிமைகள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட வில்லை. சுதந்திர மனிதர்களும் அடிமைகளும், ஒரு தனித்த பெரும்

குடும்பமாக அல்லது சமுதாயமாக அமைத்துக் கொண்டு, ஒன்றாக வே வாழ்ந்தார்கள், வேலை செய்தார்கள்.

தந்தை, குடும்ப ஆட்சி முதல்வர், இந்தக் குடும்பச் சமுதாயத்தின் தலைவனாகவும் அரசனாகவும் இருந்தான். அவனது மகன்கள், அவர்களது மனைவிகள் மற்றும் குழந்தைகள், அவனது அடிமைகள் அனைவருமே அவனது கூரையின் கீழேயே வாழ்ந்தனர். அடங்காத தனது அடிமையைச் சவுக்கால் அடிக்க முடிந்ததைப் போல தந்தை தனது அடங்காத மகனையும் அடிக்க முடிந்தது.

வயதான அடிமை தனது எசமானனிடம் பேசுகின்றபோது அவனை வெறுமனே 'மகன்' என்று அழைத்தான். அதே நேரம் பழக்கப்படி எசமானன் வயதான அடிமையைத் 'தந்தை' என்று அழைத்தான்.

ஒடிஸியை நாம் படித்திருந்தால் பன்றி மேய்ப்பவனான இவ்மாயசைப் பெரும்பாலும் நினைவில் வைத்திருக்க முடியும். தனது எசமானனது மேசையில் உண்ணவும் பருகவும் செய்கிறான். ஓர் இனக் குழுவினுடைய தலைவன் 'கடவுளுக்கு இணையான' என அழைக்கப்படுவது போல இவ்மாயசையும் 'கடவுளுக்கு இணையான' என அழைக்கப் படுகிறான்.

ஆனால் ஒரு பாட்டிலுள்ள வார்த்தைகளை நாம் எப்பொழுதுமே நம்ப முடியாது. பன்றி மேய்ப்பன் இவ்மாயஸ் கடவுளுக்கும் சமமானவன் இல்லை, தனது எசமானனுக்கும் சமமானவன் இல்லை. வேலை செய்யும்படி அவன் கட்டாயப்படுத்தப் பட்டான், அதே வேளை அவனது எசமானன் தனக்காக வேலை செய்பவனாக இருந்தான். குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை விட ஓர் அடிமை அதிகமான வேலை செய்ய வேண்டியிருந்தது, ஆனால் அவன் பெற்றுக்கொண்ட பங்கு மிகக் குறைவானதாகவே இருந்தது. அடிமை அவனது எசமானனின் சொத்தாகத் திகழ்ந்தான், அதே வேளை எசமானன் சொத்துக்களுக்குச் சொந்தக்காரன்.

வயதான எசமானன் இறந்தபோது, அவனுடைய மகன்களுக்கு இறந்தவனுடைய பிற உடைமைகளும், அவனது சேமிப்புப் பொருட்களும், அவனது கால்நடை மந்தைகளும் சொத்தாகியது போல அவனது அடிமைகளும் மாறினார்கள்.

இந்தக் குடும்ப-இனத்தில் சமத்துவம் இருந்ததற்கான எந்தத் தடயமும் இல்லை.

இங்கு தந்தை தனது குழந்தைகளுக்கு மேலாக மேலாண்மை செலுத்தினான், கணவன் தனது மனைவியின் மேலாளனாக இருந்தான், மருமக்கள் மீது மாமியும், சிறுவர்கள் மீது வயதான மருமக்களும் அதிகாரம் செலுத்தினர். ஆனால் அடிமையோ ஏணியின் கடைசியில் இருந்தான். அவன் எல்லாராலுமே அதிகாரம் செலுத்தப் பட்டான்.

கிளைமரபுகளுக்கிடையேயும், சமூகங்களுக்கிடையேயும் நிலவிய முன்னாளைய சமத்துவமும் மறைந்து போயிற்று. சிலர் அதிகமான கால்நடைகளையும், சிலர் குறைவாகவும் பெற்றிருந்தார்கள். செல்வத்தின் அளவு கோலாகக் கால்நடை விளங்கியது. துணிக்காகவும் ஆயுதங்களுக்காகவும் ஒரு காளையை பண்டமாற்றுச் செய்ய முடிந்தது. முதலாவது

வெண்கல நாணயங்கள் விரியச் செய்யப்பட்ட காளையின் தோலோடு எதற்காக அச்சிடப்பட்டன என்பதில் நல்ல காரணம் இருக்கவே செய்தது.

இருப்பினும், ஓர் அடிமை இன்னமும் ஒரு காளையை விட மதிப்புடையவனாகவே விளங்கினான்.

ஓர் அடிமை பன்றிகளையும், பசுக்களையும், செம்மறியாடுகளையும் மேய்த்தான். மாலை நேரங்களில், அவைகளோடு பகல் முழுக்க மேய்ச்சல் தரையில் இருந்துவிட்டு, அவைகளைத் திரும்ப ஓட்டிவந்து அடைப்புகளுக்குள்ளும், கழியரண்களுக்குள்ளும் அடைத்தான். அறுவடை செய்வதற்கு ஓர் அடிமை உதவினான், திராட்சையைப் பிழிந்து சாறு எடுத்தான், ஆலிவ் கொட்டைகளிலிருந்து எண்ணெய் எடுத்தான். பொன்னிறக் கதிர்களின் குவியல்கள் களஞ்சியங்களை நிறைத்தன. நறுமணமுள்ள எண்ணெய் தொட்டிகளிலிருந்து சிறுதாரையாக வடிந்து மிகப் பெரிய இரண்டு கைப்பிடிகளுள்ள ரோம மட்பாண்டங்களுக்குச் சென்றன.

சுதந்திரமான மனிதனுக்கு அடிமை உதவினான், ஆனால் கடினமானதும், கீழ்த்தரமானதுமான வேலையை அடிமை செய்தான்.

பிறகு போர்கள் லாபகரமாக இருந்தன, ஏனெனில் போர்கள் அடிமைகளை உற்பத்தி செய்தன, மேலும் அடிமைகள் தங்களது உரிமையாளர்களுக்காகப் பெரும் செல்வத்தை உருவாக்கினார்கள்.

ஆக, சுதந்திரமான மனிதர்கள், தங்களது மந்தைகளை மேய்ப்பதற்கும், தங்களது நிலத்தை உழுவதற்கும் அடிமைகளைப் பின்னுக்கு விட்டுவிட்டு போருக்குச் சென்றார்கள்.

போர்கள் இன்னும் அதிகமான வேலையைக் கொண்டு வந்தன. மற்றொரு இனக்குழுவைத் தாக்குவதற்காக மக்களுக்கு வாட்கள், எறி ஈட்டிகள் மற்றும் தேர்கள் தேவைப்பட்டன. விரைந்தோடும் கால்களையுடைய குதிரைகளைச் சேணம் பூட்டி போர்வீரர்கள் தங்களுடைய தேர்களில் மாட்டினார்கள், போர்க்களங்களை நோக்கிப் பறந்து சென்றார்கள்.

ஆனால் போர் முறையில் தாக்குதல்களும், தற்காத்துக் கொள்ளுதலும் இருக்கின்றன. எதிரியினுடைய வாட்கள் மற்றும் எறி ஈட்டிகளின் வீச்சுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போர்வீரர்கள் தலைக்கவசங்களை அணியவும், கேடயங்களை எடுத்துச் செல்லவும் வேண்டியிருந்தது. மேல் நிகழ்வாக, இனக்குழுக்களின் வீடுகள் மிகப் பெரும் கற்பாளங்களால் உருவாக்கப்பட்ட சுவர்களால் சுற்றிவளைக்கப்பட்டன.

கிளைமரபு செல்வமுடையதாகவும் வலுவானதாகவும் இருந்தால், தனது பாதுகாப்பிற்காக அது அதிக நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டது. பாதுகாத்துக் கொள்வதற்கு அநேகமானவற்றை அது பெற்றிருந்தது.

சீக்கிரத்திலேயே, சுவர்களை ஒட்டி டஜன் கணக்கான அறைகள், அரண் கொண்ட சேமிப்பு அறைகள், நுழைவாயிலில் வலுவான கதவுகள் கொண்ட பெரும் கோட்டை-வீடுகள் மலை உச்சிகளில் தோன்றின.

கூடாரம் ஒரு வீடாகியதும் வீடு ஒரு நகரமாகியதும் எங்ஙனம்

பண்டைய கோரிஜம் என்ற தனது நூலில் எஸ். தோல்ஸ்தோவ் என்ற ஒரு சோவியத் தொல்பொருள் ஆய்வாளர் மத்திய ஆசியப் பாலைவனங்களில் அவர் கண்டுபிடித்த கோட்டை-வீடுகளின் இடிபாடு களைப் பற்றி விவரித்திருக்கிறார்.

இந்தக் கட்டிட அமைப்புக்கள் ஒரு வீட்டைக் காட்டிலும் ஒரு நகரத்தின் அளவில் இருக்கின்றன.

கனமான சுட்ட களிமண் சுவர்கள் ஒரு பெரிய காலியான சதுக் கத்தை வேலியிட்டது போல பல மைல்களுக்கு நீண்டிருக்கின்றன. மேற் கூரைகளில் சிறிய சன்னல்களுடன் கூடிய வளைவுகளுக்கிடையேயான இடைவழிகளில், சுவர்களின் உட்புறமாக சமூக மக்கள் அவர்களாக வே வாழ்ந்தார்கள்.

நெருக்கமான இருண்ட சுவர்களுக்கு இடையேயான இடைவழி களில் ஆயிரக் கணக்கான மக்கள் வாழ்ந்தார்கள் என்பதைக் கண்டு பிடிக்க வியப்பாகவே இருந்தது. அதேவேளை மையத்தில் மிகப் பெரிய சதுக்கம் காலியாகவே இருந்தது.

தோல்ஸ்தோவ் மிக எளிமையான ஒரு விடையைக் கண்டுபிடித் தார். அந்த நாட்களில் கோரிஜம் மக்களுடைய முக்கியச் செல்வமாக இருந்தது அவர்களுடைய கால்நடைகள் தாம். சதுக்கமானது உண் மையிலேயே அநேக மந்தைகளுக்கான மிகப் பெரிய அடைப்பாக இருந் தது. அதேவேளை துவாரங்கள் கொண்ட சுவர்களும், கண் காணிப்புக் கோபுரங்களும் எதிரினுடைய தாக்குதலிலிருந்து இந்தச் செல்வத்தைக் காப்பாற்றின.

ஓர் எதிரி தாக்கியபோது, கோட்டை-வீட்டினுடைய எல்லாக் குடி யிருப்பாளர்களும் துவாரங்களில் தங்களது இடங்களில் நின்று, முற்று கையாளர்கள் மீது அம்புமழை பொழிந்தார்கள்.

ஆனால் மொத்தமாகச் சேர்ந்து அவர்கள் பாதுகாத்த செல்வம், அவர்களது பொதுச் சொத்தாக நீடித்து இருக்கவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் உறவு கொண்டவர்களாக இருந்தாலும் சில குடும் பங்கள் மற்றவர்களை விட அதிகமான செம்மறிகளும், காளைகளும், குதிரைகளும் பெற்றிருந்தனர்.

மிகப் பண்டைய அக்காலங்களில் ‘செல்வமுடைய’ என்ற சொல் ஒரு சொற்றொடரின் ஒரு பகுதி என்று மரபுவழிக் கதைகள் நமக்குக் கூறுகின்றன. சிலர் ‘செல்வமுடையவர்’ என்று மக்கள் வெறுமையாகக் கூறவில்லை, ‘மந்தைகளில் செல்வந்தர்’, ‘குதிரைகளில் செல்வந்தர்’ என்றே அவர்கள் கூறினார்கள்.

பக்கத்துக் கோட்டையின் மீது செய்யப்படும் ஒவ்வொரு புதிய தாக்குதலும் போர்த் தலைவனுடைய கால்நடைகளைப் பெருக்கிற்று, பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையே இருந்த இடைவெளியை அதி கரித்தது.

தோல்ஸ்தோவும் அவரது சகாக்களும் வேறு கோட்டைகளைக் கண்டுபிடித்தார்கள் — பிற்காலங்களில் கட்டப்பட்ட வீடுகளையும் நகரங் களையும்.

பாலைவனத்தில் அவர்களது அகழ்ந்தெடுப்புக்கள் அநேக ஆண்டு களுக்கு நீடித்தன. இது ஒரு மிகச் சிரமமான, வினைத்திட்பமுடைய

பணியாக இருந்தது. எப்போதோ மறைந்து போன நாகரிகத்தின் சுவடுகளைத் தேடிக் கொண்டு சோவியத் அறிஞர்கள் ஒட்டகம், வாகனம், எந்திரப் படகு, விமானம் ஆகியவற்றில் பயணம் மேற்கொண்டனர். சில நேரங்களில், ஓர் ஒட்டகத்தினுடைய திமில் மீதிருந்தோ, ஒரு சிறு குன்றின் மேலிருந்தோ அவர்களால் பார்க்க முடிந்ததெல்லாம் உப்புக்கள் கலந்த பழுப்பு நிற புற ஓடுகளால் மூடப்பட்ட மண் மேடுகளேயாகும். ஆனால் ஒரு விமானத்தில் பாலைவனத்திற்கு மேலே தாழப் பறந்து சென்று அவர்களால் சுவர்கள், தெருக்கள் மற்றும் பெரிய சமுதாய வீடுகள் ஆகியவற்றின் ஒரு தெளிவான உருவரையை கண்டுபிடிக்க முடியும்.

இத்தகைய எல்லா வீடுகளையும் நகரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஒரு பண்டைக்கால சமுதாய அமைப்பிலிருந்து அடிமையை வைத்திருந்த முறைக்கு ஏற்பட்ட மாற்றத்தின் கதையை அவர்கள் இறுதியாக ஒன்று சேர்த்தார்கள்.

ஜன்பாஸ்-காலாவுக்கு அண்மையில் இங்கே மீனவர்களுடைய ஒரு கூடாரம் இருக்கிறது. இங்கு பணக்காரனோ, ஏழையோ யாரும் இல்லை. எல்லா அடுப்படிகளுமே ஒரே அளவினதாக இருக்கின்றன. எல்லா மக்களுமே சமமாக இருந்தார்கள், ஏனெனில் அவர்கள் சமமான ஏழைகளாகவே இருந்தனர். வீடு அரண்காப்பு செய்யப்படவில்லை. இங்கு பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துகள் எதுவும் இருக்கவில்லை.

இந்தக் கூடார மையத்திலிருந்து அதிகத் தொலைவில் இல்லாதபடி களிமண்ணாலான ‘நீண்ட வீட்டின்’ எச்சமிச்சங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். அடுப்படிகள் ஒரு நீண்ட வரிசையில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக இரண்டு 150 அடி வளைவுகளுக்கிடையேயான இடை வழிகள் வரையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வீடு எந்தவகையிலும் அரண் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் நூற்றாண்டுகள் கடந்தன. அநேக ‘நீண்ட வீடுகள்’ ஒன்றோடு ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு குடியிருப்புச் சுவர் போல காலியான பெரிய சதுக்கத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டது.

குஸேலி-கீரின் சுற்றி வளைக்கப்பட்ட வீடு இவ்வாறாகத் தான் இருக்கிறது. இங்கும் நாம் சுவர்களிலும் கண்காணிப்பு கோபுரங்களிலும் துவாரங்களைக் காண்கிறோம். எதிரியின் படையெடுப்பிலிருந்து தங்களுடைய மந்தைகளை மக்கள் பாதுகாத்தார்கள். ஆனால் தங்களது அண்டை அயலார்களைத் தாக்குவது பற்றியோ, பிறரது பொருட்களைக் கவர்வது பற்றியோ அவர்கள் பொருட்படுத்தவில்லை. இங்கு சில குடும்பங்கள் மற்றவைகளை விடப் பணக்காரர்களாக விளங்கினர். எனினும் இதற்கு உறுதியான சான்று கிடைக்கவில்லை. மற்ற நாடுகளிலும் உலகின் பிற பகுதிகளிலும் வாழும் மக்களது பழக்க வழக்கங்களை ஆராய்ந்ததன் மூலம் இச்சமத்துவமின்மை நிலவியதைத் தொல்பொருள் ஆய்வாளர்களால் ஐயுறவு ஊகம்* மட்டுமே கொள்ள முடியும்.

அடுத்த கட்டம் — ஜன்பாஸ்-காலா கோட்டையாகும். சுவர்களுக்கு உள்ளே நாற்கட்டம் காலியாக இல்லை. ஏனெனில் இரண்டு பெரிய பல அறைகளைக் கொண்ட வீடுகள் காலி இடத்தை நிரப்பி நிற்

கிறது. இரண்டு வீடுகளுக்கும் இடையில் 'நெருப்பு வீட்டை' நோக்கி ஒரு தெரு செல்கிறது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மீனவர்களின் கூடாரத்தில் உள்ள பண்டைய அடுப்படியானது நிலையாக நெருப்பைக் கொண்டிருந்தது, கோயிலாக இங்கு மாறி இருக்கிறது.

ஒரு தனித்த கிளைமரபினருக்கு மட்டுமே கோட்டை குடியிருப்பிடமாகத் திகழவில்லை. இங்கு இரண்டு கிளைமரபினர் இருக்கின்றனர், ஒவ்வொருவரும் ஒரு வீட்டைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர். அடைப்பு ஏதும் இல்லை, ஏனெனில் குடியிருந்தவர்களுடைய முக்கியத் தொழில் வேளாண்மை, கால்நடை வளர்ப்பன்று. கோட்டைச் சுவர்களுக்கு வெளிப்புறத்தில் வயல்கள் இருக்கின்றன. விவசாயத்தால் நீர் வடிகால் குறுக்குக் கோடாக வெட்டிச் செல்லப்பட்டிருக்கிறது. நாடோடி மரபினரிடமிருந்து வயலையும், பள்ளங்களையும் கோட்டை பாதுகாக்கிறது.

இங்கு இன்னும் மிகப் பெரிய மேடை, தோப்ராக்-காலா கோட்டை இருக்கிறது. கோட்டைச் சுவர்களுக்கு உள்ளாக ஒரு டஜன் பல அறைகளைக் கொண்ட வீடுகள் இருக்கின்றன.

நகரின் நாற்புறங்களிலும் கோபுரம் கொண்ட வலிமையான சுவர்கள் சுற்றி இருக்கின்றன. ஒரு பார்வையாளன் திடீரென்று நுழைந்து விட முடியாது. வாயில்களைப் பாதுகாக்கும் திருக்குமறுக்காக அமைக்கப்பட்ட நடைபாதையை ஒருவன் முதலில் கட்டாயம் கடந்தாக வேண்டும்.

நுழைவாயில்களில் தொடங்கும் முக்கிய வீதியானது ஒரு முனையிலிருந்து மறு முனை வரை நகர் முழுக்கச் செல்கிறது. அதன் இரு மருங்கிலும் பெரிய சமுதாய வீடுகள், நூற்றுக்கணக்கான அறைகளையும், சிறிய கோபுரங்களையும், சுற்றுக் கட்டு வெளியிடங்களையும் கொண்டதாகத் திகழ்கின்றன. முக்கிய வீதி 'நெருப்பு வீட்டை' நோக்கிச் செல்கிறது, நகர ஆளுநரின் மூன்று கோபுரம் கொண்ட அற்புத மாளிகைக்கும் அழைத்துச் செல்கிறது.

இன்று அவைகளில் எஞ்சியிருப்பதெல்லாம் களியாலும் மணலாலும் மூடப்பட்ட அழிபாடுகள் மட்டுமே. இந்த நகரத்தின் தோற்றத்தை மறுபடியும் அமைப்பதற்காக தொல்பொருள் ஆய்வாளர்கள் அதிகமாகவும், கடினமாகவும் உழைக்க வேண்டியிருந்தது.

நிலையான கண்டுபிடிப்புகள் அவர்களது உழைப்பிற்கு ஊதியமளித்தன. மூன்று கோபுர மாளிகையில்தான் மிகவும் ஆர்வமூட்டக் கூடிய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கே பெரிய அறைகளின் சுவர்கள் கைதேர்ந்த கலைஞர்களால் செய்யப்பட்ட சுவர் ஓவிய ஒப்பனைகளின் சுவடுகளை இன்னமும் பெற்றிருக்கின்றன. இங்கே, வெறுமையான பாலைவன மணல்களுக்கிடையே, மாளிகையின் சுவர்களில் பண்டைய காட்சிகள் உயிர்பெற்று வந்திருந்தன போன்று தோன்றின: ஒரு பெண் வில்யாழ் மீட்டிக் கொண்டிருப்பது, திராட்சை சேகரிப்பவள் கூடையைத் தனது தலையில் வைத்து சமநிலைப்படுத்துவது, கருப்பு மேலங்கியுடன் ஓர் ஆண், குதிரைகள், புலிகள் மற்றும் நெடுவால் கோழிகள். அரிய சிற்பிகளால் செய்யப்பட்ட சிலைகளின் தொகுதிகளும் அங்கே இருக்கின்றன.

அந்த மாளிகையிலுள்ள ஒவ்வொன்றுமே, அதன் உரிமையாளர்கள் மிகவும் செல்வந்தர்கள் என்பதையும், நகரத்தின் மற்ற குடியிருப்பாளர் களைக் காட்டிலும் உயர் குடியில் பிறந்தவர்கள் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

மாளிகையே கூட, மற்ற வீடுகளுக்கு மேலாக அச்சுறுத்தக்கூடிய வகையில் உயர்ந்து நின்றது, அதன் குடியிருப்பாளர்கள் எஞ்சியோரை விட வளமுடையவர்களாக விளங்கினார்கள் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தது.

நகரையும் நாடு முழுவதையும் ஆண்ட, கோரிஜம்ஷாவும், அவரது குடும்பத்தினரும், அவரது பல அடிமைகளும் வசிக்கும் இடமாக அந்த வீடு இருந்தது.

அதனது சொந்த உரிமைப்படி நகரம் ஓர் அரசாக இருந்தது. அரசர் ஒரு படையைக் கொண்டிருந்தார். அடிமைகளையும் ஏழை களையும் அடக்கிவைக்கவும், செல்வந்தர் மற்றும் உயர்குலக் குடும் பங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பாசனக் கால்வாய்களின் கட்டுமானத்தை மேற்பார்வையிடவும் அது உதவி செய்தது. ஒரு பெரிய பாசனக் கால்வாயைக் கட்டுவதற்கு ஆயிரக் கணக்கான அடிமைகள் தேவைப்பட்டார்கள். ஒரு கோட்டை மட்டுமல்ல, அநேகக் கோட்டைகளும், ஒரு முறையான ராணுவமும் வயல்களையும், கால் வாய்களையும், கோரிஜத்தைச் சேர்ந்த விவசாயிகளின் சுற்றிவளைக்கப் படாத வீடுகளையும் பாதுகாத்தன.

இவ்வாறாக, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கிடையேயான பயணத் தில், கூடாரம் எவ்வாறு வீடாக மாறியது என்பதையும், வீடு ஒரு நகரமாகியதையும், சமத்துவமான ஒரு சமுதாயம் அடிமைகளைக் கொண்ட அரசாக மாறியது எங்ஙனம் என்பதையும் தங்களது சொந்தக் கண்களாலேயே அறிஞர்கள் பார்க்கக் கூடிய நிலையில் இருந்தனர்.

மத்திய ஆசியா அன்றியும் இத்தகைய பெரிய கோட்டை-வீடுகளை மற்ற இடங்களிலும் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டு பிடித்தனர். ஓர் எதிரியினுடைய படையெடுப்பிலிருந்து தங்களது செல்வத்தை மக்கள் காத்துக் கொள்ள வேண்டி இருந்த இடங்களில் எல்லாம் அவர்கள் இவற்றைக் கண்டார்கள்.

கோட்டையரண் முற்றுகை

படையரண் சுவர்களின் உச்சியிலிருந்து நம்மால் வெகு தொலைவிற்குப் பார்க்க முடியும். தொலைவில் தூசிப் படலம் தோன்றிய போதும், ஈட்டி முனைகள் சூரிய ஒளியில் மின்னிய போதும், தன்னைப் பாது காத்துக் கொள்ள படையரண் உடனடியாகத் தயாராகும். வாயில் வழியாக உழவன் தனது எருதுகளையும், மேய்ப்பர்கள் மந்தைகளை யும் விரைந்து ஓட்டிவருவார்கள். படையரணுக்குள்ளாக கடைசி ஆள் நுழைந்த உடனே, படையரணின் வலுவான கதவுகள் மூடப்பட்டு தடுக்கப்படும். படைவீரர்கள் சுவர்களிலும், கோட்டை அரணில் முனைப்பான முகப்புடைய பகுதிகளிலும் தங்களது இடங்களில் நின்று, எதிரியின் வருகைக்காகக் காத்துக் கொண்டு, அம்பு மழை பொழிந்து சந்திக்கத் தயாராக இருப்பார்.

தாக்குபவர்கள் கோட்டையரணுக்கு அண்மையில் வந்து தங்களது கூடாரத்தை அமைப்பார்கள். கோட்டையரண் அவ்வளவு சுலபத்தில் சரணடையாது என்பது அவர்களுக்குத் தெரியும். உயரமான மதில்கள் விழுந்து நொறுங்குவதற்குள் அநேக மாதங்கள் கடந்து விடும். அவர்கள் வெளியேறிச் செல்வதால், ஒவ்வொரு நாள் காலையிலும் படையரணின் வாயில்கள் பலமாக நொறுங்கும். படைவீரர்களின் ஒரு கூட்டம் தங்களது எறி ஈட்டிகளைச் சுழற்றியபடி விரைந்து வெளியேறிச் செல்லும். வெளிப்படையான சண்டையில் போரின் விதியை முடிவு செய்ய அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். குதிரைகளுடைய வால்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள எதிரியின் மினுமினுக்கும் தலைக்கவசத்தின் மீது அவர்கள் சீற்றங் கொண்டு தங்கள் வாட்களை வீசுவார்கள். அவர்களாவது அன்றி அவர்களுடைய எதிரிகளாவது களைப்படைந்து போகும்படி அவர்கள் சண்டையிடுவார்கள்.

தங்களது வீடுகள் மற்றும் குடும்பங்கள் இவற்றால் ஒரு பக்கம் தூண்டப்படுகிறது. கைக்கு எட்டும் தூரத்தில் செல்வங்கள் இருந்தும் இன்னும் கிடைக்காமல் இருப்பதால் மறு பக்கம் சீற்றத்தால் பொங்கி எழுகிறது. பாதுகாப்பவர்களில் யார் இன்னமும் உயிரோடு இருக்கிறார்களோ அவர்கள் இரவு வந்ததனால் பின்வாங்கிச் செல்கிறார்கள். விடிகின்ற வரை சண்டை இறந்து படுகிறது.

நாட்கள் நகர்கின்றன. முற்றுகையிடப்பட்டவர்கள் தங்களைத் தாக்கியவர்களுடன் மூர்க்கத்தனமாக போரிடுகிறார்கள். ஆனால் எதிரிகளின் ஈட்டிகளுக்கும் அம்புகளுக்கும் மேலாக பசி கொடுமையானதாக இருக்கிறது.

முன்னர் தானியம் இருந்த நிலவறைகளில் தூசியைத் தவிர எதுவுமே இல்லாது போன போது, மிகப் பெரிய மண் சாடிகளில் நிறைந்திருந்த எண்ணெய் துளித்துளியாக மாறிய போது, படையரணில் புலம்பல் ஒலி எழுகிறது. பசித்திருக்கின்ற குழந்தைகள் அழுகின்றன, அதேவேளை, ஆண்கள் மீது கோபங் கொள்ளாதபடி, பெண்கள் தங்களது கண்ணீரை அமைதியாகத் துடைத்து எறிகிறார்கள்.

ஒவ்வொரு சண்டைக்குப் பிறகும் படையரணில் பாதுகாப்பாளர்கள் மிகவும் குறைந்து போய் விடுகிறார்கள். இறுதியில், பகல் விடிந்த போது போர்வீரர்கள் பின்வாங்கி ஓடவும், தாக்குபவர்கள் படையரணுக்குள் விரைந்து நுழைகிறார்கள். மிகப் பெரிய மதில்களின் ஒரு கல்லைக்கூடத் திருப்பாமல் அவர்கள் விடவில்லை. ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்த, வேலை செய்த, விருந்துண்ட இடத்தில் இப்போது அழிபாடுகளைத் தவிர எதுவும் மிஞ்சவில்லை. வெற்றியாளர்கள் உயிருடன் உள்ள இளைஞர்களையும், முதியவர்களையும் சுதந்திரமான மக்களிடமிருந்து புதிய அடிமைகளாக்குவதற்காகத் தூக்கிச் செல்கிறார்கள்.

உயிருள்ளவர்களைப் பற்றி இறந்தவர்கள் நமக்குக் கூறுகிறார்கள்

தென் ருஷ்யா நெடுகிலும் நீண்டு கிடக்கும் ஸ்டெப்பிகளில் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை சங்கிலித் தொடர்கள் போல மணற் குன்றுகளின் நீண்ட வரிசைகள் உள்ள இடங்கள் இருக்கின்றன. பரந்த ஸ்டெப்பியில் இத்தகைய மணற் குன்றுகள் எங்ஙனம் தோன்றின என்பதுவோ, யாரால் ஏற்படுத்தப்பட்டன என்பதுவோ உள்ளூர் மக்கள் எவருக்கும் நினைவில்லை.

பழங் காலத்திட்டமிடுபவர்களில் ஒருவரிடம் நாம் உண்மையிலேயே வற்புறுத்திக் கேட்டால் இந்தக் கல்லறைகள் 'மாமாய்கள்' அல்லது 'மாமாய்களின் மகள்கள்' என்று நமக்குக் கூறுவார். ஆனால் 'மா மாய்கள்' யார் என்பதையோ அவர்கள் எப்பொழுது வாழ்ந்தார்கள் என்பதையோ அவரால் விளக்கிச் சொல்ல முடியாது.

அவன் ஒரு வாயாடியாக இருக்கும் நிலையில், ஒரு காலத்தில் இங்கு வாழ்ந்த நிலக்கிழார் தனது எசமானன் என்றும், மறைந்துள்ள செல்வத்தை எதிர்நோக்கியபடி, கையில் திட்டத்துடன், இந்தப் புதை மேடுகளைத் தோண்டுவதிலேயே அநேக ஆண்டுகளைச் செலவிட்டான் என்றும் மகிழ்ச்சியோடு நமக்குக் கூறுவான். ஆனால் ஒருபோதும் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. பிறகு புரட்சி வந்தது, ''நிலக்கிழார் சுடப்பட்டார்,'' ஆகவே தனது தேடுதலை அவன் நிறுத்த வேண்டிய தாயிற்று.

எனினும், புதைமேடுகள் குறித்து இத்தகைய கிழவர்களிடம் கேட் டால், நமது நேரத்தை நாம் வீணடித்துக் கொண்டிருப்பவர்கள் ஆவோம். அவை பற்றி உண்மையிலேயே நாம் அறிந்து கொள்ள விரும்பினால், இங்கு தோண்டுகின்ற பணியைச் செய்து கொண்டிருக் கும் தொல்பொருள் ஆய்வாளர்களிடம் தான் நாம் கேட்க வேண்டும்.

ஒரு கிழவனால் தனது வாழ்நாளில் நடைபெற்ற விஷயங்களை மட்டுமே நினைவில் வைத்திருக்க முடியும். அதேவேளை ஒரு தொல் பொருள் ஆய்வாளர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் அறிவார்.

இந்தக் குன்றுகள் எல்லாம் புதைமண் மேடுகள். ஸ்டெப்பியில் ஒரு காலத்தில் வாழ்ந்த மக்களுடைய கல்லறைகள் இவை.

இத்தகைய புதைமண் மேடுகளுக்கு உள்ளாக மனித எலும்புக் கூடு களைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டனர். இவையன்றி வேறு சில பொருட்களும் இருக்கின்றன: மண்ணாலான பெரிய சாடிகள், சிக்கிமுக்கிக் கல் அல்லது வெண்கலக் கருவிகள், சில குதிரை எலும்பு கள். தனது நீண்ட பயணத்திற்காக இறந்த மனிதனுக்குக் கொடுக்கப் பட்ட பயண மூட்டை இதுதான்.

சாவுக்குப் பிறகு ஒரு மனிதன் உண்ணவும், வேலை செய்யவும் வேண்டியிருக்கிறது என்றும், ஒரு பெண்ணினுடைய ஆவிக்கு அவளது நூற்புக்கதிரும், அதே வேளை ஓர் ஆணினுடைய ஆவிக்கு அவனது எறி ஈட்டியும் தேவைப்படலாம் என்றும் மக்கள் நம்பினார்கள்.

பெரும்பாலான பண்டையப் புதைமேடுகள் அனைத்தும் இது போலவே இருக்கின்றன. இறந்து போனவனுக்குச் சொந்தமான சில பொருட்கள் அவனுக்குப் பக்கத்திலே வைக்கப்பட்டன. அந்நாளில் ஒரு மனிதன் மிகக் குறைவான உடைமைகளையே பெற்றிருந்தான். தனக்குச் சொந்தமென்று அவன் என்ன கூறியிருக்க முடியும்? தனது கழுத்தைச் சுற்றி அவன் அணிந்து கொண்ட தாயத்தாகவோ, போருக்கு அவன் எடுத்துச் சென்ற எறி ஈட்டியாகவோ தான் இருக்க முடியும்.

வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருளும் பொதுவானவை, ஏனெனில் குடும்ப விவகாரங்கள், ஒரே சமுதாய அடிப்படையில் குடும்பம் முழு

மையுமாக மேற்கொள்ளப்பட்டன. இது காரணமாகத்தான் பண்டைய புதைமேடுகளில் பணக்கார அல்லது ஏழைக் கல்லறைகள் எதுவுமில்லை. இறந்து போன எல்லாருமே சமமானவர்கள்.

சாவில் பணக்காரன் மற்றும் ஏழை தோன்றியது பிற்காலங்களில் தான்.

தோன் பகுதியில் யெலிஸவேதின்ஸ்காயா கிராமத்திற்கு அருகில் புதைமண் மேடுகளாலான ஒரு கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. அங்கே மூன்று வகையான சமாதிகள் இருந்தன: பணக்காரர்கள், நடுத்தர மக்கள் மற்றும் ஏழை மக்களின் மீந்த பகுதிகளை அவை கொண் டிருந்தன. பெரிய புதைமண் மேடுகளானது மையத்தில் ஒரு பெரிய பள்ளத்தைக் கொண்டிருந்தது. இதுதான் சமாதியாக இருந்தது. அதற் குள்ளாக வர்ணந்தீட்டப்பட்ட கிரேக்கக் குடுவைகள், தங்கத்தால் உட்பதித்து ஒப்பனை செய்யப்பட்ட உடலின் மேற்பாகத்துக்கான போர்க் கவசங்கள், திருக்குமுறுக்கான உருவரைகளுடன் கூடிய பட் டாக் கத்திகள் இருந்தன.

சிறிய அளவிலான மண்மேடுகள் தங்களுக்குள்ளாக தங்கத்தாலான பொருட்களை மிக அரிதாகவே கொண்டிருந்தன. அதற்குள்ளாக வர்ணந்தீட்டப்பட்ட குடுவைகளே இல்லை. இருப்பினும், இவைகளை ஏழைகளினுடைய சமாதிகள் என்று சொல்லிவிட முடியாது. இறந்து போன மனிதன் ஏழையாக இருந்திருப்பானேயாகில், சமாதியில் அவ னுக்கு அருகே கருப்பு மெருகெண்ணெய் பூசப்பட்ட வட்டில் அல்லது உலோகத்தால் உட்பதித்து ஒப்பனை செய்யப்பட்ட உடலின் மேற் பாகத்துக்கான போர்க் கவசம் இருந்திருக்க முடியாது.

சிறியளவிலான புதைமண் மேடுகள் ஏராளமாக இருக்கின்றன. இவை ஏழைகளினுடைய சமாதிகளாகும். இறந்தவனுடைய வலது கைப் பக்கத்தில் உள்ள குறுகலான மறைகுழியில் ஒரே ஒரு ஈட்டி மட்டும் இருக்கிறது, இடப் புறத்தில் ஒரு பெரிய சாடி இருக்கிறது, அவனுக்குத் தாகமாக இருந்தால் அவன் குடிக்கலாமல்லவா. ஏழை தனது கல்லறயில் கூட ஏழையாகவே இருந்தான்.

ஒரு பழமொழி சொல்வதுண்டு: ''கல்லறையைப் போல அவ்வளவு அமைதியாக.'' ஆனால் இத்தகு கல்லறைகள் உண்மையிலே அமைதி யாகத்தான் இருக்கின்றனவா? எப்போதோ ஒரு காலத்தில் முதலா வது பணக்காரனும், ஏழையும் தோன்றியதை அவை நமக்குச் சொல்ல வில்லையா? இறந்து போனவனால் உயிருடன் இருப்பனைப் பற்றி நமக்கு ஏராளனமானவற்றைச் சொல்ல முடியும்.

புதைமண் மேடுகளை விட்டு நீங்கி குடியிருப்புக்களின் மீந்த பகுதிகளுக்கு நாம் செல்வோமானால் தொலை தூரத்தில் முன்னா ளைய செல்வத்தையும், முன்னாளைய ஏழ்மையையுங் கூட நாம் கண்டுபிடிக்கலாம் என்பது காணக் கூடியதாக இருக்கிறது.

குடியிருப்பு இரண்டு அடைப்புக்களைக் கொண்டன என்பதை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஒன்று வெளிப் புறத்திலிருந்து சுற்றி வளைக்கப்பட்டது, அதேவேளை மற்றது குடி யிருப்பின் மையப் பகுதியைச் சுற்றி ஒரு வட்டம் போல அமைந்து இருக்கிறது. தொலை தூரத்து கிரீசிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த

அரிய பாத்திரங்கள் மற்றும் சாடிகளின் துண்டு துணுக்குகளை இங்கு அவர்கள் கண்டுபிடித்தார்கள். இரண்டு வேலிகளுக்கு இடையே இருந்த இடைவெளியில் அவர்கள் அத்தகைய மிகச் சில துணுக்கு களைக் கண்டார்கள். இங்கே அவர்கள் கண்டுபிடித்தவை எல்லாம் மிகச் சாதாரணமான மட்பாண்டங்களும் மண்சாடிகளுமே யாகும். வெளிப்புறத்தில் வாழ்ந்தவர்களைக் காட்டிலும் குடியிருப்பின் மையப் பகுதியில் வாழ்ந்தவர்கள் பணக்காரர்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. ஏனெனில் இத்தகைய விலைகூடிய கிண்ணங்களையும் தாம் பாளங்களையும் வாங்குவதற்கு வசதி படைத்தவர்களாக அவர்கள் இருந்தனர்.

அவர்களது கல்லறைகளுக்கு மேலாக உள்ள உயரமான மண்மேடு களை தூரத்திலிருந்து கூட காணக் கூடியதாக இருக்கிறது.

தங்களுக்குள்ளாக புதைக்கப்பட்டுள்ள மக்களைப் பற்றி கல்லறைகள் கூட நமக்குக் கூறுகின்றன. சில நேரங்களில் தங்களது எசமானனோடு ஒரு சேரப் புதைக்கப்பட வேண்டும் என்பதற்காகக் கொல்லப்பட்ட அடிமைகளின் பயங்கரமான கதையையோ, இறந்து போன தங்களது கணவர்களைத் தொடர்ந்து கல்லறைக்குச் செல்ல வேண்டிய மனைவி களின் கதையையோ கூட அவை நமக்குக் கூறும்.

செல்வம் படைத்த கிளைமரபின் தலைவனாகிய தந்தையின் கொடு மையான சக்தியைப் பற்றி எந்த ஒரு நூலைக் காட்டிலும் இந்தக் கல் லறைகள் சிறப்பாக எடுத்துக் கூறும். அவன் இறந்த போது அவன் தனது மனைவிகளையும், அடிமைகளையும் தன்னுடன் இழுத்துக் கொண்டான். ஏனெனில் அவனது வெண்கலத்தாலும், தங்கத்தாலும் ஆன அரிய ஆபரணங்களைப் போலவே அவர்களும் அவனுக்குச் சொந்த மானவார்கள்.

புதிய உலோகத்தை மனிதன் படைக்கிறான்

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக கல்லறைகளின் இருட்டுக்குள்ளாக வோ, படையரண்-நகரத்தின் இடிபாடுகளிலோ கிடந்த விலைமதிப் பற்ற பொருட்கள் இப்பொழுது அருங்காட்சியகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. பல நூற்றாண்டுகளுக்குப் பார்வையில் படாது மறைந்து கிடந்த இத்தகைய பொருட்களை, பண்டைக் காலத்தைப் பற்றி நிறைய அறிந்து கொள்ள விரும்பும் அனைவராலுமே இப்பொ ழுது காண முடிகிறது.

அருங்காட்சியகத்திற்கு வருகின்ற பார்வையாளர்கள் ஒவ்வொரு கண் ணாடிப் பெட்டியாக நின்று, தங்கக் கைப்பிடிகளுடன் கூடிய வாள் களையும், மிகு நேர்த்தியான சங்கிலிகளையும், ஒவ்வொன்றும் மிகச் சிறிய தங்கத்தாலான கன்றின் தலையைக் கொண்ட குமிழ் மணிச் சரடுகளையும், காளைகளையும் மான்களையும் போல வடிவமைக்கப் பட்ட வெள்ளிப் பாத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய பொருட்கள் ஒவ்வொன்றுக்குள்ளாகவும் எவ்வளவு உழைப்பும், கலைத்திறனும் சேர்த்திருக்கின்றன!

மிக எளிமையாக வெண்கலப் பட்டாக்கத்தி செய்ய நிறைய நாள் கள் எடுத்தன. காலடிக்குக் கீழாக நாட்டுச் செம்பு கிடந்த காலம் எப்போதோ போய்விட்டது. செம்புக் கனியைக் கண்டுபிடிப்பதற்காக

இப்போது மனிதன் பூமிக்குள்ளாக ஆழத்தில் செல்ல வேண்டி இருந் தது. இருண்ட சுரங்க வாயிற் குழிகளில் சுரங்கந் தோண்டுவோர் குத்துக்கோடரிகளால் கனியைப்பிளந்து எடுத்து அதனை தோல் பை களில் மேல்த் தளத்திற்கு அனுப்பினார்கள்.

பெரிய கற்களை உடைக்கின்ற வேலை எளிமையானதாக இருக்க பூமிக்குள்ளாக அவர்கள் தீயை உண்டாக்கினார்கள். கற்கள் வெப்பத் தால் சிவந்து போன போது அவை மீது குளிர்ந்த நீரை ஊற்று வார்கள். நீர் ஒருவித ஓசையோடு நீராவியாக மாறியது. கற்கள் உடைந்து சிறுசிறு துண்டுகளாக உடைந்தன. இவ்வாறாக சுரங்கந் தோண்டியவனின் குத்துக் கோடரிக்குத் துணையாகத் தீயும் நீரும் வந்தன.

அப்போது சுரங்கம் ஓர் எரிமலை போலக் காணப்பட்டது. எரிமலை வாயிலிருந்து வெளியேறுவதுபோல சுரங்கத்தின் கீழே நெருப் பால் ஏற்பட்ட நீராவி மேகங்கள் மேலே சென்றன. இது காரண மாகத் தான் நாம் இன்னமும் எரிமலைகளை ரோமானிய நெருப்புக் கடவுளாகிய வல்கான் என்ற பெயரில் அழைக்கிறோம்.

தாது வெட்டியெடுக்கப்பட்ட பிறகு, உலோகம் உருக்கப்பட்டது. இதற்குங் கூட மிகத் திறமை தேவைப்பட்டது. செப்புக் கனியைக் கடினமான உலோகமாக்குவதற்கும், உருக்கப்பட்ட உலோகத்தை அச் சுக்களில் ஊற்ற சுலபமாக்கவும் காசிடிரேட் சேர்க்கப்பட்டது.

உருக்கப்பட்ட தாதுவும் காசிடிரேட்டும், செம்பு மற்றும் தகரங் களின் உலோகக் கலவையை உருவாக்குகின்றன. இது வெறும் செம்பு மட்டும் அல்ல, மனிதன் தானே உருவாக்கிய வெண்கலம், புதிய குணங்களைக் கொண்ட புதிய உலோகமாகும்.

முன்னதாக, சிக்கிமுக்கிக் கற்களாலான கரடுமுரடான கருவிகளை மட்டுமே மனிதன் பெற்றிருந்த சகாப்தத்தில், தேவைப்பட்டால் ஒருவன் மற்றவனது வேலையைச் சுலபமாகச் செய்ய முடிந்தது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதனுக்குத் தெரிந்திருந்த சில திறமைகளைக் கற்றுக் கொள்வது அப்படி ஒன்றும் கடினமானதாக இருக்கவில்லை. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேட்டையாடும் இனத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களுமே வேடுவர்கள்தாம், ஒவ்வொருவரும் தங்களுக்குரிய வில்லையும் அம்புகளையும் தயாரித்துக் கொள்ள முடிந்தது.

ஆனால் ஓர் இளஞ்செடியை வில்லாக வளைப்பதும் அதன் முனைகளை வில் நாணால் இணைப்பதும் ஒரு காரியம், இயற்கை உலோகக் கருவை மினுமினுக்கும் வெண்கல வாளாக மாற்றுவது முற்றிலுமாக மற்றொரு காரியமாக இருந்தது.

ஒரு படைக்கல வினைஞன் பயிற்சியானனுக்குக் கற்றுக் கொடுப் பதற்கு பல ஆண்டுகள் பிடித்தன. ஒரு படைக்கல வினைஞன் தான் அறிந்த எல்லாவற்றையும் தன் மகனுக்குக் கற்றுக் கொடுத்தான். ஏனெனில் அவனது திறமைகள் கிளைமரபின் சொத்துப் போன்றது, அது மரபு வழிப் பட்ட செல்வம். குயவர்கள், படைக்கல வினைஞர்கள், செப்புக் கொல்லர்கள் ஆகியோர் சில சமயங்களில் ஒரு முழுமையான குடியிருப்புக்களையே அமைத்துக் கொண்டார்கள். அவர்களது புகழ் நாலாபக்கமும் பரவியது.

என்னுடையதும் உன்னுடையதும்

ஆரம்பத்தில், ஒவ்வொரு கைவினைஞனும் தனது சொந்த சமூகத்திற்காகவும், தனது சொந்த கிராமத்திற்காகவுமே வேலை செய்தான்.

ஆனால் காலப்போக்கில் படைக்கல வினைஞனோ, குயவனோ மிகவும் அடிக்கடி தான் தயாரித்த பொருட்களைத் தானியம், துணி ஆகியவற்றுக்கோ, வேறு பிற வினைஞர்கள் செய்த பிற பொருட்களுக்கோ மாற்றிக் கொள்ளத் தொடங்கினான்.

பண்டைய இன முறையானது, சுரங்கத்தில் சூடாக்கப்பட்ட கல் குளிர்ந்த நீர் பட்டதும் உடைவது போல, உடையத் தொடங்கியது.

தொடக்கத்தில், கிராமத்திலிருந்த எல்லா குடியிருப்பாளர்களுமே சமமாக இருந்தார்கள். இப்பொழுது ஒரு வெடிப்பானது பணக்காரக் குடும்பங்களை ஏழைக் குடும்பங்களினின்றும் பிரித்தது, அதேவேளை மற்றொரு வெடிப்பு கைவினைஞர்களை விவசாயிகளிடமிருந்து பிரித்தது.

கைவினைஞன் சமுதாயம் முழுமைக்குமாக வேலை செய்தபோது, சமூகம் அவனுக்கு உணவளித்தது. மக்கள் ஒன்றாக வேலை செய்தார்கள், அவர்கள் உருவாக்கிய எல்லாவற்றையும், பயிர் செய்த எல்லாவற்றையும் பங்கிட்டுக் கொண்டார்கள்.

ஆனால் கைவினைஞன் தனது கொதிகலன்களையும், வாட்களையும் மற்ற கிராமங்களோடு வாணிகம் செய்யத் தொடங்கியபோது, தனது அநேக உறவினர்களோடு பண்டமாற்றாக அவன் பெற்றுக் கொண்ட தானியத்தையோ துணியையோ பங்கிட்டுக் கொள்ள அவன் விரும்பவில்லை.

மொத்தத்தில், அவனும் அவனது மகன்களுமே இந்தத் தானியத்தையும், இந்தத் துணியையும் சம்பாதித்துக் கொண்டார்கள், வேறு எவரும் அவர்களுக்கு உதவியிருக்கவில்லை.

இவ்வாறாக, 'என்னுடைய' மற்றும் 'உன்னுடைய' என்று வேறுபாடு காணவும், தனது சொந்த நெருங்கிய குடும்பத்தையும் தனது உறவினர்களுடைய குடும்பங்களையும் பிரித்துப் பார்க்கவும் மனிதன் தொடங்கினான்.

மக்கள் சிறிய குடும்பங்களாகப் பிரிந்து வாழத் தொடங்கினார்கள்.

பண்டைய கிரீசைச் சேர்ந்த மைகேன மற்றும் திரீன்ஸ் நகரங்களில் இந்தப் பிரிவைச் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்த குடியிருப்புக்களின் இடிபாடுகளைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

செல்வமுள்ளதும், சக்தி வாய்ந்ததுமான குடும்பம் மலை உச்சியில் கனத்த மதில்களுக்கு அப்பால் வாழ்ந்தது. இத்தகைய கற்சுவர்களுக்குப் பின்னால் அந்தக் குடும்பம் நன்கு ஒளிந்து கொள்ள முடிந்தது. இனக்குழுவின் போர்த்தலைவன் இங்கே தனது மகன்களுடனும், அவர்களது மனைவிகள் மற்றும் குழந்தைகளுடனும் வாழ்ந்தான்.

மிகவும் ஏழ்மையில் இருந்த விவசாயிகள், கீழே சமவெளியில் தங்களது குடிசைகளை அமைத்துக் கொண்டு தாறுமாறாகக் குவிந்து கிடந்தார்கள். குன்றுகளினின்றும் தொலை ஒதுக்கமான இடங்களில் பரவலான முறையில் கைவினைஞர்கள், படைக்கல வினைஞர்கள், குயவர்கள் மற்றும் செப்புக் கொல்லர்களுடைய வீடுகள் இருந்தன.

இங்கே, கிராமத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் சமமாகப் பாவித்து

பேசிக் கொள்ளவில்லை. செல்வம் படைத்த சக்திமிக்க இனக்குழுவின் தலைவனை விவசாயிகள் பார்த்த பொழுது அவனருகே சென்று மரியாதையோடு வணங்கினர். ஏனெனில் வலிமைமிக்கவர்களின் புரவலர்களாக கடவுளர்களே விளங்குகின்றனர் என அவர்கள் நம்பினார்கள்.

மேல்மட்ட சமய குருமார்கள் இதனை அவர்களுக்குக் கற்பித்தார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே இத்தகைய எண்ணங்கள் அவர்களிடத்தில் பதிந்தன.

விவசாயி ஒரு கைவினைஞனையோ, சுரங்கத் தொழிலாளியையோ தனக்குச் சமமானவனாகவோ, தனது சகோதரனைப் போலவோ கருதவில்லை. தீச்சுவாலைகளும், நீராவியும் நிறைந்த பூமிக்கடியிலே செம்பை வெட்டி எடுக்கும் இந்த உறுதிமிக்க மனிதன் சூனியக்காரனாகி விடவில்லையா? சுரங்கத்திற்குள்ளாக என்ன நடந்தது என்பது உழவனுக்கு எங்ஙனம் தெரியும்? சுரங்க வேலையாள் எங்ஙனம் உலோகத் தாதுவைக் கண்டுபிடித்தான்? அது எங்கேயிருந்தது என்பதை யாராவது காட்டியிருக்க வேண்டும். செம்பை வெளியில் எடுக்கவும், சில அதிசயத்தால் அதை வெண்கலமாக மாற்றவும் அவனுக்கு யாராவது உதவியிருக்க வேண்டும். அங்கே, நிலத்திற் கடியில், சுரங்கந் தோண்டுவோனின் சாதாரணமான மாள்வுக்குரிய உயிரை விளங்கிக் கொள்ள முடியாத காப்பாளர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள்.

இத்தகைய எண்ணங்கள் கிரீஸ் மக்களுடைய மனங்களில் மட்டும் இருக்கவில்லை; எங்கிலுமிருந்த வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மக்கள் இவற்றைப் பங்கு போட்டுக் கொண்டனர்.

செம்புக் கொல்லர்கள்-சூனியக்காரர்களைப் பற்றிய கதைகள் நமக்கு பண்டைக் காலங்களிலிருந்தே வந்து சேர்ந்திருக்கின்றன.

புதிய முறையின் ஆரம்பம்

மனிதன் கடந்து வந்த பாதையை நாம் மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்ப்போம்.

பணக்காரர்களோ ஏழைகளோ, அடிமைகளோ அடிமைகளின் உரிமையாளர்களோ என்று எவருமேயில்லாத காலம் ஒன்றிருந்தது.

பரிதாபத்திற்குரிய தங்களது பதுங்கு குழிகளில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வேடுவர்கள் ஒன்றிணைந்து இருந்த போது அனைவரும் ஒன்றுபோல ஏழைகளாகவே இருந்தனர். சிக்கிமுக்கிக் கற்களாலும், எலும்புகளாலும் ஆன அவர்களது கருவிகள் மிகவும் கரடுமுரடானதாக இருந்தன. கொடிய விலங்குகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றிய ஒரே விஷயம் பட்டினிதான், குளிர் காரணமாகவே அவர்கள் ஒன்றாக வாழ்ந்தார்கள், வேட்டையாடினார்கள், தங்களது சக்திகளை ஒன்று சேர்ப்பதன் வாயிலாகத் தங்களுக்கு எதிரான ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள், பொதுவான குடியிருப்புக்களைக் கட்டிக் கொண்டார்கள்.

ஒரு கம்பளியானையைக் கொல்வதற்கு ஒரு மனிதனால் மட்டுமே இயலாததாக இருந்தது, அவனால் ஒரு கரடியைக் கூடக் கொல்ல முடியவில்லை.

தனது குடியிருப்புக்கு அடிப்படிக்காக ஒரு கனமான கல்லைத்

தனியாக இழுத்துவர இயலவில்லை, மேலாகத் தொங்கிக் கொண் டிருந்த செங்குத்துப் பாறையோடு கற்சுவர்களைப் பதிக்கக்கூட அவ னால் முடியவில்லை.

அப்பொழுது மக்கள் எல்லாவற்றையுமே பொதுவானதாகக் கொண் டிருந்தார்கள். ஒரு வேட்டை வெற்றி பெற்ற போது, அந்த விலங்கை வேட்டையாடிக் கொல்வதில் பங்கு கொண்ட அனைவருக் குமே, கிழவர்கள் அந்த விலங்கை வெட்டிக் கூறு போட்டுக் கொடுத் தார்கள்.

ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தன.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய கூடாரங்களையும், மறைகுழி களையும் வீடுகள் இடம் பெயர்த்தன, சிக்கிமுக்கிக் கற் கருவிகளும், எலும்பாலான கருவிகளும் உலோகத்தால் ஆன பொருட்களால் இடம் பெயர்ந்தன.

மக்கள் ஆரம்பத்தில் கொத்துக் கருவிகளைக் கொண்டும், பின்னர் மரக்கலப்பைகளைக் கொண்டும் உழத் தொடங்கினார்கள். குதிரை, பசு மற்றும் ஆடு இவற்றை வீட்டு விலங்காக்கினார்கள். கருமான் களிடமிருந்து பட்டடைக்கற்கள் மீது சுத்தியல்கள் அடிபடும் ஓசையைக் கேட்க முடிந்தது. குயவர்களின் சக்கரங்கள் சுழலத் தொடங்கின. உழைப்புப் பிரிவினையானது செயல்படத் தொடங்கியிருந்தது. ஒரு கோடரியோ, அரிவாளோ கொடுத்து சுலபமாக தானியத்தை வாங்கிக் கொள்ள முடிந்த போது, ஒரு கருமான் நிலத்தை உழுவதில் பொருள் ஏதும் இல்லை. தனது தானியத்தைக் கொடுத்துத் தனக்குத் தேவையான அளவு கம்பளியை ஒரு விவசாயியால் மாற்றிக் கொள்ள முடிந்த போது, ஒரு பெரிய ஆட்டு மந்தையை வளர்ப்பது குறித்து கவலைப்பட வேண்டிய தேவை அவனுக்கு இருக்கவில்லை.

ஆகவே, முதலாவது படகுகள், அதன் பிறகு மிதக்கும் நாவாய்கள் கிராமத்திலிருந்து கிராமத்திற்குச் சென்றன.

அவைகளில் தானியம், கம்பளி, கோடரிகள் மற்றும் மட்பாண்டங் கள் நிறைந்திருந்தன. தொலை தூரத்திலிருந்து வந்த ‘பார்வையாளர் கள்’ கொள்ளைக்காரர்களாக அடிக்கடி மாறினார்கள், ஏனெனில் கொள்ளையும் பண்டமாற்றமும் கைகோத்துக் கொண்டு சென்றன.

முன்னதாக, தனது உறவினர்களைக் காட்டிலும் ஒருவரும் பணக் காரர்களாக முடியாது. எல்லாரும் சமமான ஏழையாகவே இருந் தனர்.

எனினும், காலப்போக்கில் ஏழைகளின் குடிசைகளுக்கு மேலாக செல்வமும் பலமும் கொண்ட குடும்பங்களின் வீடுகள் குன்றுகளுக்கு மேலாக உயரமான கற்சுவர்களால் சுற்றி வளைக்கப்பட்டன. செல்வந் தர்களுடைய சேமிப்பு அறைகள் பொருட்களால் நிரம்பி வழிந்தன. ஆண்டுக்கு ஆண்டு அவர்களது செல்வம் வளர்ந்து பல்கிப் பெருகியது.

செல்வந்தர்கள் சமூகத்தினுடைய சக்தியைத் தங்களது சொந்தக் கைகளுக்கு எடுத்துக் கொண்டனர். ஏழையாக இருந்தவர்களைத் தங் களுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக்கினர். தனது அண்டைய செல்வந்தனி டம் உதவி கோரும் கட்டாயத்திற்கு அடிக்கடி ஆளானதை ஏழை கண்டான். இந்த உதவி மிகவும் செலவு பிடிக்கக்கூடியதாக இருந்தது.

கடும் குளிர்காலத்தில் தான் வாங்கியிருந்த தானியத்தைப் பணக்காரர் களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக ஆண்டுக்கணக்காக ஏழை மனிதன் உழைக்க வேண்டியிருந்தது.

இந்த வழியில் தான் சிலர் மற்றவர்களை அடிமைகளாக்கத் தலைப்பட்டனர்.

ஆனால் இந்த ஒரே வழியில் மட்டுமே அடிமைத்தனம் ஏற்படுவ தில்லை. போர்களின் போது மக்கள் பிடிக்கப்பட்டார்கள், சுதந்திர மனிதர்கள் அடிமைகளாக்கப்பட்டனர்.

ஒருகாலத்தில் ஒவ்வொருவருமே உழைத்திருக்கிறார்கள். காலப்போக் கில், ஒட்டுமொத்தமாக வேலை செய்வதையே சிலர் நிறுத்திக் கொண் டார்கள். அதேவேளை மற்றவர்கள் கசையடியில் வேலை வாங்கப்பட் டார்கள்.

ஒருகாலத்தில், வேட்டையாடும் ஆயுதங்களும் பிடிபட்ட இரையும் எல்லாருக்குமே பொதுவானதாக இருந்தன. இப்பொழுது அடிமை களின் உரிமையாளன் தான் மிகப் பெரிய நிலங்கள் அனைத்திற்கும், மந்தைகளுக்கும், பணிமனைகளுக்கும் ஏக எசமானனாக இருந்தான்.

ஒருகாலத்தில், ஒரே சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுக்குள் ளாகச் சண்டையிட்டுக் கொள்ளவில்லை. அவர்கள் சமாதானமாக வாழ்ந்தார்கள். ருஷ்யனில் 'மிர்' என்ற சொல் 'சமாதானம்' மற்றும் 'சமூகம்' ஆகிய இரண்டிற்குமாக நிற்கிறது.

ஆனால் அடிமை முறை தோன்றியதைத் தொடர்ந்து ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும் ஒரு சண்டை தொடங்கியது.

அடிமை உரிமையாளர்கள் அடிமைகளை இழிவாகக் கருதினார்கள், அடிமைகளும் அடிமை உரிமையாளர்களை வெறுத்தார்கள்.

அடிமை தப்பிப்போக கனவு கண்டான். அவனது சொத்தையும், அவனது உயிரையும், அவனது பேசுங் கருவிகளையும் எந்தவகையி லேனும் கைப்பற்றிக் கொள்வதென்பதில் எசமானன் உறுதியாக இருந் தான். அடிமைகளைக் கொண்டிருந்த அரசு, சுதந்திரமானவர்களின் சொத்துக்களை ஆயுத பலத்தின் மூலம் பாதுகாத்தது. தங்களது எசமானர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழ அடிமைகள் முயன்றால், கீழ்ப்படியும்படி அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டதோடு, கொடூரமாக வும் தண்டிக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக, பண்டைய சமூக அமைப்பானது புதிய ஒன்றால், அடிமை வைத்துக்கொள்ளும் அமைப்பாக மாற்றியமைக்கப்பட்டது.

விஞ்ஞானத்தின் தொடக்கம்

உலகம் முழுவதுமே மனிதனுக்குப் புதிராக இருந்த காலம் ஒன்றிருந்தது. ஒவ்வொன்றும் குழப்பமானதாகவும், விநோதமானதாகவும் இருந்தன.

எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும், அவனது தோள்களின் ஒவ்வொரு அசையும், அவனுக்கு தண்டனையையோ வெகுமதியையோ கொடுக்கக் கூடிய கட்புலனாகாத சக்திகளைச் செயல்படும்படி செய்தன.

மனித இனம் மிகக் குறைவான அநுபவத்தையே பெற்றிருந்தது, ஆகவே உதவியற்றுப் போன மக்கள் இரவை தொடர்ந்து பகல் வரும் என்பதோ, குளிர்காலத்தைத் தொடர்ந்து வசந்தம் வரும் என்பதையோ ஒருபோதும் அறியவில்லை.

வானத்திலே சூரியனை எழச் செய்வதற்காக வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதர்கள் மந்திரச் சடங்குகளைச் செய்தார்கள். பண்டைய எகிப்தில், பூமியில் இருக்கக் கூடிய சூரியனின் பண்புருவமாகக் கருதப்பட்ட பாரோ என்ற பட்டப் பெயர் கொண்ட அரசர், சூரியன் தனது அன்றாடச் சுற்றை முடிக்க வேண்டும் என்பதற்காக நாள்தோறும் கோயிலைச் சுற்றிவந்தார்.

இலையுதிர் காலத்திலே எகிப்தியர்கள் 'சூரியனின் கோல்' எனப் பொதுவிருந்து வைத்துக் கொண்டாடினார்கள். தளர்ந்து போன இலையுதிர்காலத்துச் சூரியனுக்குத் தனது சுற்றை முடிக்க ஒரு கோல் உதவி தேவைப்பட்டது என அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் மனிதன் வேலை செய்தான், உலகைப் பற்றியும், பொருட்களின் பல்வேறு தன்மைகள் குறித்தும் ஏராளமானவற்றைக் கற்றுக் கொண்டான்.

ஒரு சிக்கிமுக்கிக் கல்லைப் பளபளப்பாக்கிக் கூர்மைப்படுத்திய வரலாற்றுக் காலத்திற்கு முந்திய கைவினைஞன் அதனது தன்மைகளை நேரடியாக அறிந்து கொண்டான். ஒரு கல் கடினமானது, மேலும் அதனை மற்றொரு கல்லுடன் அடிக்கும் போது அது பிளவுபடும், ஆனால் அடியினால் அது பேரொலி செய்யாது என்பதை அவன் அறிந்தான். உண்மைதான், கற்களிலே பல்வேறு வகைகள் இருக்கின்றன. உடைக்கப்பட்ட போது இந்தக் கல் பேரொலி எழுப்பவில்லை, ஆனால் மற்றொன்றுடன் மோதினால் என்னவாகும்? இத்தகைய சிந்தனைகள் நம்மை சிரிக்கவைக்கும். ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் இந்த வேடிக்கை பற்றி நினைத்துப் பார்க்கவே இல்லை.

பொதுவான விதிகளை எங்ஙனம் உருவாக்கிக் கொள்வது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஆகவே அவனுக்கு வாழ்க்கை முழுக்கவும் விதிவிலக்கானதாகவே இருந்தது. எந்த இரண்டு கற்களுமே ஒன்று போல இருக்கவில்லை என அவன் கண்டான். ஆகவே தான் அவை வித்தியாசமான தன்மைகளைக் கொண்டிருக்கக் கூடும் என அவன்

நினைத்தான். ஒரு புதிய சிக்கிமுக்கிக் கல் மண்கிளறியை அவன் தயாரித்த போது, பழையதைப் போல அப்படியே செய்வதற்கு அவன் முயன்றான். அப்போதுதான் அது நிலத்தை நன்றாகக் கிளறும் என நினைத்தான்.

நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கடந்தன. அவனது கைகளில் கடந்து சென்ற பல்வேறு விதமான கற்களைக் கொண்டு, கற்களைப் பற்றிய பொதுவான கருத்தை உருவாக்கிக் கொள்ள மனிதன் முயன்றான். இதுவரை எல்லாக் கற்களுமே கடின மானவையாகவே இருந்தன. கல் உறுதியானது என்பதை அவனால் நிச்சயமாகச் சொல்ல முடிந்தது. இதுவரை எந்தக் கற்களுமே பேசி யிருக்கவில்லை, கற்கள் பேசாது என்று அவனால் கூற முடியும்.

இவ்வாறாக, விஞ்ஞானத்தின் முதலாவது செறிவார்ந்த சிறு தனி வித்து, பொருட்கள் குறித்த கருத்துப்படிவம் தோன்றியது.

சிக்கிமுக்கிக் கல் கடினமானதாக இருக்கிறது என்று ஒரு கை வினைஞன் கூறிய போது, எந்த ஒரு சிக்கிமுக்கிக் கல்லுமே அப்படித் தான் என அவன் கருதினான், தான் அந்நேரத்தில் வேலை செய்து கொண்டிருந்த கல் மட்டுமே என நினைக்கவில்லை.

ஆகவே, இயற்கையின் சில விதிகளை, உலகின் சில விதிகளை அவன் அறிந்திருந்தான்.

''குளிர்காலத்திற்குப் பிறகு வசந்தகாலம் வருகிறது.'' நிச்சயமாக இதில் வியப்படைவதற்கு எதுவுமே இல்லை. குளிர்காலத்தையடுத்து வருவது வசந்தகாலம், இலையுதிர்காலமல்ல என்பது முற்றிலும் வெளிப் படையானது. மிகுந்த கூர்நோக்கிற்குப் பிறகு நமது மூதாதையர்கள் கண்டுபிடித்த முதலாவது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் ஒன்று காலங் கள் மாறுவதைக் கண்டுபிடித்ததாகும். மக்கள் ஆண்டுகளைக் கணக் கிட ஆரம்பித்தது குளிர்காலத்தையும் கோடைக்காலத்தையும் புரிந்து கொண்ட பிறகு தானே தவிர எதிர்பாராத கண்டுபிடிப்பால் அல்ல. ஆனால் குளிர்காலத்தைத் தொடர்ந்து வசந்தகாலமும், பிறகு வசந்த காலத்தை தொடர்ந்து கோடைக்காலமும் இளவேனில்காலமும் ஏற்படு கின்றன.

நைல் நதியில் வெள்ளம் பெருக்கெடுப்பதைக் கவனித்து வந்த எகிப்தியர்கள் இதைக் கண்டுபிடித்தார்கள். ஒவ்வொரு முறை வெள் ளம் வந்தபோதும் அடுத்த ஆண்டின் தொடக்கம் என்று அவர்கள் கணக்கிட்டார்கள்.

பெரும் திருச்சபை குருமார்கள் நதியைக் கவனித்து வந்தார்கள், ஏனெனில் நதியை ஒரு கடவுள் என்று மக்கள் எண்ணினார்கள். நைல் நதியை ஒட்டிநிற்கும் எகிப்திய கோவில் மதில்களில் நீர் அளவு களைக் குறிக்க குருமார்கள் பயன்படுத்திய சிறிய கோடுகள் இன்ற ளவும் கூட காணப்படுகின்றன.

ஜூலையில், வெப்பத்தால் வயல்களில் பூமி வெடித்து நிற்கும் போது, மஞ்சள் நிற வண்டல் படிந்த நீர் பாசனக் கால்வாய்களில் விரைந்து வரும்வரை உழவர்கள் பொறுமையிழந்து காத்திருப்பார்கள். ஆனால் ஒருவேளை அது இந்த ஆண்டு வராமற் போனால்? கடவு ளர்கள் மக்களிடத்தில் கோபமாக இருந்து, அவர்களுடைய வயல்

களுக்கு நீரை அனுப்பாமற் போனால் என்ன ஆவது?

அன்பளிப்புகளும், படையல்களும் எல்லாப் பக்கங்களினின்றும் கோயிலுக்குக் கொண்டு வரப்பட்டன. தங்களிடம் எஞ்சிய கையளவு தானியத்தையும் ஏழை விவசாயிகள் எடுத்துவந்து, பூசாரிகளிடம் கொடுத்து கடவுளர்களிடம் சற்று அழுத்தமாக வேண்டிக்கொள்ளும்படி பணிவோடு கேட்டுக் கொள்வார்கள்.

ஒவ்வொரு நாளும் விடியலின் போது பூசாரிகள் நதிக்குச் சென்று நீரின் அளவு உயரத் தொடங்கி விட்டதா எனப் பார்ப்பார்கள். ஒவ்வொரு மாலை நேரத்திலும் கோவிலின் தட்டையான கூரைக்கு அவர்கள் ஏறிச் சென்று உயரத்திலே நட்சத்திரங்களைக் கூர்ந்து கவனித்தார்கள். நட்சத்திர வானமே அவர்களது நாட்காட்டியாக விளங்கியது.

இறுதியாக ஒரு நாள் கோவிலில் பூசாரிகள் பயபக்தியோடு அறிவிப்பார்கள்: ''கடவுள் உங்களிடத்தில் கருணை காட்டியுள்ளார்—இப்பொழுதிலிருந்து மூன்று இரவுகளில் உங்கள் வயல்களுக்கு நீர் வரத் தொடங்கும்.''

அவசரமில்லாமல், படிப்படியாக தாங்கள் வாழ்ந்த விநோத உலகத்தை மக்கள் புரிந்து கொண்டார்கள், உலக அறிவைத் தானே தவிர, தேவதைக் கதைகளையோ, மந்திரத்தையோ அல்ல. கோவில் கூரைகளே முதலாவது வானிலை ஆய்வுக்கூடங்களாகத் திகழ்ந்தன. குயவன் மற்றும் கருமான் இவர்களின் பணிமனைகளே முதலாவது சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வுக் கூடங்களாகும்.

தாங்கள் பார்த்தவைகளினின்று அனுமானிக்கவும், கணக்கிட்டும், முடிவுகளை மேற்கொள்ளவும் மக்கள் கற்றுக் கொண்டார்கள்.

இந்த வகையான விஞ்ஞானம் நவீன விஞ்ஞானத்தைப் போல குறைவாகவே ஒத்திருக்கிறது. மந்திரத்தின் ஒரு பகுதிபோலவே அது பெரும்பாலும் காணப்பட்டது. மக்கள் நட்சத்திரங்களைக் கூர்ந்து நோக்கியதோடு மட்டுமல்ல, அவைகளினின்று ஜோசியங்களும் கூறினார்கள். வானையும் நிலத்தையும் படித்தறிகின்ற போது வானம் மற்றும் நிலக் கடவுளர்களை அவர்கள் வணங்கினார்கள். இன்னும், அறியாமையின் ஆழமான தன்மை மறையத் தொடங்கியிருந்தது.

ஒலிம்பசுக்குக் கடவுளர்கள் பின்வாங்குகின்றனர்

தேவதைக் கதை உலகின் மூடுபனிக்கிடையே பொருட்களின் உண்மையான வெளிப்பாடு படிப்படியாக மனிதனுக்குத் தோன்றத் தொடங்கியது.

எல்லா இடங்களிலுமே, ஒவ்வொரு கல்லிலும், ஒவ்வொரு மரத்திலும், ஒவ்வொரு விலங்கிலும் ஆவிகள் இருக்கின்றன என வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மக்கள் நினைத்த காலம் ஒன்றிருந்தது.

ஆனால் காலப்போக்கில் இந்த நம்பிக்கை மறைந்து விட்டது.

ஒவ்வொரு விலங்கிலும் ஆவி உயிர் வாழ்ந்தது என்று மனிதன் அதற்குமேல் நினைக்கவில்லை. அடர்த்தியான காடுகளில் வாழ்ந்த வனக்கடவுள் இப்பொழுது அவனது கற்பனையில் எல்லா விலங்குகளின்

15–563

ஆவிகளிலும் இடம் பிடித்துக்கொண்டார்.

கோதுமையின் ஒவ்வொரு கதிரிலும் ஆவிகள் இருந்தன என்று நினைப்பதை விவசாயி நிறுத்திக் கொண்டான். அவன் மனத்திற்குத் தானியத்தின் எல்லா ஆவிகளுமே ஒருங்கிணைந்து, வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் காரணமான செழுமையின் பெண்கடவுளாக மாறியதாகத் தோன்றியது.

இந்தக் கடவுளர்கள் பழைய ஆவிகளை இடம் பெயர்த்தனர். மாள்வுக்குரியதோடு அவர்கள் அருகருகே வாழவில்லை. அறிவு அவர்களை மனிதக் குடியிருப்புக்கு அப்பால் மேலும் தொலைவிற்கு நகர்த்தியது. மனிதனே ஒருபோதும் இருந்திராத, இருண்ட அடர்த்தியான மரங்களுக்கோ, மரம் மூடிய மலை உச்சிகளுக்கு ஓர் இடம் பார்க்கும்படி இது அவர்களைச் செய்தது.

ஆனால் காலப்போக்கில் இத்தகைய இடங்களுக்குங்கூட மனிதன் சென்றடைந்தான். இருண்ட காடுகளுக்கு மேலாக அறிவு ஒளி வீசியது, மலைச் சரிவுகளுக்கு மேலாகப் படர்ந்திருந்த அடர்ந்த மூடுபனியைப் பரவலாக ஓட்டியது.

ஆக, தங்களுடைய புதிய குடியிருப்புக்களினின்று மீண்டும் கடவுளர்கள் துரத்தப்பட்டார்கள். இப்பொழுது அவர்கள் வானத்தின் உச்சிக்கும், கடலின் ஆழத்திற்கும் சென்று, இருண்ட பாதாளத்திலே, பூமியின் கீழ் மட்டத்திலே காணாமற் போனார்கள்.

கடவுளர்கள் பூமிக்கு மிக அரிதாகத்தான் இறங்கி வந்தார்கள். போர்களில் பங்கு பெறுவதற்காகவோ, படையரண்களைக் கைப்பற்றுவதற்காகவோ அவர்கள் சுவர்க்கங்களிலிருந்து கீழே வந்த புராணக் கதைகள் காலப்போக்கில் தலைமுறை விட்டு தலைமுறைக்குச் சென்றன.

அழியக்கூடிய மனிதர்களின் சண்டைகளில் தலையிடுவதற்காகக் கடவுளர்கள் வாட்களும் எறி ஈட்டிகளும் தாங்கி வந்தார்கள். முடிவு கட்டும் தருணம் வந்ததும் அவர்கள் இருண்ட மேகத்திற்குப் பின்னால் தலைவனை முழுதுமாக மறைத்து விட்டு எதிரிகளை வன்மைமிக்க குறுங்கணைகளால் கொன்றழித்தார்கள். ஆனால் இவை எல்லாமே மிக மிக நீண்ட காலத்திற்கு முன்னர் ஏற்பட்டது என்று கதை கூறுபவர்கள் சொல்வார்கள்.

ஆகையால் மனித அநுபவமானது மிகமிகத் தொலைவிற்கு, எப்போதும் விரிவடைந்து செல்லும் ஒளிமயமான வளையத்தை ஊடுருவிச் சென்று, கடவுளர்களை அண்மையிலிருந்து தொலை தூரத்திற்கும், நிகழ் காலத்திலிருந்து கடந்த காலத்திற்கும், இந்த உலகத்திலிருந்து 'அப்பால் உள்ள' தற்கும் பின்வாங்கிச் செல்ல வைத்தது.

கடவுளர்களை வைத்துக் கொண்டு எந்தக் காரியங்கள் செய்வதும் மிகச் சிரமமானதாயிற்று. முன்னதாக, ஒவ்வொரு மனிதனாலும் 'அதிசயங்களை நிகழ்த்தவும்', மந்திரச் சடங்குகளைச் செய்யவும் முடியும். சடங்குகளே கூட மிக எளிமையானதாக இருந்தன. எடுத்துக்காட்டாக, மழையைக் கொண்டுவருவதற்காக ஒருவன் வாய் நிறைய நீரை எடுத்துக் கொண்டு, ஒரு விஷேடமான நடனத்தின் போது அதைச்

சுற்றிலும் தெளிக்க வேண்டியிருந்தது. மேகங்களைக் கலைப்பதற்காக, ஒருவன் கூரையின் மீது ஏறி, காற்றைப் பிரதிபலிப்பது போல ஊத வேண்டி இருந்தது.

இது போல மழையைக் கொண்டுவருவதும், ஊதுவதால் மேகங்களை விரட்டியப்பதும் ஒருபோதும் செய்ய முடியாது என்பதை நாம் அறிவோம். தனது வேண்டுதல்களைக் கடவுளர்கள் உடனடியாகச் செவி மடுக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கு மனிதன் வந்துவிட்டான். இப்பொழுது தான் பூசாரி சாதாரண மக்களுக்கும் கடவுளர்களுக்கும் இடையில் இருந்த இடத்தைப் பிடித்துக் கொண்டான். ஏனெனில் மறைபுதிரான எல்லாவகைச் சடங்குகளையும், கடவுளர் புராணங்களின் எல்லாவகை ரகசியங்களையும் அவன் அறிந்திருந்தான்.

முன்னதாக, மந்திரவாதி வேட்டைநடனத்திற்கு இயக்குநராக மட்டுமே இருந்தான். தனது சக கிளைமரபைச் சேர்ந்த ஆட்களைவிட ஆவிகளிடத்தில் அவன் நெருக்கமாக இருக்கவில்லை.

ஆயினும், இப்பொழுது பூசாரி முற்றிலும் மாறுபட்டவனாக மாறிவிட்டான். புனிதமான சோலையிலே, கடவுளர்களுக்கு அண்மையில் வாழ்ந்தான். நட்சத்திரங்களின் புத்தகத்திலிருந்து கடவுளர்களின் விருப்பத்தைப் படிப்பதற்காக கோயில் கூரை மீது ஏறிச் சென்றான். இந்தப் புத்தகத்தை அவனால் மட்டுமே படிக்க முடியும். பலியிடப்பட்ட ஒரு விலங்கின் குடல்களை வெறுமனே பார்த்துக் கொண்டு போருக்கு முன்னதாக அதன் முடிவை, வெற்றி அல்லது தோல்வி என்பதை அவனால் சொல்ல முடிந்தது. முடிவில் மக்களுக்கும் கடவுளர்களுக்கும் இடைத்தரகர்களாக பூசாரிகள் மாறினார்கள்.

ஆனால் கடவுளர்கள் சாதாரண அழிவுக்குரிய மனிதனிடமிருந்து தொலை தூரத்திற்குப் போய்க் கொண்டே இருந்தார்கள். கடவுளர்கள் மக்கள் அனைவரையும் சமமாகக் கருதியிருந்த காலங்கள் கடந்து போயிருந்தன. இப்பொழுது மக்கள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொண்டும், தங்களது சுற்றுப் புறங்களைப் பார்த்துக் கொண்டும் முன்னாளைய சமத்துவ நிலை இல்லை என்பதைப் புரிந்து கொண்டார்கள். ''இது இப்படித்தான் இருக்க வேண்டும்,'' என்று பூசாரிகள் கூறினார்கள். ''மனிதன் எல்லாவற்றையுமே கடவுளர்களுக்கு விட்டு விட வேண்டும். மன்னர்களும், படைத்தளபதிகளும் மக்களை ஆளவது போல கடவுளர்கள் உலகத்தை ஆளுகிறார்கள்.'' ஆனால் பூசாரிகளின் பாடங்களை எல்லா மக்களுமே பணிவோடு கேட்டு நிறைவு பெறவில்லை. கடவுளர்களின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிய விரும்பாதவர்களும் இருந்தார்கள்.

''நல்லவர்கள் துயருற்று, பாவிகள் மகிழ்ச்சியாக இருந்த போதும், தங்களது தந்தைகளின் பாவங்களுக்காகக் குழந்தைகள் தண்டிக்கப்பட்ட போதும் ஸேவுஸ் கடவுளின் நியாயம் எங்கே போயிற்று?'' என்று காலப்போக்கில் ஒரு கிரேக்கக் கவிஞர் உரக்கக் கேட்டார். ''எஞ்சியுள்ள ஒரே விஷயம், மக்கள் மத்தியிலே இன்னமும் வாழ்ந்த ஒரே ஒரு பெண் கடவுளாகிய நம்பிக்கையைத் தொழுவதுதான், பிற எல்லாருமே ஒலிம்பசுக்குப் பின்வாங்கிப் போய்விட்டனர்,'' என்று அவர் கூறினார்.

தொடுவானங்கள் விரிவடைகின்றன

உண்மைக்கும் தேவதைக் கதைக்கும், அறிவுக்கும் மூடநம்பிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மனிதன் அறியவில்லை.

வெண்ணிறத் தோற்றமுடையதாகத் தோன்றினாலும் பாலேடு பாலிலிருந்து பிரிக்கப்பட்டது போல, மூடநம்பிக்கையிலிருந்து அறிவைப் பிரித்தறிவதற்கு ஆயிரமாயிரம் ஆண்டுகள் பிடித்தன.

நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய பாடல்களின்றும் இதிகாசங்களினின்றும், கடவுளர்கள் மற்றும் வீரர்களின் தேவதைக் கதைகளிலிருந்து பல்வேறு இனக்குழுகள் மற்றும் படைத்தலைவர்களின் வரலாற்றையும், உண்டாக்கப்பட்ட புவியியலிலிருந்து உண்மையான புவியியல் அறிவையும், பண்டையப் புராணங்களிலிருந்து நட்சத்திரங்கள் பற்றிய முதலாவது தகவலையும் பிரித்தறிவது சிரமமானதாக இருக்கிறது.

தங்களது மிகப் பண்டைய பாடல்களையும், புராணங்களையும் உள்ளடக்கிய இலியட், ஒடிஸி என்ற இரு வீரகாவியங்களைக் கிரேக்கர்கள் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். இவை கிரேக்க ராணுவத்தினரால் திராய் முற்றுகையிடப்பட்டு வீழ்த்தப்பட்டது, ஒரு கிரேக்கப் படைத் தலைவனாகிய ஒடிசஸ் (உல்லிசஸ்) தனது சொந்த ஊர் இதாகாவுக்குத் திரும்புகின்றவரை வெளி நாடுகளிலும், கடல்களிலும் மேற்கொண்ட சுற்றுலாக்கள் குறித்த புராணங்களாகும். மாள்வுக்குரிய மனிதர்களோடு கடவுளர்கள் திராய் நகரத்து மதில்களில் தோளோடு தோள் நின்று போரிட்டார்கள்: சிலர் தாக்கியவர்கள் சார்பாகவும், சிலர் முற்றுகையிடப்பட்டவர்கள் சார்பாகவும் நின்றார்கள். கடவுளர்களுக்கு விருப்பமான ஒருவர் அழியக் கூடிய ஆபத்தில் இருக்கையில். அவனை அவர்கள் கைப்பற்றி பாதுகாப்பான இடத்திற்குத் தூக்கிச் செல்வார்கள். ஒலிம்பசில் அவர்கள் பெருவிருந்து கொண்டபோது, சண்டையைத் தொடர்வதா வேண்டாமா அல்லது போரிடும் அணிகளைச் சமரசம் காணச் செய்வதா என்பன குறித்து விவாதித்தார்கள்.

இந்தப் புராணங்களில் உண்மை புனைகூற்றோடு கலந்து இருக்கிறது. ஆனால் நம்பவைக்கக் கூடிய முடிவும் உண்மையும் எங்கிருந்து தொடங்குகின்றன? கிரேக்கர்கள் எப்போதேனும் திராயை முற்றுகையிட்டார்களா? மேலும் திராய் நகரம் எப்போதேனும் உண்மையில் இருந்ததா?

தங்களது எல்லாவித சந்தேகங்களுக்கும் தொல்பொருள் ஆய்வாளரின் குந்தாலி ஓர் இறுதி முடிவை ஏற்படுத்துகிறவரை அறிஞர்கள் இது குறித்து அநேக ஆண்டுகளுக்கு விவாதம் செய்தார்கள். இலியடில் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பின்பற்றி, தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆசியாமைனருக்குக் கிளம்பினர், அது எங்கு இருந்திருக்க வேண்டும் என நம்பப்பட்டதோ அதே இடத்தில் திராய் நகரத்தின் இடிபாடுகளைத் தோண்டினர்!

ஒடிஸியில் கூட உண்மை இருக்கவே செய்தது. உல்லிசசின் பயணங்களை வரைபடத்தில் பின்பற்றிச் சென்ற புவியியலாளர்களால் இது நிரூபிக்கப்பட்டது. நாம் வரைபடத்தைத் திறந்து பார்த்தால், மது அருந்தி செம்மாந்திருந்த சோம்பேறிகள் நாட்டை, இயோலஸ் தீவையும், தங்களைக் கடந்து செல்லும் போது உல்லிசசின் கப்பலை அழிப்

பதற்குத் தயாராக இருந்த சிலா மற்றும் காரிப்திசைக் கூடக் காண முடியும்.

சோம்பேறிகள் நாடானது உண்மையில் ஆப்பிரிக்காவின் திரிபோலி கடற்கரையில் உள்ளதாகும்; இத்தாலியில் லிபாரி தீவுகள் நாம் என அறிந்திருக்க கூடிய இயோலஸ் தீவு ஆகும், அதேவேளை சிலாவும் காரிப்திசும் சிசிலிக்கும் இத்தாலிக்கும் இடைப்பட்ட நீரிணைப்பேயா கும்.

ஒடிஸியில் உண்மை இருக்கவே செய்தது, ஆனால் ஒடிஸியிலிருந்து பண்டைய உலகத்தின் புவியியலைப் படிக்க வேண்டுமென்று நாம் முடிவு செய்தால், நாம் மிகப் பெரிய தவறைச் செய்து கொண்டவர்களாக இருப்போம்.

முயற்சி ஆர்வம் மற்றும் பயணங்கள் குறித்த இந்த முதலாவது புத்தகத்தில் புவியியலானது கற்பனை உடைகளால் ஒப்பனை செய்யப் பட்டிருக்கிறது. மலைகள் எல்லாம் அரக்கர்களாக மாறியுள்ளனர், தீவுகளில் குடியிருக்கின்ற உள்ளூர்வாசிகள் ஒற்றைக் கண் தன்னினந் தின்னிகளாக மாறிப் போயினர்.



அந்த நாட்களில் தங்களைச் சுற்றி அண்மையில் இருந்த சுற்றுப் புறங்களை மட்டிலுமே மக்கள் அறிந்திருந்தனர். உண்மை, வணி கர்கள் தங்கள் கப்பல்களில் பயணம் செய்தார்கள். ஆனால் அவர்கள் கூட கரையிலிருந்து வெகு தொலைவிற்குச் செல்ல வேண்டும் என்று ஒருபோதும் துணிச்சல் பெற்றதில்லை. ஏனெனில் கடலுக்குள் செல்வ தென்பது அவ்வளவு பயங்கரமானதாக இருந்தது. அந்நாட்களில் திசைகாட்டும் கருவிகளோ, வரைபடங்களோ இல்லை. சூரியனையும் நட்சத்திரங்களையும் கொண்டு மாலுமிகள் தட்டித் தடவித் தேடி தங்கள் பாதையைக் கண்டுபிடித்தார்கள். கடற்கரையிலிருந்த ஓர் உயரமான செங்குத்துப் பாறையோ, ஒரு நீண்ட மரமோ அவர்களது கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது.

ஓராயிரம் ஆபத்துக்களை உள்ளடக்கியதாகக் கடல் இருந்தது. அகன்ற, தட்டையான அடிப்பரப்பைக் கொண்ட கப்பல்கள் இலேசான காற்றுக்குக்கூட அலைகளில் தடுமாறின. இறுக்கத் தளர்வுற்ற கடற் பாய்கள் சமாளிப்பது கஷ்டமானதாக இருந்தது. காற்று மனிதனுக்குக் கீழ்ப்படிய விரும்பவில்லை. அலைகளுக்கிடையே அகப்பட்ட துண்டு களைப் போல கப்பல்களோடு அது விளையாடியது.

ஆனால், இறுதியில் ஒரு கப்பல் கரையை வந்தடையும். களைத்துப் போன மாலுமிகள் அதனை கரைக்கு இழுத்துப் போடுவார்கள். இங்கே, வறண்ட நிலத்தில், அவர்கள் இறுதியாக களைப்பை மாற்றிக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் இயல் அமைதியில்லாத நிலையில் இருந்தார்கள். அவர்கள் வந்தடைந்திருந்த விநோதமான நிலமானது கடலைக் காட்டிலும் கூடுதலாக அச்சுறுத்துவதாக இருந்தது. தங்கள் மீது பிணந்தின்னி அரக்கர்கள் பாய்ந்து விழுவதுபோல மாலுமிகள் கற்பனை செய்யத் தொடங்கினார்கள். ஏனெனில் பிற மாலுமிகளி டமிருந்து காட்டுமிராண்டிகளின் கட்டுக் கதைகளை அவர்கள். கேட் டிருக்கிறார்கள். ஒவ்வொரு புதிய விலங்கும், அரண்டு போன அவர் கள் கண்களுக்கு, ஒரு பயங்கர அரக்கனாகத் தோன்றியது. உள்நாட்

டிற்குள்ளாகச் செல்ல அவர்கள் துணிவு பெறவில்லை.

எனினும், ஒவ்வொரு புதிய பயணமும் மனிதனுடைய தொடுவானங்களை விசாலப்படுத்தியது. தெரியாதவைகளின் எல்லைக் கோடுகள், கற்பனைக் கதைகளின் எல்லைக் கோடுகள் மேன்மேலும் பின்னுக்குத் தள்ளப்பட்டன. கடலோடிகளில் துணிச்சலானவர்கள் கடல்களின் கதவுகளைத் தாண்டி, பெருங்கடல்கள் தொடங்கிய இடங்களுக்குச் சென்றார்கள். இந்தப் பெருங்கடல் உலகத்தைப்போலவே முடிவற்றது என நினைத்தார்கள். அவர்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பிய போது, தாங்கள் உலகத்தின் முடிவுக்குத் தொலை தூரம் சென்றிருந்ததாகவும், நிலமானது நாற்புறமும் பெருங்கடலால் சூழப்பட்டது எனவும் தங்கள் நண்பர்களிடம் கூறுவார்கள்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கும், சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்கும் மக்கள் பயணம் செய்தார்கள். கடலோடிகள் பெருங்கடலின் குறுக்காகச் சென்று, மறு பகுதி நிலத்தையும், மனிதர்களால் நிறைந்த நாட்டையும் கண்டுபிடித்தார்கள்.

இன்னும், பூமி விஞ்ஞானம் பற்றிய கற்பனைக் கதைகள் பல சகாப்தங்களுக்கு நீடித்தது.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கிறிஸ்தோபர் கொலம்பஸ், பூமியில் மையப் பகுதியில் எங்கோ ஓரிடத்தில் ஓர் உயரமான மலை இருந்தது என்றும் அதுவே சுவர்க்கத்தின் சரியான இடம் என்றும் உண்மையாக நம்பினார். ஸ்பெயின் அரசிக்கு, சுவர்க்கத்திற்கு மிக அண்மையில் தான் வந்துவிட்டதாகவும் அதனது சுற்றுப்புற இடங்களை ஆராயலாம் என நம்புவதாகவும் கூறுகின்ற கடிதங்கூட அவர் எழுதினார்.

மிக அண்மையில், பதினைந்தாம் நூற்றாண்டு வாக்கில் கூட, ருஷ்யாவின் ஐரோப்பிய பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள், யூரல் மலைகளுக்குப் பின்புறம் உள்ள மக்கள், கரடிகளைப் போல குளிர் காலம் முழுவதும் செறிதுயில் கொள்கிறார்கள் என உறுதியாக நம்பினார்கள். பண்டைய கையெழுத்துப் பிரதி ஒன்று நம்மை வந்து சேர்ந்திருக்கிறது. **கீழைய நாடுகளில் மக்கள் அறியாதவை** என அது தலைப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கையெழுத்துப் பிரதியானது, தங்களது தலைகளுக்கு மேலாக வாய்கள் கொண்ட மக்களைப் பற்றியும், தலைகள் இல்லாது தங்களது மார்புகளில் கண்களைப் பெற்றிருந்தவர்களைப் பற்றியும் மிக விரிவாக வர்ணிக்கிறது.

இவை எல்லாமே நமக்கு மிகவும் வேடிக்கையாகத் தோன்றுகிறது. இப்பொழுதுங்கூட விஞ்ஞானக் கதைத் தொகுப்பு நூல்களின் ஆசிரியர்கள் புற வெளியில் உள்ள கண்டு பிடிக்கப்படாத உலகங்கள் பயங்கரமான அரக்கர்களால் நிறைந்தது என வர்ணிக்கிறார்கள்.

பூமியினுடைய மேற்பரப்பானது மிக விரிவாக ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இது காரணமாகத்தான் இத்தகு ஆசிரியர்கள் தங்களது குணாம்சங்களை பூமியின் மையப் பகுதிக்கும், செவ்வாய்க்கும் மற்றும் நிலவுக்கும் அனுப்புகிறார்கள்.

முதல் பாடகர்கள்

ஒவ்வொரு நூற்றாண்டும் செல்லச் செல்ல, குறைவான புதிரும், குறைவான விநோதங்களும், வாழ்க்கை பற்றிய தெரியாத விவரங்கள் குறைவானதாகவும் மிகுந்தன. கைவினைஞர்கள் தங்களிடத்திலே மிகமிக அதிகமான நம்பிக்கை கொள்ளவும், கடவுளுக்குச் செய்யக் கூடிய வழிபாடுகளைக் குறைத்துக் கொள்ளவும் தொடங்கினார்கள். சூரியன் எழுகின்ற போது பள்ளத்தாக்கில் உள்ள மூடுபனி கிளம்புவது போல, அன்றாட வாழ்க்கையிலிருந்து மந்திரச் சடங்குகள் படிப்படியாக மறையத் தொடங்கின.

பல்வேறு பழக்க வழக்கங்களிலும், சடங்கு விளையாட்டுக்களிலும், நடனங்களிலும், பாடல்களிலும் மந்திரம் தனது உறுதியான பிடிமானத்தைப் பெற்றிருந்தது. ஆனால் விழித்துக் கொண்ட மனித மனமானது, இங்கிருந்தும், தனது சொந்த வீட்டிலிருந்தும், விரைவிலேயே அதனை விரட்டியடிக்கத் தொடங்கியது.

மந்திரச் சடங்குகள், நடனங்கள் மற்றும் பாடல்களில் இருந்த மந்திரம் விரைவிலேயே ஆவியாகிப் போய்விட்டன. மிஞ்சியதெல்லாம் சாதாரணப் பாடல்களும் நடனங்களுமே.

கிரீஸ் மக்கள் தங்களுக்கு திராட்சைகளை வழங்கிய தியோனிசஸ் (பாக்கஸ்) விருந்தைக் கொண்டாடிய போது, இம்மந்திர விளையாட்டுக்கள் ஆரம்பத்தில் புனிதமானதாகக் கருதப்பட்டன. பாக்கசின் மரணம் மற்றும் மறுபிறப்புப் பற்றிய கூட்டுப்பாடல், தனது குளிர்கால மரணத் தூக்கத்திலிருந்து மீண்டும் எழவும், மக்களுக்குத் தானியம், பழங்கள் மற்றும் மது இவற்றை வழங்கவும் இயற்கைக்கு உதவும் என நம்பப் பட்டது.

இந்த விருந்தின் போது ஊமைக் காட்சி நடிகர்கள் விலங்கின் முகமூடிகளை அணிந்து கொண்டு கிராமத்து பலிபீடத்தைச் சுற்றி நடனமாடினார்கள்.

முதலாவது பாடகன் பாக்கசின் துயரங்களைப் பாடினான், கூட்டுக் குரல் பாடலின் கடை மடக்கு வரியைப் பாடியது.

இந்தப் பண்டைய மந்திர விளையாட்டு ஒருவித நாடகம் போலவே இருக்கிறது. இந்த ஊமைக் காட்சி நடிகர்களிலும், முதலாவது பாடகனிலும் நாம் எதிர்கால நடிகர்களைக் காண முடிகிறது. முதலாவது பாடகன் கடவுளினுடைய துயரங்களை மட்டிலுமே விவரிக்கவில்லை, அவற்றை விளக்கமாக வருணிக்கவும் செய்தான். அவன் தனது நெஞ்சில் அடித்துக் கொண்டான், தனது கைகளை வானத்தை நோக்கி நீட்டி கெஞ்சி வேண்டிக் கொண்டான்.

பாக்கஸ் திரும்பப் பிறந்த போது, ஊமை நாடகமாடிகள் பெருமிதம் கொண்டார்கள், ஒருவருக்கொருவர் நையாண்டி செய்து கொண்டும், வேடிக்கையாகப் பேசியும், கேலியும் செய்து கொண்டார்கள்.

அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு எல்லாவித மந்திரங்களும் இந்த மந்திர நாடகங்களிலினின்றும் மறைந்தன.

ஆனால் செயல்களே நிலைத்துவிட்டன. முன்னர் போல, மக்கள் நடிக்கவும், பாடவும், ஆடவும் செய்வார்கள். ஆனால் கடவுளினுடைய துயரங்களை வருணித்துக் கொண்டிருக்கவில்லை, அவர்கள் மாள்வுக்

குரிய மனிதர்களது துயரங்களை வருணித்தார்கள். அவர்களது நிகழ்ச்சியைப் பார்க்கக் கூடிய மக்கள் சிரித்துக் கூச்சலிடுவார்கள், துணிச்சலையும் வீரச் செயல்களையும் பாராட்டுவார்கள், மதிகேடானதையும் திறமை நயமற்றதையும் ஏளனம் செய்வார்கள்.

இவ்வாறாக, பண்டையக் குழுப்பாட்டின் முதலாவது பாடகன் சோக நடிகனாக மாறினான், அதேவேளை ஊமை நாடகமாடிகள் நகைச்சுவை நடிகர்களாகவும், கோமாளிகளாகவும், பொம்மலாட்டத் தலைமை நடிகர்களாகவும் மாறினர்.

ஆனால் முதலாவது பாடகன் முதலாவது நடிகனாக மட்டும் இருக்கவில்லை, அவன் தலைமையேற்கக் கூடிய பாடகனாகவும் விளங்கினான்.

காலப்போக்கில் சடங்கிலிருந்து பாடல் பிரிக்கப்பட்டது. புனிதமான விளையாட்டுக்களின் போதும், போர்த் தலைவன் மற்றும் அவனது போர்வீரர்களுக்கான விருந்தின் போதும் பாடகன் பாடினான். அந்த நேரங்களில் பண்டைய வழக்கப்படி வார்த்தைகளையும், இசையையும், நடிப்பையும் ஒன்று சேர்த்துக் கொண்டு நடனமாடவும் செய்தான். அவன் முதலாவது பாடகனாகவும், பாடற்குழுவாகவும் மாறியிருந்தான். பாடலையும் பல்லவியையும் அவனே சேர்த்துப் பாடினான்.

ஆனால் அவன் எதைப் பற்றிப் பாடினான்? கடவுளர்களையும் வீரர்களையும், வீரமான ஆட்களை ஓடச் செய்த தனது சொந்த இனத்தைச் சேர்ந்த படைத்தலைவனையும், போரில் வீழ்ந்துபட்ட வீரர்களையும், பழிதுடைக்க வேண்டிய சகோதர்களையும் பற்றி அவன் பாடினான்.

இந்தப் பாடலில் தொழுகையோ மந்திரமோ இருக்கவில்லை. மேலும் உண்மையான துணிச்சலை வரவழைப்பதற்கான முறையில் அமைந்த வீரச்செயல்களின் கதையாக இருந்தது.



காதல், இளவேனில் மற்றும் துயரம் குறித்த பாடல்கள் எத்தகையன! அவை எங்கிருந்து வந்தன? அவைகளுங்கூட ஒரு காலத்தில், திருமண விழாக்கள், ஈமக் கடன்கள், அறுவடையின் போது அல்லது திராட்சைகள் பறிக்கப்பட்டபோது நடத்தப்பட்ட சடங்குகளின் அங்கமாக திகழ்ந்தன. பிறகு இரண்டு குழுக்கள் சிறிய பாடல்களைப் பரிமாற்றிக் கொண்டன.

நூற்கும் சக்கரத்தின் முன்னால் நின்ற இளம் பெண் இத்தகைய பாடல்களை திரும்பப் பாடுவாள். தனது குழந்தையைத் தூங்க வைப்பதற்குக்கூட இவைகளைத் தாய் பாடியிருப்பாள்.

இன்று இளவேனில் பாடல்களை இளவேனில் காலத்தில் பாட வேண்டிய அவசியமில்லை. காதற் பாடல்களை திருமண விழாக்களில் மட்டுமே பாட வேண்டிய தேவையில்லை.

முதலாவது வீரர் பாடல்களையும், காதற் பாட்டுக்களையும் உருவாக்கியது யார்?

நமக்கு விடை தெரியாது, முதலாவது வாளையோ முதலாவது நூற்கும் சக்கரத்தையோ உண்மையிலேயே யார் தயாரித்தது என்பதை நாம் தெரியாமல் இருப்பது போலத்தான் இது. ஒரு மனிதன் இல்லை,

ஆனால் நூற்றுக்கணக்கான தலைமுறைகள் நமது கருவிகளையும், பாடல்களையும், வார்த்தைகளையும் உருவாக்கி இருக்கிறார்கள். பாடகன் தனது சொந்தப் பாடலைப் பாடவில்லை, முன்னதாக அவன் எதைக் கேட்டிருந்தானோ, அதைத் தான் வெறுமனே மற்ற வர்களுக்கு இடம் பெயர்த்தான். ஆனால் ஒரு பாடகனிடமிருந்து மற்ற வனுக்குக் கடத்துகின்ற போது, பாடல்கள் வளரவும் மாறவும் செய்தன. இது ஓடை நீரால் நதி விரிவடைவதைப் போன்றது. ஆகவே பெரும் வீரகாவியங்கள் இத்தகைய ஆரம்பகாலப் பாடல்களிலிருந்துதான் வளர்ந்தன.

இலியட் ஹோமரின் படைப்பு என்று நாம் கூறுகிறோம். ஆனால் ஹோமர் யார்? புராணங்கள் வாயிலாக மட்டுமே அவரை நாம் அறி வோம். மேலும் ஹோமர் கூட அவர் புகழ்பாடிப் போற்றிய வீரர் களைப் போல ஒரு புராண நபர்.

துணிச்சலான வீரர்களைப் பற்றிய முதலாவது பாடல்கள் உரு வாக்கப்பட்ட பொழுது, தனது கிளைமரபோடும், தனது இனத்தோடும் பாடகன் இன்னும் நெருங்கிய தொடர்பைக் கொண்டான். அப் பொழுது மக்கள் எல்லாவற்றையும் சேர்ந்தே செய்தார்கள். மேலும் தலைமுறைகளின் பொதுவான முயற்சிகளாலேயே பாடல்களுங்கூட உருவாக்கப்பட்டன.

முன்னைய தலைமுறைகளிடமிருந்து தனக்கு வந்து சேர்ந்திருந்த பாடலை மாற்றிய போதோ, செழுமைப்படுத்திய போதோ ஒரு பாடகன் ஒரு பாடலின் ஆசிரியனாகவோ, படைப்பாளியாகவோ தன்னைத்தானே கருதிக் கொள்ளவில்லை.

ஆனால் காலப்போக்கில் 'எனது' என்பதை 'உனது' என்பதிலிருந்து மனிதன் பிரிக்கத் தொடங்கினான். கிளைமரபினர் தனியாகப் பிரிந் தனர், முன்னைய ஒற்றுமை போய்விட்டது. கைவினைஞன் தனக்காக இப்பொழுது வேலை செய்தான். கிளைமரபின் விருப்பங்களை நிறை வேற்றுகின்ற ஒரு கருவியாகத் தன்னை அவன் உணர்ந்திருந்தது எப் போதோ மறைந்து விட்டது.

அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு மெக்காராவின் தியோக்னிஸ் எழுதினார்:

> இந்தச் செய்யுட்களில் எனது முத்திரையை, எனது கலைப் பயனை, நான் பதித் திருக்கிறேன். இவற்றை யாரும் திருடவோ, மாற்றவோ முடியாது. எல்லாரும் சேர்ந்து கூறுவார்கள்:
> ''மெக்காராவின் தியோக்னிசின் செய்யுட்கள் இதோ இங்கே!''

சமூக அமைப்பைச் சேர்ந்த ஒரு மனிதன் ஒருபோதும் இதைக் கூறியிருக்க முடியாது.

மெல்ல மெல்ல 'நான்' என்ற சொல்லை மிகவும் அடிக்கடி பயன்படுத்த மனிதன் தொடங்கினான். வேலை செய்து கொண்டிருப்பது தான் அல்ல, ஆனால் தன் மூலம் யாரோ வேலை செய்து கொண்டு இருக்கிறான் என்று அவன் நம்பிய காலமானது எப்போதோ மறைந்து

போய்விட்டது. இங்கோ பாடகன், தன்து 'கவித்திறன்' கடவுளர்களி டமிருந்து வந்தது, ஆனால் எந்தவகையிலும் தன்னைத்தானே தான் மறந்துவிடவில்லை என்பதாகக் கூறி, இன்னமும் தனக்குப் பாடல் எழுத ஆர்வமூட்டிய காவியக்கலை தெய்வத்தைப் பற்றிப் பேசுகிறான்.

நான் மறக்கப்பட மாட்டேன் என்று காவியக்கலை தெய்வங்கள் உறுதியளித்திருக் கிறார்கள்.

பண்டைய கிரேக்கப் பெண் கவிஞரான சாபோ எழுதிய இந்த வரிசையில் பழம் கருத்துகள் புதியனவற்றோடு இணைந்தன. காவியக் கலை தெய்வம் தனக்கு இந்த வார்த்தைகள் நன்கொடை வழங்கி யிருப்பதாக அவள் நம்பினாள். இது மலைகளில் தாதுச் செல்வத்தை ஒரு சுரங்கம் தோண்டுவோன் கண்டுபிடித்தது போல இருக்கிறது. ஆனால் அதே வரிசையில் தனது பெயர் மறக்கப்பட மாட்டாது என்ற படைப்பாளியின் பெருமையையும், கவிஞனின் பெருமையையும் காண்கிறோம்.

இங்ஙனம் மனிதன் வளர்கிறான். மேலும் அதிகம் அவன் உயர்வது, அவனது தொடுவானங்கள் விரிவடைவது போலாகும்.

1940

அன்புள்ள வாசகரே!

திறமை வாய்ந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட இந்நூலைப் படித்து முடித்தீர்கள். மனித இனத்தின் வளர்ச்சி பற்றிய வரலாற்றை மிகச் சிறந்த விளக்கப்படங்களுடன் படித்தீர்கள். இதில் கண்ட விளக்கங்களை உலகத்தின் எந்தவோர் அருங்காட்சியத்திலும் நீங்கள் காண முடியும். அத்தகைய படங்களில் சிலவற்றைப் பின்வரும் பக்கங்களில் காண்பதற்காக உங்களை அழைக்கின்றோம்.

குவாடர்னரி காலத்தில் இருந்த தாவரங்களும் விலங்குகளும்



1

பண்டைக் கால ஐரோப்பிய மக்கள் வெதுவெதுப்பான தட்ப நிலையில் வாழ்ந்தார்கள்

▲ பண்டையில் மனிதனது இருப்பிடங்கள்

விலங்கினம்: திரோகன்திரியம் யானை, காண்டாமிருகம், வாள் பற்களைக் கொண்ட புலி, ராட்சச மான், காட்டுக் குதிரை

2

1. ''குவாடர்னரி காலத்தில் இருந்த தாவரங்களும் விலங்குகளும்.'' ஒரு வரைபடம்

2. பண்டைய கற்சிலை

3. ''பனியுகத்து தாவரங்களும் விலங்குகளும்.'' ஒரு வரைபடம்

4. ''பனியுகத்திற்கு அடுத்த காலத்திய விலங்குகளும், மெசோலித் காலத்திய மனிதனது இருப்பிடங்களும்.'' ஒரு வரைபடம்

5. பண்டைய கற்படிவங்கள்

பனி யுகத்து தாவரங்களும் விலங்குகளும்



● அதிகளவு பனிமண்டலம்

● பனியின் கடைசி ஆக்கிரமிப்பு

▲ அக்காலத்தில் மனிதனது இருப்பிடங்கள்

விலங்கினம்: கம்பளியானை, மென் மயிர்த் தோல் கொண்ட காண்டாமிருகம், குகைக் கரடி, காட்டெருது, வடக்கத்திய மான், காட்டுக் குதிரை

3

பனியுகத்திற்கு அடுத்த காலத்திய விலங்குகளும் மெசோலித் காலத்திய மனிதனது இருப்பிடங்களும்

4

மனிதனது இருப்பிடங்கள்

1. குண்டா
2. வெரேட்யே
3. ஸ்கினியாதினோ
4. வஸிலியேவ்ஸ்காயா
5. எலின் பொர்
6. கிரிமியாச்சியே
7. பாக்ரோவ்ஷினா
8. பெத்ரோவ்ஸ்கோயே
9. கிரிபேனிக்கி
10. ஸூல் இல்-கோபா
11. நிஜ்னெயாதி ஷெவ்ஸ்காயா
12. காமா-ஜீலா னொவ்ஸ்காயா
13. ஷிகிர் புல்கரி சதுப்பு நிலம்



5

6

6. பண்டைய கற்படிவங்கள்

7. எலும்புகளில் செய்யப் பட்ட செதுக்கு வேலை

7

8, 9. நெருப்பை உண்டாக் கப் பயன்படுத்தப்பட்ட கருவி கள்

10. கற்கோடரியும் சுத்திய லும்

11. செதுக்கு வேலைப்பாடு கள்



8



10

9

11

12

13

14

16

15

12. கற்சுத்தியல் கரடி உருவம் (கி.மு. 10,000-5,000)

13. பல்வேறு வகை சிக்கிமுக்கிக் கற்கள்

14. கல்லாலான கைக்கோடரி

15. கல்லாலான எறிஈட்டி மற்றும் அம்பு முனைகள்

16. குத்தும் ஈட்டி



17



18

19

20

17. துளையிடுதலும் செப்பனிடு தலும்
18. செதுக்கு கருவி
19. எலும்பாலான தூண்டில்கள்
20. எலும்பாலான மீன் ஈட்டி

16–563

21

24

22

23

25

21. பாண்டங்கள் தயாரிப்பதற்கான நாடா முறை

22, 23, 25, 27, 29. பளிங்கு பாண்டங்கள் (கி.மு. 5,000-2,000)

24, 26, 28. உலோகக் கனியத்தாலான கருவிகள் (கி.மு. 2,000-1,500)

26



27

28

29

30



32



31

30. சுவரோவியம்

31, 32. பளிங்குப் பாண்டங்கள்

33

34

35



36



37

33-35. பளிங்குப் பாண்டங்கள்

36, 37. சுவர் ஓவியங்கள் (கி.மு. 2,000-500)

38

39



38. சுவரோவியம்

39. பளிங்குப் பாண்டம்

40

41



42

40-41. சுவரோவியங்கள்

42. சிக்கிமுக்கிக் கற்கருவி



43



44



45

46

43. குகை நுழைவாயில்

44. கல்லாலான அச்சு. அயர் லாந்து. வெண்கலக் காலம்

45. சுவரோவியம்

46. கெல்டிய இனத்தவரின் வெண்கலப் பதக்கத்தின் அழகு வேலை

47. மறிமான். பூஷ்மன் இனத் தின் பாறை ஓவியம் (ஆப் பிரிக்கா)

48. ஓர் உருவம். ஹமாகியா கலாசாரம்

49. சகாரா மேய்ப்பர்களின் கலை

47



48

49

50

52

51

53

50. டி நோவிலாரின் வேட்டை யாடும் காட்சி

51. கல் செதுக்கு ஓவியம். வேட்டையாடும் காட்சி

52. வானியல் நினைவுச்சின்னம்

53-56. எலும்பு உருவச்சிலைகள்

54

57



57. சூரியக் கோயில்

58. கல்லறைக்கு மேலாக உள்ள பலிபீடம்

59. ஒரு நடனக்காட்சி

58

55

59

56

60. ஒரு சிலை, தலை வடிவப் பாண்டம்

61. ஓர் எலும்புச் சிலை

61

62

60



63

62. மனித உருவத்தை ஒத்த ஒரு பாண்டம்

63. சிலைகளின் ஒரு பகுதி

65

64



64. எலும்பாலான உருவங்கள்

65. மனித முகங்களுடன் கூடிய
தெய்வச் சிலைகள்



66



67

68

66. பாறை மீது வரையப்பட்ட விலங்குகளின் உருவம்

67. வழிபாட்டு ஆட்டின் பாறைச் சித்திரம்

68. கடவுள் (அல்லது பூசாரி) தலையில் மான் கொம்புடனும் காலடியில் பாம்புடனும் கடவுளை வழிபடும் காட்சி

69. யானைத்தந்தத்தில் பொறிக்கப்பட்ட கம்பளியானை

70. பூஷ்மன் இனத்திற்கு முந்திய தென் ஆப்பிரிக்கக் கலை மான்கள்

71. செழுமை தரும் பெண் கடவுள் உருவச்சிலை

72. பாறை ஓவியங்கள் இரும்பு யுகம்

73. பூஷ்மன்களின் கலை (கேப்டவுன் பிராந்தியம்)



69

70



71



72

73

74



75

74. பாஸ்கி தீவிலுள்ள எரிமலைக் குழம்பு அரக்க வடிவம்

75. பெனின் கலை (ஆப்பிரிக்கா). வெண்கலச் சிறுத்தை